நோக்கத்தினால் வழி நடத்தப்படும்

வாழ்க்கை

"நோக்கத்தினால் வழி நடத்தப்படும் வாழ்க்கை" எனும் இந்நூலின் மூலப்பதிப்பு ரிக் வாரன் என்பவரால் எழுதப்பட்ட "The Purpose Driven® Life" எனும் ஆங்கில நூலாகும்.

இந்த தமிழ் மொழிபெயர்ப்பு வெளியீடானது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள சாண்டர்வான் பதிப்பகத்தாரின் அனுமதியுடன் இந்தியாவில் வெளியிடப்பட்டுள்ளது.

உரிமம் © **2006, ரிக் வாரன்**

வெளியிட்டவர்: பர்பஸ் டிரிவன் பதிப்பகத்தார்.
லேக் ஃபாரஸ்ட், கலிபோர்னியா, U. S. A.

தமிழாக்கம்: திருமதி **விமலா தம்பான்** மற்றும் திரு **டேவிட்** J. **தீமோத்தேயு**
மொழியாக்க மறு ஆய்வு: மறைதிரு **ஜெகதீசன் கல்யாணகுமார்**
கணிப்பொறி அச்சு (DTP): பாஸ்டர் L. **இம்மானுவேல்**
மற்றும் **"ஹார்வஸ்ட் பப்ளிஷிங்"** குழுவினர்

அனைத்து உரிமங்களும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இந்நூலின் எந்தவொரு பகுதியையும் நகல் எடுக்கவோ அச்சிடவோ அல்லது வேறெவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

உதாரணங்கள் உரிமம்: © 2002 மைகேல் ஹால்பெர்ட்,
உள் வடிவம்/வரைகலை: ஜிம் டாப்ஸ், மேரி டெஸ்சின்ஸ், ஜூலி ஹெட்

Originally published in the U.S.A. under the title:
The Purpose-Driven®Life
Copyright © **2002 by Rick Warren**
This translation edition published by permission of Zondervan, Grand Rapids, Michigan, U.S.A.
Ministry Edition in **Tamil**
Copyright © 2006 **Rick Warren**
Published by Purpose Driven Publishing
Lake Forest, California, USA

Tamil Translation: Mrs. **Vimala Thamban** and Mr. **David J. Timothy**
Translation Review & Editing : Rev. **Jagadeesan Kalyanakumar**
Desk Top Publishing (DTP): Pastor **L. Immanuel** & **Harvest Publishing Team**

All rights reserved

The Scripture versions cited in this book are identified in Appendix 3, which here becomes a part of this copyright page. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means - electronic, mechanical, photocopy, recording or any other - except for brief quotations in printed reviews, without the prior permission of the publisher.

Illustration by Michael Halbert, Copyright © 2002 Michael Halbert
Interior design by Jim Dobbs, Mary Deschenes, Julie Head

ரி க் வா ர ன்

நோக்கத்தினால் வழி நடத்தப்படும் வாழ்க்கை

நான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கம்தான் என்ன?

இந்தப் புத்தகம் உங்களுக்காக அர்ப்பணிக்கப்படுகின்றது. நீங்கள் இந்த உலகத்தில் பிறப்பதற்கு முன்னரே, தேவன் *இந்த வேளையை* உங்களுக்காகத் திட்டமிட்டிருந்தார். உங்கள் கரங்களில் இந்தப் புத்தகம் இருப்பது ஓர் தற்செயலான செயல் அல்ல. நீங்கள் சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்தை நீங்கள் அறிந்துகொள்ள வேண்டும் என்று தேவன் ஏங்குகிறார் – இப்பூமியில் உள்ள வாழ்வு மற்றும் என்றென்றுமுள்ள நித்திய வாழ்வு.

கிறிஸ்துவுக்குள் மாத்திரமே நாம் யார் என்றும், எதற்காக வாழ்கின்றோம் என்றும் கண்டுகொள்ள முடிகின்றது. கிறிஸ்துவை நாம் முதன் முதலாக அறிவதற்கு முன்னமே, ...அவர் தமது கண்களை நம் மீது வைத்து, மகிமையான வாழ்வுக்கான திட்டத்தை வகுத்து, அவருடைய பெரிய திட்டத்தில் நம்மை சேர்த்துக்கொண்டார். எல்லாருடைய வாழ்க்கையும் எல்லா சூழ்நிலையும் இதில் உள்ளடங்கும். எபேசியர் 1:11 (புதிய மொழியாக்கம்).

நான் இந்த சத்தியங்களை அறிந்துக்கொள்ளவும், எனது வாழ்வை ஒழுங்குப்படுத்திக்கொள்ளவும் உதவிய பண்டை கால மற்றும் தற்காலத்திய நூல்களின் ஆசிரியர்கள் மற்றும் எழுத்தாளர்களுக்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கின்றேன். இந்த காரியங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்ள தேவன் தந்த சிலாக்கியத்திற்காக அவருக்கும், உங்களுக்கும் எனது நன்றியை நவில்கின்றேன்.

பொருளடக்கம்



நோக்கத்துடன் ஒரு பிரயாணம் 9

எனது உடன்படிக்கை 15

நான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கம்தான் என்ன?

நாள் 1 சகலமும் தேவனிடத்திலிருந்தே ஆரம்பமாகின்றது! 19
நாள் 2 தற்செயலாகப் பிறந்தவர்கள் அல்ல... நீங்கள்! 27
நாள் 3 உங்களது வாழ்க்கையை உந்தித் தள்ளுவது எது? 34
நாள் 4 என்றென்றும் ஜீவிக்கவே ஏற்படுத்தப்பட்டீர்கள் 48
நாள் 5 வாழ்க்கையை தேவனுடைய கண்ணோட்டத்தின்படி காணுதல் 55
நாள் 6 வாழ்க்கை என்பது நமக்கு கொடுக்கப்பட்ட ஒரு தற்காலிகப்பணி 64
நாள் 7 ஒவ்வொன்றிற்கும் ஒரு முகாந்தரம் உண்டு 72

நோக்கம் # 1: நீங்கள் தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப்பட்டீர்கள்

நாள் 8 தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப்பட்டீர்கள் 85
நாள் 9 தேவனை புன்னகைப்புரிய வைப்பது எது? 93
நாள் 10 ஆராதனையின் மையப் பகுதி 106
நாள் 11 தேவனுக்கு நெருங்கிய நண்பனாகுதல் 119
நாள் 12 தேவனோடுள்ள உங்கள் நட்பை வளர்த்துக் கொள்ளுதல் 129
நாள் 13 தேவனைப் பிரியப்படுத்தும் ஆராதனை 141
நாள் 14 தேவன் தூரத்தில் இருப்பதுபோலத் தோன்றும்போது... 152

நோக்கம் # 2: நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப்பட்டீர்கள்

நாள் 15 தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப்பட்டீர்கள் 165
நாள் 16 மிகவும் முக்கியமானது எது? 173
நாள் 17 அங்கம் வகிப்பதற்கு ஒரு இடம் 183
நாள் 18 வாழ்க்கையை ஒன்றாக இணைந்து அனுபவித்தல் 196
நாள் 19 சமுதாய ஐக்கியத்தை உருவாக்குதல் 206
நாள் 20 முறிந்துபோன ஐக்கியத்தைப் புதுப்பித்தல் 217
நாள் 21 உங்கள் சபையைப் பாதுகாத்தல் 229

நோக்கம் # 3: நீங்கள் கிறிஸ்துவைப்போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டீர்கள்

நாள் 22 கிறிஸ்துவைப்போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டீர்கள் 243
நாள் 23 நாம் எவ்வாறு வளருகின்றோம்? 254
நாள் 24 சத்தியத்தின் மூலம் மறுரூபமாக்கப்படுதல் 262
நாள் 25 பிரச்சனைகளின் மூலம் மறுரூபமாக்கப்படுதல் 273
நாள் 26 சோதனைகளின் மூலம் வளர்ச்சியடைதல் 285
நாள் 27 சோதனையை தோற்கடித்தல் 297
நாள் 28 கிறிஸ்துவைப்போல மாறுவதற்கு கால அவகாசம் தேவை 308

நோக்கம் # 4: நீங்கள் தேவனை சேவிப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டீர்கள்

நாள் 29 உங்களுக்களிக்கப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல் 321
நாள் 30 தேவனைச் சேவிப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டீர்கள் 332
நாள் 31 உங்கள் வடிவமைப்பை புரிந்துக் கொள்ளுதல் 342
நாள் 32 தேவன் உங்களுக்கு அருளியவற்றைப் பயன்படுத்துதல் 354
நாள் 33 உண்மையான சேவகர்கள் எப்படி செயல்படுகின்றனர்? 365
நாள் 34 சேவகர்களைப்போலச் சிந்தித்தல் 378
நாள் 35 உங்கள் பலவீனத்தில் தேவனின் வல்லமை 388

நோக்கம் # 5: நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக ஏற்படுத்தப்பட்டீர்கள்

நாள் 36 நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக உண்டாக்கப்பட்டீர்கள் 401
நாள் 37 உங்கள் வாழ்க்கையின் செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல் 413
நாள் 38 உலகத் தரம் வாய்ந்ததொரு கிறிஸ்தவனாகுதல் 424
நாள் 39 உங்கள் வாழ்க்கையை சமநிலைப் படுத்துதல் 436
நாள் 40 நோக்கத்தோடு ஜீவித்தல் 447

இணைப்பு 1: கலந்துரையாடலுக்கான கேள்விகள் 459
இணைப்பு 2: உபகரணங்கள் 465
இணைப்பு 3: வசன மொழியாக்கம் மற்றும் உபயோக விளக்கம் 466
குறிப்புகள் 467

நோக்கத்துடன் ஒரு பயணம்

இப்புத்தகத்திலிருந்து அதிக பயனை பெற்றுக்கொள்ளும் முறைமை

இது ஒரு சராசரி புத்தகத்தைக் காட்டிலும் மேலான ஒன்று. இது வாழ்க்கையில் எழும்பக்கூடிய மிக முக்கியமான கேள்விகளுக்கான விடையை கண்டறியக் கூடிய வகையில் அமைக்கப்பட்ட ***40 நாள் ஆவிக்குரிய பிரயாணத்***துக்கான ஒரு வழிகாட்டி. நான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கம்தான் என்ன? இப்பிரயாணத்தின் இறுதியில், உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தை அறிவதோடு, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் எப்படி அவருடைய நோக்கத்தோடு இசைந்திருக்கின்றது என்பதனை புரிந்துகொள்ளுவீர்கள். இது உங்கள் மன அழுத்தத்தை குறைக்கும், உங்கள் தீர்மானங்களை இலகுவாக்கும். மட்டுமல்ல, மிக முக்கியமாக, உங்களை நித்தியத்திற்காக ஆயத்தப்படுத்தும்.

உங்களது அடுத்த 40 நாட்கள்

இன்றைய மனிதனின் சராசரி ஆயுள் காலம் 25,550 நாட்கள். பூமியில் நீங்கள் வாழக்கூடிய நாட்கள் ஏறத்தாழ இவ்வளவு காலம்தான். என்ன நினைக்கின்றீர்கள்? அப்படியானால்... வாழ்வின் மீதமுள்ள நாட்களில், தேவன், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகின்றார் என்று தெரிந்துகொள்ள உங்கள் வாழ்நாளின் 40 நாட்களை நீங்கள் ஒதுக்கிக்கொள்ளுவது ஒரு ஞானமான செயல்தானே?

40 நாள் காலம் என்பது ஒரு முக்கியம் வாய்ந்த காலம் என்பதனை வேதத்தில் இருந்து அறிந்துகொள்ளுகின்றோம். எப்பொழுதெல்லாம், தேவன், அவருடைய நோக்கத்திற்காக யாரையாவது ஆயத்தம்

செய்தாரோ அப்போதெல்லாம் அவர், 40 நாட்களை எடுத்துக் கொண்டார்:

- 40 நாட்கள் மழையினால் நோவாவின் வாழ்க்கை மறுரூபம் அடைந்தது.
- சீனாய் மலையில் 40 நாட்கள் இருந்த மோசே மறுரூபமடைந்தார்.
- வாக்குத்தத்தத்தின் பூமியில் 40 நாட்கள் இருந்த வேவுகாரர்கள் மறுரூபமடைந்தனர்.
- கோலியாத்தின் 40 நாட்கள் சவாலின் விளைவாக தாவீது மறுரூபமடைந்தார்.
- ஒரு வேளை ஆகாரத்தின் மூலம், 40 நாட்களுக்கு வேண்டிய பலத்தை தந்த தேவன், எலியாவை மறுரூபப்படுத்தினார்.
- மாறுவதற்கு 40 நாட்களை தேவன் தந்தபோது, முழு நினிவே பட்டணமும் மறுரூபமடைந்தது.
- இயேசு வனாந்தரத்தில் இருந்த 40 நாட்கள் மூலம் பலப்படுத்தப்பட்டார்.
- உயிர்த்தெழுந்த இயேசுவோடு 40 நாட்கள் இருந்த சீஷர்கள் மறுரூபமடைந்தனர்.

அடுத்த 40 நாட்களில் உங்கள் வாழ்க்கையில் ஒரு மறுரூபம் உண்டாகும்.

இந்த புத்தகமானது 40 சிறிய அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நாள் ஒன்றுக்கு ஒரு அத்தியாயத்தை மட்டும் வாசியுங்கள் என்று கேட்டுக்கொள்ளுகின்றேன். ஏனெனில், அப்பொழுதுதான், அதன் கருத்துக்களை ஆழ்ந்து சிந்திக்கவும், வாழ்வில் அப்பியாசிக்கவும் நேரமிருக்கும். ***"சிந்திக்கிறதில் ஒரு மாற்றத்தை கொண்டு வந்து உங்களை தேவன் மறுரூபப்படுத்தி, புதிய மனிதனாக்குவாராக. பின்னர், தேவன் உங்களை என்ன செய்ய அழைக்கின்றார் என்பதனை புரிந்துகொள்ளுவீர்கள்"***[1] என்று வேதம் கூறுகின்றது.

அநேக புத்தகங்கள் நம்மை மறுரூபப்படுத்தாததற்கு காரணம் என்ன தெரியுமா? வாசித்த காரியங்களை ஆழ்ந்து சிந்திக்க நேரம்

எடுத்துக்கொள்ளாமல், அடுத்த அத்தியாயத்திற்குத் தாவுவதினால்தான். வாசித்த அத்தியாயத்தை புரிந்துக்கொண்டு செயல்படுத்துவதைவிட நாம் அடுத்த அத்தியாயத்தை வாசிக்கவே அதிகம் விரும்புகின்றோம். இந்த புத்தகத்தை வாசித்து, அப்படியே விட்டுவிட வேண்டாம். அதனோடு சம்பாஷியுங்கள். அடிக்கோடிட்டுக்கொள்ளுங்கள். உங்களது சொந்த கருத்துக்களை புத்தகத்தின் ஓரங்களில் உள்ள பகுதிகளில் எழுதுங்கள். இதனை உங்களது தனிப்பட்ட புத்தகமாக்கிக்கொள்ளுங்கள்! வெறுமையாக வாசிக்காமல், புத்தகத்தோடு இடைபட்டு, மாறுத்தரம் கொடுத்த புத்தகங்களின் மூலம் மட்டுமே நான் அதிக பயன் பெற்றிருக்கின்றேன்.

உங்களுக்கு உதவ நான்கு அம்சங்கள்

ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் "எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்" என்ற ஒரு பகுதி உண்டு. அங்கு பின்வருவனவற்றை நீங்கள் காண்பீர்கள்:

- ***சிந்தனைக்கான ஒரு கருத்து***: அந்த நாள் முழுவதும் நீங்கள் சிந்தித்து தியானிப்பதற்கு, அங்கு ஒரு ஆவிக்குரிய சத்தியம் காணப்படும். அது நோக்கத்தினால் வழிநடத்தப்படும் வாழ்வுக்கான ஒரு கோட்பாட்டை வலியுறுத்துகின்ற ஒரு சத்தியமாக இருக்கும். *"நான் சொல்லுவதை ஆழ்ந்து சிந்தித்துப்பார், அப்பொழுது, தேவன் அதற்கான விளக்கங்களை உனக்கு தருவார்"*[2] என்று பவுல் தீமோத்தேயுவுக்கு கூறுகின்றார்.

- ***மனனம் செய்ய ஒரு வசனம்***: இது, அந்த அத்தியாயத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு சத்தியத்திற்கு ஆதாரமான வேத வசனம். உங்கள் வாழ்க்கையை உண்மையாகவே நீங்கள் முன்னேற்றிக் கொள்ள விரும்பினால், வேத வசனத்தை மனனம் செய்தல் ஒரு நல்ல ஒழுங்கு. இவ்வசனங்களை ஒரு சிறிய அட்டையில் எழுதி வைத்துக்கொண்டு, செல்லுமிடமெல்லாம் எடுத்துச் செல்லுங்கள்.

- ***ஆய்வுக்கான ஒரு கேள்வி***: அந்த அத்தியாயத்தில் கற்றுக் கொண்ட ஒரு காரியத்தை வாழ்வில் அப்பியாசிக்க, தொடர்ந்து சிந்திக்க உதவும் கேள்விகள் இவைகள்.

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை புத்தகத்திலேயே ஒரு ஓரத்தில் எழுத நான் உங்களை ஊக்குவிக்கட்டும் அல்லது ஒரு நோட்டுப் புத்தகத்தை வாங்கி அதில் எழுதி வைத்துக்கொள்ளுங்கள். உங்களது கருத்துக்களை எழுதுவது... அவற்றைக் குறித்து ஒரு தெளிவைப் பெற உதவியாயிருக்கின்றது.

இணைப்பு 1ல் பின்வருவனவற்றைக் காண்பீர்கள்:

- ***கலந்துரையாடலுக்கான கேள்விகள்:*** அடுத்த 40 நாட்களில், உங்களோடு சேர்ந்து படிப்பதற்கு ஒன்று அல்லது சில நண்பர்களை சேர்த்துக்கொள்ளும்படி உங்களை உற்சாகப்படுத்துகிறேன். ஒரு பிரயாணம் செல்லும்போது, தனியே செல்லுவதைவிட மற்றவர்களோடு சேர்ந்து செல்லுதல் சிறப்பாக இருக்கும். அப்படி நீங்கள் குழுவாக செய்யும்போது, உங்கள் குழுவில் உள்ள மற்றவர்களிடம் உங்களது கருத்துக்களை அவர்களிடமும், அவர்களின் கருத்துக்களை உங்களிடமும் பகிர்ந்துக்கொள்ள முடியும். இதனால், ஆவிக்குரிய வளர்ச்சி ஒருபோதும் ஓர் தனிப்பட்ட, தன்னிச்சையான முயற்சி மூலம் வராது. உறவுகள் மூலமே ஆவிக்குரிய முதிர்ச்சி உண்டாகின்றது.

உங்களது வாழ்க்கைக்கான நோக்கத்தை விளக்கிச் சொல்லுவதற்கு ஓர் சிறந்த வழி வேத வாக்கியங்களை பயன்படுத்துவதே – எனவேதான், ஆயிரத்திற்கும் அதிகமான வேத வசனங்களை இப்புத்தகத்தில் பயன்படுத்தியுள்ளேன். இப்புத்தகத்தில், தமிழ் வேத வசன உபயோகத்தைப்பற்றி இணைப்பு 3–ல் விளக்கப்பட்டுள்ளது.

நான் உங்களுக்காக ஜெபித்துக் கொண்டிருக்கின்றேன்

நான் இந்த புத்தகத்தை எழுதும்போது, அவ்வப்பொழுது ஜெபித்த ஜெபம் என்னவெனில், நீங்கள் இதனை வாசிக்கும்போது, தேவனுடைய நோக்கத்தை அறிந்துகொள்ளுவதனால் உண்டாகும் ஈடு இணையற்ற நம்பிக்கை, சத்துவம், மற்றும் மகிழ்ச்சியின் அனுபவம் உங்களுடையதாக வேண்டும் என்பதுதான். இதற்கு ஈடு இணை வேறொன்றுமில்லை. நான் மிகவும் பரவசப்படுகின்றேன்

– ஏனெனில், நீங்கள் அடையப்போகும் மேலான அனுபவங்களை நான் அறிந்திருக்கின்றேன். நான் இதனை அனுபவித் திருக்கின்றேன் – எனது வாழ்வின் நோக்கத்தை அறிந்த நாளிலிருந்து நான் மாறுபட்டவனானேன்.

இவைகளின் நன்மைகளை நான் அறிந்திருக்கின்றபடியினால், இந்த அடுத்த 40 நாட்களுக்கான ஆவிக்குரிய பிரயாணத்தில் உறுதியாக தரித்திருக்க ஊக்குவிக்கின்றேன் – ஒரு நாளையாவது தவற விடவேண்டாம். உங்கள் வாழ்வு மிகவும் முக்கியம்... ஆகவே, அதைக் குறித்து சிந்திக்க நேரம் எடுத்துக்கொள்ளுங்கள். இதை உங்களது ஒவ்வொரு நாளின் முக்கிய செயல்திட்டமாக ஏற்படுத்தி வைத்துக்கொள்ளுங்கள். இதனை நீங்கள் ஏற்றுக்கொண்டு சம்மதம் தெரிவித்தால், ஒரு உடன்படிக்கையில் இணைந்து கையொப்பமிடுவோம். ஒரு அர்ப்பணம் செய்துகொள்ளுவதினால், நிச்சயம் ஒரு வலிமை உண்டாகின்றது. வேறொரு பங்காளரையும் சேர்த்துக் கொள்ளுங்கள்; இதனை நாம் இணைந்து ஆரம்பிப்போம்!



எனது உடன்படிக்கை

தேவனுடைய ஒத்தாசையோடு எனது வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தைக் கண்டடைவதற்கு, எனது வாழ்க்கையின் அடுத்த 40 நாட்களை அர்ப்பணிக்கின்றேன்.

____

உங்களது பெயர்

____

உங்களது பங்காளரின் பெயர்

____

ரிக் வாரன்

"ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம். அவர்களுடைய பிரயாசத்தினால் அவர்களுக்கு நல்ல பலனுண்டாகும். ஒருவன் விழுந்தால் அவன் உடனாளி அவனைத் தூக்கி விடுவான்; ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ, அவனைத் தூக்கிவிடத் துணையில்லையே. ஒருவனை யாதாமொருவன் மேற்கொள்ள வந்தால் இருவரும் அவனுக்கு எதிர்த்து நிற்கலாம், முப்புரிநூல் சீக்கிரமாய் அறாது."

(பிரசங்கி 4:9–10, 12)

நான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கம்தான் என்ன?

பொருட்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஒரு வாழ்க்கை ஜீவனற்றதும், வெட்டுண்ட மரத்தின் அடிக்கட்டையை போன்றதுமாகும்; தேவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு வாழ்க்கையே துளிர்த்து செழிக்கும் ஓர் விருட்சமாகும்.

நீதிமொழிகள் 11:28 (புதிய மொழியாக்கம்)

கர்த்தர் மேல் நம்பிக்கை வைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாக கொண்டிருக்கின்ற மனுஷன் பாக்கியவான். அவன் தண்ணீரண்டையிலே நாட்டப்பட்டதும், கால்வாய் ஓரமாக தன் வேர்களை விடுகிறதும், உஷ்ணம் வருகிறதைக் காணாமல் இலை பச்சையாய் இருக்கின்றதும், மழைத்தாழ்ச்சியான வருஷத்திலும் வருத்தமின்றித் தப்பாமல் கனி கொடுக்கின்ற மரத்தைப் போலிருப்பான்.

எரேமியா 17:7–8

1

சகலமும் தேவனிடத்திலிருந்தே ஆரம்பமாகின்றது

ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது; பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும். கர்த்தத்துவங்களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.
கொலோசெயர் 1:16

தேவன் ஒருவர் இருக்கின்றார் என்ற நிலைக்கு வருகின்ற வரை, வாழ்க்கையின் நோக்கம் என்ன என்ற கேள்வி அர்த்தமற்றது.
பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், நாஸ்திகர்

இது உங்களைக் குறித்த விஷயம் அல்ல.

உங்கள் சொந்த வாழ்க்கையின் மன நிறைவு, உங்களது சமாதானம், உங்களது சந்தோஷம் ஆகிய காரியங்களைக் காட்டிலும் மேலான ஒன்று... உங்கள் வாழ்வின் நோக்கம். அது, உங்கள் குடும்பம், உங்களது வேலை... அல்லது உங்களது கனவுகள் மற்றும் இலட்சியங்களைக் காட்டிலும் மேலானது. இந்த பூமியில் ஏன் நீங்கள் அமர்த்தப்பட்டீர்கள் என்று அறிந்துகொள்ள வேண்டுமானால், தேவன் என்ற அந்த ஆரம்ப இடத்திற்கு வந்தாக வேண்டும். நீங்கள் *அவரைக்கொண்டும், அவருக்கென்றும்* சிருஷ்டிக்கப்பட்டீர்கள்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக வாழ்வின் நோக்கத்தை கண்டறிவது என்பது ஒரு புரியாத புதிராகவே மனிதனுக்கு இருந்திருக்கின்றது,

காரணம் என்னவெனில்... "நாம்" என்ற தவறான முனையிலிருந்து ஆரம்பிப்பதனால்தான்! சுயத்தை மையமாக வைத்து – நான் யாராக இருக்க விரும்புகின்றேன்? ***என்*** வாழ்க்கையை வைத்து நான் என்ன செய்ய வேண்டும்? ***எனது*** வாழ்க்கையின் இலக்கு என்ன? ***எனது*** ஆசைகள் என்ன? ***எனது*** எதிர்காலத்தை குறித்து ***எனது*** கனவுகள் என்ன? என்ற கேள்விகளை எழுப்புவதனால்தான்!! நம்மையே நோக்கிக் கொண்டிருக்கின்ற வரை வாழ்வின் நோக்கம் ஒருபோதும் வெளிப்படாது. ***"தேவனே தமது சிருஷ்டிப்புகளின் வழிகாட்டியாக இருக்கின்றார்; ஒவ்வொருவருடைய ஜீவனும் அவரது வல்லமையில் இருக்கின்றது"***[1] என்று வேதம் கூறுகின்றது.

பிரபலமான புத்தகங்கள், சினிமா படங்கள், கருத்தரங்குகள் ஆகியவற்றில்... வாழ்க்கையின் அர்த்தத்தை உங்களுக்குள்ளேயே கண்டு கொள்ளலாம் என சொல்லுகின்றன. ஆனால், நிச்சயமாக, வாழ்க்கையின் அர்த்தத்தை அப்படிப்பட்ட அணுகுமுறையில் கண்டுகொள்ளவே முடியாது. ஒருவேளை, நீங்களும் இப்படிப்பட்ட அணுகுமுறையை முயற்சி செய்து பார்த்திருக்கலாம். நீங்களே உங்களை சிருஷ்டித்துக் கொள்ளவில்லை. ஆகவே, நீங்களாகவே உங்களது வாழ்வின் நோக்கம் என்ன என்பதனை கூற முடியாது! உங்களிடத்தில் நீங்கள் ஒருமுறையும் காணாத ஒரு கண்டுபிடிப்பை கொண்டு வந்து கொடுத்தால், அதன் நோக்கம் என்ன என்பதை உங்களால் கூற இயலாது. மாத்திரமல்ல, அந்த கண்டுபிடிப்பும்கூட தானாக தனது நோக்கத்தை சொல்ல முடியாது. அதை கண்டுபிடித்த நபர் அல்லது அந்த கண்டுபிடிப்பின் கையேடு (Owner's Manual) தான் அதன் நோக்கத்தை வெளிப்படுத்த முடியும்.

நம் மீதே நமது கவனம் இருக்குமானால்... வாழ்வின் நோக்கம் ஒருபோதும் வெளிப்படாது.

மலைகளினூடே ஒருமுறை எனது வழியை தவறவிட்டேன். அப்பொழுது அங்குள்ள ஒருவரிடம் அணுகி, முகாமிற்கு செல்ல வேண்டிய வழி எது என்று கேட்டபோது அவர் சொன்னார், "***இங்கிருந்து அங்கு செல்ல முடியாது***. மலையின் மறுபக்கத்திலிருந்து நீங்கள் ஆரம்பிக்க வேண்டும்" என்றார்.

அதேபோல்தான், வாழ்வின் நோக்கம் என்ற இடத்தை நீங்கள் சென்றடைய, உங்கள் மீதே கவனம் கொண்டால், நிச்சயம் சென்றடைய முடியாது. உங்களை சிருஷ்டித்த உங்கள் தேவனிடமிருந்து நீங்கள் ஆரம்பிக்க வேண்டும். தேவன் சித்தம் கொண்டபடியினால்தான் நீங்கள் இந்த பூமியில் இருக்கின்றீர்கள். ***தேவனாலும் தேவனுக்கென்றும்*** நீங்கள் ஏற்படுத்தப்பட்டீர்கள் – இதனை நீங்கள் விளங்கிக்கொள்ளுகின்றவரை, வாழ்வு அர்த்தமற்றதாகவே இருக்கும். தேவனுக்குள் மாத்திரமே நமது வாழ்வின் ஆரம்பம், நமது அடையாளம், நமது அர்த்தம், நமது நோக்கம், நமது முக்கியத்துவம் மற்றும் நமது முடிவு ஆகியவைகளை கண்டுகொள்ள முடியும். அதற்கு மாறான வேறு எல்லா வழிகளும் முட்டுக்கட்டான எல்லைக்கே நம்மை கொண்டு நிறுத்தும்.

அநேகர் தேவனை தங்களது நோக்கங்களுக்காக பயன்படுத்த முயலுகின்றனர் – ஆனால், அது இயற்கைக்கு மாறான ஒரு செயல். அவர்கள் நிச்சயம் தோல்வியிலேயே முடிவடைவார்கள். நீங்கள், தேவனுக்காக ஏற்படுத்தப்பட்டீர்கள் – மாறாக அல்ல! வாழ்க்கை என்பது நமது வாழ்க்கையை, தேவன், தனது நோக்கத்திற்காக பயன்படுத்துவதாகும் – நாம் அவரை நமது திட்டத்திற்கு பயன்படுத்துவது அல்ல! ***"நமது சுயம் என்ற நிலையிலேயே பிடிவாதமாக தரித்திருப்பது முட்டுக்கட்டான எல்லைகளுக்கே நம்மை கொண்டு செல்லும்; தேவனிடம் கவனம் செலுத்தும்போதோ... விசாலமான, திறந்த வெளியிலான, விடுதலை ஜீவியத்திற்கு கொண்டு வந்து நிறுத்தும்"***[2] என்று வேதம் கூறுகின்றது.

என் வாழ்வின் நோக்கங்களை நான் கண்டுகொள்ள முடியும் எனக் கூறும் பல புத்தகங்களை நான் வாசித்திருக்கிறேன். இவைகளெல்லாம், "சுய உதவி" புத்தகங்கள் என்ற தலைப்பில் ரகப்படுத்திவிடலாம். ஏனெனில், "சுயம்" என்ற மையத்தை வைத்தே இப்புத்தகங்களின் அணுகுமுறைகள் உள்ளன. இப்படிப்பட்ட வரிசையில் சில கிறிஸ்தவ புத்தகங்களும் உண்டு. இவைகளிலெல்லாம் நாம் யூகிக்கக்கூடிய அதே ஒரு சில படிகளை விளக்கிக் கூறியிருப்பார்கள். அதாவது, உன் கனவுகளை நினைத்துப்பார்; உன் மதிப்புகளை தெளிவுபடுத்து; சில இலக்குகளை நியமித்துக்கொள்; நீ எவற்றில் சிறந்தோங்குகின்றாய் என்பதனை

பார்த்துக்கொள்; உயர்ந்த எதிர்பார்ப்புகளை வைத்துக்கொள்; தீவிரித்து செயல்படு; ஒழுக்கம் கொண்டிரு; உன்னால் உன் இலக்கை அடையமுடியும் என்பதனை விசுவாசி; மற்றவர்களை ஈடுபடுத்து; ஒருபோதும் விட்டுவிடாதே என்பவைகளே!

ஆம், இப்பரிந்துரைகள் யாவும் பொதுவாக ஒரு வெற்றிக்கு நேராக நடத்தக்கூடும். ஒரு இலக்கை அடைவதற்கு நமது முழு மனதை அதில் செலுத்தும்போது, நிச்சயம் அடைந்திடலாம். ஆனால், வெற்றி என்பதும் வாழ்வின் நோக்கங்களை நிறைவேற்றுவது என்பதும் வெவ்வேறு காரியங்கள் என்பதனை நினைவுகூர வேண்டும் – ***இரண்டும் ஒரே காரியம் அல்ல!*** உங்களது எல்லா தனிப்பட்ட வாழ்வின் இலக்குகளையும் அடைந்து, உலகத்தின் பார்வையில் ஒரு பெரிய வெற்றியை நீங்கள் அடைந்ததைப்போல ***இருந்தாலும்*** – அதனூடே தேவன் உங்கள் வாழ்வுக்கென்று நியமித்த நோக்கங்களை இழந்து நிற்கக்கூடும்! ‘‘சுய உதவிக்கான ஆலோசனைக்கு மிஞ்சின ஒரு காரியம் உங்களுக்குத் தேவை. ***“சுய உதவி ஒரு உதவியே அல்ல. சுய தியாகமே உங்களை நீங்கள் நன்றாக அறிந்துகொள்ள வேண்டிய ஒரு சிறந்த வழி, எனது வழி”***[3] என வேதம் கூறுகின்றது.

இந்த புத்தகம் ஒரு சுய உதவி புத்தகம் அல்ல. உங்களது கனவுகளை அடைவதும், உங்களது வாழ்க்கையை திட்டமிடுதலும் போன்ற காரியங்களுக்கு அல்ல இது. அதிக அலுவல் மத்தியில் இன்னும் சில காரியங்களை எப்படி சேர்த்து செய்வது என்ற ஆலோசனைக்கும் அல்ல இது. உண்மையை சொல்லப்போனால், இந்தப் புத்தகமானது, அவசியமான காரியங்களில் கவனம் செலுத்தி வாழ்வின் தேவையற்ற அலுவல்களிலிருந்து விடுதலை பெறுவது எப்படி என்பதனையே போதிக்கின்றது. அதாவது, ***தேவன்*** உங்களை எதற்காக சிருஷ்டித்தாரோ அந்த நபராக நீங்கள் இருத்தல்.

அப்படியானால், தேவன் எதற்காக சிருஷ்டித்தார் என்பதனை எப்படி நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள். உங்களுக்கு இரண்டு தெரிந்தெடுப்புகள் உண்டு. முதலாம் தெரிந்தெடுப்பு, ***யூகித்தல்*** (Speculation). இதைத்தான் மக்கள் பொதுவாக தெரிந்தெடுக்கின்றனர். அவர்கள், தாங்களாகவே ஒன்றை கற்பனை

செய்து, வாழ்வின் நிகழ்வுகளை ஒன்றோடொன்று இணைத்து தத்துவங்களை ஏற்படுத்துகின்றனர். அவர்களிடம் யாராவது வாழ்க்கையை குறித்து கேட்டால்... "நான் அறிந்தவரை, இதுதான் வாழ்க்கை..." என்று யூகித்து சொல்லுவார்கள்.

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக, புத்திசாலித்தனமான தத்துவவாதிகள் வாழ்வின் அர்த்தம் என்ன என்பதனை யூகித்து கருத்து பரிமாற்றங்களை செய்துள்ளனர். தத்துவம் என்பது வாழ்வுக்கு உபயோகமான ஒன்றாக இருந்தாலும்... வாழ்வின் நோக்கத்தை புரிந்துகொள்ளுவதற்கு ஞானமான தத்துவவாதிகளும் யூகித்தே சொல்லுகின்றனர். அமெரிக்காவில் உள்ள வடகிழக்கு இல்லினாய்ஸ் பல்கலைக்கழகத்தின் தத்துவஞான பேராசிரியர், பண்டிதர் ஹியூமூர்ஹெட் ஒருமுறை 250 அறிவிற் சிறந்த தத்துவஞானிகள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், அறிவாற்றல் உள்ளவர்கள் ஆகியோருக்கு "வாழ்வின் அர்த்தம் என்ன?" என்ற கேள்வியை எழுதி அனுப்பி, அதற்கான பதிலை அவர்களிடம் கேட்டார். பின்னர், அவர்கள் கொடுத்த மாறுத்தரத்தை ஒரு புத்தக வடிவில் வெளியிட்டார். அதில் சிலர் தங்களால் முடிந்த சிறந்த யூகத்தை வெளிப்படுத்தினர்; சிலர் தாங்களாகவே வாழ்விற்கான நோக்கத்தை ஏற்படுத்திக் கொண்டதாக ஒத்துக்கொண்டனர்; இன்னும் சிலர் தங்களுக்கு எந்தவித தெளிவும் இதில் இல்லை என்று உண்மையான அறிக்கையிட்டனர். சொல்லப்போனால் அதில் அநேக புகழ்பெற்ற அறிவாற்றல் உள்ளவர்கள் பேராசிரியர் மூர்ஹெட் அவர்களிடம் கேட்டு கொண்ட காரியம்: வாழ்வின் நோக்கத்தை நீங்கள் கண்டறிந்தவுடன் எங்களுக்கும் தெரியப்படுத்துங்கள் என்பதே![4]

தேவனாலும் தேவனுக்கென்றும் நீங்கள் ஏற்படுத்தப்பட்டீர்கள்-இதனை நீங்கள் விளங்கிக் கொள்ளுகின்றவரை, வாழ்வு அர்த்தமற்றதாகவே இருக்கும்.

அதிர்ஷ்டவசமாக, வாழ்வின் நோக்கத்தையும் அர்த்தத்தையும் விளங்கிக்கொள்ள, யூகிக்கும் நிலைக்கு மாறான ஒரு வேற்று வழி உண்டு. அதுதான் *வெளிப்பாடு* எனப்படும். தேவன், தமது வார்த்தையில் வாழ்வைக் குறித்து என்ன வெளிப்படுத்தியிருக்கிறார்

என்று நாம் கண்டுகொள்ளலாம். ஒரு கண்டுபிடிப்பின் நோக்கத்தை அறிந்துகொள்ளுவதற்கான எளிய வழி, அதை உண்டுபண்ணின நபரிடம் கேட்பதுதான். ஆக, வாழ்வின் நோக்கத்தை அறிந்துகொள்ளுவதற்கும் அதுதான் சிறந்த வழி: தேவனிடம் கேட்பது.

யூகத்திற்கும், தடுமாற்றத்துக்கும் தள்ளி நம்மை இருளில் தேவன் வைக்கவில்லை. வேத புத்தகத்தின் மூலம் நமது வாழ்க்கைக்கான அவரது ஐந்து நோக்கங்களை திட்டமாக வெளிப்படுத்தியிருக்கின்றார். அதுதான் நமது கையேடு (Owner's Manual) – ஏன் உயிர் வாழ்கிறோம், வாழ்க்கை எப்படி இயங்குகிறது, எதனை தவிர்க்க வேண்டும், எதிர்காலத்தின் எதிர்பார்ப்புகள் எப்படி இருக்க வேண்டும் ஆகிய காரியங்கள் அதில் விளக்கப்பட்டுள்ளது. சுய உதவி புத்தகங்களோ, தத்துவ ஞான நூல்களோ வெளிப்படுத்த முடியாத காரியங்களை இந்த வேத புத்தகம் விளக்கி காட்டுகின்றது, *“தேவனுடைய ஞானம்... அவருடைய உள்ளான நோக்கங்களின் ஆழத்திற்கு கடந்து செல்லுகிறது... இது ஒரு புதுமையான செய்தி அல்ல. ஏற்கனவே உறுதி செய்யப்பட்ட ஒரு பழைய செய்திதான். நம்மில் உள்ள சிறப்புகளை வெளிக்கொண்டு வர தேவன் தீர்மானித்த காரியங்கள்”*[5] என்று வேதம் கூறுகின்றது.

நாள் ஒன்று:
சகலமும் தேவனிடத்திலிருந்தே ஆரம்பமாகின்றது

தேவன், வெறும் நமது ஆரம்ப நிலை மட்டுமில்லாமல், நமது வாழ்வின் மூலகாரணமாகவும் ஊற்றாகவும் இருக்கின்றார். உங்களது வாழ்வின் நோக்கங்களை கண்டுகொள்ள நீங்கள் தேவனுடைய வார்த்தைக்கு நேராக திரும்ப வேண்டும் – உலகத்தின் ஞானத்தோடு அல்ல! நித்திய சத்தியங்களின் அடிப்படையில் உங்களது வாழ்வை கட்டவேண்டும் – உணர்ச்சி வசப்படுத்தும் கதைகளினாலோ, புகழ் பெற்ற தத்துவங்களினாலோ அல்லது வெற்றிக்கான உபதேசங்களினாலோ அல்ல. *“கிறிஸ்துவுக்குள் மாத்திரமே நாம் யார் என்றும் நாம் எதற்காக வாழ்கிறோம் என்றும் கண்டுகொள்ள முடியும். நாம் கிறிஸ்துவைப்பற்றி கேள்விப்பட்டு நமது நம்பிக்கையை அவர்மீது வைப்பதற்கு வெகு காலத்திற்கு முன்னமே, அவர் தமது கண்களை நம் மீது வைத்து, மகிமையான வாழ்வுக்கான ஒரு திட்டத்தை*

நமக்கு ஏற்படுத்தினார். இவைகளெல்லாம், தேவனின் முழுமையான நோக்கங்களில் உள்ளடங்கியுள்ளது. இதனையே எல்லா காரியத்திலும், எல்லாருடைய வாழ்விலும் அவர் செயல்படுத்த விரும்புகிறார்”[6] என்று வேதம் கூறுகின்றது. இந்த வசனமானது, உங்களது வாழ்வின் நோக்கத்தை குறித்த மூன்று வெளிப்பாடுகளை கொண்டு வருகிறது.

1. உங்களது அடையாளத்தையும் நோக்கத்தையும் இயேசு கிறிஸ்துவோடு உள்ள உறவின் மூலம் கண்டுகொள்ளுகிறீர்கள். அப்படிப்பட்ட ஒரு உறவு உங்களுக்கு இல்லையெனில், அதனை எப்படி ஆரம்பிக்க முடியும் என்று பின்னர் விளக்கி கூறுவேன்.

2. நீங்கள் அவரைக்குறித்து சிந்திப்பதற்கு பல காலங்கள் முன்பாகவே தேவன் உங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கின்றார். உங்கள் வாழ்வுக்கான அவரது நோக்கம் நீங்கள் உருவெடுப்பதற்கு முன்னமே உதித்தது. உங்களுக்கு முன்னதாக அவர் திட்டமிட்டார் – ***உங்களது ஆலோசனை இல்லாமல்!*** உங்களது வேலை, வாழ்க்கைத் துணை, பொழுதுபோக்கு மற்றும் இன்னும் அநேக வாழ்க்கை காரியங்களை நீங்கள் தெரிந்துகொள்ளலாம் – ஆனால், உங்களது வாழ்வின் நோக்கங்களை நீங்கள் தெரிந்தெடுப்பதில்லை.



3. உங்களது வாழ்க்கையின் நோக்கம் என்பது, இப்பிரபஞ்சத்தின் நித்திய கால தேவனின் திட்டத்திற்கு உள்ளடங்கிய ஒன்று. இப்புத்தகம் அதைப்பற்றியே பேசுகிறது.

ஆன்றேய் பிட்டோவ் என்ற ரஷ்ய நாவலாசிரியர் நாஸ்திக கம்யூனிச ஆட்சியில் வளர்ந்தவர் ஆவார். ஆனால், ஒரு வறண்ட நாளில், அவரது கவனத்தை தன் பக்கமாக தேவன் ஈர்த்தார். அவர் திரும்ப ஞாபகப்படுத்தி கூறும்போது, “நான் 27ம் வயதில் லெனின் கிராட் (இப்பொழுது செயின்ட் பீட்டர்ஸ்பெர்க்) என்ற இடத்தில் ரயிலில்

பயணம் செய்து கொண்டிருந்தபோது... வாழ்வின் வெறுமையினாலும், அர்த்தமற்ற நிலையினாலும், சோர்வினாலும் நிறைந்து காணப்பட்டேன். அப்பொழுது திடீரென்று, *'தேவனில்லாத வாழ்க்கை அர்த்தமற்றது'* என்ற ஒரு வாக்கியம் எனக்கு முன்பாக பளிச்சிட்டதுபோல இருந்தது. அதையே மறுபடியும் மறுபடியும் நான் அறியாமல் உச்சரித்துக் கொண்டே... அந்த ரயிலில் இருந்து இறங்கி தேவனின் வெளிச்சத்திற்குள் நடக்க ஆரம்பித்துவிட்டேன்."[7]

நீங்களும் ஒருவேளை உங்களது வாழ்வின் நோக்கத்தை அறியாமல் இருளின் உணர்வோடு இருக்கக்கூடும். வாழ்த்துக்கள்! *நீங்கள்* வெளிச்சத்திற்குள் நுழையப்போகின்றீர்கள்.

நாள் ஒன்று

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: இது என்னைக் குறித்த விஷயம் அல்ல.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"...சகலமும் அவருக்குள் ஆரம்பமாகி, அவருக்குள் தனது நோக்கத்தைக் கண்டு கொள்ளுகிறது"*** கொலோசெயர் 1:16. (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என்னைச் சுற்றி எதிர்மறையான விளம்பரங்கள் காணப்படும்போது... எனக்காக அல்ல, என் வாழ்க்கையை தேவனுக்காக வாழ்வதே முக்கியம் என்பதை நானே ஞாபகப்படுத்திக்கொள்ளுவது எப்படி?

தற்செயலாகப் பிறந்தவர்கள் அல்ல... நீங்கள்!

நான் உன் சிருஷ்டிகர். நீ தோன்றுவதற்கு முன்னமே நான் உன்னில் கரிசனைக் கொண்டேன்.
ஏசாயா 44:2 (புதிய மொழியாக்கம்)

தேவன் பகடையாடுவதில்லை
ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்

தற்செயலாக பிறந்தவர்கள் அல்ல... நீங்கள்!

உங்களது தோற்றம், ஒரு விபத்தோ அல்லது தவறுதலாக நடந்த ஒன்றோ அல்லது இயற்கையின் சந்தர்ப்ப சூழ்நிலையோ அன்று. உங்கள் பெற்றோர் ஒருவேளை உங்களைத் திட்டமிடாமல் இருந்திருக்கலாம். ...ஆனால், நிச்சயமாக தேவன் உங்களை திட்டமிட்டார். உங்களது பிறப்பினால் அவர் ஆச்சரியப்படவில்லை... மாறாக, அதனை எதிர்பார்த்தார்.

நீங்கள் உங்கள் பெற்றோரால் கருத்தரிக்கப்படும் முன்னமே தேவனுடைய சிந்தையில் உருவாகியிருந்தீர்கள். அவர் உங்களை முதலாவது சிந்தித்தார். நீங்கள் இப்பொழுது சுவாசிக்கும் சுவாசம் தற்செயலாகவோ, விதியினாலோ, அதிர்ஷ்டத்தினாலோ அல்லது சந்தர்ப்ப சூழ்நிலைகளினாலோ வந்ததல்ல. தேவன் உங்களை சிருஷ்டிக்க விரும்பினபடியினாலேயே நீங்கள் தோன்றியுள்ளீர்கள். ***"தேவன் தமது நோக்கத்தை எனக்காக நிறைவேற்றுவார்"***[1] என்று வேதம் சொல்லுகிறது.

உங்கள் சரீரத்தின் ஒவ்வொரு அங்கத்தையும் அவர்தான் திட்டமிட்டார். உங்களது இனம், தோலின் நிறம், உங்களது தலைமுடி

மற்றும் ஒவ்வொரு தோற்றமும் அவர் தெரிந்தெடுத்தார். நீங்கள் எப்படி இருக்க வேண்டும் என்று அவர் விரும்பினாரோ அப்படித்தான் உங்களை ஏற்படுத்தினார். உங்களது ஆள்தத்துவ நிலை மற்றும் இயற்கை தாலந்துகள் யாவும் அவர் தீர்மானித்து அளித்ததே. *"நீர் என்னை உள்ளும் புறம்பும் அறிந்திருக்கின்றீர், எனது சரீரத்தின் எலும்புகளும் உமக்கு தெரியும்; ஒன்றுமில்லாத நிலையிலிருந்து, படிப்படியாக நான் எப்படி உருவாக்கப்பட்டேன் என்பது உமக்கு நன்றாக தெரியும்"*[2] என்று வேதம் கூறுகின்றது.

நீங்கள் ஒரு நோக்கத்தோடு தேவனால் ஏற்படுத்தப்பட்டபடியால், நீங்கள் *எப்பொழுது* பிறப்பீர்கள், *எவ்வளவு காலம்* வாழ்வீர்கள் என்ற யாவையும் அவரே தீர்மானித்தார். முன்னதாகவே, அவர் உங்களது வாழ்வின் நாட்களை திட்டமிட்டு, நீங்கள் பிறக்கும், இறக்கும் நேரத்தையும் நிர்ணயித்தார். *"என் கருவை உம்முடைய கண்கள் கண்டது; என் அவயவங்களில் ஒன்றாகிலும் இல்லாதபோதே அவைகள் அனைத்தும், அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருந்தது"*[3] என்று வேதம் கூறுகின்றது.

நீங்கள் எங்கே பிறப்பீர்கள், எங்கே அவருடைய நோக்கத்திற்காக வாழப்போகிறீர்கள் என்பதையும் அவரே திட்டமிட்டார். உங்களது இனம், பிறப்பின் தேசம் ஆகியவைகள் யாவும் தேவனால் திட்டமிடப்பட்டது. ஒன்றும் தானாக நடப்பதற்கோ, சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கோ விட்டுவிடப்படவில்லை. யாவையும் தேவன் தமது நோக்கத்திற்காக ஏற்படுத்தினார். *"ஒரு மனுஷன் மூலம் தேவன் ஒவ்வொரு ஜாதியையும் ஏற்படுத்தி... பூமியின் மீதெங்கும் குடியிருக்கச் செய்து, முன் தீர்மானிக்கப்பட்ட காலங்களையும் அவர்கள் குடியிருப்பின் எல்லைகளையும் குறித்திருக்கிறார்"*[4] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் வாழ்க்கையின் எந்த ஒரு பகுதியும் ஏனோதானோவென்று விடப்படவில்லை. ஒவ்வொன்றும் அவருடைய நோக்கத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இன்னும் வியக்கத்தக்க காரியம் என்னவெனில், நீங்கள் *எப்படி* பிறப்பீர்கள் என்பதையும் அவர் தீர்மானித்தார். உங்கள் பெற்றோர் யாராக இருந்தாலும், உங்கள் பிறப்பின் சூழ்நிலை எப்படி இருந்தாலும், தேவன் ஒரு நோக்கத்தோடு உங்களை சிருஷ்டித்தார்.

உங்கள் பெற்றோர் நல்லவர்களோ, கெட்டவர்களோ அல்லது அலட்சிய மனோபாவம் உள்ளவர்களோ – எப்படி இருந்தாலும் பரவாயில்லை. அந்த இரண்டு நபருடைய இணைப்பினால்தான் நீங்கள் தோன்ற வேண்டும் என்று தேவனுக்கு நன்றாக தெரியும். தேவன் உங்களை எப்படி உருவாக்க வேண்டும் என்று நினைத்தாரோ அந்த மரபணுவை (DNA) இவர்கள் இருவர் *மாத்திரம்* பெற்றிருந்தனர். ஆகவேதான் அவர்கள் இருவரும் உங்களுடைய பெற்றோராயினர்.

நீங்கள் உங்கள் பெற்றோரால் கருத்தரிக்கப்படும் முன்னமே தேவனுடைய சிந்தையில் உருவாகியிருக்கிறீர்கள்.

தவறான உறவுமுறை பெற்றோர் (Illegitimate Parents) என்ற காரியம் உண்மையாயிருந்தாலும் தவறான உறவுமுறை பிள்ளைகள் என்று ஒன்று கிடையாது. அநேக பிள்ளைகள் பெற்றோரின் திட்டமிடுதல் இல்லாமல் பிறப்பது உண்மைதான்... ஆனால், தேவனின் திட்டமிடுதல் இல்லாமல் பிறக்கவில்லை. மனுஷனின் பாவம் பலவீனம் ஆகிய காரியங்களை அறிந்த தேவன்... அவைகளையும் கணக்கில் வைத்துதான் அவரது நோக்கத்தை உறுதி செய்திருக்கின்றார்.

தேவன் எதையும் தற்செயலாக செய்வதில்லை – தவறு செய்வதுமில்லை. அவர் சிருஷ்டித்த ஒவ்வொன்றிற்கும் ஒரு முகாந்தரம் உண்டு. ஒவ்வொரு மிருகமும் ஒவ்வொரு செடியும் தேவனால் திட்டமிடப்பட்டவை. ஒவ்வொரு தனி மனிதனும் தேவனுடைய நோக்கத்தை மனதில் வைத்துதான் வடிவமைக்கப்பட்டுள்ளான்.

சிருஷ்டிப்பில் தேவனது நோக்கம் அவரது அன்பு.***"பூமியின் அஸ்திபாரங்களை போடுவதற்கு வெகு காலத்திற்கு முன்னரே தேவன் நம்மை அவரது சிந்தையில் கொண்டிருந்து, அவரது அன்பின் கவனத்தை நம் மீது செலுத்தி அதில் நிலைப்பட்டார்"***[5] என்று வேதம் கூறுகின்றது.

இந்த உலகத்தை தோற்றுவிப்பதற்கு ***முன்னரே*** தேவனது எண்ணத்தில் நீங்கள் இருந்தீர்கள். ஆகவேதான் அவர் உங்களை

சிருஷ்டித்தார். அவரின் அன்பின் கவனம் நம் மீதுதான் – ஏனெனில், அவரது பார்வையில் நாம்தான் சிருஷ்டிப்புகளில் பெரிதும் மதிப்புக்குகந்தவர்கள். *"சத்திய வார்த்தையினால் நமக்கு ஜீவன் தந்து, நம்மை மற்ற எல்லா சிருஷ்டிப்புகளுக்கும் மேலான ஒரு நிலையில் ஏற்படுத்த தேவன் சித்தங்கொண்டார்"*[6] என்று வேதம் கூறுகின்றது. இவ்விதமாக தேவன் நம்மை நேசித்து, விசேஷ மதிப்போடு வைத்திருக்கின்றார்!

தேவன் ஏனோதானோவென்று செயல்படுவதில்லை. எல்லாவற்றையும் மிகுந்த கவனத்தோடு, துல்லியமாக திட்டமிட்டுள்ளார். பௌதீக சாஸ்திர வல்லுநர்களும் உயிரியல் நிபுணர்களும் மற்றும் ஏனைய விஞ்ஞானிகளும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக இப்பிரபஞ்சத்தைக் குறித்து அறிந்து கொள்ளுகின்றனரோ அவ்வளவாக நாம் குடியிருப்பதற்கு *ஏற்ற* ஒரு ஒப்பற்ற விதத்தில் இப்பிரபஞ்சம் இருக்கின்றது என்பதனை நாம் புரிந்துகொள்ளுகிறோம். மனிதனின் வாழ்வுக்கு மிகப் பொருத்தமான ஒரு இடமாக இவ்வுலகம் உள்ளது. நியூசிலாந்து நாட்டிலுள்ள ஒடாகோ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மனித மூலக்கூற்று பிறப்பியலின் (Molecular Genetics) மூத்த ஆராய்ச்சியாளர் பண்டிதர் மைக்கேல் டென்டன் அவர்களின் முடிவு, "உயிரியல் விஞ்ஞானத்தின் ஆதாரங்கள் யாவும் ஒரு முக்கிய காரியத்தையே மீண்டும் மீண்டும் வலியுறுத்துகின்றன... அதாவது, இப்பிரபஞ்சமானது, ஜீவராசிகளுள்ள இடமாகவும் விசேஷமாக, மனிதனின் வாழ்வுக்காக ஏற்படுத்தப்பட்ட ஓர் இடமாகவும் உள்ளது. இந்த உண்மையை மையமாகக் கொண்டே மற்ற எல்லாவற்றிற்கும் அர்த்தமும் விளக்கமும் உண்டாகின்றன."[7]



இதைத்தான் வேதமும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக கூறியது: *"வானங்களைச் சிருஷ்டித்துப் பூமியையும் வெறுமையாயிருக்கச் சிருஷ்டியாமல் அதைக் குடியிருப்புக்காக செய்து படைத்து..."*[8]

இவைகளெல்லாம் தேவன் ஏன் செய்தார்? இப்பிரபஞ்சத்தை நமக்காக படைப்பதில் ஏன் இத்தனை சிரமம் எடுத்துக்கொண்டார்? ஏனென்றால், அவர் அன்பின் தேவன். இப்படிப்பட்ட அன்பை நம்மால் விளங்கிக் கொள்ளமுடியவில்லை. ஆனால், நம்பகமான ஒரு அடிப்படை. தேவனின் விசேஷ அன்பிற்காக நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டீர்கள். நேசிப்பதற்காகவே தேவன் உங்களை ஏற்படுத்தினார். இந்த சத்தியத்தின் அடிப்படையில்தான் நமது வாழ்வைக் கட்டி எழுப்ப வேண்டும்.

"தேவன் அன்பாகவே இருக்கிறார்."[9] என்று வேதம் கூறுகின்றது.

நாள் இரண்டு:

தற்செயலாகப் பிறந்தவர்கள் அல்ல... நீங்கள்!

தேவனிடம் அன்பு ***இருக்கின்றது*** என்று இந்த வாக்கியம் சொல்லவில்லை. ***அவரே*** அன்பாக இருக்கின்றார்! அன்பு தேவனுடைய தன்மையின் சாரமாக இருக்கின்றது. திரித்துவ தேவனின் ஐக்கியத்தில் பூரண அன்பு உண்டு – ஆகவே, தேவனுக்கு உங்களை சிருஷ்டிக்க வேண்டும் என்ற ஒரு அவசியம் இல்லை. அவர் தனிமையாகவும் இல்லை. ஆனால், உங்களிடம் அன்பு கூரவேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக உங்களை சிருஷ்டித்தார். *"தாயின் வயிற்றில் தோன்றினது முதல் உங்களை ஏந்தி, தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியானது முதல் உங்களைத் தாங்கினேன். உங்கள் முதிர்வயது வரைக்கும் அப்படிச் செய்வேன், நரை வயது மட்டும் நான் உங்களைத் தாங்குவேன். இனிமேலும் நான் ஏந்துவேன், நான் சுமப்பேன், தப்புவிப்பேன்"*[10] என்று தேவன் சொல்லுகின்றார்.

தேவன் என்று ஒருவர் இல்லாவிட்டால், நாம் யாவரும் ஒரு சந்தர்ப்ப சூழ்நிலைகளினால், இப்பிரபஞ்ச அசைவுகளின் விபத்துகளினால் உண்டானவர்களாக இருந்திருப்போம். அப்படியானால்... நீங்கள் இந்த புத்தகத்தை வாசிப்பதை நிறுத்திக்கொள்ளலாம் – வாழ்வுக்கு ஒரு நோக்கம், முக்கியத்துவம், அர்த்தம் ஒன்றுமில்லை. "சரி", "தவறு" என்ற வேற்று நிலைகளும் இல்லாமல் இருந்திருக்கும்... மட்டுமல்ல, குறுகிய கால இவ்வுலக வாழ்க்கை என்ற நம்பிக்கையும் இல்லாமலே இருந்திருக்கும்.

ஆனால், தேவன் என்று ஒருவர் உண்டு. அவர் உங்களை ஒரு நோக்கத்தோடு ஏற்படுத்தினார். உங்கள் வாழ்வுக்கு ஒரு ஆழ்ந்த அர்த்தம் உண்டு! ஆகவேதான் தேவன் என்ற ஒரு நிலையிலிருந்து நமது வாழ்க்கையை ஆரம்பித்தால் மட்டுமே நமது வாழ்வுக்கான அர்த்தத்தையும் நோக்கத்தையும் அறிந்து கொள்ளுகிறோம். *"நாம் நம்மை சரியாக புரிந்து கொள்ளுவதற்கான ஒரே வழி, தேவன் யார் என்பதையும் அவர் நமக்காக என்ன செய்கின்றார் என்பதனையும் புரிந்துகொள்ளுவதேயாகும்"* என ஒரு ஆங்கில மொழிபெயர்ப்பு கூறுகின்றது (ரோமர் 12:3).

இதனை ரஸ்ஸல் கெல்பர் எழுதிய கீழ்க்கண்ட கவிதை நன்றாக விளக்குகிறது:

நீ நீயாக இருப்பதற்கு ஒரு முகாந்தரம் உண்டு.
நீ ஒரு பெரிய திட்டத்தின் பகுதியாக இருக்கின்றாய்.
நீ ஒரு விலையேறப்பெற்ற பூரண தனித்தன்மையான
வடிவமைப்பு.
தேவனின் விசேஷ மனிதன் அல்லது மனுஷி.

உன் தோற்ற அமைப்புக்கு ஒரு முகாந்தரம் உண்டு.
நமது தேவன் தவறொன்றை இழைக்கவில்லை.
உன்னைத் தாயின் கருவிலேயே வனைந்து கொண்டார்.
உன்னை எப்படி விரும்பினாரோ அப்படியே உருவாக்கிவிட்டார்.

உன் பெற்றோர்கள் உன் தேவனின் தெரிந்தெடுப்பு.
இதைக்குறித்து உன் உணர்வு என்ன சொல்லுகின்றது
என்பது ஒரு பொருட்டல்ல.
அவர்கள் உனக்கென்று தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள்.
எஜமானின் முகத்திரை அவர்களிலும் உண்டு.

நீ கடந்து வந்த வேதனையின் பாதை எளிதானதல்ல.
அது உன்னை புண்படுத்தியபோது தேவனும் அழுதார்;
ஆயினும் உன் இதயத்தை வனையும்படி அது
அனுமதிக்கப்பட்ட ஒன்று
அவரின் சாயலுக்கு ஒப்பாக நீ மாறும்பொருட்டு.

நீ நீயாக இருப்பதற்கு ஒரு முகாந்தரம் உண்டு.
உன் எஜமானின் கோல் உன்னை வனைந்தது
நேசமே, நீ நீயாக இருக்கின்றாய்,
காரணம் தேவன் ஒருவர் இருக்கின்றார்![11]

நாள் இரண்டு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தைனைக்கான ஒரு கருத்து: நான் தற்செயலாக பிறந்தவன் அல்ல!

மனனம் செய்ய ஒரு வசனம்: "நான் உன் சிருஷ்டிகர். நீ தோன்றுவதற்கு முன்னமே நான் உன்னில் கரிசனைக் கொண்டேன்." ஏசாயா 44:2 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தேவன் என்னைத் தனித்தன்மையோடு சிருஷ்டித்தார் என்பதனை அறிந்த நான், என் வாழ்வின் எந்தப் பகுதிகளை (ஆள்தத்துவம், தோற்றம், பிறப்பின் பின்னணி) ஏற்றுக்கொள்ளப் போராடுகின்றேன்?

3

உங்களது வாழ்க்கையை உந்தித் தள்ளுவது எது?

எரிச்சலும் பொறாமையுமே வெற்றி அடைய வேண்டும் என்பதற்கான அடிப்படை நோக்கமாக இருக்கின்றதை நான் கண்டேன்!
பிரசங்கி 4:4 (புதிய மொழியாக்கம்)

நோக்கம் இல்லாத ஒரு மனிதன் சுக்கான் இல்லாத ஒரு கப்பலைப் போல இருக்கிறான்-
அவன் சுற்றித் திரிபவன், ஒன்றுமில்லாதவன்;
அவன் ஒரு மனிதனே இல்லை.
தாமஸ் கார்லைஸ்

ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் ஏதாவது ஒன்றினால் உந்தித் தள்ளப்படுகின்றது.

ஆங்கிலத்தில் சொல்லப்படும் "*டிரைவ்*" என்ற வினைச் சொல்லுக்கு அநேக அகராதிகள் ''வழிநடத்துதல்'', ''கட்டுப் படுத்துதல்" அல்லது "திருப்புதல்" என்ற விளக்கத்தைக் கொடுக் கின்றன. நீங்கள் ஒரு மோட்டார் வாகனத்தைச் செலுத்தும்போது, ஒரு ஆணியை அல்லது கால்பந்தை அடிக்கும்போது நீங்கள் ஒரு உந்துவேகத்தை கொடுத்து வழிநடத்துகின்றீர்கள், கட்டுப்படுத்துகின்றீர்கள் அல்லது திருப்புகின்றீர்கள். அதேபோல உங்களது வாழ்க்கையில் உங்களை வழிநடத்தும் சக்தி என்ன? உந்தித்தள்ளும் சக்தி எது?

இப்பொழுதும் ஏதோ ஒரு பிரச்சனையாலோ, ஒரு அழுத்தத்தினாலோ அல்லது ஒரு காலக்கெடுவினாலோ நீங்கள் உந்தித்

தள்ளப்படக்கூடும் அல்லது ஒரு வேதனைத் தரும் நினைவால், ஆட்டிப்படைக்கும் பயத்தால், அசைக்க முடியாத ஆதாரமற்ற நம்பிக்கைகளினால் வழி நடத்தப்படலாம். நூற்றுக்கணக்கான சூழ்நிலைகள், மதிப்புகள் மற்றும் உணர்வுகள் நமது வாழ்வை உந்தித் தள்ளக்கூடும். அவைகளில் ஐந்து பிரத்தியேக காரியங்களை இங்கே பட்டியலிட்டிருக்கின்றேன்.

அநேக மக்கள், குற்ற உணர்வினால் நடத்தப்படுகின்றனர். இவர்கள் தங்களது முழு வாழ்க்கையையும் குற்ற உணர்வோடு உள்ள ஓட்டத்தினாலும், வெட்கத்தை மறைக்கும் முயற்சியினாலும் எப்பொழுதும் நடத்திக்கொண்டிருக்கின்றனர். குற்ற உணர்வுகளினால் நடத்தப்படும் மக்கள் கடந்த கால ஞாபக அலைமோதல்களினால் அவதிப்படுகின்றனர். கடந்த வாழ்வு தங்களது எதிர்காலத்தை பாதிக்கும் அளவிற்கு நடந்து கொள்ளுகின்றனர். தங்களுடைய வெற்றியை தாங்களே அழித்து, தங்களது அறியாமையினால் தங்களையே தண்டித்துக் கொள்ளுகின்றனர். காயீன் பாவம் செய்தபோது அவனது குற்ற உணர்வு தேவ பிரசன்னத்தோடு அவனுக்கு இருந்த தொடர்பைத் துண்டித்துப் போட்டது. அப்பொழுது தேவன் அவனைப் பார்த்து, *"நீ பூமியில் நிலையற்று அலைகிறவனாயிருப்பாய்"*[1] என்றார். இன்று காணப்படும் அநேக மக்களின் நிலையை இது விவரிக்கின்றது – வாழ்வின் நோக்கம் அறியாமல் அலைந்து திரியும் ஓர் அவல நிலை.

நாம் நமது கடந்த காலத்தின் விளைவுகள்... ஆயினும், அந்த சிறைக்குள் நாம் இருக்க வேண்டிய அவசியமில்லை. தேவனுடைய நோக்கம் உங்களது கடந்த காலத்தால் வரையறுக்கப்பட்டிருக்க வில்லை. கொலைகாரனான மோசேயை ஒரு தலைவனாக மாற்றிய தேவன், பயந்த கிதியோனை ஒரு வீர கதாநாயகனாக மாற்றிய தேவன்... மீதமுள்ள உங்களது வாழ்க்கையின் மூலமாகவும் ஆச்சரியமான காரியங்களை செய்வார். ஒரு புதிய ஆரம்பத்தை மக்களுக்கு கொடுப்பதில் தேவன் ஒரு நிபுணர். ***"குற்ற மனச்சாட்சியுள்ளவர்கள் மன்னிப்பு பெற்றதனால்... எத்தனை மகிழ்ச்சி; பாவங்களை அறிக்கை செய்துவிட்ட ஒரு நபரின் பழைய வாழ்வின் காரியங்களை முழுமையாக தேவன் அகற்றும்போது... எத்தனை மகிழ்ச்சி"***[2] என்று வேதம் கூறுகின்றது.

அநேக மக்கள், மூர்க்கத்தினாலும் கோபத்தினாலும் நடத்தப்படுகின்றனர். இவர்கள் தங்களது காயங்களையும் கசப்பு உணர்வுகளையும் பற்றிப் பிடித்துக் கொண்டிருப்பார்கள். அதை விட்டு வெளியே வருவதில்லை. மன்னிப்பு வழங்கி காயங்களிலிருந்து விடுதலை பெறாமல்... மறுபடியும் மறுபடியும் நடந்த நிகழ்வையே நினைத்து நினைத்து வேதனைப்படுவார்கள். இப்படி மூர்க்கத்தினால் வழிநடத்தப்படும் மக்களில் சிலர் கோபத்தை தங்களுக்குள் ***"அடக்கி வைத்துக் கொள்ளுகின்றனர்"***. மற்றும் சிலரோ, ***"ஆக்ரோஷமாக எழுந்து சீறுகின்றனர்"***. இப்படிப்பட்ட இரண்டு விதமான மாறுத்தரமும் ஆரோக்கியமற்றதும் பிரயோஜனமற்றவையுமாகும்.

மூர்க்கம், மனக்கசப்பு ஆகிய காரியங்களினால் – நீங்கள் மனங்கசந்துக் கொள்ளுகிற நபரைவிட அதிகம் பாதிக்கப்படுவது நீங்கள்தான். உங்களை காயப்படுத்தினவர், அநேகமாக அந்த சம்பவத்தை மறந்து தனது வாழ்க்கையை தொடர்ந்து நடத்திக் கொண்டிருப்பார் – ஆனால், நீங்களோ... அந்த காயத்தோடும் இடறலோடும் உழன்று உழன்று, கடந்த காலத்தையே தொடர் கதையாக்கி வாழுகின்றீர்கள்.

கவனியுங்கள்: கசப்பும் மூர்க்கமும் நமக்குள் ***இருக்கின்றவரை தான்,*** கடந்த காலத்தில் நம்மை காயப்படுத்தினவர்கள் தொடர்ந்து நம்மை காயப்படுத்த முடியும். கடந்த காலம் ஒரு கடந்த காலம்! ஒன்றும் அதை மாற்ற முடியாது. நாம் அதைப் பற்றிப் பிடித்துக் கொண்டிருந்தால்... அந்த மனக்கசப்பானது நம்மைத் தொடர்ந்து காயப்படுத்தும். ஆகவே, உங்கள் நிமித்தமாவது, கற்றுக் கொள்ள வேண்டிய காரியங்களை அவைகளிலிருந்து கற்றுக்கொண்டு, விட்டுவிட வேண்டிய காரியங்களை விட்டுவிடுங்கள். ***"கோபம் நிர்மூடனைக் கொல்லும்; பொறாமை புத்தியில்லாதவனை அதம் பண்ணும்"***[3] என்று வேதம் கூறுகின்றது.

அநேக மக்கள், பயத்தினால் நடத்தப்படுகின்றனர். இப்பயங்களுக்கான காரணங்கள் பலவாக இருக்கலாம்: வேதனை தரும் அனுபவங்கள், உண்மைக்கு மாறான எதிர்பார்ப்புகள், அதிக கட்டுப்பாடுகள் உள்ள குடும்பத்தின் வளர்ப்பு அல்லது மரபு வழி

வந்தவைகளாகவும் இருக்கலாம். காரணம் என்னவாக இருந்தாலும், பயத்தினால் நடத்தப்படுகின்ற மக்கள், வாழ்வின் பல வாய்ப்புகளை இழக்கின்றனர் – ஏனெனில், எந்த காரியத்திலும் துணிச்சலுடன் இறங்குவதற்கு தயங்குகின்றனர், பயப்படுகின்றனர். அப்பயங்களைத் தவிர்க்கவும், அந்தஸ்தை நிலைநாட்டிக் கொள்ளவும், பாதுகாப்பாக செயல்படுகின்றனர்.

பயம் என்பது நம்மை நாமே ஒரு சிறைக்குள் வைத்துக்கொள்ளுவது போன்றதாகும். இது நமக்காக தேவன் வைத்திருக்கும் திட்டத்திற்குள் நுழையக்கூடாதபடிக்கு தடுத்துப்போடுகின்றது. விசுவாசம், அன்பு என்ற ஆயுதங்களை பயன்படுத்தி அதை எதிர்த்து நிற்கவேண்டும். ***“அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தை புறம்பே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது; பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல”***[4] என்று வேதம் கூறுகின்றது.

அநேக மக்கள், பொருளாசையால் நடத்தப்படுகின்றனர். இவர்களுக்கு, பொருட்களை சேர்க்க வேண்டும் என்பதே வாழ்வின் மிகப்பெரிய இலக்கும் நோக்கமுமாகும். அதிக சந்தோஷம், அதிக முக்கியத்துவம், அதிக பாதுகாப்பு ஆகிய இம்மூன்றும் நமக்கு அதிக பணமும், பொருட்களும் இருந்தால்தான் கிடைக்கும் என்ற எண்ணம் ஒரு மாயை – இம்மூன்றும் உண்மையன்று! பொருட்கள் ஒருவேளை ***தற்காலிக*** சந்தோஷத்தைக் கொண்டுவரலாம். பொருட்கள் மாறும் தன்மையை உடையதாக இல்லாததால்... சில காலங்களுக்கு பின் அவைகளின் மீது ஒரு சலிப்பு உண்டாகும். அதைவிட வேறு ஏதாவது கிடைக்குமா, வாங்கலாமா என்ற எண்ணம்தான் நமக்கு வருகின்றது.

அதிக பொருட்கள் நம்மிடம் இருந்தால் நாம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் ஆவோம் என்பதும் மாயையே. நமது மதிப்பும் மரியாதையும் நம்மிடம் உள்ள பொருட்களின் அடிப்படையில் அல்ல. தேவன் சொல்லும் காரியம் – வாழ்வின் ***மதிப்பு*** பொருட்களினாலோ அல்லது பொருட்களிலோ வருவதில்லை.

மற்றொரு பிரபலமான மாயை என்னவெனில் அதிக பணம் இருந்தால் அதிக பாதுகாப்பு கிட்டும் என்பது. அதுவும் உண்மை அல்ல. நம்மிடம் உள்ள பொக்கிஷங்கள் பல காரணங்களால்

நம்மிடமிருந்து எடுபடக்கூடும். உங்களிடமிருந்து எடுக்கப்படமுடியாத ஒன்றின் மூலம்தான் உண்மையான பாதுகாப்பு உண்டாகும் – தேவனோடு உங்களுக்கு இருக்கும் உறவு.

அநேக மக்கள், அங்கிகாரம் என்ற தேவையோடு நடத்தப்படுகின்றனர். பெற்றோர் அல்லது புருஷன் – மனைவி அல்லது பிள்ளைகள் அல்லது நண்பர்கள் அல்லது ஆசிரியர்கள் போன்ற மக்களுடைய எதிர்பார்ப்புகளினால் இவர்களது வாழ்க்கை நடத்தப்படுகின்றது. இன்று அநேகர் வளர்ந்து பெரியவர்களாக இருக்கின்றவர்கள்கூட பிரியப்படுத்த முடியாத பெற்றோர்களின் அங்கீகாரத்தை பெற முயற்சிக்கின்றார்கள். இன்னும் சிலர் நண்பர்களின் அழுத்தத்தினால் நடத்தப்படுகின்றனர். எப்பொழுதும், மற்றவர்கள் தன்னைக் குறித்து என்ன நினைக்கின்றார்கள் என்பதே இவர்களது முக்கிய எண்ணம். துரதிர்ஷ்டவசமாக, திரள் கூட்டத்தை பின்பற்றுகிறவர்கள் திரள் கூட்டத்தில் காணாமல் போவார்கள்.

> ***தேவனுடைய நோக்கங்களை அறிவதைப் பார்க்கிலும் மேலானது வாழ்வில் வேறொன்றும் இல்லை. அவற்றை அறியாத பட்சத்தில் வேறு எதுவும் அதற்கு ஈடாக முடியாது.***

வெற்றிக்கான எல்லா திறவு கோல்களும் எனக்கு தெரியாது, ஆகிலும் தவறுவதற்கான ஒரு திறவுகோல்: எல்லாரையும் பிரியப்படுத்த முயற்சிப்பது! மற்றவர்களின் கருத்துக்களால் கட்டுப்படுத்தப்பட்ட எவரும் தேவனுடைய நோக்கங்களை தவற விடுவார்கள் என்பதனை நிச்சயமாக சொல்லிவிடலாம். ***"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது"***[5] என்று இயேசு சொன்னார்.

இங்கு குறிப்பிடாத இன்னும் சில சக்திகள் உங்களை வழிநடத்தக்கூடும்... ஆனால், முடிவு ஒன்றுதான் – அடைபட்ட எல்லை (dead end) – அதனை விளக்க வேண்டுமானால் உபயோகப்படுத்தாத திறமைகள், தேவையற்ற மன அழுத்தம், திருப்தியில்லா வாழ்வு எனக் கூறலாம்.

இந்த 40 நாள் பயணம், ஒரு *நோக்கத்தினால் வழிநடத்தப்படும் வாழ்க்கையை* எப்படி வாழ்வது என்பதனை விளக்கிக் காட்டும். அவரால் வழிநடத்தப்படுதல், அவரால் கட்டுப்படுத்தப்படுதல், அவரால் திருப்பப்படுதல். தேவனுடைய நோக்கங்களை அறிவதை பார்க்கிலும் மேலானது வாழ்வில் வேறொன்றும் இல்லை. அவற்றை அறியாத பட்சத்தில் வேறு எதுவும் அதற்கு ஈடாக முடியாது. வெற்றி, செல்வம், புகழ், இன்பம்... எதுவும் ஈடாகாது! நோக்கம் இல்லாத வாழ்க்கை என்பது – அர்த்தமற்ற செயல் நிறையற்ற வாழ்வு, தரிசனம் இல்லாத செயல்திட்டங்கள், காரணம் இல்லாத நிகழ்வுகள்.

நோக்கம் இல்லாத இடங்களில் நாம் காணக்கூடியதெல்லாம் – செயல்களால் நிறைந்த ஒரு அர்த்தமற்ற வாழ்வு, தரிசனம் இல்லாத செயல்திட்டங்கள் மற்றும் காரணம் இல்லாத நிகழ்வுகள். நோக்கம் இல்லாத வாழ்க்கை ஆர்வமற்றதும், அற்பமானதும், அர்த்தமற்றதுமாயிருக்கிறது.

நோக்கத்தினால் வழிநடத்தப்படும் வாழ்க்கையின் நன்மைகள்

நோக்கத்தினால் வழிநடத்தப்படும் வாழ்க்கையை வாழுவதினால் ஐந்து சிறப்பான நன்மைகள் உண்டு:

உங்களது நோக்கத்தை நீங்கள் அறிந்துகொண்டால், உங்கள் வாழ்க்கை அர்த்தமுள்ளதாகின்றது. அர்த்தத்தை உடையவர் களாக இருப்பதற்கே நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம். ஆகையால்தான் மக்கள் இன்று சாஸ்திரம், ஜோசியம் என்ற தவறான முறைகளை நாடி அதனை கண்டுக்கொள்ள முயற்சிக் கின்றனர். வாழ்க்கை அர்த்தம் இருக்குமானால், நாம் எதையும் தாங்கிக் கொள்ளலாம்; அது இல்லாமற்போனால்தான் எதையும் தாங்க முடிவதில்லை.

நாள் மூன்று:
உங்களது வாழ்க்கையை உந்தித் தள்ளுவது எது?

இருபது வயதை தாண்டிய ஒரு இளைஞன் இவ்வாறு எழுதினான்: "தோல்வியடைந்த உணர்வுதான் எனக்கு இருக்கின்றது. ஏனெனில், எனக்கே என்ன என்று தெரியாத ஒன்றை நான் அடைய

விரும்புகின்றேன், பிரயாசப்படுகின்றேன். எனக்கு தெரிந்த தெல்லாம் வாழ்க்கையை அப்படியே கடத்தி செல்லுவதுதான். என்றாவது ஒரு நாள் எனது நோக்கத்தை நான் கண்டுகொண்டால்... அன்றுதான் உண்மையான வாழ்க்கை வாழுகின்ற உணர்வு எனக்கு உண்டாகும்."

தேவன் இல்லாமல், வாழ்வுக்கு நோக்கம் இல்லை. நோக்கம் இல்லாமல் வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லை. அர்த்தமில்லையென்றால், வாழ்க்கைக்கு முக்கியத்துவமும் நம்பிக்கையும் இல்லை. வேதத்தில், இந்த நம்பிக்கையின்மையை அநேக வித்தியாசமான மக்கள் விவரித்திருக்கின்றனர். ஏசாயா முறையிடும்போது, *"நான் விருதாவாய் உழைக்கின்றேன்; வீணும் வியர்த்தமுமாய் என் பெலனைச் செலவழிக்கின்றேன்"*[6] என்றார். *"என்னுடைய வாழ்க்கை ஒவ்வொரு நாளும் நம்பிக்கையின்மையை நோக்கி இழுத்துச் செல்லப்படுகின்றது"*[7] என்றும் *"நான் விட்டுவிடு கின்றேன்; வாழ்வது எனக்கு களைப்பாக உள்ளது. என்னைத் தனியே விட்டுவிடுங்கள். என் வாழ்க்கையில் ஒரு அர்த்தமும் இல்லை"*[8] என்றும் யோபு புலம்பினார்.

ஜீவனுக்கு எப்படி காற்றும் தண்ணீரும் தேவையோ அதேபோல நம்பிக்கையும் மிக மிக அவசியம். நம்பிக்கை இல்லையென்றால் வாழ்வின் சவால்களுக்கு நாம் ஈடு கொடுக்க முடியாது. தன்னிடம் புற்றுநோய் சிகிச்சைக்கு வரும் நோயாளிகளிடம், "நூறு ஆண்டுகள் ஜீவிக்க விரும்புகின்றீர்களா?" என்று கேட்கும்போது... யார் யார் ஒரு வாழ்வின் நோக்கத்தை உடையவர்களாக இருந்தனரோ அவர்கள் மட்டுமே உறுதியாக "ஆம்" என்று சொன்னதாகவும், பின்னர் அப்படி சொன்னவர்களில் அநேகர் அந்த வியாதியிலிருந்து பிழைத்து வெளிவந்திருப்பதாகவும் புற்று நோய் மருத்துவர் டாக்டர் பெர்னி சீகெல் கூறுகின்றார். நம்பிக்கை என்பது நோக்கம் உடையவர்களாக இருக்கும்போது வருகிறது.

ஒருவேளை நம்பிக்கையற்ற உணர்வு உங்களுக்கு இருக்குமாயின்... கலங்க வேண்டாம், சற்று பொறுத்திருங்கள்! நோக்கத்தோடு நீங்கள் உங்களது வாழ்க்கையை வாழ ஆரம்பிக்கும்போது, அற்புதமான மாற்றங்கள் உங்களது வாழ்க்கையில் நடைபெறும். தேவன் சொல்லுகிறார், *"நான் உனக்காகத் திட்டமிட்டிருக்கின்ற*

காரியங்களை நான் அறிவேன். ...நான் உனக்காக நல்ல திட்டங்களை வைத்திருக்கின்றேன் – உன்னைக் காயப்படுத்தும் காரியங்கள் அல்ல; உனக்கு நம்பிக்கையையும் நல்ல ஒரு எதிர்காலத்தையும் கொடுப்பேன்"[9] முடியாத ஒரு காரியத்தை சந்திக்கின்ற ஒரு உணர்வு உங்களுக்கு இருக்கக்கூடும். ஆனால், *"தேவன் ... நாம் கேட்பதற்கும், கற்பனை செய்து பார்ப்பதற்கும் மிக அதிகமாக கிரியை செய்ய வல்லவராயிருக்கின்றார் – நமது சிறப்பான ஜெபம், வாஞ்சை, சிந்தனை, நம்பிக்கை ஆகிய காரியங்களைவிட பலமடங்கு அதிகமாக செய்ய அவர் வல்லவராயிருக்கின்றார்"*[10] என்று வேதம் கூறுகின்றது.

உங்களது நோக்கத்தை நீங்கள் அறிந்து கொண்டால், உங்கள் வாழ்க்கை இலகுவாகின்றது. எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்பதில் தெளிவுண்டாகிறது. நிகழ்வுகளில் எது முக்கியம், எது முக்கியமல்ல என்பது எளிதாக புலப்படுகிறது. "இந்த காரியத்தை நான் செய்வதினால், தேவன் எனது வாழ்வுக்கு வைத்திருக்கும் நோக்கம் நிறைவேறுமா?" என்ற ஒரு எளிய கேள்வியை எப்பொழுதும் கேட்கப் பழகிவிடுவீர்கள்.

தெளிவான நோக்கம் இல்லையென்றால், தீர்மானங்கள் எடுப்பதற்கும், நேரத்தை ஒதுக்குவதற்கும், உபகரணங்களைப் பயன்படுத்துவதற்கும் ஒரு அஸ்திபாரம் இல்லாமல் காணப்படும். சூழ்நிலைகள், அழுத்தங்கள், மன உணர்வு ஆகிய காரியங்களின் அடிப்படையில் தீர்மானங்களை எடுக்க ஆரம்பித்துவிடுவீர்கள். நோக்கங்களை அறியாதவர்கள் அதிகமான காரியங்களை செய்ய முயற்சிக்கின்றனர். ***அது*** அவர்களுக்கு மன அழுத்தத்தையும், களைப்பையும், முரண்பாடுகளையும் ஏற்படுத்துகின்றது.

நீங்கள் செய்ய வேண்டும் என்று மக்கள் எதிர்பார்க்கின்ற அத்தனை காரியத்தையும் உங்களால் நிச்சயம் செய்ய முடியாது. தேவ சித்தம் செய்வதற்கான நேரம் மட்டும்தான் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் செய்யமுடியாத நிலையில் நீங்கள் இருப்பீர்களானால்... அநேகமாக, தேவன் உங்களுக்கு நியமித்த காரியத்தை செய்ய முற்பட்டிருக்கின்றீர்கள் என்றுதான் அர்த்தம் (அல்லது, தொலைக்காட்சி பெட்டிக்கு முன்பாக அதிகம் உட்கார்ந்திருப்பதனால்கூட அப்படி இருக்கக்கூடும்). நோக்கம்

நிறைந்த வாழ்வு, இலகுவான வாழ்க்கை முறையையும், புத்தி தெளிவுள்ள செயல்பாடுகளையும் ஏற்படுத்தும். *"ஒன்று மில்லாதிருக்கத் தன்னைச் செல்வனாகப் பாராட்டி போலியான வாழ்க்கை வாழ்வது வெறுமையான வாழ்க்கையாகும்; எளிமையானதும், சாதாரணமானதுமான வாழ்க்கையே நிறைவான வாழ்க்கையாகும்"*[11] என்று வேதம் கூறுகின்றது. இப்படிப்பட்ட வாழ்க்கை ஒரு சமாதானத்தை நம்முடைய மனதுக்கு கொண்டுவருகிறது: *"கர்த்தாவே, உம்முடைய நோக்கங்களை உறுதியாய்ப் பற்றி கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கிறபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக் கொள்வீர்."*[12]

உங்களது நோக்கத்தை நீங்கள் அறிந்துகொண்டால், உங்கள் வாழ்க்கைக்கு நேர்கவனம் உண்டாகின்றது. இது உங்கள் முயற்சி, சத்துவம் ஆகிய காரியங்களை முக்கியமானவைகளுக்கு மட்டும் பிரயோகிக்க ஒருமுகத்தை ஏற்படுத்துகிறது. தெரிந்தெடுத்து ஈடுபாடு கொள்ளுவதினால், சிறந்தோங்குதல் சாத்தியமாகின்றது.

சிறு சிறு காரியங்களால் திசைத் திருப்பப்படுவது மனித இயல்பு – முக்கியமற்ற காரியங்களை பின்தொடர்ந்து வாழ்வை வீணடிக்கும் செயல்கள்! ஹென்றி டேவிட் தொரேயு என்பவர் மக்கள் *"அமைதியான ஏக்கத்தோடு,"* வாழுவதாக சொன்னார். ஆனால், *"குறிக்கோள் இல்லாத திசைத்திருப்பங்கள்"* என்று சொல்லுவது இன்றைய காலத்து மக்களுக்கு மிகவும் பொருத்தமான வாக்கியம். இன்றும் அநேகருடைய வாழ்வு வெறுமையாக ஒரே இடத்தில் சுற்றும் பம்பரத்தைப்போல உள்ளது.

ஒரு தெளிவான நோக்கம் இல்லாமல் இருந்தால், வாழ்வின் திசையை மாற்றிக் கொண்டே இருப்பீர்கள் – வேலைகள், உறவுகள், திருச்சபைகள் என்று சொல்லிக்கொண்டே போகலாம். இப்படிப்பட்ட வெளியான காரியங்களை மாற்றுவதினால் குழப்பத்தை சரி செய்யப்போவதுமில்லை, இருதயத்தின் வெறுமையை நிரப்பப்போவதுமில்லை. ***இந்த முறை சரியாகிவிடும்*** என்று நினைத்து காரியங்களை மாற்றலாம். ஆனால், அது

சரியாவதில்லை... காரணம், நேர்கவனமும், நோக்கமும் இல்லாததுதான்.

“சிந்தனை செய்யாமலும், கவனக்குறைவோடும் வாழாதீர்கள், உங்களது எஜமானனின் திட்டம் என்ன என்பதை புரிந்து கொள்ளுங்கள்”[13] என்று வேதம் கூறுகின்றது.

நேர்கவனத்தோடு அல்லது குறிக்கோளோடு செயல்படுவதினால் வெளிப்படும் வலிமையை ஒளியை குவியப் பண்ணும்போது உண்டாகும் வல்லமையிலிருந்து கற்றுக் கொள்ளலாம். சிதறியிருக்கும் ஒளி சிறிதளவு சக்தியை அல்லது தாக்கத்தையே கொண்டிருக்கும். ஆனால், அந்த ஒளியை உருப்பெருக்க கண்ணாடியை (Magnifying glass) கொண்டு ஒருமுகப்படுத்தும்போது காகிதங்களை பற்றியெரியச் செய்யலாம். அது இன்னும் ஒருமுகப்படுத்தப்படும்போது, லேசர் கதிர்களாக வெளிப்பட்டு இரும்பு பொருட்களைக்கூட வெட்ட முடிகின்றது.

நோக்கத்தோடு வாழும் ஒரு வாழ்க்கையும், ஒருமுகப்படுத்தப் பட்ட ஒரு வாழ்க்கையும் மிகுந்த வலிமை உள்ளவை. சரித்திரத்தில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தினவர்கள் யாவரும் நேர்கவனத்தோடு ஒருமுகப்படுத்தின நிலையில் தங்கள் வாழ்க்கையை வைத்துக் கொண்டதினால்தான் அவ்வாறு சொல்ல முடிந்தது.

உங்களது வாழ்க்கை ஒரு தாக்கத்தை ஏற்படுத்த வேண்டுமானால், அதனை ஒருமுகப்படுத்துங்கள்!

உதாரணமாக, அப்போஸ்தலனாகிய பவுல், ஒரு தனி மனிதனாக ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் கிறிஸ்தவத்தை பரப்பினான். இரகசியம் என்ன? ஒருமுகப்படுத்தப்பட்ட வாழ்வுதான்! *“எனது எல்லா சத்துவத்தையும் ஒருமுகப்படுத்தி ஒன்றை மட்டும் செய்கிறேன்: பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப் பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்”*[14] என்று வேதம் கூறுகின்றது.

உங்களது வாழ்க்கை ஒரு தாக்கத்தை ஏற்படுத்தவேண்டுமாயின், அதனை ***ஒருமுகப்படுத்துங்கள்!*** தடுமாறும் நிலையை நிறுத்துங்கள். எல்லாவற்றையும் செய்யும் நிலையையும் மாற்றுங்கள். குறைவான காரியங்களை செய்யுங்கள். நல்ல செயல்கள் என்பவைகளிலும் சிலவற்றை ஒதுக்கி வைத்துவிட்டு முக்கியமானவைகளை மட்டும் செய்யுங்கள். பலன் தரும் வேலையும், அதிக வேலையும் ஒன்றல்ல – குழப்பிக் கொள்ள வேண்டாம்! நோக்கம் இல்லாமல் அலுவலாக இருக்கக்கூடும் – ஆனால், பலன் என்ன? ***''தேவன் வைத்திருக்கின்ற அத்தனையையும் சுதந்தரிக்க வேண்டுமானால், இலக்கை குறிக்கோளாக வைத்து, வாழ்க்கையை ஒருமுகப்படுத்தி வாழுங்கள்.''***[15] என்று பவுல் கூறுகின்றார்.

உங்களது நோக்கத்தை நீங்கள் அறிந்துகொண்டால், அது உங்கள் வாழ்க்கைக்கு உந்துவேகத்தை கொண்டு வருகின்றது. நோக்கம் எப்பொழுதும் ஓர் உள்ளுணர்வை கொண்டு வருகின்றது. தெளிவான நோக்கம் வெளிக்கொண்டுவரும் ஒரு சத்துவத்தைப்போல வேறு எதுவும் செய்வதில்லை. அதேபோல்... மறுபக்கத்தில், நோக்கம் இல்லாதபொழுது உள்ளுணர்வு அற்று ஒரு மந்த நிலை உருவாகின்றது. படுக்கையை விட்டு எழும்புவதே ஒரு பெரிய சவாலாக போய் விடும். அதிக வேலை செய்வதனால் அல்ல, அர்த்தமற்ற வேலைகளைச் செய்வதாலேயே நாம் களைப்படைந்து, சக்தி குன்றி மகிழ்ச்சியை இழந்து போகின்றோம்.

நங்கள நனைவு கூரப்படுவதற்காக இப்பூமியில் வைக்கப்படவில்லை. நித்தியத்திற்கு ஆயத்தமாவதற்கே இப்பூமியில் நீங்கள் வைக்கப்பட்டுள்ளீர்கள்.

மேலானதொரு நோக்கம் என்று உங்களால் அறியப்பட்ட ஒரு நோக்கத்திற்கு நீங்கள் பயன்படுகிறவராக இருப்பதுவே வாழ்க்கையின் மெய்யான சந்தோஷமாகும். செயல்படுகிற ஒருவனாயிராமல் குறை குற்றங்கள் கூறிக்கொண்டு அசதியாயிருந்தால் நீ சந்தோஷமற்று காணப்படுவாய்" என்று ஜார்ஜ் பெர்னார்ட் ஷா எழுதினார்.

உங்களது நோக்கத்தை நீங்கள் அறிந்துகொண்டால், அது உங்களை நித்தியத்திற்கு ஆயத்தப்படுத்துகிறது. அநேக மக்கள் இப்பூமியில் வாழும் நாட்களில், எதையாகிலும் செய்து, தான் நினைவுகூரப்படும் அளவுக்கு சாதனைகளை படைக்க விரும்புகிறார்கள். அவர்கள் கடந்து சென்ற பிறகு நினைவுகூரப்பட விரும்புகின்றனர். ஆகிலும்... முக்கியம் என்னவெனில், மற்றவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதல்ல – ***தேவன்*** என்ன கூறுகிறார் என்பதே! செயல்கள் மேற்கொள்ளப்படுகின்றன, சாதனைகள் உடைக்கப்படுகின்றன, புகழ்ச்சி மங்கிப்போகின்றது, நன்மதிப்பு மறக்கப்படுகின்றது – ஆனால், மனிதன் இதை மறந்துபோகின்றான். ஜேம்ஸ் டாப்சனுக்கு தனது கல்லூரி நாட்களில் இருந்த இலக்கு நல்ல ஒரு டென்னிஸ் வீரனாக விளங்க வேண்டும் என்பதே. தான் பெற்ற வெற்றி கேடயம் கல்லூரியின் முக்கிய அலமாரியில் வைக்கப்பட்டிருந்ததை அறிந்து அவர் பெருமையடைவது உண்டு. சில ஆண்டுகள் கழித்தபின்னர், அக்கல்லூரியானது சீரமைக்கப்பட்டபோது அக்கேடயம் குப்பையில் தூக்கி வீசப்பட்டிருந்தது. இதனைக் கண்ட ஒருவர் அதனை எடுத்து, ஜேம்ஸ் டாப்சனுக்கு அனுப்பிவைத்தார். ***"காலப்போக்கில் உங்களுடைய எல்லா வெற்றிச் சின்னங்களையும் யாராவது ஒருவர் குப்பையில் எறிந்துவிடுவார்கள்"*** என்று ஜிம் கூறுகின்றார்.

பூமியில் சாதனையை ஏற்படுத்தி, நினைவுகூரப்படும் அளவுக்கு செயல்பட வேண்டும் என்பது ஒரு குறுகிய பார்வையுடனான இலக்கு. நேரத்தை ஞானமுடன் செலவழிப்பது *நித்திய* புகழ்ச்சியை கொண்டுவரும். நீங்கள் நினைவுகூரப்படுவதற்காக இப்பூமியில் வைக்கப்படவில்லை. நித்தியத்திற்கு ஆயத்தமாவதற்கே இப்பூமியில் வைக்கப்பட்டுள்ளீர்கள். நித்தியத்திற்குள் பிரவேசிக்கும் முன், தேவனுக்கு முன்பாக நிற்கும் நாள் ஒன்று வரும். அங்கே நமது வாழ்வைக் குறித்த ஒரு ஆய்வும், இறுதி பரீட்சையும் இருக்கும். ***"நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுவோமாக. ஆம், நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தேவனுக்கு கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்"***[16] என்று வேதம் கூறுகின்றது.

அதிர்ஷ்டவசமாக, நாம் இப்பரீட்சையில் வெற்றிபெற வேண்டுமென்று தேவன் விரும்புகின்றபடியால், கேள்விகளை முன்பாகவே கொடுத்துவிட்டார். நம்மிடம் கேட்கப்போகும் அக்கேள்விகளை நாம் வேதாகமத்திலிருந்து யூகிக்க முடியும். தேவன் நம்மிடம் கேட்கப்போகும் இரண்டு முக்கிய கேள்விகள்:



முதலாவது, ***"என்னுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நீ என்ன செய்தாய்?"*** தேவன் நம்முடைய மத பின்னணியையோ உபதேசங்களையோ குறித்துக் கேள்வி கேட்கமாட்டார். அவர் கேட்கும் ஒரே ஒரு கேள்வி, இயேசு கிறிஸ்து உனக்காக சிலுவையில் செய்ததை ஏற்றுக் கொண்டாயா? ஏற்றுக் கொண்டு அவரை நேசிக்கவும் விசுவாசிக்கவும் கற்றுக் கொண்டாயா? என்பதேயாகும். ***"நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாய் இருக்கிறேன். என்னாலேயன்றி ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்"***[17] என இயேசு கூறினார்.

இரண்டாவது, ***"நான் உனக்கு கொடுத் தவைகளைக் கொண்டு நீ என்ன செய்தாய்?"*** நான் உனக்குக் கொடுத்த வரங்கள், தாலந்துகள், சந்தர்ப்பங்கள், ஆற்றல், உறவுகள் எல்லாவற்றையும் கொண்டு உன் வாழ்க்கையில் நீ என்ன செய்தாய், அவைகளை உனக்கென்று செலவு செய்தாயா? அல்லது தேவன் எந்த நோக்கத்திற்காகப் படைத்தாரோ அந்த நோக்கத்திற்காகச் செலவு செய்தாயா? இவ்விரண்டு கேள்விகளுக்கும் உங்களை ஆயத்தப்படுத்துவதே இப்புத்தகத்தின் குறிக்கோளாகும். உங்கள் நித்திய காலத்தை ***எங்கே*** செலவிடுவீர்கள் என்பதை முதற் கேள்வி தீர்மானிக்கும். நித்திய காலத்தில் ***என்ன செய்வீர்கள்*** என்பதை இரண்டாவது கேள்வி தீர்மானிக்கும். இப்புத்தகத்தின் இறுதியில் நீங்கள் இரண்டு கேள்விகளுக்கும் பதில் கொடுக்க ஆயத்த நிலையில் இருப்பீர்கள்.

நாள் மூன்று

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நோக்கத்தோடு வாழும் வாழ்வே சமாதானத்திற்கான பாதையாகும்.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"கர்த்தாவே, உம்முடைய நோக்கங்களை உறுதியாய்ப் பற்றிக் கொண்ட மனதையுடையவன் உம்மையே நம்பியிருக்கின்றபடியால் நீர் அவனைப் பூரண சமாதானத்துடன் காத்துக்கொள்வீர்"* ஏசாயா 26:3 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என்னுடைய குடும்பத்தாரும் நண்பர்களும், எது எனது வாழ்வின் உந்துதல் சக்தியாக உள்ளதென்று சொல்லுகின்றார்கள்? அது எதுவாக இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்?

4

என்றென்றும் ஜீவிக்கவே ஏற்படுத்தப்பட்டீர்கள்

தேவன்... நித்தியத்தை மனிதனின் உள்ளத்தில் வைத்திருக்கின்றார்.
பிரசங்கி 3:11 (புதிய மொழியாக்கம்)

ஒரு நாளுக்காக மாத்திரம் நிலைத்திருக்க, நிச்சயமாக தேவன் மனிதனை சிருஷ்டித்திருக்க மாட்டார்! இல்லை, இல்லை, அழியாமைக்காகவே மனிதன் ஏற்படுத்தப்பட்டான்.
ஆபிரகாம் லிங்கன்

இவ்வாழ்க்கையே எல்லாம் அல்ல!

உண்மையான படைப்பிற்கு முன் நடத்தப்படும் ஓர் ஒத்திகைதான் இப்பூமியின் வாழ்க்கை. மரணத்திற்கு மறுபக்கம் உள்ள வாழ்க்கையில் – *நித்தியத்தில்* – இப்பூமியில் வாழும் காலத்தை காட்டிலும் மிக மிக அதிகமான காலங்கள் வாழப்போகின்றீர்கள். இப்பூமியானது நித்தியத்தில் வாழப்போகும் ஒரு வாழ்க்கைக்கான ஆரம்ப நிலையாகவும். சின்னஞ்சிறாரின் பள்ளியாகவும், ஒரு பயிற்சி இடமாகவும்தான் இருக்கின்றது. உண்மையான ஆட்டத்திற்கு முன் நடைபெறும் ஒரு தேக பயிற்சி போன்றது இப்பூமியின் வாழ்க்கை; ஓர் ஓட்டப் பந்தயத்திற்கு முன் நடைபெறும் ஒரு தயார் நிலை அசைவுகள்; இவ்வாழ்க்கை என்பது வரப்போகும் நித்தியத்திற்கான ஆயத்தம்.

அதிக பட்சமாக... ஒருவேளை, இப்பூமியில் நீங்கள் நூறு ஆண்டுகள் வாழலாம். ஆனால், நித்தியத்தில் என்றென்றும் ஜீவிப்பீர்கள். "நித்தியத்தோடு ஒப்பிட்டால், இப்பூமியின் வாழ்வு ஒரு மிகச் சிறிய இடைபாடு" என்று சர் தாமஸ் பிரவுன் கூறினார்.

"தேவன்... நித்தியத்தை மனிதனின் உள்ளத்தில் வைத்திருக்கின்றார்"[1] என்று வேதாகமம் சொல்லுகின்றது. அழியாமைக்காக ஏங்கும் ஓர் உள்ளுணர்வு பிறப்பிலிருந்தே உங்களுக்கு உண்டு. ஏனெனில், அவருடைய சாயலின்படியே, தேவன் உங்களை வடிவமைத் திருக்கிறார் – நித்திய காலமாக வாழும்படி. மரணம் என்பது யாவருக்கும் சம்பவிக்கக்கூடிய ஓர் உண்மை என்றபோதும், அது சம்பவிக்கும்போது, அது நியாயமற்றதும், இயற்கைக்கு மாறானதுபோலும் உணருகின்றோம்... காரணம், என்றென்றும் வாழுவதற்காக நாம் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றோம் என்ற ஓர் சிந்தை நமது மனதின் ஒரு பகுதியில் இருப்பதினால்தானோ?

நாள் ஒன்று வரும் – அப்பொழுது, உங்களது இருதயத்துடிப்பு நின்றுவிடும். அது உங்களது பூமியில் வாழும் காலத்திற்கும், உங்களது சரீர இயக்கத்திற்கும் ஒரு முடிவாக இருக்கலாம். ஆனால், நிச்சயமாக அது உங்களது முடிவல்ல! உங்கள் பூமிக்குரிய சரீரமானது, உங்கள் ஆவி வாசம் செய்யும் ஓர் தற்காலிக இடம் மட்டுமே. உங்கள் பூமிக்குரிய சரீரத்தை ***"கூடாரம்"*** என்றும், எதிர்காலத்திற்குரிய சரீரத்தை ***"வீடு"*** என்றும் வேதாகமம் கூறுகின்றது. அந்த வேத வசனத்தை இங்கு காண்போம்: ***"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையில்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம்."***[2]

பூமியின் வாழ்க்கைக்கு நமக்கு பல தெரிந்தெடுப்புகள் உள்ளன... ஆனால், நித்தியத்திற்கோ நமது தெரிந்தெடுப்பு இரண்டு மட்டுமே. பரலோகம் அல்லது நரகம். பூமியில் உங்களது உறவு தேவனோடு எப்படி உள்ளதோ, அதுவே நித்தியத்தில் உங்களுக்கு அவரோடு இருக்கும் உறவை நிர்ணயம் செய்யும். தேவ குமாரனாகிய இயேசுவை நீங்கள் நேசிக்கவும் நம்பவும் கற்றுக்கொள்ளுவீர் களானால், அவரோடு நித்தியத்தை அனுபவிக்க நீங்கள் அழைக்கப்படுவீர்கள். மாறாக, அவரது அன்பையும், மன்னிப்பையும், இரட்சிப்பையும் நிராகரிப்பீர்களானால், தேவனற்ற ஒரு நித்தியத்தில் உங்கள் நாட்களை கழிக்க நேரிடும்.

சி.எஸ். லூவிஸ் கூறிய கூற்று: "இரண்டு வகையான மக்கள் உண்டு – ஒன்று, ***'உம் சித்தம் நிறைவேறட்டும்'*** என்று தேவனிடம்

சொல்லுவோர்; மற்றொன்று, ***'சரி, அப்படியா! உன் விருப்பப்படியே வாழ்ந்துகொள்'*** என்று சொல்லுவோர்". துக்கம் என்னவெனில், அநேக மக்கள் தேவன் இல்லாத நித்தியத்தை சகிக்க வேண்டும் – பூமியில் அவரோடு வாழ தெரிந்தெடுக்காததால் 'இப்பொழுது', 'இங்கே' என்ற நிலையை கடந்து நித்தியத்திற்கான ஆயத்தமே இவ்வாழ்க்கை என்பதனை நீங்கள் புரிந்துகொண்டால்... உங்களது வாழ்க்கையை நீங்கள் முற்றிலும் வித்தியாசமாக வாழ ஆரம்பித்து விடுவீர்கள். ***நித்தியத்தின் வெளிச்சத்தில் உங்களது வாழ்க்கையை வாழ ஆரம்பித்து விடுவீர்கள்.*** இந்த வெளிச்சமானது, நீங்கள் உறவுகளை கையாளும் முறை, வேலை மற்றும் சூழ்நிலைகளை அணுகும் முறை ஆகியவைகளில் ஒரு மாற்றத்தை கொண்டுவரும். திடீரென்று, அநேக நிகழ்வுகள், இலக்குகள், பிரச்சனைகள் முக்கியமற்றதாகவும், நமது கவனத்தை ஈர்க்க தேவையற்றதாகவும், அற்பமானதாகவும், சிறிதானதாகவும் தோன்றும். தேவனோடு நெருங்கி வாழ ஆரம்பித்தவுடன், மற்ற எல்லாக் காரியங்களும் சிறிதாக மாறிவிடும்.

இவ்வாழ்க்கை என்பது வரப்போகும் நித்தியத்திற்கான ஆயத்தம்.

நித்தியத்தின் வெளிச்சத்தில் நீங்கள் வாழ ஆரம்பிக்கும்போது, உங்கள் வாழ்வின் மதிப்புகளில் மாற்றங்கள் உண்டாகும். உங்களது நேரத்தையும் பணத்தையும் அதிக ஞானத்தோடு செலவழிப்பீர்கள். புகழ், செல்வம், சாதனை மற்றும் பொழுதுபோக்கு ஆகிய காரியங்களுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தைவிட உறவுகளுக்கும் நற்சுபாவங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பீர்கள். உங்கள் முன்னுரிமைகளில் மாற்றம் உண்டாகிறது. தற்கால நாகரீகம், நாட்டின் போக்கு, மக்களின் பொதுவான கருத்து ஆகியவை முக்கியமற்றதாகிவிடும். ***"இவைகளெல்லாம்... ஒரு காலத்தில், முக்கியம் என்று எண்ணினேன், ஆனால் இப்பொழுதோ அவைகளை குப்பை என்று எண்ணுகிறேன்"***[3] என பவுல் கூறியிருக்கின்றார்.

பூமியின் காலம் மட்டும்தான் உங்கள் வாழ்க்கையென்றால், நீங்கள் உங்கள் வாழ்க்கையை எப்படியும் வாழ்ந்து அனுபவியுங்கள் என்று

நானே உங்களுக்கு ஆலோசனை சொல்லுவேன். நன்மை, ஒழுக்கம் ஆகிய காரியங்களைக் குறித்து மறந்து, வாழ்க்கையின் செயல்களுக்கான விளைவுகளைக் குறித்து கவலைப்படாமல் நீங்கள் உங்கள் வாழ்க்கையை வாழலாம். முழு சுயநலத்தோடு உங்கள் வாழ்க்கையை நீங்கள் வாழ்ந்து முடிக்கலாம்... ஏனெனில், நீண்ட கால பின்விளைவுகள் இல்லை. ஆனால், மரணம் என்ற ஒரு சம்பவத்தோடு நமது வாழ்க்கை முடிவுறாததால் ***மாற்று சிந்தையோடு நாம் செயல்பட வேண்டியுள்ளது!*** மரணம் உங்களது முடிவல்ல, நித்தியத்திற்கான நிலைமாற்றம்தான் மரணம். பூமியில் செய்யப்படும் ஒவ்வொரு செயலுக்கும் நித்திய விளைவுகள் உண்டு. பூமியில் நாம் செய்யும் வாழ்வின் ஒவ்வொரு செயல்களும் நித்தியத்தில் ஒரு நரம்பை அதிரச் செய்கின்றதாக உள்ளது.

> ***நுததுய ஙவளுசசததுல நஙகள***
> ***வாழ ஆரம்பிக்கும்போது***
> ***உங்கள் வாழ்வின் மதிப்புகளில்***
> ***மாற்றங்கள் உண்டாகும்.***

இன்று உள்ள நவநாகரீக வாழ்வின் ஓர் ஆரோக்கியமற்ற காரியம் – குறுகிய கால சிந்தை. வாழ்வின் சிறப்பை பெற்றுக்கொள்ள, நித்திய தரிசனத்தை மனதில் வைத்துக்கொண்டு, அதன் மதிப்பை நமது இருதயத்தில் தொடர்ந்து வைத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கைக்கு... இங்கு, இப்போது என்ற காரியத்திற்கு மேலான பகுதிகள் உண்டு! இன்று என்பது ஒரு பனிப்பாறையின் ஒரு முனை மட்டுமே. நித்தியம் என்பது தண்ணீருக்குள் மறைந்திருக்கும் காணக்கூடாத பனிப்பாறையின் எஞ்சிய பகுதி.

தேவனோடு உள்ள நித்தியம் எப்படி இருக்கப் போகின்றது? உண்மையில், பரலோகத்தின் மேன்மையையும், மகத்துவத்தையும் நமது மூளையின் தன்மையினால் புரிந்துகொள்ள முடியாது. இதனை எதற்கு ஒப்பிடலாம் என்றால்... இணையதளத்தைப்பற்றி (Internet) ஒரு எறும்புக்கு விளக்கிச் சொல்லுவதைப் போலாகும். நிச்சயமாக, முடியாத ஒன்று! நித்தியத்தின் அனுபவங்களை விவரிக்க சொல் வளங்கள் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இதைத்தான் வேதம், ***"...தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை"***[4]

என்று கூறுகின்றது. ஆயினும், ஓர் மேலோட்டமான கண்ணோட்டத்தை, தமது வார்த்தையின் மூலம், தேவன் நமக்கு தந்திருக்கின்றார். நாம் அறிந்திருக்கிறபடி, தேவன் நமக்காக ஒரு நித்திய வீட்டை இப்போது ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறார். பரலோகத்தில், விசுவாசிகளாக இருக்கின்ற நமது அன்புக்குரியோருடன் நாம் இணைக்கப்படுவோம். பாடுகள், வேதனைகள் ஆகியவற்றிலிருந்து விடுதலைப் பெற்று, அங்கு பூமியில் நாம் உண்மையுள்ளவர்களாக இருந்த காரியங்களுக்காக பலனையும் பெற்றுக்கொள்ளுவோம். மாத்திரமல்ல, அங்கு கொடுக்கப்படும் எந்த வேலையும் நாம் விரும்பி செய்யக்கூடியவைகளாகவே இருக்கும். மேகங்களின் நடுவே அந்தரங்கத்தில் சுரமண்டலம் வாசித்து கொண்டிருக்கப் போவதில்லை! தேவனிடமிருந்து ஒரு பிரிக்க முடியாத ஓர் ஐக்கியத்தை நாம் அனுபவிப்பதோடு, அவரும் அளவுக்கடங்காத, முடிவில்லாத அளவுக்கு என்றென்றும் நம்மில் களிகூருவார். நாள் ஒன்று வரும் – அப்போது, இயேசுவானவர், *''வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள்''*[5] என்பார்.

நாள் நான்கு:

என்றென்றும் ஜீவிக்கவே ஏற்படுத்தப் பட்டீர்கள்

சி.எஸ். லூவிஸ் எழுதிய, "நர்னியாவின் நாளாகமம்" என்ற ஏழு புத்தகங்களின் தொடர் கற்பனை காவியத்தின் கடைசி பக்கத்தில் நித்தியத்தைக் குறித்த கோட்பாட்டை தத்ரூபமாக விளக்கிக் காட்டியுள்ளார். "நமக்கோ இதுதான் கதைகளின் முடிவு... ஆனால், அவர்களுக்கோ அவர்களது உண்மையான கதைக்கு இது ஒரு ஆரம்பமே. அவர்களது பூமியின் முழு வாழ்க்கையும்... புத்தகத்தின் அட்டைச் சித்திரமும், முன்னுரையும் போல உள்ளது. இப்பொழுது அவர்கள் தங்களது மெய்யான கதையின் முதல் அத்தியாயத்தை துவங்கியிருக்கின்றார்கள் – இதை பூமியில் உள்ள ஒருவரும் வாசித்ததில்லை; ஒவ்வொரு அத்தியாயமும் முந்தின அத்தியாயத்தைவிட சிறந்ததாக விளங்கப்போகின்றது" என்று அவர் எழுதியிருக்கின்றார்.

பூமியில் உள்ள உங்களது வாழ்க்கைக்கு தேவன் ஒரு திட்டத்தை வைத்திருக்கின்றார். ஆனால், அது இங்கேயே முடிவடைவதில்லை. அவரது திட்டங்கள் பூமியில் நாம் செலவழிக்கும் சில பத்தாண்டு கால திட்டங்களுக்கு மேலானது. "வாழ்வில் ஒரு தருணம்" என்ற வழக்கச் சொல்லுக்கு மிஞ்சிய ஒரு காரியம் இது. உங்களது வாழ்வின் காலத்திற்கு மிஞ்சிய ஒரு காரியத்தை தேவன் உங்களுக்கு கொடுக்கின்றார். ***"தேவனுடைய திட்டங்கள் என்றென்றும், அவரது நோக்கங்கள் நித்திய காலமாகவும் உள்ளது"***[7] என்று வேதாகமம் சொல்லுகின்றது.

பொதுவாக, நித்தியத்தைக் குறித்து மக்கள் சிந்திக்கும் ஒரே நேரம் அடக்க ஆராதனைகளின் வேளைகளில் மட்டுமே. அதுவும் அநேக நேரங்களில், மேலோட்ட தொடுதலோடும். உணர்ச்சி ரீதியிலானதுமான அறியாமை அடிப்படை கூற்றுகளே. மரணத்தை குறித்து சிந்திப்பது நல்ல சகுணம் அல்ல என்று ஒருவேளை நீங்கள் உணரலாம்... ஆனால், அது அப்படியல்ல. தவிர்க்க முடியாத ஒன்றாகிய மரணத்தைக் குறித்து மறுப்பு நிலையில் இருப்பதுதான் ஆரோக்கியமற்ற நிலை.[8] நிச்சயம் நடக்கும் என்ற ஒன்றிற்காக ஆயத்தம் இல்லாத ஒரு வாழ்க்கையை நடத்துபவன்தான் மூடன். நித்தியத்தைக் குறித்து நாம் ***அதிகம்*** சிந்திக்க வேண்டும் – குறைவாக அல்ல!

பூமியின் வாழ்க்கைக்கு எப்படி ஒரு தாயின் வயிற்றில் ஒன்பது மாதம் இருப்பது ஒரு ஆரம்பமோ, அதுபோலவே, வரப்போகின்ற வாழ்விற்கு இப்பூமியின் வாழ்க்கை ஒரு ஆரம்பம் மட்டுமே. இயேசுவின் மூலம் தேவனோடு ஓர் உறவு உங்களுக்கு இருக்குமானால், மரணத்தைக் குறித்து நீங்கள் அஞ்ச வேண்டியதில்லை. அது நித்தியத்திற்கு ஒரு வாசல். அது பூமியில் நீங்கள் இருக்கப்போகும் கடைசி மணி நேரமாக இருக்கலாம், ஆனால், அது உங்கள் வாழ்க்கையின் கடைசி மணி நேரம் அல்ல. அது உங்களை நித்தியத்தின் பிறந்தநாளில் கொண்டுபோய் நிறுத்தும் நாள். ***"இப்பூமி நமது வீடு இல்லை என்றும்; பரலோகத்தில் உள்ள நித்திய வீடு ஒன்றிற்காக நாம் எதிர் நோக்கியுள்ளோம்"***[9] என்றும் வேதாகமம் கூறுகின்றது.

நித்தியத்தின் கண்ணோட்டத்தைக் கொண்டு அளவிடும்போது நமது பூமியின் காலம் ஒரு கண் இமைக்கும் நேரம் மட்டுமே... ஆனாலும்,

விளைவுகளே என்றென்றும் உள்ளவை. இப்பூமியில் நமதுசெயல்களே நமது அடுத்த வாழ்வின் நிலையை நிர்ணயிக்கின்றது. ஆகவேதான், *“பூமிக்குரிய சரீரத்தோடு இங்கு நாம் வாழுகின்ற ஒவ்வொரு நேரமும், பரலோகத்தில், இயேசுவோடு நமக்குள்ள நித்திய வீட்டிலிருந்து வெளியே செலவிட்ட நேரம் என்று உணர வேண்டும்”.*[10] சில ஆண்டுகளுக்கு முன்பாக, “வாழ்வின் ஒவ்வொரு நாளையும் வாழ்க்கையின் மீதமுள்ள நாட்களுக்கான முதல் நாள்” என்று நினைத்து வாழ ஜனங்கள் ஊக்குவிக்கப்பட்டனர். ஆனால், ஞானமான விதத்தில் வாழ்வது எது என்றால்... வாழ்வின் ஒவ்வொரு நாளும் வாழ்வின் இறுதி நாள் என்று நினைத்து வாழ்வதுதான். “நமது இறுதி நாளுக்காக ஆயத்தமாவதையே நமது ஒவ்வொரு நாளின் அலுவலாக வைத்துக் கொள்ள வேண்டும்” என்று மேத்யூ ஹென்றி கூறினார்.



நாள் நான்கு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: இப்பொழுது பூமியில் நாம் வாழும் வாழ்வைக் காட்டிலும் மிகப் பெரிய பெருவாழ்வு ஒன்று இனி வரவிருக்கிறது.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***“உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றும் நிலைத்திருப்பான்”*** 1 யோவான் 2:17.

ஆய்வுக்கான ஒரு கேள்வி: நான் என்றென்றும் ஜீவிக்க ஏற்படுத்தப்பட்டிருக்கின்றபடியினால், இன்று முதல் நான் செய்யாமல் இருக்க வேண்டிய ஒரு காரியம் என்ன? இன்று முதல் நான் செய்யவேண்டிய ஒரு காரியம் என்ன?

வாழ்க்கையை தேவனுடைய கண்ணோட்டத்தின்படி காணுதல்

உங்கள் வாழ்க்கை என்பது என்ன?
யாக்கோபு 4:14 (புதிய மொழியாக்கம்)

காரியங்களை அவை இருக்கின்றவண்ணமாக நாம் காண்கிறதில்லை; நாம் இருக்கின்றவண்ணமாக, அவைகளைக் காண்கின்றோம்.
அனாயிஸ் நின்

நீங்கள் எந்த கண்ணோட்டத்தில் உங்கள் வாழ்க்கையை ***காண்கின்றீர்களோ,*** அதுவே உங்கள் வாழ்வை ***வடிவமைக்கின்ற*** ஒன்றாக மாறிவிடுகின்றது.

நீங்கள் வாழ்க்கையைக் காணும் விதமே உங்கள் எதிர்கால முடிவை நிர்ணயிக்கும். உங்கள் கண்ணோட்டத்தின் அடிப்படையிலேயே உங்கள் நேரம், பணம், தாலந்துகள் இவற்றை நீங்கள் பயன்படுத்துவீர்கள். அதற்கேற்பதான் உங்கள் உறவுகளையும் மதிப்பிடுவீர்கள்.

பிறரைப் புரிந்து கொள்ளக்கூடிய மிகச் சிறப்பான வழிகளில் ஒன்று, ***"உங்கள் வாழ்க்கையை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?"*** என்று அவர்களிடம் கேட்பது. மக்களுக்கு மக்கள் இதற்குரிய பதில் வேறுபடுவதைக் காண்பீர்கள். எனக்குக் கிடைத்த சில பதில்கள்: வாழ்க்கை ஒரு சர்க்கஸ், சுரங்கம், உருளும் சக்கரம், புதிர், இசை, பயணம், நடனம்! சிலர் "வாழ்க்கையென்பது ஒரு விளையாட்டுச் சக்கரம்" எனச் சொல்லியிருக்கின்றனர் – சில நேரம் உயர

இருப்பது போலிருக்கும்; சில நேரம் கீழே விழுந்தது போலிருக்கும்; சில சமயம் நீங்கள் சுற்றிச் சுற்றி சுழன்று வருவது போலிருக்கும்!" அல்லது வாழ்க்கை என்பது, "நாம் ஓட்டத்தை நிறுத்த முயற்சியெடுக்காமல், உச்சக்கட்ட வேகத்தில் ஓடிக் கொண்டிருக்கும் சைக்கிள்!" அல்லது "வாழ்க்கை ஒரு சீட்டாட்டம்; உங்கள் கையில் கிடைத்திருக்கும் சீட்டுகளைக் கொண்டு விளையாட வேண்டும்!"

வாழ்க்கையை எப்படி மனதில் எண்ணுகின்றீர்களென்று கேட்டால், உங்கள் மனதில் வரும் பிம்பம் என்ன? அதுதான், நீங்கள் கொண்டிருக்கும் உங்கள் ***வாழ்க்கையின் உருவகம்;*** வாழ்க்கையைப் பற்றிய உங்கள் கண்ணோட்டம்; அது நீங்கள் ஆழமாக யோசித்திருந்தாலும், யோசிக்காவிட்டாலும் உங்களுடனிருக்கும் கருத்து. நீங்கள் எப்படி வாழுகின்றீர்கள், வாழ்க்கையிலிருந்து என்ன எதிர்பார்க்கின்றீர்களென்று அது காண்பிக்கின்றது. மக்கள் தங்கள் வாழ்க்கையின் மதிப்பை உடைகள், அணிகலன்கள், கார், தலைமுடி அலங்காரம், காரில் ஒட்டும் ஸ்டிக்கர்கள், சில சமயங்களில் பச்சை குத்திக்கொள்ளும் வாசகங்கள் ஆகியவற்றின் மூலம் வெளிப்படுத்துகின்றனர்.

நீங்கள் வாழ்க்கையைக் குறித்து மனதில் கொண்டிருக்கும் எண்ணம், வெளியில் அதை வாய் திறந்து சொல்லாவிட்டாலும், நீங்கள் நினைப்பதைவிட அதிகமாக உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும். அது உங்கள் எதிர்பார்ப்புகள், மதிப்பீடுகள், உறவுகள், இலக்குகள், முன்னுரிமைகள் இவற்றையெல்லாம் தீர்மானிக்கும். உதாரணமாக, வாழ்க்கை ஒரு கொண்டாட்டம் என்று நீங்கள் நினைத்தால், வாழ்க்கையில் உங்கள் முக்கிய நோக்கம், ***விளையாட்டும், களிப்பாகவும்தான் இருக்கும்***. வாழ்க்கையை ஓட்டப் பந்தயமாக நினைத்தால், நீங்கள் ***வேகத்தை*** விரும்பி, உங்கள் காரியங்களிலெல்லாம் அவசரப்படுவீர்கள். வாழ்க்கையை நீண்ட தூர ஓட்டமாகக் (மாரத்தான் ஓட்டம்) கருதினால், ***சகிப்புத் தன்மையுடனிருப்பீர்கள்***. அதை ஒரு யுத்தமாக அல்லது விளையாட்டாக எண்ணினால் ***ஜெயிப்பது*** உங்கள் முக்கிய குறியாக இருக்கும்.

நாள் ஐந்து:
வாழ்க்கையை தேவனுடைய கண்ணோட்டத்தின் படி காணுதல்

வாழ்க்கையைப் பற்றிய உங்கள் கருத்து என்ன? ஒருவேளை, நீங்கள் ஒரு தவறான காரியத்துடன் அதை ஒப்பிட்டுக் கொண்டிருக்கக் கூடும். தேவன் உங்களை உண்டாக்கிய நோக்கத்தை நீங்கள் நிறைவேற்ற, உலக வழக்கத்திற்கேற்ற ஞானத்திற்கு ஒரு சவால் கொடுத்து, அதற்குப் பதிலாக வாழ்க்கையை பற்றி ***வேதாகமம்*** கூறும் உருவகம் அல்லது அடையாள சின்னம் என்ன என்பதனை தெரிந்துகொள்ள வேண்டும், புரிந்துகொள்ள வேண்டும். ***"நீங்கள் இந்த பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், உங்கள் மனம் புதிதாகிறதினாலே, தேவன் உங்களை மறுரூபமாக்க இடங்கொடுங்கள். அப்பொழுது, தேவசித்தம் இன்னதென்று அறிந்து கொள்ளுவீர்கள்"***[1] என்று வேதம் கூறுகின்றது.

தேவன் வாழ்க்கையைப் பற்றிக் கொண்டுள்ள கண்ணோட்டத்தை விளக்க, வேதத்தில் மூன்று காரியங்கள் வாழ்க்கையை சித்தரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளன. வாழ்க்கை ஒரு ***பரீட்சை;*** நம்மை ***நம்பி கொடுக்கப்பட்ட ஒரு சொத்து;*** ஒரு ***தற்காலிக வேலை நியமனம்.*** இந்தக் கருத்துக்கள்தான், நோக்கம் நிறைந்த வாழ்க்கைக்கு அஸ்திபாரங்கள். முதலிரண்டை இந்த அத்தியாயத்திலும், மூன்றாவதை அடுத்த அத்தியாயத்திலும் காண்போம்.

பூமியிலுள்ள வாழ்க்கை, ஒரு பரீட்சை (Test). இக்கருத்தை வேதாகம வரலாறுகள் அனைத்திலும் காணலாம். தேவன் தொடர்ந்து மக்களுடைய குணம், விசுவாசம், கீழ்ப்படிதல், அன்பு, உத்தமம், உண்மை, பற்று இவற்றைப் பரீட்சித்து அறிகின்றார். ***சோதனைகள், துன்பங்கள், புடமிடுதல், பரீட்சித்தல்*** போன்ற வார்த்தைகள் 200க்கும் மேற்பட்ட முறை வேதாகமத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தனது குமாரன் ஈசாக்கை கொடுக்கும்படி கேட்டு, தேவன் ஆபிரகாமை பரீட்சித்தார். ராகேலைத் தனது மனைவியாகக் கொள்ள, கூடுதலான வருடங்கள் வேலை செய்ய வேண்டிய நிலையை உருவாக்கி, தேவன், யாக்கோபை பரீட்சித்தார்.

ஆதாமும் ஏவாளும் ஏதேன் தோட்டத்தில், தங்கள் பரீட்சையில் தோற்றுப் போனார்கள். தாவீது, பல சந்தர்ப்பங்களில் தனது பரீட்சையில் தோற்றுப் போனான். ஆனால், யோசேப்பு, ரூத், எஸ்தர், தானியேல் போன்றவர்கள், தங்களுக்கு வந்த பெரிய பரீட்சைகளில் வெற்றி பெற்றார்கள் என்ற உதாரணங்களையும் வேதாகமத்தில் பார்க்கின்றோம்.

பரீட்சையின் மூலம்தான், குணம் வெளிப்படுகின்றது; வளர்ச்சி அடைகின்றது! வாழ்க்கை முழுவதுமே ஒரு பரீட்சைதான்! நீங்கள் ***எப்போதும்*** பரீட்சிக்கப்பட்டுக் கொண்டுதானிருக்கின்றீர்கள். பிற மக்களுக்கு, வாழ்வின் பிரச்சனைகளுக்கு, வெற்றிக்கு, போராட்டத்திற்கு, நோய்க்கு, ஏமாற்றங்களுக்கு, கால நிலைக்குக்கூட நீங்கள் எவ்வாறு மாறுத்தரம் அளிக்கின்றீர்கள் என்று தேவன் இடைவிடாமல் கவனித்துக் கொண்டிருக்கின்றார். மற்றொருவருக்காக நீங்கள் கதவைத் திறந்துவிடுவது, ஒரு குப்பையை எடுத்து நீங்கள் அப்புறப்படுத்துவது அல்லது ஒரு குமாஸ்தா அல்லது விடுதி பணிப் பெண்ணிடம் நீங்கள் நடந்து கொள்ளும் விதம் போன்ற சிறிய காரியங்களைக்கூட தேவன் கவனிக்கின்றார்.

பரீட்சை மூலம்தான் குணம் வெளிப்படுகின்றது; வளர்ச்சியடைகின்றது! வாழ்க்கை முழுவதுமே ஒரு பரீட்சைதான்!

தேவன் நமக்கு கொடுக்கப் போகும் எல்லா பரீட்சைகளையும் நாமறிய மாட்டோம். ஆனால், வேத ஆதாரத்தோடு அவற்றில் சிலவற்றை நாம் முன்னதாகவே கூற முடியும். வாழ்க்கையில் பெரிய மாறுதல்கள், நியாயமற்ற குற்றச்சாட்டுகள், தீர்க்கக் கூடாத பிரச்சனைகள், உத்தரவு கிடைக்காத ஜெபங்கள், காலம் கடந்து நிறைவேறும் வாக்குறுதிகள், புரிய முடியாத கோர சம்பவங்கள் ஆகியவற்றின் மூலம் நீங்கள் பரீட்சிக்கப்படுவீர்கள். என்னுடைய வாழ்க்கையில், தேவன், பிரச்சனைகள் மூலம் என் ***விசுவாசத்தையும்,*** என் சொந்தப் பொருட்களை நான் பயன்படுத்தும் விதத்தைக்கொண்டு என் ***நம்பிக்கையையும்,*** மக்கள் மூலமாக என் ***அன்பையும்*** பரிசோதிக்கின்றார்.

தேவனுடைய பிரசன்னத்தை உணரக்கூடாமலிருக்கும்போது நீங்கள் எப்படி நடந்து கொள்ளுகிறீர்களென்பது ஒரு முக்கிய சோதனை. சில சமயங்களில், தேவன் வேண்டுமென்றே பின் தங்கிக் கொள்ளுவார். அவருடைய அருகாமையை நம்மால் உணரவே முடியாது. இந்த சோதனையை எசேக்கியா என்ற இராஜா அனுபவித்தார். ***''எசேக்கியாவின் இருதய சிந்தனைகளை***

சோதிக்கும்படி தேவன் அவனைவிட்டு விலகி நின்றார்"[2] என்று வேதம் கூறுகின்றது. எசேக்கியா, தேவனோடு நெருங்கி ஐக்கியம் அனுபவித்தவன்; ஒரு முக்கிய கட்டத்தில், அவன் வாழ்க்கையில், தேவன் அவனுடைய குணத்தைப் பரிசோதிக்க, ஒரு பலவீனத்தை வெளிப்படுத்திக் காண்பிக்க, இன்னும் அதிக பொறுப்புகளுக்கு அவனை ஆயத்தமாக்க, அவனைத் தனியே விட்டுவிட்டார்.

வாழ்க்கை ஒரு பரிசோதனை அல்லது பரீட்சை என்பதை நீங்கள் புரிந்து கொண்டால், உங்கள் வாழ்க்கையில் ***எதுவுமே*** முக்கியமற்றதல்ல என்று உணர்ந்து கொள்ளுவீர்கள். ஒரு சிறிய நிகழ்வுகூட உங்கள் சுபாவளர்ச்சிக்குரிய முக்கியத்துவம் கொண்டது. ***ஒவ்வொரு*** நாளும் ஒரு முக்கிய நாள், ***ஒவ்வொரு*** வினாடியும் உங்கள் குணத்தை ஆழமாக்கும் ஒரு தருணம் அல்லது தேவனைச் சார்ந்துகொள்ளும் ஒரு வாய்ப்பு; சில சோதனைகள் திக்குமுக்காடச் செய்வது போலிருக்கும்; ஒரு சிலவற்றை நீங்கள் கவனித்திருக்கவேமாட்டீர்கள். அனைத்துமே நித்தியத்திற்குரிய காரியங்களை உள்ளடக்கியவை.

தேவன், இந்த வாழ்க்கை சோதனைகளில் நாம் வெற்றி பெற வேண்டுமென்று விரும்புகின்றார். ஆகவே, அவற்றைச் சமாளிக்கும்படி அவர் சோதனையோடுகூட அளிக்கும் கிருபை, அவர் அனுமதிக்கும் பரிசோதனைகளைவிட மிகப் பெரியது. ***"சோதிக்கப்படும்போது,தேவன், சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்; உங்கள் திராணிக்கு மேலாக சோதிக்கப்படும்படி அவர் இடங் கொடுக்கமாட்டார். அவர் தமது வாக்குத் தத்தத்தைக் காத்துக்கொள்ளுகிறார்"***[3] என்று வேதம் கூறுகின்றது.



நீங்கள் ஒரு பரிசோதனையில் தேர்ச்சி பெறும் ஒவ்வொரு முறையும், தேவன் அதைக் கவனித்து, உங்களுக்கு நித்தியத்தில் பலனளிக்கத் திட்டமிடுகின்றார். ***"சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று விளங்கிய பிறகு, தேவன் தம்மிடத்தில்***

அன்புகூருகிறவர்களுக்கு வாக்குப்பண்ணிய ஜீவ கிரீடத்தைப் பெறுவான்"[4] என்று யாக்கோபு எழுதுகின்றார்.

பூமியிலுள்ள வாழ்க்கை, நம்மை நம்பிக் கொடுக்கப்பட்ட ஒரு சொத்து (Trust). இது வாழ்க்கை பற்றிய வேதாகமத்தின் இரண்டாவது உருவகம். பூமியில் நமக்குக் கொடுக்கப்பட்ட நாட்கள், நமது சக்தி, அறிவுக் கூர்மை, வாய்ப்புகள், தொடர்புகள், மூலதனங்கள் அனைத்தும் நாம் நிர்வகிக்கும்படி, நமது பராமரிப்பில் தேவன் நம்மை நம்பிக் கொடுத்தவை. தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அனைத்திற்கும் நாம் உக்கிராணக்காரர். தேவனே எல்லாவற்றுக்கும் சொந்தக்காரர், பூமியிலுள்ள யாவருக்கும் அதிபர் என்ற உண்மையை நாம் உணரும்போதுதான், உக்கிராணத்துவப் பொறுப்பை நாம் உணரக்கூடும். ***"பூமியும் அதன் நிறைவும் கர்த்தருடையது; பூமியும் அதன் குடிகள் அனைவரும் அவருடையவர்கள்"***[5] என்று வேதம் கூறுகின்றது.

உண்மையில், பூமியிலிருக்கும் இந்த குறுகிய நாட்களில், இந்த பூமியில் எதையுமே நமது சொந்தமாக்கிக்கொள்ள இயலாது. நாம் பூமியில் இருக்கும்போது, தேவன் அதைக் *கடனாக* நமக்குத் தந்திருக்கின்றார். நீங்கள் இந்த பூமியில் வந்து சேருமுன்னரே அது தேவனுடைய சொத்தாக இருந்தது. நீங்கள் மரித்த பின்னர், தேவன் அதை மற்றொருவருக்குக் கடனாகக் கொடுப்பார். கொஞ்ச நாட்கள் அதை அனுபவிக்கும்படி தேவன் உங்கள் கையில் அதைக் கொடுக்கின்றார்.

ஆதாம், ஏவாளை தேவன் படைத்தபோது, தமது படைப்பின் பராமரிப்புப் பொறுப்பை அவர்கள் கையில் கொடுத்தார். தமது சொத்தின் நம்பிக்கைக்குரிய நிர்வாகஸ்தர்களாக அவர்களை நியமித்தார். ***"(தேவன்) அவர்களை ஆசீர்வதித்து நீங்கள் பலுகிப் பெருகிப் பூமியை நிரப்பி அதை ஆண்டு கொள்ளுங்கள். உங்களை அதற்கு அதிகாரியாக்கினேன்"***[6] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுடைய பூமியின் படைப்புகளை நிர்வகித்துப் பராமரிப்பதுதான் தேவன் மனிதனுக்குக் கொடுத்த முதல் வேலை. இந்தப் பணி ஒருபோதும் ரத்து செய்யப்படவில்லை; இன்றும் நமது நோக்கத்தின் ஒரு பகுதி அது. நாம் அனுபவிக்கும் ஒவ்வொன்றும் தேவன் நமது கரத்தில் கொடுத்துள்ள ***நம்பிக்கை சொத்து*** என்று எடுத்துக்

கொள்ளப்பட வேண்டும். *"அன்றியும் உங்களுக்கு உண்டாயிருக் கிறவைகளில் நீங்கள் பெற்றுக் கொள்ளாதது எது? பெற்றுக் கொண்டவர்களானால், பெற்றுக் கொள்ளாதவர்கள்போல ஏன் மேன்மை பாராட்டுகின்றீர்கள்?"*[7] என்று வேதம் கூறுகின்றது.

பல ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு தம்பதியர், ஹவாயி தீவிலுள்ள அவர்களுடைய அழகான கடற்கரையருகிலுள்ள வீட்டை, நானும் என் மனைவியும் ஒரு விடுமுறையில் உபயோகித்துக் கொள்ளுமாறு தந்தார்கள். எங்களால் விலைக்கிரயம் செலுத்தி அனுபவிக்கக் கூடாததொரு அனுபவம் அது; நாங்கள் பெருமளவில் அதை அனுபவித்து மகிழ்ந்தோம். 'உங்கள் வீடு மாதிரியே அதை எண்ணி உபயோகியுங்கள்' என்று எங்களுக்குச் சொல்லப்பட்டிருந்தது; அப்படியே அனுபவித்தோம்! நீச்சல் குளத்தில் நீந்தினோம், குளிர்சாதனப் பெட்டியிலுள்ள உணவை உண்டோம், அவர்களுடைய குளியலறை துவாலைகள், சாப்பிடும் தட்டுகளைப் பயன்படுத்தினோம். படுக்கையில் ஏறி விளையாட்டாகக் குதிக்கக் கூட செய்தோம்! ஆயினும், அது *உண்மையில்* எங்களுக்கு சொந்தமானதல்ல என்று ஒவ்வொரு நேரமும் உணர்ந்து கொண்டே இருந்தோம்; அதனால், ஒவ்வொன்றையும் விசேஷித்த கவனத்துடன் பார்த்துக் கொண்டோம். அந்த வீட்டுக்கு சொந்தக்காரராக இல்லாமலே அதன் பயன்களை அனுபவிக்கும் சிலாக்கியம் பெற்றோம்.

நமது கலாச்சாரம் சொல்லுவது என்னவெனில்: "உனக்கு அது சொந்தமில்லாவிட்டால், அதைப் பராமரிக்கவும் வேண்டாம்!" ஆனால், கிறிஸ்தவர்கள், ஒரு மேலான கலாச்சாரத்தை உடையவர்களாக வாழ வேண்டும். "தேவனுக்கு அது சொந்தம்; ஆகையால், என்னால் முடிந்த அளவு நான் அதைக் குறித்து சிறந்த கவனமெடுப்பேன்" என்ற சிந்தை. *"விலை மதிப்புள்ள ஒன்றைத் தங்கள் நம்பிக்கைக்குரியதாகப் பெற்றிருப்பவர்கள், அந்த நம்பிக்கைக்குரியவர்களாகத் தங்களைக் காத்துக்கொள்ள வேண்டும்"*[8] என்று வேதம் கூறுகின்றது. இயேசு இந்த வாழ்க்கையைக் குறித்து பேசும்போது, அது ஒரு நம்பிக்கைக்குரிய சொத்து என்று குறிப்பிட்டு, நமது பொறுப்பை விளக்கும் அநேக உவமைகளைக் கூறினார். தாலந்துகளின் உவமையில்,[9] ஒரு செல்வந்தர் தனது தொழில் நிர்வாகத்தை, தன் வேலைக்காரரின்

பொறுப்பில் விட்டுவிட்டுத் தூர தேசம் செல்லுகின்றான். திரும்பி வந்ததும், ஒவ்வொரு வேலைக்காரனின் பொறுப்புணர்வையும் அவன் மதிப்பிட்டு, அதற்கேற்ப அவர்களுக்கு சன்மானமளிக்கின்றான். *“நல்லது, உண்மையும் உத்தமமுமுள்ள ஊழியக்காரனே, நீ கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய்; அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக்குவேன். உன் எஜமானனுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி”*[10] என்று அந்த எஜமான் கூறுகின்றான்.

உங்களுக்கு தேவன் எவ்வளவு அதிகம் கொடுக்கின்றாரோ, அந்த அளவுக்கு நீங்கள் பொறுப்புணர்வுள்ளவர்களாக இருக்கும்படி அவர் விரும்புகின்றார்.

பூமியின் வாழ்க்கையின் முடிவில், நீங்களும், தேவன் உங்களை நம்பித் தந்தவற்றை எப்படிக் கையாளுகை செய்தீர்களென்று மதிப் பிடப்பட்டு, பலனைப் பெறுவீர்கள். அதாவது, நீங்கள் செய்வது ஒவ்வொன்றும், எளிய அன்றாட வேலைகள் கூட, நித்தியத்திற்குரிய காரியங்களை உள்ளடக்கியவை. *எல்லாவற்றையும்* தேவன் *நம்பித் தந்த பொறுப்பாக* எடுத்துக் கொண்டால், நித்தியத்தில் மூன்று பலன்களை தேவன் தருவார். ஒன்று, தேவனுடைய ***ஊர்ஜிதம்***: “நல்லது, நன்றாகச் செய்தாய்” அடுத்து, உங்களுக்கு, ***உயர்வும்*** பொறுப்புகளும் நித்தியத்தில் கிடைக்கும்: “அநேகத்தின் மேல் அதிகாரியாக்குவேன்”. மூன்றாவது, உங்களுக்காக ஒரு கனம்பண்ணும் ***கொண்டாட்டம்***: “உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி.”

அநேக மக்கள், பணம் என்பது, தேவன் தரும் ஒரு பரிசோதனை (test), மற்றும் நம்பிக்கைக்குரிய ஒரு பொறுப்பு (trust) என்பதை மறந்து விடுகின்றார்கள். பொருளாதாரத்தைக் கொண்டு, அவரை நம்பும்படி தேவன் நமக்குப் போதிக்கின்றார்; அநேகருக்கு, மிகப் பெரிய பரிசோதனை பணம்தான். நாம் எந்த அளவுக்கு நம்பிக்கைக்குரியவர்களென்பதைப் பரிசோதிக்க தேவன் நம்மைக் கவனித்துக் கொண்டிருக்கின்றார். ***“இந்த உலக ஆஸ்தியைக் குறித்து நீங்கள் நம்பக் கூடாதவர்களாயிருந்தால், அழியாத பரலோக ஆஸ்தியைக் குறித்து யார் உங்களை நம்பக் கூடும்”***[11] என்று வேதம் கூறுகின்றது.

இது ஒரு முக்கியமான சத்தியம். நான் என் பணத்தை எப்படிப் பயன்படுத்துகின்றேன் என்பதற்கும், என் ஆவிக்குரிய வாழ்க்கையின் தரத்திற்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக தேவன் கூறுகின்றார். நான் என் பணத்தை (*"உலக ஆஸ்தியை"*) எப்படி நிர்வகிக்கின்றேனென்பதைப் பொருத்துத்தான் தேவன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைத் (உண்மையான ஆசீர்வாதங்கள்) தருவார். நான் ஒரு கேள்வி கேட்கட்டும்: "நீங்கள் உங்கள் பணத்தைப் பயன்படுத்தும் விதம், தேவன் உங்கள் வாழ்க்கையில் இன்னும் அதிகமாகக் கிரியை செய்யாதபடி அவரைத் தடை செய்கின்றதா?" நீங்கள் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் நிரப்பப்படும்படிக்கு உங்களை அவர் நம்பக் கூடுமா?

"எவனுக்கு அதிகம் கொடுக்கப்பட்டதோ, அவனிடம் அதிகம் கேட்கப்படும். எவனிடம் அதிகக் காரியங்கள் ஒப்படைக்கப் படுகின்றதோ, அவனிடம் அதிகக் கணக்கு கேட்கப்படும்"[12] என்று இயேசு கூறினார். வாழ்க்கை ஒரு பரிசோதனை, ஒரு நம்பிக்கையான பொறுப்பு, எந்த அளவுக்குத் தேவன் அதிகம் கொடுக்கின்றாரோ, அந்த அளவுக்கு அதிகப் பொறுப்புணர்வு டனிருக்கும்படி அவர் உங்களிடம் எதிர்பார்க்கின்றார்.

நாள் ஐந்து
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: வாழ்க்கை ஒரு பரிசோதனை மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"சிறிய காரியங்களில் உண்மையாக இல்லாவிட்டால், பெரிய காரியங்களில் உண்மையாக இருக்கமாட்டீர்கள்."*** லூக்கா 16:10 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: சமீபத்தில் நடந்த எந்த ஒரு காரியம் தேவன் எனக்கு வைத்த பரீட்சையென்று நான் கூற முடியும்? தேவன் என்னை நம்பிக் கொடுத்துள்ள மிகப் பெரிய காரியங்கள் எவை?

வாழ்க்கை என்பது நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு தற்காலிகப் பணி

பூமியிலே என் நாட்கள் எவ்வளவு குறுகியதென்று எனக்கு நினைவுபடுத்தும். என் நாட்கள் எண்ணப்பட்டிருக்கிறதென்றும், என் வாழ்நாள் ஓடிக் கொண்டிருக்கிறதென்றும் நினைப்பூட்டும்.
சங்கீதம் 39:4 (புதிய மொழியாக்கம்)

பூமியிலே என் வாழ்நாள் குறுகியது.
சங்கீதம் 119:19 (புதிய மொழியாக்கம்)

பூமியிலுள்ள வாழ்க்கை நமக்கு நியமிக்கப்பட்ட ஒரு தற்காலிகப் பணி.

பூமியிலுள்ள வாழ்க்கையின் தற்காலிக, விரைவில் மறையும், குறுகிய தன்மையைப் போதிக்கும் உருவகங்களால் வேதாகமம் நிறைந்து காணப்படுகின்றது; வாழ்க்கை ஒரு *மூடுபனி*, *ஒரு வேக ஓட்டம்*, *ஒரு சுவாசம்*, *ஒரு புகை மண்டலம்* என்று வர்ணிக்கப்படுகின்றது; *"நாம் நேற்றுத்தான் பிறந்தோம்... பூமியிலே நமது நாட்கள் ஒரு நிழலைப் போலிருக்கின்றன"*[1] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் வாழ்க்கையின் சிறந்த பயனையடைய, நீங்கள் இரண்டு சத்தியங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது. முதலாவது, நித்தியத்துடன் ஒப்பிட்டால், வாழ்க்கை மிகக் குறுகியது; இரண்டாவதாக, இந்த பூமி ஒரு தற்காலிகக் குடியிருப்புதான். நீங்கள் இங்கு அதிக நாட்கள் இருக்கமாட்டீர்கள்; ஆகவே, இந்தப் பூமியில் அதிக பற்றுக் கொள்ளவேண்டாம். தேவன் பார்க்கின்றபடி இந்தப்

பூலோக வாழ்க்கையைப் பார்க்க, தேவன் உங்களுக்கு உதவும்படி அவரிடம் கேளுங்கள். *"கர்த்தாவே, பூமியிலே என் நாட்கள் எவ்வளவு குறுகியதென உணர எனக்கு உதவும்; நான் இங்கு இருப்பது இன்னும் ஒரு கணப்பொழுதுதான் என்று அறிய உதவும்"*[2] என்று தாவீது ஜெபித்தார்.

அந்நிய தேசத்தில் தற்காலிகமாக வசிப்பதைப் போன்றதுதான் பூமியில் நமது வாழ்நாள் என்று வேதம் மீண்டும் மீண்டும் கூறுகின்றது. இது உங்கள் இறுதி குடியிருப்புமல்ல; உங்கள் நிலையான வீடுமல்ல; நீங்கள் இதன் வழியாகக் கடந்து செல்லுகின்றீர்கள், பூமிக்கு சில காலம் வந்திருக்கின்றீர்கள். ***அந்நியர், பரதேசி, அயல் நாட்டவர், அறிமுகமற்றோர், பயணி, விருந்தினர்*** போன்ற பதங்களைக் கொண்டு, வேதாகமம், பூமியில் நமது குறுகிய நாட்களை விளக்குகின்றது. *"பூமியிலே நான் பரதேசி"*[3] என்று தாவீது கூறினார். *"தேவனை உங்கள் பிதா என்று அழைத்தால், பூமியிலே தற்காலிகக் குடியிருப்போராக எண்ணி வாழுங்கள்"*[4] என்று பேதுரு விளக்கினார்.

நான் வசிக்கும் கலிபோர்னியாவில், பூமியின் பல்வேறு பகுதிகளிலிருந்து, மக்கள், பிழைப்புக்காக இங்கு வந்துள்ளனர். ஆனால், அவர்கள் தங்கள் குடியுரிமையைத் தங்கள் சொந்த தேசத்திலேயே வைத்துக் கொள்ளுகின்றார்கள். இப்படிப்பட்டவர்கள், "பச்சை அட்டை" என்று அழைக்கப்படும் பார்வையாளர் பதிவு அட்டை ஒன்றை தங்களுடன் எப்பொழுதும் எடுத்துச் செல்ல வேண்டும். அவர்கள் இங்கு குடிமக்களாக இல்லாவிட்டாலும், இங்கு வேலை செய்யும் உரிமையை அந்த அட்டை அவர்களுக்கு அளிக்கின்றது. கிறிஸ்தவர்கள், தாங்கள் பரலோகக் குடிமக்கள் என்று நினைவுறுத்தும் ஆவிக்குரிய பச்சைக் அட்டைகளை வைத்திருக்க வேண்டும். அவிசுவாசிகள் நினைப்பதைவிட வாழ்க்கையைப் பற்றித் தனது பிள்ளைகள் வித்தியாசமாக நினைக்க வேண்டுமென்று தேவன் கூறுகின்றார். *"அவர்கள் நினைவெல்லாம் இங்கு பூமியிலுள்ள வாழ்க்கையைப் பற்றியதாகவே இருக்கின்றது. ஆனால், நாமோ,*

உங்கள் அடையாள அட்டை நித்தியத்திலிருக்கின்றது; உங்கள் தாய் நாடு பரலோகம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுடன் வசிக்கும் பரலோகக் குடிமக்கள்."[5] இந்த பூமி என்ற கிரகத்தில், நாம் வசிக்கும் சில வருடங்களைப் பார்க்கிலும் நம்முடைய வாழ்க்கைக்கு இன்னும் எவ்வளவோ அதிகமான காரியங்கள் உண்டு என்பதை உண்மையான விசுவாசிகள் உணர்ந்திருக்கின்றனர்.

உங்களுடைய அடையாளம் நித்தியத்தில் இருக்கின்றது. உங்களது தாய்நாடு பரலோகம். இந்த உண்மையை நீங்கள் அறிந்துகொள்ளும்போது, இந்த உலகத்திலேயே "எல்லாவற்றையும் பெற வேண்டுமென்ற" கவலையுடையவர்களாக இருக்கமாட்டீர்கள். நம்மைச் சுற்றியுள்ள உலகத்தின் மதிப்புகள், முன்னுரிமைகள் மற்றும் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றை நமதாக்கிக் கொண்டு, ***"இங்கே", "இப்போது"*** என்று ஜீவிக்கும் ஆபத்தைக் குறித்து தேவன் மிகவும் கண்டித்துப் பேசுகின்றார். நாம் இவ்வுலகின் சோதனைகளால் ஈர்க்கப்படுவதை, தேவன், ஆவிக்குரிய விபசாரம் என்று கூறுகின்றார். ***"நீங்கள் தேவனை ஏமாற்றுகின்றீர்கள். உங்கள் சொந்த வழிகளிலும், உலக லௌகீக சிற்றின்பங்களிலும் உழன்று கிடப்பீர்களானால், தேவனுக்கு பகைஞர்களாக மாறிவிடுவீர்கள்"***[6] என்று வேதம் எச்சரிக்கின்றது.

உங்கள் தேசத்திலிருந்து, பகைவர் தேசமொன்றிற்கு நீங்கள் தூதுவராக அனுப்பப்படுவதாக இருந்தால், நீங்கள் அநேகமாகப் புது மொழியைக் கற்க வேண்டியதிருக்கும்; பணிவாக நடந்துக் கொள்ள, உங்கள் பணியை நிறைவேற்ற, சில புதிய பழக்க வழக்கங்கள், வித்தியாசமான காரியங்களைக் கற்க வேண்டியதிருக்கும். ஒரு தூதுவராக இருக்கும் நீங்கள், பகைவரிடமிருந்து உங்களைப் பிரித்துக் கொள்ளவும் முடியாது. உங்கள் பணியை நிறைவேற்ற, கண்டிப்பாக அவர்களுடன் தொடர்பும் சம்பந்தமும் இருக்க வேண்டும்.

நாள் ஆறு:
வாழ்க்கை என்பது நமக்குக் கொடுக்கப்பட்ட ஒரு தற்காலிகப் பணி

ஒருவேளை இந்த அந்நிய தேசத்தில் நீங்கள் மிக வசதியாக இருந்து, அதை மிகவும் நேசித்து, உங்கள் தாய் நாட்டைவிட அதை அதிகமாக நேசித்திருந்தால், உங்கள் பற்றும், அர்ப்பணிப்பும் மாறிப்போகும். ஒரு தூதுவராக

உங்கள் பங்கு, ஒத்துப்போகும் நிலையை அடைந்து விடும். உங்கள் தாய் நாட்டின் பிரதிநிதியாக இருப்பதற்குப் பதில், நீங்களும் பகைவனைப்போல நடக்க ஆரம்பித்துவிடுவீர்கள். நீங்கள் துரோகியாக மாறிவிடுவீர்கள்.

“நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள்”[7] என்று வேதம் கூறுகின்றது. அநேக கிறிஸ்தவர்கள் தங்கள் ராஜாவுக்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் துரோகம் செய்வது துக்ககரமான காரியம். தாங்கள் இந்த பூமியில் வாழ்வதால், அதுவே, தங்கள் சொந்த வீடு என்று எண்ணிவிடுகின்றார்கள். ஆனால், அப்படியல்ல; ***“பிரியமானவர்களே, இந்த பூமி உங்கள் குடியிருப்பு அல்ல; உங்கள் ஆத்துமாவை இழந்துபோகும்படி, உங்கள் சமயத்திலே உழலாதிருங்கள்”***[8] என்று வேதம் தெளிவாகக் கூறுகின்றது. நம்மைச் சுற்றியிருப்பவை தற்காலிகமானவை; ஆகவே, அவற்றில் அதிக ஈடுபாடும் நாட்டமும் கொள்ளாதபடி தேவன் நம்மை எச்சரிக்கின்றார். ***“இந்தப் பூமியும் அதிலுள்ள யாவும் கடந்து போகும்; உலக காரியங்களை அவற்றிற்கு அடிமைப்படாமல் அனுபவித்துப் பயன்படுத்த வேண்டும்”***[9] என்று கூறப்பட்டுள்ளது.

மேலை நாடுகளுக்கு, இந்த நூற்றாண்டைப்போல வசதியான வாழ்க்கை மற்ற நூற்றாண்டுகளில் இருந்ததில்லை. தொடர்ந்து... மகிழ்ச்சிகள், விருந்துபசாரங்கள் நமக்கு உண்டு; மற்ற எல்லாக் கவர்ச்சிகளுடன், மனதை மயக்கும் மக்கள் தொடர்பு சாதனங்கள், அனுபவித்து மகிழக்கூடிய அனுபவங்கள் என்று பல உண்டு. இப்படிப்பட்ட காரியங்கள் இருப்பதனால், “மகிழ்ச்சியைத் தேடி அனுபவிப்பதே வாழ்க்கை அல்ல” என்பதை எளிதில் மறந்து விடக்கூடும். வாழ்க்கை ஒரு பரிசோதனை, நம்பித் தரப்பட்ட பொறுப்பு, தற்காலிகமாக நியமிக்கப்பட்ட பணி என்பதையெல்லாம் நாம் நினைவு கூர்ந்தால்தான், இக்கவர்ச்சிகள் தரும் ஈர்ப்பு நமது வாழ்க்கையைப் பற்றிப் பிடிக்க முடியாது. நாம் இதைவிட மேலான ஒன்றிற்காக ஆயத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். ***“இன்று நாம் காண்கிறவைகள் நாளை ஒழிந்துபோகும்; காணாதவைகளோ, என்றென்றும் நிலைத்து நிற்கும்.”***[10]

இந்தப் பூமி நமது இறுதியான குடியிருப்பு அல்ல என்பது உண்மையாக இருக்கின்றபடியால்தான், இயேசுவின்

தொண்டர்களாகிய நாம், இந்த உலகத்தில் கஷ்டம், துன்பம், புறக்கணிக்கப்படுதல் இவற்றை அனுபவிக்கின்றோம்.[11] தேவனுடைய சில வாக்குத்தத்தங்கள் நிறைவேறாமல் போனதாகவே இருப்பதற்கும், சில ஜெபங்களுக்குப் பதில் வராமலே போவதற்கும், சில சூழ்நிலைகள் அநியாயமாகத் தோன்றுவதற்கும் இதுவே காரணம். இங்கு நம் காரியங்கள் முடிவடைவதில்லை.

நாம் இந்த உலகத்தோடு அளவுக்கு மீறி பற்று கொள்ளாதபடி, இங்கு ஓரளவு அதிருப்தியையும், மன நிறைவற்ற உணர்வையும் தேவன் இங்கு நமக்கு அனுமதிக்கின்றார் – நித்தியத்தின் இப்பகுதியில், ***ஒரு நாளும்*** நிறைவேற்றப்படக் கூடாத வாஞ்சைகள் இருக்கத்தான் செய்யும்! பூமி நமது இறுதி குடியிருப்பு அல்ல; நாம் இதைவிட மேன்மையான ஒரு இடத்திற்காக உண்டாக்கப்பட்டோம்.

தண்ணீரில் வாழும்படி உருவாக்கப்பட்ட மீன் தரையில் சந்தோஷமாக உயிர் வாழவே முடியாது. பறக்க அனுமதிக்கப்படாத கழுகு, திருப்தியாக இருக்கவே முடியாது. நீங்கள் மேலான ஒன்றிற்காக உருவாக்கப்பட்டதால், இந்தப் பூமியில் பரிபூரண மகிழ்ச்சியை அடைய முடியாது; இங்கு மகிழ்ச்சி நேரங்கள் உண்டு; ஆனால், தேவன் உங்களுக்காகத் திட்டம் பண்ணியிருப்பவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், இவைகள் ஒன்றுமில்லை.

பூமி நமது இறுதி குடியிருப்பு அல்ல. நாம் இதைவிட, மேன்மையான ஒன்றிற்காகப் படைக்கப்பட்டவர்கள்.

பூமியில் கொடுக்கப்பட்ட நமது வாழ்க்கை ஒரு தற்காலிகப் பணி போன்றதுதான் என்பதை உணர்ந்து கொண்டால், உங்கள் மதிப்பீடுகள் நிச்சயம் மாற்றமடையும். தற்காலிக காரியங்களை அடிப்படையாக வைத்து அல்லாமல், நித்திய காரியங்களை அடிப்படையாக வைத்தே தீர்மானங்களை எடுப்பீர்கள். சி.எஸ். லூவிஸ் கூறியதுபோல, ''நித்தியமில்லாதவை அனைத்தும் நித்தியமாகப் பயனற்றவை". ***"காணக்கூடியவைகளையல்ல, காணக் கூடாதவைகள் மீதே பார்வையை வைக்கின்றோம். காணப்படுகின்றவைகள் யாவும் அழிந்துபோம்; காணக்கூடாதவைகளோ நித்தியமானவைகள்"***[12] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய இலக்கு, பொருள்வளம் அல்லது பிரபலமான வெற்றி என்று உலகத்தார் நினைப்பதுபோல நாமும் நினைத்தால் அது மாபெரும் தவறாகும். பரிபூரண வாழ்வு என்பதற்கும் திரளான ***ஆஸ்திக்கும்*** தொடர்பில்லை. தேவனுக்கு உண்மையாக இருப்பதினால் தொழிலிலோ அல்லது ஊழியத்திலோ வெற்றி கிடைக்கும் என்பதற்கும் உத்திரவாதம் இல்லை. தற்காலிகமான கிரீடங்களில் ஒருபோதும் உங்களுடைய கண்களைப் பதிக்காதீர்கள்.[13]

பவுல் உண்மையாக இருந்தார்; ஆயினும், சிறைச்சாலையில் வாடினார்; யோவான்ஸ்நானன் உண்மையாக இருந்தார்; ஆயினும், சிரச்சேதம் செய்யப்பட்டார்; பல்லாயிரக்கணக்கான உண்மையான மக்கள் இரத்த சாட்சிகளாக மரித்திருக்கின்றார்கள்; எல்லாவற்றையும் இழந்திருக்கின்றார்கள்; வாழ்க்கையின் இறுதிவரை எதையுமே அனுபவிக்காமலிருந்திருக்கின்றார்கள். ***ஆனால், இப்பூலோக வாழ்க்கையின் முடிவு, முடிவு அல்ல!***

தேவனுடைய பார்வையில், வாழ்க்கையில் செழிப்பு, வெற்றி, சக்தி பெற்றுக் கொண்டவர்கள் விசுவாச வீரர்களல்ல. இந்த வாழ்க்கையைத் தங்களுக்கு கொடுக்கப்பட்ட தற்காலிகப் பணியாகக் கருதி, உண்மையுடன் சேவை செய்து, நித்தியத்தில் தங்களுக்கு வாக்களிக்கப்பட்ட பலனை மட்டும் எதிர்பார்த்திருப்பவர்கள்தான் விசுவாச வீரர்கள். தேவனுடைய புகழ்ச்சிப் பட்டியலில் இடம் பெற்றவர்களைக் குறித்து வேதம் கூறுகின்றது, ***“இந்தப் பெரிய வீரர்களனைவரும் விசுவாசத்தில் மரித்தார்கள். இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம்பண்ணப் பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி, அணைத்துக்கொண்டு, பூமியின் மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகின்றவர்கள் சுய தேசத்தை நாடிப் போகின்றோம் என்று தெரியப்படுத்துகின்றார்கள்... மேன்மையான பரம தேசத்தையே நாடிப் போகின்றார்கள். ஆகையால், தேவன், அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை.***



அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே."[14] பூமியில் உள்ள உங்கள் காலம் உங்கள் வாழ்க்கையின் முழுக் கதையல்ல; மீதி அத்தியாயங்களுக்கு பரலோகம் போகும் வரை காத்திருக்க வேண்டும். இந்த உலகத்தில் அந்நியராக வாழ்வதற்கு விசுவாசம் தேவை.

ஒரு பழைய கதை... மிஷனெரிப் பணி செய்து ஓய்வு பெற்று ஒருவர், அமெரிக்காவுக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். அதே படகில் அமெரிக்க நாட்டு ஜனாதிபதியும் பயணம் செய்து கொண்டிருந்தார். ஜனாதிபதியை வரவேற்க மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஒரு கூட்டம் மக்கள், இராணுவ இசைக்குழு, சிவப்புக் கம்பள விரிப்பு, கொடிகள், மக்கள் தொடர்பு சாதனங்கள் ஆகிய இவற்றுடன் கூடி வரவேற்றனர். மிஷனரியை ஒருவரும் கண்டுகொள்ளவேயில்லை. வெளியே நழுவி வந்த அவருடைய உள்ளத்தில் சுய பரிதாப உணர்வும் எரிச்சலும் மேலிட்டது. தேவனிடம் முறையிட்டார். தேவன் அவருக்கு மிருதுவாக ஒரு உண்மையை உணர்த்தினார், "என் அன்பு பிள்ளையே, ***நீ இன்னும் வீடு வந்து சேரவில்லையே!***"

பரலோகத்தில் போய்ச் சேர்ந்த இரு வினாடிகளுக்குள் நீங்கள், "***இவ்வளவு அநித்தியமான காரியங்களுக்கு நான் ஏன் இவ்வளவு முக்கியத்துவமளித்தேன்?*** நான் என்னதான் நினைத்துக் கொண்டிருந்தேன்? ஏன் இவ்வளவு நாட்களை வீணாக்கினேன், என் சக்தியை ஏன் நிலையற்ற காரியங்களுக்காக செலவழித்தேன்?" என்று புலம்புவீர்கள்.

வாழ்க்கை இறுக்கமாகிப் போகும்போது, நீங்கள் சந்தேகத்தினால் நிறைந்து நிற்கும்போது, உண்மையிலேயே கிறிஸ்துவுக்காக வாழ முயற்சியெடுப்பது பலனளிக்கக் கூடியதுதானா என்று தடுமாறுகையில், நீங்கள் இன்னும் வீட்டுக்குப் போய்ச் சேரவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். மரிக்கும்போது, நீங்கள் வீட்டை விட்டுப் போகவில்லை – வீட்டுக்குப் ***போவீர்கள்***.

நாள் ஆறு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: இந்த உலகம் என் வீடல்ல.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"காணப்படுபவை தற்காலிக மானவை, காணப்படாதவைகளோ நித்தியமானவை; எனவே, காணப்படுகிறவைகளிலல்ல காணப்படாதவைகளில் உங்கள் கண்களை பதியுங்கள்."*** 2 கொரிந்தியர் 4:18 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: இப்பூமியில், என்னுடைய வாழ்க்கை தற்காலிகமானதொன்றாக இருக்கின்றபடியால், அது எவ்வாறு, "இன்று", "இப்போது" என்னுடைய வாழ்க்கையை மாற்றும்**?**

ஒவ்வொன்றிற்கும் ஒரு முகாந்தரம் உண்டு

எல்லாம் தேவனிடத்திலிருந்து வருகிறது.
எல்லாம் அவருடைய வல்லமையினால் ஜீவிக்கின்றது,
யாவும் அவருடைய மகிமைக்காக இருக்கின்றது.
ரோமர் 11:36 (புதிய மொழியாக்கம்)

தேவன் சகலத்தையும் தமக்கென்று
உண்டாக்கினார்.
நீதிமொழிகள் 16:4 (புதிய மொழியாக்கம்)

எல்லாம் அவருக்காக.

இந்த பிரபஞ்சத்தின் இறுதி இலக்கு, தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துதல். நீங்கள் உட்பட, இருப்பவை அனைத்தும் இருப்பதற்கு காரணம் இதுவே. *எல்லாவற்றையும்* தேவன் தமது மகிமைக்காக உண்டாக்கினார். தேவனுடைய மகிமையல்லாமல், ஒன்றுமில்லை.

தேவனுடைய மகிமை என்றால் என்ன? அது அவரது தன்மை, அவருடைய சுபாவத்தின் சாராம்சம், அவருடைய முக்கியத்துவத்தின் அளவு, அவருடைய ஒளியின் பிரகாசம், அவருடைய வல்லமையின் வெளிப்பாடு, அவருடைய பிரசன்னத்தின் சூழ்நிலை. அதாவது, தேவனுடைய மகிமையென்பது, அவருடைய நன்மைகளின் வெளிப்பாடு; அவரது தனித்துவம் வாய்ந்த நித்திய குணாதிசயங்களும் இதில் உள்ளடங்கும்.

தேவனுடைய மகிமை எங்கே இருக்கின்றது? அவரால் சிருஷ்டிக்கப்பட்ட ***அனைத்தும்*** ஏதோ ஒரு வழியில் அவருடைய மகிமையைப் பிரதிபலிக்கின்றது. அதை நாம் எங்கும் காண்கின்றோம். சிறிய உயிரணுவிலிருந்து பரந்த நட்சத்திரக் கூட்டம் வரை, சூரியனின் உதயமும், அஸ்தமனமும்; நட்சத்திரங்களின் பிரகாசமும்; பெருங்காற்றும், காலங்களும் – யாவும் நமது இரட்சகரின் மகிமையை வெளிப்படுத்துகின்றன. இயற்கை மூலம், தேவன் வல்லமையுள்ளவரென்பதைக் காண்கின்றோம். அவர் ஞானமுள்ளவர், படைக்கும் திறன் மிகுந்தவர், அழகை அனுபவித்து ரசிக்கின்றவர், பலவித சுவைகளை விரும்புகின்றவர், ஒழுங்குபடுத்தும் திறன் கொண்டவர். ***"வானங்கள் தேவனுடைய மகிமையை வெளிப்படுத்துகின்றது"***[1] என்று வேதம் கூறுகின்றது.

வரலாறு முழுவதுமாக, வெவ்வேறு நிலையிலுள்ள மக்களுக்குத் தேவன் தமது மகிமையை வெளிப்படுத்தியிருக்கின்றார். முதலில் ஏதேன் தோட்டத்திலும், பின்பு மோசேக்கும், பின்பு ஆசரிப்புக் கூடாரத்திலும், ஆலயத்திலும், பின்பு இயேசு கிறிஸ்து மூலமாகவும், அதன்பின் சபை மூலமும்[2] தமது மகிமையை வெளிப்படுத்தினார். பட்சிக்கிற அக்கினியாக, மேகமாக, இடியாக, புகையாக, பிரகாசமான வெளிச்சமாக[3] தம்மை வெளிப்படுத்தினார். பரலோகத்தில், தேவையான வெளிச்சத்தை, தேவனுடைய மகிமையே கொடுக்கின்றது. ***''நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்க சூரியனும் சந்திரனும் தேவையில்லை, தேவனுடைய மகிமையே அதற்கு விளக்கு''***[4] என்று வேதம் கூறுகின்றது.

நமது வாழ்க்கையில் நாம் அடையக்கூடிய மிகப்பெரிய சாதனை, தேவனுடைய மகிமைக்காக வாழுதல்.

தேவனுடைய மகிமை இயேசு கிறிஸ்துவில்தான் சிறப்பாகக் காணப்படுகின்றது. உலகத்தின் ஒளியான அவர், தேவனுடைய சுபாவத்தைப் பிரகாசிக்கப்பண்ணினார். இயேசு கிறிஸ்து வெளிப்பட்டதனால், தேவன் யாரென்பதைக் குறித்து இனி நாம்

அறியாமையிலிருக்கத் தேவையில்லை. *"குமாரன், தேவனுடைய மகிமையின் பிரகாசமாயிருக்கின்றார்"*[5] என்று வேதம் கூறுகின்றது. நாம் தேவனுடைய மகிமையை முழுமையாகப் புரிந்து கொள்ளும்படியாக இயேசு இப்பூமிக்கு வந்தார். *"அந்த வார்த்தை மாம்சமாகி, நம்மிடையே ஜீவித்தார். நாம் அவருடைய மகிமையைக் கண்டோம்... அது கிருபையும், சத்தியமும் நிறைந்த மகிமை."*[6]

அவர் தேவனாயிருப்பதனால், தேவ மகிமையை ***இயற்கையாகவே*** பெற்றிருக்கின்றார். அது அவருடைய தன்மை. நாம், எவ்வாறு சூரியனை இன்னும் கொஞ்சம் அதிகமாகப் பிரகாசிக்கச் செய்ய முடியாதோ அதுபோலவே, தேவனுடைய மகிமைக்கு நாம் எதையும் கூடக் கூட்டிச் சேர்க்க இயலாது. ஆனால், நாம் அவருடைய மகிமையை *அறிந்து கொள்ள, அதைக் கனப்படுத்த, அதைக் கூறி அறிவிக்க, அதைத் துதிக்க, அதைப் பிரதிபலிக்க, அதற்காக வாழக் கட்டளை* பெற்றிருக்கின்றோம். ஏனெனில், தேவன் அதற்குத் தகுதியானவர்! எல்லாக் கனத்தையும் அவருக்குக் கொடுக்க நாம் கடமைப்பட்டவர்கள். அவர் அனைத்தையும் உண்டாக்கியபடியால், அவர் எல்லா மகிமைக்கும் உரியவர். *"தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறீர். ஏனெனில், நீர் எல்லாவற்றையும் உண்டாக்கினீர்"*[8] என்று வேதம் கூறுகின்றது.

இப்பிரபஞ்சம் முழுவதிலும், அவர் படைத்தவைகளில் இரண்டே இரண்டு படைப்புகள் மட்டுமே அவருக்கு மகிமை கொண்டுவரத் தவறிவிட்டன. முதலாவது, கீழே தள்ளப்பட்ட தூதர்கள் (பிசாசுகள்), இரண்டாவது, நாம் (மக்கள்). எல்லா பாவத்திற்கும் காணப்படும் அடிப்படை பிரச்சனை (வேர்), தேவனுக்கு கொடுக்க வேண்டிய மகிமையை கொடுக்க தவறுவதுதான். அதாவது, தேவனைவிட வேறு எதற்காகவாவது அதிக மகிமை செலுத்துவது. தேவனுக்கு மகிமை கொண்டுவரத் தவறுவது பெருமை நிறைந்த முரட்டாட்டம். இதுதான், சாத்தானை வீழ்ச்சியடையச் செய்த பாவம். அதுவே, நமது பாவமும் கூட. வெவ்வேறு வழிகளில் நாம் ஒவ்வொருவரும் நமது மகிமைக்காகவே வாழுகின்றோம். *"எல்லாரும் பாவஞ் செய்து தேவ மகிமையற்றவர்களானார்கள்"*[9] என்று வேதம் கூறுகின்றது.

நமது வாழ்க்கையிலிருந்து தேவன் பெறவேண்டிய மகிமையை, நம்மில் ஒருவருமே அவருக்கு முழுமையாக செலுத்துவதில்லை.

இதுதான், நாம் செய்துகொண்டிருக்கின்ற மிகப் பெரிய தவறும், மிக மோசமான பாவமுமாகும். இதற்கு நேர்மாறாக, நமது வாழ்க்கையில் நாம் அடையக்கூடிய மிகப் பெரிய சாதனை தேவனுடைய மகிமைக்காக வாழுதல். *"அவர்கள் என் சொந்த ஜனங்கள். நான் அவர்களை என் மகிமைக்காக சிருஷ்டித்தேன்"*[10] என்று தேவன் கூறுகின்றார். இதுவே, நமது வாழ்க்கையின் பிரதான இலக்காக இருக்க வேண்டும்.

நான் எப்படி தேவனுக்கு மகிமைக் கொண்டு வரக்கூடும்?

இயேசு, பிதாவிடம் *"நீர் எனக்குச் செய்யும்படி பூமியிலே நியமித்த யாவையும் செய்துமுடித்து உம்மை மகிமைப்படுத்தினேன்"*[11] என்று கூறினார். தேவனுடைய நோக்கத்தைப் பூமியில் நிறைவேற்றியதன் மூலம் இயேசு, தேவனை மகிமைப்படுத்தினார். நாமும் தேவனை அதே விதமாகக் கனம் பண்ண வேண்டும். சிருஷ்டிக்கப்பட்ட எதுவும், தான் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும்போது, அது தேவனுக்கு மகிமையைக்கொண்டு வருகின்றது. பறவைகள் பறப்பதன் மூலமும், குரல் ஒலிப்பதன் மூலமும், கூடு கட்டுவதன் மூலமும், தேவன் நியமித்த பறவைகளுக்குரிய செயல்பாடுகளைச் செய்வதன் மூலம் தேவனுக்கு மகிமையைக் கொண்டு வருகின்றன. மிக அற்பமான எறும்புங்கூட, தான் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும்போது, தேவனுக்கு மகிமையை கொண்டு வருகின்றது. எறும்புகளை, எறும்புகளாக இருக்கும்படியும், நீங்கள் நீங்களாக இருக்கும்படியும் தேவன் படைத்தார். "ஒரு மனித ஜென்மம் முழுமையாக ஜீவிப்பது தேவனுடைய மகிமை!" என்று புனித இரானியஸ் கூறினார்.

சிருஷ்டிக்கப்பட்ட எந்தவொரு சிருஷ்டியும், சிருஷ்டிக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றும்போது, அது தேவனுக்கு மகிமையை கொண்டு வருகின்றது.

தேவனுக்கு மகிமை கொண்டு வரக்கூடிய வழிகள் பல இருக்கின்றன. அவை, தேவன் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் ஐந்து

நோக்கங்களில் அடங்கியிருக்கின்றன. இப்புத்தகத்தின் மீதிப் பகுதியில் அவற்றை விளக்கமாக நாம் காணலாம். இங்கு ஒரு மேலோட்டமான பார்வையை மட்டும் தருகின்றேன்.

தேவனை ஆராதிப்பதன் மூலம், நாம் அவருக்கு மகிமை கொண்டு வருகின்றோம். நாம் தேவனுக்குச் செய்ய வேண்டிய முதல் பொறுப்பு – அவரை ஆராதிப்பது; அவரை ***அனுபவிப்பதன் மூலம்,*** நாம் அவரை ஆராதிக்கின்றோம். ''அவரை மகிமைப்படுத்துமாறு தேவன் கட்டளை கொடுக்கும்போது, அவரை நாம் அனுபவித்து ருசிக்கும்படி தேவன் நம்மை அழைக்கின்றார்'' என்று சி.எஸ். லூவிஸ் கூறுகின்றார். நாம் அவரை ஆராதிக்கும் ஆராதனை அன்பினால், நன்றியறிதலினால், மகிழ்ச்சியினால் தூண்டப்பட்டிருக்க வேண்டுமேயொழிய கடமையினால் தூண்டப்பட்டதாக இருக்கக் கூடாது.

''நாம் அவரில் மன நிறைவுடன் திருப்தியடையும்போது தேவன் அதிகமாக மகிமைப்படுகின்றார்'' என்று ஜான் பைப்பர் குறிப்பிடுகின்றார்.

மகிமைப்படுத்துவது, பாடுவது என்பது அவரிடம் ஜெபிப்பதைவிட மேலானது. ஆராதிப்பது என்பது தேவனாகிய கர்த்தரை ***அனுபவித்தல், நேசித்தல்,*** அவருடைய நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுமாறு நம்மையே ***கொடுத்தல்,*** இவைகளையே ஒரு வாழ்க்கை முறையாக (lifestyle) வைத்துக்கொள்ளுவதுதான், ஆராதனை. தேவனுடைய மகிமைக்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையை பயன்படுத்தும்போது, நீங்கள் செய்வதெல்லாம் ஆராதனை வடிவமாகும். ***''தேவனுடைய மகிமைக்காகச் சரியானதை செய்யும்படிக்கு உங்களுடைய முழு சரீரத்தையும் ஒரு கருவியாக பயன்படுத்துங்கள்''***[12] என்று வேதம் கூறுகின்றது.

மற்ற விசுவாசிகளிடத்தில் அன்புகூருவதன் மூலம், நாம், தேவனுக்கு மகிமை கொண்டு வருகின்றோம். நீங்கள் மறுபடியும் பிறந்தபோது, தேவனுடைய குடும்பத்தின் ஒரு ***பங்காகிவிட்டீர்கள்.*** கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது வெறும் விசுவாசித்தல் ஆகாது; அத்துடன், தேவனுடைய குடும்பத்திற்கு சொந்தமாகி, அதை

நேசிக்கக் கற்றுக் கொள்ளுவதும் அடங்கி இருக்கின்றது. *"நாம் மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட் பட்டிருக்கிறோமென்பதை நாம் ஒருவர்மீது ஒருவர் கொள்ளும் அன்பு நிரூபிக்கின்றது"*[13] என்று யோவான் எழுதினார். *"கிறிஸ்து உங்களை ஏற்றுக்கொண்டதுபோல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள். தேவன் அதில் மகிமைப்படுவார்"*[14] என்று பவுல் கூறினார்.

நாள் ஏழு:

ஒவ்வொன்றிற்கும் ஒரு முகாந்தரம் உண்டு

தேவன் நேசித்ததுபோல எப்படி நேசிப்பதென்று கற்றுக் கொள்ளுவது உங்கள் பொறுப்பு; அவர் அன்பாக இருக்கின்றபடியால், இப்படி அன்புகூருவது அவருக்கு கனத்தை கொண்டு வருகின்றது. *"நான் உங்களில் அன்புகூருகின்றதுபோல, நீங்களும் ஒருவரிலொருவர் அன்புகூர வேண்டும். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புகூர்ந்தால், அதினால் நீங்கள் என் சீஷரென்று எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள்"*[15] என்று இயேசு கூறினார்.

நாம் இயேசுவைப்போல மாறுவதன் மூலம், நாம், தேவனுக்கு மகிமை கொண்டு வருகின்றோம். நாம் எப்பொழுது தேவனுடைய குடும்பத்தில் பிறக்கின்றோமோ, அப்பொழுதிலிருந்தே நாம் ஆவிக்குரிய முதிர்ச்சியடைய வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். அப்படியென்றால் என்ன? நாம் சிந்திப்பது, உணருவது, செயல்படுவது எல்லாவற்றிலும் இயேசுவைப்போலாவதுதான் ஆவிக்குரிய முதிர்ச்சி; கிறிஸ்துவைப் போன்ற குணத்தை எந்த அளவுக்கு வளர்த்துக் கொள்ளுகின்றோமோ அந்த அளவுக்கு நாம் தேவனுக்கு மகிமை செலுத்துகின்றோம். *"கர்த்தருடைய ஆவியானவர் நமக்குள் கிரியை செய்கிறபடியே, நாம் மகிமையின் மேல் மகிமையடைந்து அவருடைய மகிமையை இன்னும் அதிகமாகப் பிரதிபலிக்கின்றோம்"*[16] என்று வேதம் கூறுகின்றது.

கிறிஸ்துவை நீங்கள் ஏற்றுக்கொண்டபோது, தேவன் உங்களுக்கு ஒரு புதிய வாழ்வையும் தன்மையையும் கொடுத்தார். இப்போது, உங்கள் மீதியான பூலோக வாழ்க்கையின்போது, உங்கள் குணத்தை மாற்றும் முறையை தேவன் தொடர விரும்புகின்றார். *"உங்கள் இரட்சிப்பின் கனிகளால் எப்பொழுதும் நிறைந்திருங்கள்; இயேசு*

கிறிஸ்துவால் உங்கள் வாழ்க்கையில் உருவாக்கப்படும் நற்காரியங்கள், தேவனுக்கு அதிக மகிமையும் புகழ்ச்சியும் கொண்டுவரும்”[17] என்று வேதம் கூறுகின்றது.

நமது வரங்களால் பிறருக்கு சேவை செய்வதன் மூலம், நாம், தேவனுக்கு மகிமை கொண்டு வருகின்றோம். நாம் ஒவ்வொருவரும் தாலந்துகள், வரங்கள், திறமைகள், ஆற்றல்கள் கொண்டவர்களாக தேவனால் தனிச்சிறப்புடன் உருவாக்கப் பட்டவர்கள். நீங்கள் பெற்றிருக்கும் காரியங்கள் தற்செயலாக ஏற்பட்டவை அல்ல. தன்னலமான நோக்கங்களுக்காக தேவன் உங்கள் திறமைகளை உங்களுக்கு அளிக்கவில்லை. அவை பிறர் பயனுக்காக கொடுக்கப்பட்டுள்ளது. எப்படிப் பிறருக்கு கொடுக்கப் பட்டிருக்கும் தாலந்துகள் உங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றதோ அப்படியே உங்கள் தாலந்துகளும் பிறருக்காகப் பயன்படுத்தப்பட வேண்டும். *“தமது பல்வேறு வரங்களிலிருந்து தேவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் வரங்களையளித்திருக்கின்றார். அவருடைய தயாளம் உங்கள் மூலம் பிரவாகிக்கும்படி அவற்றை நன்றாக நிர்வகியுங்கள்... பிறருக்கு உதவி செய்ய அழைக்கப்படுகின்றீர்கள்? தேவன் கொடுத்துள்ள முழு பெலத்தோடும் சக்தியோடும் அதைச் செய்யுங்கள். அப்போது தேவன் மகிமைப்படுவார்”*[18] என்று வேதம் கூறுகின்றது.

பிறருக்கு அவரைப் பற்றிக் கூறுவதன் மூலம், நாம், தேவனுக்கு மகிமை கொண்டு வருகின்றோம். தமது அன்பும், நோக்கமும் இரகசியமாக வைக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்பவில்லை. நாம் சத்தியத்தை எப்போது அறிகின்றோமோ, அப்பொழுதே, அதை நாம் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். இது ஒரு பெரிய சிலாக்கியம் – பிறரை இயேசுவுக்கு அறிமுகப்படுத்தி, தங்கள் நோக்கத்தைக் கண்டு கொள்ள அவர்களுக்கு உதவி செய்து, தங்கள் நித்திய இலக்கிற்கு அவர்களை ஆயத்தப்படுத்துதல். *“தேவனுடைய கிருபை மேலும் மேலும் அநேகரைக் கிறிஸ்துவண்டை நடத்தும்போது, ... தேவன் அதிகமதிகமாக மகிமை அடைவார்”*[19] என்று வேதம் கூறுகின்றது.

நீங்கள் எதற்காக இப்பூமியில் வாழப்போகின்றீர்கள்?

தேவனுடைய மகிமைக்காக, மீதியான வாழ்நாள் முழுவதும் நீங்கள் வாழ தீர்மானித்தால், உங்கள் வாழ்க்கையில், நீங்கள் முக்கியப்படுத்தும் காரியங்கள் நிச்சயம் மாறும். உங்கள் வேலைத்திட்டம், உங்கள் உறவுகள் மற்றும் அனைத்திலும் ஒரு மாறுதல் ஏற்படும். இதினிமித்தம், ஒரு எளிய பாதைக்குப் பதிலாக, சில சமயம் கடினமான பாதையைத் தெரிந்தெடுக்க வேண்டியதிருக்கும். இயேசுவும்கூட இந்தப் போராட்டத்தை அனுபவித்தார். சிலுவையிலறையப்படுமுன்னர் ***"என் ஆத்துமா எனக்குள் கலங்குகின்றது. நான் என்ன சொல்லுவேன்? பிதாவே, இந்த வேளையிலிருந்து என்னைக் காப்பாற்றும் என்று சொல்லுவேனோ? ஆகிலும், இதற்காகவே இந்த வேளைக்குள் வந்தேன். பிதாவே, உம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தும்"***[20] என்று அவர் கதறினார்.



இயேசுவானவர் இரு வழி சந்தியில் நின்றார். தமது வாழ்விற்கான நோக்கத்தை நிறைவேற்றி தேவனுக்கு மகிமை கொண்டு வருவதா? அல்லது பின்வாங்கிப்போய், வசதியான, சுயத்தை மையமாகக் கொண்ட வாழ்க்கை வாழ்வதா? நீங்களும், அதே தெரிந்தெடுப்பை எதிர்கொள்ளுகின்றீர்கள். உங்கள் சொந்த இலக்குகளுக்காக, வசதிக்காக, இன்பத்திற்காக வாழுவீர்களா அல்லது அவர் நமக்கு நித்திய பலனை வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பதையறிந்து, தேவனுடைய மகிமைக்காக மீதி வாழ்நாளெல்லாம் வாழுவீர்களா? ***''தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன், அதை இழந்து போவான்; அதை இழந்து விடுகிறவனோ, அதை நித்திய காலமாகப் பெற்றுக்கொள்ளுவான்"***[21] என்று வேதம் கூறுகின்றது.

இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் காலம் வந்துவிட்டது. நீங்கள் யாருக்காக வாழப் போகின்றீர்கள்? உங்களுக்காகவா? தேவனுக்காகவா? தேவனுக்காக வாழும் பெலன் எனக்கு இருக்கின்றதா என்று நீங்கள் தயங்கலாம்; கவலைப்படாதிருங்கள். நீங்கள் அவருக்காக வாழவேண்டுமென்ற தெரிந்தெடுப்பை மட்டும் செய்துவிட்டால், தேவன் உங்களுக்குத் தேவையானதைத் தருவார்.

"தேவனுக்குப் பிரியமான வாழ்க்கைக்குள் உள்ள காரியங்கள் யாவும், நம்மைத் தேவனிடத்தில் அழைத்தவரை தனிப்பட்ட சொந்தமாகவும், நெருக்கமாகவும் அறிந்து கொள்ளுவதன் மூலம் நமக்கு அற்புதமாக அளிக்கப்பட்டிருக்கின்றது"[22] என்று வேதம் கூறுகின்றது.

உங்களை என்ன நோக்கத்திற்காக அவர் படைத்தாரோ அதை நிறைவேற்றி, அவருடைய மகிமைக்காக வாழும்படி, தேவன் இப்பொழுது உங்களை அழைக்கின்றார். அது ஒன்றுதான், வாழ்வதற்குரிய ஒரே வழி. மற்றவைகளெல்லாம் வெறுமனே இருப்பவைகளாகும். உங்களை முற்றிலும் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுப்பதிலிருந்துதான் உண்மையான வாழ்க்கை ஆரம்பிக்கின்றது. இதைச் செய்துவிட்ட நிச்சயம் உங்களுக்கு இதுவரை இல்லாவிட்டால், நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம், ஏற்றுக்கொள்ளுவதும், விசுவாசிப்பதுமேயாகும். *"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேரும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அதிகாரம் கொடுத்தார்"*[23] என்று வேதம் வாக்குப்பண்ணியிருக்கின்றது. தேவனுடைய இந்த அழைப்பை ஏற்றுக்கொள்ளுவீர்களா?

அவருக்காக வாழ உங்களுக்குத் தேவையான அனைத்தையும் இயேசு உங்களுக்குக் கொடுப்பார்.

முதலாவதாக, விசுவாசியுங்கள். தேவன் உங்களை நேசித்துத் தமது நோக்கத்திற்காக உண்டாக்கினாரென்று விசுவாசியுங்கள். நீங்கள் ஒரு தற்செயலாக நேரிட்ட விபத்து அல்ல என்பதை விசுவாசியுங்கள். நீங்கள் நித்திய காலமாக வாழ உருவாக்கப்பட்டவர்களென்பதை விசுவாசியுங்கள். நீங்கள் என்ன செய்திருந்தாலும் தேவன் உங்களை மன்னிக்க விரும்புகிறாரென்றும், தேவன் உங்களுக்காக சிலுவையில் மரித்த இயேசுவுடன் உறவு கொள்ள உங்களைத் தெரிந்தெடுத்திருக்கிறார் என்றும் நம்புங்கள்.

இரண்டாவதாக, ஏற்றுக்கொள்ளுங்கள். இயேசுவை உங்கள் வாழ்க்கைக்குள் ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்

கொள்ளுங்கள். உங்கள் பாவங்களுக்கான அவருடைய மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையின் நோக்கத்தை நிறைவேற்ற உங்களுக்கு வல்லமையளிக்கும் அவருடைய ஆவியை ஏற்றுக் கொள்ளுங்கள். ***"குமாரனை விசுவாசித்து ஏற்றுக் கொள்ளுபவர்கள் யாராயிருந்தாலும் நித்தியமான பரிபூரண ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவார்கள்"***[24] என்று வேதம் கூறுகின்றது. நீங்கள் இதை எங்கேயிருந்து வாசித்துக் கொண்டிருந்தாலும் உங்கள் தலைகளைத் தாழ்த்தி, உங்கள் நித்தியத்தை மாற்றியமைக்கக்கூடிய இந்த ஜெபத்தை மிக அமைதலோடு கூறும்படி உங்களை அழைக்கின்றேன்: ***"இயேசுவே, நான் உம்மில் நம்பிக்கையாயிருக்கின்றேன்; நான் உம்மை ஏற்றுக் கொள்ளுகின்றேன்"*** ஆம், அதனை இப்பொழுதே செய்யுங்கள்.

நீங்கள் உண்மையாக இந்த ஜெபத்தை செய்திருந்தால், வாழ்த்துக்கள்! தேவனுடைய குடும்பத்திற்குள் உங்களை வரவேற்கின்றோம்! இப்பொழுது, உங்கள் வாழ்க்கைக்கான தேவ சித்தத்தின்படி எப்படி வாழ்வது என்று கண்டுபிடித்து, அதற்காக வாழ ஆரம்பிக்கின்றீர்கள், தயாராகிவிட்டீர்கள். இதை யாரிடமாவது பகிர்ந்து கொள்ளுங்கள் என்று உங்களை வருந்திக் கேட்கின்றேன். உங்களுக்கு உதவி, ஆதரவு தேவை. நீங்கள் எனக்கு இ–மெயில் (மின்னஞ்சல்) செய்தால், (இணைப்பு 2ஐ காண்க), நான் எழுதிய ஒரு சிறிய கைப்பிரதி – ***"ஆவிக்குரிய உங்கள் வளர்ச்சிக்கான முதல் படிகள்"*** என்ற புத்தகத்தை உங்களுக்கு நான் அனுப்பி வைப்பேன்.

நாள் ஏழு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: எல்லாம் அவருக்காக.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"எல்லாம் தேவனிடத்திலிருந்து வருகின்றது. எல்லாம் அவருடைய வல்லமையினால் ஜீவிக்கின்றது, யாவும் அவருடைய மகிமைக்காக இருக்கின்றது."*** ரோமர் 11:36 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: எனது அனுதின அலுவலக வாழ்வின் எந்தெந்தப் பகுதிகளில் தேவனது மகிமையை இன்னும் கூடுதலாக அறிந்துகொள்ளக்கூடும்?

நோக்கம் #1



நீங்கள் தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப்பட்டீர்கள்

தேவன் தம்முடைய மகிமைக்கென்றே அவர்களைப் பலமும் கிருபையுமுள்ள விருட்சங்களைப்போல நாட்டினார்.

ஏசாயா 61:3 (புதிய மொழியாக்கம்)

தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப்பட்டீர்கள்

நீரே எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர். உம்முடைய மகிழ்ச்சிக்காகவே அவைகள் சிருஷ்டிக்கப்பட்டு இருக்கின்றன.
வெளிப்படுத்தின விசேஷம் 4:11 (புதிய மொழியாக்கம்)

கர்த்தர் தம்முடைய ஜனங்களில் களிகூருகின்றார்.
சங்கீதம் 149:4 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப்பட்டீர்கள்.

இந்த உலகத்தில் நீங்கள் பிறந்த அந்த வேளையில்தானே, அங்கு காணப்படாத காட்சியாக, தேவன், உங்கள் பிறப்பின் மகிழ்ச்சியால் ***புன்னகை*** பூத்தவராக அங்கு நின்றார். நீங்கள் உயிருடன் இருப்பதை அவர் விரும்பினபடியால், உங்கள் பிறப்பு அவருக்குப் பேரானந்தமளித்தது. உங்களைப் படைக்க வேண்டுமென்ற தேவை தேவனுக்கு இல்லை; ஆனாலும், தமது சொந்த மகிழ்ச்சிக்காக, உங்களைப் படைப்பதை அவர் ***தெரிந்துகொண்டார்.*** அவருடைய நன்மைக்காக, மகிமைக்காக, நோக்கத்திற்காக, மகிழ்ச்சிக்காக நீங்கள் இருக்கின்றீர்கள்.

உங்கள் வாழ்க்கையின் முதல் நோக்கம், தேவனுக்கு மகிழ்ச்சியை கொண்டுவருவது – அவருடைய பிரியத்திற்காக வாழ்வது. இந்த சத்தியத்தை நீங்கள் முழுமையாக அறிந்துகொள்ளும்போது, நீங்கள் முக்கியமற்றவர்களென்ற பிரச்சனையே எழும்பாது. அது உங்கள் தகுதியை நிரூபிக்கின்றது. இந்த அளவுக்கு நீங்கள் தேவனுக்கு முக்கியமானவர்களாயிருக்கும்போது, உங்களைத் தம்முடன்

நித்தியத்தில் வைத்துக் கொள்ளக்கூடிய அளவு முக்கியமானவர் களாக அவர் கருதும்போது, அதைவிடப் பெரிய முக்கியத்துவம் எது? நீங்கள் தேவனுடைய பிள்ளை; அவர் சிருஷ்டித்த வேறு எதையும்விட அதிக மகிழ்ச்சியை அவர் உங்களில்தான் காண்கின்றார். ***"தமது அன்பினிமித்தம், இயேசு கிறிஸ்துவின் மூலம் நம்மைத் தமக்குப் பிள்ளைகளாக்க தேவன் ஏற்கனவே முடிவு செய்துவிட்டார் - இதுவே அவருடைய சித்தமும் நோக்கமுமாகும்"***[1] என்று வேதம் கூறுகின்றது.

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் மிகப் பெரிய ஈவுகளில் ஒன்று – மகிழ்ச்சியை அனுபவிக்கும் திறமை. நீங்கள் அதை அனுபவிக்கும்படி ஐந்து புலன்களையும், உணர்வுகளையும் கொடுத்து அவர் உருவாக்கியிருக்கின்றார். நீங்கள் வாழ்க்கையை எப்படியாவது சகித்துக் கொண்டுபோவதையல்ல, அதை அனுபவித்து மகிழ்வதையே அவர் விரும்புகின்றார். ***தேவனுடைய சாயலில்*** நீங்கள் ஏற்படுத்தப்பட்டபடியால் மகிழ்ச்சியை உங்களால் அனுபவிக்க முடிகின்றது.

தேவனுக்கும் உணர்ச்சிகள் உண்டு என்பதை நாம் அடிக்கடி மறந்து விடுகின்றோம். தேவன் காரியங்களை ஆழமாக உணருகின்றார் – அவர் கவலைப்படுகின்றார்; எரிச்சலைடைகின்றார்; கோபப்படுகின்றார்; மனதுருக்கம், பரிதாபம், துக்கம், அனுதாபம் இவையனைத்தையும் உணருகின்றார். அதோடுகூட, மகிழ்ச்சியடைகின்றார், களிகூருகின்றார், அனுபவித்து மகிழ்கின்றார், சிரிக்கவும் செய்கின்றார்[2] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுக்கு மகிழ்ச்சியை கொண்டுவருவது "ஆராதனை" என அழைக்கப்படுகின்றது. ***"தம்மை ஆராதித்து, தமது அன்பை நம்புகிறவர்கள் மேல் மட்டுமே கர்த்தர் மனமகிழ்ச்சியா யிருக்கின்றார்"***[3] என்று வேதம் கூறுகின்றது. தேவனுக்கு மகிழ்ச்சியூட்டும்படி நீங்கள் செய்வது எதுவுமே ஒரு ஆராதனைதான். வைரத்தைப்போல, ஆராதனைக்கும் ***பல முகப்புகள் உண்டு***. ஆராதனை பற்றிய ***அனைத்து*** உண்மைகளையும் தொகுத்துத்தர வேண்டுமானால், எத்தனையோ புத்தகங்கள் எழுத வேண்டும். ஆனால், இங்கு ஆராதனைக்கான அடிப்படை மற்றும் ஆரம்ப தன்மைகளை மட்டும் பார்ப்போம்.

மனிதவியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்த ஒரு காரியம்: “ஆராதனை என்பது அகில உலகிலும் காணப்படும் ஒரு தூண்டுதல், நமது இரத்த அணுக்களில் வைக்கப்பட்ட ஒன்று, நமது தசை நார்களுக்குள்ளேயே தேவனால் பின்னிப் பிணைக்கப்பட்ட வலுவான ஒரு காரியம் – தேவனோடு உறவு (தொடர்பு) கொள்ளவேண்டும் என்ற ஏக்கமும், விருப்பமும் நமக்குள் இயற்கையாகவே காணப்படுகின்ற ஒன்று.” ஆராதனை என்பது சுவாசிப்பது, உண்ணுவது போன்ற ஒரு இயற்கையான செயலாகும். தேவனை நாம் ஆராதிக்க தவறுவோமாகில், அவ்விடத்தில் அவருக்கு பதிலாக வேறொன்றை வைத்திருப்போம்... அது சில வேளைகளில் நாமாகவே இருக்கக்கூடும். தேவன் ஆராதிப்பவர்களை விரும்புவதால், இந்த ஆசையை நமக்குள் வைத்து படைத்திருக்கின்றார்! ***“ஆராதிப்பவர்களை பிதாவானவர் தேடுகின்றார்”***[4] என இயேசு கூறினார்.

தேவனுக்கு மகிழ்ச்சியை கொண்டுவரும் உங்களுடைய எந்த செயலும் ஆராதனைதான்.

உங்களுடைய மதசம்பந்தமான பின்னணியைப் பொருத்து, “ஆராதனை” என்பதன் பொருளை நீங்கள் இன்னும் அதிக அளவில் புரிந்துகொள்ள வேண்டியதிருக்கும். ஆராதனை என்றதுமே பாடல்கள், ஜெபித்தல், ஒரு பிரசங்கத்தைக் கவனித்தல் என்ற சபை ஆராதனை உங்கள் நினைவுக்கு வரலாம் அல்லது உங்களில் வேறு சிலருக்கு சபை விழாக்கள், மெழுகுவர்த்திகள், திருவிருந்து ஆகிய சடங்குகள் நினைவுக்கு வரலாம்; இன்னும் சிலருக்கு, குணமாகுதல், அற்புதங்கள், பரவசமூட்டும் அனுபவங்கள் ஆகியவை நினைவுக்கு வரலாம். இவைகளெல்லாம் ஆராதனையில் அடங்கும் காரியங்களாக இருந்தாலும்... ஆராதனை என்பது இந்த எல்லா வெளிப்பாடுகளையும்விட ***மிக மிக அதிகமானது***. ஆராதனை என்பது ஒரு வாழ்க்கை முறை.

ஆராதனை என்பது இசையைவிட மிகவும் மேற்பட்டது. அநேகருக்கு ஆராதனை என்றாலே இசைதான். “எங்கள் சபையில் முதலாவது ஆராதனை, அதன் பின்னர் பிரசங்கம்” என அவர்கள் கூறுகின்றனர். இது ஒரு பெரிய தவறான எண்ணம். ஒரு சபை

இசையைவிட மிகவும்

ஆராதனையின் ***ஒவ்வொரு*** பகுதியும் ஆராதிக்கும் செயலே: ஜெபித்தல், வேதபாடம் வாசித்தல், பாடுதல், பாவ அறிக்கை செய்தல், தியான வேளை, பிரசங்கம் கேட்டல், ஞானஸ்நானம், திருவிருந்து, ஒரு அர்ப்பணிப்பில் கையெழுத்திடுதல், மற்ற உறுப்பினர்களை வாழ்த்துதல் – இவையனைத்தும் ஆராதனையின் செயல்களே.

உண்மையில், “ஆராதனையானது” இசைக்கு முன்பாகவே வந்த ஒன்று. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஆராதித்தான். ஆனால், ஆதியாகமம் 4:21ல் யூபாலின் பிறப்பு குறிப்பிடப்படும்வரை, இசையைக் குறித்து வேதத்தில் சொல்லப்படவில்லை. இசைதான் ஆராதனையென்றால், இசைத் திறனற்றவர்களெல்லாரும் ஒரு நாளும் ஆராதிக்க முடியாது. ஆராதனை, இசையைவிட அதிக அளவு மேம்பட்டது.

இதிலும் அதிக தவறான ஒரு கருத்து என்னவெனில் – ஆராதனை என்பது ஒரு குறிப்பிட்ட ***வகை*** இசை மட்டுமே என்று நினைப்பதாகும். இப்படிப்பட்ட எண்ணத்துடனுள்ள மக்கள் பொதுவாக பின்வருமாறு சொல்லுவார்கள்: “முதலாவது ஒரு பாமாலைப் பாட்டை பாடிய பின்னர் ***‘துதி - ஆராதனை’***க்குள் கடந்து செல்லுவோம்,’ அல்லது, “வேகமாக பாடும் துதி பாடலைவிட அமைதலாக செய்யும் ஆராதனைப் பாடல்களே எனக்கு மிகவும் பிடிக்கும்’’ ஒரு பாடல் விரைவாக, சத்தமான இசையுடன் பாடப்பட்டால் அது “துதி’’ என்றும் இன்னுமொரு பாடல் மென்மையாக, அமைதியாக (‘கிட்டார்’ இசையை மட்டும் உபயோகப்படுத்தி) பாடினால் அது “ஆராதனை’’ என்றும் சொல்லுகின்றோம். இது முற்றிலும் தவறான கருத்து. “ஆராதனை” என்ற வார்த்தை தவறாக புரிந்துகொள்ளப்பட்டிருக்கின்றது என்று தான் சொல்ல வேண்டும்.

உண்மையில், ஆராதனை என்பது பாடல் பாடப்படும் விதத்திற்கோ, சத்தத்திற்கோ அல்லது பாடலின் வேகத்திற்கோ எந்தவித தொடர்பும் கிடையாது. தேவன் எல்லாவித இசைகளையும் விரும்புகின்றார்.

ஏனெனில், அவர்தான் எல்லாவற்றையும் ஏற்படுத்தினவர். வேகமாகவோ, மெதுவாகவோ, சத்தமாகவோ, மிருதுவாகவோ, பழையதோ, புதியதோ – ஒருவேளை இவை அனைத்தும் உங்களுக்குப் பிடிக்காமலிருக்கலாம். தேவனுக்கோ இவை யாவும் பிடிக்கும்! இதனை ஆவியோடும் உண்மையோடும் ஏறெடுத்தால், அது ஒரு ஆராதனையின் செயலாகின்றது.

ஆராதனையில் உபயோகப்படுத்தப்படும் இசையைக் குறித்து கருத்து வேறுபாடுகள் கிறிஸ்தவர்களுக்குள் இருக்கத்தான் செய்கின்றது. அதாவது, தாங்கள் விரும்புகின்ற இசைதான் சிறந்தது என்றும், அதுதான் வேதாகம அடிப்படையிலானது என்றும், தேவனை கனப்படுத்தும் இசை இதுதான் என்றும் கூறி வாதாடுகின்றனர். ஆனால், வேதத்திலோ இன்னவிதமான ஒரு குறிப்பிட்ட இசையைத்தான் தேவன் அங்கீகரிக்கின்றார் என்றோ அவருக்கு பிரியமானதென்றோ நாம் காண்கிறதில்லை. உண்மையைச் சொன்னால் வேதாகம காலத்தில் பயன்படுத்தப்பட்ட இசைக்கருவிகள் இப்பொழுது நம்மிடத்தில் இல்லை. வெளிப்படையாக கூறினால், ***நீங்கள்*** அதிகமாக விரும்பும் இசையின் வகை, உங்கள் தனித்தாள் சுபாவம் மற்றும் உங்கள் பின்னணி ஆகியவற்றை வெளிப்படுத்துகிறதேயன்றி தேவனை அல்ல. ஒரு பிரிவினருக்குப் பிடித்த இசை இன்னொரு பிரிவினருக்கு ஏதோ கூச்சல் போலவும் பெரும் இரைச்சலைப் போலவும் இருக்கலாம் – ஆனால், பல்சுவை விரும்பும் தேவனோ எல்லாவற்றிலும் மகிழ்கின்றார்.

இதுதான் “கிறிஸ்தவ” இசை என்று எதுவும் சொல்லுவதற்கில்லை கிறிஸ்தவ கீர்த்தனைகள் உண்டு. ஒரு பாட்டை பரிசுத்தமாக்குவது அதன் வார்த்தைகளே தவிர, இராகமல்ல. ஆவிக்குரிய இராகங்கள் என்று ஒன்று கிடையாது. வார்த்தைகளின்றி ஒரு பாடலின் இசையை மட்டும் நான் உங்களுக்கு ஒலித்துக் காட்டினால், அது “கிறிஸ்தவ” பாடலா என்று உங்களால் கூறவே முடியாது.

நாள் எட்டு:
தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப் பட்டீர்கள்

ஆராதனை என்பது உங்களின் நன்மைக்காக அல்ல. “இன்றைக்கு ஆராதனை நன்றாக இருந்தது; நான் இன்றைய ஆராதனையை மிகவும் விரும்பினேன். அதிலிருந்து அநேக காரியங்களை பெற்றுக்கொண்டேன்,'' என்று எழுதி அனுப்பப்படுகின்ற குறிப்புகளை சபை விசுவாசிகளிடமிருந்து நான் பெற்றிருக்கின்றேன். ஆராதனை பற்றிய மற்றொரு தவறான கருத்து இது. நமது மகிழ்ச்சிக்காக அல்ல; தேவனை மகிழ்விக்கவே நாம் ஆராதிக்கின்றோம். இதுவே, ஆராதனையின் இலக்காகும்.

நீங்கள் எப்போதாவது, ''இன்றைக்குரிய ஆராதனை வேளையிலிருந்து நான் எதுவுமே பெற்றுக் கொள்ளவில்லை” என்று கூறினால் நீங்கள் ஆராதித்த நோக்கம் தவறானது. ஆராதனை உங்களுக்கல்ல. அது தேவனுக்குரியது. அநேக நேரங்களில் ஆராதனையின்போது ஐக்கியமும், பக்திவிருத்தியும், சுவிசேஷ ஊழியமும், இன்னும் பல பிரயோஜனமானவைகள் வெளிப்பட்டாலும்... நாம் நம்மையே பிரியப்படுத்துவதற்காக அதை செய்வது கிடையாது. நமது நோக்கம், நமது சிருஷ்டிகருக்கு மகிமையையும், மகிழ்ச்சியையும் கொண்டு வருவதே.

ஏசாயா 29ம் அதிகாரத்தில் தேவன், அரைமனதோடும் மாய்மாலமாகவும் செய்யும் ஆராதனையைக் குறித்துக் குற்றம் சாட்டுகின்றார். ஜனங்கள் தேவனுக்கு சலித்துப்போன ஜெபங்களையும், உண்மையற்ற துதிகளையும், வெறுமையான வார்த்தைகளையும், மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சடங்காச்சாரங்களையும் – அதன் அர்த்தம் என்னவென்று தெரியாமலேயே ஏறெடுத்து வந்தனர். தேவனுடைய இருதயமானது இப்படிப்பட்ட பாரம்பரியமான ஆராதனையினால் தொடப்படுவதில்லை. ஆனால், முழு வாஞ்சையோடும், அர்ப்பணிப்போடும் செய்யப்படும் ஆராதனையில் தேவனுடைய உள்ளம் தொடப்படுகின்றது. ***“இந்த ஜனங்கள், தங்கள் வாயினால் என்னிடமாய்ச் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகின்றார்கள். அவர்கள் உள்ளமோ எனக்குத் தூரமாயிருக்கின்றது; மனிதரால் உண்டாக்கப்பட்ட சடங்குகளால் அவர்கள் ஆராதனை உண்டாக்கப் பட்டிருக்கின்றது”***[5] என்று கர்த்தர் கூறுகின்றார்.

ஆராதனை, உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியல்ல, அதுவே உங்கள் வாழ்க்கை. ஆராதனை என்பது சபை கூடிவருதல் நேரங்களில் மட்டும் நடக்கின்ற ஒன்றல்ல. நாம் அவரை, "***இடைவிடாது***"[6] ஆராதிக்க வேண்டும்; "***சூரியன் உதித்தது முதல் அது அஸ்தமனமாகும்வரை***"[7] அவரை துதிக்க வேண்டும். வேதாகம புருஷர்களும், ஸ்திரீகளும், வேலையிலும், வீட்டிலும், யுத்த களத்திலும், சிறையிலும், படுக்கையிலும் துதித்தார்கள். காலையில் கண் விழித்ததும் நீங்கள் முதலில் செய்ய வேண்டிய காரியம் துதிப்பதாகும். இரவில் கண்ணை மூடுவதற்கு முன்பாக செய்யப்படவேண்டிய கடைசி காரியமும் அதுவாகவே இருக்க வேண்டும்.[8] "***கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்தரிப்பேன்; அவர் துதி எப்போதும் என் வாயிலிருக்கும்.***"[9] என தாவீது கூறினார்.

தேவனுக்கு துதியும், மகிமையும், மகிழ்ச்சியும் உண்டாகும்படியாக, நீங்கள் செய்யும் எந்த ஒரு செயலும் ஆராதனையின் செயல் என்று சொல்லலாம். ஆகவேதான் "***நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்றே செய்யுங்கள்***"[10] என்று வேதம் சொல்லுகின்றது. இதையே மார்ட்டின் லூத்தர், "பால் பண்ணையில் பால் கறக்கும் வேலையைச் செய்கின்ற ஒரு பணிப்பெண்ணுங்கூட அவ்வேலையை தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக செய்ய முடியும்" என்று கூறினார்.

தேவனுடைய மகிமைக்கென்றே எல்லாவற்றையும் செய்வது எப்படி சாத்தியமாகும்? எல்லாவற்றையும் இயேசுவுக் கென்றே செய்வதின் மூலமாகவும், மற்றும் அதைச் செய்யும்போது தொடர்ந்து அவருடன் உரையாடிக்கொண்டே செய்வதன் மூலமாகவும் அது சாத்தியமாகும். "***எதைச் செய்தாலும் அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல் கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாகச் செய்யுங்கள்***"[11] என்று வேதம் கூறுகின்றது.

எதைச்செய்தாலும் எல்லாவற்றையும் இயேசுவுக்காகச் செய்கின்றோம் என்ற உணர்வோடு செய்வதுதான் "ஆராதனை வாழ்க்கை முறை"க்கான இரகசியமாகும். "***உங்கள் அன்றாட, சாதாரண வாழ்க்கையை – உண்ணுதல், உறங்குதல்,***

பணிக்குச் செல்லுதல், வாழ்வின் பிற அலுவல்களில் இருத்தல் ஆகிய இவை யாவையும் எடுத்து கர்த்தருக்கு முன்பாக காணிக்கையாக வையுங்கள்"[12] என்று ஒரு குறிப்பிட்ட ஆங்கில மொழியாக்கம் கூறுகின்றது. உங்கள் வேலையை தேவனுக்குப் பிரதிஷ்டை செய்து, அவருடைய பிரசன்னத்தைப் பற்றிய உணர்வுடன் அதைச் செய்யும்போது வேலை ஆராதனையாகி விடுகின்றது.

நான் முதன் முதலில் என் மனைவியை நேசித்த காலத்தில், இடைவிடாமல் அவளையே நினைத்துக் கொண்டேயிருந்தேன். காலை உணவு அருந்தும்போதும், பள்ளிக்கூடத்திற்கு காரை ஓட்டிச் செல்லும்போதும், வகுப்பிலிருக்கும்போதும், எரிவாயு ஏற்றிக் கொண்டிருக்கும்போதும் – எல்லா நேரங்களிலும் இந்த பெண்ணைக் குறித்தே நினைத்துக் கொண்டிருந்தேன். அடிக்கடி அவளைக் குறித்தே பேசிக் கொண்டிருந்தேன். அவள் மீது உள்ள என் அன்பைக் குறித்தே சிந்தித்துக் கொண்டிருந்தேன். நாங்கள் வெவ்வேறு கல்லூரிகளில், பல மைல் தொலைவுக்கு அப்பாலிருந்தபோதும், அவளைக் குறித்த சிந்தனையானது நாங்கள் ஒருவருக்கொருவர் நெருக்கமாக இருப்பதைப்போல உணர உதவி செய்தது. இடைவிடாமல் அவளை நினைத்து, *அவளுடைய அன்பில் நான் நிலைத்திருந்தேன்*.

இதுதான், உண்மையான ஆராதனை என்பது – ***இயேசுவின் அன்பில் மூழ்கியிருத்தல்!*** இதுதான், உண்மையான ஆராதனையாகும்.

நாள் எட்டு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் தேவனுடைய மகிழ்ச்சிக்காக திட்டமிடப்பட்டேன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"கர்த்தர் தம்முடைய ஜனத்தின்மேல் பிரியம் வைக்கின்றார்."* சங்கீதம் 149:4

ஆய்வுக்கான ஒரு கேள்வி: எந்த பொது வேலையை இயேசுவுக்காக செய்வதுபோல நான் செய்ய ஆரம்பிக்க வேண்டும்?

9

தேவனைப் புன்னகைப்புரிய வைப்பது எது?

கர்த்தர் உன்னைப் பார்த்து
புன்னகைப்புரிவாராக...
எண்ணாகமம் 6:25 (புதிய மொழியாக்கம்)

உமது அடிமையாகிய என் மேல் நீர்
புன்னகைப்புரிந்து, சரியான வழியில்
ஜீவிக்க எனக்குப் போதியும்.
சங்கீதம் 119:135 (புதிய மொழியாக்கம்)

உங்கள் வாழ்க்கையின் இலக்கு – தேவனுடைய புன்முறுவல்.

தேவனைப் பிரியப்படுத்துவதே உங்கள் வாழ்க்கையின் முதல் நோக்கமாக இருப்பதனால், அதை எப்படிச் செய்ய வேண்டுமென்று கண்டுபிடிப்பதுதான் உங்கள் முக்கிய பணியாக இருக்க வேண்டும். ***"கிறிஸ்துவைப் பிரியப்படுத்துவது என்ன என்பதைக் கண்டறிந்து பின்பு அதைச் செய்யுங்கள்"***[1] என வேதம் புத்திமதி கூறுகின்றது. அதிர்ஷ்டவசமாக, தேவனுக்கு மகிழ்ச்சியை கொண்டுவந்த ஒரு வாழ்க்கை உதாரணத்தை வேதத்தில் காண்கின்றோம். அந்த மனிதனின் பெயர் நோவா.

நோவாவின் நாட்களில், உலகமெங்கும் சன்மார்க்க நெறியற்றுப் போய்விட்டது. ஒவ்வொருவரும் தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று வாழாமல், தங்கள் மகிழ்ச்சிக்காகவே வாழ்ந்தார்கள். தம்மை மகிழ்விப்பதில் குறியாக இருந்த ***ஒருவரைக்கூட*** தேவன் காண முடியவில்லை. ஆகவே, அவர் துக்கப்பட்டு, மனிதனை உண்டாக்கியதற்காக மனஸ்தாபப்பட்டார். மனுக்குலத்தை முற்றிலும்

அழித்துப்போட வேண்டுமென்ற அளவுக்கு அவர் வெறுப்படைந்தார். ஆனால், ஒரே ஒருவன் மட்டும் தேவனைப் புன்னகைப்புரிய வைத்தான்; *"நோவா, தேவனுக்கு ஒரு மகிழ்ச்சியாயிருந்தான்"*[2] என வேதம் கூறுகின்றது.

"இந்த மனிதன் என்னை மகிழ்விக்கின்றான். என்னைப் புன்னகைப்புரிய வைக்கின்றான். நான் அவன் குடும்பத்தைக் கொண்டு மீண்டும் தொடங்குவேன்" என தேவன் கூறினார். நோவா தேவனுக்கு மகிழ்ச்சியூட்டியபடியால்தான் இன்று நீங்களும் நானும் உயிரோடிருக்கின்றோம். அவனுடைய வாழ்க்கையிலிருந்து, தேவனைப் புன்னகைப்புரிய வைக்கும், ஐந்து ஆராதனை செயல்களை காணலாம்.

மற்ற எல்லாவற்றையும்விட, நாம் அவரை அதிகம் நேசிக்கும்போது தேவன் மகிழ்ச்சி அடைகின்றார். *வேறு ஒருவரும்* தேவனை நேசிக்காத அந்த காலக்கட்டத்தில், நோவா, உலகத்தில் உள்ள வேறெதையும்விட, தேவனை அதிகமாக நேசித்தார். தனது வாழ்நாள் முழுவதும், *"நோவா கர்த்தரிட்ட சகல நியமங்களின்படியேயும் நடந்து, அவரோடு மிக நெருக்கமான ஒரு உறவு கொண்டிருந்தான்."*[3]

தேவன், இதைத்தான் உங்களிடம் மிக அதிகமாக எதிர்பார்க்கின்றார். ஒரு உறவு! அகில உலகத்திலும் இது பிரமிக்க வைக்கும் ஒரு சத்தியம் – நமது சிருஷ்டிகர் நம்முடன் உறவு கொள்ள விரும்புகின்றார். தம்மை நேசிக்கும்படிதான் தேவன் நம்மை உண்டாக்கினார். நாம் அவரை நேசிக்க வேண்டுமென்று அவர் வாஞ்சிக்கின்றார். *"உங்கள் பலிகள் எனக்கு விருப்பமில்லை- உங்கள் அன்புதான் எனக்கு வேண்டும்; எனக்கு உங்கள் காணிக்கை வேண்டாம் - நீங்கள் என்னை அறிந்துகொள்ளுவதையே நான் விரும்புகின்றேன்"*[4] என்று அவர் கூறுகின்றார்.

தேவனுடைய *தாகத்தை* இந்த வசனத்தில் உங்களால் உணர முடிகின்றதா? தேவன் உங்களை ஆழமாக நேசிக்கின்றார். உங்கள் அன்பைப் பிரதிபலனாக *எதிர்பார்க்கின்றார்.* நீங்கள் அவரையறிந்து அவருடன் நேரம் செலவழிக்க வேண்டுமென்று அவர்

வாஞ்சிக்கின்றார். அதனால்தான், தேவனை நேசிப்பதும் அவரால் நேசிக்கப்படுவதும் உங்கள் வாழ்க்கையின் மிகப்பெரிய நோக்கமாகும். அதற்கு ஈடாக வேறு எதுவும் அதிக முக்கியத்துவம் பெறாது. தேவன் அதையே மிகப்பெரிய கற்பனை என்று கூறுகின்றார். *"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு மனதோடும், உன் முழு ஆத்துமாவோடும் அன்புகூருவாயாக. இதுவே, பிரதான முதல் கற்பனை"*[5] என அவர் சொல்லியிருக்கின்றார்.

நாம் அவரை முற்றிலும் நம்பும்போது தேவன் மகிழ்ச்சி அடைகின்றார். நோவா, தேவனைப் பிரியப்படுத்தியதற்கான இரண்டாவது காரணம், அர்த்தமற்றதாகத் தெரிந்தாலும் கூட, நோவா தேவனை நம்பினான். *"விசுவாசத்தினாலே, வறண்ட நிலத்தின் மத்தியில், நோவா ஒரு பேழையை உண்டு பண்ணினான். காணாத ஒன்றைக் குறித்து எச்சரிப்பு பெற்றான். அதன்படியே செய்தான்... அதன் விளைவாக, நோவா தேவனுக்கு மிகவும் நெருக்கமானவனானான்"*[6] என வேதம் கூறுகின்றது.

உறவையே தேவன உங்களிடத்திலிருந்து அதிகமாக எதிர்பார்க்கின்றார்.

இந்தக் காட்சியைக் கற்பனை செய்து பாருங்கள்: ஒரு நாள் தேவன் நோவாவிடம் வந்து "நான் மனிதரில் ஏமாற்றமடைந்து விட்டேன். முழு உலகிலும் உன்னைத் தவிர எவரும் என்னை நினைப்பதில்லை. ஆனால் நோவா, நான் உன்னைப் பார்க்கும்போது, நான் புன்னகைப்புரிய ஆரம்பிக்கின்றேன். உன் வாழ்க்கை என்னை மகிழ்விக்கின்றது. நான் உலகத்தை வெள்ளத்தால் மூடப்போகின்றேன்; உன் குடும்பத்தைக்கொண்டு மீண்டும் உலகை ஆரம்பிக்கப் போகின்றேன். ஒரு பெரிய இராட்சதக் கப்பலை (பேழையை) உண்டாக்கு. அது உன்னையும் மிருக ஜீவன்களையும் காப்பாற்றும்" எனக் கூறினார்.

சந்தேகிக்கச் செய்யக்கூடிய மூன்று பிரச்சனைகள் நோவாவுக்கு இருந்தன. முதலில், நோவா மழையைப் பார்த்ததேயில்லை; ஏனெனில், வெள்ளத்திற்கு முன்னதாக, தேவன் பூமியிலிருந்து

எழுந்த மூடுபனியால்தான் பூமியை நனைத்தார்.[7] இரண்டாவதாக, நோவாவுக்கு அருகிலிருந்த சமுத்திரமே நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்தது. அப்படியே பேழையைக் கட்டக் கற்றுக் கொண்டாலும் அதை எப்படி நீருக்குக் கொண்டு போவது? மூன்றாவது, எல்லா மிருக ஜீவன்களையும் கூட்டிச் சேர்த்து, அவற்றைப் பராமரிக்க வேண்டும். நோவா சாக்குப்போக்குச் சொல்லவுமில்லை, குறை கூறவுமில்லை. தேவனை அப்படியே நம்பினான். அது அவரைப் புன்னகைப்புரிய வைத்தது. நமக்கு எது சிறந்ததென்று அவருக்குத் தெரியுமென்று தேவனை நம்புவதுதான் முற்றிலும் அவரை நம்புவதாகும். அவர் உங்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை அவர் காப்பார். பிரச்சனைகளில் உங்களுக்கு உதவி செய்வார். தேவையானால் நடக்கக் கூடாதவற்றையும் நடப்பிப்பார் என்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள். இதுவே முற்றிலும் நம்புவது. ***"தம்மை கனம் பண்ணுகிறவர்களில் அவர் பிரியப்படுகின்றார் (மகிழுகின்றார்); தமது மாறாத அன்பை நம்புகிறவர்களில் பிரியப்படுகின்றார்"***[8] என வேதம் கூறுகின்றது.



அந்தப் பேழையைத் தயாரிக்க நோவாவுக்கு 120 வருடங்களானது. அநேக மக்கள் அதைரியப்பட்டிருக்கக் கூடும். வருடாவருடம் மழைக்கான அறிகுறி எதுவுமில்லை – ஆகையால், "தேவன் தன்னிடம் பேசுவதாக எண்ணும் பைத்தியக்காரன்" என்று இரக்கமற்ற விதத்தில் விமர்சிக்கப்பட்டான். தங்கள் வீட்டின் முன் முற்றத்தில் கட்டப்பட்டுக் கொண்டிருந்த அந்த இராட்சதக் கப்பல் நோவாவின் பிள்ளைகளைக் கலவரப்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் நோவா, தேவன் மீதிருந்த நம்பிக்கையை இழக்கவில்லை.

உங்கள் வாழ்க்கையின் எப்பகுதிகளில் நீங்கள் தேவனை முற்றிலுமாக நம்ப வேண்டியதிருக்கின்றது? நம்பிக்கை என்பது ஆராதனையின் ஒரு செயல்பாடாகும். தங்களது அன்பு, ஞானம் ஆகியவற்றின் மீது பிள்ளைகள் நம்பிக்கை வைக்கும்போது எவ்வாறு பெற்றோர் சந்தோஷமடைகின்றார்களோ, அவ்வாறே நீங்களும் அவரில் வைத்திருக்கும் நம்பிக்கையில் தேவன்

சந்தோஷப்படுகின்றார். *''விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்''*[9] என வேதம் கூறுகின்றது.

முழு இருதயத்தோடு நாம் அவருக்குக் கீழ்ப்படியும்போது தேவன் புன்னகைப்புரிகின்றார். மிருக ஜீவன்களை உலகளாவிய வெள்ளத்திலிருந்து காப்பது என்பது ஒரு எளிதான காரியமல்ல. அதற்கு அதிக கவனம் செலுத்தி, நுணுக்கமாகக் காரியங்களைச் செய்ய வேண்டும். ***தேவன் எப்படி வரையறுத்திருந்தாரோ அதை அப்படியே*** நோவா செய்ய வேண்டும். தேவன், "நீ விரும்புகின்றபடி ஏதாவது ஒரு பழைய மாதிரி பேழையை செய், நோவா" என்று கூறவில்லை. அதன் வடிவம், அளவு, பயன்படுத்தப்படவேண்டிய பொருட்கள் எல்லாமே தேவனால் திட்டவட்டமாகக் கூறப்பட்டது. எத்தனை விதமான மிருக ஜீவன்கள் எந்தெந்த எண்ணிக்கையில் சேர்க்கப்படவேண்டுமென்பதும் கூறப்பட்டிருந்தது. ***"நோவா, கர்த்தர் தனக்குக் கட்டளையிட்டபடியே எல்லாவற்றையும் செய்தான்''***[10] என வேதம் கூறுகின்றது.

முற்றிலுமாக நோவா கீழ்ப்படிந்தான் என்பதைக் கவனியுங்கள் (ஒரு கட்டளைக்கூட செய்யாமல் விடப்படவில்லை). ***அப்படியே*** கீழ்ப்படிந்தான் (தேவன் அதைச் செய்யும்படி விரும்பிய நேரம், விரும்பிய முறை – அப்படியே நடந்தது). அதுதான் முழு இருதயத்துடன் கீழ்ப்படிவது. ஆகவே, தேவன் புன்னகை புரிந்ததில் ஆச்சரியமில்லை!

தேவன் உங்களிடம் இப்படி ஒரு இராட்சதக் கப்பலைச் செய்யச் சொன்னால், கொஞ்சம் கேள்விகளை கேட்டு, மறுப்புகளைத் தெரிவித்து, சில காரியங்களைக் குறித்து நமது அபிப்பிராயங்களை எழுப்பியிருப்போமல்லவா? நோவா அப்படி எதுவும் செய்யவில்லை. முழு இருதயத்தோடு தேவனுக்குக் கீழ்ப்படிந்தான். அதாவது, எதையும் பின் வைக்காமல், தயங்காமல் அப்படியே கீழ்ப்படிவது. அதைப்பின் தள்ளிப்போட்டு, "நான் அதைக் குறித்து ஜெபிப்பேன்" என்று கூறுவதில்லை. தாமதிக்காமல் உடனே செய்வது. தாமதித்துக் கீழ்ப்படிதல் கீழ்ப்படிதலே அல்ல என்பது பெற்றோருக்கு நன்றாகத் தெரியும்.

தேவன், தாம் செய்யும்படி உங்களிடம் கேட்கும் காரியங்களுக்கெல்லாம் அவர் உங்களுக்கு காரணம் கூறவோ, விளக்கமளிக்கவோ தேவையில்லை. புரிந்து கொள்ளுவதற்குக் காலமெடுக்கலாம். ஆனால், கீழ்ப்படிவதற்குக் காலம் எடுக்கக் கூடாது – தாமதிக்கக்கூடாது! வாழ்நாள் முழுவதும் கற்கும் வேத விவாதங்களைவிட, உடனடிக் கீழ்ப்படிதல் மூலம் அநேக காரியங்களைக் கற்றுக் கொள்ளக் கூடும். முதலாவது, கீழ்ப்படிந்தால் தான் சில கட்டளைகளைப் புரிந்து கொள்ள முடியும். கீழ்ப்படிதல், புரிந்து கொள்ளுதலைப் பெற்றுத் தருகிறது. அநேக சமயங்களில் நாம் தேவனுக்கு ***அரைகுறையாகக்*** கீழ்ப்படிகின்றோம். சில கட்டளைகளைப் பொறுக்கி எடுத்து, தெரிந்தெடுத்துக் கீழ்ப்படிய விரும்புகின்றோம். நமக்குப் பிடித்த கட்டளைகளைப் பட்டியலிட்டு, அவற்றிற்கு மாத்திரம் கீழ்ப்படிந்துவிட்டு – சரிவரக் கூடாதவை, கடினமானவை, அதிக செலவு உண்டாக்குபவை அல்லது மக்கள் மத்தியில் வரவேற்புப் பெறக்கூடாதவை என்று நாம் கருதும் கட்டளைகளை நாம் பொருட்படுத்துவதில்லை. சபைக்கு வருவேன். ஆனால், தசமபாகம் செலுத்தமாட்டேன்; வேதத்தை வாசிப்பேன். ஆனால், எனக்குத் தீங்கு செய்த மனிதனை மன்னிக்க மாட்டேன். இப்படிப்பட்ட அரைகுறைக் கீழ்ப்படிதல், கீழ்ப்படியாமையே ஆகும்.

உங்கள் வாழ்க்கைக்கு எது சிறந்ததென்பதை அவர் அறிவாரென்று விசுவாசிப்பதுதான் தேவனை முற்றிலும் நம்புவது.

முழு இருதயத்தோடு செய்யப்படும் கீழ்ப்படிதல், சந்தோஷத்தோடும் மகிழ்ச்சியோடும் செய்யப்படுகின்ற ஒன்று. ***"மகிழ்ச்சியுடன் அவருக்குக் கீழ்ப்படியுங்கள்"***[11] என்று வேதம் கூறுகின்றது. இதுவே, தாவீதின் மனப்பான்மையுங்கூட – ***"நான் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகின்றீரோ அதை எனக்குக் கூறும்; கர்த்தாவே, நான் அதைச் செய்வேன். நான் உயிரோடிருக்கு மளவும், முழு இருதயத்தோடும் உமக்குக் கீழ்ப்படிவேன்."***[12]

கிறிஸ்தவர்களிடம் பேசும்போது, யாக்கோபு: ***"நாம் திருவசனத்தை நம்புவதனாலல்ல, அதன்படி நடப்பதினாலேயே தேவனைப் பிரியப்படுத்துகின்றோம்"***[13] என்றார். நீங்கள் உங்கள் இரட்சிப்பை

சம்பாதிக்க முடியாதென்று தேவனுடைய வார்த்தை தெளிவாகக் கூறுகின்றது. அது உங்கள் முயற்சியினாலல்ல, கிருபையினால் மட்டுமே வரும். ஆனால், தேவனுடைய பிள்ளைகளாகிய நாம், நமது கீழ்ப்படிதல் மூலம் தேவனுக்கு இன்பத்தை கொண்டுவரலாம். எந்தவொரு கீழ்ப்படிதலும் ஆராதனையின் செயல்பாடுதான். கீழ்ப்படிதல் ஏன் அவ்வளவு சந்தோஷத்தை தேவனுக்கு கொண்டு வருகின்றது? ஏனெனில், நீங்கள் உண்மையாக அவரை நேசிக்கின்றீர்களென்று அது நிரூபிக்கின்றது. ***"நீங்கள் என்னை நேசித்தால் என் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிவீர்கள்"***[14] என இயேசுவானவர் கூறினார்.

நாம் இடைவிடாமல் தேவனைத் துதித்து அவருக்கு நன்றி கூறும்போது தேவன் புன்னகை புரிகின்றார். யாராவது ஒருவரிடமிருந்து மனதார பாராட்டும், புகழ்ச்சியும் பெறும்போது கிடைக்கும் நிறைவான உணர்வை மற்ற அநேக காரியங்கள் தர முடியாது. தேவனும் அதை விரும்புகின்றார். நாம் நமது நன்றியையும் பணிவான வணக்கத்தையும் அவருக்கு செயலில் காட்டும்போது, அவர் புன்னகைக்கின்றார். நோவா, நன்றியும் துதியும் ஏறெடுக்கும் உள்ளத்துடன் வாழ்ந்தபடியால், நோவாவின் வாழ்க்கை தேவனுக்கு மகிழ்ச்சியூட்டியது. வெள்ளத்திலிருந்து தப்பி கரைச்சேர்ந்தவுடனே நோவா செய்த முதல் காரியம் தன் நன்றியை வெளிப்படுத்தும்படி தேவனுக்குப் பலி செலுத்தியதுதான். ***"பின்பு நோவா, கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டினான்;... அதன்மேல் சர்வாங்க தகன பலியிட்டான்"***[15] என வேதம் கூறுகின்றது.

இயேசுவின் தியாகத்தினிமித்தம், நோவா செய்ததுபோல் நாம் இப்போது மிருகத்தை பலியிடுவதில்லை. அதற்குப் பதிலாக, நாம் தேவனுக்கு ***"ஸ்தோத்திர பலிகளையும்,"***[16] ***"நன்றி பலிகளையும்"***[17] செலுத்தும்படி கட்டளையிடப்பட்டிருக்கின்றோம். தேவன் ***யாராக இருக்கின்றார்*** என்பதை அடிப்படையாக வைத்து அவரைத் துதிக்கின்றோம். அவருக்கு நன்றி கூறும்போதோ, ***அவர் செய்த*** நன்மைகளை நினைத்து துதி செய்கின்றோம். ***"தேவனுடைய நாமத்தைப் பாட்டினால் துதித்து, ஸ்தோத்திரத்தினால் அவரை மகிமைப்படுத்துங்கள். அது கர்த்தருக்கு பிரியம்"***[18] என தாவீது கூறுகின்றார். தேவனுக்கு துதியும், ஸ்தோத்திர பலியும் நன்றியும்

ஏற்றெடுக்கும்போது ஒரு பிரமிக்கத்தக்க காரியம் நடைபெறுகின்றது – நாம் தேவனுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும்போது, நமது உள்ளங்களும் மகிழ்ச்சியால் நிறைகின்றது! எனக்காக உணவுகளைச் சமைத்து போடுவது என்னுடைய தாயாருக்கு மிகவும் விருப்பமான காரியம். எங்களுக்கு திருமணமான பின்னரும், நானும் என் மனைவி "கே"யும் எனது பெற்றோரை சந்திக்க செல்லும்போது, என்னுடைய தாயார், நம்ப முடியாத அளவுக்கு வாய்க்கு ருசியான உணவு வகைகளைத் தயாரித்து எங்களுக்கு அருளுவார்கள். அவர்கள் தயாரித்த உணவைப் பிள்ளைகளாகிய நாங்கள் சாப்பிடுவதைக் கவனிப்பது அவர்களுடைய மிகப்பெரிய மகிழ்ச்சி! நாங்கள் எந்த அளவுக்கு அதை விரும்பி, அனுபவித்து, சுவைத்தோமோ அந்த அளவுக்கு அவர்கள் அதிக மகிழ்ச்சியடைவார்கள்.

அதே நேரத்தில், அவர்களுடைய அருஞ்சுவை உணவைப் பற்றி பாராட்டி பேசியும் அம்மாவை மகிழ்விப்போம். இது இரு புறமும் கிரியை செய்கின்றது. நான் அந்த உணவை உண்ணும்போது, அதன் சுவையை வர்ணித்து அம்மாவை மகிழ்விப்பேன். உணவை அனுபவிப்பதை மட்டுமல்ல, என் அம்மாவை மகிழ்விப்பதையும் நான் விரும்பினேன். ஒட்டுமொத்தமாக, யாவரும் சந்தோஷமாக இருப்போம்.

அதேபோல, ஆராதனையும் இரு வழிகளில் கிரியை செய்கின்றது. தேவன் நமக்காக செய்ததை நாம் சந்தோஷமாக அனுபவிக்கின்றோம். இந்த மகிழ்ச்சியை நாம் தேவனுக்குத் தெரிவிக்கும்போது, அது அவருக்கு சந்தோஷத்தை கொண்டு வருகின்றது. நம்முடைய மகிழ்ச்சியும் அதிகரிக்கின்றது. ***"நீதிமான்களோ தேவனுக்கு முன்பாக மகிழ்ந்து களிகூர்ந்து ஆனந்த சந்தோஷமடைவார்கள்"***[19] என சங்கீத புத்தகத்தில் நாம் வாசிக்கின்றோம்.

நாம் நமது திறமைகளைப் பயன்படுத்தும்போது தேவன் புன்னகைப்புரிகின்றார். வெள்ளத்திற்குப் பிறகு தேவன் நோவாவுக்குப் பின்வரும் எளிய அறிவுரைகளைக் கூறினார்: ***"நீங்கள் பலுகிப் பெருகி பூமியை நிரப்புங்கள்... வாழுகின்ற,***

அசைகின்ற யாவும் உங்களுக்கு ஆகாரமாயிருப்பதாக. பசும் பூண்டுகளை உங்களுக்கு ஆகாரமாகக் கொடுத்ததுபோலவே, உங்களுக்கு எல்லாவற்றையும் கொடுத்தேன்."[20]

"உங்கள் ஜீவியத்தைத் தொடரும் காலம் வந்துவிட்டது! மனிதர் செய்ய வேண்டுமென்று நான் வடிவமைத்தவைகளைச் செய்யுங்கள்; உங்கள் வாழ்க்கைத் துணையை நேசியுங்கள்; குழந்தைகளைப் பெற்றெடுங்கள்; குடும்பங்களை கட்டி எழுப்புங்கள்; பயிர்களை நாட்டி, உணவை அருந்துங்கள். மனிதராயிருங்கள்! நான் இதற்காகத்தான் உங்களை உண்டாக்கினேன்!" என தேவன் கூறினார்.

உங்கள் வாழ்வின் ஒவ்வொரு அசைவையும் கவனிப்பதில் தேவன் மகிழ்ச்சியடைகின்றார்.

வேதம் வாசித்தல், சபை ஆராதனைக்குச் செல்லுதல், ஜெபித்தல், விசுவாசத்தை பிறரிடம் பகிர்ந்து கொள்ளுதல் போன்ற ஆவிக்குரிய நடவடிக்கைகளில் மட்டும்தான் தேவனை மகிழ்விக்கின்றோம் என்று நீங்கள் ஒருவேளை நினைக்கக்கூடும். அப்படியல்ல! உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு அசைவுகளையும், நிகழ்வுகளையும் காண்பதில் அவர் மகிழ்ச்சியடைகின்றார். நீங்கள் வேலை செய்து கொண்டிருந்தாலும், இளைப்பாறிக் கொண்டிருந்தாலும், சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும், உங்களுடைய ஒவ்வொரு அசைவையும் அவர் அனுபவித்து ரசிக்கின்றார். ஒன்றையும் அவர் காணாதிருப்பதில்லை. ***"நல்ல மனுஷருடைய நடைகள் கர்த்தரால் வழிநடத்தப்படும்; அவர்கள் வாழ்க்கையின் அனைத்துக் காரியங்களிலும் அவர் விருப்பப்படுகின்றார்"***[21] என வேதம் கூறுகின்றது.

பாவத்தைத் தவிர துதியின் மனப்பான்மையோடு நீங்கள் செய்யும் எச்செயலும் தேவனைப் பிரியப்படுத்த செய்யலாம் – சாப்பிடும் தட்டுகளைக் கழுவலாம்; பழுதுபட்ட இயந்திரத்தைப் பழுதுபார்க்கலாம்; ஒரு பொருளை விற்கலாம்; மின் கணினி நிகழ்ச்சி நிரல் ஒன்று எழுதலாம்; பயிர் வளர்க்கலாம்; தேவனுடைய மகிமைக்காக ஒரு குடும்பத்தைக் கட்டி எழுப்பலாம். பெருமைக்கொள்ளும் பெற்றோரைப்போல, தேவன் நமக்குக்

கொடுத்திருக்கும் தாலந்துகளையும் திறமைகளையும் நாம் பயன்படுத்துவதைப் பார்த்து அவர் மகிழ்ச்சியடைகின்றார். தமது மகிழ்ச்சிக்காக, தேவன் வெவ்வேறு தாலந்துகளை அருளிச் செய்திருக்கின்றார். சிலரை விளையாட்டு வீரராகவும், சிலரை பகுத்தறிவாளர்களாகவும் உண்டாக்கியிருக்கின்றார். இயந்திரங்கள் இயக்குவதில், கணிதத்தில் அல்லது இசையில் அல்லது இதுபோன்ற ஆயிரக்கணக்கானவற்றில் உங்களுக்குத் திறமைகள் இருக்கலாம். இத்திறமைகள் எல்லாமே தேவனுடைய முகத்தில் புன்னகையை வரவழைக்கும். *"ஒவ்வொருவரையும் அவர் உருவாக்கியிருக்கின்றார்; நாம் செய்யும் ஒவ்வொன்றையும் அவர் கவனிக்கின்றார்"*[22] என வேதம் கூறுகின்றது.

நாள் ஒன்பது:

தேவனைப் புன்னகைப்புரிய வைப்பது எது?

வேறு யாரோ ஒருவரைப்போல இருக்க முயற்சிப்பதால் அல்லது உங்கள் திறமைகளை மறைப்பதால், நீங்கள் தேவனுக்கு மகிமை அல்லது மகிழ்ச்சி கொண்டு வர முடியாது. நீங்கள் நீங்களாகவே இருந்தால்தான் அவருக்கு சந்தோஷம் கொடுக்க முடியும். உங்களில் எந்தவொரு பகுதியையாவது நீங்கள் நிராகரித்தால், நீங்கள் தேவனுடைய ஞானத்தையும் உங்களைப் படைத்ததிலுள்ள அவரது இராஜரீகத்தையும் நிராகரிக்கின்றீர்கள். ***"உங்கள் சிருஷ்டிகருடன் வாக்குவாதம் புரிய உங்களுக்கு உரிமை கிடையாது; நீங்கள் குயவனால் வடிவமைக்கப்படும் களிமண். ஏன் என்னை இப்படி உருவாக்கினாய்?" என்று களிமண் கேட்க முடியாது"***[23] என தேவன் கூறுகின்றார்.

"அக்கினி இரதங்கள்" (Chariots of Fire) என்ற ஆங்கில திரைப்படத்தில், ஒலிம்பிக் ஓட்டப்பந்தய வீரர் எரிக் லிடெல் கூறுகின்றார்: "தேவன் என்னை ஒரு நோக்கத்திற்காகப் படைத்திருக்கின்றார் என்று நம்புகிறேன். வேகமாக ஓடுகிறவனாக என்னை படைத்திருக்கின்றார். நான் ஓடும்போதெல்லாம் தேவனுடைய மகிழ்ச்சியை உணருகின்றேன்." மேலும் அவர் கூறியது, "ஓடுவதை நிறுத்துவதென்பது அவரை இகழ்வதாகும்." ***ஆவிக்குரியதல்லாத*** திறமைகள் என்று எதுவுமே கிடையாது; திறமைகளை தவறாகப் பயன்படுத்த கூடிய சாத்தியங்கள் உண்டு. உங்கள் திறமையை தேவனுடைய மகிழ்ச்சிக்காகப் பயன்படுத்த ஆரம்பியுங்கள்.

அவரது சிருஷ்டிப்பை நீங்கள் *கவனித்துப் பார்ப்பதை* தேவன் கண்டு மகிழ்ச்சியடைகின்றார். அழகை ரசிக்க உங்களுக்கு கண்களையும், ஒலியை ரசிக்க காதுகளையும், நறுமணம், சுவையை ரசிக்க மூக்கு மற்றும் நாவையும் தொடுதலை உணர்ந்து ரசிக்க தோலுக்குள் நரம்புகளையும் கொடுத்திருக்கின்றார். இப்படிப்பட்ட மகிழ்ச்சிகளை அனுபவிக்கும்போது தேவனைத் துதித்துக்கொண்டு அனுபவித்தால், அது ஒரு ஆராதனையாக மாறுகின்றது. *"நம்முடைய சந்தோஷத்திற்காகத் தேவன் எல்லாவற்றையும் தாராளமாக நமக்கு அருளுகின்றார்"*[24] என்று வேதம் கூறுகின்றது.

நீங்கள் தூங்குவதைப் பார்க்கும்போதுகூட தேவன் மகிழ்ச்சியடைகின்றார்! என் பிள்ளைகள் சிறியவர்களாக இருக்கும்போது, அவர்கள் தூங்குவதை நான் ஆழ்ந்த திருப்தியுடன் கவனிப்பதுண்டு. சில சமயங்களில் அந்த நாள் முழுவதும் பிரச்சனைகளைக் கொடுத்து கொண்டும், கீழ்ப்படியாமலும் இருந்திருக்கக்கூடும். ஆனால், தூக்கத்தின்போது அவர்கள் திருப்தியாக, பாதுகாப்பாக, அமைதியாகக் காணப்படும்போது, நான் அவர்களை எவ்வளவாக நேசிக்கிறேனென்று எனக்கு எண்ணம் வரும்.

நான் என் பிள்ளைகளை அனுபவிக்க, அவர்கள் எனக்காக எதுவுமே செய்யத் தேவையில்லை. அவர்கள் *சுவாசிப்பதைப்* பார்ப்பதே எனக்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். நான் அவர்களை அதிகமாக நேசிப்பதே அதற்குக் காரணம். அவர்கள் மூச்சுவிடும்போது அவர்களுடைய பிஞ்சு மார்புகள் மேலும் கீழும் ஏறி இறங்குவதைக் கண்டு என் முகத்தில் புன்முறுவல் ஏற்பட்டு என் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வடியும். நீங்கள் தூங்கும்போதும், தேவன் அன்புடன் உங்களைப் பார்க்கின்றார். ஏனெனில், நீங்கள் அவருடைய திட்டத்தின்படி படைக்கப்பட்டிருக்கின்றீர்கள். நீங்கள் ஒருவர் மட்டுமே இந்த உலகில் இருப்பதைப்போல அவர் உங்களை நேசிக்கின்றார்.

தங்கள் குழந்தைகள் குறையற்றவர்களாயிருந்தால்தான் நேசிக்கக்கூடும் அல்லது முதிர்ச்சியடைந்தால்தான் நேசிக்க முடியும் என்று பெற்றோர் எதிர்பார்ப்பதில்லை. ஒவ்வொரு வளர்ச்சிப் பருவத்திலும் அவர்கள் தங்கள் பிள்ளைகளை நேசிக்கின்றார்கள்.

அதுபோலவே, நீங்கள் முதிர்ச்சியடைந்த பின்னர்தான் உங்களை நேசிக்கக் கூடுமென்று தேவன் காத்திருக்க மாட்டார். உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர் உங்களைப் பார்த்து ரசித்து, நேசிக்கின்றார்.

ஒருவேளை, நீங்கள் வளர்ந்து வரும் காலத்தில், உங்களில் பிரியப்படாத ஆசிரியர்களோ அல்லது பெற்றோரோ உங்களுக்கு இருந்திருக்கலாம். தேவனும் உங்களைக் குறித்து அப்படி நினைப்பாரென்று யோசிக்க வேண்டாம். நீங்கள் பாவமில்லாத பூரணராக முடியாதென அவருக்குத் தெரியும். ***"நாம் எதினால் உண்டானவர்களென்று அவர் நிச்சயமாக அறிவார்; நாம் மண்ணென்று அவர் நினைவுகூருகின்றார்"***[25] என வேதம் கூறுகின்றது.

தேவன், உங்களில் உள்ள உங்களுடைய மனப்பான்மையையே பார்க்கின்றார். அவரைப் பிரியப்படுத்த வேண்டுமென்பதே உங்களின் ஆழமான ஆசையாக இருக்கின்றதா? ***"எல்லாவற்றையும்விட தேவனைப் பிரியப்படுத்துவதே மிக முக்கியம் – வீட்டிலோ அல்லது வேறு எங்காகிலும், தேவனையே பிரியப்படுத்த வேண்டும்"***[26] என்பதையே பவுல் தனது வாழ்வின் இலக்காகக் கொண்டிருந்தார். நித்தியத்தின் வெளிச்சத்தில் நீங்கள் உங்கள் வாழ்க்கையை வாழ ஆரம்பித்துவிட்டால், "வாழ்க்கையிலிருந்து எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி கிடைக்கும்?" என்று கேட்பதை நிறுத்தி, "தேவன், என் வாழ்க்கை மூலம் எவ்வளவு சந்தோஷமடைகின்றார்?" என்று கேட்க ஆரம்பித்துவிடுவோம்.

இந்த இருபத்தோராம் நூற்றாண்டில், தேவன், நோவாவைப் போன்ற மக்களைத் தேடிக் கொண்டிருக்கின்றார். ***"தேவனைப் பிரியப்படுத்த வேண்டுமென்ற ஞானம் உள்ளவர்களிருக்கிறார்களோ என்று கண்டுபிடிக்கக் கர்த்தர் வானத்திலிருந்து மனுக்குலத்தை கண்ணோக்கிப் பார்க்கின்றார்"***[27] என வேதம் கூறுகின்றது.

தேவனைப் பிரியப்படுத்துவதை உங்கள் வாழ்க்கையின் இலக்காகக் கொள்ளுவீர்களா? முற்றிலுமாக இந்த இலக்குடையவர்களுக்குத் தேவன் செய்யக்கூடாத காரியம் எதுவுமே இல்லை.

நாள் ஒன்பது
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் அவரை நம்பும்போது தேவன் புன்னகை புரிகின்றார்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"தம்மை ஆராதித்து தம் அன்பில் நம்பிக்கை வைக்கிறவர்கள் மேல் கர்த்தர் பிரியமாக இருக்கின்றார்"*** சங்கீதம் 147:11. (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: எது சிறந்ததென்று தேவன் நன்றாக அறிந்திருக்கின்றபடியினால் இன்னும் என் வாழ்க்கையின் எந்தெந்த பகுதிகளில் நான் அவரை அதிகமாக நம்ப வேண்டியுள்ளது?

10

ஆராதனையின் மையப் பகுதி

உங்களையே தேவனுக்குக் கொடுத்துவிடுங்கள்... நீதியுள்ள காரியங்களுக்குப் பயன்படுத்தப்படும்படி உங்கள் முழுமையையும் அவருக்கு அர்ப்பணியுங்கள்.
ரோமர் 6:13 (புதிய மொழியாக்கம்)

ஆராதனையின் இதயம் போன்ற பகுதி, அர்ப்பணிப்பு.

அர்ப்பணிப்பு என்ற வார்த்தை, ***அடங்கியிருத்தல்*** என்ற வார்த்தை எவ்வளவாக வெறுக்கப்படுகின்றதோ அதே அளவு வெறுக்கப்படும் ஒரு வார்த்தை. இச்சொற்கள், ***இழத்தல்*** என்ற அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன. யாரும் எதையும் இழக்க விரும்புவதில்லை. யுத்தத்தில் தோல்வி, பந்தயத்தில் இழப்பு, தன்னிலும் வலுவான ஒரு எதிரிக்கு அடங்கிப் போகுதல் போன்ற விரும்பத்தகாத காட்சிகளை இந்த வார்த்தை நம் மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகின்றது. இந்த வார்த்தை, பொதுவாக, எதிர்மறை அர்த்தத்தோடேயே பயன்படுத்தப்படுகின்றது. கைது செய்யப்பட்ட குற்றவாளிகள், அதிகாரிகளுக்கு அடங்கி, அர்ப்பணித்து விடுகின்றார்கள்.

இன்றைய போட்டி நிறைந்த கலாச்சாரத்தில், நாம் ஒருபோதும் விட்டுக் கொடுக்கக்கூடாது, இடங்கொடுத்து விடக்கூடாது என்றே கற்பிக்கப்படுகின்றோம். ஆகவேதான், அர்ப்பணிப்பு என்ற வார்த்தையை நாம் அதிகம் கேள்விப்படுவதில்லை. ஜெயிப்பதுதான் எல்லாமென்றால், அர்ப்பணித்து அடங்கிப்போகுதல், ***சிந்தித்துப் பார்க்கக் கூடாத காரியமாகி விடுகின்றது***. விட்டுக்கொடுத்தல்,

கீழ்ப்படிதல், சரணடைதல், மற்றவர்களின் கைகளில் நம்மை ஒப்புவித்தல் போன்ற சொற்களைவிட வெற்றியடைதல், நிறைவேற்றுதல், மேற்கொள்ளுதல், கைப்பற்றுதல் ஆகிய சொற்களைப் பற்றியே அதிகம் பேச விரும்புகின்றோம். ஆனால், தேவனுக்கு அர்ப்பணித்து விடுதல்தான் ஆராதனையின் மையப்பகுதி – ஆராதனையின் "இருதயம்". இதுவே, தேவனுடைய மகத்துவமான அன்புக்கும், இரக்கத்திற்கும் நாம் கொடுக்கக்கூடிய சரியான மாறுத்தரம். பயத்தினால் அல்லது கடமையினால் அல்லாதபடிக்கு, *"தேவன் நம்மில் முந்தி அன்புகூர்ந்தபடியால்"*[1] நம்மையே அவருக்கு விட்டுக்கொடுக்கும் ஓர் அர்ப்பணிப்பு.

ரோமர் நிருபத்தில், பதினொரு அதிகாரங்களில் தேவனுடைய நம்பக்கூடாத அளவு வெளிப்பட்ட கிருபையைக் குறித்துப் பேசும் பவுல், அதன்பின் நம்மை முழுமையாக ஆராதனையில் தேவனுக்கு அர்ப்பணிக்குமாறு பின்வரும் வார்த்தைகளினால் வற்புறுத்துகின்றார்: ***''ஆகவே, எனக்குப் பிரியமானவர்களே, தேவன் நம்மீது வைத்திருக்கும் மகா பெரிய கிருபையினால்... தேவனுக்குப் பிரியமானதும், அவருக்கு முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்டதுமான ஜீவ பலியாக உங்களையே ஒப்புக்கொடுங்கள். இதுவே, நீங்கள் கொடுக்கவேண்டிய உண்மையான ஆராதனை.''***[2]

உண்மையான ஆராதனை – தேவனுக்கு இன்பம் கொண்டு வரக்கூடிய செயல் – நீங்கள் உங்களையே முற்றிலும் தேவனுக்குக் கொடுக்கும்போதுதான் உண்டாகின்றது. மேற்குறிப்பிட்ட வசனத்தில், ***''ஒப்புக்கொடுங்கள்''*** என்ற வார்த்தையும் ***"அர்ப்பணிக்கப்பட்டதுமான"*** என்ற வார்த்தையும் பயன்படுத்தப் பட்டிருப்பதை கவனியுங்கள்.

உங்களை முழுமையாக தேவனுக்கு விட்டுக்கொடுப்பதுதான் ஆராதனை!

இப்படித் தனிப்பட்ட விதத்தில் ஒப்புக்கொடுப்பதைக் குறிக்கும் அநேக வார்த்தைகளுண்டு: தன்னையே கொடுத்தல், இயேசுவை உங்கள் ஆண்டவராக்குதல், உங்கள் சிலுவையை எடுத்துக் கொள்ளுதல், சுயத்திற்கு மரித்தல், ஆவியானவருக்குத் திறந்து இடமளித்தல் போன்றவை அவ்வார்த்தைகளாகும். எப்படிப்பட்ட

வார்த்தைகளை உபயோகிக்கின்றோம் என்பதல்ல, எப்படி இவைகளை நம் வாழ்வில் செயல்படுத்துகின்றோம் என்பதையே நாம் அதிகமாய் கருத்தில் கொள்ள வேண்டும். தேவனுக்கு உங்கள் வாழ்க்கை முழுமையாக வேண்டும் – 95% அல்ல, முழுவதும்!

ஆராதனை என்பது உங்களையே தேவனுக்கு ஒப்புக்கொடுப்பது.

தேவனுக்கு நாம் நம்மை முற்றிலும் அர்ப்பணிக்க தடையாக இருப்பது மூன்று காரியங்கள்: பயம், பெருமை, குழப்பம். தேவன் நம்மை எவ்வளவாக நேசிக்கிறாரென்பதை அறியாமலிருக்கின்றோம். நமது வாழ்க்கையை நாமே கட்டுப்படுத்த விரும்புகின்றோம். அர்ப்பணித்தல் என்ற வார்த்தைக்கு நமக்கு சரியான பொருள் தெரியவில்லை.

நான் தேவனை நம்பக்கூடுமா? அர்ப்பணிப்புக்கு அத்தியாவசியமான ஒரு காரியம், நம்பிக்கை. தேவனை நீங்கள் நம்பாவிட்டால், நீங்கள் உங்களை முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணிக்க முடியாது. ஆனால், அவரை நன்றாக அறியாமல், நீங்கள் அவரை நம்ப முடியாது. நம்மை அர்ப்பணிக்க முடியாமல் பயம் தடுக்கின்றது – ஆனால், ***அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்.*** தேவன் உங்களை நேசிக்கிறாரென்பதை எந்த அளவுக்கு உணருகின்றீர்களோ, அந்த அளவுக்கு அர்ப்பணித்தல் எளிதாகும்.

தேவன் உங்களை நேசிப்பதை எப்படி அறிந்து கொள்ளுவீர்கள்? அநேக ஆதாரங்களை அவர் உங்களுக்குக் கொடுக்கின்றார். நான் உங்களை நேசிக்கின்றேன் என்று கூறுகின்றார்;[3] உங்கள் மேல் எப்போதும், தமது கண்ணை வைத்திருக்கின்றார்;[4] உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்தையும் குறித்து அவர் கரிசனை கொள்ளுகின்றார்;[5] எல்லாவிதமான காரியங்களையும் அனுபவிக்கும் திறனை உங்களுக்குக் கொடுத்திருக்கின்றார்;[6] உங்கள் வாழ்க்கைக்குரிய பல நல்ல திட்டங்களை அவர் வைத்திருக்கின்றார்;[7] உங்களை மன்னிக்கின்றார்;[8] மிகவும் அன்புடன் உங்கள் மீது நீடிய பொறுமையுள்ளவராக இருக்கின்றார்.[9] நீங்கள் கற்பனை செய்து பார்க்கக்கூடாத அளவுக்கு மிக அதிகமாக தேவன் உங்களை நேசிக்கின்றார்.

தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து உங்களுக்காக பலியானபோது அந்த அன்பின் மிகப் பெரிய வெளிப்பாடு பகிரங்கமானது. *"நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார்."*[10] எந்த அளவுக்கு தேவன் உங்களை நேசிக்கிறாரென்பதை நீங்கள் அறிய விரும்பினால், தமது இரு கரங்களையும் அப்படியே விரித்தவராக சிலுவையில், "இந்த அளவுக்கு உன்னை நேசிக்கின்றேன்; நீ இல்லாமல் வாழ்வதைவிட, உனக்காக மரிப்பதையே நான் தெரிந்துகொள்ளுகின்றேன்" என்று கூறியவராக இயேசு தொங்குவதைப் பாருங்கள்.

நாம் எப்படியாவது அவருக்கு கீழ்ப்படிய வேண்டும் என்பதற்காக அடிமைகளைப்போல கொடுமையாக நடத்தும் ஓர் எஜமானனைப் போலவோ அல்லது பலாத்காரத்தைப் பிரயோகிக்கும் ஒரு முரடனைப் போலவோ அவர் நம்மை நடத்துவதில்லை. நமது சுய சித்தத்தை அவர் வலுக்கட்டாயமாக உடைத்தெறிபவரல்ல. நாம் முழு மனதோடு நம்மையே அர்ப்பணிக்கும் விதத்தில் நம்மீது அன்புகூருகின்றவர். தேவன் அன்புள்ளவர்; விடுதலையளிக்கின்றவர்; எனவே, அவருக்கு நம்மை அர்ப்பணிப்பதனால் விடுதலையைத்தான் அனுபவிப்போமே தவிர, அடிமைத்தனத்தை அல்ல. இயேசுவுக்கு நாம் நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்கும்போது, அவரை ஒரு கொடுங்கோல் அரசனாக அல்ல, ஒரு இரட்சகராகத்தான் காண்போம்; ஒரு எஜமானனாக அல்ல, ஒரு சகோதரனாகவே கண்டுகொள்ளுவோம்; ஒரு சர்வாதிகாரியாக அல்ல, ஒரு நண்பராக வெளிப்படுவதை நாம் காண்போம்.

நம்முடைய வரையறைகளை ஏற்றுக்கொள்ளுதல். நம்மை முற்றிலும் ஒப்புக்கொடுக்க விடாமல் தடை செய்கின்ற இரண்டாவது காரியம் – பெருமை. நாம் ஒரு சிருஷ்டிப்பு என்பதையும், எல்லாவற்றின் மேலும் அதிகாரிகள் அல்ல என்பதையும் ஏற்றுக்கொள்ள நாம் விருப்பமற்றவர்களாக இருக்கின்றோம். இது ஆதிகாலத்தில் மனிதனுக்கு ஏற்பட்ட ஒரு சோதனை. ***"நீங்கள் தேவனைப்போல இருப்பீர்கள்!"***[11] முழுவதையும் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரவேண்டும் என்ற அந்த ஆசை – அதுவே, நமது வாழ்க்கையில் அநேக அழுத்தங்களுக்குக் காரணம். வாழ்க்கை ஒரு போராட்டம். ஆனால், நம்மில் அநேகர்

உணராதிருக்கும் ஒரு காரியம் – நமது போராட்டமும் யாக்கோபின் போராட்டத்தைப்போல, தேவனோடுள்ள போராட்டம்! நாமே "தேவனாக" விரும்புகின்றோம். நம்மால் அந்தப் போராட்டத்தில் நிச்சயம் வெற்றிக் காணவே முடியாது.

"அநேகர் இன்னும் கலக்கமடைந்து, தேடிக்கொண்டு, மிகக் குறைந்த அளவுகூட முன்னேற்றமின்றி, தடுமாறிக் கொண்டிருப்பதற்குக் காரணம், அவர்கள் இன்னும் 'தங்களுடைய முடிவுக்கு' வரவில்லை ('நான்' என்ற காரியம் இன்னும் முடிவுக்கு வரவில்லை). நாம் இன்னும் நமக்குள்ளே கிரியை செய்து கொண்டிருக்கின்ற தேவனுடன் தலையிட்டுக் கொண்டு, அதிகாரம் செய்ய முற்படுகின்றோம்" என்று A.W. டோசர் இவ்வாறு கூறினார்:

நாம் தேவனல்ல; அப்படி ***ஒருபோதும்*** ஆகவும் முடியாது. நாம் மானிடர். நாம் தேவனாக முயற்சிக்கும்போதுதான், அதே முயற்சியில் ஈடுபட்ட சாத்தானைப்போல நாம் மாறிவிடுகின்றோம்.

நாள் பத்து:

ஆராதனையின் மையப் பகுதி

அறிவுபூர்வமாக நாம் மனிதரென்பதை ஏற்றுக்கொள்ளுகின்றோம். ஆனால், உணர்வுபூர்வமாக நாம் ஏற்றுக்கொள்ளுவதில்லை. நமது எல்லைகள் கட்டுப்படுத்தப்படும்போது, கோபத்தோடும், சினத்தோடும், ஆத்திரத்தோடும் நடந்து கொள்ளுகின்றோம். நமக்கு இப்போது இருப்பதைவிட அதிக வளர்த்தியாக (அல்லது குள்ளமாக), புத்திசாலியாக, பலசாலியாக, தாலந்து கொண்டவர்களாக வேண்டுமென்று விரும்புகின்றோம். எல்லாம் வேண்டும், எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற ஆசை நமக்கு வருகின்றது – பின்னர், அது நடக்காவிட்டால், நாம் நிலைகுலைந்து விடுகின்றோம். அதோடுகூட, நாம் விரும்பும் இக்காரியங்களைப் பிறருக்கு தேவன் அளித்திருப்பதைக் காணும்போது நமக்கு சுய – பரிதாபம், பொறாமை, வைராக்கியம் போன்ற உணர்வுகள் மேலிடுகின்றது.

அர்ப்பணித்தல் என்பதன் அர்த்தம் என்ன? தேவனுக்கு அர்ப்பணித்தல் என்பது ஏதோ செயலற்று அப்படியே அடங்கிப் போகும் ஒரு நிலையோ அல்லது சோம்பேறியாக இருப்பதற்கான

ஒரு சாக்குப்போக்கு நிலையோ அல்ல. “ஆனது ஆகட்டும், போனது போகட்டும்; தலையெழுத்து – என்ன செய்வது'' என்ற விறுவிறுப்பற்ற, மந்த நிலையோடு வாழ்க்கையை அணுகும் ஒரு நிலையும் இது அல்ல. மாறாக, சொல்லப்பட்ட



காரியங்களுக்கு நேர் எதிரான கருத்துக்களாக இவை இருக்கின்றன. அதாவது, மாற்றப்பட வேண்டியதனை மாற்றிக் கொள்ளுவதற்காக உங்களுடைய வாழ்க்கையை தியாகம் செய்தல் அல்லது அதற்காகத் துன்பம் அனுபவித்தல் போன்றவை. தமக்காக யுத்தம் பண்ணும்படி தேவன் சரணடைந்த (அர்ப்பணித்த) மக்களை அடிக்கடி அழைக்கின்றார். அர்ப்பணித்தல் என்றால் கோழைகளுக்கும், கீழே மிதிக்கப்படும் கால் மிதி போன்றவர்களுக்கும் உரியதல்ல; அதுபோலவே, காரண காரியங்களை ஆராயும் சிந்தனையே இல்லாமல் போவதுமல்ல; தேவன் உங்களுக்கு அளித்த மனது, சிந்தை – இவை யாவும் வீணாகப் போக அனுமதிக்க மாட்டாரே! இயந்திர மனிதர்களாக நாம் அவரைச் சேவிக்க வேண்டுமென்று தேவன் விரும்பவே இல்லை. அர்ப்பணிப்பு என்பது, உங்களின் தனித்தாள் சுபாவத்தைச் செயலற்றுபோகப் பண்ணுவதுமல்ல; உங்களுக்கு தேவனளித்த தனிச்சிறப்பு கொண்ட தனித்தாள் சுபாவத்தை நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்றுதான் தேவன் விரும்புகின்றார். உங்கள் தனிப்பட்ட சுபாவத்தை (ஆள்தத்துவத்தை) அர்ப்பணிப்பு அடக்கிப்போடாது. மாறாக, அதை இன்னுங்கொஞ்சம் தனித்து சிறக்கப்பண்ணும். ‘‘எவ்வளவு அதிகமாகத் தேவன் நம்மை ஆட்கொள்ள அனுமதிக்கின்றோமோ, அந்த அளவுக்கு அதிகமாக நமது தனித்தாள் சுபாவம் அதிகரிக்கும். ஏனெனில், அவரே நம்மை உண்டாக்கினார். நீங்களும், நானும் எப்படியிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினாரோ அப்படியே வெவ்வேறு வகையான மக்களையும் உருவாக்கினவர் அவரே. நான் எப்பொழுது, கிறிஸ்துவண்டை திரும்புகிறேனோ, அவருடைய தனித்தாள் சுபாவத்திற்கு முதலாவது, என்னை எப்போது ஒப்புவிக்கிறேனோ அப்பொழுதுதான், எனக்கென்று நான் ஒரு தனித்தாள் சுபாவத்தைப் பெற்றுக் கொள்ளுகிறேன்?” என்று C.S.லூவிஸ் கூறினார்.

முற்றிலும் அர்ப்பணித்தல் என்ற காரியம் கீழ்ப்படிதல் மூலமாகத் தான் சிறப்பாக வெளிப்படுத்தப்படுகின்றது. அதாவது, அவர் கேட்கும் எதற்கும் நீங்கள், "ஆம், சரிதான், ஆண்டவரே" என்று கூறுகின்றீர்கள். "இல்லை, வேண்டாம் ஆண்டவரே" என்று கூறுவது முரண்பாடு. அவருக்குக் கீழ்ப்படிய மறுத்துக்கொண்டு, இயேசுவை உங்கள் ஆண்டவரென்று கூறுவது கூடாத காரியம். ஒரு இரவு முழுவதும் மீன் பிடிக்க முயற்சி செய்து தோல்வியடைந்த பின்னர், மீண்டும் ஒருமுறை முயற்சிக்குமாறு இயேசு கூறியதும், கீழ்ப்படிந்த பேதுரு, அர்ப்பணிப்புக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கின்றார். ***"ஐயரே, இராமுழுவதும் பிரயாசப்பட்டும் நாங்கள் ஒன்றும் பிடிக்கவில்லை; ஆயினும், நீர் சொல்லுகிறபடியால், உமது வார்த்தையின்படியே நான் வலையைப் போடுகின்றேன்."***[12] அர்த்தமற்றதாகத் தோன்றினாலும், அர்ப்பணித்த மக்கள் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிகின்றார்கள்.

முற்றிலும் அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் இன்னொரு அம்சம் – நம்பிக்கை. தான் ***எங்கே*** போக வேண்டுமென்று தெரியாதிருந்தும், ஆபிரகாம் தேவனுடைய நடத்துதலை முற்றிலும் பின்பற்றினான். ***எப்பொழுது*** என்றே தெரியாமல், அன்னாள் தேவனுடைய சரியான நேரத்திற்காகக் காத்திருந்தாள். ***எப்படி*** நடக்குமென்றே தெரியாமல் மரியாள் அற்புதத்திற்காகக் காத்திருந்தாள். காரியங்கள் ***ஏன்*** இப்படி நடக்கின்றன என்று அறியாமலேயே யோசேப்பு, தேவனுடைய நோக்கத்திற்காகக் காத்திருந்தான். இவர்கள் ஒவ்வொருவரும் தேவனுக்கு முற்றிலுமாகத் தங்களை அர்ப்பணித்தவர்கள். பிறரை நாம் விரும்புகின்றபடி செயல்பட வைக்க முயற்சிக்காமல், உங்கள் நிகழ்ச்சித் திட்டங்களைப் பிறர் மீது கட்டாயமாகத் திணிக்காமல், எந்த ஒரு சூழ்நிலையையும் கட்டுப்படுத்த முயலாமல், தேவன் மீது சார்ந்திருப்பதுதான், நீங்கள் தேவனுக்கு உங்களை அர்ப்பணித்திருக்கின்றீர்கள் என்று காண்பிக்கும் ஓர் அடையாளமாகும். நீங்கள் விட்டுக்கொடுத்து, தேவனைச் செயல்பட விடுகின்றீர்கள். நீங்களே எப்போதும் "பொறுப்பில்" இருக்க வேண்டிய அவசியமில்லை. ***"கர்த்தருக்கு உங்களை அர்ப்பணித்து பொறுமையுடன் காத்திருங்கள்"***[13] என்று வேதம் கூறுகின்றது. இன்னும் அதிகமாக முயற்சிப்பதற்குப் பதிலாக, நீங்கள் இன்னும்

அதிகமாக நம்புகின்றீர்கள். உங்களைப் பற்றிச் செய்யப்படும் விமர்சனங்களுக்கு எதிர்விளைவை ஏற்படுத்தாமலும், உங்களை நீதிமானாக்க முற்படாமலும் இருக்கும்பொழுது நீங்கள் உங்களைத் தேவனுக்கு அர்ப்பணித்து விட்டதை அது காண்பிக்கும். அர்ப்பணிக்கப்பட்ட இருதயங்கள் உறவுகளில் வெளிப்படுகின்றன. பிறரை அலட்சியமாக எண்ணி ஒதுக்காமல், உங்கள் உரிமைகளுக்காகப் போராடாமல், உங்களை நீங்களே சேவிக்காமல் இருப்பீர்கள்.

எல்லாவற்றையும்விட, அர்ப்பணிக்க மிகவும் கடினமாகத் தோன்றுவது, பணம். தங்களுடைய பணத்தை அர்ப்பணிப்பது அநேகருடைய வாழ்க்கையில் மிகவும் கடினமானதொரு பகுதியாக இருக்கின்றது. "ஓய்வு காலத்திற்காகவும், சௌகரிய வாழ்வுக்காகவும் தேவையான பணத்தை முதலாவது சம்பாதித்து சேர்த்துவிட்டு பின்பு தேவனுக்காக வாழ விரும்புகின்றேன்" என்பதுவே அநேகருடைய எண்ணமாயிருக்கின்றது. அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் இலக்கு ஓய்வு பெறுதல் அல்ல. ஏனெனில், தேவன் மீதுள்ள நமது அடிப்படை ஆரம்ப கவனத்தை அது திசை திருப்பப் போட்டியிடுகின்றது. ***"தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது"***[14] என்றும், ***"உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கின்றதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்"***[15] என்றும் இயேசு கூறினார்.

தன்னையே அர்ப்பணித்தமைக்குப் பிரதான முன் மாதிரி, இயேசு. சிலுவை மரணத்திற்கு முந்தைய இரவு, இயேசு, தம்மையே தேவ திட்டத்திற்கு ஒப்புக்கொடுத்தார். ***"பிதாவே, உமக்கு எல்லாம் கூடும். இந்தப் பாத்திரத்தை என்னை விட்டு எடுத்துப்போட உம்மாலாகும்; ஆயினும், என் சித்தமல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது"***[16] என்று ஜெபித்தார்.

இயேசு, "உம்மால் இந்தப் பாத்திரத்தை, சோதனையை, எடுத்துப்போடக் ***கூடுமானால்*** தயவாக எடுத்துப் போடும்" என்று ஜெபிக்கவில்லை. தேவனால் எல்லாம் கூடுமென்பதை அவர் ஏற்கனவே உறுதிப்படுத்திவிட்டார்! மாறாக, "பிதாவே, இந்தத் துன்பத்தை நீக்கிப் போடுவது ***உமக்கு*** உகந்த காரியமாயிருக்குமானால், தயவு செய்து நீக்கிவிடும். ***ஆனால்,***

அதுதான் *உமது* சித்தத்தை நிறைவேற்றக் கூடிய காரியமாயிருந்தால், அதை நீர் ***எடுத்துப்போட வேண்டாம்"*** என்று கூறி இயேசு ஜெபித்தார். இந்த அளவு முதிர்ச்சி எளிதில் வருவதில்லை. அர்ப்பணிப்பு கடினமானது. நம்மைப் பொருத்தமட்டில் அர்ப்பணிப்பு என்பது நமது சுயத்தை மையமாகக் கொண்ட சுபாவத்திற்கு எதிரான கடுமையான போராட்டம் அது.

அர்ப்பணிப்பின் ஆசீர்வாதம். நீங்கள் உங்களை முற்றிலும் தேவனுக்கு அர்ப்பணிக்கும்போது பெற்றுக் கொள்ளக்கூடிய நன்மைகளைக் குறித்து வேதாகமம் தெள்ளத்தெளிவாகக் கூறுகின்றது. முதலில், உங்களுக்கு மன சமாதானம்: *"தேவனோடு போர் செய்கிறவர்களாகக் காணப்படாதிருங்கள். நீங்கள் அவருக்கு இசைந்து போனால், உங்களுக்கு சமாதானம் கிடைக்கும். சகலமும் நன்மைக்கேதுவாக இருக்கும்.*[17] அடுத்து, நீங்கள் விடுதலையடைவீர்கள்: ***"தேவனுடைய வழிகளுக்கு உங்களை ஒப்புக் கொடுங்கள், நீங்கள் சமாதானம் பெறுவீர்கள்... அவருடைய கட்டளைகள், நீங்கள் அவருடைய சுதந்தரத்தில் நிலைத்திருக்கும்படி, உங்களை விடுதலையாக்கும்."***[18] மூன்றாவதாக, உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையை உணருவீர்கள், அனுபவிப்பீர்கள். பிடிவாதமான சோதனைகளும், திக்குமுக்காட வைக்கும் பிரச்சனைகளும் கிறிஸ்துவிடம் கொடுக்கப்பட்டால் அவை தோல்வியடையும், தீர்ந்துபோகும்.

யோசுவா, தனது வாழ்க்கையின் மிகப்பெரிய யுத்தத்தை அணுகியபோது,[19] தேவனை தரிசித்து, அவர்முன் விழுந்து பணிந்து, தன் திட்டங்களை ஒப்புவித்தான். அந்த அர்ப்பணிப்பு, செயலற்று நிற்க வைக்குமளவுக்கு எரிகோவில் வெற்றியை தேடித் தந்தது. முரண்பாடு இதுதான்: அர்ப்பணிப்பில் வெற்றி கிட்டுகின்றது. இந்த அர்ப்பணிப்பு உங்களைப் பலவீனப்படுத்தாது; அது உங்களைப் பலப்படுத்துகின்றது. தேவனுக்கு உங்களை அர்ப்பணித்துவிட்டால் வேறு எதற்கும் சரணடையவோ, பயப்படவோ தேவையில்லை. "ஒரு மனிதன் எந்த அளவுக்குத் தன்னை அர்ப்பணிக்கின்றானோ அந்த அளவுக்கு வல்லமையில் பெரியவனாக இருப்பான்" என்று இரட்சண்ய சேனையின் ஸ்தாபகர் வில்லியம் பூத் கூறினார்.

அர்ப்பணிக்கப்பட்ட மக்களையே தேவன் பயன்படுத்துகின்றார். இயேசுவின் தாயாக இருக்கும்படி மரியாளைத் தேவன்

தெரிந்தெடுத்தார் – அவள் தாலந்து பெற்றவள், அழகானவள், செல்வம் நிறைந்தவள் என்பதற்காக அல்ல, அவள் முற்றிலுமாகத் தன்னை அவருக்கு அர்ப்பணித்தபடியால் தேவன் அவளைத் தெரிந்து கொண்டார். நடக்கக்கூடாத அந்தத் திட்டத்தை தேவ தூதன் அவளுக்கு விவரித்துக் காட்டியபோது, அவள் பதட்டமடையாமல், ***"நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது"***[20] என்றாள். தேவனுடைய கரத்தில் அர்ப்பணிக்கப்பட்ட பாத்திரத்தைப்போல வல்லமையுடையது வேறெதுவும் கிடையாது. ***"ஆகவே, உங்களை முற்றிலுமாகத் தேவனுக்கென்று ஒப்புக்கொடுங்கள்."***[21]

வாழ்வதற்கான சிறந்த வழி. ஒவ்வொருவரும் யாராவது ஒருவருக்கு அல்லது ஏதாவது ஒன்றுக்கு, இறுதியில், தங்களை அர்ப்பணிக்கின்றனர். நீங்கள் உங்களை தேவனுக்கு அர்ப்பணிக்காவிட்டால், மற்றவர்களுடைய கருத்துக்களுக்கோ, பணத்திற்கோ, வைராக்கியத்திற்கோ, பயத்திற்கோ, சுய பெருமைகளுக்கோ, இச்சைகளுக்கோ அல்லது சுய கௌரவத்திற்கோ அர்ப்பணிக்கின்றீர்கள். நீங்கள் தேவனை ஆராதிப்பதற்காகவே வடிவமைக்கப்பட்டீர்கள். ஆனால், அவரை ஆராதிக்கத் தவறினால், நீங்கள் உங்களுக்காக வேறு காரியங்களை (விக்கிரகங்களை) உண்டாக்கி, உங்களை அதற்கு அர்ப்பணிப்பீர்கள். தெரிந்தெடுக்கும் உரிமை உங்களுடையது. "நீங்கள் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்காவிட்டால், குழப்பத்திற்குத் தான் அடிபணிவீர்கள்" என்று E. ஸ்டான்லி ஜோன்ஸ் கூறினார்.

அர்ப்பணிப்பு, வாழ்வதற்கான சிறந்த வழி அல்ல; அது ***மாத்திரமே*** வாழ்வதற்கான ஒரே வழி. மற்ற யாவும் பிரயோஜனமற்றவை. அவைகள் விரக்திக்கும், ஏமாற்றத்திற்கும், சுய அழிவுக்கும் வழி நடத்துகின்றன. அர்ப்பணிப்பு என்ற வார்த்தைக்கு கிங் ஜேம்ஸ் ஆங்கில மொழியாக்கம், ***"உங்கள் நியாயமான ஆராதனை"***[22] என்றும், மற்றுமொரு மொழிபெயர்ப்பு அதை, ***"நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை"***[23] என்றும் கூறுகின்றது. உங்கள்

அர்ப்பணிப்பு, வாழ்வதற்கான சிறந்த வழி அல்ல; அது மாத்திரமே வாழ்வதற்கான ஒரே வழி. மற்ற யாவும் பிரயோஜனமற்றவை.

வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்பது முட்டாள்தனமாக, உணர்ச்சிவசப்பட்டு செய்கின்ற ஓர் அடிபணிவல்ல – அது சிந்தித்து செயல்படும் புத்திசாலித்தனமான ஒரு நடத்தை. இது, உங்கள் வாழ்க்கையில் நீங்கள் செய்யக் கூடிய ஒரு பொறுப்புள்ளதும். புத்திசாலித் தனமானதுமான செயலாகும். அதனால்தான் பவுல், ***"ஆகவே, அவரைப் பிரியப்படுத்துவதே நமது இலக்காகும்"***[24] என கூறுகின்றார். நீங்கள் தேவனுக்கு இசைந்து, "ஆம்" என்று கூறும் நேரங்களே, உங்கள் வாழ்க்கையில் ஞானமுள்ள நேரங்களாகும்.

உங்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற பெரிய தடையாக இருப்பது மற்றவர்களல்ல, நீங்களே. உங்களுடைய சுயசித்தம், பிடிவாதமான பெருமை, தனிப்பட்ட பேராவல்கள் ஆகிய இவைகளை கண்டுபிடிக்க சில வேளைகளில் அநேக வருடங்கள் எடுக்கும். உங்கள் சொந்தத் திட்டங்கள் மீதே உங்கள் கருத்தைப் பதித்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் வாழ்க்கைக்கான தேவ திட்டத்தை நீங்கள் நிறைவேற்றவே முடியாது.

தேவன், தமது ஆழ்ந்த கிரியைகளை உங்களில் நடத்துவாரென்றால், அது இதில்தான் ஆரம்பமாகும். ஆகவே, எல்லாவற்றையும் தேவனுக்குக் கொடுங்கள் – உங்களது கடந்த கால மன வருத்தங்கள், உங்களது இன்றைய பிரச்சனைகள், உங்களது வருங்கால ஆவல்கள், உங்கள் பயம், கனவுகள், பலவீனங்கள், பழக்க வழக்கங்கள், காயங்கள், மறக்க முடியாத நினைவுகள் ஆகிய அனைத்தையும் கொடுத்துவிடுங்கள். உங்கள் வாழ்க்கையை ஓட்டிச் செல்லும் ஓட்டுநர் ஸ்தானத்தில் இயேசு கிறிஸ்துவை அமர வையுங்கள். சுக்கானிலிருந்து உங்கள் கரத்தைத் எடுத்துவிடுங்கள். பயப்படவே வேண்டாம். அவருடைய கட்டுப்பாட்டுக்குள் விடப்பட்டதெதுவும், கட்டுப்பாட்டை மீறி ஒருபோதும் செல்ல முடியாது. கிறிஸ்து உங்களை ஆளும் எஜமானராக இருந்தால், நீங்கள் எதையுமே கையாள முடியும். நீங்களும் பவுலைப்போல கூறுவீர்கள், ***"என்னைப் பலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எதையும் செய்ய, எதையும் சந்திக்க நான் தயாராக இருக்கின்றேன். கிறிஸ்துவின் நிறைவில் நான் நிறைவடைகின்றேன். என் பலவீனத்தில் அவரது பலன் எனக்குப் போதுமானது"***[25] என கூறுவீர்கள்.

தமஸ்குவுக்குப் போகும் வழியில், பிரகாசமான பேரொளியில் பார்வையற்றவனாகக் கீழே தள்ளப்பட்டபோது, பவுல் தன்னை

அர்ப்பணிக்கும் வேளை வந்தது. அர்ப்பணிப்பதற்கு நம்மில் அநேகருக்கு இப்படிப்பட்ட ஒரு தீவிரமான தெய்வீக இடைபாடு தேவையில்லை. ஆயினும், அர்ப்பணித்தல் என்பது ஒரு நொடிப்பொழுதில் நடக்கும் நிகழ்வல்ல. பவுல், ***"நான் அனுதினமும் சாகிறேன்"***[26] என்றார். அர்ப்பணிக்கும் ஒரு ***வினாடியும்*** உண்டு; அர்ப்பணிக்க ***பயிற்சியும்*** தேவை – இது ஒவ்வொரு வினாடியாக வாழ்நாள் முழுவதும் நடைபெறும். ***ஜீவபலியில்*** இருக்கும் ஒரு பிரச்சனை என்னவெனில், அது பலிபீடத்தைவிட்டு நகர்ந்து போகக்கூடும். ஆகவே, உங்கள் வாழ்க்கையை மீண்டும் மீண்டும் ஒரு நாளைக்கு 50 தடவையாவது அர்ப்பணிக்க வேண்டியதிருக்கும். இதை ஒரு அன்றாடப் பழக்கமாக்க வேண்டும். ***"மக்கள் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவர்கள் தங்கள் சொந்த விருப்பங்களை விட்டுவிட வேண்டும். அவர்கள் தினந்தோறும் என்னைப் பின்பற்றி வர தங்கள் ஜீவனையும் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும்."***[27]

நான் உங்களுக்கு ஒரு எச்சரிப்பு கூறட்டும். நீங்கள் முற்றிலுமாக அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழ விரும்பினால், அந்தத் தீர்மானம் சோதிக்கப்படும். சில சமயங்களில், வசதியற்ற, பிரபலமற்ற, கிரயம் செலுத்த வேண்டிய அல்லது செய்யப்படக்கூடாததுபோலத் தோன்றும் வேலைகளைச் செய்ய வேண்டியதிருக்கும். உங்களுக்கு எதைச் செய்ய வேண்டும் போலிருக்கின்றதோ அதற்கு நேர் எதிரிடையான காரியத்தைச் செய்ய வேண்டியதிருக்கும். இருபதாம் நூற்றாண்டின் மிகப் பெரிய கிறிஸ்தவ தலைவர்களில் ஒருவர், "கேம்பஸ் க்ரூசேட் ஃபார் க்ரைஸ்ட்" (Campus Crusade for Christ) ஸ்தாபகரான, பில் ப்ரைட் உலகெங்கிலுமுள்ள இதன் பணியாளர்கள் "நான்கு ஆவிக்குரிய விதிகள்" என்ற சுவிசேஷ கைப்பிரதி மற்றும் ***"இயேசு"*** திரைப்படக் காட்சி (40 கோடி மக்களுக்கு மேலானோர் பார்த்த படம்) மூலம் 1.5 கோடி மக்கள் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, நித்தியத்தை பரலோகத்தில் கழிப்பார்கள்.

நான் ஒருமுறை பில்லிடம், "உங்கள் வாழ்க்கையை தேவன் ஏன் பயன்படுத்தி, இவ்வளவாக ஆசீர்வதித்தார்?" என்று கேட்டேன். அதற்கு அவர், "நான் இளைஞனாயிருந்தபோது தேவனோடு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டேன். அதாவது, இன்றிலிருந்து நான் இயேசுவின் அடிமை என்று எழுதி கையொப்பமிட்டேன்" என்று கூறினார்.

என்றாவது, தேவனோடு நீங்கள் இப்படியொரு ஒப்பந்தம் செய்திருக்கின்றீர்களா? அல்லது நீங்கள் இன்னும் வாக்குவாதம் செய்து, அவர் விரும்புகின்றபடி உங்கள் வாழ்க்கையை நடத்தும் உரிமையை அவருக்குக் கொடுக்க முடியாமல் போராடிக் கொண்டிருக்கின்றீர்களா? அவருடைய கிருபை, அன்பு மற்றும் ஞானத்திற்கு நீங்கள் உங்களை அர்ப்பணிக்க வேண்டிய நேரம் இதுவே.

நாள் பத்து

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: ஆராதனையின் இதயம் போன்ற பகுதி, அர்ப்பணிப்பு.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"உங்கள் முழு ஜீவனையும் நீதிக்குரிய நோக்கங்களுக்காக பயன்பட ஒப்புக் கொடுங்கள்."*** ரோமர் 6:13

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் வாழ்க்கையின் எப்பகுதியை நான் இன்னும் தேவனுக்குக் கொடுக்காமல் பிடித்து வைத்திருக்கின்றேன்?

11

தேவனுக்கு நெருங்கிய நண்பனாகுதல்

நாம் அவருக்குப் பகைவர்களாயிருக்கும்போதே
அவருடைய குமாரனுடைய மரணத்தினால்
நாம் தேவனுக்கு சிநேகிதராக்கப்பட்டதால்,
அவருடைய ஜீவனால்
நாம் நிச்சயமாக நித்திய
ஆக்கினையிலிருந்து விடுதலை
பெறுவோம்.
ரோமர் 5:10 (புதிய மொழியாக்கம்)

தேவன் உங்களுடைய சிறந்த நண்பராக இருக்க விரும்புகின்றார்.

தேவனோடுள்ள உங்கள் உறவு வெவ்வேறு தன்மைகள் கொண்டது. தேவன் உங்களை உண்டாக்கிய சிருஷ்டிகரும், ஆண்டவரும் எஜமானனுமானவர். நியாயாதிபதி, மீட்பர், பிதா, இரட்சகர்... இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம்.[1] ஆனால், மிகவும் அதிர்ச்சி தரும் சத்தியம் இது: சர்வ வல்லமையுள்ள தேவன் உங்கள் நண்பராயிருக்க ஏங்குகின்றார்!

ஏதேன் தோட்டத்தில், தேவன் மனிதனோடு கொள்ளும் இலட்சிய உறவைக் காண்கிறோம். ஆதாமும் ஏவாளும் தேவனோடு மிக நெருக்கமான சிநேகிதம் கொண்டிருந்தார்கள். சடங்காச்சாரங்களில்லை, கொண்டாட்டங்களில்லை, மதமுமில்லை – வெறுமனே ஒரு எளிய, அன்பின் உறவு, தேவனுக்கும் அவர் படைத்த மக்களுக்குமிடையே இருந்தது. குற்ற உணர்வு, பயம் என்ற தடை ஏதுமின்றி, ஆதாமும் ஏவாளும் தேவனில் களிகூர்ந்தார்கள்; தேவனும் அவர்களில் களிகூர்ந்தார்.

நாம் தேவனுடைய பிரசன்னத்தில் தொடர்ந்து நிலைத்திருக்கும்படி உண்டாக்கப்பட்டோம். ஆனால், வீழ்ச்சிக்குப் பிறகு, இந்த இலட்சிய உறவு கெட்டுப்போய் விட்டது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், ஒரு சிலரே தேவனுக்கு சிநேகிதராகும் உரிமை பெற்றிருந்தனர். மோசேயும், ஆபிரகாமும் "தேவனுடைய சிநேகிதரெனப்பட்டனர்." தாவீது, ''தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன்'' என அழைக்கப்பட்டான். யோபு, ஏனோக்கு, நோவா ஆகியோரும் தேவனோடு நெருக்கமான உறவு கொண்டிருந்தவர்கள்.[2] ஆனால், சிநேகத்தைவிட, தேவனுக்குப் பயப்படும் பயத்தையே பழைய ஏற்பாட்டில் அதிகமாகக் காண்கிறோம்.

அதன்பின், இயேசு, இந்த நிலையை மாற்றினார். நமது பாவங்களுக்காக அவர் சிலுவையில் கிரயம் செலுத்தித் தீர்த்தபோது, நம்மையும் தேவனையும் பிரிப்பதன் சின்னமாக விளங்கின தேவாலய திரைச்சீலை, மேல் தொடங்கிக் கீழாக இரண்டாகக் கிழிந்து, தேவனோடு நேரிடைத் தொடர்பு மீண்டும் கிடைப்பதை சுட்டிக் காண்பித்தது.

நாள் பதினொன்று:

தேவனுக்கு நெருங்கிய நண்பனாகுதல்

பழைய ஏற்பாட்டு ஆசாரியர்கள், தேவனை சந்திக்க மணிக்கணக்காக ஆயத்தப்பட வேண்டியதிருந்தது. ஆனால், இனி, அதுபோன்று இல்லாமல், தேவனை நாம் எந்த நேரத்திலும் நெருங்கலாம். ***"நம்மைத் தேவனுடைய நண்பர்களாக்கும் பொருட்டு நம் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து செய்து முடித்த கிரியையின் நிமித்தமாக இன்று நாம் தேவனோடு புதிய அழகிய உறவுடன் அவரில் களிகூரும் அனுபவம் பெற்று வருகின்றோம்''***[3] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுடைய கிருபையினாலும் இயேசுவின் தியாகத்தினாலும் தேவனோடு நட்பு கொள்ளுதல் சாத்தியமாகின்றது. ***"சத்துருக்களாக இருந்த நம்மை இயேசு கிறிஸ்துவைக் கொண்டு சிநேகிதர்களாக மாற்றிய தேவனாலே இவை யாவும் நிறைவேறின.''***[4] ''பாவ சஞ்சலத்தை நீக்க பிராண சிநேகிதருண்டே..." என்று ஒரு பழைய பாடல் கூறுகின்றது. இந்தப் பாடல் இயேசுவைப்பற்றிய பாடலாக

இருந்தாலும்... உண்மையில், தேவன், திரித்துவத்தின் மூன்று நபர்களுடனும் சிநேகித உறவு கொண்டாட, தேவன் நம்மையழைக்கின்றார்: பிதா,[5] குமாரன்,[6] பரிசுத்தாவி[7] யாகிய மூன்று ஆள்தத்துவமுள்ள திரியேக தேவனுடன்!

''இனி உங்களை வேலைக்காரரென்று கூறாமல், சிநேகிதரென்பேன். ஏனெனில், வேலைக்காரன், தன் எஜமான் செய்வது இன்னதென்று அறியாதிருக்கிறான். நான் உங்களை சிநேகிதரென்றேன். ஏனெனில், என் பிதாவினிடத்தில் நான் கற்றுக் கொண்ட யாவையும் நான் உங்களுக்குத் தெரியப்படுத்தியிருக்கின்றேன்''[8] என்று இயேசு சொன்னார். இந்த வசனத்தில் சிநேகிதர் என்பதைக் குறிக்க உதவும் பதம் ஒரு தற்செயல் அறிமுகத்தையல்ல, ஒரு நெருக்கமான, நம்பிக்கைக்குரிய உறவைக் குறிக்கும் வார்த்தை. இதே பதம் திருமணத்தில் மணமகனின் உற்ற தோழனாக இருப்பவனுக்கும்[9] ஒரு ராஜாவின் நம்பிக்கைக்குரிய உள்வட்டத்திலுள்ள நெருக்கமான நண்பர்களுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ராஜசபையில், வேலைக்காரர் ராஜாவை விட்டு தூரத்தில் நிற்க வேண்டும். ஆனால், உள்வட்ட, நெருக்கமான நண்பர்கள் நெருங்கி இருந்து, நேரிடைத் தொடர்பு கொண்டு, நம்பிக்கைக்குரிய தகவல்களைப் பெறுகின்றார்கள்.

தேவன், என்னைத் தம்முடைய நெருக்கமான நண்பனாக்க விரும்புகிறாரென்பதை நம்புவதற்குக் கடினமாக இருக்கின்றது. ஆனால், *''உங்களோடு தொடர்பு கொள்ள வைராக்கிய வாஞ்சை கொண்ட தேவனவர்''*[10] என்று வேதம் கூறுகின்றது.

தம்மை நாம் நெருக்கமாக அறிந்துகொள்ள வேண்டுமென்று தேவன் வாஞ்சிக்கின்றார். உண்மையில், அவர் பிரபஞ்சத்தைத் திட்டமிட்டு, நமது ஜீவ நாட்கள் உள்ளிட்ட வரலாற்றை நியமித்து, நாம் அவரது நண்பர்களாயிருக்கத்தக்கதாக அப்படிச் செய்தார். *''நாம் இருளிலே தடுமாறாமல், தடவியாகிலும் அவரைக் கண்டுபிடிக்கத்தக்கதாக, அவர், மனுக்குலமனைத்தையும் உண்டாக்கி, பூமியை, வசிப்பதற்குரிய காலமும், இடமும் கொண்டதாக வசதியுள்ளதாக்கினார்''*[11] என்று வேதம் கூறுகின்றது,

தேவனை அறிந்து அவரை நேசிப்பது நம்முடைய மகத்துவமான சிலாக்கியம். அதேபோல நம்மை அறிந்து நம்மை நேசிப்பதில் தேவனுக்கும் பெரிதான மகிழ்ச்சியாயிருக்கிறது. ***"ஒருவன் மேன்மை பாராட்ட விரும்பினால், என்னையறிந்து, புரிந்து கொண்டிருப்பதைக் குறித்தே மேன்மை பாராட்டக்கடவன்... இந்தக் காரியங்கள் எனக்கு மகிழ்ச்சியளிப்பவை"***[12] என்று தேவன் கூறுகின்றார்.

சர்வ வல்லமையுள்ள, காணக்கூடாத, குறையற்ற தேவனுடன், எல்லைக்குட்பட்ட, பாவம் நிறைந்த மனிதன் எவ்வாறு நெருங்கிய சிநேகிதம் கொள்ளக்கூடுமென்பதைக் கற்பனை செய்வது கூடக் கடினமாக இருக்கின்றது. எஜமான் – வேலைக்காரன் உறவு அல்லது சிருஷ்டிகர் – சிருஷ்டி உறவு அல்லது மிஞ்சிப்போனால் தகப்பன் – பிள்ளை உறவை ஓரளவு எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், தேவன் என்னை நண்பனாக்க விரும்புவதன் பொருள் என்ன? தேவனுடைய சிநேகிதரெனப்பட்டவர்களுடைய வாழ்க்கையை வேதத்திலிருந்து பார்ப்பதன்மூலம், நாம் தேவனுடனுள்ள சிநேகத்துவத்தின் ஆறு இரகசியங்களைக் காண முடிகின்றது. இந்த அத்தியாயத்தில் இரண்டு இரகசியங்களையும் பின்வரும் அத்தியாயத்தில் மீதி நான்கையும் நாம் காணலாம்.

தேவனுடைய மிகச் சிறந்த நண்பனாகுதல்

தொடர்ந்தேர்ச்சியான கலந்துரையாடல் மூலமாக. வாரத்திற்கு ஒரு முறை மட்டும் ஆலயத்திற்கு செல்லுவது அல்லது தினந்தோறும் தேவனுடன் சற்று நேரம் அமைதியாக இருப்பதன் மூலம் நாம் தேவனுடன் நெருங்கிய உறவை வளர்த்துக் கொள்ள முடியாது. உங்கள் வாழ்க்கையின் ***அனைத்து*** அனுபவங்களையும் அவருடன் பகிர்ந்துகொள்ளுவதன் மூலமே, தேவனோடுள்ள நமது சிநேகத்துவம் கட்டப்படும். தினந்தோறும் தேவனுடன் ஒரு

> ***தேவனை அறிந்து நேசிப்பது நமது மிகப்பெரிய சிலாக்கியம். நம்மால் அறியப்பட்டு நேசிக்கப்படுவது, தேவனுடைய மிகப்பெரிய மகிழ்ச்சி.***

தியான நேரம்[13] இருக்க வேண்டியது மிக முக்கியமான காரியமே. ஆனால், இப்படி உங்கள் அனுதின அலுவல்களின் இடையே நியமிக்கப்பட்ட ஒரு நேரத்தை மட்டும் அவர் விரும்பவில்லை. அதைவிட அதிகமாக விரும்புகின்றார். ***எல்லா*** வேளைகளிலும் அவரும் சேர்த்துக் கொள்ளப்பட விரும்புகின்றார். எல்லா சம்பாஷணைகளிலும், எல்லாப் பிரச்சனைகளிலும், எல்லா எண்ணங்களிலுங்கூட அவரும் சேர்த்துக் கொள்ளப்பட விரும்புகின்றார். அவருடன் ஒரு தொடர்ந்த, திறந்த சம்பாஷணை, உங்கள் நாள் முழுவதும், ***அந்தந்த வினாடியில்*** நீங்கள் செய்கின்ற, யோசிக்கின்ற அனைத்தையும் குறித்து அவருடன் நீங்கள் செய்து கொண்டே இருக்க முடியும். "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்"[14] என்பது, கடைத்தெருவில் பொருட்கள் வாங்கும்போதும், காரை ஓட்டிக் கொண்டிருக்கும் போதும், வேலை செய்து கொண்டிருக்கும்போதும், அன்றாட வேலையான எதைச் செய்து கொண்டிருந்தாலும் தேவனோடு பேசிக் கொண்டேயிருப்பதாகும்.

"தேவனோடு நேரம் செலவழித்தல்" என்றால், அவரோடு ***தனித்து*** இருப்பது என்பது ஒரு பொதுவான தவறான கருத்து; இயேசு முன்மாதிரி காண்பித்தபடி, தேவனோடு நீங்கள் தனிமையாக நேரம் செலவழிக்க வேண்டும். ஆனால், அது நீங்கள் விழித்திருப்பதில் ஒரு சிறிய பகுதிமட்டுமே. நீங்கள் செய்யும் காரியம் ***அனைத்திலும்*** அவரும் பங்கெடுக்கும்படி அழைக்கப்பட்டால், அவருடைய பிரசன்னத்தை எப்போதும் உணரும்படி இருந்தால், நீங்கள் செய்யும் எல்லாவற்றிலும் "தேவனோடு நேரம் செலவழிக்க" முடியும்.

"ப்ராக்டிசிங் த ப்ரெசென்ஸ் ஆஃப் காட்" (தெய்வ பிரசன்னத்தில் பழக்கப்படுதல்) என்ற புத்தகம், தேவனோடு இடைவிடாமல் சம்பாஷணையை எவ்வாறு வளர்த்துக் கொள்ளுவது என்பதைக் கூறும் மிகச்சிறந்த புத்தகம். பிரான்சு நாட்டு துறவியர் மடமொன்றில் சமையல் வேலை செய்து கொண்டிருந்த சகோதரன் லாரன்ஸ் என்பவரால், பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட புத்தகம் அது. உணவு ஆயத்தம் செய்தல், சாப்பாட்டுத் தட்டுகளைக் கழுவுதல் போன்ற தாழ்வான, சாதாரண வேலைகளை, துதியின் செயல்களாக, தேவனோடு உறவு கொள்ளுபவைகளாக எவ்வாறு மாற்றுவது என்பதை இவர் அறிந்து செயல்படுத்தினார். "தேவனுடனுள்ள உங்கள் சிநேகத்துவத்தின் திறவுகோல் — நீங்கள் செய்வதை

மாற்றுவதல்ல, நீங்கள் செய்வதைக் குறித்த ***உங்கள் மனப்பான்மையை*** மாற்றிக் கொள்ளுதல்" என்று அவர் கூறுகிறார். நீங்கள் சாதாரணமாகச் செய்யும் காரியங்களைத் தேவனுக்காக செய்ய ஆரம்பியுங்கள் – அது சாப்பிடுவதோ, குளிப்பதோ, வேலை செய்வதோ, இளைப்பாறுவதோ அல்லது குப்பையை எடுத்துக்கொண்டு வெளியே போவதோ எதுவாயினும் சரி.

தேவனை ஆராதிக்க நமது அன்றாட வேலைகளை விட்டு நாம் "வெளியேற" வேண்டுமென்று நாம் இன்று நினைக்கின்றோம். எந்த நேரமும் அவருடைய பிரசன்னத்திலிருப்பதை நாம் பயிற்சி செய்து கொள்ளாதபடியால்தான் இப்படி நாம் நினைக்கின்றோம். வாழ்க்கையின் சாதாரண வேளைகளில் தேவனை ஆராதிப்பது சகோதரர் லாரன்சுக்கு எளிதாக இருந்தது. அவர் சிறப்பான தனிப்பட்ட ஆவிக்குரிய ஒழுக்கக் கூட்டங்களுக்குப் போக வேண்டியதிருக்கவில்லை.

இதுவே, தேவனுடைய இலட்சிய விருப்பம். ஏதேனில், ஆராதனை, போய் நடத்தப்பட வேண்டிய நிகழ்ச்சியாக இல்லை. அது ஒரு நிரந்தர மனப்பான்மை – ஆதாமும், ஏவாளும் தேவனோடு தொடர்ந்து ஐக்கியம் கொண்டிருந்தனர். தேவன் உங்களோடு எல்லா நேரமும் இருக்கின்றபடியால், நீங்கள் இப்போது இருக்கின்ற இடத்தைவிட வேறெந்த இடத்திலும் தேவன் உங்களுக்கு இவ்வளவு நெருக்கமாக இருக்க முடியாது. ***"அவர் எங்கும், எதிலுமிருந்து, எல்லாவற்றையும் ஆளுகை செய்கின்றார்"***[15] என்று வேதம் கூறுகின்றது. சகோதரர் லாரன்ஸ் தரும் இன்னொரு பயனுள்ள கருத்து: நீண்ட சிக்கலான ஜெபம் செய்வதைவிட, குறுகிய, சம்பாஷணை போன்ற ஜெபங்களை ***நாள் முழுவதும்*** ஏறெடுத்துக் கொண்டேயிருப்பது. கவனம் சிதறாமல், சிதறும் எண்ணங்களை ஒருமுகப்படுத்த, "ஜெபத்தில், அதிக வார்த்தைகளைப் பயன்படுத்துவதை நான் ஆதரிப்பதில்லை. நீண்ட சம்பாஷணைகள் கவனம் சிதறப்பண்ணும் தருணங்களாகும்"[16] என்று அவர் கூறுகின்றார். கவனம் குறைவுபட்டுள்ள இந்தக் காலத்திலே, 450 ஆண்டுகளுக்கு முன்பாக சொல்லப்பட்ட இப்பழைய ஆலோசனை சாதாரணமாக இருந்தாலும், இன்றைக்கும் பொருத்தமானதாக உள்ளது. ***"இடைவிடாமல் ஜெபியுங்கள்"***[17] என்று வேதம்

கூறுகின்றது. இதை எப்படிச் செய்ய முடியும்? ஒரு வழி, நாள் முழுவதும் "சுவாச ஜெபங்கள்" – பல நூறு ஆண்டுகளாக, பல கிறிஸ்தவர்கள் செய்து வந்ததைப்போல, ஏறெடுத்தல். ஒரு சிறிய வாக்கியம் அல்லது சொற்றொடர் ஒன்றைத் தெரிந்து கொண்டு, ஒரே மூச்சில் இயேசு விடம் கூறப்படுவது: "நீர் என்னுடனிருக்கின்றீர்." "உமது கிருபையைப் பெறுகின்றேன்." "நான் உம்மைச் சார்ந்திருக்கின்றேன்". "உம்மை அறிய விரும்புகின்றேன்." "நான் உமக்கு சொந்தம்." "உம்மை நம்ப உதவி செய்யும்" போன்ற ஜெபங்கள் அல்லது வேதத்திலுள்ள சிறிய வாக்கியங்கள் – "நான் வாழ்வது கிறிஸ்துவுக்காக." "நீர் என்னைவிட்டு ஒருபோதும் விலக மாட்டீர்." "நீர் என் தேவன்" போன்றவற்றை உங்கள் இருதயத்தில் ஆழமாகப் பதியும்வரை, முடிந்தவரை கூறிக்கொண்டே இருங்கள். இதில், தேவனைக் கனம் பண்ணுவதுதான் உங்கள் நோக்கமாக இருக்க வேண்டுமேயொழிய, அவரைக் கட்டுப்படுத்துவது நோக்கமாக இருக்கக் கூடாது.

நீங்கள் செய்யும் எதுவுமே "தேவனோடு நேரம் செலவழித்தல்" எனக் கூறப்பட முடியும் – நீங்கள் அவருடைய பிரசன்னத்தை உணர்ந்து, எல்லாவற்றிலும் அவரைப் பங்காளராக இருக்கும்படி அழைத்தால்...

தேவனுடைய சமுகத்தைப் பயிற்சி செய்வது ஒரு திறமை; நீங்கள் வளர்த்துக் கொள்ளக்கூடிய ஒரு பழக்கம். அருமையான இசையை எளிமையாக இசைக்குமாறு, இசை மேதைகள் பயிற்சி செய்வதைப் போல, ஒரு நாளில் பலமுறைகள், பல நேரங்கள், தேவனைப் பற்றி நினைக்க நீங்கள் உங்களைக் கட்டுப்படுத்தப் பழக வேண்டும். தேவனை நினைப்பதற்கு நீங்கள் உங்கள் மனதைப் பயிற்றுவிக்க வேண்டும்.

ஆரம்பத்தில், ஞாபகக் குறிப்புகள் உங்களுக்கு தேவைப்படலாம். உங்களைச் சுற்றி கண்கூடாகக் காணக்கூடிய, நினைவுத் தாள்களை அல்லது அட்டையை வைத்துக் கொள்ளுங்கள். உதாரணமாக, ***"தேவன் என்னுடன் எனக்காக இப்போது இருக்கின்றார்"*** என்று கூறும் சிறு வாக்கியத்தை எழுதி வைத்துக் கொள்ளலாம். குறிப்பிட்ட சில துறவிகள், ஒவ்வொரு மணி நேரமும், கடிகாரம் ஒலிக்கும்போது,

“ஜெப மணி நேரம்” என்று நினைவுப்படுத்திக் கொள்ளுவார்கள். உங்களுக்கு ஒரு கடிகாரம் அல்லது எச்சரிப்பு ஒலி எழுப்பும் செல்போன் இருந்தால், நீங்களும் அப்படிச் செய்யலாம். சில சமயங்களில் நீங்கள் தேவ பிரசன்னத்தை உணரக்கூடும்; சில சமயங்களில் உணரக்கூடாமலும் இருக்கலாம்.

அனுபவத்தையே எதிர்பார்த்துக் கொண்டிருத்தல் தவறான நோக்கத்தில் கொண்டு போய் நிறுத்திவிடும். நாம் ஏதோ ஒரு நல்ல உணர்வை பெற்றுகொள்ள என்று அல்ல, இது ஒரு நன்மையான செயல் என்று உணர்ந்து ***செய்தல் வேண்டும்***. உங்கள் இலக்கு: ஒரு உணர்வல்ல; தொடர்ந்து தேவ பிரசன்னத்தை உணரும் ஒரு ***விழிப்புணர்வு***. இதுதான், ஆராதனையின் வாழ்க்கை முறை.

தொடர்ந்தேர்ச்சியான தியானத்தின் மூலமாக. தேவனுடைய வார்த்தையை நாள் முழுவதும் நினைப்பதன் மூலம் தேவனோடு நாம் நட்பை நிலைப்படுத்திக்கொள்ள முடியும். இது சிநேகத்துவத்திற்கான இரண்டாவது வழி. இதற்குத் தியானமென்று பெயர். தேவன் யாரென்றும், அவர் செய்திருப்பவை என்னவென்றும், அவர் கூறியவை என்னவென்றும் தியானிக்குமாறு வேதாகமம் மீண்டும் மீண்டும் நம்மை வற்புறுத்துகின்றது.”[18] ***தேவன் என்ன கூறுகிறாரென்பதையறியாமல்*** அவருக்கு சிநேகிதனாயிருப்பது கூடாத காரியம். அவரை அறிந்து கொள்ளாமல் நீங்கள் அவரை நேசிக்க முடியாது. அவருடைய வார்த்தைகளையறியாமல் நீங்கள் அவரை அறிந்து கொள்ளமுடியாது. ***“தேவன் தமது வார்த்தையின் மூலம் தம்மை சாமுவேலுக்கு வெளிப்படுத்தினார்”***[19] என்று வேதம் கூறுகின்றது. இன்றும் தேவன் அதே வழிமுறையைப் பயன்படுத்துகின்றார். நாள் முழுவதும் உட்கார்ந்து நீங்கள் வேதத்தைப் படித்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால், நாள் முழுவதும் அதை ***சிந்திக்க*** முடியும். நீங்கள் வாசித்த அல்லது மனப்பாடம் செய்த வசனங்களை மீண்டும் நினைவுபடுத்தி, அவற்றை உங்கள் மனதில் ஒலிக்கச் செய்து கொண்டே இருப்பதன் மூலம் நாள் முழுவதும் வேதத்தை தியானிக்க முடியும்.

தியானம் என்பது ஏதோ ஒரு கடினமான, விளங்கிக் கொள்ள முடியாத சடங்காச்சாரம் என்றும் துறவிகளும், குறிப்பிட்ட ஆவிக்குரியவர்களும் மட்டுமே அதைச் செய்யக்கூடும் என்று தவறாக எண்ணப்படுகின்றது. தியானமென்பது வேறு ஒன்றுமில்லை – மனதை ஒருமுகப்படுத்திய சிந்தனை – யாரும் கற்றுக் கொள்ளக்கூடிய, எங்கும் பயன்படுத்தக்கூடிய ஒரு திறன்.

ஒரு பிரச்சனையைக் குறித்து உங்கள் மனதில் மீண்டும் மீண்டும் நீங்கள் சிந்தித்துக் கொண்டேயிருந்தால் அதற்குப் பெயர் கவலை. தேவனுடைய வார்த்தையை மீண்டும் மீண்டும் நீங்கள் சிந்தித்துக் கொண்டேயிருந்தால், அதற்குப் பெயர் தியானம். கவலைப்படுவது எப்படி என்று நீங்கள் அறிந்திருந்தால், தியானிப்பது எப்படி என்பதையும் நீங்கள் அறிந்து கொண்டிருக்கின்றீர்கள்! ஒரேயொரு வித்தியாசம் – பிரச்சனையிலிருக்கும் கவனத்தை வேத வசனத்தின் மீது திருப்பி விடுங்கள் – அவ்வளவுதான்! தேவனுடைய வார்த்தையை எவ்வளவு அதிகமாகத் தியானிக்கின்றீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் கவலைப்படுவது குறையும். தமக்கு யோபுவும், தாவீதும் தமக்கு நெருங்கிய நண்பர்களென்று தேவன் கருதியதற்குக் காரணம் – அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு மற்றெல்லாவற்றையும்விட அதிக முக்கியத்துவமளித்ததுதான். நாள் முழுவதும், தொடர்ந்து அதை சிந்தித்தார்கள். ***“எனது அன்றாட உணவைவிட அவருடைய வாயின் வார்த்தைகளைப் பொக்கிஷமாகப் பேணி வந்தேன்”***[20] என்று யோபு ஒத்துக் கொண்டார். ***“உமது பிரமாணங்களை நான் எவ்வளவாக நேசிக்கின்றேன்! நாள் முழுவதும் அது என் தியானம்.”***[21] ***“அவைகள் எப்போதும் என் நினைவிலிருக்கின்றன. அவைகளை நினைக்காமல் என்னாலிருக்க முடியாது”***[22] என்று தாவீது கூறினார்.

நண்பர்கள் இரகசியங்களைப் பகிர்ந்து கொள்ளுவார்கள். நாள் முழுவதும் அவருடைய வார்த்தையை நினைத்துக் கொண்டேயிருக்கும் பழக்கத்தை நீங்கள் விருத்தி செய்து கொண்டால், தேவன் தமது இரகசியத்தை உங்களுடன் பகிர்ந்து கொள்ளுவார். தேவன், ஆபிரகாமுடன் தமது இரகசியங்களைப் பகிர்ந்து கொண்டார்; அதே காரியத்தை தானியேல், பவுல், சீஷர்கள் மற்றும் வேறு நண்பர்களுடனும் அவர் செய்தார்.[23]

உங்கள் வேதாகமத்தை வாசித்து விட்டு அல்லது ஒரு பிரசங்கத்தையோ, ஒலி நாடா செய்தியையோ கேட்டுவிட்டு, அப்படியே அதை மறந்துவிட்டு, கடந்து செல்லாதீர்கள். அந்த சத்தியத்தை மீண்டும் உங்கள் உள்ளத்தில் நினைத்து, மீண்டும் மீண்டும் அதை தியானிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். தேவன் கூறியதை நினைக்க எந்த அளவுக்கு அதிக நேரமெடுக்கின்றீர்களோ, அந்த அளவுக்கு அநேக மக்கள் அறியாமலிருக்கின்ற ‘‘இரகசியங்களை’’ நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள். ***“தம்மைக் கனம் பண்ணுகிறவர்களுடன் தேவன் சிநேகமாயிருக்கின்றார். அவர்களுடன் மட்டுமே தமது வாக்குத்தத்தங்களின் இரகசியங்களை அவர் பகிர்ந்து கொள்ளுகின்றார்”***[24] என்று வேதம் கூறுகின்றது.

அடுத்த அத்தியாயத்தில், தேவனோடு நட்பைப் வளர்த்துக்கொள்ள உதவும் இன்னும் நான்கு இரகசியங்களை குறித்துக் காண்போம். நாளை வரை காத்திருக்க வேண்டாம். தேவனோடு தொடர்ந்து பேசும் பழக்கத்தை இன்றே, இப்போதே பயிற்சி செய்ய ஆரம்பியுங்கள். ஜெபம், தேவனோடு பேச உங்களை வழி நடத்தும்; தியானம், தேவன் உங்களோடு பேச வழி வகுக்கும். தேவனுடைய சிநேகிதனாக மாற இரண்டுமே அத்தியாவசியமானவை.

நாள் பதினொன்று

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: தேவன் என்னுடைய சிறந்த நண்பனாயிருக்க விரும்புகின்றார்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***“தேவனோடு உள்ள சிநேகம் அவரை கனப்படுத்துகிறவர்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது.”*** சங்கீதம் 25:14 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: நாள் முழுவதும், தேவனை இன்னும் அடிக்கடி நினைத்து, அவரோடு பேசுவதை எனக்கு நானே ஞாபகப்படுத்திக் கொள்ளுவதற்கு நான் செய்ய வேண்டியது என்ன?

12

தேவனோடுள்ள உங்கள் நட்பை வளர்த்துக் கொள்ளுதல்

அவர் நீதிமான்களுடன் சிநேகமாயிருக்க விரும்புகின்றார்.
நீதிமொழிகள் 3:32 (புதிய மொழியாக்கம்)

தேவனிடத்தில் நெருங்கி சேருங்கள்;
அவர் உங்களிடம் கிட்டிச் சேருவார்.
யாக்கோபு 4:8 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் எந்த அளவுக்கு விரும்புகின்றீர்களோ, தெரிந்துகொள்ளுகின்றீர்களோ, அந்த அளவுக்குதான் நீங்கள் தேவனிடம் கிட்டிச் சேரமுடியும்.

எந்தவொரு நட்பையும் போலவே, தேவனோடுள்ள உங்கள் நட்பையும் வளர்த்துக்கொள்ள நீங்கள் முயல வேண்டும். அது தற்செயலாக நிகழும் ஒரு விபத்து போலிராது; அதற்கு விருப்பம், நேரம் மற்றும் சக்தி வேண்டும். தேவனோடு, ஆழமான, இன்னும் நெருக்கமான உறவு வேண்டுமானால், நீங்கள் உண்மையுடன் உங்கள் உணர்வுகளை அவருடன் பகிர்ந்து கொண்டு, அவர் உங்களை ஏதாவது செய்யும்படி கூறினால் அவர்மீது நம்பிக்கை வைக்க வேண்டும்; அவர் எதன் மீது கரிசனை கொள்ளுகின்றாரோ அவற்றின்மீது நீங்களும் கரிசனை கொள்ள வேண்டும்; வேறு எதையும் விட அவருடைய நட்பை அதிகமாக விரும்பி, வாஞ்சிக்க வேண்டும்.

நான் தேவனுக்கு உண்மையாயிருப்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ஆழமான ஒரு நட்பின் முதல் கட்டுமானத்திற்கான

உபகரணம், முழுமையான உண்மை – உங்கள் உணர்வுகள், தவறுகள் பற்றிய எல்லாவற்றிலும் உண்மை. நீங்கள் குற்றமற்ற பரிபூரணமான நிலையில் இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கவில்லை; ஆனால், முழுமையான உண்மையை அவர் வலியுறுத்துகின்றார். வேதத்திலுள்ள தேவனுடைய நண்பர்களனைவரும் குறைவுள்ளவர்களே. பரிபூரணமானவர்கள் தான் தேவனுக்கு சிநேகிதராக முடியுமென்றிருந்தால், நாம் அவருக்கு சிநேகிதராகவே முடியாது. அதிர்ஷ்டவசமாக, தேவனுடைய கிருபையினால், இயேசு இன்றும் ***"பாவிகளின் சிநேகிதனாக"***[1] இருக்கின்றார்.

வேதத்தில், தேவனுடைய சிநேகிதர் யாவரும் நேர்மையுள்ளவர்களாக காணப்பட்டனர். தங்களுடைய உணர்வுகளில் அடிக்கடி புகார் செய்தனர்; பிறரைப் பற்றித் தங்கள் கருத்துக்களை உருவாக்கிக் கொண்டனர்; குற்றஞ் சாட்டினர்; தங்கள் சிருஷ்டிகருடன் வாதாடினர். தேவனோ, இந்த வெளிப்படை சுபாவத்தைப் பொருட்படுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால், தேவன் அதை ஊக்குவித்தார்.

சோதோமை அழிப்பதைக் குறித்து, ஆபிரகாம் அவருடன் கேள்வி கேட்டு, சவால்விட்டபோது, தேவன் அதை அனுமதித்தார். அப்பட்டணத்தைக் காப்பாற்ற எத்தனை நீதிமான்கள் தேவை என்று ஆபிரகாம் தேவனை நச்சரித்தார்; 50 நீதிமான்களிலிருந்து 10 நீதிமான்கள் வரை தேவனைக் குறைக்க வைத்தார்.

தேவன் தன்னை அநீதியாக நடத்தினால். தனக்கு நம்பிக்கை துரோகம் செய்தார், கைவிட்டார் என்று தாவீது தம்மிடத்தில் கண்ட குற்றச்சாட்டுகளைச் சொன்னபோது தேவன் பொறுமையாக கேட்டுக்கொண்டிருந்தார். தேவன் தன்னைத் தந்திரமாகப் பிடித்து விட்டதாக எரேமியா கூறியபோது, தேவன் அவனைக் கொன்று போடவில்லை. யோபு, தனது பயங்கரமான கஷ்ட நேரத்தில், தன் மனக் கசப்பை வெளியிட தேவன் தடை செய்யவில்லை; இறுதியில், தேவன் அவனுடைய உண்மையைப் பாராட்டினார். அங்கீகரிக்க முடியாதபடி பேசியதாக, யோபுவின் நண்பர்களை அவர் கடிந்து கொண்டார். தேவன் அவர்களிடம், ***"நீங்கள் என் தாசனாகிய யோபுவைப்போல, என்னுடனும், என்னைப் பற்றியும் உண்மையாயிருக்கவில்லை; என் தாசனாகிய யோபு***

உங்களுக்காக வேண்டுதல் செய்வான்; நான் அதை ஏற்றுக்கொள்ளுவேன்"[2] என்றார்.

மனம் திறந்து, திடுக்கிட வைக்குமளவுக்குப் பேசிய நட்பின் ஒரு உதாரணம்,[3] தேவன், இஸ்ரவேலரின் கீழ்ப்படியாமை குறித்த தனது முழு வெறுப்பையும் வெளிப்படையாகக் கூறினார். அவர் மோசேயிடம், தாம் இஸ்ரவேலருக்கு வாக்களித்த தேசத்திற்குள் அவர்கள் செல்லுவார்களென்றும்... *ஆனால்,* தான் இனி வனாந்தரத்தில் ஒரு எட்டுகூட அவர்களுடன் கூடப் போவதில்லையென்று தேவன் மோசேயிடம் கூறினார்! தேவன் சலிப்படைந்து, தனது உணர்வுகளை அப்படியே மோசேயிடம் மனம் திறந்து கொட்டிவிட்டார்.

நீங்கள் குறையற்ற பரிபூரணமாயிருக்க தேவன் எதிர்பார்க்கவில்லை; ஆனால், முற்றிலும் உண்மையாயிருப்பதை அவர் வற்புறுத்துகின்றார்.

ஒரு *''நண்பனாக''*[3] தேவனிடம் பேசிய மோசேயும், அதே திறந்த மனதுடன் பதில் கூறுகின்றார், *"பாரும், என்னை இந்த ஜனங்களை வழி நடத்தச் சொல்லுகிறீர்; ஆனால், என்னுடன் யாரை அனுப்புவேன் என்று நீர் இன்னும் கூறவே இல்லை... நான் உமது பார்வைக்கு சிறப்பானவனாக இருந்தால், உமது திட்டத்தை எனக்குச் சொல்லும்... இந்த ஜனங்கள் உம்முடையவர்கள்; இது உமது பொறுப்பு என்பதை மறந்து விடவேண்டாம்... உமது சமுகம் எங்களுக்கு முன்னே செல்லாதிருந்தால், இப்பயணத்தை இப்போதே நிறுத்திவிடும்! நீர் என்னோடும், உமது மக்களோடும், இக்காரியத்தில் எங்களுடனிருக் கிறீரென்பதை நான் வேறு எவ்வாறு அறியக்கூடும்? நீர் எங்களுடன் வருகின்றீரா? இல்லையா?.." தேவன் மோசேயிடம், "சரிதான்; நீ சொல்லியபடியே ஆகட்டும்; நீ என் பார்வைக்கு அருமையாயிருக்கின்ற படியால், இக்காரியத்தில், நீ கூறியபடி செய்வேன்"*[4] *என்றார்.*

உங்களிடத்தில் இந்த வகையான உண்மையை தேவன் காண முடியுமா? உண்மையான நட்பு, உள்ளத்தைத் திறப்பதில்தான் இருக்கின்றது. துணிகரமான, *அடாவடித்தனமான* பேச்சு என்று ஒருவேளை நமக்குத் தோன்றலாம். ஆனால், அவைகள் தேவனுக்கு

> *தேவனுடன் நட்புறவு கொள்ளுவதற்கு காணப்படும் மிகப் பெரிய தடை – மனக் கசப்பு.*

உண்மையான ***அங்கீகரிப்பு*** பெறக் கூடியதாகத் தோன்றுகின்றது. தனது நண்பர்களின் உணர்ச்சி நிறைந்த பேச்சுக்கு தேவன் செவி சாய்க்கின்றார்; பக்தி நிறைந்த வார்த்தைகள் என்று மீண்டும் மீண்டும் கூறப்படும் சில கூற்றுகள் அவரை சலிப்படையச் செய்கின்றன. தேவனுக்கு நண்பனாக, நீங்கள் அவரிடம் உண்மையாக இருக்க வேண்டும்; மனம் திறந்து பேச வேண்டும்; உங்கள் உண்மை உணர்வுகளை அப்படியே பகிர்ந்து கொள்ளவேண்டும்; இதைத்தான், தேவன் விரும்புகின்றார். அதாவது, நீங்கள் எதை பேசினால் தேவன் விரும்புவார் என்று கற்பனை செய்து பேசுவது அல்ல... உண்மையான உணர்வுகளோடு பேசுவது!

உங்கள் மனதில் மறைந்திருக்கும் சில கோப, எரிச்சல் உணர்வுகளை நீங்கள் அறிக்கையிட வேண்டியது அவசியமாக இருக்கலாம்; உங்கள் வாழ்க்கையின் சில பகுதிகளில் நீங்கள் ஏமாற்றப்பட்டதாக, ஏமாற்றமடைந்ததாக உணரலாம்; ***எல்லாவற்றையும்,*** தேவன் நமக்கு நன்மையாக மாற்றி விடுகிறாரென்ற மனமுதிர்ச்சியை நாம் அடையும்வரைக்கும், நமது தோற்றம், பின்னணி, பதில் வராத ஜெபங்கள், கடந்த காலக் காயங்கள் ஆகியவற்றை வைத்து, தேவனுக்கு விரோதமாக நமது உள்ளத்தில் கசப்பை வளர்த்துக்கொள்ளுகின்றோம். நாம் தேவனாக இருந்தால், காரியங்களை எப்படியெல்லாம் செய்திருப்போம் என்ற எண்ணம் உள்ளத்தில் எழுகின்றது. பிறரால் காயப்படுத்தப்படும் போது, பொதுவாக மக்கள் தேவனைக் குறை கூறுகின்றனர். இது, வில்லியம் பேக்கஸ் கூறுவதுபோல, “தேவனோடுள்ள உங்கள் உள்ளான சண்டைகள்” என்கின்றார்.

தேவனுடன் நட்புறவு கொள்ளுவதற்கு காணப்படும் மிகப்பெரிய தடை – மனக்கசப்பு: ***இதை*** அவர் அனுமதித்த பின், நான் ஏன் தேவனுக்குப் பிரியமான சிநேகிதனாக இருக்க வேண்டும்? இப்பிரச்சனைக்கான பரிகாரம், எவ்வளவு வேதனையான காரியமாக இருந்தாலும், உங்களுக்கு அது புரியக்கூடாத காரியமாக இருந்தாலும், தேவன் ***எப்பொழுதும்*** உங்களுக்கு சிறப்பானதையே

செய்வாரென்று உணர்ந்து கொள்ளுதல். ஆனால், நீங்கள் குணமடையத் தேவையான முதல் நடவடிக்கை – உங்கள் எரிச்சலை வெளியே விட்டு, உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துதல். வேதாகமத்தில் அநேகர் செய்ததுபோல, நீங்களும், உணருவதை அப்படியே தேவனிடம் கூறிவிடுங்கள்.[5]

மனம் திறந்த உண்மையை நமக்குக் கற்றுத்தர, தேவன் நமக்கு சங்கீதங்களின் புத்தகத்தைத் தந்திருக்கின்றார். இது ஒரு ஆராதனை வழிபாட்டு புத்தகம் மட்டுமின்றி, மனக் குமுறல்கள், சந்தேகங்கள், பயங்கள், எரிச்சல்கள், மனத்தாங்கல்கள், ஆழ்ந்த ஆவல்கள், இவற்றுடன் நன்றியறிதல், துதி, விசுவாச அறிக்கைகள் நிறைந்த ஒரு புத்தகமும் கூட. சங்கீதங்களில், உலகத்திலுள்ள அத்தனை உணர்ச்சிக் குமுறல்களும் பட்டியலிடப்பட்டுள்ளன. தாவீது மற்றும் இதர மக்களுடைய உணர்ச்சி நிறைந்த பாவ அறிக்கைகளை வாசிக்கும்போது, இப்படித்தான், நீங்கள் அவரை ஆராதிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரென்பது தெளிவாகத் தெரியும் – உங்கள் உணர்வுகள் எதையுமே மறைத்துக் கொள்ளாமல் கொட்டி விடுதல். ***"என் மனக்கிலேசத்தை அவருக்கு முன்பாக ஊற்றுகிறேன்; என் துன்பங்களையெல்லாம் கூறுகிறேன். நான் துக்கத்தில் அமிழ்ந்து போயிருக்கின்றேன்"***[6] என்று நீங்களும், தாவீதைப்போல ஜெபிக்கலாம்.

தேவனுடைய நெருங்கிய நண்பர்களனைவரும் – மோசே, தாவீது, ஆபிரகாம், யோபு மற்றும் அநேகர் – சந்தேகமென்னும் நோயால் தாக்கப்பட்டது நமக்குத் தைரியமளிக்கின்றது. ஆனால், தங்கள் சந்தேகங்களை பக்தி சுலோகங்கள் என்ற முகமூடிக்குள் மறைக்காமல், அவர்கள், வெளிப்படையாக அவற்றை எல்லாருமறியக் கூறினார்கள். அநேக வேளைகளில், நமது சந்தேகத்தை வெளிப்படுத்துதல், தேவனோடு இன்னும் நெருக்கமான உறவு கொள்ளுவதற்குரிய முதற்படியாக அமைகின்றது.

நான் விசுவாசத்தில் தேவனுக்குக் கீழ்ப்படிவதைத் தெரிந்து கொள்ள வேண்டும். உங்களுக்குப் புரியாமலிருக்கும்போதும், தேவனுடைய ஞானத்தை நம்பி, அவர் கூறுவதையெல்லாம் செய்யும் ஒவ்வொரு முறையும், உங்களுக்கும் தேவனுக்குமிடையேயுள்ள நட்புறவு வலுப்பெறுகின்றது. நாம், கீழ்ப்படிதலை, நட்பின் ஒரு

குணாதிசயமாக எடுத்துக் கொள்ளுவதில்லை. அதைப் பொதுவாக எஜமானனுக்கு, மேலதிகாரி அல்லது பெற்றோருக்கு மட்டுமே உரியதாக நாம் எண்ணிக் கொள்ளுகின்றோம். ஆயினும், கீழ்ப்படிதல், தேவனோடு நெருங்குவதற்குத் தேவையான ஒரு நிபந்தனையென்பதை இயேசு தெளிவுபடுத்தினார். *"நான் கட்டளையிட்டபடி நீங்கள் செய்தால், நீங்கள் என் சிநேகிதராயிருப்பீர்கள்"*[7] என்று அவர் கூறினார்.

இயேசு நம்மை "நண்பர்கள்" என்று அழைத்தபோது பயன்படுத்திய இச்சொல், ராஜாவின் சபையில் வீற்றிருக்கும் ராஜாவின் நண்பர்களைக் குறிக்க பயன்படுத்திய சொல் எனக் கடந்த அத்தியாயத்தில் குறிப்பிட்டிருந்தேன். இந்த நெருங்கிய நண்பர்களுக்கு விசேஷ சலுகைகள் இருந்தபோதிலும், அவர்கள் ராஜாவின் அதிகாரத்திற்குக் கீழ்ப்பட்டவர்களும், கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களாகவும் இருந்தார்கள். அப்படியே, நாமும் தேவனுக்கு நண்பர்களாக இருந்தாலும், அவருக்கு சமமானவர்கள் அல்ல! அவர் நம்முடைய அன்பின் தலைவன்; நாம் அவரைப் பின்பற்றுகின்றோம்.

பயத்தினாலோ, கட்டாயத்தினாலோ, கடமைக்காகவோ அல்ல, நாம் அவரை ***நேசிப்பதனாலும்,*** நமக்கு அவர் நன்மையானதையே செய்வாரென்று நம்புவதாலும், ***நாம்*** தேவனுக்குக் கீழ்ப்படிகின்றோம். அவர் நமக்காக செய்த எல்லாவற்றிற்கும், நன்றியை வெளிப்படுத்தவே, அவரை பின்பற்றுகின்றோம்; எவ்வளவு நெருங்கிப் பின் செல்லுகின்றோமோ, அந்த அளவுக்கு நமது நட்புறவும் ஆழமானதாக மாறுகின்றது.

நாள் பன்னிரண்டு:
தேவனோடுள்ள உங்கள் நட்பை வளர்த்து கொள்ளுதல்

கிறிஸ்தவர்கள், கடமையுணர்வினால், குற்ற உணர்வினால் அல்லது பயத்தினால்தான் தேவனுக்குக் கீழ்ப்படிகிறார்களென்று அவிசுவாசிகள் எண்ணுகின்றனர். ஆனால், அதற்கு நேர்மறையானதுதான் உண்மை. நாம் மன்னிக்கப்பட்டு, விடுதலையாக்கப்பட்டபடியால், நாம் அன்பினால் நிறைந்து கீழ்ப்படிகின்றோம் – இந்தக் கீழ்ப்படிதல் பெரிய மகிழ்ச்சியைக் கொண்டு வருகின்றது! *"பிதா என்னில்*

அன்பாயிருக்கின்றதுபோல, நானும் உங்களில் அன்பாயிருக்கின்றேன். என்னுடைய அன்பில் நிலைத்திருங்கள். நான் என் பிதாவின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து அவருடைய அன்பில் நிலைத்திருக்கிறதுபோல, நீங்களும் எனக்குக் கீழ்ப்படியும்போது என்னுடைய அன்பிலே நிலைத்திருக்கின்றீர்கள். நீங்கள் என் சந்தோஷத்தினால் நிறையும்படி இதை உங்களுக்கு சொன்னேன். ஆம், உங்கள் சந்தோஷம் நிறைந்து வழியும்''[8] என்று இயேசு கூறினார்.

இயேசு, தமது பிதாவிடம் நடந்து கொண்டதுபோல, நாமும் அவரிடம் நடக்க வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். அவர் தமது பிதாவிடம் கொண்டிருந்த உறவுதான், நம்முடன் அவர் கொள்ள விரும்பும் உறவுக்கு முன்மாதிரி. பிதா, தன்னைச் செய்யுமாறு கேட்டுக் கொண்ட எல்லாவற்றிலும், அன்பினிமித்தம், இயேசு கீழ்ப்படிந்தார்.

உண்மையான அன்பு செயற்பாடற்ற ஒன்றல்ல; அது செயல் நிறைவு கொண்டது. நம்மிடம், பிறரை நேசிக்கவும், தேவையிலிருப்போருக்கு உதவவும், நமது மூலதனங்களைப் பகிர்ந்து கொள்ளவும், வாழ்க்கையைச் சுத்தமாக வைக்கவும், மன்னிக்கவும், பிறரை அவரிடம் கொண்டு வரவும் கேட்கும்போது, உடனே கீழ்ப்படியுமாறு, அவரது அன்பு நம்மைத் தூண்டுகின்றது.

நாம் அடிக்கடி தேவனுக்காகப் *'பெரிய காரியங்கள்'* செய்யும்படி சவால் பெறுகின்றோம். உண்மையில், அன்பின் கீழ்ப்படிதலுடன் நாம் அவருக்காகச் சிறிய காரியங்களைச் செய்யும்போதும் தேவன் அதிக சந்தோஷப்படுகின்றார். அதைப் பிறர் காணாமலிருக்கலாம். ஆனால், தேவன் அதைக் கவனித்து, அவற்றை ஆராதனை செயல்களாகக் கருதுகின்றார்.

மகத்தான சந்தர்ப்பங்கள் நம் வாழ்க்கையில் ஒரே ஒரு முறை வரலாம், ஆனால், சிறிய வாய்ப்புகள் நம்மை எப்போதும் சூழ்ந்திருக்கின்றன; உண்மையைக் கூறுதல், அன்பாக இருத்தல், பிறரை ஊக்குவித்தல் போன்ற மிகச் சிறிய காரியங்கள் மூலம், நாம் தேவனுடைய முகத்தில் புன்முறுவலை வரவழைக்க முடியும். நமது ஜெபங்கள், துதிகள், காணிக்கைகளைவிட, இப்படிப்பட்ட சிறிய

கீழ்ப்படிதல்களை தேவன் பொக்கிஷங்களாக கருதுகின்றார். *"பலியைப் பார்க்கிலும், தகன பலியைப் பார்க்கிலும் கர்த்தருக்கு அதிக மகிழ்ச்சியளிப்பது எது? அவருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிவதா? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே நலம்"*[9] என்று வேதம் கூறுகின்றது.

இயேசு, தமது முப்பதாவது வயதில், யோவானால் ஞானஸ்நானம் பெற்று, தமது பொது ஊழியத்தை ஆரம்பித்தார். அந்த நிகழ்ச்சியில், *''இவர் என்னுடைய நேசகுமாரன் இவரில் நான் மிகவும் பிரியமாயிருக்கிறேன்"*[10] என்று தேவன் வானத்திலிருந்து பேசினார். தேவனுக்கு அவ்வளவு சந்தோஷமுண்டாக்கும்படி, முப்பது வருடங்களாக, இயேசு, அப்படி என்ன செய்தார்? லூக்கா 2:51ல் உள்ள ஒரே ஒரு வசனத்தைத் தவிர, இந்த மறைக்கப்பட்ட வருடங்களைக் குறித்து வேதம் நமக்கு ஒன்றுமே கூறவில்லை: *"அவர் அவர்களுடனே நாசரேத்துக்குச் சென்று, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார்.''* முப்பது ஆண்டுகள் தேவனைப் பிரியப்படுத்திய காரியம் இரண்டே வார்த்தைகளில் திரட்டித் தரப்பட்டுள்ளது: *"கீழ்ப்படிந்து வாழ்ந்தார்"!*

தேவன் உயர்வாக கருதுவதையே நானும் உயர்வானதென்று தெரிந்து கொள்ளவேண்டும். இதைத்தான் நண்பர்கள் செய்வார்கள்... அடுத்தவருக்கு முக்கியமானதெதுவோ அதைப்பற்றியே கரிசனை கொள்ளுவார்கள். நீங்கள் எவ்வளவுக்கெவ்வளவாகத் தேவனுடைய நண்பர்களாய் இருக்கின்றீர்களோ அவ்வளவாக, தேவன் கரிசனைகொள்ளும் காரியங்களில் நீங்களும் கரிசனைகொள்ளுவீர்கள். அவர் துக்கப்படும் காரியத்தைக் குறித்து துக்கப்படுவீர்கள். அவர் பிரியப்படும் காரியங்களில் களிகூருவீர்கள்.

பவுல் இதற்கு சிறந்த உதாரணமாக இருக்கின்றார். தேவனுடைய நிகழ்ச்சி நிரல், அவருடைய நிகழ்ச்சி நிரலாயிருந்தது; தேவனின் ஆழ்ந்த வாஞ்சையே இவரது உள்ளுணர்வாகவும் இருந்தது: *"என்னை மிகவும் பாதிக்கும் காரியம், உங்கள் மீதுள்ள எனது கரிசனை. இதுவே, எனக்குள் பற்றியெரிகின்ற தேவனின் உள்ளுணர்வு!"*[11] தாவீதும் இப்படித்தான் உணர்ந்தார்: *"உம்முடைய*

வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம் எனக்குள் பற்றி எரிந்துக் கொண்டிருக்கின்றது; எனவே, உம்மை நிந்திக்கிறவர்கள் என்னையும் நிந்திக்கின்றார்கள்."[12]

தேவன் எதைக் குறித்து அதிகக் கரிசனை கொள்ளுகின்றார்? தமது பிள்ளைகளின் மீட்பு! கெட்டுப் போன பிள்ளைகளனைவரையும் அவர் கண்டுபிடிக்க விரும்புகின்றார்! இதுவே, இயேசு உலகத்திற்கு வந்த காரணம். தேவனுடைய இருதயத்திற்கு மிகவும் அருமையான ஒரு காரியம் – அவருடைய குமாரனின் மரணம். இரண்டாவது அருமையான காரியம் – தமது பிள்ளைகள் அந்த செய்தியைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுதல். தேவனுடைய நண்பனாக இருக்க, உங்களைச் சுற்றியிருக்கும் எந்த மக்களுக்காக தேவன் கரிசனை கொள்ளுகின்றாரோ, அந்த மக்களுக்காக நீங்களும் கரிசனை கொள்ளவேண்டும். தேவனுடைய சிநேகிதர்கள், அவரைப் பற்றி தங்கள் சிநேகிதர்களுக்குக் கூறுவார்கள்.

எந்த அளவுக்கு நீங்கள் தேவனுடைய சிநேகிதராகின்றீர்களோ அந்த அளவுக்கு அவர் கரிசனை கொள்ளும் காரியங்களுக்காக நீங்களும் கரிசனை கொள்ள வேண்டும்.

மற்றெந்த காரியத்தையும்விட, தேவனோடுள்ள சிநேகத்தை நான் மிக அதிகமாக வாஞ்சிக்க வேண்டும். இந்த வாஞ்சையை சங்கீதங்களில் நிறைந்திருக்கக் காண்கின்றோம். வேறு எல்லாவற்றையும்விட, தேவனை அறிய வேண்டுமென்று தாவீது தணியாத தாகம் கொண்டிருந்தார். அவர் பயன்படுத்திய வார்த்தைகள், ***வாஞ்சை, தாகம், பசி, ஏங்குதல்*** போன்றவை; தேவன்மீது வைராக்கிய வாஞ்சை கொண்டிருந்தார். ***"மற்றெல்லாவற்றைப் பார்க்கிலும், அவருடைய ஆலயத்தில் தியானிக்கும் சிலாக்கியத்தையும், என் வாழ்நாட்கள் ஒவ்வொன்றிலும் அவருடைய பிரசன்னத்திலிருப்பதையும், அவருடைய ஒப்பற்ற பரிபூரணம், மகிமையில் களிகூர்ந்திருப்பதையுமே நான் நாடுகிறேன்"***[13] எனக் கூறினார். மற்றுமொரு சங்கீதத்தில், ***"ஜீவனைப் பார்க்கிலும் உமது நேசம் எனக்கு அதிகமானது"***[14] என்று கூறியிருக்கின்றார்.

தேவனுடைய ஆசீர்வாதத்தைப் பெற நாடின யாக்கோபின் வைராக்கியம் ஒரு இரவு முழுவதும் அவனைத் தேவனோடு போராடச் செய்தது. *"நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய நான் உம்மைப் போகவிடேன்"*[15] என்று அவன் கூறினான். இந்த சந்தர்ப்பத்தில் சர்வ வல்லமையுள்ள தேவன் யாக்கோபை வெற்றியடையச் செய்தார் என்பது யாவருக்கும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாகும். நாம் தேவனோடு போராடும்போது அவர் கோபப்படுவதில்லை. ஏனெனில், போராடுதலில் தேவனுடைய நேரடித் தொடர்பு தேவைப்படுகின்றது. இது நம்மை அவரோடு கிட்டிச் சேரச் செய்கின்றது. இது நமக்குள் ஒரு வைராக்கியத்தை உண்டாக்குகின்றது. நாம் தேவனைப்பற்றி வைராக்கியம் கொள்ளுவதில் தேவனும் பிரியப்படுகின்றார்.

இப்படித் தேவனோடு நட்புறவுகொள்ள ஏங்கித் தவித்த இன்னொருவர் – பவுல். அதுதான், அவருடைய முதல் ஆசை, அவருடைய மையப் பார்வை, வாழ்க்கையின் இறுதி இலக்கு; வேறு எதுவும் முக்கியமாகத் தோன்றவில்லை. இதனால்தான், தேவன், பவுலை அவ்வளவு பெரிய அளவில் பயன்படுத்தினார். பவுலின் இந்த ஏக்கத்தை, பாசத்தை, விரிவாக்கப்பட்ட ஒரு ஆங்கில வேதாகம மொழி பெயர்ப்பு அதன் முழு வேகத்தை விளக்கிக் கூறுகின்றது. *"நான் அவரை அறிந்துகொள்ள வேண்டுமென்பதே என் தீர்மானமான நோக்கம் - படிப்படியாக நான் இன்னும் ஆழமாகவும், நெருக்கமாகவும் அவரையறிந்து அவருடைய ஆள்தத்துவத்தின் அற்புதங்களை, இன்னும் வலுவாக, தெளிவாகக் கண்டு, அறிந்து புரிந்து கொள்ளுவதையே தீர்மானமாக வாஞ்சிக்கின்றேன்."*[16]

உண்மை என்னவென்றால், நீங்கள் எந்த அளவுக்குத் தெரிந்து கொள்ளுகின்றீர்களோ, அந்த அளவுக்கு அவரை நெருங்கிச் சேர முடியும். தேவனோடு நெருக்கமாக உறவு கொள்ளுதல் ஒரு தெரிந்தெடுத்தல், தற்செயல் விபத்து அல்ல. நீங்கள் அதை விரும்பி, நாடித் தேட வேண்டும். உண்மையாக நீங்கள் அதை விரும்புகின்றீர்களா – வேறு எதையும்விட அதிகமாக? எந்த அளவுக்கு அதை மதிக்கின்றீர்கள்? மற்றக் காரியங்களை விட்டு விடுமளவுக்குத் தகுதி கொண்டதுதானா? அதற்குத் தேவையான

பழக்க வழக்கங்கள், திறமைகள், இவற்றை வளர்த்துக்கொள்ள முயற்சி எடுத்தல் யாவும் பயனுள்ளதுதானா?

கடந்த காலத்தில் நீங்கள் தேவனைக் குறித்து வைராக்கிய வாஞ்சையாயிருந்து இப்பொழுது அந்த வாஞ்சையை இழந்திருக்கலாம். இதுவே, எபேசுவிலிருந்த கிறிஸ்தவர்களின் பிரச்சனையாயிருந்தது. அவர்கள் ஆதியிலே கொண்டிருந்த அன்பை... விட்டுவிட்டார்கள். அவர்கள் எல்லாவற்றையும் சரியாகத்தான் செய்து வந்தனர். ஆனால், அது கடமையினிமித்த மாகவே தவிர அன்பினாலல்ல. நீங்களும் ஆவிக்குரிய காரியங்களில் ஏனோதானோவென்று இருந்தீர்களானால் தேவன் உங்கள் வாழ்க்கையில் வேதனைகளை அனுமதித்தால் ஆச்சரியப்பட வேண்டாம்.

வேதனை, உள்ளுணர்வை பற்றி எரியச்செய்யும் ஒரு எரிபொருளாகும் – வழக்கமாக நமக்கு இல்லாத ஒரு தீவிரத்துடன் மாறும்படி அது நமக்கு சக்தியளிக்கின்றது. *“வேதனை, தேவனுடைய ஒலி பெருக்கி”* என்று சி.எஸ். லூவிஸ் கூறினார். ஆவிக்குரிய மந்தநிலையிலிருந்து நம்மை எழுப்பிவிடும் தேவனுடைய வழிமுறை அது. உங்கள் பிரச்சனைகள் உங்களுக்குக் கொடுக்கப்படும் தண்டனைகள் அல்ல. அன்பின் தேவன் தரும் விழிக்க வைக்கும் அறைகூவல்களாகும். உங்கள் மீதுள்ள ஆத்திரத்தினால் அல்ல, அன்பினாலும், அக்கறையினாலும் காரியங்களை அனுமதிக்கின்றார். உங்களைத் தம்முடன் மீண்டும் ஐக்கியப்படுத்த, என்ன வேண்டுமானாலும் அவர் செய்யத் தயாராக இருக்கின்றார். ஆனால், தேவன் மீதுள்ள உங்கள் பாசத்தை மீண்டும் பற்றியெரியச் செய்ய இன்னொரு எளிதான வழியிருக்கின்றது. அந்தப் பாசத்தைத் தரும்படி தேவனிடம் கேட்க ஆரம்பியுங்கள். அவர் அதைத் தரும் வரை விடாப்பிடியாகக் கேளுங்கள். “அன்புள்ள இயேசுவே, வேறு எல்லாவற்றையும் விட, நான் உம்மை இன்னும் நெருக்கமாக அறிந்து கொள்ள விரும்புகின்றேன்” என்ற இந்த ஜெபத்தை நாள் முழுவதும்



கூறுங்கள். *"உங்கள் முழு இருதயத்தோடும் உண்மையாய் என்னைத் தேடுவீர்களானால் - மற்றெல்லாவற்றையும்விட அதை அதிகமாக நாடுவீர்களானால் - நீங்கள் ஏமாற்றமடைய மாட்டீர்கள்"*[17] என்று, பாபிலோனில் அடிமைகளாக இருந்தவர்களைப் பார்த்து தேவன் கூறினார்.

உங்களுடைய மிக முக்கியமான உறவு

தேவனுடன் சிநேகிதம் கொள்ளும் உறவைவிட அதிக முக்கியமானது – வேறொன்றுமில்லை – முற்றிலுமாக வேறெதுவும் இல்லவே இல்லை. இது என்றென்றும் நிலைத்திருக்கும் உறவு. பவுல், தீமோத்தேயுவிடம், *"இவர்களில் சிலர் வாழ்க்கையின் மிக முக்கியமான காரியத்தை இழந்திருக்கின்றார்கள் - இவர்கள் தேவனை அறியவில்லை"*[18] என்று கூறினார். உங்கள் வாழ்க்கையின் மிக முக்கியமான காரியத்தை இழந்து நிற்கின்றீர்களா? இப்பொழுதே ஆரம்பம் செய்து, நீங்கள் அதைக் குறித்து ஏதாவது செய்யலாம். நினைவில் வையுங்கள் – இது உங்களது தெரிந்தெடுத்தல். நீங்கள் எந்த அளவுக்குத் தெரிந்தெடுக்கின்றீர்களோ, அந்த அளவுக்கு தேவனோடு நீங்கள் நெருங்கலாம்.

நாள் பன்னிரண்டு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: தேவனிடம் உள்ள எனது நெருக்கம் எனது தெரிந்துகொள்ளுதலில்தான் இருக்கின்றது.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார்..."* யாக்கோபு 4:8

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தேவனுக்கு நெருக்கமான வளர்ச்சியடைய, நான் நடைமுறைக்கேற்ற எந்தெந்தக் காரியங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும்?

13

தேவனைப் பிரியப்படுத்தும் ஆராதனை

உன் தேவனாகிய கர்த்தரிடத்தில்
உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும்,
உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும்
அன்புகூருவாயாக.
மாற்கு 12:30 (புதிய மொழியாக்கம்)

தேவன் உங்களுக்குரிய எல்லாவற்றையும் கேட்கின்றார்.

உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியை மட்டும் தேவன் விரும்புகிறவரல்ல; உங்கள் *முழு* இருதயம், *முழு* ஆத்துமா, *முழு* மனது, *முழு* பலன் யாவையும் அவர் கேட்கின்றார். அரைகுறை மனதுள்ள அர்ப்பணிப்பு அவருக்கு உகந்தது அல்ல; அரைகுறை கீழ்ப்படிதலிலும் அவருக்கு விருப்பமில்லை. உங்களது நேரம், பணம் ஆகியவற்றில் உள்ள, மீதமான காரியத்தை மட்டும் நீங்கள் கொடுப்பதில் அவருக்கு நிச்சயமாக பிரியமில்லை. உங்கள் முழு தியாகம் வேண்டுமேயல்லாமல், உங்கள் வாழ்க்கையின் துண்டு, துணுக்குகள் அல்ல!

தொழுதுகொள்ள வேண்டிய சிறந்த இடம், நேரம், முறை ஆகியவற்றை குறித்த காரியங்களை ஒரு சமாரியப் பெண் ஒரு முறை இயேசுவுடன் விவாதிக்க முற்பட்டாள். இப்படிப்பட்ட வெளிப்படையான காரியங்கள் முக்கியமற்றவை என்று இயேசு கூறினார். நீங்கள் எங்கே ஆராதிக்கின்றீர்களென்பதைவிட ***ஏன்*** ஆராதிக்கின்றீர்களென்பது மிக முக்கியம்; ***எந்த அளவுக்கு*** நீங்கள் ஆராதிக்கும்போது தேவனுக்கு உங்களைக் கொடுக்கின்றீர்கள் என்பது,

எங்கே ஆராதிக்கின்றீர்கள் என்பதை விட முக்கியம். ஆராதிப்பதற்கு, சரியான வழியும் உண்டு; தவறான வழியும் உண்டு. *"தேவனைப் பிரியப்படுத்தும் விதத்தில் நன்றியோடு நாம் அவரை ஆராதிப்போமாக"*[1] என்று வேதம் கூறுகின்றது. தேவனைப் பிரியப்படுத்தும் ஆராதனைக்கு நான்கு குணாதிசயங்கள் உண்டு.

நமது ஆராதனை சரியானதாக (accurate) **இருக்கும்போது, அதில் தேவன் பிரியப்படுகின்றார்.** "தேவன் இப்படிப்பட்டவராக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன்" என்று மக்கள் அடிக்கடி கூறுவதுண்டு. தாங்கள் ஆராதிக்க விரும்பும் தேவன் இப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தை இவ்வாறு பகிர்ந்துக் கொள்ளுகின்றனர். ஆனால், நாம் அப்படி, நமது வசதிக்கேற்ப அல்லது கொள்கை ரீதியாகச் சரியான தேவனைப் பற்றிய ஒரு பிம்பத்தை உருவாக்கி, அதை ஆராதிப்பது கூடாத காரியம். அது விக்கிரக வணக்கம்.

ஆராதனை, வேத சத்தியங்களின் மீது கட்டப்பட்டிருக்க வேண்டுமேயொழிய நமது கருத்துக்கள் மீது கட்டியெழுப்பப் படக்கூடாது. *"உண்மையாகத் தம்மைத் தொழுது கொள்ளு கின்றவர்கள், தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும் என்று பரமபிதா விரும்புகின்றார்"*[2] என்று இயேசு, சமாரிய ஸ்திரீயிடம் கூறினார்.

"உண்மையோடு தொழுது கொள்ளுதல்" என்றால், தேவன் வேதாகமத்தில் எப்படி வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றாரோ அப்படித் தொழுது கொள்ளுதல்.

நமது ஆராதனை உண்மையானதாக (authentic) **இருக்கும்போது அதில் தேவன் பிரியப்படுகின்றார்.** "நீங்கள் ஆவியோடு தொழுதுகொள்ள வேண்டும்" என்று இயேசு கூறியபொழுது அவர் குறிப்பிட்டது பரிசுத்த ஆவியானவரையல்ல, உங்கள் ஆவியை; தேவ சாயலில் உண்டாக்கப்பட்டிருக்கின்ற நீங்கள், ஒரு சரீரத்தில் வசிக்கும் ஆவி; உங்கள் ஆவி, தமது ஆவியுடன் உறவாடிக் கொண்டிருக்கும்படியே, தேவன் உங்களை வடிவமைத்திருக்கின்றார். உங்கள் ஆவி, தேவனுடைய ஆவிக்குப் பதிலளிப்பதுதான் ஆராதனை.

"உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு இருதயத்தோடும், ஆத்தும வோடும் நேசி" என்று இயேசு கூறும்பொழுது, உங்கள் ஆராதனை, உண்மையானதாகவும், இருதயத்திலிருந்து எழுந்து வருவதாகவுமிருக்க வேண்டுமென்றும் அவர் கூறுகின்றார். சரியான வார்த்தைகளைக் கூறுவது மட்டும் ஆராதனையாகாது. நீங்கள் சொல்லுவதில் உங்கள் மனது இருக்க வேண்டும். இருதயத்திலிருந்து எழும்பாத துதி, துதியல்ல! அது, தேவனை நிந்திக்கும் பயனற்ற ஆராதனை.

தேவனுக்குப் பிரியமான ஆராதனை, ஆழ்ந்த உணர்வு பூர்வமானது; ஆழ்ந்த பிரமாணங்களுக்கேற்றது; நாம் நமது இருதயம், மூளை இரண்டையுமே பயன்படுத்துகின்றோம்.

நாம் ஆராதிக்கும்போது, நமது வார்த்தைகளுக்கு அப்பால், நமது இருதயங்களின் மனப்பான்மை எப்படியிருக்கின்றதென்பதை தேவன் கவனிக்கின்றார். *"மனிதன் முகத்தைப் பார்க்கின்றான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கின்றார்"*[3] என்று வேதம் கூறுகின்றது.

ஆராதனையென்பது தேவனில் களிகூருவதாக இருப்பதால், அது உங்கள் உணர்ச்சிகளையும் உள்ளடக்கியது; ஆழ்ந்த உணர்வுகளுடன் தம்மை நீங்கள் ஆராதிக்க வேண்டுமென்றுதான், தேவன் உங்களுக்கு உணர்வுகளைக் கொடுத்திருக்கின்றார் – ஆனால், அந்த உணர்வுகள் போலியாக இருக்கக் கூடாது; உண்மையானதாக இருக்க வேண்டும். தேவன் மாய்மாலத்தை வெறுக்கின்றார். ஆராதனையில் வெளிப்படைப் பகட்டு, பாசாங்கு செய்தல், போலித்தனம் ஆகியவற்றை அவர் விரும்பமாட்டார்; அவர் உங்களுடைய உண்மையான அன்பை விரும்புகின்றார். நாம், குறைவுள்ள விதத்தில் ஆராதிக்க முடியும்; ஆனால், உண்மையற்ற விதத்தில் ஆராதிக்க முடியாது.

உண்மை மட்டுமிருந்தால் போதாது; நீங்கள் உண்மையான மனதோடு, தவறாக ஆராதிக்கலாம். அதனால்தான் ஆவியும், உண்மையும் தேவை. ஆராதனை சரியானதாகவும், அங்கீகரிக்கப்படக் கூடியதாகவுமிருக்க வேண்டும். தேவனுக்குப்

பிரியமான ஆராதனை ஆழ்ந்த உணர்வுகளுடன் (இருதயம்), ஆழ்ந்த கொள்கையுள்ளதாகவுமிருக்க (சிந்தை) வேண்டும். நமது இருதயத்தையும், மூளையையுங்கூட நாம் பயன்படுத்த வேண்டும்.

இசையினால் உணர்வுகள் உந்தப்படுவதை இன்று அநேகர் ஆவியினால் அசைக்கப்படுவதாக எண்ணிக் கொள்ளுகின்றார்கள்; இவை இரண்டும் ஒன்றல்ல; உண்மை ஆராதனையென்பது, உங்கள் ஆவி... ஏதோ ஒரு இசைக்கு அல்ல, தேவனுக்குப் பதிலளிப்பதாகும். உண்மையில், சில உணர்வுகளைத் தூண்டும் பாடல்கள், தேவன் மீது கருத்து செலுத்துவதைத் தடுத்து, நமது உணர்வுகளின் மீது மையம் கொள்ளுகின்றன. ஆராதனையில், உங்களைத் திசை திருப்பும் மிகப் பெரிய காரியம் – நீங்களேதான்; மற்றவர்கள் உங்களைக் குறித்து என்ன நினைப்பார்களோ என்ற கவலைகள், அல்லது மற்ற காரியங்களில் உங்களுக்கு உள்ள ஆர்வங்கள்.

தேவனுக்குப் பொருத்தமான அல்லது அங்கீகரிக்கப்படக்கூடிய விதத்தில் துதியை ஏறெடுப்பதில், கிறிஸ்தவர்கள் அடிக்கடி வேறுபடுகின்றார்கள்; இதில் எழும்பும் வாக்குவாதங்கள் பொதுவாக, தனித்தாள் சுபாவம், பின்னணி இவற்றிலுள்ள வேறுபாடுகளையே பிரதிபலிக்கின்றன. வேதாகமத்தில் அநேக விதமான ஆராதனை (துதி) வடிவங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன; அவற்றில் சில பின்வருவன: பாவ அறிக்கை செய்தல், பாடுதல், சத்தமிடுதல், மரியாதை கொடுத்து நிற்பது, முழங்காற்படியிடுதல், நடனமாடுதல், மகிழ்ச்சி ஆரவாரம் செய்தல், சாட்சி கூறுதல், இசைக் கருவிகளை ஒலித்தல், கைகளை உயர்த்துதல் போன்றவை[4]. தேவன் உங்களுக்குக் கொடுத்திருக்கும் பின்னணி, தனித்தாள் சுபாவம் (ஆள்துவம்) இவற்றை அடிப்படையாகக் கொண்டு தேவன் மீதுள்ள உங்கள் அன்பை, அங்கீகரிக்கும் விதத்தில் அளிப்பது தான் மிகச்சிறந்த ஆராதனை முறையாகும்.

உங்களுக்கு தேவனிடமுள்ள அன்பை மிகவும் உண்மையாக வெளிப்படுத்தும் ஆராதனை வடிவமே சிறந்த ஆராதனையாகும்.

என் நண்பன், கேரி தாமஸ் ஒரு முறை இவ்வாறு கூறினார்: "அநேக கிறிஸ்தவர்கள் ஆராதனை என்ற ஒரு குறிப்பிட்ட சக்கரப் பாதையில் அப்படியே சிக்கிக் கொண்டிருக்கின்றார்கள் – அதிருப்தியளிக்கும் வழக்கமான ஒரே மாதிரி பாதையில் ஆராதிக்கின்றார்கள்; ஏனெனில், தேவன் தங்களைத் தனிப்பட்ட சிறப்பான முறையில் வடித்திருக்கும் அமைப்புக்குப் பொருந்தாத சில ஆராதனை முறைகளையும், தியான வழிபாடுகளையும் உபயோகப்படுத்தும்படி தங்களையே கட்டாயப்படுத்திக் கொண்டு, தேவனோடு உயிர்த்துடிப்புள்ள சிநேகம் கொள்ளாமல் ஆராதிக்கின்றார்கள்."

அவர் பிரமிப்புடன் கூறியது: *''தேவன் நம்மை மனதார, வேண்டுமென்றே வெவ்வேறு விதமாகப் படைத்திருக்கும்போது, ஏன் எல்லாரும் தேவனை ஒரே விதமாக அன்பு காண்பித்து ஆராதிக்க வேண்டும்?''* அவர் அநேக கிறிஸ்தவ நூல்களை வாசித்துவிட்டு, அநேக முதிர்ந்த விசுவாசிகளிடம் நேர்முகமாகப் பேட்டி கண்டு பேசினார். கேரி கண்டுபிடித்த காரியம்: கிறிஸ்தவர்கள் 2000 ஆண்டுகளுக்கு மேலாக, தேவனோடு நெருக்கமான உறவையனுபவிக்க, பல்வேறு வித்தியாசமான பாதைகளைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள் – வெளியில் உலாவி தேவனை அனுபவித்தல், பாடுதல், வாசித்தல், நடனமாடுதல், கலை உருவாக்குதல், பிறருக்கு சேவை செய்தல், தனிமையாக இருத்தல், ஐக்கியத்தை அனுபவித்தல் இன்னும் இதுபோன்ற ஏராளமான செயல்பாடுகளில் பங்கெடுத்தல்.



'பரிசுத்த பாதைகள்' (Sacred Pathways) என்ற தனது புத்தகத்தில், மக்கள் தேவனைக் கிட்டிச் சேரும் ஒன்பது வழிகளை கேரி அடையாளம் காண்பிக்கின்றார். ***இயற்கைப் பிரியர்*** (Naturalists) – அறைகளுக்கு வெளியே, திறந்த வெளிகளில் இயற்கை சூழ்நிலையில், ஆராதிக்க அதிகமாகத் தூண்டப்படுகின்றார். ***உணர்வு மேலிடும் உணர்வாளர்கள்*** (Sensates), தங்கள் உணர்வுகள் மூலம், தங்கள் கண்களுக்கு விருந்தளிக்கும், நாவுக்கு சுவை கூட்டும், நுகர்வதற்கு இன்பமளிக்கும், ஸ்பரிச உணர்வுக்கு இடந்தரும் ஐம்புலன்களுக்குமுரிய ஆராதனை முறைகளில் பிரியப்படுகின்றார்கள். வெறும் செவிக்கு மட்டும் விருந்து கிடைப்பது

அவர்களுக்குத் திருப்தியளிக்காது. *பாரம்பரியர்கள்* (Traditionalists), சடங்குகள், லித்தானியா போன்ற வழிபாட்டு முறைகள், அடையாளக் குறியீடுகள், மாற்றமில்லாத அமைப்புகள் மூலம் தேவனை நெருங்குகின்றனர். ***துறவு மனப்பான்மையினர்*** (Ascetics), தனிமையில், எளிமையாக ஆராதிக்க விரும்புகின்றனர். ***தீவிரவாதிகள்*** (Activists), தீமையை எதிர்த்து, அநீதிக்கு விரோதமாகப் போராடி, உலகத்தை ஒரு நல்ல இடமாக மாற்றப் பிரயாசப்பட்டு ஆராதிக்கின்றனர். ***கரிசனை கொள்ளுபவர்கள்*** (Caregivers), பிறரை நேசித்து, அவர்கள் தேவைகளைச் சந்திப்பதன் மூலம் தேவனை நேசிக்கின்றார்கள். ***பரவசமடைபவர்கள்*** (Enthusiasts), கொண்டாட்டங்கள் மூலம் தேவனை நேசிக்கின்றார்கள். ***சிந்தனையாளர்கள்*** (Contemplatives), புகழுவதன் மூலமாக ஆராதிக்கின்றார்கள். ***அறிவாளர்கள்*** (Intellectuals), தங்கள் மனதைக் கொண்டு கற்பதன் மூலம் தேவனை நேசிக்கின்றார்கள்.[5]

“எல்லாருக்கும் பொருந்தும் ஒரே அளவு” என்ற ஆராதனை முறை அல்லது தேவனோடு நட்புக்கொள்ளும் முறை என்று எதுவும் கிடையாது. நீங்கள் யாராக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றாரோ, அவர்களாகவே இருக்க முயலுங்கள்; அப்படியிருப்பதால் நீங்கள், நீங்களாகவே இருப்பதையே தேவன் விரும்புகின்றார்; ***“இந்த வகையான ஜனங்களையே பிதா தேடிக் கொண்டிருக்கின்றார்; தமக்கு முன்பாக எளிமையாக, உண்மையாகத் தாங்களாகவே இருக்கும் மக்கள்.”***[6]

நமது ஆராதனை சிந்தனையுள்ளதாக இருக்கும்போது அதில் தேவன் பிரியப்படுகின்றார். ***“தேவனை உங்கள் முழு மனதோடும் நேசியுங்கள்”*** என்ற இயேசுவின் கட்டளை, புதிய ஏற்பாட்டில் நான்கு முறை கூறப்பட்டுள்ளது. சிந்தனையின்றி பாடப்படும் பாடல்கள், வழக்கமான ஜெப முறைகள், கவலையீனமாகக் கூறப்படும், “தேவனுக்கு மகிமை” இவற்றில் தேவன் பிரியப்படுகின்றவரல்ல; ஆராதனை மனமற்றதாக இருந்தால் அது அர்த்தமற்றதாக இருக்கும். நீங்கள் உங்கள் மனதைப் பயன்படுத்த வேண்டும்.

இயேசு, அர்த்தமற்ற ஆராதனையை, “வீணான வார்த்தைகள்”[7] என்று கூறினார். வேதாகம வார்த்தைகள் கூட அலுப்பு தரும்

வார்த்தைகளாக... மிதமிஞ்சிப் பயன்படுத்தப்படுவதால், மாறிப் போகலாம். அவற்றின் பொருளை நினைப்பதைக்கூட நிறுத்தி விடுகின்றோம். புதிய வார்த்தைகளைப் பயன்படுத்தி, புதிய வழிகளில் தேவனை கனப்படுத்துவதை விட, ஆராதனையில் அலுப்பூட்டும் பழைய வார்த்தைகளை பின்பற்றுவது எளிதாகத் தெரியும். அதனால்தான், வேதாகமத்தை வெவ்வேறு மொழி பெயர்ப்புகளில் வாசியுங்களென்று நான் உங்களை ஊக்கப்படுத்துவதுண்டு. அது உங்கள் ஆராதனை வெளிப்பாட்டை விரிவுபடுத்தும்.

நாள் பதின்மூன்று:
தேவனைப் பிரியப்படுத்தும் ஆராதனை

வழக்கமான ***'துதி', 'அல்லேலூயா', 'நன்றி',*** அல்லது ***'ஆமென்'*** என்ற வார்த்தைகளுக்குப் பதிலாக, "நாங்கள் உம்மைத் துதிக்க விரும்புகின்றோம்" என்று கூறுவதைவிட அதே பொருள் தரும் புதிய வார்த்தைகள், பாராட்டுகின்றோம், மதிக்கின்றோம், மரியாதை செலுத்துகின்றோம், கனப்படுத்துகின்றோம், புகழுகின்றோம், மெச்சிக்கொள்ளுகின்றோம் போன்றவற்றை பயன்படுத்தலாம்.

அத்துடன் *திட்டவட்டமாகக் குறிப்பாகப்* பேசவேண்டும். உங்களை யாராவது ஒருவர் அணுகி, "நான் உங்களைப் பாராட்டுகின்றேன்" என்று பத்து முறை கூறினால், நீங்கள், ***'எதற்காக?'*** என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். இருபது குறிப்பில்லாத, தெளிவில்லாத பொதுவான காரியங்களைவிட, இரு குறிப்பான பாராட்டுகள் பெறுவது உங்களுக்கு அர்த்தமுள்ளதாகத் தெரியும்; தேவனுக்கும் அப்படித்தான்.

மற்றுமொரு முறை, தேவனைக் குறிக்கும் வெவ்வேறு பெயர்களைப் பட்டியலிட்டு, அவற்றின் சிலவற்றில் கவனம் செலுத்துதல். தேவனுடைய பெயர்கள் ஒரு கட்டுப்பாட்டுக்குட்பட்டவையல்ல; அவை, அவருடைய வெவ்வேறு குணாதிசயங்களைப் பற்றிக் கூறுகின்றன. பழைய ஏற்பாட்டில், தேவன் படிப்படியாக தமது புதிய நாமங்களை இஸ்ரவேலருக்கு அறிமுகம் செய்து வைத்து, தம்மை அவர்களுக்கு வெளிப்படுத்தினார்; தமது நாமத்தைத் துதிக்கும்படி அவர் கட்டளையிடுகின்றார்.[8]

கூட்டு வழிபாடுகளிலும், சிந்தித்து செயல்படுகிறவர்களாக நாம் இருக்க வேண்டுமென்றும் தேவன் விரும்புகின்றார். 1 கொரிந்தியர் 14ஆம் அதிகாரத்தில், பவுல் ஒரு முழு அதிகாரத்தையே இதற்குப் பயன்படுத்தி, இறுதியில், *''சகலமும் ஒழுங்கும், கிரமுமாகச் செய்யப்படக்கடவது''*[9] என்று கூறி முடிக்கின்றார்.

இது தொடர்பாக மற்றுமொரு காரியம்: நமது துதி ஆராதனைகள், அதில் கூடி வந்திருக்கும் அவிசுவாசிகளுக்கும் புரியக்கூடியதாக இருக்க வேண்டுமென்று பவுல் வலியுறுத்துகின்றார். *"நீங்கள் ஆவியோடு கர்த்தரைத் துதித்துக்கொண்டிருக்கும்போது, அந்நியர் அங்கு இருந்தால், நீங்கள் கூறுவது இன்னதென்று புரியாதிருந்தால் எப்படி அவர்கள் 'ஆமென்' என்று கூறுவார்கள்? நீங்கள் ஒருவேளை தேவனை அற்புதமான விதத்தில் ஆராதித்துக் கொண்டிருக்கலாம். ஆனால், வேறு யாருக்கும் அதனால் பயனில்லை.''*[10] உங்கள் துதி ஆராதனைக்கு வரும் அவிசுவாசிகளைக் குறித்து நாம் உணர்வுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்பது வேதாகமக் கட்டளை. இக்கட்டளையை அலட்சியம் செய்தல் என்பது, கீழ்ப்படியாமையையும், அன்பற்ற நிலையையுமே வெளிப்படுத்துகின்றன. இதை முற்றிலும் விளக்க ''நோக்கத்தினால் வழிநடத்தப்படும் திருச்சபை'' என்ற புத்தகத்திலுள்ள "ஆராதனை ஒரு சாட்சியாக இருக்கக் கூடும்" என்ற அத்தியாயத்தைப் பாருங்கள்.

நமது ஆராதனை நடைமுறைக்கு உகந்ததாக இருக்கும்போது, அதில் தேவன் பிரியப்படுகின்றார். *''நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவ பலியாக ஒப்புக் கொடுங்கள் - இதுவே, நீங்கள் செய்யும் ஆவிக்குரிய ஆராதனை செயல்''*[11] என்று வேதம் கூறுகின்றது. தேவன் ஏன் உங்கள் சரீரத்தைக் கேட்கின்றார்? *"நீங்கள் ஆவிகளை ஒப்புக் கொடுங்கள்"* என்று ஏன் சொல்லவில்லை? ஏனெனில், உங்கள் சரீரமின்றி நீங்கள் இந்தப் பூமியில் எதையும் செய்ய முடியாது. நித்தியத்தில் நீங்கள் புதிய, திருத்தியமைக்கப்பட்ட சரீரத்தைப் பெறுவீர்கள்; ஆனால், இங்கு பூமியிலிருக்கும்போது, தேவன் ''உனக்கு இருக்கும் சரீரத்தைக் கொடு'' என்று கேட்கின்றார். அவர் ஆராதனையை நடைமுறைக்கேற்ற விதத்தில் செயல்படுத்துகின்றார், அவ்வளவுதான்.

சில சமயம் சிலர், "இன்றிரவு நான் கூட்டத்திற்கு வரமுடியாது; ஆனால், ***ஆவியில்*** நான் உங்களுடன் இருப்பேன்!" என்று கூறுவார்கள். இதற்கு என்ன பொருள்? ஒன்றுமேயில்லை! பயனற்ற பேச்சு. இந்த உலகத்தில் நீங்களிருக்கும்வரை, உங்கள் சரீரம் எங்கேயோ, அங்கேதான் உங்கள் ஆவியுமிருக்கும்; சரீரம் இல்லாத இடத்தில் ஆவியுமிருக்காது.

உண்மையான ஆராதனை தேவனுடைய வார்த்தையில் வேர் கொண்டது.

ஆராதனையில் நாம் நமது சரீரத்தை ***ஜீவ*** பலியாக ஒப்புக் கொடுக்க வேண்டும். பொதுவாக நாம் 'பலி' என்பதை மரித்த ஒன்றுடனேயே தொடர்புபடுத்துகின்றோம். ஆனால், தேவன் உங்களை ஜீவ பலியாகக் கேட்கின்றார். நீங்கள் அவருக்காக வாழவேண்டுமென்று விரும்புகிறார். ஆயினும், உயிருள்ள பலியிடலில் உள்ள ஒரு பிரச்சனை என்னவெனில், அது பலிபீடத்தினின்று அவ்வப்பொழுது ஊர்ந்து நகர்ந்து போய்விடக்கூடும்; நாம், ஞாயிற்றுக்கிழமை, "முன்னேறுவோம், கிறிஸ்துவின் போர் வீரரே" என்று பாடுகின்றோம்; ஆனால், திங்கட்கிழமை நழுவிவிடும் வீரராக மாறிவிடுகின்றோம்!

பழைய ஏற்பாட்டில் உள்ள வெவ்வெறு விதமான ஆராதனை பலிகளில் தேவன் பிரியம் கொண்டார் – காரணம், அது இயேசுவின் சிலுவை பலியை முன்னறிவித்தபடியால்! இப்போது வேறு விதமான துதி ஆராதனைகளில் அவர் பிரியப்படுகின்றார்: நன்றி கூறுதல், துதித்தல், தாழ்மைப்படுதல், மனந்திரும்புதல், காணிக்கையாக பணம் செலுத்துதல், ஜெபம், பிறருக்கு சேவை செய்தல், தேவையிலிருப்போருடன் பகிர்ந்து கொள்ளுதல் போன்றவை.[12]

உண்மை ஆராதனைக்கு கிரயம் உண்டு. தாவீது அதையறிந்தபடியால், ***"நான் எதுவும் இழக்கத் தேவையில்லாத பலிகளை என் கர்த்தராகிய தேவனுக்கு நான் செலுத்த மாட்டேன்."***[13] என்றார்.

ஆராதனைக்கு செலுத்த வேண்டிய ஒரு விலைக்கிரயம் – நமது சுயநலத்தன்மை. நீங்கள் உங்களையும், தேவனையும் ஒரே நேரத்தில் உயர்த்த இயலாது. பிறர் பார்க்க வேண்டுமென்றோ, உங்களையே

மகிழ்விக்க வேண்டுமென்றோ நீங்கள் ஆராதிக்கக் கூடாது. உங்கள் மேலுள்ள கவனத்தை முற்றிலும் எடுத்துவிட வேண்டும்.

"உன் தேவனாகிய கர்த்தரை உன் முழு பலத்தோடும் நேசி" என்று இயேசு கூறியபோது, ஆராதனைக்கு முயற்சியும் சக்தியும் தேவை என்பதை அவர் சுட்டிக் காண்பிக்கின்றார். அது எப்போதும் வசதியாக இருக்காது; சில சமயம் நாம் மனதைக் கட்டுப்படுத்தி, ஆராதிக்க வேண்டியதிருக்கும் – அது மனதார கொடுக்கப்படும் பலியாகவும் இருக்க வேண்டும். ஏனோதானோவென்று செய்யும் ஆராதனை முரண்பாடானது. அது ஆராதனை அல்ல!

அவரைத் துதிக்க வேண்டுமென்ற உணர்வே இல்லாதபோதும் (களைப்பான நேரங்கள், படுக்கையிலிருந்து எழுந்தவுடன், பலனற்று கிடக்கின்ற நேரங்கள்) அவரை நாம் துதித்தால், அதில் தேவன் பிரியப்படுகின்றார்.

இங்கிலாந்திலுள்ள ஆராதனைத் தலைவர் மாட் ரெட்மேன் (Matt Redman), ஆராதனையின் உண்மைப் பொருளைத் தனது போதகர், சபைக்கு எப்படி எடுத்துச் சொன்னாரென்று கூறினார். ஆராதனையென்பது, இசைக்கும் மேற்பட்ட ஒன்று என்பதை போதிக்க, அவர் சில காலத்திற்கு அவர்களுடைய ஆராதனையிலிருந்து இசையைத் தடை செய்துவிட்டார். வேறு வழிகளில் ஆராதிக்கக் கற்றுக் கொண்டார்கள். அந்த நாட்களின் இறுதியில் மேட், தனது பிரசித்தி பெற்ற "ஆராதிக்கும் இருதயம்" என்ற பாடலை இயற்றினார்.

> பாடலுக்கு மேற்பட்டதைத் தருவேன்
> உமக்குப் பாடல் மட்டும் தேவைப்படவில்லை
> வெளியே தோன்றுவதைவிட்டு
> நீர் ஆழமாகத் தேடி ஆராய்கின்றீர்
> நீர் என் இருதயத்திற்குள் பார்க்கின்றீர்[14]

இந்தப் பொருளின் மையப்பகுதி (இதயப் பகுதி), இதயத்தைப் பற்றியது.

நாள் பதின்மூன்று

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: தேவன் ஏன் எல்லாவற்றையும் கேட்கின்றார்**.**

மனனம் செய்ய ஒரு வசனம்: "உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூருவாயாக." மாற்கு 12:30

ஆய்வுக்கான ஒரு கேள்வி: இப்போது தேவனுக்கு எது அதிகப் பிரியம்**? –** என் பொது ஆராதனையா**?** அல்லது என் தனிப்பட்ட ஆராதனையா**?** இதைக் குறித்து நான் என்ன செய்ய வேண்டும்**?**

14

தேவன் தூரத்தில் இருப்பதுபோலத் தோன்றும்போது...

தேவன் தமது மக்களைவிட்டுத் தம்மை மறைத்துக் கொண்டார்; ஆனால், நானோ அவரை நம்பி என் நம்பிக்கையை அவர்மீது வைக்கின்றேன்
ஏசாயா 8:17 (புதிய மொழியாக்கம்)

உங்கள் உணர்வுகள் என்ன கூறினாலும், தேவன் உண்மையானவர் என்பது மாற்றப்பட முடியாத கருத்து.

உங்கள் வாழ்க்கையில் எல்லாம் சரியாக இருக்கும்போது, செழிப்பாக நடைபெறும்போது, தேவனை ஆராதிப்பது எளிது. உணவு, நண்பர்கள், குடும்பம், ஆரோக்கியம், மகிழ்ச்சியான சூழ்நிலைகள் – இவை யாவையும் அவர் தரும்போது, அவரை ஆராதிப்பது சுலபம். ஆனால், சூழ்நிலைகள் எப்போதுமே மகிழ்ச்சியாக இருப்பதில்லை. அப்போது தேவனை எப்படி ஆராதிக்கின்றீர்கள்? தேவன் மில்லியன் மைல்களுக்கு அப்பால் இருப்பதாகத் தோன்றும்போது என்ன செய்கின்றீர்கள்?

வேதனைகள் இருந்தபோதிலும் துதித்தல், உபத்திரவத்தின் போதும் தேவனுக்கு நன்றி கூறுதல், சோதிக்கப்படும்போதும் அவரை நம்புதல், துன்பப்படும்போதும் சரணடைந்து அர்ப்பணித்தல், அவர் தூரத்திலிருப்பதுபோலத் தோன்றும்போதும் அவரை நேசித்தல்; இதுதான் ஆராதிப்பதன் ஆழ்ந்த எல்லை.

பிரிந்திருத்தல், பேசாதிருத்தல் இவற்றின் மூலமே நட்புறவுகள் சோதிக்கப்படுகின்றன. சில வேளைகளில், சரீரப்பிரகாரமாகத்

தூரத்தில் பிரிந்திருக்க வேண்டியதாகிறது; உங்களால் உங்கள் நண்பர்களிடம் பேச முடியவில்லை. தேவனோடுள்ள உங்கள் சிநேகத்திலும், நீங்கள் எப்போதுமே அவருக்கு நெருங்கியிருக்கும் ***உணர்வு*** இல்லாமல் இருக்கக்கூடும்; "எந்தவொரு உறவிலும், நெருக்கமாக இருக்கும் நேரமும் உண்டு; தூர இருப்பது போன்ற நேரமுமுண்டு. தேவனோடுள்ள உறவு, எவ்வளவு நெருக்கமான உறவாக இருந்தாலும், அது நெருங்கியும், தூரமாகவும் இருந்து கொண்டேதானிருக்கும்"[1] என்று பிலிப்யான்ஸி ஞானமாகக் கூறினார். அப்படிப்பட்ட நேரங்களில்தான், ஆராதிப்பது கடினமாக இருக்கும்.

உங்கள் சிநேக உறவு முதிர்ச்சியடைய, தேவன், ***பிரிவு போன்று*** காட்சிதரும் நேரங்களை அனுமதித்து பரிசோதிப்பார் – அவர் அப்படியே நம்மைக் கைவிட்டு விட்டது போன்ற உணர்வு. தேவன் மில்லியன் மைல்களுக்கு அப்பால் இருப்பது போன்ற உணர்வு. இப்படிப்பட்ட ஆவிக்குரிய வறட்சி, சந்தேகம், தேவனிடமிருந்து பிரிவு கொண்ட நாட்களை "ஆத்துமாவின் இருண்ட இரவு" என்று சிலுவையின் புனித ஜான் என்பவர் அழைக்கின்றார். ஹென்றி நூவென் அவற்றை, 'பிரசன்னமில்லாத ஊழியம்' என்றார். A.W. டோசர் "இரவின் ஊழியம்" என்றார். மற்றவர்கள் அதை, "இருதயத்தின் குளிர் காலம்" என்றனர்.

அநேகமாக, இயேசுவை தவிர்த்து, மற்ற யாவரையும்விட தேவனுக்கு நெருக்கமாக இருந்தவன் தாவீது. ***"என் இருதயத்துக்கு ஏற்றவன்"***[2] என்று தேவன் மகிழ்ச்சியுடன் அவனைக் குறித்துக் கூறினார். ஆயினும், அடிக்கடி தேவன் இல்லாதது போன்ற உணர்வடைந்து தாவீது புலம்புவதைக் காண்கின்றோம். ***"கர்த்தாவே, ஏன் தூரத்தில் நிற்கின்றீர்? நான் உம்மை நோக்கிக் கூப்பிடும்போது ஏன் மறைந்து கொள்ளுகின்றீர்?***[3] ***ஏன் என்னைக் கைவிட்டீர்? ஏன் என்னை விட்டுத் தூரத்திலே நிற்கின்றீர்? உம்மை நோக்கிக் கதறிச் சொல்லும் வார்த்தைகளை ஏன் கேளாதவர்போல மவுனமாயிருக்கின்றீர்?***[4] ***ஏன் என்னை விட்டு விலகி விட்டீர்?"***[5]

தேவன் உண்மையில் தாவீதை விட்டு விடவில்லை; உங்களையும் அவர் விட்டுவிலக மாட்டார்; ***"நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை"***[6] என்று

மீண்டும் மீண்டும் வாக்குப்பண்ணுகின்றார். ஆனால், ***"நீங்கள் எப்போதும் என் பிரசன்னத்தை உணர்ந்துகொள்வீர்கள்"*** என்று தேவன் வாக்குப்பண்ணவே இல்லை. சில சமயங்களில் தமது முகத்தை அவர் மறைப்பதாக ஒத்துக் கொள்ளுகின்றார்[7] MIA-Missing in Action - "செயல்பாட்டின் நேரத்தில் காணாமல் போனவர்" போல சில சமயங்களில் நமது வாழ்க்கையில் தோன்றுகின்றார்.

நாள் பதினான்கு:

தேவன் தூரத்தில் இருப்பதுபோலத் தோன்றும்போது...

ஃப்ளாயிட் மெக்ளங் அதை இவ்வாறு விவரிக்கின்றார்: "திடீரென்று ஒருநாள் காலை விழிக்கின்றீர்கள்; உங்கள் ஆவிக்குரிய உணர்வுகள் ஒழிந்து போய்விட்டன; ஜெபிக்கின்றீர்கள், ஒன்றுமே நடக்கவில்லை; பிசாசைக் கடிந்து கொள்ளுகின்றீர்கள்; அதுவும் எந்த மாறுதலையும் கொண்டு வரவில்லை; ஆவிக்குரிய பயிற்சிகளை செய்கின்றீர்கள்... உங்கள் நண்பர்கள் உங்களுக்காக ஜெபிக்கின்றார்கள்; கற்பனை செய்து, நினைவில் வரும் அத்தனை பாவங்களையும் அறிக்கையிடுகின்றீர்கள்; தெரிந்தவர்களிடமெல்லாம் மன்னிப்பும் கேட்கின்றீர்கள்... உபவாசிக்கின்றீர்கள்... இன்னும் ஒரு மாறுதலுமில்லை; எவ்வளவு காலம் இந்த ஆவிக்குரிய அந்தகாரம் நீடிக்குமென்று அங்கலாய்க்கின்றீர்கள்... நாட்களா? வாரங்களா? மாதங்களா? முடிவே வராதா? உங்கள் ஜெபங்கள் கூரையில் மோதித் திரும்புவதுபோல உணருகின்றீர்கள். முற்றிலும் கைவிடப்பட்டது போன்ற உணர்வில், "எனக்கு என்ன நேர்ந்தது"[8] என்று நீங்கள் கதறுகின்றீர்கள்.

உண்மை என்னவென்றால் உங்களிடம் எந்தத் தவறுமில்லை! இது, தேவனோடுள்ள உங்கள் சிநேகிதம் சோதிக்கப்பட்டு, முதிர்ச்சியடைவதற்காக, சாதாரணமாக நடக்கும் காரியம். ***ஒவ்வொரு*** கிறிஸ்தவனும் ஒரு முறையாவது, அநேகமாகப் பலமுறைகள் இப்பாதையைக் கடந்திருப்பார்கள். அது மிகவும் வேதனையான, அலசப்படும் நேரம். ஆனால், உங்கள் விசுவாச வளர்ச்சிக்கு அது மிக அத்தியாவசியம். இதை அறிந்திருந்தபடியால்தான் யோபு, தேவனுடைய பிரசன்னத்தை உணர

தமது முகத்தை சில சமயங்களில் நம்மை விட்டு மறைத்துக் கொள்ளுவதாக தேவன் ஒத்துக் கொள்ளுகின்றார்.

முடியாமலிருந்தபோது, *"நான் கிழக்கே போகிறேன், அவர் அங்கேயும் இல்லை; வடக்கேயும் இல்லை, ஏனெனில், அவர் தம்மை மறைத்துக் கொண்டார்; தெற்கே திரும்புகிறேன்; அங்கேயும் அவரைக் காணவில்லை. ஆனால், நான் எங்கேயிருக்கிறேன் என்பதை அவர் அறிவார்; அவர் என்னை சோதித்தபின் பொன்னாக விளங்குவேன்; நான் குற்றமற்றவன் என்று தேவன் கூறுவார்"*[9] என்று நம்பிக்கையுடன் யோபு கூறுகின்றார்.

தேவன் தூரத்திலிருப்பதுபோலத் தோன்றும்போது, அவர் கோபமாக இருப்பது போலவும், ஏதோ ஒரு பாவத்திற்காக நம்மைத் தண்டிப்பது போலவும் தோன்றும். பாவம் *நிச்சயமாக* நமக்கும் தேவனுக்குமுள்ள உறவைத் துண்டித்து விடுகின்றது. உண்மைதான் – பாவம், தேவனுடைய ஆவியைத் துக்கப்படுத்தும்; கீழ்ப்படியாமையினால் அவருடனுள்ள ஐக்கியத்தை அவித்துப் போடுகின்றோம். பிறருடன் சண்டை, சச்சரவு, வேறு காரியங்களில் அதிக கவனம்; உலக சிநேகம், மற்றப் பாவங்கள் நம்மை இவ்வாறு பிரித்துவிடும்.[10]

ஆனால், அநேக சமயங்களில் தேவனால் கைவிடப்பட்டது போன்ற இந்த உணர்வு அல்லது தேவனை விட்டுப் பிரிந்து விட்டது போன்ற இந்த உணர்வு, பாவத்துடன் தொடர்பு கொண்டதாக இருக்காது. அது ஒரு விசுவாச பரீட்சை – நாம் எல்லாரும் எதிர்கொள்ள வேண்டிய ஒரு பரிசோதனை. அவருடைய பிரசன்னத்தைப் பற்றிய உணர்வே இல்லாதிருக்கும்போதும், அவர் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்கிறாரென்ற எந்தவொரு வெளிப்படையான அத்தாட்சியுமில்லாதிருக்கும்போதும், நீங்கள் தொடர்ந்து அவரை நேசித்து, நம்பி, கீழ்ப்படிந்து ஆராதனை செய்வீர்களா?

ஆராதிப்பதில், இன்று கிறிஸ்தவர்கள் செய்யும் ஒரு முக்கியமான, பொதுவான தவறு – தேவனைத் தேடுவதைவிட, ஒரு *அனுபவத்தை* அதிகமாக விரும்பித் தேடுகின்றார்கள். ஒரு உணர்ச்சி நிரம்ப வேண்டும்; அப்படி உணர்வு வந்ததும், ஆராதித்து விட்ட நிறைவு.

தவறு! ஆகையால்தான், நாம் நமது உணர்வுகளைச் சாராதபடி, அடிக்கடி அந்த உணர்வுகளை தேவன் அகற்றி விடுகின்றார். ஒரு உணர்வு – கிறிஸ்துவுக்கு நெருக்கமாக இருப்பது போன்ற உணர்வுகூட – ஆராதனை ஆகாது!

> ***இன்று ஆராதிப்பதில் கிறிஸ்தவர்கள் செய்யும் மிகப் பெரிய தவறு - தேவனைத் தேடுவதைவிட, ஒரு அனுபவத்தைத் தேடுவது.***

நீங்கள் உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையில் குழந்தையாக இருக்கும்போது, தேவன் உங்களுக்கு அதிகமாக, உணர்வுகளில் உறுதிப்பாடுகளை தருகின்றார்; முதிர்ச்சியற்ற சுயத்தை மையமாகக் கொண்ட ஜெபங்களுக்குப் பதில் தருகின்றார் – அவர் இருப்பதை நீங்கள் உணர்ந்துகொள்ளுமாறு அவர் அப்படிச் செய்கின்றார். ஆனால், நீங்கள் விசுவாசத்தில் வளர்ச்சியடையும்போது, இப்படி எதையெல்லாம் சார்ந்து கொள்ளுகின்றீர்களோ அவைகள் யாவையும் விட்டு உங்களை பிரித்தெடுக்கின்றார்.

தேவன் சர்வ வியாபி. அதாவது, அவர் எங்கும் இருக்கின்றார். ஆனால், தேவனுடைய சர்வ வியாபகமும், அவர் தமது பிரசன்னத்தை வெளிப்படுத்தி உணரச் செய்வதும் இரு வேறுபட்ட காரியங்கள். ஒன்று, உண்மை; மற்றொன்று, உணர்வு. தேவன் எப்போதும் பிரசன்னராயிருக்கின்றார்; அதை நீங்கள் உணரக் கூடாதிருக்கின்றபோதும், அவருடைய ஆழமான பிரசன்னம் வெறும் உணர்வுகளால் அளக்கப்பட முடியாத விதத்தில் நிறைந்து நிற்கும்.

ஆம், அவருடைய பிரசன்னத்தை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகின்றார்; ஆயினும், நீங்கள் அவரை ***உணருவதை***விட ***நம்புவதைக்*** குறித்து அவர் அதிகக் கரிசனையுள்ளவர். உணர்வுகளல்ல – விசுவாசமே தேவனைப் பிரியப்படுத்தும்.

தேவன் எங்குமே இல்லை என்ற உணர்வுடன், வாழ்க்கை நிலை குலைந்து போயிருக்கும்போதுதான், உங்கள் விசுவாசம் நீண்டு வளர்ச்சியடையும். இது யோபுவுக்கு நடந்தது. ஒரே நாளில் அவர்

எல்லாவற்றையும் இழந்தார் – அவர் குடும்பம், தொழில், ஆரோக்கியம், சொந்தமான அனைத்தையும் இழந்தார். இதில், சோர்வை கொண்டு வரும் இன்னொரு காரியம் என்னவெனில், 37 அதிகாரங்கள் வரை தேவன் ஒன்றும் பேசவில்லை!

உங்கள் வாழ்க்கையில் நடைபெறும் காரியங்கள் ஏன் நடக்கிறதென்று தெரியாமல், தேவனும் அமைதியாக இருக்கும் வேளைகளில், நீங்கள் தேவனை எப்படித் துதிக்கின்றீர்கள்? எந்தவிதத் தொடர்புமற்ற நிலையில் நீங்கள் ஆபத்துக்களை எப்படி சமாளிக்கின்றீர்கள்? உங்கள் கண்களில் நிறைய கண்ணீர் இருக்கும்போது, உங்கள் கண்களை இயேசுவின் மீது எப்படிப் பதித்து வைக்கின்றீர்கள்? யோபு என்ன செய்தாரோ, அதையே நீங்களும் செய்யுங்கள். ***"அவர் தரையில் விழுந்து பணிந்து கொண்டு, 'நிர்வாணியாய் என் தாயின் கர்ப்பத்திலிருந்து வந்தேன்; நிர்வாணியாய் திரும்பிச் செல்லுவேன்; கர்த்தர் கொடுத்தார்; கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்"***[11] என்றார்.

உங்கள் உணர்வுகள் எப்படி இருக்கின்றதோ, அதை அப்படியே தேவனிடம் சொல்லுங்கள். தேவனிடம் உங்கள் இருதயத்தை ஊற்றி விடுங்கள். நீங்கள் உணரும் எல்லா உணர்வு சுமைகளையும் அப்படியே இறக்கி வையுங்கள். இதைத்தான், ***"நான் பேசாமலிருக்கக் கூடாது; நான் மனக்கசப்பும் கோபமுமுள்ளவனாக இருக்கிறேன்; நான் பேச வேண்டும்!"***[12] என்று யோபு சொன்னார். தேவன் தூரமாக இருப்பதுபோலத் தோன்றும்போது, ***"நான் என் முந்திய நாட்களிலிருந்ததுபோல இருந்த நாட்கள் மீண்டும் வராதா? அப்போது அவருடைய நெருக்கமான உறவு என் வீட்டை ஆசீர்வதித்தது"***[13] என்று யோபு கதறினார். தேவன் உங்களுடைய சந்தேகம், கோபம், பயம், கவலை, குழப்பம், கேள்விகள் அனைத்தையும் கையாளக்கூடியவர்.

உங்கள் நம்பிக்கையின்மையைத் தேவனிடம் ஒத்துக்கொள்ளுவது ஒரு விசுவாச அறிக்கையென்று உங்களுக்குத் தெரியுமா? தேவனை நம்பிக்கொண்டு, அதே சமயம் நம்பிக்கையற்ற உணர்வுடன் தாவீது பின்வருமாறு கூறினார்: ***"நான் நம்பினேன்; ஆகையால், 'நான்***

முற்றிலும் அழிக்கப்பட்டுப் போனேன்' என்று கதறினேன்."[14] இது ஒரு முரண்பாடுபோல தோன்றுகின்றது. நான் தேவனை நம்புகின்றேன் – ஆனால், நான் அழிக்கப்பட்டுப் போனேன்! தாவீதுடைய இந்தத் திறந்த இருதயம் உண்மையில் ஆழமான விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றது; முதலில், தேவனை நம்பினான்; இரண்டாவது, தேவன் தன் ஜெபத்துக்கு செவி கொடுப்பாரென்று விசுவாசித்தான்; மூன்றாவது, தேவன் தான் உணர்ந்ததைக் குறித்துக் கூற அனுமதித் தருவார்; அதன்பின்பும் நேசிப்பார் என்று நம்பினார்.

தேவனுடைய மாறாத குணாதிசயத்தை கண்ணோக்குங்கள். சூழ்நிலைகளைப் பார்க்காமல், உங்கள் உணர்வுகளைப் பார்க்காமல், தேவனுடைய மாறாத சுபாவத்தைப் பற்றிக் கொள்ளுங்கள். தேவனைப் பற்றிய நித்தியமான உண்மைகளை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்: அவர் நல்லவர்; அவர் என்னை நேசிக்கின்றார்; அவர் என்னுடனிருக்கின்றார்; நான் எதன் வழியாகக் கடந்து செல்லுகிறேனென்பது அவருக்குத் தெரியும்; அவர் கரிசனை கொள்ளுகின்றார்; என் வாழ்க்கைக்கான ஒரு நல்ல திட்டம் அவரிடமுண்டு. *"தேவன் உங்களுக்கு வெளிச்சத்தில் கூறியதைக் குறித்து இருட்டில் ஒருபோதும் சந்தேகப்படாதேயுங்கள்"* என்று V. ரோமாண்ட் எட்மன் கூறினார்.

யோபுவின் வாழ்க்கை உடைந்தபோது, தேவன் மௌனமாக இருந்த சூழ்நிலையிலும் தேவனைத் துதிப்பதற்கு அவர் பின்வரும் காரியங்களைக் கண்டார்.

- அவர் நல்லவரும் நேசிக்கிறவரும் ஆவார்.[15]
- அவர் சர்வ வல்லமையுள்ளவர்.[16]
- எனது வாழ்க்கையின் ஒவ்வொரு விவரத்தையும் கவனிக்கின்றார்.[17]
- சகலமும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன.[18]

  எனது வாழ்க்கைத் திட்டம் அவரிடத்தில் இருக்கின்றது.[19]
- அவர் என்னை இரட்சிப்பார்.[20]

தேவன் தமது வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரென்று அவரை நம்புங்கள். ஆவிக்குரிய வறட்சியின் நாட்களில், தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது பொறுமையாக சார்ந்திருக்க வேண்டும். உங்கள் உணர்வுகள் மீது சாரக்கூடாது; அவர் உங்களை ஒரு ஆழமான முதிர்ச்சியின் அனுபவத்திற்குள் கொண்டு செல்லுகிறார் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். வெறும் உணர்வுகளில் கட்டப்படும் நட்புறவு உண்மையில் ஆழமற்றது.



ஆகவே, உபத்திரவத்தைக் குறித்து உபத்திரவப்பட வேண்டாம். சூழ்நிலைகள் தேவனுடைய குணாதிசயத்தை மாற்றாது. தேவனுடைய கிருபை இன்றும் முழு பெலத்தோடு இருக்கின்றது. நீங்கள் அதை உணராவிட்டாலும், அவர் இன்னும் உங்களுக்காகவே இருக்கின்றார். உறுதிப்படுத்தக்கூடிய சூழ்நிலைகள் இல்லாதபோதும், யோபு, தேவனுடைய வார்த்தையைக் உறுதியாகப் பிடித்துக் கொண்டான். *"அவருடைய வாயின் கற்பனைகளை விட்டு நான் விலகவில்லை; அவருடைய வாயின் வார்த்தைகளை என் அன்றாடக போஜனத்துக்கும் மேலாக பொக்கிஷமாகப் பேணிக் காக்கின்றேன்"*[21] என்று கூறினார்.

எல்லாமே அர்த்தமற்றதாகத் தோன்றிய சூழ்நிலையிலும், அவருடைய வார்த்தையின் மேல் யோபு வைத்திருந்த நம்பிக்கை, அவர் உண்மையுள்ளவராயிருக்க உதவியது. *"அவர் என்னைக் கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன்"*[22] என்று அவர் கூறினார்.

தேவனால் கைவிடப்பட்டேன் என்ற உணர்வின் வேளையிலும், விடாமல் அவர் மீது நம்பிக்கை வைக்கும்போதுதான், நீங்கள் தேவனை ஆழமாக ஆராதிக்கின்றீர்கள்.

தேவன் ஏற்கனவே உங்களுக்கு செய்ததை நினைவுகூருங்கள். வேறு எதையும் தேவன் உங்களுக்குச் செய்திராவிட்டாலும், உங்களுக்காக இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்தவற்றிற்காக, உங்கள் எஞ்சிய வாழ்நாளெல்லாம் நீங்கள் அவருக்குச் செலுத்தும்,

துதியைப் பெறுவதற்கு அவர் பாத்திரராக இருக்கின்றார். தேவனுடைய குமாரன் உங்களுக்காகவே மரித்தார். இதுவே நீங்கள் அவரை ஆராதிப்பதற்கான மிகப் பெரிய காரணமாகும்!!

துரதிர்ஷ்டவசமாக, தேவன் நமது சார்பாகச் செய்திருக்கும், வேதனை நிறைந்த பலியின் கொடூரமான விளக்கங்களை நாம் மறந்து விடுகின்றோம். பழகிப்பழகி, அது ஒரு சாதாரணமானதாகி விட்டது. சிலுவை மரணத்திற்கு முன்னரே, தேவகுமாரன் நிர்வாணமாக்கப்பட்டு, உருத்தெரியாமல் போகுமளவுக்கு அடித்து சிதைக்கப்பட்டு, சாட்டையடிபட்டு, பரிகசிக்கப்பட்டு, அலட்சியப்படுத்தப்பட்டு, முட்களாலான கிரீடம் வைக்கப்பட்டு, இகழ்ச்சியுடன் துப்பப்பட்டு, இருதயமற்ற மனிதரால் நிந்திக்கப்பட்டு, பரிகாசம் செய்யப்பட்டு, மிருகத்தைவிடக் கேவலமாக நடத்தப்பட்டார்.

தேவனால் கைவிடப்பட்டது போல நீங்கள் உணரும்போதும் அவரைத் தொடர்ந்து நம்பிக் கொண்டிருப்பதுதான் மிக ஆழ்ந்த முறையில் நீங்கள்

இரத்தத்தையெல்லாம் இழந்து, ஏறத்தாழ சுயநினைவற்ற நிலையில், கனத்த சிலுவையொன்றை மலைப் பாதையில் சுமந்து செல்லும்படி அவர் கட்டாயப்படுத்தப்பட்டார். அதில் அவரை ஆணியால் அடித்தனர்; மெதுவான சித்திரவதைக்குள்ளாக்கும் சிலுவை மரணத்தை சந்திக்கும்படி அவர் விடப்பட்டார். அவருடைய ஜீவன் வடிந்து குறைந்தபோது, தொடர்ந்து அவரைச் சூழ்ந்து நின்றவர்கள் நிந்தித்து, தான் தேவகுமாரனென்று அவர் கூறியதைக் குறித்துப் பரிகசித்து, சவால் விட்டனர்.

அடுத்து, இயேசு மனுக்குலத்தின் பாவம், குற்றம் அனைத்தையும் தம்மீது ஏற்றுக் கொண்டபோது, தேவன் அந்த அகோரக் காட்சியைப் பாராது முகத்தைத் திருப்பிக் கொண்டார்; அப்போது இயேசு முற்றிலும் நம்பிக்கை இழந்தவராக, 'என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று கதறினார். இயேசு தம்மைத்தாமே காப்பாற்றிக் கொண்டிருக்கக் கூடும் – அப்படியானால், அவர் உங்களைக் காப்பாற்றக் கூடாமற்போயிருக்கும்.

அந்த நேரத்தின் இருளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இப்படிப்பட்ட பயங்கரமான, அகோரமான விதத்தில் நடத்தப்படுவதை தேவன் ஏன் அனுமதித்தார்? ஏன்? *நீங்கள்,* நரகத்தின் நித்திய அக்கினிக்குத் தப்பிக்கொள்ள, அவருடைய மகிமையில் நீங்கள் என்றென்றும் பங்குகொள்ள! ***"அவருடைய குமாரனுடைய ஐக்கியத்தினால், நாம் தேவனுடைய நீதிக்குப் பங்குள்ளவர்களாகும்படி, பாவமில்லாத கிறிஸ்துவைத் தேவன் நமது பாவங்களைப் பகிர்ந்து கொள்ளச் செய்தார் (பாவமாக்கினார்)"***[23] என்று வேதம் கூறுகின்றது.

நீங்கள் எல்லாவற்றையும் அடைந்துகொள்ளுமாறு, இயேசு எல்லாவற்றையும் இழந்துவிட்டார். நீங்கள் என்றென்றும் வாழும்படி அவர் மரித்தார். இந்த ஒரு காரியத்திற்காகவே நீங்கள் இடைவிடாமல் துதித்து ஆராதிக்க அவர் தகுதியுள்ளவர்; எதற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்துவதென்று இனி ஒருபோதும் நீங்கள் யோசிக்க வேண்டாம்.

நாள் பதினான்கு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: என் உணர்வுகள் எப்படி இருந்தாலும், தேவன் உண்மையுள்ளவர் என்பது மாற்றப்பட முடியாத கருத்து.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"'நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை' என்று தேவன் சொல்லியிருக்கின்றார்."*** எபிரெயர் 13:5

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தேவன் தூரத்திலிருப்பதுபோலத் தோன்றும் நாட்களில், நான் எவ்வாறு தேவனுடைய பிரசன்னத்தில் நோக்கமாயிருப்பது?

நோக்கம் # 2



நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப்பட்டீர்கள்

நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள்.
யோவான் 15:5 (புதிய மொழியாக்கம்)

கிறிஸ்து, நம்மை ஒருவரோடொருவர் இணைக்கப்பட்ட
அவயவங்களாலான ஒரே சரீரமாக்குகின்றார்.
ரோமர் 12:5 (புதிய மொழியாக்கம்)

15

தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப்பட்டீர்கள்

தேவனே எல்லாவற்றையும் உண்டாக்கினவர். எல்லாம் அவருடைய மகிமைக்காக இருக்கின்றன. அநேகம் பிள்ளைகள் தமது மகிமையைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்பது அவருடைய விருப்பம்.
எபிரெயர் 2:10 (புதிய மொழியாக்கம்)

நாம் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்பட அனுமதியளித்திருப்பதினால், பிதாவானவர் நம்மீது எவ்வளவாக அன்புகூருகின்றாரென்பதைப் பாருங்கள். நாம் உண்மையிலேயே அவருடைய பிள்ளைகள்!
1 யோவான் 3:1 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப்பட்டீர்கள்.

தேவன் தமக்கு ஒரு குடும்பம் வேண்டுமென்று விரும்புகின்றார். நீங்கள் அதில் ஒரு பங்காக இருக்கும்படி உங்களைச் சிருஷ்டித்தார். நீங்கள் பிறப்பதற்கு முன்னரே, தேவன் உங்கள் வாழ்க்கைக்காக முன் குறித்த இரண்டாவது நோக்கமிது. தம்மை நேசித்துக் கனப்படுத்தி, தம்முடன் என்றென்றைக்கும் அரசாளக்கூடிய ஒரு குடும்பத்தைத் தேவன் கட்டியெழுப்பிய வரலாற்றைத்தான் முழு வேதாகமமும் கூறுகின்றது. அந்த வேதத்திலிருந்து ஒரு வாக்கியத்தை இங்கு காண்போம்: ***"இயேசு கிறிஸ்துவின் மூலமாக நம்மை அவருக்கு சுவிகார புத்திரராகக் கொண்டு, தமது சொந்தக் குடும்பத்திற்குள் நம்மைக் கொண்டு வர வேண்டுமென்பதுதான்***

அவருடைய மாறாத அநாதி தீர்மானம். இது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியளித்தது.”[1]

தேவன் அன்பாகவே இருக்கின்றபடியால், அவர் உறவுகளைப் பொக்கிஷமாக பேணிக் காக்கின்றார். அவருடைய சுபாவமே உறவாடுதல்தான். அவர், தம்மைக் குடும்ப உறவின் அடிப்படையிலேயே வெளிப்படுத்துகின்றார். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர் – இந்த திரித்துவ தேவனுக்குள் உறவாடுதல் உண்டு. உறவுகளுக்குள்ள இசைவின் பரிபூரணமான வடிவம் அது. நாம் அதன் கருத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். தேவன் தமக்குள்ளேயே ஒரு அன்பின் உறவிலிருக்கின்றபடியால், அவர் ஒருபோதும் தனிமையாக இல்லை. அவருக்கு ஒரு குடும்பம் ***தேவைப்படவில்லை***. ஆனால், அவர் குடும்பமொன்றை விரும்பினார். ஆகவே, நம்மை சிருஷ்டிக்கவும், தமது குடும்பத்திற்குள் நம்மைக் கொண்டு வரவும், தமதுடைமைகள் எல்லாவற்றையும் நம்முடன் பகிர்ந்து கொள்ளவும் அவர் ஒரு திட்டத்தை நிர்ணயித்தார். இது தேவனுக்குப் பெரு மகிழ்ச்சியளித்தது. ***“தமது வார்த்தையின் சத்தியத்தின் மூலம், நமக்கு அவர் புதிய ஜீவனையளித்து, நாம் அவருடைய குடும்பத்திற்குள் முதற் பலனான அந்த நாள், அவருக்குப் பெரு மகிழ்ச்சியின் நாள்”***[2] என வேதம் கூறுகின்றது.

நாம் கிறிஸ்துவின் மீது நமது விசுவாசத்தை வைத்தபோது, தேவன் நமது பிதாவாகின்றார். நாம் அவருடைய பிள்ளைகளாகின்றோம். மற்ற விசுவாசிகள் நமது சகோதர, சகோதரிகளாகின்றார்கள். சபை, நமது ஆவிக்குரிய குடும்பமாகி விடுகின்றது. தேவனுடைய குடும்பம் என்பது கடந்த கால, நிகழ்கால மற்றும் வருங்கால விசுவாசிகளை உள்ளடக்கியது.

உலகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதரும் தேவனால் ***படைக்கப்பட்டவர்களே***; ஆனால், எல்லாரும் தேவனுடைய ***பிள்ளைகளல்ல***. நாம் தேவனுடைய குடும்பதினராகக் கூடிய ஒரே வழி, மறுபடியும் அதற்குள் பிறப்பதன் மூலமே! உங்கள் முதல் பிறப்பின் மூலம் ஒரு மனித குடும்பத்தின் ஒரு பகுதியானீர்கள். ஆனால், மறுபடியும் பிறக்கும் (Born Again) இரண்டாம் பிறப்பின்

மூலம் தேவனுடைய குடும்பத்தின் ஒரு அங்கத்தினராகின்றீர்கள். *"நாம் தேவனுடைய சொந்தக் குடும்பத்தின் உறுப்பினராகும்படி மறுபடியும் பிறக்கும் உரிமையை தேவன் நமக்களித்திருக்கின்றார்"*[3] என வேதம் கூறுகின்றது.

தேவனுடைய குடும்பத்தினராகும்படி, அகில உலகத்தாருக்கும் அழைப்பு கொடுக்கப்படுகின்றது.[4] ஆனால், அதற்குரிய ஒரே நிபந்தனை, "இயேசுவின் மீது விசுவாசம். *"நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தினாலே, தேவனுடைய பிள்ளைகளாயிருக்கின்றீர்கள்"*[5] என்று வேதம் கூறுகின்றது.



உங்கள் ஆவிக்குரிய குடும்பம், நித்திய காலமாக நிலைத்திருக்கப் போவதால், அது உங்கள் சரீரப் பிரகாரமான குடும்பத்தை விட அதிக முக்கியமானது. இந்த உலகத்திலுள்ள நமது குடும்பங்கள் தேவனால் அருளப்பட்ட அற்புதமான ஈவுகள். ஆனால், அவை நிலையற்றவை; எளிதில் உடையக் கூடியவை – விவாகரத்து, பிரிந்திருக்கும் தூரம், முதுமையடைதல், எல்லாவற்றிற்கும் மேலாக, தவிர்க்க முடியாத மரணம், ஆகிய இவைகளால் இக்குடும்ப வாழ்வு சிதையக்கூடியது. மாறாக, நமது ஆவிக்குரிய குடும்பம் – பிற விசுவாசிகளுடனுள்ள நமது உறவுகள், நித்திய காலமாகத் தொடருபவை. இது பூலோகக் குடும்ப பந்தத்தைவிட பலமான ஐக்கியம், நிலைத்திருக்கும் ஐக்கியம், இரத்த சம்பந்தமான உறவுகளைவிட மேலான ஐக்கியம். நம் யாவருக்கும் இருக்கின்ற தேவனுடைய நித்திய நோக்கத்தைக் குறித்து நினைத்துப்பார்க்கும் போதெல்லாம், பவுல், துதிக்க ஆரம்பிக்கின்றார். *"பரலோகத்திலும் பூலோகத்திலுமுள்ள முழுக்குடும்பத்திற்கும் பிதாவாயிருக்கின்ற வரிடத்தில், அவருடைய ஞானம் நிறைந்த திட்டத்தின் ஆழத்தைக்குறித்து நான் எண்ணும்போதெல்லாம், நான் முழங்காற்படியிட்டு வேண்டுதல் செய்கின்றேன்."*[6]

தேவனுடைய குடும்பத்தில் இருப்பதனால் உண்டாகின்ற நன்மைகள்

தேவனுடைய குடும்பத்திற்குள் நீங்கள் ஆவியினால் பிறந்த வினாடியிலேயே, உங்களுக்குச் சில பிரமிக்க வைக்கும் பிறந்தநாள் பரிசுகள் கொடுக்கப்பட்டன: குடும்பப் பெயர், குடும்ப சாயல், குடும்ப உரிமைகள், குடும்பத்திற்குள் நெருங்கி நுழையும் வழி, குடும்ப சுதந்தரம்![7] ஆகியவை. ***"நீங்கள் அவருடைய பிள்ளைகளானதால், அவருடையவைகள் யாவும் உங்களுடையவை"***[8] என வேதம் கூறுகின்றது.

நமது இந்த விலையேறப்பெற்ற "பிறப்புரிமைக்கு" புதிய ஏற்பாடு மிகுந்த முக்கியத்துவமளிக்கின்றது – நமக்கு உண்டாகும் "சுதந்தரத்தை" வலியுறுத்துகின்றது. ***"என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி, கிறிஸ்து இயேசுவில் உங்கள் குறைவுகளை நிறைவாக்குவார்."***[9] தேவனுடைய பிள்ளைகளாக இருக்கின்ற நாம் குடும்ப சொத்தை அனுபவிக்க இயலும். இந்த பூமியில் நமக்கு, ***"அவருடைய கிருபை... தயவு... பொறுமை... மகிமை... ஞானம்... வல்லமை... இரக்கம்... ஐசுவரியம்"***[10] ஆகியவை கொடுக்கப்பட்டிருக் கின்றன. நித்தியத்தில் இதைவிடக் கூடுதலாக நாம் சுதந்தரித்துக் கொள்ளுவோம்.

உங்கள் ஆவிக்குரிய குடும்பம், உங்கள் சரீரப்பிரகாரமான குடும்பத்தைவிட அதிக முக்கியத்துவம் வாய்ந்தது... ஏனெனில், அது எப்பொழுதும் நிலைத்திருக்கிறது.

"அவர் தமது பிள்ளைகளுக்கு எவ்வளவு மகிமையும் ஐசுவரியமும் நிறைந்த சுதந்தரம் தந்திருக்கிறாரென்பதை நீங்கள் உணர்ந்துக் கொள்ள வேண்டுமென்றிருக்கின்றேன்"[11] என்று பவுல் கூறுகின்றார். அந்த பிறப்பு சுதந்தரத்தில் சரியாக உள்ளடங்கியிருப்பதுதான் என்ன? முதலாவது, நாம் எப்போதும் தேவனோடிருப்போம்.[12] இரண்டாவதாக, நாம் முற்றிலும் கிறிஸ்துவைப்போல மாறிவிடுவோம்.[13] மூன்றாவதாக, நாம் எல்லாவித வேதனை, மரணம் மற்றும் துன்பத்திலிருந்து விடுதலை பெறுவோம்.[14] நான்காவதாக, நாம் பெலனடைந்து, சேவை செய்யும் ஸ்தானங்களைப் பெறுவோம்.[15]

ஐந்தாவதாக, நாம் கிறிஸ்துவின் மகிமையில் பங்கு பெறுவோம்.[16] எத்தனை மேன்மையான சுதந்தரம்! நினைத்துப் பார்ப்பதைவிட, அதிக செல்வச் செழிப்புள்ளவர்கள், நீங்கள்!

"தேவன் தமது பிள்ளைகளுக்கு விலைமதிக்க முடியாத ஒரு சுதந்தரத்தை முன்குறித்து வைத்திருக்கின்றார். தூய்மையான, கறைபடாத அச்சுதந்தரம், மாறுதலுக்கும், அழிவுக்கும், அப்பாற்பட்டதாக, பரலோகத்தில் உங்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்றது"[17] என்று வேதம் கூறுகின்றது. அதாவது, நமது நித்திய சுதந்தரம், விலையேறப் பெற்றது; நிலையானது; பாதுகாப்பானது. அதை, எவரும் உங்களிடமிருந்து பறித்துக்கொள்ள முடியாது. அதை, யுத்தமோ, மிக மோசமான பொருளாதார நிலையோ, இயற்கைப் பேரழிவுகளோ அழித்துப் போட முடியாது. நீங்கள், ஓய்வு பெறுவதையல்ல... இந்த நித்திய சுதந்தரத்தையே எதிர்நோக்கியிருக்க வேண்டும். *"கர்த்தரிடத்திலிருந்து சுதந்தரமாக பலனைப் பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும் அதை மனுஷருக்கென்று செய்யாமல், தேவனுக்கென்று மனப்பூர்வமாகச் செய்யுங்கள்"*[18] என்று பவுல் கூறுகின்றார். ஓய்வு (retirement) பெறுவது என்பது குறுகிய பார்வை கொண்ட ஒரு இலக்கு. நீங்கள் நித்தியத்தின் வெளிச்சத்தில் நடந்து கொள்ள வேண்டும்.

ஞானஸ்நானம்: தேவனுடைய குடும்பத்துடன் ஒன்றுபடுத்திக் கொள்ளுதல்

ஆரோக்கியமான குடும்பங்களுக்கு, தங்கள் குடும்பத்தைப் பற்றிய ஒரு பெருமை உண்டு. அக்குடும்பத்தின் உறுப்பினரென்று அறியப்படுவது குறித்து, அந்தக் குடும்பத்தினர் வெட்கப்பட மாட்டார்கள். அநேக விசுவாசிகள், இயேசு கட்டளையிட்ட பிரகாரம் தாங்கள் ஆவிக்குரிய குடும்பத்தில் ஒரு உறுப்பினரென்பதை வெளிப்படையாக, யாவரும் அறியும் வண்ணம் – ஞானஸ்நானம் எடுப்பதன் மூலம் – ஒன்றுபடுத்திக் கொள்ளுவதே இல்லை.

நாள் பதினைந்து:
தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப் பட்டீர்கள்

ஞானஸ்நானமென்பது நமது விருப்பத்திற்கு ஏற்றபடி தாமதித்து செய்யக் கூடிய ஒரு சடங்கு அன்று. அது, நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்குட்படுவதை குறிக்கின்றது – "நான் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக இருக்கின்றேன்" என்று வெட்கப்படாமல் யாவருக்கும் பகிரங்கமாக அறிவிக்கும் ஒரு செயல்! நீங்கள் ஞானஸ்நானம் எடுத்து விட்டீர்களா? இந்த அழகான செயலை, தமது குடும்பத்திலுள்ள யாவருக்கும் தேவன் கட்டளையாக்கியிருக்கின்றார். ***"நீங்கள் போய், சர்வ தேசங்களிலுமுள்ளவர்களையும் சீஷராக்கி, அவர்களுக்குப் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானங் கொடுங்கள்"***[19] என்றார்.

இயேசு தம்முடைய பிரதான கட்டளையின் மேன்மையான செயல்களான சுவிசேஷ ஊழியத்திற்கும், பக்திவிருத்திக்கும் கொடுத்த அதே முக்கியத்துவத்தை ஞானஸ்நானத்திற்கும் கொடுத்திருப்பது ஏனென்று அநேக ஆண்டுகள் வியந்தது உண்டு – "ஞானஸ்நானம் ஏன் அவ்வளவு முக்கியமானது?" இது, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய இரண்டாவது நோக்கத்தைக் குறிக்கும் அடையாளமாயிருக்கின்றது என்பதைப் பின்னர் உணர்ந்து கொண்டேன். தேவனுடைய நித்திய குடும்பத்தின் ஐக்கியத்தில் பங்கடைவதை அது வெளிப்படுத்துகின்றது.

ஞானஸ்நானம் என்பது அர்த்தங்களால் நிறைந்த ஒன்று. உங்கள் ஞானஸ்நானம், உங்கள் விசுவாசத்தைக் கூறி அறிவிக்கின்றது; கிறிஸ்துவின் மரணம், உயிர்த்தெழுதலில் அடையாளப்படுத்துகின்றது; கிறிஸ்துவில் உங்கள் புதிய ஜீவியத்தை அறிவிக்கின்றது. தேவனுடைய குடும்பத்தில் நீங்கள் அங்கத்தினரானதின் கொண்டாடுதலும் ஞானஸ்நானமே.

உங்கள் ஞானஸ்நானம், ஒரு ஆவிக்குரிய சத்தியத்தின், சரீரப்பிரகாரமான காட்சி. தேவன், உங்களைத் தம்முடைய குடும்பத்திற்குள் கொண்டு வரும் அந்த வினாடியே என்ன நடந்ததென்பதை அது குறிக்கின்றது. ***"நம்மில் சிலர் யூதர், சிலர் புறஜாதியார், சிலர் அடிமைகள், சிலர் சுயாதீனர்; ஆனால், நாமனைவரும் ஒரே ஆவியினாலே, கிறிஸ்துவின்***

சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றிருக்கின்றோம்; நாமெல்லாரும் அந்த ஒரே ஆவியைப் பெற்றிருக்கின்றோம்."[20]

ஞானஸ்நானம் உங்களைத் தேவனுடைய குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக **ஆக்க** முடியாது. கிறிஸ்துவின் மீதுள்ள உங்கள் விசுவாசமே அதைச் செய்யக் கூடும். ஞானஸ்நானம், நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினரென்பதைக் ***காண்பிக்கின்றது***. திருமண மோதிரத்தைப்போல, உங்கள் இருதயத்தில் நீங்கள் செய்த உள்ளான அர்ப்பணிப்பின் வெளிப்படையான நினைவுக்குறி அது. நீங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியடையும் வரை ஒத்தி வைக்கப்பட வேண்டியதல்ல அது. அது ஒரு ***ஆரம்பத்தைக்*** குறிக்கும் செயல். வேதாகமம் தரும் ஒரே ஒரு நிபந்தனை, நீங்கள் விசுவாசிக்க வேண்டும்.[21]

புதிய ஏற்பாட்டில், மக்கள் விசுவாசித்தவுடன் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். பெந்தெகொஸ்தே நாளில், 3,000 பேர் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அந்த ஒரே நாளில் ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டனர். வேறு ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு எத்தியோப்பிய தலைவர் தான் மனந்திரும்பிய அந்த இடத்திலேயே ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். பிலிப்பி பட்டண சிறை அதிகாரிக்கும், அவர் குடும்பத்தாருக்கும் பவுலும் சீலாவும் நள்ளிரவில் ஞானஸ்நானம் கொடுத்தனர். புதிய ஏற்பாட்டில் தாமதிக்கப்பட்ட ஞானஸ்நானம் என்று ஒன்று இல்லவே இல்லை. கிறிஸ்துவின் மீதுள்ள உங்கள் விசுவாசத்தை வெளிப்படையாகக் காண்பிக்கும் செயலாக நீங்கள் இன்னும் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளாதிருந்தால், இயேசு கட்டளையிட்டபடி, அதை உடனே செய்யுங்கள்.

வாழ்க்கையின் மிகப்பெரிதான சிலாக்கியம்

"இயேசுவும், அவரால் பரிசுத்தம் பண்ணப்படும் யாவரும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனவேதான் அவர் அவர்களைத் தமது சகோதர சகோதரிகள் என்று அழைக்க வெட்கப்படவில்லை"[22] என்று வேதம் கூறுகின்றது. இந்த மகத்தான சத்தியம் உங்கள் உள்ளத்தில் பதியட்டும். நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் ஒரு பகுதி; இயேசு உங்களைப் பரிசுத்தமாக்குகின்றபடியால், தேவன் உங்களைக் குறித்துப் பெருமைப்படுகின்றார்! இயேசுவின்

நீங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய மிக உன்னதமான சிலாக்கியம், கனம் – தேவனுடைய குடும்பத்தில் ஒருவராக சேர்த்துக் கொள்ளப்படுதலாகும்.

வார்த்தைகள் தெளிவாக இருக்கின்றன. "(இயேசு) *தமது சீஷர்களைச் சுட்டிக் காண்பித்து, 'இவர்களே என் தாயும் சகோதரருமானவர்கள். பரலோகத்திலிருக்கின்ற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கின்றவன் எவனும் எனக்குத் தாயும், சகோதரியும், சகோதரனுமாயிருக்கின்றார்கள்*"[23] என்று கூறினார். தேவனுடைய குடும்பத்தில் அங்கத்தினராக இணைவது, நீங்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய வேறெந்த கனம், சிலாக்கியத்தைவிடவும் இது மிக உன்னதமான சிலாக்கியமாகும். வேறெதுவும் அதற்கு இணையாக நெருங்க முடியாது. நீங்கள் மிகவும் முக்கியமற்றவர்களாக, நேசிப்பாரற்றவர்களாக, பாதுகாப்பற்றவர்களாக உணரும்போதெல்லாம், நீங்கள் யாருக்கு சொந்தமென்பதை நினைவில் வையுங்கள்.

நாள் பதினைந்து
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் தேவனுடைய குடும்பத்திற்காக உருவமைக்கப்பட்டவன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: "*தம்முடைய மாறாத சித்தத்தின்படியே, தேவன், இயேசு கிறிஸ்து மூலமாகத் தம்முடைய சொந்த குடும்பத்திற்குள் நம்மைத் தத்தெடுத்துக் கொண்டார்.*" எபேசியர் 1:5 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: மற்ற விசுவாசிகளை என் சொந்தக் குடும்பத்தின் அங்கத்தினராக நடத்துவதை நான் எப்படியெல்லாம் செய்யக்கூடும்?

16

மிகவும் முக்கியமானது எது?

நான் எதைப் பேசினாலும், எதை விசுவாசித்தாலும், எதைச் செய்தாலும், அன்பு எனக்கிராவிட்டால், நான் ஒன்றுமற்றவன்.
1 கொரிந்தியர் 13:36 (புதிய மொழியாக்கம்)

நாம் எப்படி வாழ வேண்டுமென்று தேவன் கூறிய கற்பனை, அன்பு. நீங்கள் ஆரம்பத்திலிருந்து கேள்விப்பட்டபடியே, அவருடைய கற்பனை இதுதான்; அன்பின் வாழ்க்கை வாழுங்கள்.
2 யோவான் 1:6 (புதிய மொழியாக்கம்)

வாழ்க்கையனைத்துமே அன்பைப் பற்றியதாகவே இருக்கின்றது.

தேவன் அன்பாகவே இருக்கின்றபடியால், எப்படி நேசிக்க வேண்டுமென்ற பாடத்தையே, நீங்கள் பூமியில் கற்றுக் கொள்ள வேண்டிய மிக முக்கியமான பாடமாக அவர் கருதுகின்றார். நேசிக்கும்போதுதான் நாம் அவரைப் போலாகின்றோம். அவர் நமக்குக் கொடுத்த ஒவ்வொரு கற்பனையின் அஸ்திபாரமும் அன்புதான். நியாயப்பிரமாணம் முழுமையும் இந்த ஒரே கற்பனையில் அடங்கியிருக்கின்றது: ***"உன்னை நீ நேசிப்பதுபோல மற்றவர் களையும் நேசி."***[1]

தன்னலமின்றி நேசிக்கக் கற்றுக்கொள்ளுதல் எளிதான காரியமல்ல; அது நமது சுயத்தை மையமாகக் கொண்ட சுபாவத்திற்கு நேர் எதிரானது. அதனால்தான், அதைக் கற்றுக் கொள்ள நமக்கு ஒரு முழு வாழ்நாள் தேவைப்படுகின்றது. நாம் எல்லாரையும் நேசிக்க வேண்டுமென்று தேவன் விரும்புவது உண்மைதான்; ஆனால்,

அவருடைய குடும்பத்திலுள்ள மற்றவர்களை நாம் நேசிக்க வேண்டுமென்பதை அவர் குறிப்பாக விரும்புகின்றார். ***"விசுவாசக் குடும்பத்தாருக்கு விசேஷமாக அன்பு காட்டக்கடவோம்"***[2] என்று பேதுரு கூறுகின்றார். ***"யாருக்காவது உதவி செய்ய உங்களுக்குத் திராணியிருக்கும்போது, உதவி செய்ய வேண்டும். விசுவாசக் குடும்பத்தாருக்கு நாம் சிறப்பான தனிக் கவனம் செலுத்த வேண்டும்"***[3] என்று பவுலும் இதே கருத்தை எதிரொலிக்கின்றார்.

மற்ற விசுவாசிகளுக்கு நாம் விசேஷித்த அன்பும் கவனமும் செலுத்த வேண்டுமென்று தேவன் ஏன் வற்புறுத்துகின்றார்? அன்பில் முன்னுரிமை ஏன் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றது? நம் குடும்பம், மற்றெந்தக் காரியத்தையும்விட, அன்பில் சிறந்து விளங்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்.

நாள் பதினாறு:

மிகவும் முக்கியமானது எது?

நமது கொள்கை மீது நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தைவிட, நாம் ஒருவருக்கொருவர் காண்பிக்கும் அன்புதான் உலகத்திற்கு நாம் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய சாட்சி என்று இயேசு கூறினார். ***"நீங்கள் ஒருவருக்கொருவர் காண்பிக்கும் உறுதியான அன்புதான் நீங்கள் என் சீஷரென்பதை உலகத்திற்கு எடுத்துக்காட்டும்"***[4] என்று அவர் கூறினார்.

பரலோகத்தில் நாம் தேவனுடைய குடும்பத்தை நித்தியமாக அனுபவித்து மகிழுவோம்; ஆனால், முதலில், நித்தியமாக அன்பு காட்டுவதற்குரிய கடினமான பயிற்சியை நாம் பூமியிலேயே ஆயத்தஞ் செய்ய வேண்டும். இங்கு, 'குடும்பப் பொறுப்புகள்' கொடுப்பதன் மூலம் தேவன் நமக்கு இந்த பயிற்சியை அளிக்கின்றார். இதில் முதலாவது பொறுப்பு, ஒருவரையொருவர் நேசிக்கப் பயிற்சி செய்தல்.

பிற விசுவாசிகளுடன் ஒரு சீரான, நெருங்கிய ஐக்கியம் கொள்ளுதல் மூலம், நேசிக்கும் திறனை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டுமென தேவன் விரும்புகின்றார். அன்பு, தனிமையில் கற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. எரிச்சலூட்டும், குறைவுள்ள, சோர்வு கொள்ளப்பண்ணும் மக்களுடன் பழகியே ஆகவேண்டும்.

ஐக்கியத்தின் மூலம் நாம் மூன்று முக்கிய சத்தியங்களை அறிந்து கொள்ளுகின்றோம்.

வாழ்க்கையின் சிறந்த உபயோகம் - அன்பு

உங்கள் வாழ்க்கையின் மேலான முன்னுரிமை, நோக்கம், மிகப் பெரிய ஆசை எல்லாம் அன்பாக இருக்க வேண்டும். அன்பு, உங்களது வாழ்க்கையின் ஒரு *நல்ல* பகுதி அல்ல; அதுவே, ***முக்கியமான*** பகுதி! ***"உங்கள் வாழ்க்கையின் மிகப் பெரிய நோக்கம் அன்பாக இருக்கட்டும்"***[5] என்று வேதம் கூறுகின்றது.

"நான் வாழ்க்கையில் கொண்டுள்ள பல விருப்பங்களில் ஒன்று, அன்புகூருவது" என்று கூறுவது போதாது. ஏதோ உங்கள் பிரதான பத்து வேலைகளில் அன்புகூருவதும் ஒன்று என்பது போலிருக்கக் கூடாது. மற்றெல்லாக் காரியங்களையும்விட, உறவுகளுக்கு வாழ்க்கையில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும். ஏன்?

அன்பில்லாத வாழ்க்கை பயனற்ற ஒரு வாழ்க்கை. ***"நான் எதைக் கூறினாலும், எதை விசுவாசித்தாலும், எதைச் செய்தாலும் அன்பில்லாவிட்டால் நான் ஒன்றுமில்லை"***[6] என்று பவுல் தெளிவுபடுத்துகின்றார்.

உறவுகள், நம்முடைய மற்ற திட்டங்களுக்குள் புகுத்தப்பட வேண்டிய ஒன்று என்பதுபோல நாம் அடிக்கடி நடந்து கொள்ளுகின்றோம். நமது பிள்ளைகளுக்காக நேரம் ***'ஒதுக்குதல்'*** அல்லது வாழ்க்கையில் மற்றவர்களுக்கு இடம் ***'உண்டுபண்ணுதல்'*** என்றெல்லாம் நாம் பேசுகின்றோம். உறவுகள், நமது வாழ்க்கையின் ஏதோ ஒரு பகுதி; மற்ற வேலைகளின் மத்தியில் அவைகளும் ஒன்று, என்பதுபோல நாம் நடந்து கொள்ளுகின்றோம். ஆனால், தேவனோ, உறவுகள்தான் வாழ்க்கையின் எல்லாம் எனக் கூறுகின்றார்.

பத்துக் கற்பனைகளில், நான்கு கற்பனைகள் தேவனோடுள்ள நமது உறவு பற்றியவை; மற்ற ஆறும், மக்களுடனுள்ள நமது உறவுகள் பற்றியவை. ஆக, எல்லாக் கற்பனைகளுமே, உறவுகளைப் பற்றியதுதான்! தேவனுக்கு மிகவும் முக்கியமான காரியம் எது என்பதைக் குறித்து, பின்னர், இயேசு இரு கூற்றுகளாகக் கூறினார்.

"உன் தேவனாகிய கர்த்தரில் உன் முழு இருதயத்தோடும் அன்பு கூருவாயாக" இதுவே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாவது கற்பனை என்னவென்றால், 'உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக' என்பதே. மற்றெல்லாக் கற்பனைகளும் தீர்க்கதரிசனங்களும் இவ்விரண்டு கற்பனைகளில் அடங்கியிருக்கின்றது."[7] தேவனை நேசிக்க (ஆராதிக்க) கற்றுக்கொண்டபிறகு, பிறரை நேசிக்கக் கற்றுக்கொள்ளுதல் உங்கள் வாழ்க்கையின் இரண்டாவது நோக்கம்.

சாதனைகளும், பொருட்களை வாங்கிக் குவிப்பதும் வாழ்க்கையில் முக்கியமான காரியங்களல்ல, உறவுகள்தான் முக்கியம். பின் ஏன் உறவுகளுக்கு குறைந்த முக்கியத்துவம் அளிக்கின்றோம்? நம்முடைய அனுதின செயல்பாடுகள், அளவுக்கு அதிகமாகிப் போகும்போது நாம் அன்பான உறவுகளுக்குக் கொடுக்க வேண்டிய நேரத்தை, சக்தியை, கவனத்தைக் குறைக்க ஆரம்பித்து விடுகின்றோம். அவசரமான அலுவல்களால் தேவனுக்கு முக்கியமான காரியங்கள், ஒதுக்கி வைக்கப்படுகின்றன.

வேண்டாத காரியங்களில் அதிக சுறுசுறுப்பாக இருப்பது உறவுகளுக்குப் பெரிய எதிரியாகும். அன்றாட வாழ்க்கை, வேலை, வருமானம், செலவுகள், வாழ்க்கையின் இலக்கு என்ற காரியங்களையே மையமாக வைத்து வாழ்க்கையை வாழ வேண்டாம். வாழ்க்கையின் முக்கியமான காரியம் அவைகளல்ல. தேவனையும், ஜனங்களையும் நேசிக்க கற்றுக் கொள்ளுவதுதான் வாழ்க்கையின் முக்கியமான காரியம். அன்பு இல்லாத வாழ்க்கை பூஜ்ஜியம்.



அன்பு என்றென்றும் நிலைத்திருக்கும். அன்பை நமது மேலான முன்னுரிமையாக எடுப்பதற்கு, தேவன் நமக்குக் கூறும் மற்றுமொரு காரணம், அன்பு நித்தியமானது: *"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலைத்திருக்கிறது; இவைகளில் அன்பே பெரிது."*[8]

உங்கள் சொத்து, சாதனைகளைவிட, நீங்கள் மற்றவர்களை நடத்திய விதமே, உலகில் என்றும் நிலைக்கும்படி நீங்கள் விட்டுப் போகும் தாக்கம். அன்னை தெரசா கூறியதுபோல, 'நீங்கள் எதைச் செய்கிறீர்களென்பது முக்கியமல்ல; அக்காரியத்தில் எவ்வளவு அன்பைக் கூட்டி வழங்கினீர்கள் என்பதுதான் முக்கியம். நீடித்து நிற்கும் சுதந்தரத்தின் இரகசியம் அன்புதான்.

மரிக்கும் தருவாயிலிருந்த அநேகரின் இறுதி நேரங்களில், நான் அவர்கள் படுக்கையருகில் இருந்ததுண்டு. ஒருவராவது, "என்னுடைய சான்றிதழ்களைக் கொண்டு வாருங்கள்; இன்னும் ஒரு முறை அவற்றைப் பார்க்க விரும்புகின்றேன்; என் பரிசுப் பொருட்கள், பதக்கங்கள், எனக்குக் கொடுக்கப்பட்ட தங்க கைக்கடிகாரம் இவற்றை எனக்குக் காண்பியுங்கள்" என்று கூறி நான் கேட்டதேயில்லை. பூமியில் தங்கள் வாழ்க்கை முடிவுறும்போது மக்கள் தங்களைச் சுற்றிப் பொருட்களிருக்க வேண்டுமென விரும்புவதில்லை. சுற்றிலும் மக்கள் இருப்பதையே – நாம் நேசித்து உறவு கொண்ட மக்களையே தேடுகின்றோம்.

நமது இறுதி வினாடிகளில், உறவுகள்தான் வாழ்க்கையின் முக்கியம் என்று உணருகின்றோம். முந்தியோ, பிந்தியோ, அந்த ஞானத்தை அவசியம் நாம் பெற்றுக் கொள்ளவேண்டும். வேறெதுவும் இதைவிட முக்கியமானதல்ல என்று உணருவதற்கு நாம் மரணப் படுக்கைவரைக் காத்திருக்க வேண்டாம்.

நமது அன்பை வைத்துத்தான் நாம் மதிப்பீடு செய்யப்படுவோம். நித்தியத்தில் அன்பை வைத்துத்தான் நாம் மதிப்பீடு செய்யப்படுவோம்; ஆகவேதான், பிறரிடம் அன்பாயிருக்க பழகுவது நமது வாழக்கையின் இலக்காக இருக்க வேண்டும் என்பதற்கான மூன்றாவது காரணம். உங்கள் உறவுகளின் தன்மையைக் கொண்டுதான் தேவன் உங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியை அளவிடுவார். பரலோகத்தில் தேவன், ***"உன் தொழில், உன் வங்கிக் கணக்கு, உனக்கு பிடித்த பொழுதுபோக்கு என்ன"*** என்று கேட்கமாட்டார். மாறாக, மற்றவர்களை நீங்கள் எப்படி நடத்தினீர்கள், குறிப்பாக, தேவையிலுள்ளவர்களை எப்படி நடத்தினீர்கள் என்று அவர் பரிசோதிப்பார்.[9] தனது குடும்பத்தை

நேசித்து, அவர்களுடைய நடைமுறைத் தேவைகளைக் குறித்துக் அக்கறை கொள்ளுவதுதான் தம்மை நேசிக்கும் வழி என்று இயேசு கூறினார்: *"மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்; மிகவும் சிறியவரான இவர்களில் ஒருவருக்கு எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள்."*[10]

வாழ்க்கையில் முக்கியமானது உறவுகள்தான்.

நீங்கள் நித்தியத்திற்குள் பிரவேசிக்கும்போது, மீதிக் காரியங்களெல்லாவற்றையும் பின்னே விட்டுவிடுவீர்கள். நீங்கள் உங்களுடன் கொண்டுபோவது உங்கள் குணம் மாத்திரமே. அதனால்தான், ***"அன்பின் மூலம் வெளிப்படுத்தப்படும் விசுவாசமே காரியம்"***[11] என்று வேதம் கூறுகின்றது.

இதையறிந்தவனாக, நான் கூறும் ஒரு ஆலோசனை, ஒவ்வொரு நாள் காலையும் நீங்கள் விழித்தெழும்பும்போது, உங்கள் படுக்கையருகே முழங்காற்படியிட்டு அல்லது நாற்காலி விளிம்பில் அமர்ந்து கொண்டு, ***"தேவனே, இன்று நான் எதைச் செய்து முடித்தேனோ, முடிக்கவில்லையோ, அதைப்பற்றிக் காரியமில்லை, உம்மையும், மக்களையும் நேசிப்பதில் நான் நேரமெடுக்க வேண்டுமென்று விரும்புகின்றேன் – ஏனெனில், வாழ்க்கையே அதைப் பற்றியதுதான். இந்த நாளை வீணாக்க நான் விரும்பவில்லை"*** என்று ஜெபியுங்கள். இந்த நாளை நீங்கள் வீணாக்கப் போகிறீர்களாயின், தேவன் மற்றொரு நாளை உங்களுக்குக் கூட்டித் தர வேண்டிய அவசியமில்லையே!

அன்பின் மிகச்சிறந்த வெளிப்பாடு, நேரத்தைக் கொடுப்பதாகும்

ஒரு காரியத்திற்கு எந்த அளவு, நாம் காலம் செலவழிக்கின்றோம் என்பதைப் பொருத்து, அந்தக் காரியத்தின் முக்கியத்துவம் அளக்கப்படக் கூடும். நீங்கள் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றீர்களோ, அந்தக் காரியத்திற்கு நீங்கள் அதிக நேரம் செலவழிப்பீர்கள். ஒரு நபர் எதற்கு முன்னுரிமை அளிக்கிறார் என்பதைக் கவனிக்க, அவர் நேரத்தை எப்படிச் செலவழிக்கிறார் என்று கவனித்தால் போதும்.

உங்களுக்கு இருக்கும் மிக விலைமதிப்புள்ள ஈவு, நேரம் (காலம்); ஏனெனில், அது ஒரு குறிப்பிட்ட அளவுதான் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் அதிகப் பணம் சம்பாதிக்க முடியும்; ஆனால், அதிக நேரம் சம்பாதிக்க முடியாது. நீங்கள் யாருக்காகவாவது உங்கள் நேரத்தை செலவழித்தால், நீங்கள் திரும்பவே பெறமுடியாத உங்கள் வாழ்க்கையின் ஒரு பகுதியைக் கொடுக்கின்றீர்கள். உங்கள் காலமே உங்கள் ஜீவன். அதனால்தான், நீங்கள் ஒருவருக்குக் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய பரிசு, உங்கள் காலம்.

உறவுகள் முக்கியமானவை என்று சொல்லுவது போதாது; அதற்காக நேரம் செலவழித்து, நேரத்தை முதலீடு செய்வதன் மூலம் அதை நிரூபிக்க வேண்டும். வெறும் வார்த்தைகள் பலனற்றவை. ***"என் பிள்ளைகளே! வெறும் வார்த்தையினாலும் பேச்சினாலுமல்ல, கிரியைகளில் வெளிப்படும் மெய்யான அன்பாக அது இருக்க வேண்டும்."***[12] உறவுகளை வளர்த்துக்கொள்ள, நேரமும் முயற்சியும் தேவை. அன்பு என்ற வார்த்தையை "கா—ல—ம்" (T-I-M-E) என்று உச்சரிக்கலாம்.

பிறருக்காக நாம் என்ன நினைக்கின்றோம், செய்கின்றோம் அல்லது கொடுக்கின்றோமென்பது நமது அன்பின் சாராம்சத்தைக் காட்டாது; நம்மையே நாம் எந்த அளவுக்குக் கொடுக்கின்றோமென்பதைப் பொருத்தது அது. ஆண்கள் குறிப்பாக இதைப் புரிந்து கொள்ளுவதே இல்லை. அநேகர் என்னிடம், "என் மனைவி, பிள்ளைகளை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை; அவர்களுக்குத் தேவையானதெல்லாம் நான் கொடுக்கின்றேன்; இதற்குமேல் அவர்களுக்கு என்ன வேண்டும்?" அவர்களுக்கு 'நீங்கள்' வேண்டும்! உங்கள் கண்கள், காதுகள், நேரம், கவனம், பிரசன்னம், உங்கள் சிந்தை எல்லாம் அவர்களுக்கு வேண்டும். சுருங்கச் சொன்னால், உங்களது நேரம் தேவை! அந்த இடத்தை வேறெதுவும் எடுக்க முடியாது.

நீங்கள் ஒருவருக்குக் கொடுக்கக்கூடிய மிகப் பெரிய ஈவு, உங்கள் நேரம்.

வைரம் அல்லது ரோஜாப்பூ அல்லது சாக்லேட் போன்ற வெகுமதிகளைவிட அன்பின் சிறந்த வெகுமதி, ***முழு கவனம்***

செலுத்துதல். அன்பு, தன்னையே மறந்து விடுகின்ற அளவுக்கு பிறரிடம் கவனம் செலுத்துவதாகும். இது என்னத்தை வெளிப்படுத்துகிறதென்றால்: "நீங்கள் எவ்வளவு முக்கியம் என்று உணர்ந்த காரணத்தால் எனது விலை மதிப்பற்ற சொத்தாகிய நேரத்தை உங்களுக்குத் தருகின்றேன்." நீங்கள் உங்கள் நேரத்தைக் கொடுக்கும்போதெல்லாம், நீங்கள் ஒரு தியாகம் செய்கின்றீர்கள்; தியாகம், அன்பின் சாராம்சம். இயேசு இதை மாதிரியாகக் காண்பித்தார், *"உங்கள் பேரில் அன்புகூர்ந்து, உங்கள் பாவங்களைப் போக்கும் பலியாகத் தேவனுக்குத் தம்மையே அளித்த கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி, பிறர்மீது அன்பு நிறைந்தவர்களாயிருங்கள்."*[13]

நீங்கள் நேசிக்காமலேயே கொடுக்க முடியும்; ஆனால், நீங்கள் கொடுக்காமல் நேசிக்க முடியாது. *"...கொடுக்குமளவுக்கு தேவன் இவ்வளவாக உலகில் அன்புகூர்ந்தார்."*[14] அன்பு என்றாலே விட்டுக் கொடுப்பது – நமது உரிமைகளை, தெரிந்தெடுப்புகளை, வசதிகளை, இலக்குகளை, பாதுகாப்பை, பணத்தை, சக்தியை, நேரத்தை வேறு யாரோ ஒருவருடைய நன்மைக்காக விட்டுக் கொடுப்பதுதான் அன்பு.

நேசிப்பதற்கு சிறந்த நேரம் இதுவே (இப்பொழுதே)

சில சமயங்களில், சிறிய, அற்ப வேலைகளைத் தள்ளிப் போடுவது நியாயமானதாக இருக்கும். ஆனால், அன்பு எல்லாவற்றிலும் முக்கியத்துவம் வாய்ந்ததாகையால், அதற்கு மேலான முன்னுரிமை (முதலிடம்) கொடுக்கப்பட வேண்டும். இதை வேதம் மீண்டும், மீண்டும் வலியுறுத்துகின்றது. *"சமயம் கிடைக்கும் போதெல்லாம் நன்மை செய்யுங்கள்"*[15] என்று கூறுகின்றது. *"நன்மை செய்யக் கிடைக்கும் தருணங்கள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துங்கள்."*[16] *"கூடுமானவரை, உங்களாலான மட்டும் யாவருக்கும் நன்மை செய்யுங்கள். இன்று உதவி செய்யத் திராணியிருக்கும்போது, உங்கள் அயலானிடம், 'நாளைக்கு வா' என்று சொல்லாதிருங்கள்."*[17]

அன்பை வெளிப்படுத்த ஏன் இதுவே சிறந்த தருணம்? இன்னும் எவ்வளவு காலம் உங்களுக்குத் தருணம் கிடைக்குமென்று உங்களுக்குத் தெரியாதே. சூழ்நிலைகள் மாறும்; மக்கள் மரிப்பார்கள்;

பிள்ளைகள் வளர்ந்து விடுவார்கள்; நாளைய தினத்தைக் குறித்த நிச்சயம் உங்களுக்குக் கிடையாது; அன்பை வெளிப்படுத்த நீங்கள் விரும்பினால், அதை நீங்கள் இப்பொழுதே செய்வது நலம்.



ஒரு நாள் தேவனுக்கு முன்பாக நீங்கள் நிற்க வேண்டுமென்பதையறிந்து, நீங்கள் கருத்தில் கொள்ளவேண்டிய சில கேள்விகள்: மக்களைவிட, செயல் திட்டங்கள் அல்லது பொருட்கள் உங்களுக்கு அதிக முக்கியமாகத் தெரிந்த நேரங்களுக்கு நீங்கள் என்ன விளக்கம் கொடுக்கக் கூடும்? யாருடன் அதிக நேரம் செலவழிப்பதை நீங்கள் ஆரம்பிக்கப் போகின்றீர்கள்? அதைச் செயல்படுத்தக் கூடியதாக்க, உங்கள் நிகழ்ச்சித் திட்டங்களில் எதைக் குறைக்கப் போகின்றீர்கள்? என்ன தியாகம் நீங்கள் செய்ய வேண்டியதிருக்கும்?

வாழ்க்கையின் மிகச் சிறந்த பயன் அன்பு. அன்பின் மிகச் சிறந்த வெளிப்பாடு, காலம் (நேரம்). நேசிக்க மிகச் சிறந்த காலம் இதுவே.

நாள் பதினாறு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: வாழ்க்கை முழுவதும் அன்பைப் பற்றியதாகவே இருக்கின்றது.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக, என்கின்ற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்."* கலாத்தியர் 5:14

ஆய்வுக்கான ஒரு கேள்வி: உண்மையில், உறவுகள்தான் என் முன்னுரிமையாக இருக்கின்றனவா? அதை எப்படி நான் நிச்சயித்துக் காண்பிக்கக் கூடும்?

17

அங்கம் வகிப்பதற்கு ஒரு இடம்

நீங்கள் தேவனுடைய சொந்தக் குடும்பத்தாரும், தேவனுடைய நகரத்தின் குடிமக்களுமாயிருக்கின்றீர்கள். மற்ற கிறிஸ்தவர்களுடனே நீங்கள் தேவனுடைய வீட்டின் அங்கமாயிருக்கின்றீர்கள்.
எபேசியர் 2:19 (புதிய மொழியாக்கம்)

தேவனுடைய வீடு, ஜீவனுள்ள தேவனுடைய சபையாகவும், சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாகவுமிருக்கின்றது.
1 தீமோத்தேயு 3:15 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் வெறுமனே விசுவாசிப்பதற்கு (believe) மாத்திரமல்ல, அங்கம் (belong) வகிப்பதற்காகவும் அழைக்கப்பட்டிருக்கின்றீர்கள்.

பாவமற்ற பரிபூரண சூழ்நிலை கொண்ட ஏதேன் தோட்டத்தில்கூட, தேவன், ***"மனிதன் தனிமையாயிருப்பது நல்லதல்ல"***[1] என்றார். நாம் கூட்டாக வாழப் படைக்கப்பட்டவர்கள், ஐக்கியம்கொள்ளும்படி வடிவம் பெற்றவர்கள், குடும்பத்திற்காக உருவாக்கப்பட்டவர்கள். நம்மில் ஒருவரும், தனித்து, நாமாக நின்று தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்ற முடியாது.

தனிமையான பரிசுத்தவான்கள் அல்லது மற்ற விசுவாசிகளிட மிருந்து பிரிக்கப்பட்டு, ஐக்கியமின்றி இருந்த ஆவிக்குரிய சன்னியாசிகளை வேதாகமத்தில் எங்கும் காணவே முடியாது. ***"ஒன்றாக வைக்கப்பட்டு, ஒன்றாக இணைக்கப்பட்டு, ஒன்றாக இசைவாகக் கட்டப்பட்டு, ஒரே சரீரத்தில் ஒன்று சேர்ந்த அவயவங்களாக ஒன்றான சுதந்தரவாளிகளாக, ஒன்றாகப்***

பொருத்தப்பட்டு, கூட்டி ஒன்றாக சேர்க்கப்பட்டுள்ள நாம், ஒன்றாக மேலே எடுத்துக் கொள்ளப்படுவோம்"[2] என்று வேதம் கூறுகின்றது. நீங்கள் இனி உங்களுக்கு மட்டும் சொந்தமல்ல.

கிறிஸ்துவுடனான உங்கள் ஐக்கியம் உங்களுக்கு மட்டுமே சொந்தமான தனிப்பட்ட காரியமாக இருக்கவேண்டுமென்பது தேவனுடைய நோக்கமல்ல; தேவனுடைய குடும்பத்தில், நாம் மற்ற விசுவாசிகளுடன் இணைக்கப்பட்டிருக்கின்றோம். நாம் நித்தியத்திலும் ஒருவருக்கொருவர் சொந்தமாயிருப்போம். *"அநேகராகிய நாம் கிறிஸ்துவில் ஒரே சரீரமாயும், தனித்தனியே ஒவ்வொரு அங்கத்தினரும் பிறருக்கு சொந்தமாகும் அவயவங்களாயுமிருக்கின்றோம்"*[3] என்று வேதம் கூறுகின்றது.

கிறிஸ்துவைப் பின்பற்றுதல் வெறும் ***விசுவாசித்தல்*** (believing) மட்டுமல்ல; அதில், ஒருவருக்கொருவர் ***சொந்தமாவதும்*** (belonging) அடங்கி இருக்கின்றது. சபையாகிய அவரது சரீரத்தில் நாம் அனைவரும் அங்கங்களாக இருக்கின்றோம். சி. எஸ். லூவிஸ் அவர்களின் கணிப்பின்படி, ***'உறுப்பினராகுதல்'*** அல்லது ***'அங்கத்தினராகுதல்'*** என்ற பதத்தின் (வார்த்தையின்) ஆரம்பம் கிறிஸ்தவத்திலிருந்தே வந்தது. ஆனால், உலகம் அதன் ஆரம்ப அர்த்தத்தை ஒன்றுமில்லாததாக்கிவிட்டது. கடைகளில் 'உறுப்பினருக்கு' தள்ளுபடி, சலுகை என்று கூறப்படுகின்றது. விளம்பரதாரர், தங்கள் கடிதத் தொடர்பு பட்டியலை உருவாக்க, உறுப்பினர் பெயர்களைப் பயன்படுத்துகின்றனர்; அப்படியே, அந்த பாரம்பரிய பழக்க வழக்கத்தின்படி, திருச்சபையிலும், "அங்கத்தினர்கள்" என்ற வார்த்தை வெறும் பட்டியலின் பெயராக மட்டும் அநேக இடங்களில் இருந்துவிடுகின்றன.

பவுலைப் பொறுத்தவரையில், ஒரு சபையில், "உறுப்பினராவது" என்பது ஜீவனுள்ள ஒரு சரீரத்தின் அவயவமாக, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையுடன் ஒருவருடனொருவர் இணைக்கப்பட்ட முக்கிய அங்கமாகுதல் ஆகும்.[4] 'உறுப்பினராகுதல்' என்ற பதத்தின் வேதாகமப் பொருளை நாம் மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியம். சபை ஒரு சரீரம்; வெறும் கட்டடமல்ல; ஒரு அவயவமாகுதல் (organism), வெறும் நிறுவனமல்ல (not an organization).

உங்கள் சரீர அவயவங்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானால் (வேலையைச் செய்ய வேண்டுமானால்), அவை ஒரு சரீரத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகிய உங்களுக்கும் இது பொருந்தும். நீங்கள் ஒரு குறிப்பிட்ட, திட்டவட்டமான நோக்கத்திற்காகப் படைக்கப்பட்டவர்கள். உங்கள் வாழ்க்கைக்குரிய இந்த இரண்டாவது நோக்கத்தை, ஒரு ஜீவனுள்ள ஸ்தல சபையில் இணைக்கப்படாவிட்டால், நீங்கள் இழந்து போவீர்கள். பிறருடன் நீங்கள் கொள்ளும் உறவுகளின் மூலமே, வாழ்க்கையில் உங்கள் பங்கை நீங்கள் கண்டுகொள்ள முடியும். *"சரீர அவயவம் ஒவ்வொன்றும், முழுச் சரீரத்தினால்தான் முக்கியத்துவம் பெறுகின்றன; நாம் இங்கு குறிப்பிடும் சரீரம், தெரிந்து கொள்ளப்பட்ட மக்களாலான கிறிஸ்துவின் சரீரமாகிய சபை. அவருடைய சபையின் அங்கமாக இணைந்துதான் ஒவ்வொருவரும் நமது வேலையையும், நமது வாழ்க்கையின் பொருளையும் கண்டு கொள்ளுகின்றோம். வெட்டுண்டுபோன கை விரலாக அல்லது தறிக்கப்பட்டுப்போன கால் விரலாக நாம் என்ன பயன் பெறக் கூடும்?"*[5] என்று வேதம் நமக்குக் கேள்வியை எழுப்புகின்றது.

பிறருடனுள்ள நமது உறவுகள் மூலமாகத்தான், நாம் வாழ்க்கையில் நமது பங்கைக் கண்டுபிடிக்கின்றோம்.

ஒரு சரீர அவயவம் எப்படியாவது சரீரத்தினின்று துண்டிக்கப்பட நேர்ந்தால், அது சுருங்கி, மரிக்கும். தனியே வெட்டுண்ட அவயவமாக அது ஜீவிக்க முடியாது. அப்படித்தான் நீங்களும். ஒரு ஸ்தல சபையின் ஜீவனுள்ள இரத்த ஓட்டத்துடன் இணைக்கப்படாமல் தனித்து நின்றால், உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கை உலர்ந்துபோய், நாளடைவில் இல்லாமலே போய்விடும்.[6] ஆகையால்தான், ஆவிக்குரிய வாழ்க்கைக்கான சரிவடைதலின் முதல் அறிகுறி, "ஆராதனைகளுக்கும், சபையின் மற்ற விசுவாசிகளின் ஆவிக்குரிய கூட்டங்களுக்கும் வரத் தவறுதல்" என்று சொல்லப்படுகின்றது. ஐக்கியத்தைக் குறித்து நாம் கவலையீனமாகும்போதெல்லாம், மற்றக் காரியங்களும்கூட, கீழ் நோக்கி சரிவடைகின்றன.

தேவனுடைய குடும்பத்தின் அங்கமாவது ஒரு அர்த்தமற்றதோ அல்லது அப்படியே அலட்சியப்படுத்தக் கூடியதோ அல்ல. சபை, உலகத்திற்கான தேவனுடைய நிகழ்வுத்திட்டம். ***"நான் என் சபையைக் கட்டுவேன்; பாதாளம் (நரகம்) அதை மேற்கொள்ளுவதில்லை"***[7] என்று இயேசு கூறினார். சபை அழிக்கப்படக்கூடாதது; அது நித்தியமாகத் தொடரும். இப்பிரபஞ்சம் அழிந்த பின்னும் அது நீடிக்கும்; ஆகவே, அதில் உங்கள் பங்கும் தொடரும். ***"எனக்கு ஒரு சபை தேவையில்லை"*** என்று கூறும் ஒருவர், ஒன்று பெருமை நிறைந்தவராகவோ அல்லது அறியாமையுள்ளவராகவோதான் இருக்க வேண்டும். சபை அவ்வளவு முக்கியத்துவமுள்ளதாக இருக்கின்றபடியினால்தான், கிறிஸ்து அதற்காக சிலுவையில் மரித்தார். ***"கிறிஸ்து சபையை நேசித்து அதற்காகத் தமது ஜீவனையே கொடுத்தார்."***[8]

சபை, இந்த பிரபஞ்சம் அழிந்த பின்னும் ஜீவிக்கும்; அதிலுள்ள உங்கள் பணியும் நித்தியமாகத் தொடரும்.

சபையை ***"கிறிஸ்துவின் மணவாட்டி"*** என்றும் ***"கிறிஸ்துவின் சரீரம்"***[9] என்றும் வேதம் கூறுகின்றது. நான் கிறிஸ்துவிடம், "எனக்கு உம்மை நேசிக்க முடியும்; ஆனால், உங்கள் மனைவியை நான் வெறுக்கின்றேன்" என்று கூறுவதை என்னால் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை அல்லது "நான் உம்மை ஏற்றுக் கொள்ளுகின்றேன்; ஆனால், உமது சரீரம் எனக்குத் தேவையில்லை" என்று கூறமுடியுமா?

ஆயினும், நாம் சபையை ஒதுக்கி வைக்கும்போதும், இழிவாக அதைப் பற்றிப் பேசும்போதும், புகார் கூறும்போதும் நாம் இதைத்தான் செய்கின்றோம். மாறாக, இயேசு சபையை நேசித்ததுபோல, நாமும் சபையை நேசிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகின்றார். ***"உங்கள் ஆவிக்குரிய குடும்பத்தை நேசியுங்கள்"***[10] என்று வேதம் கூறுகின்றது. அநேகக் கிறிஸ்தவர்கள் சபையைப் பயன்படுத்திக் கொண்டு, அதை நேசிக்காமலிருப்பது வருந்தத்தக்க காரியம்.

உங்கள் உள்ளூர் ஐக்கியம் (ஸ்தல சபை)

வரலாறு முழுவதிலுமுள்ள விசுவாசிகளை சபையென்று குறிப்பிடும் ஒன்றிரண்டு முக்கியமான நேரங்களைத் தவிர, வேதத்தில், *சபை* என்ற பதம் பயன்படுத்தப்படும்போதெல்லாம், உள்ளூரிலுள்ள, காணக்கூடிய சபையையே அது குறிக்கின்றது. புதிய ஏற்பாடு, ஸ்தல சபையில் அங்கமாவதைக் குறிக்கின்றது. பயங்கரமான வெளிப்படையான பாவத்தினால், ஐக்கியத்திலிருந்து அகற்றப்பட்ட அங்கத்தினர்கள் மட்டும், சபை ஒழுங்கின்படி அங்கத்தினராக இருக்கக் கூடாதபடி விலக்கப்பட்டனர்.[11]

சபை என்ற குடும்பம் இல்லாத ஒரு கிறிஸ்தவன், சரீரமில்லாத ஒரு அவயவம், மந்தையில்லாத ஒரு ஆடு, குடும்பமில்லாத ஒரு குழந்தை என்று வேதம் கூறுகின்றது. அது ஒரு இயற்கைக்கு ஒவ்வாத நிலை. ***"நீங்கள் மற்ற விசுவாசிகளுடன் தேவனுடைய வீட்டுக்குச் சொந்தமானவர்கள்"***[12] என்று வேதம் கூறுகின்றது.

இன்றைய சுதந்தரத் தனி மனிதத்துவ கலாச்சாரம், அநேக ஆவிக்குரிய அனாதைகளை உருவாக்குகின்றது. தங்களை எந்தவொரு சபையிலும் ஒருமைப்படுத்திக் கொள்ளாமல், அர்ப்பணிப்போ, கணக்குக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணமோ இல்லாமல், சபைக்கு, சபை தாவும் "குட்டி–முயல்" விசுவாசிகள் இவர்கள். எந்தவொரு ஸ்தல சபையிலும் இணைந்து கொள்ளாமல் (அல்லது சபை ஆராதனைகளில் கலந்து கொள்ளாமல்) 'நல்ல கிறிஸ்தவனாக' இருக்கக் கூடுமென்று அநேகர் நம்புகின்றனர். ஆனால், தேவனோ இதைப் பலமாக ஆட்சேபிக்கின்றார். ஒரு ஸ்தல சபை ஐக்கியத்தில் அர்ப்பணிப்புடன் இணைய வேண்டியதற்கான அநேக கண்டிப்பான காரணங்களை வேதம் நமக்குத் தருகின்றது.

உங்களுக்கு ஒரு சபைக் குடும்பம் ஏன் அவசியம்?

ஒரு சபைக் குடும்பம் உங்களை ஒரு உண்மை விசுவாசியென்று அடையாளம் காண்பிக்கின்றது. எந்த ஒரு திட்டவட்டமான சீஷர் குழுவிலும் நான் என்னை அர்ப்பணிக்காவிட்டால், நான் கிறிஸ்துவைப் பின்பற்றுவதாக உரிமை கொண்டாட முடியாது. ***"நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதால், நீங்கள் என்***

சீஷரென்பதை உலகம் அறிந்து கொள்ளும்"[13] என்று இயேசு சொன்னார்.

வெவ்வேறு குடும்பப் பின்னணிகள், இனம், சமுதாய அந்தஸ்து இவற்றிலிருந்து வந்தவர்கள் அன்புடன் ஒன்றுகூடும்பொழுது, அது உலகத்திற்கு ஒரு வலுவான சாட்சியாகும்.[14] நீங்கள், கிறிஸ்துவின் சரீரமாக தனித்து, உங்கள் இஷ்டம்போலிருக்க முடியாது. அதை வெளிப்படுத்த பிறர் தேவை. தனித்தனியாக அல்ல, ஒன்று சேர்ந்து, நாம் அவருடைய சரீரம்.[15]

சுயத்தை மையமாகக்கொண்ட தனிமையிலிருந்து ஒரு சபைக் குடும்பம், உங்களை வெளியேற்றுகின்றது. தேவனுடைய குடும்பத்தில் எப்படிப் பழகுவதென்று கற்றுக்கொள்ளுவதற்கேற்ற வகுப்பறை, ஸ்தல சபை. தன்னலமற்ற, பரிதாப உணர்வுள்ள அன்பைப் பயிற்றுவிக்கும் பரிசோதனைக் கூடம் அது. பங்கெடுக்கும் உறுப்பினராக, பிறர் மீது கரிசனை கொள்ளவும், பிறருடைய அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும் நீங்கள் கற்றுக் கொள்ளுகின்றீர்கள். *"சரீரத்தின் ஒரு அவயவம் துன்பப்பட்டால், எல்லா அவயவங்களும் அத்துடன் சேர்ந்து துன்பப்படும். சரீர அவயவங்களில் ஒன்று கனம் பெற்றால், மற்ற அவயவங்களனைத்தும் அதில் பங்கு பெறும்."*[16] சாதாரண, குறைவுள்ள விசுவாசிகளுடன் ஒழுங்காகத் தொடர்பு கொள்ளுவதன் மூலமே நாம் உண்மையான ஐக்கியத்தைக் கற்றுக் கொண்டு, ஒருவருடனொருவர் இணைக்கப்பட்ட, ஒருவரையொருவர் சார்ந்து நிற்கும் புதிய ஏற்பாட்டு சத்தியத்தை அனுபவிக்க முடியும்.[17]

நாள் பதினேழு:

அங்கம் வகிப்பதற்கு ஒரு இடம்

நாம் இயேசு கிறிஸ்துவுடன் எப்படி அர்ப்பணிக்கப்பட்டுள்ளோமோ, அப்படி ஒருவருக்கொருவர் அர்ப்பணிப்புடனிருப்பதுதான், வேதாகமத்திற்கேற்ற ஐக்கியம். நாம் ஒருவருக்காக ஒருவர் நமது வாழ்க்கையைக் கொடுக்க வேண்டுமென்று தேவன் நம்மிடம் எதிர்பார்க்கின்றார். யோவான் 3:16ஐ அறிந்த அநேக கிறிஸ்தவர்களுக்கு 1 யோவான் 3:16 தெரியாது: ***"இயேசு கிறிஸ்து நமக்காகத் தமது ஜீவனையே***

கொடுத்தார். நாமும் நமது சகோதரர்களுக்காக மரிக்கக் கடனாளிகளாயிருக்கின்றோம்."[18] இப்படிப்பட்ட தியாக அன்பையே நாம் மற்ற விசுவாசிகளுக்குக் காண்பிக்க வேண்டுமென தேவன் எதிர்பார்க்கின்றார் – இயேசு உங்களை நேசிப்பதுபோலப் பிறரை நேசிக்கும் மன விருப்பம்.

ஒரு சபைக் குடும்பம், உங்களது ஆவிக்குரிய உறுதியான தசையை வலுவாக்க உதவுகின்றது. வெறும் துதி ஆராதனைகளில் பங்கெடுத்து, செயலற்ற பார்வையாளராக இருப்பதன் மூலம் நீங்கள் ஒரு நாளும் முதிர்ச்சியடைய முடியாது. ஒரு ஸ்தல சபையின் முழு ஜீவியத்தில் பங்கெடுப்பதுதான் ஆவிக்குரிய வலுவை உண்டாக்கும். *"அவயவங்கள் ஒவ்வொன்றும் தங்களுக்குரிய வேலையைச் செய்து, பிற அவயவங்களும் வளர்ச்சியடைய உதவுகின்றன; அதனால், சரீரம் முழுமையும் ஆரோக்கியமாக வளர்ச்சியடைந்து அன்பினால் நிறையும்"*[19] என்று வேதம் கூறுகின்றது.

'ஒருவரையொருவர்' அல்லது 'ஒருவருக்கொருவர்' என்ற பதம் புதிய ஏற்பாட்டில் ஐம்பது தடவைகளுக்கும் மேலாக வருகின்றது. நாம் ஒருவருக்காக ஒருவர் *ஜெபிக்க* வேண்டும், ஒருவரையொருவர் *நேசிக்க* வேண்டும், *ஊக்கப்படுத்த* வேண்டும், ஒருவருக்கொருவர் *போதித்துப் புத்தி சொல்ல* வேண்டும், ஒருவரையொருவர் வாழ்த்த வேண்டும், *ஒருவரையொருவர் கனம் பண்ண* வேண்டும், *ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்க* வேண்டும், ஒருவருக்கொருவர் *மன்னிக்க வேண்டும்*, ஒருவருக்கொருவர் *அடங்கியிருக்க* வேண்டும், ஒருவருக்கொருவர் *அர்ப்பணிப்புடனிருக்க* வேண்டும்... என்பது போன்ற ஒருவருக்கொருவர் பரஸ்பரம் செய்ய வேண்டிய அநேக காரியங்களை நாம் கட்டளையாக பெற்றிருக்கின்றோம். இதுதான், "அங்கத்தினர்" என்ற வார்த்தைக்கான வேதாகம அர்த்தம். இவைகளைதான், "குடும்ப பொறுப்புகள்" என்று அழைக்கின்றோம்; இவைகளை ஸ்தல சபையின் சூழ்நிலையில் நிறைவேற்ற வேண்டும்; மட்டுமல்ல, இவைகளை பிறருடன் இணைந்து செய்திட வேண்டும்.

உங்கள் முன்னுரிமைகளைப் பாதிக்காத அளவில், ஒருவரும் இல்லாத நேரத்தில் பரிசுத்தமாயிருப்பது எளிதான காரியமாகத் தோன்றலாம். ஆனால், அது பொய்யான, சோதிக்கப்படாத பரிசுத்தம். தனிமைப்படுத்திக்கொள்ளுதல் ஏமாற்றுவதைப் பிறப்பிக்கும்.

ஒருவரும் நமக்கு சவாலாக நிற்காத வேளையில், நாம் முதிர்ச்சியடைந்து விட்டோமென்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுவது எளிது. உறவுகளில்தான், உண்மையான முதிர்ச்சி இருப்பதும் இல்லாததும் தெரியவரும்.

வளர்ச்சியடைய வேதாகமம் மட்டுமே போதாது; மற்ற விசுவாசிகளும் நமக்குத் தேவை. ஒருவருக்காக ஒருவர் பொறுப்புள்ளவர்களாக இருந்து, ஒருவரிடமிருந்து ஒருவர் கற்றுக்கொள்ளுவதன் மூலம் நாம் விரைவாக, பலமுள்ளவர்களாக வளர்ச்சி பெறுகின்றோம். தங்களுக்கு தேவன் கற்றுக் கொடுத்தவற்றைப் பிறர் என்னுடன் பகிர்ந்துகொள்ளும்போது, நானுங்கூட கற்றுக்கொண்டு வளர்ச்சியடைகின்றேன்.

கிறிஸ்துவின் சரீரத்திற்கு நீங்கள் தேவை. தமது குடும்பத்தில் நீங்கள் செய்யும்படி உங்களுக்கென்று ஒரு பங்கை தேவன் வைத்திருக்கின்றார். அதுவே, உங்கள் 'ஊழியம்' என்று அழைக்கப்படுகின்றது. அந்தப் பணிக்கென்று தேவன் உங்களை நியமித்திருக்கின்றார். *"முழு சபைக்கும் உதவும்படியாக, நம் ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய வரங்கள் அளிக்கப்பட்டுள்ளன."*[20]

உங்கள் வரங்களைக் கண்டுபிடித்து, விருத்தி செய்து, பயன்படுத்த, தேவன் உங்களுக்காக வடிவமைத்திருக்கும் இடம் உங்கள் ஸ்தல சபை ஐக்கியம். அதைவிடப் பரந்த ஊழியம் உங்களுக்கு இருக்கலாம்; ஆனால், அது ஸ்தல சபையில் உங்கள் சேவையுடன்கூட, ***கூட்டி வழங்கப்பட்ட ஒன்று***. இயேசு உங்கள் ஊழியத்தைக் கட்டுவதாக வாக்குக் கொடுக்கவில்லை. ஆனால், ***தமது*** சபையைக் கட்டுவதாக வாக்களித்திருக்கின்றார்.

உலகத்தில், கிறிஸ்துவின் பணியில் நீங்கள் பங்கெடுப்பீர்கள். இயேசு உலகில் சஞ்சரித்தபோது, தேவன், கிறிஸ்துவின் சரீரப் பிரகாரமான உடல் மூலம் கிரியை செய்தார். சபையென்பது பூமியில் தேவனுடைய கருவி. நாம் ஒருவரையொருவர் நேசிப்பதால் மட்டுமே தேவனுடைய அன்பை மாதிரியாகக் காட்ட முடியாது; நாம் ஒன்று சேர்ந்து தேவனுடைய அன்பை உலகிற்கு எடுத்துச் செல்ல வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாக, நாம்தான் அவருடைய கரங்கள், கால்கள், கண்கள் மற்றும் இருதயம். நமது

மூலமாக அவர் உலகில் கிரியை செய்கின்றார். நாம் ஒவ்வொருவரும் ஆற்ற வேண்டிய ஒரு பங்கு உண்டு. *"நாம் செய்யும்படி அவர் நமக்காக ஆயத்தம்பண்ணியுள்ள நற்கிரியைகளைக் கிறிஸ்து இயேசுவினால் அவருடன் இணைந்து நாம் செய்யும்படி, நம் ஒவ்வொருவரையும் அவர் சிருஷ்டித்துள்ளார்"*[21] என்று பவுல் கூறுகின்றார்.

நீங்கள் பின்மாற்றமடையாதபடி, உங்களை உங்கள் சபைக் குடும்பம் பாதுகாக்கும். நம்மில் எவரும் சோதனையால் பாதிக்கப்படக் கூடாதவர்களல்ல. சரியான சூழ்நிலையளிக்கப்பட்டால், நீங்களும், நானும் எந்தப் பாவமும் செய்யக்கூடும்.[22] தேவன் இதையறிவார்; ஆகவே, தனி மனிதராக, ஒருவரையொருவர் சரியான பாதையில் காத்துக்கொள்ள உதவி செய்யும் பொறுப்பை அவர் நமக்களித்திருக்கின்றார். *"உங்களில் ஒருவரும் பாவத்தின் வஞ்சனையினால் கடினப்பட்டுப் போகாதபடி, ...ஒருவரை யொருவர் தினந்தோறும் உற்சாகப்படுத்துங்கள்"*[23] என்று வேதம் கூறுகின்றது. "உன் வேலையைப் பார்" என்பது கிறிஸ்தவக் கூற்று அல்ல; நாம் ஒருவர் வாழ்வில் ஒருவர் இடைபட வேண்டுமென்று அழைக்கப்படுகின்றோம்; கட்டளை பெற்றிருக்கின்றோம். ஆவிக்குரிய வாழ்வில் தடுமாறிக் கொண்டிருக்கும் ஒருவரை இப்போது நீங்கள் பார்த்தால், அவர்கள் பின்னே சென்று, மீண்டும் அவர்களை ஐக்கியத்திற்குள் கொண்டு வருவது உங்கள் பொறுப்பு. *"உங்களில் சிலர் சத்தியத்தை விட்டு வழிவிலகிப் போவதை நீங்கள் அறிந்தால், அவர்களைக் குறித்துக் கவலையற்றவர்களாக இருக்காமல், அவர்கள் பின்னே சென்று, அவர்களை மீண்டும் சரியான வழிக்குத் திருப்ப வேண்டும்"*[24] என்று யாக்கோபு நமக்குக் கூறுகின்றார்.

> ***இயேசு உங்கள் ஊழியத்தைக் கட்டுவதாகக் கூறவில்லை; தமது சபையைக் கட்டுவதாக மட்டுமே அவர் வாக்குக் கொடுத்திருக்கின்றார்.***

ஸ்தல சபையோடு தொடர்புள்ள நமக்கு கிடைக்கும் மற்றொரு நன்மை: ஆவிக்குரிய தலைவர்கள் மூலம் பாதுகாப்பு கிட்டுகின்றது. மேய்க்கும் தலைவர்களுக்கு, தேவன் தமது சபையின் ஆவிக்குரிய

நலனைப் பாதுகாக்கும், காவல் காக்கும், கரிசனைகொள்ளும் பொறுப்பை அளித்திருக்கின்றார்.[25] ***"உங்கள் ஆத்துமாக்களைக் கண்காணிக்கும் பொறுப்பு அவர்களுடையது, தங்கள் தேவனுக்குக் கணக்குக் கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும்."***[26]

தனித்து நிற்கும் விசுவாசிகளை சாத்தான் நேசிக்கின்றான்; இவர்கள், சரீரத்தின் ஜீவனோடுள்ள இணைப்பை அறுத்துக் கொண்டவர்கள்; தேவனுடைய குடும்பத்திலிருந்து தனித்துப் பிரிந்து நிற்பவர்கள்; ஆவிக்குரிய தலைவர்களுக்குக் கணக்குக் கொடுக்கத் தேவையில்லையென்று நினைப்பவர்கள் – இவர்களையெல்லாம் சாத்தான் நேசிக்கின்றான்; ஏனெனில், எந்தவிதமான பாதுகாப்பும், தனது தந்திரங்களுக்கு எதிர்த்து நிற்கும் பலனும் அவர்களுக்கு இல்லையென்பது சாத்தானுக்குத் தெரியும்.

எல்லாம் சபையிலிருக்கின்றது

"நோக்கத்தினால் வழிநடத்தப்படும் திருச்சபை" என்ற என்னுடைய புத்தகத்தில், ஆரோக்கியமான சபையின் அங்கத்தினராயிருப்பது எவ்விதத்தில் ஆரோக்கியமான வாழ்வுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததென்பதை நான் விளக்கியிருக்கின்றேன். தேவன் உங்கள் வாழ்க்கையைப் பற்றிக்கொண்டுள்ள ஐந்து நோக்கங்களையும், நீங்கள் நிறைவேற்ற உங்களுக்கு உதவி செய்யும்படி தேவன் சபையை எவ்வாறு வடிவமைத்திருக்கின்றாரென்பதையும் நீங்கள் புரிந்துகொள்ள அந்தப் புத்தகம் உங்களுக்கு உதவி செய்யும். உங்களுடைய ஐந்து ஆழ்ந்த தேவைகளை சந்திக்கும்படி அவர் சபையை உருவாக்கினார்; வாழ்வதற்கு ஒரு நோக்கம், சேர்ந்து வாழ ஒரு மக்கள் கூட்டம், கடைப்பிடிக்க வேண்டிய கொள்கைகள், வாழ்க்கை நடத்த ஒரு பணி, வாழ்வதற்கு பெலன். இந்த ஐந்து பயன்களையும் ஒரே இடத்தில் கண்டுகொள்ள சபையைத் தவிர வேறு ஒரு இடம் பூமியில் இல்லை.



நமது சபையைப் பற்றிய தேவனுடைய நோக்கம், உங்களைப் பற்றிய அவருடைய ஐந்து

நோக்கங்களையும் போன்றதாகவே உள்ளன. ஆராதிப்பது, *தேவன் மீது ஒருமித்த கருத்து செலுத்த உதவுகின்றது;* ஐக்கியம், *வாழ்க்கையின் பிரச்சனைகளை எதிர்கொள்ள உதவுகின்றது;* சீஷத்துவம், *உங்கள் விசுவாசத்தை உறுதிப்படுத்த உதவுகின்றது;* ஊழியம், *நீங்கள் உங்கள் தாலந்துகளைக் கண்டுகொள்ள உதவுகின்றது;* சுவிசேஷப் பணி, *உங்கள் ஊழியத்தை நிறைவு செய்ய உதவுகின்றது;* சபையைப்போல வேறெதுவும் பூமியில் இல்லை!

உங்கள் தெரிந்தெடுப்பு

ஒரு குழந்தை உலகில் பிறந்ததும், அகில உலகத்திலுமுள்ள மனித வர்க்கத்தின் ஒரு அங்கமாக, அது தானாக இணைந்து கொள்ளுகின்றது. ஆனால், அந்தக் குழந்தை, நல்ல ஆகாரமும் பராமரிப்பும் பெற்று ஆரோக்கியமாக, திடகாத்திரமாக வளர, அது ஒரு குறிப்பிட்ட குடும்பத்தின் அங்கமாக இருப்பது அவசியம். இது ஆவிக்குரிய பிரகாரமாகவும் பொருந்தும். நீங்கள் மறுபடியும் பிறந்தபொழுது, நீங்கள் தானாகவே தேவனுடைய அகில உலகக் குடும்பத்தின் ஒரு அங்கமாகி விடுகின்றீர்கள்; ஆனால், நீங்களும் தேவனுடைய குடும்பத்தின் ஸ்தல வெளிப்பாடாக மாறிவிட வேண்டியது அவசியம். ஒரு சபையின் ஆராதனைகளில் கலந்து கொள்ளுபவராக இருப்பதற்கும், சபையின் அங்கத்தினராக இருப்பதற்கும் உள்ள வித்தியாசம் – அர்ப்பணிப்பு! ஆராதனைக்கு வருபவர்கள் ஓரத்திலிருந்து நடப்பவற்றைக் கவனிப்பவர்கள்; அங்கத்தினரோ ஊழியத்தில் ஈடுபாடு கொள்ளுகின்றனர். வந்து போகிறவர்கள் எல்லாவற்றையும் அனுபவிப்பவர்கள்; அங்கத்தினரோ தங்களையே கொடுப்பவர்கள். வந்து போகிறவர்கள், பொறுப்புகள் எதுவும் எடுத்துக் கொள்ளாது, சபையின் பயன்களை மட்டும் அனுபவிக்க விரும்புபவர்கள். திருமண ஒப்பந்தத்திற்குத் தங்களை அர்ப்பணிக்காமல், ஒன்றாக வாழ விரும்பும் தம்பதியரைப் போன்றவர்கள் அவர்கள்.

ஒரு ஸ்தல சபைக் குடும்பத்தில் சேருவது ஏன் அவ்வளவு முக்கியமானது? வெறும் கொள்கையளவிலல்ல, நடைமுறைப்படி, உங்கள் ஆவிக்குரிய சகோதர, சகோதரிகளுக்கு நீங்கள் கடன்பட்டவர்களென்பதை அது நிரூபிக்கின்றது. இலட்சிய மக்களையல்ல, உண்மையான மக்களை நீங்கள் நேசிக்க

வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். ஒரு குறைவுமற்ற ஒரு சபையை நீங்கள் உங்கள் வாழ்நாள் முழுவதும் தேடிக் கொண்டிருந்தாலும், கண்டுபிடிக்கவே முடியாது.

தேவன் செய்கிறதுபோலவே, குறைவுள்ள பாவிகளை நேசிக்கவே நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

அப்போஸ்தலர் நடபடிகளில், எருசலேமிலுள்ள கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவருள்ள தங்கள் அர்ப்பணிப்பில் மிகக் குறிப்பாகக் கவனமாக இருந்தார்கள். ஐக்கியத்திற்கு அடிபணிந்திருந்தார்கள். ''*அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்*''[27] என்று வேதம் கூறுகின்றது.

இன்றும் இப்படிப்பட்ட காரியங்களில் உறுதியாயிருக்கும்படி தேவன் உங்களிடம் எதிர்பார்க்கின்றார்.

கிறிஸ்தவ வாழ்க்கை, கிறிஸ்துவுக்காக என்று உறுதியாக இருப்பதுடன் நின்று விடுவதில்லை; மற்றக் கிறிஸ்தவர்களுக் காகவும் என்ற உறுதியையும் அது உள்ளடக்கியுள்ளது. மக்கதோனியாவிலுள்ள கிறிஸ்தவர்கள் இதை அறிந்திருந்தார்கள். ''*முதலாவது, அவர்கள் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுத்தார்கள்; பின்பு, தேவ சித்தத்தின்படி, தங்களையே உங்களுக்கு அர்ப்பணித்தார்கள்.*''[28] எப்பொழுது நீங்கள் தேவனுடைய பிள்ளையாகின்றீர்களோ, அப்பொழுதே, நீங்கள் இயற்கையாக எடுத்து வைக்கும் அடுத்த எட்டு, ஒரு ஸ்தல சபைக் குடும்பத்தில் இணைவது; கிறிஸ்துவுக்கு உங்களை அர்ப்பணிப்பதன் மூலம் கிறிஸ்தவன் ஆகின்றீர்கள். ஆனால், ஒரு குறிப்பிட்ட விசுவாசக் கூட்டத்தாருடன் இணைந்து கொள்ளுவதன் மூலம்தான், நீங்கள் ஒரு *சபையின் அங்கத்தினராகின்றீர்கள்*. முதல் தீர்மானம் இரட்சிப்பைக் கொண்டு வருகின்றது. இரண்டாவது தீர்மானம் ஐக்கியத்தைக் கொண்டு வருகின்றது.

நாள் பதினேழு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் வெறுமனே விசுவாசிப்பதற்கு மாத்திரமல்ல, அங்கம் வகிப்பதற்காகவும் அழைக்கப்பட்டிருக்கின்றேன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயுமிருக்கின்றோம்."*** ரோமர் 12:5

ஆய்வுக்கான ஒரு கேள்வி: எனது ஸ்தல சபையில், நான் கொள்ளும் ஈடுபாட்டின் அளவு, நான் தேவனின் குடும்பத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கின்றேன் என்பதை வெளிப்படுத்துகின்றதா?

வாழ்க்கையை ஒன்றாக இணைந்து அனுபவித்தல்

நீங்கள் தனித்தனியே கிறிஸ்துவின் சரீரத்தின் அவயவங்களாகவும், இசைந்து சமாதானமாக வாழவும் தெரிந்தெடுக்கப்பட்டீர்கள்.
கொலோசெயர் 3:15 (புதிய மொழியாக்கம்)

இதோ! சகோதரர்கள் (தேவனுடைய பிள்ளைகள்), ஒருமித்து இசைந்து வாழ்வது எத்தனை அற்புதமாகவும், இன்பமானதாகவுமிருக்கின்றது!
சங்கீதம் 133:1 (புதிய மொழியாக்கம்)

வாழ்க்கை பகிர்ந்துகொள்ளப்படுவதற்கே.

நாம் வாழ்க்கையை ஒன்றாக அனுபவிக்க வேண்டுமென்பது தேவ தீர்மானம்; இந்தப் பகிர்ந்துகொள்ளப்படும் அனுபவத்தை, வேதம், ***"ஐக்கியம்"*** என்று கூறுகின்றது. ஆயினும், இன்று, அந்த வார்த்தை வேதத்தின்படியான தனது பொருளை, பெரும்பாலும் இழந்து விட்டது; இப்பொழுது "ஐக்கியம்" என்றால், சாதாரணமாகக் கூடிப் பேசுதல், ஒன்றாக சேர்ந்து கொண்டாடுதல், உணவருந்துதல், மகிழ்ந்திருத்தல் என்பதையே குறிக்கின்றது. ***"நீங்கள் எங்கே ஐக்கியப்படுகின்றீர்கள்?"*** என்ற கேள்வி, "நீங்கள் எந்த சபைக்குப் போகின்றீர்கள்!" என்று பொருள்படுகின்றது. "ஐக்கியத்திற்காக சற்றுத் தங்கி செல்லுங்கள்" என்றால், "சிற்றுண்டிக்காகக் காத்திருங்கள்" என்றுதான் வழக்கமாகப் பொருள் கொள்ளப்படுகின்றது.

மெய்யான ஐக்கியம் சபை ஆராதனைகளில் பங்கு பெறுவதைப் பார்க்கிலும் மிகவும் அதிகமானது. அது, ***வாழ்க்கையை ஒன்று சேர்ந்து அனுபவிப்பதாகும்***. அது, தன்னலமற்ற அன்பு, உண்மையான பகிர்ந்தளிப்பு, நடைமுறை சேவை, தியாகமான ஈகை, அனுதாபத்தோடு ஆறுதல் அளித்தல், மற்றும்... "ஒருவரையொருவர்" என்னும் புதிய ஏற்பாட்டில் காணப்படும் கட்டளைகளை நிறைவேற்றுதலாகும்.

"ஐக்கியம்" என்று வரும்போது, அதன் அளவு மிக முக்கியம்: ***சிறிய அளவு சிறந்தது***. பெருங்கூட்டத்துடன் நீங்கள் ஆராதிக்கலாம்; ஆனால், ஐக்கியப்பட முடியாது.

ஏறத்தாழ 10 பேருக்கு மேலாக ஒரு குழு விரிவடையும்போது, யாராவது ஒருவர், வருவதை நிறுத்தி விடுவார்கள் – பொதுவாக, அக்குழுவிலுள்ள அமைதியான நபர் அப்படிச் செய்வார். பின்பு, அவர்களில் இன்னும் சிலர், அந்த குழுவில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துவிடுவர்.

சிறு எண்ணிக்கை கொண்ட சீஷர்களின் குழுவோடுதான் இயேசு ஊழியம் செய்தார். அவர் இன்னும் அதிகமானோரைத் தெரிந்தெடுத்திருக்க முடியும்; ஆனால், ஒவ்வொருவரும் பங்கெடுக்க வேண்டுமானால், பன்னிரண்டு என்பது போதுமானது என்பதை அவர் அறிந்திருந்தார்.

உங்கள் சொந்த சரீரத்தைப் போலவே, கிறிஸ்துவின் சரீரமும் மிகச் சிறிய உயிரணுக்களின் கூட்டமாகும். உங்கள் சரீரத்தைப்போலவே, கிறிஸ்துவின் சரீர ஜீவனும் இந்த உயிரணுக்களில் அடங்கியிருக்கின்றது. இதற்காகவே, ஒவ்வொரு கிறிஸ்தவனும், தங்கள் சபையிலுள்ள ஒரு சிறிய குழுவில் இடைபட வேண்டும் – அது ஒரு வீட்டு ஐக்கியக் குழுவாக, ஒரு பராமரிப்புக்குழுவாக, ஒரு வேதபாடக் குழுவாக அல்லது ஏதாவது ஒரு பெயரோடு அந்த குழு இருக்கலாம். அங்குதான், பெரிய கூடுகைகளில் கிடைக்காத உண்மையான ஐக்கியத் தொடர்பு கிடைக்கும். உங்கள் சபையை ஒரு கப்பலாக எண்ணிப் பார்த்தீர்களானால், இந்த சிறிய குழுக்கள்தான் அதில் பொருத்தப்பட்டுள்ள உயிர் காக்கும் படகுகளாகும்.

இந்தச் சிறிய குழு விசுவாசிகளைக் குறித்து தேவன் ஒரு நம்ப முடியாத வாக்குறுதியளித்திருக்கின்றார், ***"எங்கே என் நாமத்தினாலே இரண்டு அல்லது மூன்றுபேர் கூடியிருக்கின்றார் களோ, அங்கே, அவர்கள் மத்தியில் நானிருப்பேன்"***[1] என்கின்றார். துரதிர்ஷ்டவசமாக, மிகச்சிறிய குழுவிலுங்கூட நீங்கள் உண்மையான அர்ப்பணிப்பை, ஐக்கியத்தை காணமுடியுமென்ற உறுதிப்பாடு இல்லை. அநேக பராமரிப்புக் குழுக்களும், சிறு குழுக்களும் மேற்பூச்சாக செயல்பட்டு, உண்மையான ஐக்கியத்தை அனுபவிப்பதென்றால் என்ன என்ற அனுபவத்தையே அறியாதிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட போலியான ஐக்கியத்திற்கும், உண்மையான ஐக்கியத்திற்குமுள்ள வேறுபாடு என்ன?

***உண்மையான ஐக்கியத்தில், மக்கள் உண்மையின் நிஜ ரூபத்தை அனுபவிக்கின்றார்கள்* (experience authenticity).** இப்படிப்பட்ட உண்மையான ஐக்கியம், மேற்பரப்பில், வெளிப்படையாகக் காணும் பேச்சுப் பரிமாற்றம் மட்டுமல்ல, அது உண்மையான, உள்ளத்தோடு உள்ளம் இணையும், சில சமயங்களில் மிக பாரமான மன நிலை காரியங்களை கூட ஒருவருக்கொருவர் உண்மையாகப் பகிர்ந்துகொள்ளுதலாகும். உண்மையிலேயே தாங்கள் யாரென்பதை மக்கள் உணர்ந்து, தங்கள் வாழ்க்கையில் உண்மையாக நடப்பதென்ன என்பதைப் புரிந்து கொள்ளும்போது, பகிர்ந்து கொள்ளும் ஐக்கியம் நடைபெறும். தங்கள் மனக்காயங்கள் அனைத்தையும் பகிர்ந்து; தங்கள் தோல்விகளை அறிக்கையிட்டு; தங்கள் சந்தேகங்களை வெளிப்படுத்தி; பயங்களை ஒத்துக்கொண்டு; பலவீனங்களை அறிக்கையிட்டு; உதவிக்காகவும், ஜெபத்திற்காகவும் இக்குழுவினர் ஒருவரிடம் ஒருவர் கேட்டுக் கொள்ளுவார்கள்.



இந்த உண்மை நிலை இன்று சபைகளில் இல்லை. அதற்கு நேர்மாறானதையே நாம் காண்கின்றோம். உண்மையான, தாழ்மையான சூழ்நிலைக்குப் பதிலாக, அங்கு வெளிப்படையான

பாசாங்கு, நாடகமாடுதல், அரசியல் செய்தல், மேற்பூச்சான பணிவு, ஆழமற்ற சம்பாஷணைகள் நடைபெறுகின்றன. முகமூடிகளை அணிந்துகொண்டு, மக்கள், ஒரு பாதுகாப்பு வளையத்திற்குள் இருந்துகொண்டு, தங்கள் வாழ்க்கையில் எல்லாமே பசுமையாக இருப்பதுபோல நடித்துக் கொள்ளுவார்கள். இந்த மனப்பான்மைகள், உண்மை ஐக்கியத்தைக் கொன்று விடுகின்றன.

நமது வாழ்க்கையை ஒளிவு மறைவின்றி நாம் பகிர்ந்து கொள்ளும்போதுதான் உண்மையான ஐக்கியத்தை நாம் அனுபவிக்க முடியும். ***''அவர் ஒளியிலிருப்பதுபோல, நாமும் ஒளியிலே நடந்தால், நாம் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்... நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கின்றவர்களாக (ஏமாற்றிக் கொள்ளுகின்றவர்களாக) இருப்போம்''***[2] என்று வேதம் கூறுகின்றது. நெருக்கமான உறவு இருட்டில்தான் நடைபெறுமென உலகம் நினைக்கின்றது. தேவனோ, அது வெளிச்சத்தில் நடைபெறு மென்கின்றார். நமது மனக்காயங்கள், குற்றங்கள், பயங்கள், தோல்விகள், குறைவுகளை மறைக்க இருள் பயன்படுத்தப்படுகின்றது; ஆனால், வெளிச்சத்தில், நாம் அனைத்தையும் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, தாங்கள் உண்மையில் யாரென்பதை ஒத்துக் கொள்ளுகின்றார்கள்.

தாங்கள் யார், தங்கள் வாழ்க்கையில் நேரிடுகிறதென்ன என்பதைக் குறித்து மக்கள் உண்மையாக இருக்கும்போது மெய்யான ஐக்கியம் ஏற்படுகின்றது.

இப்படி உண்மை ரூபத்தில் இருக்க, தைரியமும், தாழ்மையும் தேவைப்படும். நம்மைக் குறித்த இரகசியங்கள் யாவும் வெளிப்படுத்தப்பட்டுவிடும் என்ற பயம், நிராகரிக்கப்படுவோமோ என்ற உணர்வு, மீண்டும் காயப்பட்டு விடுவோமோ என்ற அச்சம், இவற்றையெல்லாம் எதிர்கொள்ள வேண்டும். இப்படியொரு நிலையை ஏன் துணிவுடன் ஒருவர் ஏற்றுக் கொள்ளவேண்டும்? ஏனெனில், ஆவிக்குரிய வளர்ச்சியடைந்து, ஆரோக்கியமான உணர்வுகளடைய அது ஒன்றுதான் ஒரே வழி; ***"இதை உங்கள் பொதுவான வழியாக்கிக் கொள்ளுங்கள்; நீங்கள்***

சொஸ்தமடைந்து, ஒன்றாக வாழ, ஒருவருக்கொருவர் உங்கள் குற்றங்களை அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்"[3] என்று வேதம் கூறுகின்றது. துணிந்து இறங்குவதன் மூலமே நாம் வளர்ச்சியடைகின்றோம். நம்முடனும், பிறருடனும் உண்மையாக இருப்பதுதான் மிகப் பெரிய துணிவு ஆகும்.

உண்மை ஐக்கியத்தில், பரஸ்பரம் பகிரும் உணர்வை மக்கள் அனுபவிக்கின்றார்கள் (experience mutuality). பரஸ்பரம் என்பது ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்தல். இது, கொடுத்தலையும், பெற்றுக்கொள்ளுதலையும் உள்ளடக்கிய ஒன்று! இது ஒருவரையொருவர் சார்ந்துகொள்ளும் நிலை. *"நமது சரீர அவயவங்கள் ஒவ்வொன்றும் மற்ற அவயவங்கள் மீது சார்ந்திருக்கும்படி தேவன் நமது சரீரத்தை அமைத்திருப்பது, நாம் சபையாக ஒன்றாக ஒருவரையொருவர் புரிந்துகொண்டு வாழ்வதற்கு மாதிரியாகும்"*[4] என்று வேதம் கூறுகின்றது. பரஸ்பர உணர்வு, ஐக்கியத்தின் இருதயம் போன்றது. ஒருவருக்கொருவர் உறவுகளைக் கட்டியெழுப்புதல்; பொறுப்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல்; உதவி செய்தல். *"நமக்கிருக்கும் விசுவாசத்தைக் கொண்டு ஒருவருக்கொருவர் நாம் உதவியாயிருக்க நான் விரும்புகின்றேன்; உங்கள் விசுவாசம் எனக்கு உதவும்; என் விசுவாசம் உங்களுக்கு உதவும்"*[5] என்று பவுல் கூறினார்.

பிறர் நம்முடன் நடந்து நம்மை உற்சாகப்படுத்தி ஊக்குவிக்கும்போது, நாம் நமது விசுவாசத்தில் இன்னும் உறுதியாக இருப்போம். பரஸ்பரம், கணக்குக் கொடுப்பதையும், ஊக்குவிப்பதையும், சேவை செய்வதையும், கனப்படுத்துவதையும்[6] வேதம் நமக்குக் கட்டளையிடுகின்றது. 'ஒருவருக்காக ஒருவர்', 'ஒருவரையொருவர்' என்ற பதங்கள் கொண்டு, நாம் செய்ய வேண்டிய வெவ்வேறு வேலைகளைக் குறித்துப் புதிய ஏற்பாட்டில் ஐம்பது தடவைகளுக்கு மேலாக நாம் கட்டளை பெற்றிருக்கின்றோம். *"சமாதானத்திற்கும், ஒருவருக்கொருவர் பக்திவிருத்தியுண்டுபண்ணுவதற்குமான காரியங்களைச் செய்யக் கூடுமான அளவு முயற்சி செய்யுங்கள்"*[7] என்று வேதம் கூறுகின்றது.

கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலுள்ள ஒவ்வொருவருக்கும் நீங்கள் பொறுப்பு அல்ல; ஆனால், அனைவருக்கும் நீங்கள் உத்தரவாதி;

உங்களால் கூடுமானவரை நீங்கள் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

உண்மை ஐக்கியத்தில், மக்கள் அனுதாபத்துடனான ஆறுதலை அனுபவிக்கின்றார்கள் (experience sympathy). அனுதாபம் கொள்ளுதல் என்பது, ஆலோசனை கொடுப்பதோ, விரைவான, மேற்பூச்சான உதவி செய்வதோ அல்ல; அனுதாபப்படுதல் என்றால், உள்ளே பிரவேசித்து, பிறருடைய வேதனையைப் பகிர்ந்து கொள்ளுதல். அது, ***"நீ எதைக் கடந்து சென்றுக் கொண்டிருக்கின்றாய் என்பதை நான் புரிந்து கொள்ளுகின்றேன்; நீ இப்போது பெறும் உணர்வு, பயித்தியக்காரத்தனமானதுமல்ல; விசித்திரமானதுமல்ல"*** என்று கூறுகின்றது. இதை இப்போது சிலர் ஆங்கிலத்தில், 'எம்பதி' (empathy) என்று கூறுகின்றார்கள். ஆனால், வேதாகம வார்த்தை 'சிம்பதி' (Sympathy). ***"பரிசுத்தவான்களாக... அனுதாபத்துடனும், தயவுடனும், தாழ்மையுடனும் சாந்தத்துடனும், பொறுமையுடனுமிருங்கள்"***[8] என்று வேதம் கூறுகின்றது.

இந்த அனுதாப உணர்வு இரு அடிப்படை மனித தேவைகளைச் சந்திக்கின்றது; புரிந்து கொள்ளப்பட வேண்டுமென்ற தேவை; உங்கள் உணர்வுகள் மதிக்கப்பட வேண்டுமென்ற தேவை. நீங்கள் ஒருவருடைய உணர்வுகளைப் புரிந்து கொண்டு, அவற்றை ஆமோதிக்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புகின்றீர்கள். நாம் பொதுவாக, நமது காரியங்களைச் சரிப்படுத்துவதிலேயே அதிக நேரத்தைக் கழிப்பதால், பிறருக்கு அனுதாபம் காண்பிக்க நமக்கு நேரமில்லை அல்லது நமது காயங்களையே நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சுயபரிதாபம், பிறருக்குக் கொடுக்க வேண்டிய அனுதாபத்தை வறண்டு போகச் செய்யும்.

> ***இன்னொருவருடைய உணர்வுகளை நீங்கள் புரிந்துகொண்டு, அதை ஆமோதிக்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புகின்றீர்கள்.***

ஐக்கியத்தில் பல நிலைகளுண்டு; ஒவ்வொன்றும், வெவ்வேறு சமயங்களுக்குப் பொருத்தமானது; ***பகிர்ந்து கொள்ளும் ஐக்கியம்*** மற்றும் **வேதத்தை இணைந்து**

படிக்கும் ஐக்கியம் ஆகிய இவ்விரண்டும் எளிதான நிலையில் உள்ளவை. இதற்கு அடுத்த நிலை ஐக்கியம்: ***சேவையின் ஐக்கியம்*** இணைந்து சேவை அல்லது அருட்பணியில் ஈடுபடும் ஐக்கிய நிலை. இது, ஆழமான ஒரு ஐக்கிய நிலை. இவ்விரண்டை காட்டிலும் மேலான நிலை ஐக்கியம், ***பாடுகளின் ஐக்கியம்.***[9] இந்த நிலையில்தான், நாம் மற்றொருவருடைய வேதனை, துயரத்திற்குள் பிரவேசித்து, ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கின்றோம். இந்த நிலை ஐக்கியத்தை நன்கு புரிந்து கொள்ளும் கிறிஸ்தவர்கள், தங்கள் விசுவாசத்திற்காகத் துன்புறுத்தப்படுவார்கள், இழிவுபடுத்தப் படுவார்கள் மற்றும் இரத்த சாட்சியாக மரிப்பார்கள்.

வேதம் தரும் கட்டளை: ***"ஒருவர் பாரத்தை, பிரச்சனைகளை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்."***[10] ஆழ்ந்த ஆபத்துக்கள், துயரம், சந்தேகம் இவற்றில் சிக்கியிருக்கும்போதுதான் நாம் ஒருவருக்கொருவர் அதிகமாகத் தேவைப்படுவோம். நமது விசுவாசம் தடுமாறுமளவுக்கு சூழ்நிலைகள் நம்மை அழுத்தும்போதுதான், விசுவாச நண்பர்கள் அதிகமாகத் தேவைப்படுகின்றனர். நமக்காகத் தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, நம்மை அந்த இக்கட்டினூடே கடத்திச் செல்லக்கூடிய ஒரு சிறிய குழு நண்பர்கள் நமக்குத் தேவை. ஒரு சிறிய குழுவில், கிறிஸ்துவின் சபை உண்மையானது, தொடக் கூடியது, தேவன் தூரமாயிருப்பது போன்ற உணர்விலும் நம்மைத் தாங்கக் கூடியது என்று அறிந்துக்கொள்ளுவோம். யோபு, தனது ஆழ்ந்த துயரத்தில் மிக அவசரமாகத் தேடியது இந்த ஐக்கியத்தைத் தான். ***"துக்கத்தில் அமிழ்ந்து போயிருக்கும் ஒரு மனிதன், சர்வ வல்லவரின் மீதுள்ள பயத்தைக் கைவிடுவது போலிருக்கும் வேளையிலும், தனது நண்பர்களின் அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கவேண்டும்"***[11] என்று அவன் கதறினான்.

உண்மையான ஐக்கியத்தில், மக்கள் இரக்கத்தை அனுபவிக் கின்றார்கள் (experience mercy). தவறுகள் மீண்டும் சுட்டிக்காட்டப்பட்டு அழுத்தம் தராமல், அப்படியே மறைக்கப்பட்டுப் போகும் கிருபையின் இடம்தான் ஐக்கியம். நீதி, நியாயத்தின் மேலாக, இரக்கமும் தயவும் வெற்றி கொள்ளும்போது, ஐக்கியம் நிகழுகின்றது.

நம்மனைவருக்கும் இரக்கம் தேவை; ஏனெனில், நாமனைவரும் நிலை தடுமாறி, விழுந்து, மீண்டும் பாதைக்கு வர உதவி தேவைப்படுபவர்களே. நாம் ஒருவருக்கொருவர் இரக்கம் காட்டவும், இரக்கத்தை ஒருவரிடமிருந்தொருவர் பெற்றுக்கொள்ள மனமுடையவர்களாயுமிருக்க வேண்டும். ***"மக்கள் பாவஞ் செய்யும்போது, அவர்கள் துக்கத்தில் அமிழ்ந்து போகாதபடி, நீங்கள் அவர்களை மன்னித்து, ஆறுதல்படுத்த வேண்டும்"***[12] என்று வேதம் கூறுகின்றது.

நாள் பதினெட்டு:

வாழ்க்கையை ஒன்றாக இணைந்து அனுபவித்தல்

மன்னிப்பு இல்லாமல் நீங்கள் ஐக்கியம் கொள்ளமுடியாது. ***"உங்களுக்குள்ளே வைராக்கியத்தைப் பேணி வைக்காதிருங்கள்"***[13] என்று தேவன் எச்சரிக்கின்றார். ஏனெனில், கசப்பும், எரிச்சலுணர்வும், ஐக்கியத்தை அழித்துப் போட்டுவிடும். நாம் குறைவுள்ளவர்களாக இருக்கும் பாவிகளாக இருப்பதால், நாம் ஒருவரையொருவர் காயப்படுத்திவிடுகின்றோம். நாம் நீண்ட நாட்கள் ஒன்றாக இருக்கும்போது, இது அதிகமாக நடக்கும். சில சமயம் நாம் மனதார, வேண்டுமென்று பிறரைக் காயப்படுத்துகின்றோம். சிலசமயம் நம்மையறியாமல் புண்படுத்தி விடுகின்றோம். எப்படியிருந்தாலும், ஐக்கியத்தை உருவாக்கி, அதை நிலை நிறுத்திக்கொள்ள பெரிய அளவு இரக்கமும், கிருபையும் தேவை. ***"பிறர் குற்றங்களைப் பெரிதுபடுத்தாமல், உங்களை வேதனைப்படுத்துகின்றவர்களை மன்னிக்க வேண்டும்; கர்த்தர் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் மற்றவர்களை மன்னிக்க வேண்டுமென்பதை நினைவில் வையுங்கள்"***[14] என்று வேதம் கூறுகின்றது.

பிறருக்கு நாம் இரக்கம் காட்டுமாறு நம்மைத் தூண்டுவது, தேவன் நமக்குக் காட்டிய இரக்கமே. ஏற்கனவே, தேவன் உங்களுக்கு மன்னித்திருக்கிறதற்கு மேலாக நீங்கள் யாரையும் மன்னிக்க வேண்டியதேயிருக்காது. உங்களை யாராவது புண்படுத்தியிருந்தால், நீங்கள் இரண்டு காரியங்களில் ஒன்றைச் செய்யலாம். ***"என் சக்தியையும், உணர்வுகளையும் பதில் தாக்குதலுக்குப் பயன்படுத்தவா? அல்லது தீர்மானம் எடுத்தபடி மன்னிப்பதற்கு செலவிடுவதா?"*** இரண்டையும் சேர்த்து நீங்கள் செய்ய முடியாது.

நம்பிக்கைக்கும் மன்னிப்புக்குமுள்ள வேறுபாட்டை அறியாதபடியால், அநேகர் இரக்கம் காட்டத் தயங்குவதுண்டு. மன்னித்தல், கடந்த காலத்தைக் கடந்துபோக விட்டுவிடுவது; நம்பிக்கை, இனி வரும் நடவடிக்கையை குறித்தது.

ஒருவர் நம்மிடம் அதைக் கேட்டாலும், கேட்காவிட்டாலும், உடனடியாகக் கொடுக்கப்பட வேண்டியது மன்னிப்பு. நம்பிக்கை, காலப்போக்கில் ஏற்படுத்தப் படுவது. நம்பிக்கை என்பது கடந்த கால காரியத்தின் அடிப்படையில் ஏற்படும் ஒன்று. மீண்டும் மீண்டுமாக ஒருவர் உங்களைப் புண்படுத்திக் கொண்டேயிருந்தாலும் அவர்களை நீங்கள் உடன்தானே மன்னிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிடுகின்றார். ஆனால், அவர்களை உடனே நீங்கள் நம்ப வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கவே இல்லை. தொடர்ந்து உங்களைப் புண்படுத்த அவர்களுக்கு நீங்கள் அனுமதியளிக்கத் தேவையில்லை; காலப்போக்கில், தாங்கள் மாறிவிட்டதை அவர்கள் நிரூபிக்க வேண்டும். இப்படி நம்பிக்கையை மீண்டும் நிலைப்படுத்த உதவும் சிறந்த இடம், ஆதரவு தரக்கூடிய ஒரு சிறு குழுவே; அங்குதான், பொறுப்புணர்வும், ஊக்குவிப்பும் கிடைக்கும்.



மெய்யான ஐக்கியத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட சிறிய குழுவில் அங்கமாக இருப்பதினால் வேறு அநேக நன்மைகளையும் நீங்கள் அனுபவிப்பீர்கள். இது, உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கையின் அத்தியாவசிய பகுதியாக இருப்பதினால் நீங்கள் இதனைப் புறக்கணிக்க முடியாது. 2000க்கும் அதிகமான வருடங்களாக கிறிஸ்தவர்கள் ஐக்கியத்திற்காக தொடர்ந்தேர்ச்சியாகச் சிறுகுழுக்களில் கூடி வந்திருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சிறுகுழுவில் அல்லது வகுப்பில் நீங்கள் ஒருபோதும் அங்கமாக இருந்திராவிடில் நீங்கள் எவ்வளவு பெரிய நன்மையை இதனால் இழந்து கொண்டிருக்கின்றீர்கள் என்பதை மெய்யாகவே நீங்கள் அறியாமல் இருக்கின்றீர்கள்.

அடுத்த அதிகாரத்தில், இப்படிப்பட்ட சமுதாயத்தைப் பிற விசுவாசிகளுடன் சேர்ந்து உருவாக்க என்னென்ன செய்யப்பட வேண்டுமென்று பார்ப்போம். ஆனால், இந்த அத்தியாயம், உண்மையான ஐக்கியத்தின் நிஜரூபம், பரஸ்பர உணர்வு, அனுதாபம், மற்றும் இரக்கம் இவற்றையனுபவிக்க வேண்டுமென்ற தாகத்தை உங்களுக்கு ஏற்படுத்தியிருக்குமென்று நான் நம்புகிறேன்.

நாள் பதினெட்டு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: என் வாழ்வில் பிறரும் தேவை.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள்."* கலாத்தியர் 6:2

ஆய்வுக்கான ஒரு கேள்வி: மற்றொரு விசுவாசியுடன் முன்பைவிட உண்மையாக, மனந்திறந்த நிலையில் தொடர்பு கொள்ளுவதற்கு இன்று நான் செய்ய வேண்டிய ஒரு காரியம் என்ன?

19

சமுதாய ஐக்கியத்தை உருவாக்குதல்

நீங்கள் ஒருவரோடொருவர் இணக்கமாக நடந்து கொண்டு, ஒருவரையொருவர் மரியாதையுடன் கனம்பண்ணும் கடினமான வேலையைச் செய்தால் மட்டுமே நீங்கள் ஒரு ஆரோக்கியமான, உறுதியான, சமுதாயத்தை வளர்க்க முடியும்; அது தேவனுடன் இசைந்திருந்து அதனால் கிடைக்கும் பயன்களையனுபவிக்கும்.
யாக்கோபு 3:18 (புதிய மொழியாக்கம்)

அவர்கள், அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபத்திலும் ஒன்றாக இணைந்து தரித்திருந்தார்கள்.
அப்போஸ்தலர் 2:42 (புதிய மொழியாக்கம்)

சமுதாயத்திற்குப் அர்ப்பணிப்பு அவசியமானதாகும்.

விசுவாசிகளுக்கிடையில் பரிசுத்த ஆவியானவர் மட்டுமே மெய்யான ஐக்கியத்தை உருவாக்கக் கூடும்; ஆனால், நாம் எவற்றைத் தெரிந்து கொண்டு எப்படிப்பட்ட பொறுப்புணர்வுடன் நம்மை அர்ப்பணிக்கின்றோமோ அதற்குத்தக்கதாகவே அவர் அதைப் பண்படுத்தி வளர்க்கின்றார். இந்த இரட்டைப் பொறுப்பைக் குறித்துப் பவுல், ***''நீங்கள் ஆவியானவர் மூலமாக சமாதானமாக இணைக்கப்பட்டுள்ளீர்கள்; ஆகவே, இப்படியே தொடர சகல முயற்சியையும் எடுங்கள்''***[1] எனக் கூறுகின்றார். ஒரு அன்பான கிறிஸ்தவ சமுதாயத்தை உருவாக்க, தேவனுடைய வல்லமையும், நமது முயற்சியும் தேவை.

துரதிர்ஷ்டவசமாக, அநேகர், ஆரோக்கியமில்லாத உறவுகளுள்ள குடும்பங்களில் வளருகின்றனர்; ஆகவேதான், உண்மையான ஐக்கியத்திற்குத் தேவையான, அதற்குத் தொடர்பான திறமைகளில் குறைவுள்ளவர்களாக இருக்கின்றனர். எப்படி இணக்கமாக நடந்து கொள்ளுவது என்றும், தேவனுடைய குடும்பத்திலுள்ள பிறருடன் எப்படி சுமுகமான உறவு கொள்ளுவதென்பதையும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். வாழ்க்கையை எப்படி ஒன்றாகப் பகிர்ந்து கொள்ளுவது என்பதற்கான அறிவுரைகள் புதிய ஏற்பாட்டில் ஏராளம் இருப்பது அதிர்ஷ்டவசமானது. ***"தேவனுடைய வீட்டில் எப்படி வாழுவதென்பதை நீங்கள் அறிந்து கொள்ளும்படி, இவற்றை உங்களுக்கு எழுதியிருக்கின்றேன்... அந்தக் குடும்பம், சபையே"***[2] என்று பவுல் எழுதினார்.

போலி ஐக்கியத்தைக் கண்டு நீங்கள் மனம் சலித்துப்போயிருந்தால், உங்கள் சிறு குழுவில், ஓய்வு நாள் பள்ளியில், சபையில், உண்மையான ஐக்கியம், அன்பான சமுதாயம் உண்டுபண்ண விரும்பினால், நீங்கள் சில கடினமான தெரிந்தெடுப்பு செய்து, சில துணிச்சலான காரியங்களைச் செய்ய வேண்டியதிருக்கும்.

சமுதாயத்தை உருவாக்குவதற்கு உண்மை அவசியம். ஒரு பிரச்சனையை நீங்கள் மூடி மறைக்கவோ அல்லது பொருட்படுத்தாமலிருக்கவோ வேண்டிய சந்தர்ப்பம் வந்தாலும், அன்பினிமித்தம் உண்மையைப் பேசிவிட வேண்டும். நம்மைச் சுற்றியிருப்பவர்கள் தங்கள் பாவ செய்கையால் தங்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ தீங்கிழைக்கும்போது, பார்த்துக்கொண்டு மௌனமாக இருப்பது மிகவும் இலகுவான காரியம். ஆனால், அது அன்பான காரியமல்ல; வாழ்க்கையில் அநேகருக்கு, அவர்களை உண்மையாக நேசித்து, சத்தியத்தைக் கூற (அது வேதனையளிப்பதாக இருந்தாலும்) யாருமே இருப்பதில்லை. ஆகவே, அவர்கள் தங்களையே அழிக்கும் செயல்களில் தொடர்ந்து நீடிக்கின்றார்கள். அநேக சமயங்களில், யாராவது ஒருவருக்குக் கூறப்பட வேண்டியதென்ன என்று நமக்குத்



தெரிந்தும், அவற்றைக் கூறாதபடி நமது பயங்கள் நம்மைத் தடுத்து நிறுத்துகின்றது. அநேக குழுக்கள், பயத்தினிமித்தம் அழிக்கப்பட்டு போயிருக்கின்றன: அங்கத்தினர் ஒருவரின் வாழ்க்கை சீரழிந்து கொண்டிருக்கும்போது, குழுவில் உள்ள பிறருக்குப் பேசும் துணிவு இல்லாமல் போனதினால்!

வேதாகமம் நம்மை, ***'அன்புடன் சத்தியத்தைப் பேசும்படி'***[3] கூறுகின்றது. ஏனெனில், திறந்த மனமில்லாமல் நமக்கு ஒரு சமுதாயமிருக்க முடியாது. இதைக் குறித்து சாலொமோன், ***"நேர்மையான பதில் உண்மையான சிநேகத்திற்கு அடையாளமாக இருக்கின்றது"***[4] என்று கூறினார். இதன் அர்த்தம் என்னவெனில், பாவம் செய்யும் ஒருவரை கண்டித்து பேசவும், பாவ சோதனையில் தவிப்பவர்களுக்கு நேரடியான ஆலோசனை சொல்லுவதும் அவசியமான ஒன்று. ***"சகோதர, சகோதரிகளே, உங்களில் ஒருவன் பாவம் செய்தால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் அவனிடத்தில் போய், அவனை சாந்தத்தோடு சீர் பொருந்தப் பண்ணுங்கள்"***[5] என்று பவுல் கூறுகின்றார்.

அநேக சபை ஐக்கியங்கள் மற்றும் சிறிய குழுக்கள், சண்டை, சச்சரவுக்குப் பயந்து மேலோட்டமாகவே செயல்படுகின்றன. ஏதாவது மன இறுக்கம், அசௌகரியம் ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரச்சனை எழுந்தால், ஒரு போலியான சமாதான உணர்வுக்காக, அது உடன்தானே பூசி மறைக்கப்படும். சில சமயங்களில், ஒருவரையும் காயப்படுத்தக்கூடாது என்பதற்காக, இப்படிப்பட்ட குழுவில் உள்ள ஒருவர் எழும்பி, பிரச்சனையை அப்படியே மூடி மறைத்து விடுவார். இப்படிப்பட்ட காரியங்கள் பிரச்சனையை தீர்ப்பதில்லை. தீராத அப்பிரச்சனையோடு விரக்தியுடனேயே எல்லாரும் வாழ்க்கையைத் தொடருவார்கள். எல்லாருக்கும் அந்தப் பிரச்சனையை குறித்து தெரியும்... ஆனால், எவரும் மனம் திறந்து பேசமாட்டார்கள். இது ஒரு ஆரோக்கியமற்ற இரகசிய சூழ்நிலையை உருவாக்கி, வம்புப் பேச்சு செழிப்படையச் செய்கிறது. ***"இனிமேலும் பொய்யும், மாய்மாலமும் வேண்டாம். உங்கள் அயலகத்தாரிடம் உண்மையே பேசுங்கள். கிறிஸ்துவின் சரீரத்தில், நாம் ஒருவருக்கொருவர் இணைக்கப்பட்டிருக்கின்றோம். பிறருடன் பொய் பேசும்போது, நீங்கள் உங்களையே ஏமாற்றிக் கொள்ளுகின்றீர்கள்"***[6] என்ற பவுலின் தீர்வு நேரிடையாக இருக்கின்றது.

உண்மை ஐக்கியம் – திருமணத்திலோ, சிநேகத்திலோ அல்லது உங்கள் சபையிலோ – வெளிப்படையாக, மனம் திறந்து பேசுவதில்தான் இருக்கின்றது. உண்மையில், எந்தவொரு முரண் பாடும், உறவுகளை பலப் படுத்தவே பயன்பட வேண்டும். உள்ளே மறைந்திருக்கும் தடைகளை நேருக்கு நேர் எதிர்கொண்டு, வித்தியாசங்களைப் பேசித் தீர்த்துக் கொள்ளாவிட்டால், நீங்கள் ஒருவருக்கொருவர் நெருங்கி வரவே முடியாது. முரண்பாடுகள் சரியாகக் கையாளப்பட்டால், நமது வேறுபாடுகளை நாம் எதிர்கொண்டு, நாம் ஒருவருக்கொருவர் நெருக்கமாக முடியும். ***"முடிவில், முகஸ்துதியைப் பார்க்கிலும், வெளிப்படையான கடிந்து கொள்ளுதலே மக்களால் விரும்பி ஏற்கப்படும்"***[7] என்று வேதம் கூறுகின்றது.

முரண்பாடுகள் சரியாகக் கையாளப்படும்போது, நாம் ஒருவருக்கொருவர் நெருக்கமாகப் பழகிவிடுகின்றோம்.

ஒளிவு மறைவின்றிப் பேசுதல் என்பது, உங்களுக்கு விருப்பமானதை, நீங்கள் விரும்பிய இடத்தில், நீங்கள் விரும்பிய நேரமெல்லாம் பேசுவதற்குக் கொடுக்கப்பட்ட அனுமதிப் பத்திரம் அல்ல. ஒளிவு மறைவின்றி பேசுதல் என்பது பண்பற்ற செயல் அல்ல. ஒவ்வொன்றையும் செய்வதற்குச் சரியானதொரு நேரம் மற்றும் சரியானதொரு வழி இருக்கின்றது என்று வேதாகமம் கூறுகின்றது.[8] சிந்தனையற்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் குணமடையாத பண்புகளை உருவாக்குகின்றது. சபையில் நாம் அனைவரும் ஒருவரோடு ஒருவர் அன்பு நிறைந்த குடும்ப அங்கத்தினர்கள் போல பேச வேண்டும் என்று தேவன் நமக்குக் கூறுகின்றார்: ***"முதியோரைக் கடுஞ்சொற்களால் கடிந்து கொள்ளாமல், தகப்பனாகப் பாவித்துப் பேசு; இளைஞரை உன் சகோதரராகவும், முதிர் வயதுள்ள ஸ்திரீகளை உன் தாயைப் போலவும், பாலிய ஸ்திரீகளை உன் சகோதரிகளாகவும் பாவித்துப் பேசு."***[9]

உண்மையின்மையினால், ஆயிரக்கணக்கான ஐக்கியங்கள் அழிக்கப்பட்டுப்போனது துக்ககரமானது. தங்கள் ஐக்கியத்திற்குள் துன்மார்க்கம் நுழைந்தபோது, செயலற்று அமைதி காத்ததற்காக, பவுல், கொரிந்து சபையாரைக் கண்டிக்க வேண்டியதிருந்தது.

யாருக்குமே அதை எதிர்கொள்ளும் துணிவு இல்லாதபடியினால், *“அது தானாக நீங்கிப் போகுமென்று எண்ணி நீங்கள் வேறுபக்கம் திரும்பிக் கொள்வது கூடாது; அதை வெளிப்படையாகக் கொண்டு வந்து இடைபடுங்கள்... ஆக்கினைத் தீர்ப்பைவிட அவர்களைத் தர்ம சங்கடப்பட வைப்பதும், சமாதானத்தை இழக்கப் பண்ணுவதும் மேல்... அதை ஒரு சிறிய காரியமென்று அலட்சியப்படுத்துகின்றீர்கள், அது நேர் எதிரானது... உங்கள் விசுவாசக் குடும்பத்தாரில் ஒருவர் ஒழுங்கற்று அல்லது கெட்டுப் போய்த் திரியும்போது, எல்லாம் சரியாக இருப்பதுபோல நீங்கள் நடந்து கொள்ளக்கூடாது; தேவனோடு உறவற்று, நண்பர்களிடம் முரட்டுத்தனமாகக் கோபப்பட்டு, குடிக்கு அடிமையாகி, பேராசை கொண்டு, கொள்ளையடிப்பவனாக இருந்தால் ஒன்றும் அறியாதவர்கள்போலிருக்கக் கூடாது. அது ஏற்றுக் கொள்ளப் படக்கூடிய நடத்தை என்பதுபோல, நீங்கள் அதை அப்படியே விட்டுவிடக்கூடாது; சபைக்கு வெளியே இருப்பவர்களைக் குறித்து நான் பேசவில்லை; நமது விசுவாச சமுதாயத்தினருக்குள், உள்ளே இருப்பவர்களைக் குறித்து, நமக்குக் கொஞ்சமாவது பொறுப்புணர்வு இருக்க வேண்டாமா?’’*[10] என்று பவுல் கூறுகின்றார்.

சமுதாயத்தை உருவாக்குவதற்கு தாழ்மை அவசியம். தன்னையே முக்கியமானவனென நினைத்தல், தற்பெருமை, கர்வம் ஆகியவை, மற்றெல்லாவற்றையும்விட ஐக்கியத்தை வெகு விரைவில் அழித்துவிடுகின்றன. பெருமை மக்களுக்கிடையே சுவர்களை எழுப்புகின்றது; தாழ்மையோ, இணைக்கும் பாலங்களை உண்டுபண்ணுகின்றது. தாழ்மையே உறவுகளை மிருதுவாக்கி, ஆறுதல்படுத்தும் எண்ணெய். அதனால்தான், *“ஒருவருக்கொருவர் மனத் தாழ்மையைத் தரித்துக் கொள்ளுங்கள்”*[11] என்று வேதம் கூறுகின்றது. ஐக்கியத்திற்குத் தேவையான, பொருத்தமான ஆடை, தாழ்மையுள்ள மனப்பான்மையே.

‘‘...ஏனெனில், தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார்’’[12] என்று அந்த வசனத்தின் மீதிப்பகுதி கூறுகின்றது. நாம் தாழ்மையாயிருக்க வேண்டியதற்கான அடுத்த காரணமிது.

தேவனுடைய கிருபை நம் வாழ்க்கைக்குள் வராமல் தடுப்பது பெருமை; தேவ கிருபை நாம் வளர்ச்சி பெறவும், மாறவும், சுகம் பெறவும், பிறருக்கு உதவவும் நமக்கு அவசியம். நமக்கு அவருடைய கிருபை தேவை என்று தாழ்மையுடன் ஒத்துக் கொள்ளுவதன் மூலம் அதைப் பெற்றுக் கொள்ளக்கூடும். எப்போதெல்லாம், நாம் பெருமையாக நடந்து கொள்ளுகின்றோமோ, அப்போதெல்லாம் நாம் தேவனுக்கு எதிர்த்து நிற்கின்றோமென வேதம் கூறுகின்றது. அது அபாயகரமான, முட்டாள்தனமான வாழ்க்கை முறை.

நடைமுறைக்கேற்ற வழிகளில் நீங்கள் தாழ்மையை வளர்த்துக் கொள்ளலாம். உங்கள் பலவீனங்களை ஒத்துக் கொள்ளுவதன் மூலமாகவும், திருத்தப்பட்ட நம்மைத் திறந்து கொடுப்பதன் மூலமாகவும், புகழ்ச்சிகளைப் பிறருக்கு அளிப்பதன் மூலமும் தாழ்மையை விருத்தி செய்யலாம். *"ஒருவரோடொருவர் இணக்கமாக இருங்கள்... முக்கியமானவர்கள்போலக் காட்டிக் கொள்ளாமல், சாதாரண மக்கள் கூட்டுறவை அனுபவித்து மகிழுங்கள்; உங்களையே புத்திமான்களென்று (எல்லாம் அறிந்தவர்களென்று) எண்ணாதிருங்கள்"*[13] என்று பவுல் புத்திமதியாகக் கூறினார்.

> ***உங்களைப் பற்றி குறைவாக எண்ணுவதல்ல தாழ்மை; தாழ்மை என்பது உங்களை குறைவான நேரங்களில் நினைப்பது.***

"உங்களைவிடப் பிறரைக் கனமுள்ளவர்களாக எண்ணிக் கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையில் மட்டுமே ஆர்வமுள்ளவர்களாயிராமல், பிறருடைய வாழ்க்கை நிலையிலும் ஆர்வம் காட்டுங்கள்"[14] என்று பிலிப்பி பட்டணத்துக் கிறிஸ்தவர்களுக்குப் பவுல் எழுதுகின்றார்.

தாழ்மையென்றால் உங்களைப் பற்றி தாழ்வாகவும், குறைவாகவும் நினைப்பது அல்ல, உங்களைக் குறைந்த நேரங்களில் நினைத்து, பிறரை அதிக நேரம் நினைப்பது. தாழ்மையுள்ளவர்கள், பிறருக்கு சேவை செய்வதிலேயே குறிப்பாக இருந்து, தங்களைப் பற்றி நினைப்பதே இல்லை.

சமுதாயத்தை உருவாக்குவதற்கு நற்பண்பு அவசியம். நற்பண்பு என்பது, நமது வேறுபாடுகளை மதித்து, மற்றவர்களுடைய

உணர்வுகளை மதித்து, நமக்கு எரிச்சலூட்டுபவர்களிடம் பொறுமையாக நடந்து கொள்ளுதல். ***"பிறருடைய சந்தேகங்கள், பயங்கள் ஆகியவற்றை அறிந்து, அவைகளை நமது 'பாரமாக' சுமக்க வேண்டும்"***[15] என்று வேதம் கூறுகின்றது. பவுல், ***"தேவனுடைய பிள்ளைகள் பரந்த மனதுடனும், பணிவு கலந்த மரியாதையுடனும் நடந்து கொள்ள வேண்டும்"***[16] என்று பவுல், தீத்துவிடம் கூறுகின்றார்.

நாள் பத்தொன்பது:

சமுதாய ஐக்கியத்தை உருவாக்குதல்

ஒவ்வொரு சபையிலும், ஒவ்வொரு சிறுகுழுவிலும் எப்பொழுதும் குறைந்தது, ஒரு "கடின இருதயமுள்ள" நபர் இருப்பார். சில நேரங்களில், ஒன்றுக்கும் மேற்பட்ட நபர்கள் இருப்பார்கள். இப்படிப்பட்ட மக்களுக்கு, ஆழமான பாதுகாப்பற்ற உணர்வுகள், மற்றவர்கட்கு எரிச்சலூட்டும் பாங்கு அல்லது மற்றவர்களோடு உறவு கொள்ள முடியாத தன்மை போன்ற விசேஷ உணர்வுரீதியான தேவைகள் இருக்கலாம். இவைகளை "அதிக கிருபை தேவைப்படும் மக்கள்" (EGR People = "Extra Grace Required People) என்று நாம் அழைக்கலாம்.

இப்படிப்பட்ட மக்களை, அவர்கள் நலனுக்காகவும், நமது பயனுக்காகவும், தேவன் நமது மத்தியில் வைத்திருக்கின்றார். நாம் வளர்ச்சியடைய அவர்கள் ஒரு வாய்ப்பு; ஐக்கியத்திற்கு அவர்கள் ஒரு சோதனை. நாம் அவர்களையும் சகோதர, சகோதரிகளாக எண்ணி கனத்துடன் நடத்துவோமா?

ஒரு குடும்பத்தில், உங்கள் புத்திசாலித்தனம், அழகு அல்லது தாலந்து இவற்றை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. நாம் ஒருவருக்கொருவர் சொந்தம் என்ற அடிப்படையிலேயே, குடும்ப பந்தத்தினாலேயே, நாம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றோம். நமது குடும்பத்தாருக்காக நாம் பரிந்து பேசி, அவர்களைப் பாதுகாக்கின்றோம். நமது குடும்ப உறுப்பினர் ஒருவர் சற்று மந்த புத்தியுள்ளவராக இருக்கலாம்; எனினும், அவர் நமது குடும்ப அங்கத்தினரே. ***"அன்பின் குடும்பத்தார்போல ஒருவர் மேலொருவர் பட்சமாக இருந்து, பிறருக்கு மரியாதை செலுத்துவதில் சிறந்து விளங்குங்கள்"***[17] என்று வேதம்

கூறுகின்றது. நம் ஒவ்வொருவரிடத்திலும் மற்றவர்களுக்கு தொல்லை கொடுக்கக்கூடிய விசித்திரமான சில தன்மைகள் இருக்கத்தான் செய்கின்றன. நம்முடைய ஐக்கியத்திற்கு காரணம், நமக்கு தேவனோடு உள்ள உறவு – நமது குணங்கள் அல்ல. நாம் யாவரும் ஒரே குடும்பத்தார்.

மக்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளுதல் சிறந்த பண்பாகும். அவர்களின் சரித்திரத்தைக் கண்டுபிடியுங்கள். அவர்கள் எப்படிப்பட்ட சூழ்நிலைகளின் வழியாகக் கடந்த வந்திருக்கின்றார்கள் என்பதை அறிந்து கொள்ளும்போது, நீங்கள் அவர்களைப் புரிந்து கொள்ளுவீர்கள். அவர்கள் இன்னும் எவ்வளவு தூரம் செல்ல வேண்டியதாயிருக்கின்றது என்பதைக் குறித்துச் சிந்திப்பதைவிட அவர்கள் எவ்வளவு தூரம் தங்கள் வேதனைகளின் மத்தியில் கடந்து வந்திருக்கின்றார்கள் என்பதைக் குறித்து சிந்தியுங்கள்.

மற்றவர்களின் சந்தேகங்களை முக்கியமற்றவையாக எண்ணாதிருப்பது சிறந்த பண்பாகும். ஏதாவது ஒன்றில் நீங்கள் பயப்படவில்லை என்பதற்காக மற்றவர்கள் அதற்குப் பயப்படுவதை நீங்கள் அர்த்தமற்றது என்று கருத முடியாது. தங்கள் சந்தேகங்களைப் பகிர்ந்து கொள்ளுவதற்குப் போதுமான பாதுகாப்பு இருக்கிறதென்றும், தங்களுடைய பயங்களைப் பகிர்ந்து கொண்டால், அதனால் அவர்கள் நியாயம் தீர்க்கப்படமாட்டார்கள் என்ற சூழலில்தான் மெய்யான ஐக்கியம் ஏற்படுகின்றது.

சமுதாயத்தை உருவாக்குவதற்கு நம்பகத்தன்மை அவசியம். அன்புடன் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நமது இரகசியம் இங்கு பாதுகாக்கப்படும் என்ற நம்பிக்கையளிக்கும் பாதுகாப்பான சூழ்நிலையில்தான் மக்கள் மனந்திறந்து தங்கள் ஆழ்ந்த காயங்கள், தேவைகள், தவறுகளைக் கூறுவார்கள். அதற்காக உங்கள் சகோதர, சகோதரிகள் பாவம் செய்யும்போது அமைதியாக இருப்பது நம்பிக்கை காப்பது ஆகாது; உங்கள் குழுவில் பகிர்ந்து கொள்ளப்பட்டவை, உங்கள் குழுவுடனேயே இருக்க வேண்டும்; அந்தக் குழு, அதைக் குறித்துப் பிறரிடம் வம்பளந்து பேசாமல், அதைத் தீர்ப்பதற்குரிய காரியங்களில் ஈடுபடும் என்பதுதான் அதன் பொருள்.

தேவன் வீண் வம்புப் பேச்சை வெறுக்கின்றார். குறிப்பாக, அது பிறருக்கான ஒரு ஜெப வேண்டுகோள் என்ற போர்வையில் லேசாக மூடி மறைத்துக் கொடுக்கப்படுவதை அவர் வெறுக்கின்றார். *"துன்மார்க்கர் வீண் பேச்சுகளைப் பரப்புகின்றார்கள்; அவர்கள் சிநேகிதத்தை முறித்து, கலகத்தை எழுப்பிவிடுகின்றார்கள்"*[18] என்று தேவன் கூறுகின்றார். வம்புப் பேச்சு, எப்போதுமே காயங்களையும், பிரிவுகளையும் உண்டுபண்ணி, ஐக்கியத்தை அழித்துப்போடும்; கிறிஸ்தவர்களுக்குள் இப்படிப் பிரிவுகளை உண்டுபண்ணுபவர்களை நேருக்குநேர் எதிர்கொள்ள வேண்டுமென்று தேவன் தெளிவாகக் கூறுகின்றார்.[19] அப்படி நேரில் எதிர்க்கப்படும் போது, அவர்கள் கோபங்கொண்டு உங்கள் சபை அல்லது குழுவை விட்டே வெளியேறி விடலாம். ஆயினும், இப்படிப்பட்ட ஒரு தனி மனிதனைவிட சபை அதிக முக்கியத்துவம் கொண்டது.

ஒரு தனி மனிதனைவிட சபையின் ஐக்கியம் அதிக முக்கியம்.

சமுதாயத்தை உருவாக்குவதற்கு அடிக்கடி தொடர்பு வைத்தல் அவசியம். உண்மையான ஐக்கியத்தைக் கட்டியெழுப்ப, நீங்கள் கண்டிப்பாக, உங்கள் குழுவுடன் அடிக்கடி, ஒழுங்கான தொடர்பு கொள்ள வேண்டும். உறவுகள் வளர, கால அவகாசம் தேவை. "*சிலர் செய்கிறதுபோல, சபை கூடி வருதலை நாம் விட்டுவிடாதிருப்போமாக; மாறாக, ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி, தைரியமூட்டக் கடவோம்*"[20] என்று வேதம் கூறுகின்றது. ஒன்றுகூடிவரும் பழக்கத்தை நாம் ஒழுங்காக வளர்த்துக் கொள்ள வேண்டும். ஒரு பழக்கம் என்பது, சமயா சமயங்களில் அல்ல, அடிக்கடி, ஒழுங்காக நீங்கள் செய்யும் ஒரு காரியம். மக்களுடன் நீங்கள் நேரம் – மிக அதிக நேரம் – செலவழித்தால்தான் ஆழ்ந்த உறவுகளை உருவாக்கக் கூடும். இதனால்தான், அநேக சபைகளில் ஐக்கியம் ஆழமற்றதாக இருக்கின்றது; நாம் போதுமான நேரத்தை ஒன்றாகச் செலவழிப்பதில்லை; அப்படிக் கூடிவரும் நேரத்திலும், ஒருவர் பேசுவதை மட்டும் மற்றவர்கள் கவனித்துக் கொண்டிருந்து விட்டுக் கலைந்து சென்று விடுகின்றார்கள்.

சமுதாயம், நமது வசதிப்படி கட்டியெழுப்பப்படுகின்ற ஒன்றல்ல (“எப்போது எனக்கு வசதிப்படுகிறன்தோ, அப்போது கூடி வருவோம்”). ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்காக நாம் கூடி வந்தே ஆக வேண்டுமென்ற உள்ளுணர்வுடன் நாம் செயல்பட வேண்டும். உண்மையான ஐக்கியத்தை நீங்கள் வளர்க்க விரும்பினால், கூடி வரவேண்டுமென்ற எண்ணம் இல்லாதபோதுகூட, நீங்கள் கூடிவர வேண்டும். ஏனெனில், அது முக்கியமான காரியமென்று நீங்கள் நம்புகின்றீர்கள். ஆதிக் கிறிஸ்தவர்கள் அனுதினமும் கூடிவந்தார்கள். ***“அவர்கள் தினந்தோறும் தேவாலயத்தில் ஒழுங்காகக் கூடி வந்து, வீடுகள்தோறும் அப்பம் பிட்டு, மகிழ்ச்சியோடும், கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணினார்கள்”***[21] ஐக்கியத்திற்கு, காலம் (நேரம்) முதலீடு செய்யப்பட வேண்டும்.

நீங்கள் ஒரு சிறிய வகுப்பின் அல்லது குழுவின் அங்கத்தினராக இருந்தால், வேதாகம ஐக்கியத்தின் 9 குணாதிசயங்களைக் கொண்ட ஒரு குழு உடன்படிக்கை செய்யும்படி உங்களை வற்புறுத்திக் கேட்கின்றேன். எங்கள் உண்மையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுவோம் (நிஜரூபம்); ஒருவரையொருவர் உற்சாகப்படுத்துவோம் (பரஸ்பர உணர்வு); ஒருவரையொருவர் தாங்குவோம் (அனுதாப உணர்வு); ஒருவரையொருவர் மன்னிப்போம் (இரக்கம்); அன்பினால் சத்தியத்தைப் பேசுவோம் (உண்மை); பலவீனங்களை ஒத்துக் கொள்ளுவோம் (தாழ்மை); வேறுபாடுகளுக்கு மரியாதையளிப்போம் (பணிவு); வம்பளக்க மாட்டோம் (நம்பிக்கை காத்தல்); குழுவுக்கு முதலிடம் கொடுப்போம் (அடிக்கடி கூடுதல்).

இந்தக் குணாதிசயப் பட்டியலை நீங்கள் பார்க்கும்போது, உண்மையான ஐக்கியம் ஏன் இவ்வளவு அபூர்வமாக இருக்கிறதென்பதை நாம் புரிந்துகொள்ளக் கூடும்.

நமது சுயத்தையே சுற்றிவரும் தன்மையை விட்டுவிட்டு, நமது சுதந்தரத்தையும் விட்டுக் கொடுத்து, ஒருவர் மீது ஒருவர் சார்ந்து கொள்ளும் தன்மையை வளர்ப்பதுதான் ஐக்கியம். ஆயினும், வாழ்க்கையை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்து கொள்ளுதல் என்பது அதற்காக நாம் செலுத்தும் பெரிதான விலைக்கிரயத்தைவிடவும்

மிகவும் முக்கியமானது. அது நம்மைப் பரலோகத்திற்காக ஆயத்தப்படுத்துகின்றது.

நாள் பத்தொன்பது
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: சமுதாயத்திற்கு அர்ப்பணம் அவசியமானதாகும்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கின்றோம்; நாமும் சகோதரருக்காக ஜீவனைக் கொடுக்கக் கடனாளிகளாயிருக்கின்றோம்."*** 1 யோவான் 3:16

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என்னுடைய சிறு குழுவிலும், சபையிலும், உண்மையான சமுதாயத்தின் பண்புகளை வளர்க்க உதவியாக, இன்று நான் செய்யக்கூடியதென்ன?

முறிந்துபோன ஐக்கியத்தைப் புதுப்பித்தல்

தேவன், கிறிஸ்துவின் மூலமாக நம்மை அவருடன் ஒப்புரவாக்கி, இந்த ஒப்புரவாகுதலின் ஊழியத்தை நமக்குக் கொடுத்திருக்கின்றார்.

2 கொரிந்தியர் 5:18 (புதிய மொழியாக்கம்)

உறவுகள் புதுப்பிக்கப்படுதல் என்பது எப்பொழுதுமே விலைமதிக்கப்பட வேண்டிய ஒன்று.

வாழ்க்கையென்பது நேசிப்பது எப்படி என்று கற்றுக்கொள்ளுவதைப் பற்றியது; தேவன், நாம் உறவுகளை மதித்து, அவற்றை நிலைநிறுத்த முயற்சி எடுக்க வேண்டுமென்று விரும்புகின்றாரேயொழிய, ஒரு பிரிவு, காயம், சச்சரவு ஏற்பட்டதுமே உறவுகளைத் தூர எறிந்து விடுவதை அவர் விரும்புவதில்லை. ஒப்புரவாக்கி, உறவுகளைச் சீர்படுத்தும் பணியை அவர் நமக்குத் தந்திருப்பதாகத்தான் வேதம் கூறுகின்றது.[1] இதனால்தான், புதிய ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க அளவுள்ள பகுதிகளில், நாம் ஒருவருடனொருவர் எப்படி நடந்து கொள்ளவேண்டுமென்ற போதனை தரப்பட்டுள்ளது. ***"கிறிஸ்துவைப் பின்பற்றுவதால், உங்களுக்கு ஏதாவது பலனுண்டென்றால், உங்கள் வாழ்க்கையில் கிறிஸ்து ஏதாவது மாறுதல் உண்டுபண்ணியிருக் கின்றாரென்றால், ஆவியின் ஐக்கியத்திலிருப்பது ஏதாவது அர்த்தமுள்ளதாக உங்களுக்கிருந்தால், …ஒருவருடனொருவர் மனம் பொருந்தி, ஒருவரையொருவர் நேசித்து, ஆழ்ந்த ஆவிக்குரிய நண்பர்களாக இருங்கள்"***[2] என்று பவுல் எழுதுகின்றார். நமது ஆவிக்குரிய முதிர்ச்சியின் அடையாளமே, நாம் பிறருடன் இணைந்துபோகும் திறமைதானென்று பவுல் கூறுகின்றார்,[3]

நாம் ஒருவருக்கொருவர் காட்டும் அன்பினால்தான் தமது குடும்பத்தினரென்று நாம் அறியப்பட வேண்டுமென்று கிறிஸ்து விரும்புவதால்,[4] உடைந்துபோன ஐக்கியமென்பது அவிசுவாசிகளுக்கு நாம் வெளிக்காட்டும் ஒரு கேவலமான சாட்சி. அதனால்தான், கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் சண்டை செய்யும் பிரிவுகளாகப் பிரிந்து சிதறுவதையும், சிலர் மற்றவர்களை நீதிமன்றத்திற்குக்கூட இழுத்தடிப்பதையும் குறித்துப் பவுல் மனக் கலவரமடைந்தார். ***"உங்களுக்கு வெட்கமுண்டாகக் கூறுகின்றேன்! விசுவாசிகளுக்குள்ளே ஏற்படும் வழக்குகளைத் தீர்த்து வைக்கக்கூடிய ஞானமுள்ளவர் ஒருவராவது உங்களுக்குள்ளே இருப்பார்களே"***[5] என்று அவர் எழுதினார். சபையிலுள்ள ஒருவராவது அவர்களுடைய சச்சரவை சமாதானமாகத் தீர்த்து வைக்கக்கூடிய முதிர்ச்சியான மனப் பக்குவமில்லாதது குறித்து அவர் அதிர்ச்சியடைந்தார். அதே நிருபத்தில், ***"நான் அதை அதிசீக்கிரமாகச் செய்ய வேண்டும்; நீங்கள் ஒருவருடனொருவர் இணக்கமாகச் செல்ல வேண்டும்"***[6] என்று அவர் எழுதுகின்றார்.

உங்கள் வாழ்க்கையில் தேவனுடைய ஆசீர்வாதம் வேண்டுமென்றால், நீங்கள் தேவனுடைய பிள்ளை என்று அறியப்பட விரும்பினால், நீங்கள் ஒரு சமாதானப் பிரியராக இருக்க வேண்டும். ***"சமாதானம் பண்ணுகின்றவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள்"***[7] என்று இயேசு கூறினார். "சமாதானத்தை நேசிக்கின்றவர்கள் பாக்கியவான்கள்" என்று கூறவில்லை; ஏனெனில், எல்லாரும் சமாதானத்தை ***விரும்புகின்றார்கள்***. 'சமாதானமாக இருக்கின்றவர்கள்', என்ன நடந்தாலும் அமைதியாக இருக்கின்றவர்கள், பாக்கியவான்கள் என்றும் அவர் கூறவில்லை. சமாதானம் பண்ணுகின்றவர்கள், சமாதானம் ***உண்டாக உழைப்பவர்கள்,*** பாக்கியவான்களென்று அவர் கூறினால். சமாதானம் பண்ணுகின்றவர்கள் அபூர்வமாகத்தானிருப்பார்கள்; ஏனெனில், சமாதானம் பண்ணுவது கடினமான வேலை.

நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் ஒரு பகுதியாக இருக்கும்படி உருவாக்கப்பட்டவர்கள் மற்றும் இந்தப் பூமியில் உங்கள் வாழ்க்கையின் இரண்டாவது நோக்கம், எப்படி பிறரை நேசிப்பது, எப்படிப் பிறருடன் தொடர்பு கொள்ளுவது என்று கற்றுக்கொள்ளுதல்;

ஆகவே, நீங்கள் வளர்த்துக்கொள்ள வேண்டிய மிக முக்கியமான திறமைகளில் ஒன்று, சமாதானம் பண்ணுதல். துரதிர்ஷ்டவசமாக, சச்சரவுகளை எப்படித் தீர்த்து வைப்பது என்று நம்மில் அநேகருக்குக் கற்றுக் கொடுக்கப்படவே இல்லை.

சமாதானம் பண்ணுதல் என்பது *முரண்பாடுகளை தவிர்த்தல் அல்ல.* பிரச்சனையிலிருந்து ஓடுவதும், ஒன்றுமே நடக்காததுபோலப் பாசாங்கு செய்வதும் அல்லது அதனைக் குறித்துப் பேசப் பயப்படுவதும் அல்ல. இவைகள் கோழைத்தனமான செயல்களாக இருக்கின்றது. சமாதானப் பிரபுவாகிய இயேசு ஒருபோதும் முரண்பாடுகளுக்கு பயப்படவில்லை. சூழ்நிலைக்கு தகுந்தாற்போல அனைவருடைய நலத்திற்காகவும் அவர் முரண்பாடுகளை ***தூண்டிவிட்டிருக்கின்றார்***. சில வேளைகளில் முரண்பாடுகளை உருவாக்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. சில வேளைகளில் அவற்றைத் தீர்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. எனவே, பரிசுத்த ஆவியானவரின் தொடர்ந்தேர்ச்சியான வழிநடத்துதலுக்காக நாம் ஜெபிக்க வேண்டும்.



சமாதானம் பண்ணுதல் என்பது யாவரையும் ***சாந்தப்படுத்துவது*** அல்ல. மேலும், எப்போதும் விட்டுக் கொடுத்தல், கால் துடைக்கும் துண்டுபோலச் செயல்படுதல், மற்றவர்களை எப்போதும் உங்கள் மீது அதிகாரம் செலுத்த இடம் கொடுத்தல், என்பன இயேசுவின் சிந்தையில் இருக்கவில்லை. பல விஷயங்களில் அவர் பின்வாங்க மறுத்தார். தீய எதிர்ப்பு மத்தியில் தமது கொள்கைக்காக உறுதியாக நின்றார்.

ஒரு உறவை எவ்வாறு மீண்டும் சீர்படுத்துவது

விசுவாசிகளாகிய நம்மை, தேவன், “நம்முடைய உறவுகளை ஒருவருக்கொருவர் சரிப்படுத்திக் கொள்ளுமாறு”[8] அழைக்கின்றார். ஐக்கியத்தைச் சீர்படுத்த வேதாகமப் படிகளாக ஏழு காரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன:

அந்த நபருடன் பேசுவதற்கு முன்னர் தேவனிடம் பேசுங்கள். தேவனோடு பிரச்சனையை விவாதியுங்கள். அந்தப் போராட்டத்தைக் குறித்து, இன்னொரு நண்பரிடம் வம்பளப்பதற்குப் பதிலாக, முதலில் அதைக் குறித்து ஜெபித்தால், தேவன் உங்கள் இருதயத்தை மாற்றுவதை அல்லது உங்கள் உதவியின்றி அந்த நபர் உள்ளத்தில் மாற்றம் ஏற்படுத்துவதைக் காண்பீர்கள். அக்காரியங்களைக் குறித்து அதிகமாக ஜெபித்தால், உங்கள் உறவுகளனைத்துமே மிருதுவாகிப்போகும்.

நாள் இருபது:
முறிந்துபோன ஐக்கியத்தைப் புதுப்பித்தல்

சங்கீதங்களில் தாவீது செய்ததைப் போலவே, ***தேவனை நோக்கி*** ஜெபத்தை ஏறெடுக்கவேண்டும். உங்கள் நம்பிக்கையற்ற நொறுங்குண்ட நிலையைத் தேவனிடம் கூறுங்கள். அவரிடம் கதறுங்கள். உங்கள் கோபம், பாதுகாப்பற்ற உணர்வு, மனக்காயம், மற்றெந்த உணர்வுகளையும் குறித்து, தேவன் ஒருபோதும் ஆச்சரியப்படுபவருமல்ல; நிலை குலைந்து போகிறவருமல்ல; ஆகவே, நீங்கள் உணருவதை அப்படியே அவரிடம் கொட்டி விடுங்கள்.

அநேக போராட்டங்கள், சந்திக்கப்படாத தேவைகளிலிருந்து எழும்புகின்றவை. இவற்றில் சில தேவைகளைத் தேவன் ஒருவர் மட்டும்தான் சந்திக்கக் கூடும். தேவன் ஒருவர் மட்டுமே நிறைவேற்றக் கூடிய ஒரு தேவையை, வேறு யாராவது ஒருவர் – உங்கள் நண்பர், வாழ்க்கைத் துணை, எஜமான் அல்லது குடும்ப அங்கத்தினர் யாராவது நிறைவேற்றுவார்கள் என்று நீங்கள் எண்ணினால், நீங்கள் ஏமாற்றத்திற்கும், மனக்கசப்பிற்கும் உள்ளாவீர்கள். தேவன் ஒருவர் தவிர ***வேறு யாரும்*** உங்களுடைய அனைத்துத் தேவைகளையும் சந்திக்கவே முடியாது.

நமது போராட்டங்களில் அநேகம் நமது விண்ணப்பக் குறைவால் ஏற்படுகிறதென்று அப்போஸ்தலனாகிய யாக்கோபு குறிப்பிட்டுள்ளார். ***"உங்களுக்குள்ளே யுத்தங்களும், கலகங்களும் ஏன் உருவாகின்றன? ...நீங்கள் அடைய விரும்பியும் அதைப் பெற்றுக் கொள்ளாமலிருக்கின்றீர்கள் ...நீங்கள் தேவனிடத்தில்***

கேட்கவில்லை, அதனால், பெற்றுக்கொள்ளவில்லை.”[9] தேவனை நோக்கிப் பார்ப்பதற்கு பதிலாக, நாம் சந்தோஷமடைய, பிறரை நோக்கிப் பார்க்கின்றோம்; அவர்கள் நம்மை ஏமாற்றி விடும்போது – கைவிடும்போது – நாம் கோபமடைகின்றோம். “நீங்கள் ஏன் என்னிடம், முதலாவது வரக்கூடாது?” என்று தேவன் கேட்கின்றார்.

எப்பொழுதுமே, முதல் படியை நீங்கள் எடுத்து வையுங்கள். நீங்கள் அடுத்தவரைக் காயப்படுத்தியிருந்தாலும், அடுத்தவர் உங்களைக் காயப்படுத்தியிருந்தாலும் பரவாயில்லை. முதல் ஆரம்பத்தை, தேவன், உங்களிடம்தான் எதிர்பார்க்கின்றார். அடுத்தவர் வரட்டும் என்று காத்திருக்க வேண்டாம்; நீங்கள் முதலில் அவர்களிடம் போங்கள். முறிந்த ஐக்கியத்தை சீர்படுத்துவது அவ்வளவு முக்கியமென்பதால்தான், இயேசு, உங்கள் முழு ஆராதனைக்கும் மேலாக அதற்கு முதலிடம் கொடுத்துப் பேசுகின்றார், ***“நீ ஆராதிக்கும் இடத்தில் உன் காணிக்கையை செலுத்த வரும்போது, உன் சிநேகிதனுக்கு உன் பேரில் ஒரு மனத்தாங்கல் உண்டென்று அங்கு நினைவுகூருவாயாகில், உன் காணிக்கையை அங்கேதானே வைத்து விட்டு, முன்பு உன் சிநேகிதனிடத்தில் போய் ஒப்புரவாகு; பின்பு வந்து, தேவனுக் குரிய உன் காணிக்கையை செலுத்து.”***[10]

ஐக்கியம் முறிவுபட்டு அல்லது உடைந்துபோய் விட்டால், உடன்தானே ஒரு சமாதானக் கூடுகையை ஒழுங்கு செய்யுங்கள். தள்ளி வைக்க வேண்டாம்; சாக்குப்போக்கு சொல்லவும் வேண்டாம் அல்லது “எப்படியாவது ஒரு நாளில் சரிப்படுத்தி விடுவேன்” என்று வாக்குறுதி கூறவும் வேண்டாம். எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக, ஒரு நேருக்குநேர் சந்திப்புக்குத் திட்டமிடுங்கள். பிந்திப் போகுதல் கோபத்தை ஆழமாக்கும்; காரியங்களை மோசமாக்கிவிடும். போராட்டங்களை காலமானது ஆற்றாது; அது மனக் காயத்தை பெரிதாகத்தான் மாற்றிவிடும்.

விரைந்து செயலாற்றுவது, உங்களுடைய ஆவிக்குரிய பாதிப்பையும் குறைத்து விடும். பாவம் மற்றும் தீர்த்து வைக்கப்படாத போராட்டங்கள், தேவனோடுள்ள நமது உறவைத் தடை செய்து, நமது ஜெபங்களுக்குப் பதில் வராதபடி செய்யும்[11] என்று வேதம் கூறுகின்றது. நம்மையும் அது துக்கமடையச் செய்கின்றது.

யோபுவின் நண்பர்கள் அவனுக்கு நினைவுபடுத்தினார்கள், *“எரிச்சலினால் மரணத்துக்கேதுவாகக் கவலைப்படுவது ஒருவன் செய்யும் முட்டாள்தனமான, அறிவற்ற செயல்”* என்றும், *“உமது கோபத்தினால் நீர் உமக்குத் தாமே கோபம் விளைவிக்கின்றீர்”*[12] என்றும் கூறினார்கள்.

கூடிவரவேண்டிய சரியான நேரம், காலம் இவற்றைச் சரியாகக் கணிப்பது, சமாதானக் கூட்டத்தை வெற்றியாக முடித்துத் தரும். இரு பிரிவினரும் களைப்பாக, அதிக வேலைப் பளுவில், தடை செய்யப்படும் நிலையில் இருந்தால், அப்போது சந்திக்கவே வேண்டாம். இரு தரப்பினரும் தங்கள் சிறந்த மன நிலையிலிருக்கும்போது சமாதான கூட்டம் கூட வேண்டும்.

அடுத்தவருடைய உணர்வுகளைப் புரிந்து, அனுதாபப்பட வேண்டும். உங்கள் வாய்க்குக் கொடுப்பதைவிட, அதிக வேலையை உங்கள் காதுகளுக்குக் கொடுங்கள். எந்தவொரு கருத்து வேறுபாட்டையும் தீர்த்து வைப்பதற்கு முன்னதாக, மக்களுடைய உணர்வுகளுக்கு முதலில் செவிகொடுங்கள். *‘‘அவனவன், தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக”*[13] என்று பவுல் கூறுகின்றார். ‘நோக்குவானாக’ என்பதற்கான கிரேக்க பதம் *‘ஸ்கோபோஸ்’* அதிலிருந்துதான் தொலைநோக்குக் கருவி – *டெலஸ்கோப், மைக்ராஸ்கோப்* என்ற வார்த்தைகள் பிறந்தன. அப்படியானால், நெருங்கிய ‘கவனம் செலுத்து’ என்று பொருள். அவர்கள் உணர்வுகள் மீது கருத்தைச் செலுத்துங்கள்; உண்மைகள் மீதல்ல! அனுதாப உணர்வுடன் ஆரம்பியுங்கள்; தீர்வுகளை ஆரம்பிக்காதிருங்கள்.

நீங்கள் முதல் படியை எடுத்து வைக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

மக்கள் தங்கள் உணர்வுகளை முதலில் கூற முடியாதபடி பேசித் தடுக்க முயல வேண்டாம். முதலில் காது கொடுத்துக் கேளுங்கள்; யாரும் பரிந்து பேசாமல், தங்கள் உணர்வுகளை அவர்கள் கொட்டி, பாரத்தை இறக்க இடங்கொடுங்கள். நீங்கள் அவர்கள் கருத்துக்கு இடங்கொடுங்கள். நீங்கள் அவர்கள் கருத்துக்கு இசைந்து

போகாதிருக்கும்போதும், புரிந்து கொள்ளுகின்றீர்களென்பதைக் காண்பிக்க தலையை அசைத்துக்கொள்ளுங்கள். உணர்வுகள் எப்போதுமே உண்மையாகவோ, நியாயமான தீர்க்கதரிசிகளுக்கு உட்பட்டதாகவோ இருப்பதில்லை. உண்மையில், கோப உணர்வு, முட்டாள்தனமான வழிகளில் சிந்திக்கவும் செயலாற்றவும் நம்மைத் தூண்டும். *"என் இருதயம் காயப்பட்டு, என் எண்ணங்கள் கசப்பாக இருந்தபோது, நான் காரியம் அறியாத மிருகம் போலிருந்தேன்"*[14] என தாவீது ஒத்துக் கொண்டார். நாமனைவரும் புண்படும்போது மிருகத்தனமடைகின்றோம்.

இதற்கு நேர்மாறாக, *"மனுஷனுடைய ஞானம் பொறுமையை உண்டுபண்ணும். காரியங்களைப் பொருட்படுத்தாதிருப்பது அவனுடைய மகிமைக்கே"*[15] என்று வேதம் கூறுகின்றது. ஞானத்தினால் பிறப்பது பொறுமை; ஞானம், பிறருடைய கருத்துக்களையறிவதில் பிறக்கும். காது கொடுத்துக் கேட்பது, "நான் உங்கள் கருத்தை மதிக்கின்றேன்; நான் நமது உறவுகளுக்கு முக்கியத்துவமளிக்கின்றேன்; நீங்கள் எனக்கு ஒரு பொருட்டாக இருப்பவர்கள் (தேவையானவர்கள்)." நாம் அவர்களுக்காகக் கரிசனை கொள்ளுகிறோமென்று அறியும்வரை, மக்கள், நாம் என்ன அறிந்திருக்கின்றோம் என்பதைக் குறித்துக் கரிசனை கொள்ளமாட்டார்களென்ற கூற்று சரியானதே.

ஐக்கியத்தை சீர்படுத்த, *"பிறருடைய பயங்கள், சந்தேகங்கள் என்ற அவர்களுடைய "பாரத்தை" சுமந்து... நமக்கு மகிழ்ச்சி தருவதையல்ல, அடுத்த நபருக்கு மகிழ்ச்சியளிப்பதையே, அவர்கள் நன்மைக்காக செய்ய வேண்டும்."*[16] பிறருடைய கோபத்தை நாம் உள்வாங்கிக் கொள்ளுவது தியாகமாகும் – குறிப்பாக, அது நியாயமற்ற கோபமாக இருக்கும்போது, நமது தியாகம் அதிகம். இதைத்தான், இயேசு உங்களுக்காகச் செய்தார். நியாயமற்ற, தீங்கு நிறைந்த கோபத்தை, உங்களை இரட்சிப்பதற்காக அவர் ஏற்றுக் கொண்டு, சகித்தார். *"கிறிஸ்து தமது எண்ணங்களில் உழலாமல்... வேத வாக்கியம் கூறியபடி, உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என் மேல் விழுந்தது"*[17] என்று ஏற்றுக்கொண்டார்.

முரண்பாட்டில், உங்கள் பங்கை அறிக்கையிடுங்கள். ஒரு உறவைச் சீர்படுத்துவதைக் குறித்து நீங்கள் உண்மையிலேயே



தீர்மானமாக இருந்தால், நீங்கள் முதலில் உங்கள் பாவம் அல்லது தவறுகளை ஒத்துக்கொண்டு ஆரம்பிக்க வேண்டும். இதுதான், காரியங்களைத் தெளிவாகப் பார்ப்பதற்குரிய வழி என்று இயேசு கூறினார். ***"உன் கண்ணிலுள்ள உத்திரத்தை முதலில் எடுத்துப்போட வகை பார்; பின்பு, உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்."***[18]

நம்மனைவருக்கும் பார்வையில் குருட்டுப் பகுதிகளிருப்பதால், யாருடன் உங்களுக்குத் தகராறு இருக்கிறதோ அவர்களைச் சந்திக்கும் முன்னதாக, மூன்றாவது நபர் ஒருவரை, உங்கள் சொந்த செயல்களை எடைபோட்டு மதிப்பிட உதவுமாறு கேளுங்கள். அந்தப் பிரச்சனையில் உங்கள் தவறு எவ்வளவு என்பதை தேவன் உங்களுக்கு காண்பிக்குமாறு அவரிடம் முதலில் கேளுங்கள். "நான் தான் பிரச்சனையா? நான் உணர்வில்லாமல் அல்லது அளவுக்கு அதிக உணர்ச்சி வசப்பட்டு விட்டேனா?" என்று கேட்டுப் பாருங்கள். ***"நமக்குப் பாவமில்லையென்போமாகில் நம்மை நாமே வஞ்சிக்கின்றவர்களாயிருப்போம்"***[19] என்று வேதம் கூறுகின்றது.

ஒப்புரவாகுதலுக்குரிய வலுவான ஒரு ஆயுதம் அறிக்கையிடுதல். சில சமயங்களில், பிரச்சனையை நாம் கையாளும் விதம், முன்பு இருந்ததைவிட பிரச்சனையை பெரிதாக்கி விடும். உங்கள் தவறுகளை நீங்கள் தாழ்மையுடன் ஒத்துக் கொண்டு ஆரம்பிக்கும்போது, அடுத்தவருடைய கோபத்தை அது தணிக்கின்றது; நீங்கள் உங்களுக்காகவே பரிந்து பேசுவீர்களென்றுதான் அவர்கள் எதிர்பார்த்திருப்பார்கள். உங்களது அணுகுமுறையை கண்டு, அவர்கள் தங்களது எதிர்வாதத்தை நிறுத்தி விடுவார்கள். நீங்களும், சாக்குப்போக்கு சொல்லி, குற்றத்தை அடுத்தவர்மீது சுமத்த வேண்டாம். உண்மையுடன், பிரச்சனைக்கான உங்கள் பங்கை ஒத்துக் கொள்ளுங்கள். உங்கள் தவறுகளுக்குப் பொறுப்பேற்று மன்னிப்புக் கேளுங்கள்.

நபர்களையல்ல பிரச்சனையைத் தாக்குங்கள். குற்றத்தை யார்மீது சுமத்துவது என்ற நோக்கத்திலேயே இருந்தால்

பிரச்சனையைத் தீர்க்கவே முடியாது. இதில், எதைச் செய்வதென்று நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும். ***"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தையெழுப்பும்"***[20] என்று வேதம் கூறுகின்றது. கோபப்படுவதால் உங்கள் குறிப்பை நீங்கள் கூறி ஜெயிக்கவே முடியாது; ஆகவே, உங்கள் வார்த்தைகளைக் கவனமாகத் தெரிந்தெடுங்கள். கிண்டலாகக் கூறப்படும் பதிலைவிட மிருதுவான பிரதியுத்தரம் எப்போதுமே நல்லது.

முரண்பாடுகளை தீர்த்து வைப்பதில், நீங்கள் எதைக் கூறுகின்றீர்களென்பதைவிட, எப்படிக் கூறுகின்றீர்களென்பதுதான் அதிக முக்கியம்; நீங்கள் தாக்குவதைப்போலக் கூறினால், அவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள முயலுவார்கள். ***"ஒரு ஞானமுள்ள, முதிர்ச்சியடைந்த மனிதன் அவனுடைய புரிந்துகொள்ளும் தகுதிக்குப் பேர் போனவன்; அவன் வார்த்தைகள் எவ்வளவு இனிமையானவைகளோ அந்த அளவுக்கு அடுத்தவரை இணங்க வைப்பான்"***[21] என்று தேவன் கூறுகின்றார். நச்சரித்தல் ஒருநாளும் வெற்றியை தராது;

முரண்பாடுகளைத் தீர்த்து வைப்பதில், நீங்கள் என்ன சொல்லுகின்றீர்கள் என்பதைவிட, அதை எப்படிச் சொல்லுகின்றீர்கள் என்பது அதிக முக்கியம்.

ஒரு யுத்தத்தின்போது, (Cold War) இரு தரப்பினரும், சில போராயுதங்கள் மிகவும் நாசம் விளைவிப்பவையென்று, அவற்றைப் பயன்படுத்த வேண்டாமென்று தீர்மானித்தனர். இன்று, இரசாயன விஞ்ஞான சம்பந்தமான ஆயுதங்கள் குறைக்கப்பட்டு, தடுக்கப்பட்டுள்ளன; அணு ஆயுதங்களின் சேமிப்பு குறைக்கப்பட்டு, அழிக்கப்பட்டு வருகின்றன. ஐக்கியத்திற்காக, அணு ஆயுதங்களுடன், நிந்தித்துப் பேசுதல், குறைத்துப் பேசுதல், கிண்டலாகத் தரக்குறைவாகப் பேசுதல் போன்றவற்றையும் விட்டுவிட வேண்டும். ***"தீங்கு செய்யும் வார்த்தைகளை பயன்படுத்தாதேயுங்கள்; கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பயனுள்ள வார்த்தைகளையே பேசுங்கள்"***[22] என்று பவுல் கூறுகின்றார்.

கூடுமானவரை ஒத்துழையுங்கள். *"கூடுமானவரை, உங்களாலான மட்டும் எல்லாரோடும் சமாதானமாயிருங்கள்"*[23] என்று பவுல் கூறினார். சமாதானத்திற்கு எப்போதுமே ஒரு விலைக்கிரயமுண்டு. சில சமயம் நமது பெருமையைக் கொடுக்க வேண்டியதிருக்கும்; நமது சுயத்தை மையமாக வைப்பது விட்டுவிடப்பட வேண்டியதிருக்கும் ஐக்கியத்திற்காக, சமரசம் பண்ண உங்களாலானதைச் செய்யுங்கள்; பிறருடன் அனுசரித்துப் போங்கள். அவர்கள் தேவைகளுக்கு முன்னுரிமை கொடுங்கள்.[24] இயேசுவின் பாக்கிய வசனங்களில் ஏழாவது வசனத்தின் திரண்ட கருத்து, *"மக்கள் ஒருவருடனொருவர் போட்டியிட்டு அல்லது சண்டையிடுவதற்குப் பதிலாக, எப்படி ஒத்துப்போவது என்பதை அவர்களுக்குக் காண்பித்தால் நீங்கள் பாக்கியவான் களாயிருப்பீர்கள்; அப்போதுதான், நீங்கள் உண்மையில் யாரென்பதையும் தேவனுடைய குடும்பத்தில் உங்கள் ஸ்தானமென்ன என்பதையும் நீங்கள் கண்டுகொள்ளக் கூடும்"*[25] என்று கூறுகின்றது.

ஒப்புரவாகுதலை வற்புறுத்துங்கள்; தீர்வு காணுவதையல்ல. எல்லாரும் எல்லாவற்றிற்கும் ஒத்துப்போவார்களென்று எண்ணுவது நடக்காத காரியம். தீர்வு காணுதல் பிரச்சனை மீது கருத்தைப் பதிக்கும்; ஆனால், ஒப்புரவாகுதல், உறவுகள் மீது கருத்தைப் பதிக்கும். நாம் ஒப்புரவாகுதல் மீது கருத்தைப் பதிக்கும்போது, பிரச்சனை அதன் முக்கியத்துவத்தை இழந்து விடும்; பொதுவாக, அது அப்படியே பொருளற்றதாகவும் போய்விடும்.

நமது கருத்து வேறுபாடுகளை நாம் தீர்த்து வைக்க முடியாமலிருக்கும்போதுகூட, நம்மால் உறவுகளை மீண்டும் நிலை நிறுத்த முடியும். கிறிஸ்தவர்கள் பொதுவாக, நியாயமான, உண்மையான கருத்து வேறுபாடுகளும், வேறுபடும் கருத்துக்களும் கொண்டிருப்பார்கள். ஆனால், நாம் ஒருவரையொருவர் வெறுக்காமலேயே, கருத்து வேறுபாடு கொள்ளமுடியும். ஒரே வைரக்கல் வெவ்வேறு கோணத்தில் வெவ்வேறு விதமாகத் தோன்றுவதுபோல! தேவன் ஐக்கியத்தை விரும்புகின்றாரே ஒழிய, எல்லாரும் ஒரே கருத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்று கூறவில்லை. ஒரு பிரச்சனையை நாம் ஒரே கண்ணோட்டத்துடன்

பார்க்காவிட்டாலும் கூட, நாம் கையோடு கை கோர்த்து, ஒன்றாக இணைந்து செல்ல முடியும்.

இதன் அர்த்தம் தீர்வு காண்பதைக் கைவிடுவதல்ல. அந்த பிரச்சனையைக் குறித்து நீங்கள் தொடர்ந்து கலந்துரையாடலாம். வாக்குவாதம் கூடச் செய்யலாம். ஆனால், அதை நீங்கள் ஒரு ஒருமைப்பாட்டின் ஆவியோடு செய்ய வேண்டும். ஒப்புரவாகுதல் என்பதற்குப் பிரச்சனையைக் குழித்தோண்டிப் புதைப்பது என்ற அர்த்தமல்ல! மாறாக, பிளவையுண்டாக்கும் ஆயுதத்தை நீங்கள் புதைத்து விடுகின்றீர்கள் என்றுதான் அர்த்தமாகும்!

இந்த அத்தியாயத்தை வாசித்ததின் பிரதிபலனாக யாரையாவது நீங்கள் சந்திக்க வேண்டிய அவசியம் இருக்கின்றதா? இன்னும் யாருடன் நீங்கள் ஐக்கியத்தைச் சீர்படுத்த வேண்டும்? இனி ஒரு வினாடி கூட தாமதிக்க வேண்டாம். இப்பொழுதே, தேவனிடம் அந்த நபரைக் குறித்துப் பேசுங்கள். அதன்பின் தொலைபேசியில் தொடர்பு கொண்டு செய்ய வேண்டியதைச் செய்யுங்கள்.

ஒப்புரவாகுதல், உறவுகள் மீது கருத்தைப் பதிக்கும்; தீர்வு காணுதல் பிரச்சனை மீதே கருத்தைப் பதிக்கும்.

இந்த ஏழு படிகளும் எளியவை. ஆனால், செய்வதற்கு எளிதானவை அல்ல; உறவைச் சீர்பொருந்தப் பண்ணுவதற்கு அதிக முயற்சி தேவை. இதனால்தான், "*மற்றவர்களுடன் சமாதானமாக வாழக் கடினமாக பிரயாசப்படுங்கள்*"[26] என்று பேதுரு வலியுறுத்தினார். சமாதானத்திற்காக நீங்கள் உழைக்கும்போது, தேவன் செய்ய விரும்புவதைச் செய்கின்றீர்கள். அதனால்தான், "***சமாதானம் பண்ணுகின்றவர்களை தேவன் தம்முடைய புத்திரர்***"[27] என்கின்றார்.

நாள் இருபது
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: உறவுகள் புதுப்பிக்கப்படுதல் என்பது எப்பொழுதுமே விலை மதிக்கப்பட வேண்டிய ஒன்று.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"கூடுமானால் உங்களாலான மட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்".* ரோமர் 12:18

ஆய்வுக்கான ஒரு கேள்வி: இன்று, யாருடனுள்ள முறிந்த உறவை நான் சீர்பொருந்தப்பண்ண வேண்டும்?

21

உங்கள் சபையைப் பாதுகாத்தல்

நீங்கள் ஆவியினால் சமாதானத்தோடு, ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கின்றீர்கள். சமாதானக் கட்டினால் அதைக் காத்துக்கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாக இருங்கள்.
எபேசியர் 4:3 (புதிய மொழியாக்கம்)

எல்லாவற்றிற்கும் மேலாக, அன்பு உங்கள் வாழ்க்கையை ஆளட்டும்; அப்பொழுது, முழு சபையும் பூரணமாக இசைந்து ஒன்றாக நிலைத்திருக்கும்.
கொலோசெயர் 3:14 (புதிய மொழியாக்கம்)

உங்கள் சபையின் ஒற்றுமையைப் பாதுகாப்பது உங்கள் வேலை.

மோட்சம், நரகம் இவற்றிற்குக் கொடுக்கப்பட்டுள்ள கவனத்தைவிடப் புதிய ஏற்பாட்டில் சபையின் ஒருமைப்பாடு, ஒற்றுமைக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏனெனில், அது அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது. நாம் ஒருவருடனொருவர் ஏக சிந்தையுடன் இசைந்து வாழ்வதை தேவன் பெரிதும் விரும்புகின்றார்.

ஐக்கியத்தின் ஆத்தும ஒற்றுமை; அதை நீங்கள் அழித்தால், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலிருந்து அதன் இருதயத்தைக் கிழித்தெடுக்கின்றீர்கள். தமது சபையில், நாம் எவ்வாறு வாழ்க்கையை ஒன்றாக அனுபவிப்பது என்று தேவன் தீர்மானித்திருக்கின்றாரோ அதன் சாரம், மையப்பகுதி, ஒற்றுமை. ஒற்றுமைக்குப் பிரதான மாதிரி திரித்துவம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவி முற்றிலுமாக ஒன்றாக இணைந்திருக்கின்றார்கள். தியாகமான அன்புக்கும், தன்னைத் தவிர பிறர் மீது தாழ்மையாகக் கரிசனை

கொள்ளுவதற்கும், பரிபூரண இசைவுக்கும் சிறந்த உன்னதமான மாதிரி தேவனே.

எந்தவொரு பெற்றோரையும்போலவே, தமது பிள்ளைகள் ஒருவரோடொருவர் இசைந்துபோவதைக் கவனிப்பதில் பெருமகிழ்ச்சியடைபவர் நமது பரம பிதா. தாம் கைது செய்யப்படுவதற்கு முந்திய இறுதி வினாடிகளில் இயேசு, நமது ஒற்றுமைக்காகத் தீவிர பாச உணர்வுடன் ஜெபித்தார்.[1] அந்த வேதனை நிறைந்த நேரங்களில், அவர் மனதில் ஓடிக் கொண்டிருந்த காரியம், நமது ஒற்றுமை. அது எவ்வளவு முக்கியமானதென்பதை இச்சம்பவம் காண்பிக்கின்றது.

தமது சபையைவிட வேறெதுவும் இந்தப் பூமியில் தேவனுக்கு அதிக அருமையானதல்ல; அவர் அதற்காக மிக உயர்ந்த விலைக்கிரயம் செலுத்தினார்; பிரிவினைகள், முரண்பாடுகள், ஒருமனமின்மை ஆகிய இவற்றால் ஏற்படும் மிகக் கொடிய பாதிப்புக்கு, அதைக் குறிப்பாக விலக்கிக் காக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். நீங்கள் தேவனுடைய சபையின் ஒரு அங்கமானால், நீங்கள் ஐக்கியங் கொள்ளும் சபையின் ஒற்றுமையைக் காப்பது உங்கள் பொறுப்பு; இந்த ஒற்றுமையைக் காக்கவும், ஐக்கியத்தைப் பாதுகாக்கவும், சபைக் குடும்பத்தில் இசைந்த மனதை உருவாக்கவும் உங்களாலான அனைத்தையும் நீங்கள் செய்ய வேண்டுமென்று இயேசு கிறிஸ்துவினால் நீங்கள் கட்டளை பெற்றிருக்கின்றீர்கள். ***"ஆவியின் ஒருமையினால், சமாதானக் கட்டைக் காத்துக்கொள்ளுவதற்கு ஜாக்கிரதையாயிருங்கள்"***[2] என்று வேதம் கூறுகின்றது. இதை நாம் எவ்வாறு செய்வது? வேதம் நமக்கு நடைமுறைக்கேற்ற ஆலோசனைகளைத் தருகின்றது.

தமது சபையைவிட வேறெதுவும் இப்பூமியில் தேவனுக்கு அதிக விலை மதிப்புள்ளதல்ல.

நம்மிடத்தில் இருக்கும் வேறுபாடுகளிலல்ல, பொதுவாக இருக்கும் காரியங்கள் மீது கவனம் செலுத்துங்கள். ***"இசைவுண்டாக்கும் காரியங்களிலும், ஒருவரது குணத்தை***

வளர்க்கக் கூடியவற்றிலும் நமது கவனத்தை வைப்போமாக''[3] என்று பவுல் கூறுகின்றார். விசுவாசிகளாக, நாம் ஒரே கர்த்தரை, ஒரே சரீரத்தை, ஒரே நோக்கத்தை, ஒரே பிதாவை, ஒரே ஆவியை, ஒரே நம்பிக்கையை, ஒரே ஞானஸ்நானத்தை, ஒரே அன்பைப் பகிர்ந்து கொள்ளுகின்றோம்.[4] ஒரே விதமான இரட்சிப்பு, வாழ்க்கை, எதிர்காலம் – இவை யாவும் நாம் உண்டு பண்ணக்கூடிய எந்த விதமான வேறுபாடுகளையும்விட மிக அதிக முக்கியத்துவம் வாய்ந்த காரியங்கள். நமது தனிப்பட்ட வேறுபாடுகளிலல்ல, இந்தக் காரியங்களிலேயே நாம் நமது கவனத்தைப் பதிக்க வேண்டும்.

நமக்கு வெவ்வேறு விதமான தனித்தாள் சுபாவங்கள், பின்னணிகள், இனங்கள், முன்னுரிமைகள் ஆகியவைகளை கொடுப்பதைத் தெரிந்து கொண்டவர் தேவனென்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். தேவன் ஒற்றுமையை விரும்புகின்றாரே தவிர, எல்லாரும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று விரும்புவதில்லை. ஆனால், ஒற்றுமைக்காக, வேறுபாடுகள் நம்மைப் பிரிக்க நாம் இடம் கொடுக்கக்கூடாது; ஒருவரையொருவர், கிறிஸ்து நம்மை நேசித்ததுபோல நேசித்து, நம்மொவ்வொருவருக்கும், அவருடைய திருச்சபைக்கும் தேவன் கொடுத்த ஐந்து நோக்கங்களை நிறைவேற்றுவதில் நாம் கவனத்தைச் செலுத்த வேண்டும்; அதுவே, முக்கியமான காரியம்.

முக்கியமான காரியங்களின் மீதுள்ள கவனம் வேண்டாத காரியங்கள் மீது திரும்பி விட்டது, வேதாகமத்தில், *''தர்க்கத்துக்குரிய காரியங்கள்''*[5] என்று அழைக்கப்படும் காரியங்கள் மீது திரும்பிவிட்டதென்பதற்கு அடையாளம் போராட்டம் அல்லது முரண்பாடு. தனித்தாள் சுபாவம், தனி நபர் விருப்பம், தனி நபர் விளக்கம், நடைகள், வழிமுறைகள், ஆகிய இவற்றின் மீது நாம் கவனத்தைச் செலுத்தும்போது, பிரிவுகள் கண்டிப்பாக ஏற்படும். நாம் ஒருவரையொருவர் நேசிப்பதிலும், தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதிலும் கவனத்தை செலுத்தினால், இசைந்து போகுதல் நடைபெறும். ***''சபைகளிலே பிரிவினைகள் இல்லாதபடி, உண்மையான இசைவு இருக்கட்டும்; சிந்தனையிலும், நோக்கத்திலும் ஒருமனப்பட்டவர்களாக, ஏக சிந்தையோடு இருக்கும்படி நான் வேண்டிக் கொள்ளுகின்றேன்''***[6] என்று பவுல் இதற்காக கெஞ்சினார்.

உங்கள் எதிர்பார்ப்புகளில் நடைமுறைக்கேற்றபடி நடந்து கொள்ளுங்கள். உண்மையான ஐக்கியம் பற்றிய தேவனுடைய நோக்கத்தை நீங்கள் கண்டுபிடித்த பின்னர், உங்கள் சபையிலுள்ள உண்மை நிலைக்கும், இலட்சிய நிலைக்குமுள்ள பிளவைப் பார்த்து நீங்கள் எளிதில் மனந்தளர்ந்து போகலாம். ஆயினும், சபையின் குறைபாடுகளிருந்தபோதிலும், நாம் சபையைத் தீவிரப் பற்றுடன் நேசிக்க வேண்டும். இலட்சிய நிலையை எண்ணி ஏங்கிக் கொண்டு, இப்போதிருக்கும் உண்மை நிலையைப் பார்த்துக் குறை கூறிக் கொண்டிருப்பது நீங்கள் முதிர்ச்சியடையவில்லை என்பதைக் காண்பிக்கும். மாறாக, இலட்சியத்தைப் புறக்கணித்து, இருப்பது போதும் என்றிருப்பதும் சரியல்ல; இவை இரண்டிற்கும் சமநிலையான நிலையில் வாழுவதுதான் முதிர்ச்சியடைந்த நிலை.

மற்ற விசுவாசிகள் உங்களை ஏமாற்றி கைவிடுவார்கள். அதனால், அவர்களுடன் ஐக்கியம் கொள்ள வேண்டியதில்லை என்று அர்த்தமல்ல; குடும்பத்தின் நபரைபோல அவர்கள் நடந்து கொள்ளாவிட்டாலும், அவர்கள் உங்கள் குடும்பத்தினர்தான். நீங்கள் அவர்களை அப்படியே உதறிவிட்டு விட முடியாது. மாறாக, ***"உங்கள் அன்பினால், ஒருவர் குற்றங் களுக்கு ஒருவர் இடமளித்து, ஒருவருடனொருவர் பொறுமை யாக இருங்கள்"***[7] என்று தேவன் கூறுகின்றார்.

சபையின் குறைபாடுகளைப் பொருட்படுத்தாமல், நாம் சபையை தீவிரப் பற்றுடன் நேசிக்க வேண்டும்.

அநேக புரியக்கூடிய காரணங்களுக்காக மக்கள் சபையைப் பற்றித் தவறாக நினைக்கின்றார்கள். அந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகலாம்; முரண்பாடு, மனக்காயம், மாய்மாலம், ஒதுக்கி வைத்தல், சிறுபிள்ளைத்தனம், சட்டம் பேசுதல், மற்றப் பாவங்கள். அதிர்ச்சியடைந்து, ஆச்சரியப்படுவதைவிட, சபை உண்மையான பாவிகளால் நிறைந்தது, நாமும் அதில் உட்பட்டவர்கள் என்பதை நாம் நினைவுகூரவேண்டும். நாம் பாவிகளாக இருப்பதால், நாம் ஒருவரையொருவர் புண்படுத்துகின்றோம்; சில சமயங்களில் வேண்டுமென்றும், சில சமயங்களில் அறியாமலும் இவைகளை

செய்கின்றோம். ஆனால், சபையை விட்டு விலகுவதற்குப் பதிலாக, நாம் தங்கியிருந்து, கூடுமானவரை அதைத் தீர்க்கும் வழிகளைச் செய்து பார்க்க வேண்டும். ஓடிப்போகுதல் அல்ல, ஒப்புரவாகுதலே வலுவான குணத்திற்கும் ஆழமான ஐக்கியத்திற்கும் வழி நடத்தும் பாதை.

ஏமாற்றத்தின் முதல் அறிகுறியிலேயே உங்கள் சபையை விவாகரத்து செய்தல் அல்லது ஏமாற்றமடைதல், உங்கள் முதிர்ச்சியின்மையைக் காட்டுகின்றது. தேவன் உங்களுக்கும், பிறருக்கும்கூட சில பாடங்களைக் கற்றுக் கொடுக்க விரும்புகின்றார். அத்துடன் நீங்கள் தப்பித்துப் போவதற்கென்று ஒரு பூரணமான, குறைவற்ற சபை கிடையாது. ஒவ்வொரு சபையிலும் அதற்கேற்ற ஒரு பலவீனம் இருக்கத்தான் செய்யும்; பிரச்சனைகளுண்டு; மீண்டும் நீங்கள் ஏமாற்றமடைய வேண்டியதிருக்கும்.

“தன்னை உள்ளே வர அனுமதிக்கும் எந்த ஒரு கிளப்பிலும் தான் அங்கத்தினராக இருப்பதை விரும்பவில்லை” என்று க்ரௌசோ மார்க்ஸ் கூறி பிரபலமடைந்தார். உங்களைத் திருப்திப்படுத்தும்படி ஒரு சபை, பூரணமானதாக இருக்க வேண்டுமென்றால், அதே பூரணத்துவம், பூரணராயில்லாத உங்களை அங்கிருந்து வெளியேறச் சொல்லி விடுமே!

நாசிகளை எதிர்த்தமைக்காக இரத்த சாட்சியாக மரித்த ஜெர்மானிய பாஸ்டர் டயட்ரிச் போன் ஹோஃபர், ஐக்கியத்தைப் பற்றி ஒரு சிறந்த புத்தகத்தை வெளியிட்டார். அப்புத்தகத்தின் பெயர் ***“ஒன்றான வாழ்க்கை”*** (Life Together) அதில் அவர், நமது ஸ்தல சபைகளில் நமக்குக் கிடைக்கும் ஏமாற்றங்கள் நல்லது; ஏனெனில், அது ஒரு குறையுமற்ற பரிபூரணத்தை சபையில் எதிர்பார்ப்பது தவறு என்றும், அந்த எதிர்பார்ப்புகளை அழித்துப்போடவும் உதவுகின்றது; ஒரு சபையை நாம் நேசிக்க வேண்டுமென்றால் அது குறையற்றதாக இருக்க வேண்டுமென்ற மாயையையும், பாசாங்கு செய்வதையும் நாம் நிறுத்தி, ***நாமனைவரும்*** குறைவுள்ளவர்கள், கிருபை பெற வேண்டியவர்களென்று எவ்வளவு சீக்கிரம் ஒத்துக் கொள்ளுகின்றோமோ, அந்த அளவுக்கு நன்மையை பெறுவோம். இதுவே, உண்மை சமுதாயத்தின் ஆரம்பம்.

ஒவ்வொரு சபையும் இப்படியொரு அறிவிப்புப் பலகையைப் போடலாம். "இங்கு குறைவற்ற மனிதர்கள் அங்கத்தினராக விண்ணப்பிக்கத் தேவையில்லை. தங்களைப் பாவிகளென்று ஒத்துக் கொண்டு, கிருபை பெற்று வளர விரும்புகின்றவர்கள் மட்டுமே சேர வேண்டிய இடம் இது."

போன்ஹோஃபர் மேலும் கூறும்போது, ''ஒரு சிறப்பான சமுதாயத்தைப் பற்றிய தனது கனவை, கிறிஸ்தவ சமுதாயத்தைவிட அதிகமாக நேசிப்பவர்கள், அந்தக் கிறிஸ்தவ சமுதாயத்தையே அழிப்பவர்கள்... அன்றாடம் நமது கிறிஸ்தவ ஐக்கியத்திற்காக, நாமிருக்கும் ஐக்கியத்திற்காக, நாம் நன்றி கூறாமலிருந்தால், பெரிய அனுபவமோ, கண்டு கொள்ளக்கூடிய ஐசுவரியங்களோ இல்லாமல்; மாறாக அதிக பெலவீனம், குறைந்த விசுவாசம், கஷ்டங்கள் மட்டுமே இருக்கும்போதும் நன்றி கூறாவிட்டால், ஒன்றும் சரியில்லை என்று புகார் கூறிக் கொண்டிருந்தால், நமது ஐக்கியம் வளர இடங் கொடுக்காதபடி நாமே தேவனைத் தடை செய்கின்றோம்."[8]

குறை கூறுவதைவிட உற்சாகப்படுத்துவதைத் தெரிந்து கொள்ளுங்கள். ஓரங்களில் நின்றுகொண்டு, சேவை செய்பவர்களைக் குறி வைத்துத் தாக்குவது என்பது, ஊழியங்களில் ஈடுபட்டு, பங்கெடுப்பதைவிட, மிக எளிதான காரியம். குறைகூறிக் குற்றம் கண்டுபிடித்தல், ஒப்பிடுதல், ஒருவரையொருவர் நியாயந்தீர்த்தல் ஆகிய இவைகளைச் செய்ய வேண்டாமென்று[9] தேவன் மீண்டும், மீண்டும் நம்மை எச்சரிக்கின்றார். இன்னொரு விசுவாசி உண்மையான குற்ற உணர்வுடனும், விசுவாசத்துடனும் செய்வதை நீங்கள் குறைகூற ஆரம்பிக்கும்போது, நீங்கள் தேவனுடைய காரியத்திற்குள் குறுக்கிடுகின்றீர்கள். ***''மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குறை கூறுவதற்கு நீங்கள் யார்? அவர்கள் செய்வது சரியா என்று அவர்கள் கர்த்தர் மட்டுமே முடிவு செய்யக்கூடும்.''***[10]

நாம் நியாயந்தீர்க்கின்றவர்களாக அல்லது பிற விசுவாசிகளை இழிவாக நினைப்பவர்களாக... அவர்களுடைய நம்பிக்கைகள் நம்மைவிட வேறுபட்டதாக இருக்கும்போதுகூட, நாம் அவர்களை தரக்குறைவாக நினைக்கக் கூடாதென்று பவுல் கூறுகின்றார். ***"உன் சகோதரனுடைய செய்கைகளைக் குறை கூறி, அவற்றை***

அற்பமானதாக்க ஏன் முயற்சிக்க வேண்டும்? நாமெல்லாரும் ஒரு நாள், ஒருவருக்கொருவர் கொண்டுள்ள தீர்ப்பின்படியல்ல, அல்லது நமது சொந்தத் தீர்ப்பின்படியுமல்ல, கிறிஸ்துவின் தீர்ப்பின்படியே நியாயந்தீர்க்கப்படுவோம்."[11]

நான் இன்னொரு விசுவாசியை நியாயந்தீர்க்கும் போதெல்லாம், நமக்கு காரியங்கள் உடன்தானே நிகழுகின்றன; நான் தேவனுடைய ஐக்கியத்தை இழக்கின்றேன்; என் சொந்தப் பெருமையையும், பாதுகாப்பற்ற உணர்வையும், வெளிப்படுத்துகின்றேன்; நான் நியாயந்தீர்க்கப்படும்படி, தேவனுக்கு முன்பாக என்னையே நிறுத்துகின்றேன்; சபையின் ஐக்கியத்திற்குத் தீங்கு இழைக்கின்றேன். குற்றஞ்சாட்டும் ஆவி, அதிக விலைக் கிரயமுள்ள தீமை.

நாள் இருபத்தொன்று:
உங்கள் சபையைப் பாதுகாத்தல்

வேதம், சாத்தானை, ***"நம் சகோதரர் மேல் குற்றஞ்சாட்டுகின்றவன்"***[12] என்று அழைக்கின்றது. குற்றஞ்சாட்டுதல், பிசாசின் வேலை; புகார் கூறுதல், தேவனுடைய குடும்பத்து அங்கத்தினரைக் குறை கூறுதல் இவையெல்லாம் சாத்தானின் செயல்கள். இப்படி நாம் குறைகூறும் ஒவ்வொரு முறையும், சாத்தானுக்காக, அவனுடைய பணியைச் செய்யும்படி நாம் வஞ்சிக்கப்படுகின்றோம். மற்றக் கிறிஸ்தவர்கள், எவ்வளவுதான் நீங்கள் அவர்களுடன் கருத்து வேறுபட்டாலும், அவர்கள் உங்கள் உண்மையான சத்துரு அல்ல; விசுவாசிகளை ஒப்பிட்டுப் பார்த்துக் குறை கூறும்படி நாம் செலவழிக்கும் நேரம், நமது ஐக்கியத்தின் ஒற்றுமையைக் கட்டியெழுப்பும்படி செலவழிக்கப்பட வேண்டிய நேரமாகும். ***"நாம் ஒருவரோடொருவர் இசைந்து செல்லும்படி நமது பெலனையெல்லாம் பயன்படுத்துவோமாக; ஒருவரையொருவர் உற்சாகமான வார்த்தைகள் கூறி உதவி செய்து தாங்குங்கள்; குற்றம் கண்டுபிடித்துக் கீழே தள்ள வேண்டாம்"***[13] என்று வேதம் கூறுகின்றது.

வம்புப் பேச்சுக்கு செவி சாய்க்க மறுத்துவிடுங்கள். ஒரு பிரச்சனையில் அல்லது அதன் தீர்வில் உங்களுக்கு எந்தவொரு பங்கும் இல்லாதிருக்கும்போது, அதைக் குறித்த தகவல்களைப் பிறரிடம் கூறிப் பரப்புவதுதான், வம்புப் பேச்சு. வீண் பேச்சைப்

பரப்புவது பாவமென்று உங்களுக்குத் தெரியும்; ஆனால், அதைக் கேட்பதும் தவறு. நீங்கள் உங்கள் சபையைப் பாதுகாக்க விரும்பினால், இந்த வீண் வம்புப் பேச்சுக்கு இடங்கொடாதிருங்கள். வம்புப் பேச்சுக்கு செவி கொடுப்பது, திருட்டுச் சொத்தை ஏற்றுக் கொள்ளுவது போன்றது. நீங்களும் அக்குற்றத்திற்கு உடந்தையானவர்களாவீர்கள்.

யாராவது உங்களிடம் வீண் வம்பளக்க ஆரம்பித்தால், "தயவு செய்து நிறுத்தி விடுங்கள். எனக்கு இது தேவையில்லை; நீங்கள் அவரிடம் நேரிடையாக இதைப் பேசியிருக்கின்றீர்களா?" என்று கூற தைரியம் கொள்ளுங்கள். உங்களிடம் இன்னொருவர் பற்றி வம்பு பேசுகின்ற அதே மக்கள், உங்களைப் பற்றியும் வேறு இடத்தில் வீண் வம்பு பேசுவார்கள். அவர்கள் நம்பப்படக் கூடாதவர்கள். வீண் வம்புப் பேச்சுக்கு செவிசாய்த்தால், நீங்கள் ஒரு கலகப்பிரியர்[14] என்று வேதம் கூறுகின்றது. *"கலகப்பிரியர், கலகக்காரருக்கு செவி சாய்ப்பார்கள்."*[15] *"இவர்கள் தங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டு, சபைகளில் பிரிவு உண்டாக்குகின்றவர்கள்."*[16]

தேவனுடைய மந்தையில், மிகப்பெரிய காயங்கள், ஓநாய்களினால் அல்ல; மற்ற ஆடுகளினாலேயே உண்டாக்கப்படுவதென்பது வருந்தத்தக்க காரியம். *"ஒருவரையொருவர் கடித்துப் பட்சிக்கும் கிறிஸ்தவர்கள் ஐக்கியத்தைப் பாழாக்குகின்றவர்கள்"*[17] என்று பவுல் எச்சரிக்கின்றார். இவர்கள் *"நரமாமிசம் தின்னும் கிறிஸ்தவர்கள்."* இப்படிப்பட்ட கலகக்காரரை விட்டுவிலக வேண்டுமென வேதம் கூறுகின்றது. *"வீண் வம்பு, இரகசியங்களை வெளிப்படுத்தும்; ஆகவே, அலப்புகின்றவர்களோடே கலவாதே."*[18] சபையில் அல்லது சிறு குழுவிலுள்ள முரண்பாடுகளை விரைந்து தீர்க்கும் ஒரே வழி – வீண் வம்புப் பேச்சு பேசுகின்றவர்களை அன்புடன் நேருக்குநேர் எதிர்கொண்டு, அவர்கள் அதை நிறுத்திவிடும்படி வற்புறுத்துதல். *"விறகின்றி நெருப்பு அவியும்; கோள் சொல்லுகின்றவனில்லாமல், சண்டைகள் (மன இறுக்கங்கள்) மறைந்து போகும்"*[19] என்று சாலொமோன் சுட்டிக் காண்பிக்கின்றார்.

முரண்பாடுகளைத் தீர்த்துவைக்க, தேவனுடைய வழிமுறைகளை கையாளுங்கள். கடந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டிருந்தவை களுடன், இயேசு ஒரு எளிமையான மூன்று கட்ட முறையைக்

கூறினார். *“உன் சகோதரன் உனக்கு விரோதமாகக் குற்றஞ்செய்தால், அவனிடம் போய் பேசு. நீங்களிருவரும் அதைத் தீர்த்துக் கொள்ளலாம்; அவன் செவிகொடுத்தால், அவனை நண்பனாக ஆதாயப்படுத்திக் கொண்டாய்; அவன் செவி கொடாவிட்டால், ஒன்று அல்லது இரண்டு சாட்சிகளை உன்னுடன் கூட்டிக் கொண்டு போ; அவன் அவர்களுக்கும் செவிகொடாவிட்டால், சபைக்கு அதைத் தெரியப்படுத்து.”*[20]

முரண்பாடுகள் எழும்பும்போது, யார் உங்களை கலவரப் படுத்துகின்றார்களோ அவர்களுடன் அன்பாகவும் தைரியமாகவும் அதைக் குறித்துப் பேசாமல் மூன்றாவது நபர் ஒருவரிடம் அதைப் பகிர்ந்து கொள்ளும் சோதனை, நமக்கு எழும்பி வரும். இது காரியங்களை மேலும் மோசமாக்கும். மாறாக, சம்பந்தப்பட்ட நபரிடமே நீங்கள் நேரில் சென்று பேச வேண்டும்.



நேரில், தனித்து சந்தித்துப் பேசுவதுதான், எப்போதுமே முதற்படி. அதை எவ்வளவு சீக்கிரம் செய்யக்கூடுமோ அவ்வளவு சீக்கிரம் செய்ய வேண்டும். உங்களிருவருக்குமிடையே அதைத் தீர்க்க முடியாவிட்டால், பிரச்சனையை உறுதிப்படுத்தக்கூடிய ஒன்றிரண்டு சாட்சிகளைக் கூட்டிக் கொண்டு போய், அவர்கள் மூலம் ஒப்புரவாக முயற்சிக்க வேண்டும். அது இரண்டாவது படி; இன்னும் அந்த நபர் பிடிவாதமாக இருந்தால், என்ன செய்ய வேண்டும்? அதை சபைக்குச் சொல்ல வேண்டுமென்று இயேசு கூறுகின்றார். அதற்குப்பின்னரும் அந்த நபர் பிடிவாதமாக இருந்தால், அந்த நபர் உனக்கு அஞ்ஞானியைப் போலவும், அவிசுவாசியைப்போலவும் இருக்கக்கடவன்[21] என்று இயேசு கூறினார்.

உங்கள் சபை மேய்ப்பருக்கும் தலைவர்களுக்கும் ஆதரவாக இருங்கள். எந்தவொரு தலைவரும் பூரணமானவரல்ல; ஆனால், தேவன் அவர்களுக்கு, சபையின் ஒற்றுமையைக் காக்கும் பொறுப்பும், அதிகாரமும் அளித்திருக்கின்றார். நமக்கு சம்பந்தமில்லாத மோதல் இருவருக்கிடையே எழும்பும்போது, பொதுவாக, ஒதுங்கிவிடலாமா

என்ற எண்ணம்தான் நமக்கு வரும். முதிர்ச்சியடையாத அங்கத்தினரிடையே எழும்பும் மனக்காயங்கள், மோதல்களை, சபை மேய்ப்பர்கள் அடிக்கடி நடுநிலையாளர்களாக நின்று தீர்த்து வைக்கும் நிலை எழும்பும். இயேசுவால் கூடச் செய்யமுடியாத கடினமான பணியான – இரு தரப்பினரையும் மகிழ்ச்சியாக வைக்கக்கூடிய ஒரு பணியைச் செய்யும்படி, சபை மேய்ப்பர்கள் எதிர்பார்க்கப்படுகின்றார்கள்!

நமக்கு சேவை செய்பவர்களுடன் நாம் எவ்வாறு தொடர்பு கொள்ள வேண்டுமென்று வேதம் நமக்குத் தெளிவாகக் கூறுகின்றது. ***"உங்களை மேய்க்கின்ற தலைவர்களுக்கு ஆதரவாயிருங்கள்; அவர்கள் ஆலோசனைக்கு செவிகொடுங்கள். அவர்கள் தேவனுடைய கண்காணிப்பின் கீழ் வேலை செய்து உங்கள் ஆத்துமாக்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றவர்களாயிருக்கின்றார்களே.அவர்கள் அதைக் கஷ்டத்தோடு அல்ல, சந்தோஷமாக செய்யும்படி அவர்களை மகிழ்ச்சியாக்குங்கள். அவர்களை ஏன் நீங்கள் கஷ்டப்படுத்தி காரியங்களைக் கடினமாக்க வேண்டும்?"***[22]

நம்மைத் தலைமை தாங்கி நடத்தி சேவை செய்பவர்களை நாம் கனப்படுத்தும்போது நாம் ஐக்கியத்தைப் பாதுகாக்கின்றோம்.

சபை மேய்ப்பர்கள், ஒரு நாளில் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும்; தாங்கள் சபையை எப்படி காத்தனர் என்பது குறித்துக் கணக்கு கொடுக்க வேண்டும். ***"அவர்கள் கணக்குக் கொடுக்க வேண்டிய கண்காணிகளாக உங்களைக் காக்க நியமிக்கப்பட்டவர்கள்."***[23] நீங்களும் கணக்குக் கொடுக்க வேண்டியவர்கள். நீங்கள் உங்கள் தலைவர்களை எப்படிப் பின்பற்றினீர்களென்று தேவனுக்குக் கணக்கு கொடுக்க வேண்டும்.

ஐக்கியத்திற்குள் பிளவையுண்டாக்கும் மக்களிடம் எப்படி இடைபட வேண்டுமென்று, சபை மேய்ப்பர்களுக்கு, வேதாகமம் திட்டவட்டமான அறிவுரைகளை கூறுகின்றது. வாக்குவாதம் செய்தலைத் தவிர்த்துவிட்டு, அவர்களை மாற்றுமாறு ஜெபித்துக்கொண்டே, எதிர்ப்பவர்களுக்கு சாந்தமாகப் போதிக்க வேண்டும். வாக்குவாதம் பண்ணுகின்றவர்களை எச்சரித்து, ஒருமைப்பாடு, இசைந்த

மனப்பான்மை கொள்ளும்படி பரிந்து பேசி, தலைமைத்துவத்திற்கு அவமரியாதை செய்வோரைக் கண்டித்து, இரு முறை எச்சரிப்பு பெற்ற பின்னரும் அதை அலட்சியம் பண்ணுகின்றவர்களை, சபையிலிருந்து அகற்றிவிட வேண்டும்.[24]

தலைமைத்துவம் வழங்கி, நம்மை சேவிப்பவர்களை நாம் கனப்படுத்தும்போது, நாம் ஐக்கியத்தைப் பாதுகாக்கின்றோம். சபை மேய்ப்பர்களுக்காகவும், சபை மூப்பர்களுக்காகவும் நாம் ஜெபிப்பது அவசியம்; நமது ஜெபம், ஊக்குவிப்பு, பாராட்டு, அன்பு அவர்களுக்குத் தேவை. நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டளை: ***"உங்கள் ஆத்துமாக்களுக்குக் கண்காணியும், கீழ்ப்படிதலின் பாதையில் உங்களை நடத்திச் செல்லும் உத்திரவாதமும் பெற்று உங்களுக்காகக் கடினமாக உழைக்கும் தலைவர்களைக் கனம் பண்ணுங்கள். உங்கள் பாராட்டு மற்றும் அன்பான வார்த்தைகளால் அவர்களைத் திக்கு முக்காடச் செய்யுங்கள்."***[25]

நீங்கள் உங்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டு, சபையின் ஒற்றுமையைப் பாதுகாத்து, வளரச் செய்யுங்களென்று உங்களுக்கு சவால் விடுக்கின்றேன். உங்கள் முழு முயற்சியையும் அதற்காக எடுத்துக் கொள்ளுங்கள்; தேவன் மகிழ்ச்சியடைவார். அது எப்போதும் எளிதாக இருக்காது. சில சமயம் நீங்கள், உங்களுக்கு சிறந்ததையல்ல, சபைக்குச் சிறந்த பயனை கொண்டுவருவதற்காக, பிறருக்கு முன்னுரிமையளிக்க வேண்டியதிருக்கும். தன்னலமற்ற மனப்பான்மையை நாம் கற்றுக் கொள்ளுவதுதான் தேவன் நம்மை சபைகளில் குடும்பமாக இணைய வைப்பதற்கான ஒரு காரணம். ஒரு சமுதாயத்தில் நாம் 'நான்' என்பதற்குப் பதிலாக 'நாம்' என்றும் 'என்னுடையது' என்பதற்குப் பதிலாக, 'நம்முடையது' என்றும் கூற வேண்டியதிருக்கும். ***"உங்களைப் பற்றியே எண்ணாமல், மற்ற விசுவாசிகளையும் அவர்களுக்கு எது நன்மையானது என்பதையுமே எண்ணுங்கள்"***[26] என்று தேவன் கூறுகின்றார்.

ஒற்றுமையாயிருக்கும் சபைகளை தேவன் ஆசீர்வதிக்கின்றார். சேடில்பேக் சபையில், ஒவ்வொரு அங்கத்தினரும், ஐக்கியத்தின் ஒற்றுமையைப் பாதுகாக்கும் ஒரு வாக்குறுதியை உள்ளடக்கிய ஒரு உடன்படிக்கையில் கையொப்பமிட வேண்டும். அதன் விளைவாக, ஐக்கியத்தை உடைத்தெறியும் முரண்பாடுகள் சபையில் எழுந்ததே

இல்லை. இங்கு ஒரு அன்பான, ஒருமைப்பட்ட ஐக்கியம் இருப்பதால், அநேகர் இதில் ஒரு அங்கத்தினராக விரும்புகின்றார்கள்! கடந்த 7 வருடங்களில், எங்கள் சபை, 9,100க்கும் மேற்பட்ட புதிய விசுவாசிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்திருக்கின்றது. அநேக ஆவிக்குரிய குழந்தைகளை தேவன், பெற்றெடுக்க விரும்பும்போது, எந்த திருச்சபை ஒரு சிறந்த மகப்பேறு அறையைப்போல இருக்கின்றதோ, அந்த சபையை தெரிந்தெடுப்பார்.

உங்கள் சபைக் குடும்பத்தை இன்னும் அன்பும், கதகதப்பான வசதியுள்ளதுமாக்க நீங்கள் தனிப்பட்ட முறையில் என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? அன்பையும், தாங்கள் சொந்தமாகக் கூடிய ஒரு இடத்தையும், தேடியலையும் அநேகர் உங்கள் சமுதாயத்தில் இருக்கின்றார்கள். *ஒவ்வொருவருமே* நேசிக்கப்படவும் சொந்தமாக்கப்படவும் விரும்புகின்றார்கள்; அப்படி, உண்மையிலேயே உங்களை நேசிக்கும், உங்களுக்காகக் கரிசனை கொள்ளும் அங்கத்தினர்களைக் கொண்ட சபையை மக்கள் காணும்போது, அவர்களை உள்ளே வராமல் தடுக்கவே முடியாது; கதவை இழுத்து மூடினால் மட்டுமே அவர்களைத் தடுக்க முடியும்.

நாள் இருபத்தொன்று
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: எனது சபையின் ஒற்றுமையைப் பாதுகாப்பது என்னுடைய பொறுப்பு.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"ஆனபடியால், சமாதானத்துக் கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத் தக்கவைகளையும் நாடக்கடவோம்."*** ரோமர் 14:19

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் சபைக் குடும்பத்தார் ஒற்றுமையைப் பாதுகாக்க, இப்பொழுது, நான் தனிப்பட்ட முறையில் என்ன செய்து கொண்டிருக்கின்றேன்?

நோக்கம் 3



நீங்கள் கிறிஸ்துவைப்போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டீர்கள்

உங்கள் வேர்கள் கிறிஸ்துவுக்குள் ஊன்றப்பட்டிருப்பதாக! அவரிலிருந்து சாரத்தை உறிஞ்சுகிறவர்களாயிருந்து, கர்த்தருக்குள் வளருகிறவர்களாயிருப்போமாக! அத்தோடு, சத்தியத்தில் பலங்கொண்டு எழும்புகின்றவர்களாயிருப்போமாக!

கொலோசெயர் 2:7 (புதிய மொழியாக்கம்)

22

கிறிஸ்துவைப்போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டீர்கள்

ஆதியிலிருந்து தாம் செய்வது இன்னதென்று தேவன் அறிவார்; அவர் உலகத் தோற்றத்திலிருந்தே, தம்மை நேசிக்கின்றவர்களின் வாழ்க்கையை அவருடைய குமாரனைப் போல மாற்ற வேண்டுமென அவர் முடிவு செய்துவிட்டார்... ஆதியில் தீர்மானிக்கப்பட்ட வடிவத்தை அவருக்குள், நமது வாழ்க்கையை காண்கின்றோம்.

ரோமர் 8:29 (புதிய மொழியாக்கம்)

அவருடைய குமாரனைப் பார்த்து, அவர் படைத்த அனைத்திலும் தேவனுடைய ஆதி நோக்கத்தைக் காண்கின்றோம்.

கொலோசெயர் 1:15 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் கிறிஸ்துவைப் போலிருக்கும்படி படைக்கப்பட்டீர்கள்.

ஆதியிலிருந்தே, உங்களைத் தம்முடைய குமாரனாகிய இயேசுவைப் போலாக்க வேண்டுமென்பதே தேவனுடைய திட்டம். இதுவே, உங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டதும், உங்கள் வாழ்க்கையின் மூன்றாவது நோக்கமுமாகும். இந்த நோக்கத்தைத் தேவன் படைப்பிலேயே அறிவித்தார். ***"பின்பு தேவன், நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியும் மனிதனை உண்டாக்குவோமாக"***[1] என்றார்.

அனைத்துப் படைப்பிலும், மனித வர்க்கம் மட்டுமே 'தேவனுடைய சாயலில்' படைக்கப்பட்டது. இது ஒரு பெரிய சிலாக்கியம், நமக்கு அது கண்ணியத்தை கொடுக்கின்றது. இதைப் பற்றிய முழுமையான தன்மைகள் எல்லாம் நமக்குத் தெரியாது; ஆயினும், அவற்றில் சில

அம்சங்களை நாம் அறிந்திருக்கின்றோம்; தேவனைப்போலவே, நாமும் ***ஆவிக்குரிய ஜீவன்கள்***: நமது ஆவி அழிவில்லாதது; நமது பூமிக்குரிய சரீரங்களின் காலத்திற்குப் பின்னும் நாம் ஜீவிப்போம்; நாம் ***அறிவு நிறைந்தவர்கள்***: நாம் சிந்திக்க, காரண காரியங்களையறிய, பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடியவர்கள்; தேவனைப்போல, நாம் ***தொடர்பு கொள்ளக்கூடியவர்கள்***. நாம் உண்மை அன்பைப் பெற்றுக்கொள்ளவும் கொடுக்கவும் கூடியவர்கள். நமக்கு ஒரு ***சன்மார்க்க உள்ளுணர்வு உண்டு*** – சரி எது, தவறு எது என்று நம்மால் பிரித்தறியக்கூடும். அது நம்மைத் தேவனுக்குக் கணக்கு கொடுக்க வைக்கும்.

விசுவாசிகள் மட்டுமல்ல, எல்லா மக்களும் தேவ சாயலின் ஒரு பகுதியைப் பெற்றிருக்கின்றோம். அதனால்தான், கருக்கலைத்தலும், கொலையும் தவறாகும்.[2] அந்த சாயல், பாவத்தினால் சீரழிக்கப்பட்டு, உருமாறி, பூரணமடையாமலிருக்கின்றது. ஆகவே, அவர் தமது குமாரனாகிய இயேசுவை, நாம் இழந்துபோன சாயலைப் பூரணமாகப் பெற்றுக்கொள்ளும்படி ஊழியம் செய்ய அனுப்பினார்.

தேவனுடைய முழுமையான 'ரூபமும் சாயலும்' எப்படியிருக்கும்? அது, இயேசு கிறிஸ்துவைப்போலிருக்கும். ***'தேவனுடைய தற்சுரூபம்', 'காணக்கூடாத தேவனின் காணக்கூடிய பிம்பம்'; 'அவருடைய தன்மையின் சாயல்'***[3] என்று வேதம் கூறுகின்றது.



குடும்ப முக சாயலைக் குறிக்க, மக்கள் 'தகப்பனைப்போல பிள்ளை' என்று கூறுவார்கள். என் சாயலை மக்கள் என் பிள்ளைகளில் காணும்போது, அது எனக்கு மகிழ்ச்சியளிக்கின்றது. தேவன், தமது பிள்ளைகள் தமது ரூபத்தையும், சாயலையும் கொண்டிருக்க விரும்புகின்றார். ***"நீங்கள் மெய்யான நீதியும் பரிசுத்தமுமுள்ளவர்களாக... தேவ சாயலிலிருக்கப் படைக்கப்பட்டவர்கள்"***[4] என்று வேதம் கூறுகின்றது.

நான் இன்னும் நன்றாகத் தெளிவாகக் கூறட்டும்: நீங்கள் ஒருபோதும் தேவனாக மாற முடியாது; இதுதான் சாத்தானுடைய ஆதி சோதனையில் கூறப்பட்ட பெருமையான பொய். ஆதாம், ஏவாள் தனது ஆலோசனையைப் பின்பற்றினால், ***"தேவர்களை போலிருப்பீர்கள்"***[5] என்று சாத்தான் வாக்குக் கொடுத்தான். நாம் தெய்வீகமானவர்கள் அல்லது நாம் தேவர்களாக முடியுமென்று அநேக மதங்களும், புது யுக தத்துவங்களும் இன்னும் இந்தப் பழைய பொய்யை முன் வைக்கின்றன.

நமது சூழ்நிலைகளை, எதிர்காலத்தை, நம்மைச் சுற்றியுள்ள மக்களை நாம் நமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சிக்கும்போது, தேவனாக வேண்டுமென்ற ஆசை வெளியே வருகின்றது. ஆனால், சிருஷ்டிக்கப்பட்ட சிருஷ்டிகளாகிய நாம் ஒருபோதும் ***சிருஷ்டிகரராக*** முடியாது. தேவன், நீங்கள் தேவனாக வேண்டுமென்று விரும்பாமல், ***தேவனுடைய தன்மையுடனிருக்க*** வேண்டுமென்றே விரும்புகின்றார் – அவருடைய மதிப்பீடுகள், மனப்பான்மைகள், குணம் கொண்டவர்களாக இருக்க வேண்டுமென்று விரும்புகின்றார். ***"உள்ளான மனுஷனிலும், தேவ சாயலிலும் புதுப்பிக்கப்பட்ட குணமுடையவர்களாக, தேவனால் உருவாக்கப்பட்ட ஜீவனைக் கொண்ட, முற்றிலும் புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்"***[6] என்று வேதம் கூறுகின்றது.

இந்தப் பூமியில் வசதியாக நாம் வாழ வேண்டுமென்பதல்ல, நமது குணம் வளர்ச்சியடைய வேண்டுமென்பதுதான், நம்மைப் பற்றிய, தேவனுடைய இறுதி இலக்கு. நீங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியடைந்து, கிறிஸ்துவைப்போலாக வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். கிறிஸ்துவைப்போலாவதென்றால், நமது தனித்தாள் சுபாவத்தையே இழந்து, மனதில்லாத ஒரு பிரதிபிம்பத்தை அடைவதல்ல. உங்கள் தனித்தன்மையை தேவன் சிருஷ்டித்தார்; அதை அழிக்க அவர் நிச்சயமாக விரும்பமாட்டார். கிறிஸ்துவைப் போலாகுதலென்றால் குணம் மாறுதலடைவதுதானே தவிர, தனித்தாள் தன்மை மாறுவதல்ல.

இயேசு கூறிய பாக்கிய வசனங்களிலுள்ள[7] குணம் உங்களில் வளருவதை தேவன் விரும்புகின்றார். மட்டுமல்ல, ஆவியின், கனிகள்[8], பவுலின் அன்பு பற்றிய அற்புதமான அத்தியாயம்[9], பேதுரு

தரும் பயனுள்ள கனிதரும் குணாதிசயங்களின் பட்டியல்[10] இவை யாவும் நம்மில் காணப்படவேண்டும். குணம், தேவன் உங்களைப் பற்றிக் கொண்டிருக்கும் நோக்கங்களில் ஒன்று என்பதை நீங்கள் மறந்துவிடும் நேரமெல்லாம், உங்கள் சூழ்நிலைகளால் நீங்கள் மனம் நொறுங்கிப் போவீர்கள். இது ஏன் எனக்கு இப்படி நேரிடுகின்றது?' என்று நீங்கள் அதிசயிக்கலாம். "ஏன் எனக்கு இப்படியொரு கஷ்ட நேரம்?" ஒரு பதில் – வாழ்க்கை *கடினமாக* ***இருப்பதற்காகத்தான்*** தரப்பட்டது! அதுதான் நம்மை வளர வைக்கும். பூமி, பரலோகமல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

இந்தப் பூமியில் நீங்கள் வசதியாக வாழ வேண்டுமென்பதல்ல, குணத்தில் வளர்ச்சியடைய வேண்டுமென்பதுதான், உங்களைப் பற்றிய, தேவனுடைய இறுதி இலக்கு.

இயேசு கூறிய ''பரிபூரண ஜீவனை''[11] 'அநேகர், பூரண ஆரோக்கியம், வசதியான வாழ்க்கை முறை, தொடர்ந்து இடைவிடாத மகிழ்ச்சி, உங்கள் கனவுகளெல்லாம் நனவாகிய நிலை, ஜெபம், விசுவாசம் மூலமாகப் பிரச்சனைகளிலிருந்து உடனடி நிவாரணம் என்றெல்லாம், அநேக கிறிஸ்தவர்கள் தவறாகப் பொருள் கொள்ளுகின்றார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையை மிக எளிதானதாக அவர்கள் எண்ணிக்கொள்ளுகின்றார்கள். பூலோகத்தில், பரலோகத்தை எதிர்பார்க்கின்றார்கள்.

இச்சுயநோக்குக் கொண்ட பார்வை, உங்கள் தேவையில் உடனடியாகத் தோன்றி உங்கள் தனிப்பட்ட சுயநல தேவைகளைப் பூர்த்தி செய்வதில் உங்களுக்குச் சேவைபுரியும் ஒரு மந்திர பூதத்தைப் போல தேவனை நடத்துகின்றது. தேவன் உங்கள் ***வேலைக்காரர் அல்ல***. அதேபோல வாழ்க்கையானது கட்டாயமாக இலகுவான ஒன்றாக இருக்க வேண்டும் என்ற கருத்தினால் ஈர்க்கப்பட்ட ஒரு நபராக நீங்கள் இருப்பீர்களாகில், இல்லாததொன்றை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த ஒருவராக மாறுவீர்கள் அல்லது மெய்யை மறுதலிக்கும் ஒரு நபராகவே ஜீவிப்பீர்கள்.

வாழ்க்கை உங்களுக்குரியதல்ல என்பதை ஒருபோதும் மறக்க வேண்டாம்! நீங்கள் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற

இருக்கின்றீர்களே தவிர, உங்கள் சித்தம் நிறைவேற்ற தேவன் இருக்கவில்லை. நித்தியத்தில் அவர் உண்மை வாழ்க்கையைத் திட்டம் பண்ணியிருக்கையில், தேவன் ஏன் நமக்குப் ***பூமியில் மோட்சம்*** தரவேண்டும்? பரத்திற்குரிய நமது குணத்தைப் பூமியில் கட்டியெழுப்பி, பலப்படுத்த தேவன் நமக்கு இங்கு காலத்தைக் குறித்திருக்கின்றார்.

தேவனுடைய ஆவி, உங்களில் கிரியை செய்தல்

உங்களில் கிறிஸ்துவின் குணாதிசயத்தை உருவாக்குவது பரிசுத்த ஆவியின் வேலையாகும். ***"கர்த்தருடைய ஆவியானவர் நமக்குள் கிரியை செய்கின்றபடியே, நாம் அவரைப்போல அதிகமதிகமாக மாறி, அவருடைய மகிமையை இன்னும் அதிகமாகப் பிரதிபலிக்கின்றோம்"***[12] என்று வேதம் கூறுகின்றது. இப்படிக் கிறிஸ்துவைப்போல மாறுதல்தான், பரிசுத்தமாகுதல் என்று அழைக்கப்படுகின்றது; அது, பூமியில் உங்கள் வாழ்க்கையின் மூன்றாவது நோக்கமாகும்.

நீங்கள் உங்கள் சொந்த பலத்தில் இயேசுவின் குணத்தைக் காண்பிக்க முடியாது; புதிய ஆண்டுக்கான தீர்மானங்கள், உறுதியான தீர்மானம் எடுக்கும் திடமான 'சித்தம்', சிறந்த நோக்கங்கள் இவையெல்லாம் போதவே போதாது. தேவன், நம் வாழ்க்கையில் ஏற்படுத்த விரும்பும் மாற்றங்களைக் கொண்டுவரும் சக்தி பரிசுத்த ஆவியானவர் ஒருவருக்கே உண்டு. ***"அவருக்குக் கீழ்ப்படியும் ஆசையைக் கொடுத்து அவருக்குப் பிடித்தமானதைச் செய்யும் வல்லமையையும் தரும்படி தேவன் உங்களில் கிரியை செய்கின்றார்***[13] என்று வேதம் கூறுகின்றது.

"பரிசுத்த ஆவியின் வல்லமை" என்று குறிப்பிட்டதும் அற்புதமான வெளிப்பாடுகளையும், ஆழ்ந்த உணர்வுகளின் வெளிப்பாடுகளையுமே அநேகர் நினைப்பார்கள். ஆனால், அநேக நேரங்களில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, அமைதியான, பகட்டில்லாத முறைகளில் அமைதியாக வெளிப்படுகின்றது – நீங்கள் அதை உணராமல்கூட இருக்கலாம். அடிக்கடி அவர் நம்மை ஒரு ***'அமர்ந்த மெல்லிய சத்தத்தில்'***[14] தூண்டுவார்.

கிறிஸ்துவைப்போல நடிக்க முயற்சிப்பதால், நம்மில் கிறிஸ்துவின் சாயல் உருவாக முடியாது; அவர் நம்மில் வாசம் செய்வதாலேயே அது நடைபெறும். நம்மூலம் கிறிஸ்து வாழ நாம் இடங்கொடுக்கின்றோம். *"கிறிஸ்து உங்களில் வாசஞ்செய்கின்றார்; இதுவே இரகசியம்."*[15] இது நிஜ வாழ்க்கையில் எப்படி சாத்தியமாகின்றது? நமது தெரிந்தெடுப்புகளின் மூலம்; பல சூழ்நிலைகளில், சரியானதைச் செய்வதை நாம் தெரிந்து கொண்டு, அதைச் செய்வதற்குத் தேவையான வல்லமை, அன்பு, விசுவாசம், ஞானம் இவற்றைத் தேவ ஆவியானவர் நமக்குத் தருவாரென்று நம்புகின்றோம். தேவனுடைய ஆவியானவர் நமக்குள்ளிருப்பதால், நாம் கேட்டவுடன்தானே இந்தக் காரியங்கள் நமக்குக் கிடைக்கின்றன.

நாள் இருபத்திரண்டு: ***கிறிஸ்துவைப் போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப் பட்டீர்கள்***

நாம் பரிசுத்த ஆவியானவரின் கிரியையுடன் ஒத்துழைக்க வேண்டும். ஒரு முக்கியமான சத்தியம் வேதாகமம் முழுவதும் மீண்டும் மீண்டும் சித்தரிக்கப்படுவதை நாம் காணலாம். நீங்கள் விசுவாச எட்டு எடுத்து வைத்த ***உடன்தானே,*** அந்த வினாடியே, பரிசுத்த ஆவியானவர் தமது வல்லமையை அருளுகின்றார். யோசுவா, கடக்க முடியாத தடையை எதிர்கொள்ள வேண்டியதிருந்தபோது, யோர்தான் நதியில் புரண்டு வந்த வெள்ளம், ஆசாரியர்கள் கீழ்ப்படிதலுடனும், விசுவாசத்துடனும், நீரில் ***இறங்கியவுடனே*** பின்னிட்டுத் திரும்பியது.[16] கீழ்ப்படிதல் தேவ வல்லமையைத் திறந்துவிடுகின்றது.

நீங்கள் முதலில் செயல்பட வேண்டுமென்று தேவன் காத்திருக்கின்றார். நீங்கள், வலுவடைந்து நம்பிக்கையடையும் உணர்வு வரும்வரை காத்திருக்க வேண்டாம். உங்கள் பலவீனத்தில் முன்னேறுங்கள்; உங்கள் பயங்கள் மற்றும் உணர்வுகளுக்கு மத்தியிலும் சரியான காரியத்தைச் செய்யுங்கள். இப்படித்தான் நீங்கள் பரிசுத்த ஆவியானவருடன் ஒத்துழைக்க முடியும்; இப்படித்தான் உங்கள் குணம் விருத்தியடையும்.

ஆவிக்குரிய வளர்ச்சியை, வேதாகமம் ஒரு விதைக்கு, கட்டடத்துக்கு மற்றும் பிறந்து வளரும் குழந்தைக்கு ஒப்பிடுகின்றது. விதைகள் நடப்பட்டு, பண்படுத்தப்பட வேண்டும்; கட்டடங்கள் கட்டப்பட வேண்டும்; அவை அப்படியே தோன்றி விடுவதில்லை; குழந்தைகள் வளர்ச்சியடைய, சாப்பிட்டு, உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

உங்கள் இரட்சிப்புக்கு எந்தவித உங்களுடைய முயற்சியும் தேவைப்படாமலிருக்கையில், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு முயற்சி அதிகம் தேவை. புதிய ஏற்பாட்டில் குறைந்தது எட்டு முறைகள், இயேசுவைப்போல வளர்ச்சியடைய, ***'எல்லா முயற்சியையும் எடுங்கள்'***[17] என்று கூறப்பட்டுள்ளது. அது தானாக நிகழுமாறு நீங்கள் அப்படியே உட்கார்ந்து காத்திருக்க முடியாது.

எபேசியர் 4:22–24ல், கிறிஸ்துவைப்போலாவதற்கு தேவையான நம்முடைய மூன்று பொறுப்புகளைக் குறித்துப் பவுல் விளக்குகின்றார். முதல் பொறுப்பு: பழைய வழிகளை விட்டுவிடுவதை நாம் தெரிந்து கொள்ளவேண்டும். ***''முந்தின நடக்கைக்குரிய அனைத்தையும் களைந்து போட வேண்டும். அது மோசம் போக்கும் இச்சைகளால் கெட்டுப் போவது. அதை விட்டுவிட வேண்டும்.''***[18]

உங்களது பழக்க வழக்கங்களின் கூட்டுத்தொகையே, உங்கள் குணாதிசயமாக இருக்கின்றது.

இரண்டாவது, நமது சிந்தனைகள் மாற வேண்டும். ***"ஆவியானவர் உங்கள் உள்ளத்தில் புதிய சிந்தை தர இடங்கொடுக்க வேண்டும்."***[19] நாம், 'நமது உள்ளம் புதிதாகின்றதினால்', மறுரூபமாகின்றோம்'[20] என்று வேதம் கூறுகின்றது. மறுரூபமாகுதலுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்க பதம் 'மெட்டாமார்பாசிஸ்' (ரோமர் 12:2, 2 கொரிந்தியர் 3:18லும், பயன்படுத்தப்பட்டுள்ளது). ஒரு கம்பளிப் புழு, வண்ணத்துப்பூச்சியாக மாறும்போது ஏற்படும் மாறுதல்களைக் குறிக்க இப்பதம் பயன்படுத்தப்படுகின்றது. இது, நமது எண்ணங்களை தேவன் வழிநடத்துமாறு ஒப்புக்கொடுத்து விட்டால், ஆவிக்குரிய பிரகாரம் நமக்கு என்ன நடக்கின்றதென்பதைக் காண்பிக்கும் ஒரு அழகான சித்திரம்.

உள்ளேயிருந்து அப்படியே வெளிப்புறமாக மாறுதலடைகின்றோம். அதிக பொலிவு பெறுகின்றோம்; புதிய உயரங்களில் பறந்து செல்ல விடுதலையாக்கப்படுகின்றோம்.

மூன்றாவது, நாம் கிறிஸ்துவின் குணாதிசயங்களை, தேவனுக்குரிய பழக்க வழக்கங்களை வளர்ப்பதன் மூலம் 'தரித்துக் கொள்ள' வேண்டும். உங்கள் குணாதிசயம், முக்கியமாக உங்கள் பழக்க வழக்கங்களின் மொத்தம் – *வழக்கமாக* நீங்கள் எப்படி நடந்து கொள்ளுவீர்களோ, அந்த உண்மையான நிலை. ***"மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகத் தரிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுங்கள்"***[21] என்று வேதம் கூறுகின்றது.

தேவன் நம்மை உருவாக்க, தமது வார்த்தை, மக்கள் மற்றும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துகின்றார். குண வளர்ச்சிக்கு இம்மூன்றும் இன்றியமையாதவை. தேவனுடைய வார்த்தை, நாம் வளர ***தேவையான சத்தியத்தைத்*** தருகின்றது; வளருவதற்கு ***வேண்டிய ஆதரவை*** தேவனுடைய பிள்ளைகள் தருகின்றார்கள்; கிறிஸ்துவின் சாயலை நடைமுறைப்படுத்த ***தேவையான சுற்றுப்புறச் சூழ்நிலையை*** சந்தர்ப்பங்கள் தருகின்றன. நீங்கள் தேவனுடைய வசனத்தை வாசித்துக் கற்று வாழ்க்கையில் பிரயோகித்தால், ஒழுங்காகப் பிற விசுவாசிகளுடன் தொடர்பு கொண்டால், கஷ்ட சூழ்நிலைகளில் தேவனை நம்பக் கற்றுக் கொண்டால், நிச்சயமாக நீங்கள் இயேசுவைப்போல மாறுவீர்களென்று நான் உறுதி கூறுகின்றேன். வருகின்ற அத்தியாயங்களில், இந்த வளர்ச்சிக்குத் தேவையான ஒவ்வொரு காரியத்தையும் நாம் பார்க்கலாம்.

வேத வாசிப்பும், ஜெபமும் இருந்தால் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு போதுமென்று அநேக மக்கள் எண்ணிக்கொள்ளுகின்றனர். ஆனால், வாழ்க்கையிலுள்ள சில பிரச்சனைகளை வெறும் வேதவாசிப்பு, ஜெபத்தால் மட்டுமே ஒரு நாளும் தீர்த்து வைக்க முடியாது; தேவன் மக்களைப் பயன்படுத்துகின்றார். அற்புதங்கள் செய்வதைவிட, மக்கள் மூலம் கிரியை செய்வதையே தேவன் அதிகமாக விரும்புகின்றார்; அப்பொழுதுதான் நாம் ஐக்கியத்திற்காக ஒருவர்மீது ஒருவர் சார்ந்துகொள்ளுவோம். நாம் ஒன்று சேர்ந்து வளர்ச்சியடைவதையே தேவன் விரும்புகின்றார்.

அநேக மதங்களில், மலையுச்சிகளிலுள்ள மடங்களில், பிற மக்கள் தொடர்பின்றி, தங்களையே தனிமைப்படுத்திக் கொள்ளுபவர்களை ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்த பரிசுத்தவான்களாகக் கருதுகின்றார்கள்; ஆனால், இது ஒரு தவறான அபிப்பிராயம். தனித்த தனி மனிதரின் முயற்சி, ஆவிக்குரிய முதிர்ச்சி அல்ல; நீங்கள் பிரிக்கப்பட்ட தனி நிலையில் கிறிஸ்துவின் சாயலை அடைய முடியாது; மற்ற மக்களுடன் கலந்து, அவர்களுடன் உரையாட வேண்டும். நீங்கள் ஒரு சபை மற்றும் சமுதாயத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். ஏன்? ஏனெனில், இயேசுவைப்போல நேசிப்பதுதான், நேசிக்கக் கற்றுக்கொள்ளுவதுதான் – உண்மையான ஆவிக்குரிய முதிர்ச்சியாகும்; அதைப் பிற மக்கள் தொடர்பில்லாமல் நீங்கள் பயிற்சி செய்யவே முடியாது. எல்லாம் அன்பைப் பொருத்தது – தேவனையும் பிறரையும் நேசித்தல்.

கிறிஸ்துவைப்போலாகுதல் என்பது நீண்ட காலம் எடுக்கும் ஒரு மெதுவான வளர்ச்சி முறை. ஆவிக்குரிய முதிர்ச்சி நொடிப்பொழுதில், தானாக ஏற்படுவதல்ல; அது, உங்கள் வாழ்நாள் முழுவதும் நடைபெற வேண்டிய படிப்படியான, முன்னேறும் வளர்ச்சி. இந்த வளர்ச்சிமுறையை குறித்து ***"கிறிஸ்துவைப்போல நாம் முதிர்ச்சியடையும் வரை இது தொடரும்; நாம் பூரணமாக அவரைப்போலாவோம்"***[22] என்று பவுல் கூறுகின்றார்.

நீங்கள் இப்பொழுது ஒரு தொடர்நிலை ஓட்டத்தில் இருக்கின்றீர்கள். இயேசுவின் குணத்தைப் பெறும் உங்கள் ஆவிக்குரிய மறுரூபம், உங்கள் வாழ்க்கையின் இறுதிவரை தொடரும்; அப்படியிருந்தும், அது இந்தப் பூமியில் பூரணமடையாது; அது இயேசு திரும்பி வரும்போது அல்லது நீங்கள் பரலோகம் போய்ச் சேர்ந்த பின்னரே முடிவடையும். அந்த நிலையில் பூரணமாகாதிருக்கும் உங்கள் குணத்தின் முடிவடையாத பகுதி மூடப்படும். நாம் இறுதியாக இயேசுவை முழுமையாகப் பார்க்கும்போது, நாமும் முழுமையாக அவரைப்போலிருப்போம். ***"கிறிஸ்து வரும்போது நாம் எப்படியிருப்போமென்று கற்பனைகூடச் செய்ய முடியாது; ஆயினும், அவர் இருக்கின்ற வண்ணமாகவே அவரைத் தரிசிப்பதால் நாம் அவரைப்போலவே இருப்போமென்று அறிந்திருக்கின்றோம்"***[23] என்று வேதம் கூறுகின்றது.

மற்றெந்த காரியத்தையும்விட, உங்கள் குணத்தைக் கட்டியெழுப்புவதில்தான் தேவன் அதிக ஆர்வம் கொண்டுள்ளாரென்ற எளிய உண்மையை நாம் அலட்சியப் படுத்துவதால்தான் கிறிஸ்தவ வாழ்க்கையில் அதிக குழப்பம் ஏற்படுகின்றது. 'நான் என்ன வேலையைத் தெரிந்து கொள்ளுவது?' என்பது போன்ற சில குறிப்பிட்ட பிரச்சனைகளில் தேவன் அமைதியாக இருப்பதுபோல தோன்றும்போது நாம் கவலைப்படுகின்றோம். உண்மை என்னவெனில், உங்கள் வாழ்க்கைக்காக ***எத்தனையோ விதமான*** வேலைகள் தேவ சித்தப்படி இருக்கலாம். தேவன் கவலைப்படுவதெல்லாம், நீங்கள் எதைச் செய்தாலும் அதைக் கிறிஸ்துவின் சாயலுடையதாக, (தேவ மகிமைக்காக) செய்ய வேண்டும்.[24]

நீங்கள் செய்யும் காரியங்களைவிட, நீங்கள் யாராக இருக்கின்றீர்கள் என்பதில்தான் தேவன் அதிக ஆர்வமுள்ளவராயிருக்கின்றார்.

நீங்கள் செய்யும் காரியங்களைவிட நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றீர்களென்பதைக் குறித்துத்தான் தேவன் அதிக ஆர்வம் கொண்டிருக்கின்றார். நாம் ***மனித ஜென்மங்கள்;*** (human beings) ***மனித செயல்கள் அல்ல;*** (not human doings) உங்கள் தொழிலைவிட, உங்கள் குண நலத்தில் தேவன் அதிக அக்கறைகொள்ளுகின்றார்; ஏனெனில், உங்கள் வேலையல்ல, குணம்தான் நித்தியத்திற்குட்படும்.

"உங்கள் கவனத்தை உங்கள் கலாச்சாரத்திலல்ல, தேவன் மீது வையுங்கள்; நீங்கள் உள்ளேயிருந்து மாற்றமடைவீர்கள்; உங்களைச் சூழ இருந்து, உங்களை முதிர்ச்சியடைய விடாமல் கீழே இழுக்கும் கலாச்சாரத்தைவிட, தேவன் உங்களிலிருக்கும் சிறப்பானதை வெளியே கொண்டுவந்து, நன்கு உருவாக்கப்பட்ட முதிர்ச்சியுள்ளவர்களாக்குகின்றார்"[25] என்று வேதம் எச்சரிக்கின்றது. மற்ற உடன்வேலையாட்கள், பெற்றோர், கலாச்சாரம் போன்றவை தங்கள் சாயலுக்கு ஏற்ப உங்களை உருவாக்க முயற்சி எடுக்கும். நீங்கள், அதற்கு எதிர் நிற்கும் தீர்மானத்தை இயேசுவைப் போல மாற எடுக்க வேண்டும்.

இன்றிருக்கும் கிறிஸ்தவப் புத்தகங்களை ஒரு உடனடி ஆய்வுசெய்து பார்த்தால், தேவனுக்காக ஜீவிப்பதைவிடவும் நான் எனக்காக என்னத்தைப் பெற்றுக்கொள்ளலாம், என் வாழ்க்கையை எவ்வாறு நன்றாக அமைத்துக்கொள்ளலாம் போன்ற காரியங்களே அவற்றில் அடங்கியிருப்பதை கூடுதலாக நாம் காணக் கூடியதாகயிருக்கின்றது. அது சீஷத்துவமல்ல, அது தண்ணீரில் தன்னைத்தானே ரசித்துப் பார்ப்பதுபோலாகும். நமக்கு ஒரு சௌகரியமான, வாழ்க்கையை அமைத்துக் கொடுப்பதற்காக இயேசுவானவர் சிலுவையில் மரிக்கவில்லை. அவரது நோக்கம் அதைவிடவும் மிகவும் ஆழமானது. நம்மைப் பரலோகத்திற்கு எடுத்துச் செல்லுவதற்கு முன், அவர் நம்மை அவரைப்போல மாற்ற விரும்புகின்றார். இதுதான் நமது மாபெரும் பாக்கியம். உடனடியாக நாம் நிறைவேற்ற வேண்டிய ஒரு பொறுப்பு மற்றும் நமது இறுதி இலக்கு.

நாள் இருபத்திரண்டு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் கிறிஸ்துவைப்போல மாற சிருஷ்டிக்கப்பட்டேன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"ஆவியாயிருக்கின்ற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுருபப்படுகின்றோம்."*** 2 கொரிந்தியர் 3:18 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் வாழ்க்கையின் எந்தப் பகுதியில் நான் கிறிஸ்துவைப்போலாக, இன்று ஆவியானவரின் வல்லமையை நாட வேண்டும்?

23

நாம் எவ்வாறு வளருகின்றோம்?

***நாம் கிறிஸ்துவைப்போல எல்லாவற்றிலும்
வளர வேண்டுமென்று
தேவன் விரும்புகின்றார்.***
எபேசியர் 4:15 (புதிய மொழியாக்கம்)

***நாம் குழந்தைகளாகவேயிருக்கும்படி ஏற்படுத்தப்
பட்டவர்களல்ல.***
எபேசியர் 4:14 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் வளரவேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்.

நீங்கள் முதிர்ச்சி பெற்று, இயேசு கிறிஸ்துவின் குணநலன்களுடன் வளர்ச்சியடைய வேண்டுமென்பதுதான், உங்களைப் பற்றிய பரம பிதாவின் இலக்கு. பல்லாயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் ***வயதில் முதிர்ந்தாலும், வளர்ச்சியடைவதேயில்லை.*** அவர்கள் நிரந்தரமாக ஆவிக்குரிய குழந்தைகளாக, குழந்தைக்குரிய காலணி, ஆடைகளிலேயே இருக்கின்றார்கள். காரணம், அவர்கள் வளர்ச்சியடையும் ***நோக்கமே*** இல்லாதிருக்கின்றார்கள்.

ஆவிக்குரிய வளர்ச்சி தானாக ஏற்படுவதில்லை. அது மனப்பூர்வமான ஒரு அர்ப்பணிப்பு. நீங்கள் வளர்ச்சியடைய ***விரும்ப வேண்டும்,*** வளர்ச்சியடைய ***முடிவெடுக்க வேண்டும், முயற்சியெடுக்க வேண்டும், விடாப்பிடியாக வளருவதைப் பற்றிக் கொள்ள வேண்டும்.*** கிறிஸ்துவைப்போல மாறும் வழிமுறை – சீஷத்துவம் – எப்பொழுதுமே ஒரு தீர்மானத்தில்தான்

ஆரம்பிக்கின்றது. இயேசு நம்மை அழைக்கின்றார், நாம் பதில் கொடுக்கின்றோம். *"நீ என் சீஷனாயிரு" என்று இயேசு அவனிடம் கூறினார். ஆகவே, மத்தேயு எழுந்து அவர்பின் சென்றான்.*[1]

முதல் சீஷர்கள் இயேசுவைப் பின்பற்றுவதைத் தெரிந்து கொண்டபோது தங்கள் தீர்மானத்தில் என்னென்ன அடங்கியிருக்கின்றதென்று அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் இயேசுவின் அழைப்புக்கு அப்படியே செவி கொடுத்தார்கள். ஆரம்பிப்பதற்கு அது ஒன்றுதான் தேவை; சீஷனாக ஒரு தீர்மானத்தை எடுத்தல்.

நீங்கள் செய்யும்படி தெரிந்து கொள்ளும் அர்ப்பணிப்பைப்போல வேறெதுவும் உங்கள் வாழ்க்கையை, அந்த அளவுக்கு, உருவாக்க முடியாது. உங்கள் அர்ப்பணிப்பு உங்களை உருவாக்கவோ அல்லது அழிக்கவோ கூடும்; எப்படிச் செய்தாலும் அது உங்களை வரையறுக்கும்; நீங்கள் எதற்கு உங்களை அர்ப்பணிக்கின்றீர்கள் என்று என்னிடம் கூறுங்கள்; இன்னும் இருபது வருடங்களில் நீங்கள் என்னவாயிருப்பீர்களென்று நான் கூற முடியும். நாம் எதற்கு நம்மை அர்ப்பணிக்கின்றோமோ, அப்படியே மாறிவிடுவோம்.

இந்த அர்ப்பணிக்கும் கட்டத்தில்தான், தங்கள் வாழ்க்கைக்கான நோக்கத்தை, அநேக மக்கள் இழந்துபோகின்றார்கள். அநேகர் எதற்குமே தங்களை அர்ப்பணிக்கப் பயந்து, வாழ்க்கையினூடே அப்படியே கடந்து செல்லுகின்றார்கள். வேறு சிலர், அரைகுறையாக அர்ப்பணித்துவிட்டு, சாதாரண வாழ்க்கைக்கும் மனச்சோர்வுக்கும் ஆளாகி விடுகின்றார்கள். இன்னும் சிலர் உலக இலக்குகளுக்குத் தங்களை முற்றிலுமாக அர்ப்பணித்துக் கொண்டு, பெயர்ப் பிரஸ்தாபம் அல்லது செல்வச் செழிப்படைய வேண்டுமென்ற அர்ப்பணிப்பு செய்துவிட்டு, ஏமாற்றமும் மனக்கசப்புமடைகின்றனர். எதைத் தெரிந்தெடுத்தாலும் அதற்கு நித்தியமான விளைவுகளுண்டு; ஆகவே, ஞானமாகத் தெரிந்தெடுத்தல் அவசியம். ***"நம்மைச் சுற்றியுள்ள யாவும் உருகிப்போகுமாதலால், நீங்கள் எப்படிப்பட்ட பரிசுத்தமும், தேவனுக்கேற்ற நடத்தையுமுள்ளவர்களாயிருக்க வேண்டும்!"***[2] என்று பேதுரு எச்சரிக்கின்றார்.

தேவனுடைய பங்கும் உங்கள் பங்கும். கிறிஸ்துவைப் போன்ற தெரிந்து கொள்ளுதல் செய்து, அந்தத் தெரிந்தெடுப்புகளை நிறைவேற்ற தேவனுடைய ஆவியில் சார்ந்திருப்பதன் விளைவாகத்தான், கிறிஸ்துவின் சாயல் உருவாகும். கிறிஸ்துவைப் போலாக வேண்டுமென்று திட்டவட்டமாகத் தீர்மானமெடுத்த பின்னர் நீங்கள் புதிய வழிகளில் நடந்து கொள்ள ஆரம்பிக்க வேண்டும். சில பழைய பழக்க வழக்கங்களை விட்டுவிட்டு, சில புதிய பழக்க வழக்கங்களை விருத்தி செய்து எதை மாற்ற வேண்டுமோ அதை மனப்பூர்வமாக மாற்ற வேண்டும். இந்த மாறுதல்களில் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு உதவி செய்வார் என்ற நிச்சயத்தோடு நீங்கள் செயல்படலாம். ***"தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி உங்களில் கிரியை செய்கின்றவராயிருக்கின்றபடியால், பயத்தோடும், நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்"***[3] என்று வேதம் கூறுகின்றது.

> ***நாம் எதற்கு நம்மை அர்ப்பணிக்கின்றோமோ அப்படியே நாமும் மாறிவிடுவோம்.***

ஆவிக்குரிய வளர்ச்சியின் இரு பகுதிகளை இந்த வசனம் காண்பிக்கின்றது. ***"பிரயாசப்படுதல்"*** உங்கள் பொறுப்பு; ***"கிரியை செய்தல்"*** தேவனுடைய பங்கு. ஆவிக்குரிய வளர்ச்சி உங்களுக்கும், பரிசுத்த ஆவியானவருக்குமுள்ள கூட்டுமுயற்சி. தேவனுடைய ஆவியானவர் நம்மில் மட்டுமல்ல, நம்முடன் கிரியை செய்கின்றார்.

விசுவாசிகளுக்கு எழுதப்பட்ட இந்த வசனம், எப்படி இரட்சிக்கப்பட வேண்டுமென்பதைப் பற்றியதல்ல; எப்படி வளருவதென்பதைப் பற்றியது. உங்கள் இரட்சிப்புக்காக கிரியை செய்யுங்கள் என்று அது கூறவில்லை; ஏனெனில், இயேசு ஏற்கனவே செய்துவிட்டதுடன் நீங்கள் எதையுமே கூட்ட முடியாது. சரீரத்திற்கான உடற்பயிற்சியில், நீங்கள் உங்கள் சரீரத்தை வளர்க்க பயிற்சி எடுக்கின்றீர்களே யொழிய ஒரு உடலைப் பெறுவதற்காக பயிற்சி செய்கிறதில்லை.

ஒரு புதிரை நீங்கள் 'விடுவிக்க' முயற்சி செய்யும்போது, புதிருக்குரிய துண்டுகள் யாவும் ஏற்கனவே இருக்கின்றன; நீங்கள் அதைச்

சரியாகப் பொருத்துவதுதான் உங்கள் வேலை. விவசாயிகள், நிலத்தில் வேலை செய்யும்போது, அந்த நிலத்தை வாங்குவதற்காக அவர்கள் பிரயாசப்படவில்லை. ஏற்கனவே இருக்கின்றதை விருத்தி செய்யவே அவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள். தேவன் உங்களுக்கு ஒரு புது ஜீவன் கொடுத்திருக்கின்றார். அதை *'பயத்தோடும், நடுக்கத்தோடும்'* வளர்ப்பது உங்கள் பொறுப்பு. அதாவது, உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியை நீங்கள் முக்கியமானதாக எடுத்துக் கொள்ள வேண்டும். தங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியைக் குறித்து மக்கள் மிகச் சாதாரணமாக எடுத்துக் கொண்டால், (நாம் 4ஆம் 5ஆம் அத்தியாயங்களில் பார்த்தபடி) அவர்கள் அதன் நித்தியத்துவ தன்மையைப் புரிந்து கொள்ளவில்லையென்றுதான் அர்த்தம்.

தானாக இயங்கும் உங்கள் இயந்திர விசையை மாற்றிக் கொள்ளுதல் (சிந்தையில் மாற்றம்). உங்கள் வாழ்க்கையை மாற்ற, சிந்திக்கும் விதத்தை நீங்கள் மாற்ற வேண்டும். நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்குப் பின்னாக ஒரு சிந்தனை இருக்கும். ஒவ்வொரு நடத்தையும் ஒரு நம்பிக்கையால் தூண்டப்படுகின்றது; ஒவ்வொரு செயலும் ஒரு மனப்பான்மையினால் தூண்டப்படுகின்றது; மன இயல் வல்லுநர்கள் இதைப் புரிந்து கொள்ளுவதற்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே, தேவன் இதை வெளிப்படுத்தியுள்ளார். *"உங்கள் சிந்தனைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; உங்கள் வாழ்க்கை உங்கள் எண்ணங்களால் உருவாக்கப்படுகின்றது."*[4]

ஒரு ஏரியில், விசைப் படகொன்றில் கிழக்கே போவதற்குத் தானாக இயங்கும் இயந்திர விசை பொருத்தப்பட்டுப் போவதாகக் கற்பனை செய்து பாருங்கள். மேற்கே அதன் தலையைத் திருப்ப விரும்பினால், படகின் திசையை நீங்கள் இரண்டு விதங்களில் மாற்றக் கூடும். கிழக்கே என்று திட்டமிட்டுப் பொருத்தப்பட்டிருக்கும் தானியங்கி விசைக்கு எதிராக வலுக்கட்டாயமாகப் படகைத் திருப்ப, திசை அதன் சுக்கானைச் சுழற்ற வேண்டும்; உங்கள் உறுதியான தீர்மானத்தால் (will power) தானியங்கி இயந்திர விசையை நீங்கள் மேற்கொள்ளலாம்; ஆனால், இடைவிடாத எதிர்ப்பை உணருவீர்கள். உங்கள் பயணங்களில் நேரம் செல்லச் செல்ல, அழுத்தத்தினால் வலி எடுக்கும்; நீங்கள் படகின் சுக்கானிலிருந்து கரத்தை

எடுப்பீர்கள். உடன்தானே படகு, ஏற்கனவே திட்டமிட்டு வைக்கப்பட்டிருந்ததுபோல கிழக்கே திரும்பி விடும்.

உங்கள் மனோபலத்தால் உங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க நீங்கள் முயற்சித்தால் இப்படித்தான் நடக்கும். நீங்கள், "நான் குறைவாகச் சாப்பிட என்னைக் கட்டாயப்படுத்திக் கொள்ளுவேன்; உடற்பயிற்சி செய்வேன்; ஒழுங்கீனமாகப் பிந்தி வருவதை விட்டு விடுவேன்" என்று கூறலாம். ஆனால், அது இடைவிடாத மன அழுத்தத்தை உங்களுக்கு கொண்டுவரும். ஏனெனில், அடிப்படை வேர்க் காரணத்துடன் நீங்கள் இன்னும் இடைபடவில்லை. மாறுதல் இயற்கையானதாகத் தெரியவில்லை; நாளடைவில் நீங்கள் விட்டு விடுகின்றீர்கள்; சாப்பாட்டுக் கட்டுப்பாட்டைத் தளர்த்துகின்றீர்கள்; உடற்பயிற்சியை நிறுத்துகின்றீர்கள்; பழைய வழிகளுக்கு விரைந்து திரும்புகின்றீர்கள்.

இதைவிட நல்ல, ஒரு எளிய வழி இருக்கின்றது; உங்கள் தானியங்கி இயந்திர விசையை மாற்றுங்கள் – அதாவது, நீங்கள் நினைக்கும் விதத்தை மாற்றுங்கள். ***"உங்கள் மனம் மறுரூபமாவதால், தேவன் உங்களைப் புது சிருஷ்டியாக்க இடங் கொடுங்கள்"***[5] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் முதற்படி, நீங்கள் சிந்திக்கும் விதத்தை மாற்றுதல். மாறுதல் எப்போதும் முதலில் உங்கள் மனதில் ஆரம்பிக்க வேண்டும். நீங்கள் சிந்திக்கும் முறை, நீங்கள் உணருவதைத் தீர்மானிக்கும்; நீங்கள் உணரும்முறை, நீங்கள் செயல்படும் முறையைப் பாதிக்கும். ***"உங்கள் சிந்தை, மனப்பான்மையில் ஒரு ஆவிக்குரிய புதுப்பித்தல் இருக்க வேண்டும்***[6] என்று பவுல் கூறினார்.

நாள் இருபத்து மூன்று:

நாம் எவ்வாறு வளருகின்றோம்?

கிறிஸ்துவைப்போலாக நீங்கள் கிறிஸ்துவின் சிந்தையை வளர்க்க வேண்டும். இந்த மனமாறுதலைப் புதிய ஏற்பாடு மனந்திரும்புதல் எனக் கூறுகின்றது. கிரேக்க பதம் எழுத்தின்படி 'உன் மனதை மாற்றுதல்' என்று பொருள்படும். தேவன் எப்படி நினைக்கின்றாரோ அதை உங்கள் சிந்தையாக நீங்கள் சொந்தமாக்கிக்கொள்ளும்போது – உங்களைப் பற்றிய, பாவம், தேவன், மற்ற மக்கள், வாழ்க்கை, உங்கள் எதிர்காலம்,

மற்றக் காரியங்கள் எல்லாவற்றையும் பற்றிய உங்கள் எண்ணங்களை மாற்றிக்கொள்ளும்போது – நீங்கள் கிறிஸ்துவின் கண்ணோட்டத்தைப் பெறுகின்றீர்கள்.

"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக் கடவதென்று"[7] நாம் கட்டளையிடப்பட்டிருக்கின்றோம். இதைச் செய்வதற்கு இரு பகுதிகளுண்டு; மனம் மாறும் முதல் பகுதியில், முதிர்ச்சியற்ற எண்ணங்களை எண்ணுவதை நிறுத்திவிட வேண்டும்; அவை சுயத்தை மையமாகக் கொண்டு, தன்னையே நாடுவதாக இருக்கும். *"குழந்தைக்கேற்ற சிந்தையை விட்டுவிடுங்கள். தீமை செய்வதைப் பொருத்தமட்டில் குழந்தைகளாயும், சிந்தனையில் வளர்ச்சியடைந்தவர்களாயும் இருங்கள்"*[8] என்று வேதம் கூறுகின்றது. குழந்தைகள், இயற்கை சுபாவத்தின்படி முற்றிலும் தன்னலமாயிருப்பார்கள். அவர்கள் தங்களையும் தங்கள் தேவையையுமே நினைப்பார்கள். அவர்களால் கொடுக்க இயலாது; பெற்றுக் கொள்ள மட்டுமே முடியும். இது முதிர்ச்சியற்ற சிந்தனை. அநேக மக்கள் இந்தவித சிந்தனைக்கப்பால் செல்லுவதே இல்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. தன்னலமான சிந்தனைதான் பாவ நடத்தைக்கு மூல காரணமென்று வேதம் கூறுகின்றது. *"தங்கள் பாவ தன்மையைப் பின்பற்றி வாழுகின்றவர்கள், தங்கள் பாவ சுபாவம் விரும்புவதைப் பற்றியே சிந்திப்பார்கள்."*[9]

நீங்கள் சிந்திக்கும் விதம் நீங்கள் உணரும் விதத்தைத் தீர்மானிக்கும்; நீங்கள் உணரும் விதம் நீங்கள் செயல்படும் விதத்தைப் பாதிக்கும்.

இரண்டாவது பகுதி, *முதிர்ச்சியின்* நிலை. இயேசுவைப்போல சிந்திக்க *துவங்குதல்*. அதாவது, தன்னைக் குறித்தே எண்ணாமல், பிறரை குறித்தே சிந்தித்தல்...

உண்மையான அன்பு என்றால் என்ன என்ற தனது பெரிய அத்தியாயத்தில், பவுல், பிறரைப் பற்றி சிந்தித்தல் முதிர்ச்சியின் அறிகுறி என்று கூறி முடிக்கின்றார் *"நான் குழந்தையாயிருந்தபோது குழந்தையைப்போல சிந்தித்தேன்; பேசினேன்; நான் புருஷனான போதோ, குழந்தைக்கேற்றவைகளை ஒழித்து விட்டேன்."*[10]

எந்த அளவுக்கு வேத அறிவும், வேதத்திற்கடுத்த கொள்கையறிவுமிருக்கின்றதோ, அந்த அளவுக்கு அந்த நபர் ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்து விட்டதாக இன்று பலர் எண்ணிக் கொள்ளுகின்றார்கள். அறிவு, முதிர்ச்சியின் ஒரு அளவுகோல் என்றாலும், அதுவே, முதிர்ச்சியின் முழுமையாகாது; கிறிஸ்தவ வாழ்க்கை என்பது விசுவாச அறிக்கை, பாவ உணர்வு இவற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது. அது நடத்தையும், குணமும் உள்ளடக்கியது. நமது விசுவாச அறிக்கைக்கும், செயல்களுக்கும் பொருத்தமிருக்க வேண்டும்; நமது நம்பிக்கைகள் கிறிஸ்துவைப்போன்ற நடத்தையால் தாங்கப்பட வேண்டும்.



கிறிஸ்தவம் ஒரு மதமோ, தத்துவக் கொள்கையோ அல்ல; அது ஒரு உறவு; ஒரு வாழ்க்கை முறை. அந்த வாழ்க்கைமுறையின் மையம் பிறரைக் குறித்து சிந்தித்தல்; இயேசு செய்ததைபோல, நம்மையல்ல, பிறரைக் குறித்து எண்ண வேண்டும். ***"நாம் அவர்களுடைய நலனை எண்ணி, அவர்களை மகிழ்விப்பதைச் செய்து அவர்களுக்கு உதவ வேண்டும்; கிறிஸ்துவும் தன்னைத் தானே சந்தோஷப்படுத்த முயற்சிக்கவில்லையே"***[11] என்று வேதம் கூறுகின்றது.

கிறிஸ்துவைப்போலிருப்பதன் இதயப் பகுதி, பிறர் நலன் கருதுதல். அதுவே, ஆவிக்குரிய வளர்ச்சியின் சிறந்த ஆதாரம். இப்படிப்பட்ட சிந்தை இயற்கைக்கு விரோதமானது; கலாச்சாரத்திற்கு மாறுபட்டது; அபூர்வமானது; கடினமானது; அதிர்ஷ்டவசமாக நமக்கு உதவி இருக்கின்றது. ***"தேவன் நமக்குத் தமது ஆவியைக் கொடுத்திருக்கின்றார்; ஆகவே, உலகத்தார் சிந்திப்பதுபோல நாம் சிந்திப்பதில்லை."***[12] அடுத்து வரும் அத்தியாயங்களில் நாம் வளருவதற்குப் பரிசுத்த ஆவியானவர் பயன்படுத்தும் கருவிகளை நாம் காணலாம்.

நாள் இருபத்து மூன்று
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: வளர்ச்சியடைவதற்கு முடியாத காலம் என்று ஒன்று இல்லவே இல்லை.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"உங்கள் சிந்தையில் ஒரு முழுமையான மாற்றம் உண்டாகும்படி, தேவன் உங்களில் உள்ளான மறுரூபத்தை கட்டளையிடுவாராக. அப்பொழுது, தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று அறிவீர்கள்."*** ரோமர் 12:2

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் வழியில் சிந்திப்பதை, நான் என் வாழ்க்கையில் நிறுத்தி விட்டு, தேவனுடைய வழியில் சிந்திக்க ஆரம்பிக்க வேண்டிய ஒரு பகுதி, என் வாழ்வில் எந்தப் பகுதி**?**

24

சத்தியத்தின் மூலம் மறுரூபமாக்கப்படுதல்

மனுஷன் அப்பத்தை மாத்திரமல்ல; தேவனுடைய ஒவ்வொரு வார்த்தையையும் புசிக்க வேண்டும்.
மத்தேயு 4:4 (புதிய மொழியாக்கம்)

தேவனுடைய கிருபையுள்ள வார்த்தை அவர் உங்களை உருவாக்க விரும்பும் விதத்தில் உருவாக்கி, உங்கள் தேவைகளனைத்தையும் சந்திக்கும்.
அப்போஸ்தலர் 20:32 (புதிய மொழியாக்கம்)

சத்தியம் நம்மை மறுரூபமாக்குகின்றது.

பொய்களுக்குப் பதிலாக சத்தியத்தைக் கொண்டு வரும் முறைமைதான் ஆவிக்குரிய வளர்ச்சி. ***"சத்தியத்தால் அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உமது வசனமே சத்தியம்"***[1] என்று இயேசு ஜெபித்தார்.

பரிசுத்தமாகுதலுக்கு வெளிப்பாடு அவசியம். நம்மைத் தேவ குமாரனைப்போலாக்க, தேவ ஆவியானவர், தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துகின்றார். இயேசுவைப்போல மாறுவதற்கு, நாம் நமது வாழ்க்கையை அவர் வார்த்தையால் நிரப்ப வேண்டும். ***"வார்த்தையினால் நாம் ஒன்று கூட்டப்பட்டு, தேவன் நமக்காக வைத்திருக்கும் பணிக்கேற்ப உருவாக்கப்படுகின்றோம்"***[2] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுடைய வார்த்தை மற்ற வார்த்தைகளினின்று வேறுபட்டது; அது ஜீவனுள்ளது.[3] ***"நான் உங்களுக்குக் கூறிய வார்த்தைகள் ஆவியாயும், ஜீவனுமாயுமிருக்கின்றது"***[4] என்று இயேசு கூறினார். தேவன் பேசும்போது காரியங்கள் மாறுகின்றன. உங்களைச் சுற்றி

இருக்கும் படைப்புகள் எல்லாம் இருப்பதற்கு காரணம், ***"தேவன் அதைச் சொன்னார்."*** அவைகள் உண்டானது. தேவனுடைய வார்த்தையின்றி இன்று நீங்கள் உயிருடனிருக்கவும் முடியாது. ***"சத்திய வசனத்தினால் நமக்கு ஜீவன் கொடுக்க தேவன் முடிவு செய்தார்; தாம் உண்டாக்கின எல்லாவற்றையும்விட நாம் மிக முக்கியமானவர்களாயிருக்கும்படி அப்படிச் செய்தார்"***[5] என்று யாக்கோபு கூறுகின்றார். வேதாகமம், கொள்கைகளைக்கொண்டு வழிகாட்டும் புத்தகங்களை விட மிக மேலானது. தேவனுடைய வார்த்தை ஜீவனைப் பிறப்பிக்கின்றது; விசுவாசத்தை உண்டாக்குகின்றது; மாறுதல் ஏற்படுத்துகின்றது; சூழ்நிலைகளை மாற்றுகின்றது; மகிழ்ச்சியளிக்கின்றது; பகையை மேற்கொள்ளுகின்றது; சோதனையைத் தோற்கடிக்கின்றது; நம்பிக்கையை ஊட்டுகின்றது; வல்லமையை வெளியிடுகின்றது; நமது சிந்தையை சுத்திகரிக்கின்றது; காரியங்களை உண்டாகியிருக்கும்படி செய்கின்றது; நமது வருங்காலத்தை என்றென்றுமாக உறுதிப்படுத்துகின்றது! தேவனுடைய வார்த்தையின்றி நாம் வாழமுடியாது! அதை ஒரு சாதாரண காரியமாக ஒருபோதும் எடுத்துக்கொள்ளாதீர்கள். உங்கள் வாழ்க்கைக்கு உணவு போன்றது அது. நீங்கள் அதை அவ்வளவு முக்கியமானதாக கருத வேண்டும். ***"அவருடைய வாயின் வார்த்தைகளை நான் என் அனுதின உணவுபோல காத்துக் கொண்டேன்."***[6] என யோபு கூறினார்.

நம்மைத் தேவ குமாரனைப் போலாக்க, தேவனுடைய ஆவியானவர், தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துகின்றார்.

உங்கள் நோக்கத்தை நிறைவேற்ற நீங்கள் ***அவசியம்*** உட்கொள்ள வேண்டிய ஆவிக்குரிய சத்துணவு, தேவனுடைய வார்த்தை. அது நமது ஞானப்பால், அப்பம், திட உணவு, உணவுக்குப்பின் உண்ணும் இனிமையான, சுவையான உணவு[7] என்றெல்லாம் வேதம் விவரிக்கின்றது. ஆவிக்குரிய வளர்ச்சிக்கும், பெலனுக்கும் இந்த நான்கு வகையான உணவு, ஆவியானவர் தரும் உணவுத் திட்டமாகும். ***"நீங்கள் உங்கள் இரட்சிப்பில் வளரும்படி, களங்கமில்லாத ஆவிக்குரிய ஞானப்பாலின்மீது வாஞ்சையாக இருங்கள்"***[8] என்று பேதுரு நமக்குப் புத்தி கூறுகின்றார்.

தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருத்தல்

இன்று, என்றுமில்லாத அளவில் வேதாகமம் அச்சிடப்பட்டு வருகின்றது; ஆனால், புத்தக அலமாரியில் வைத்து பாதுகாக்கப்படும் வேதாகமம், வீண். எத்தனையோ ஆயிரக்கணக்கான விசுவாசிகள், ஆவிக்குரிய பசியின்மையால் பாதிக்கப்பட்டு, ஆவிக்குரிய ஊட்டச்சத்து இல்லாதபடியால், மரணமடையுமளவுக்குப் பட்டினியாக இருக்கின்றார்கள். இயேசுவின் ஆரோக்கியமான சீஷனாக இருக்க, தேவனுடைய வார்த்தையை உட்கொள்ளுவதற்கு நீங்கள் முதலிடம் கொடுக்க வேண்டும். அதையே இயேசு, '*நிலைத்திருத்தல்*' என்றார். ''*நீங்கள் என் வார்த்தையில் நிலைத்திருந்தால், நீங்கள் உண்மையாகவே என் சீஷராயிருப்பீர்கள்*''[9] என்று அவர் கூறினார். அன்றாட வாழ்வில், தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருப்பது என்பதில் மூன்று செயல்பாடுகள் அடங்கியுள்ளன.

நாம் அதன் அதிகாரத்தை ஒத்துக்கொள்ள வேண்டும். என் வாழ்க்கைக்குரிய கட்டளை தரும் அதிகாரமுள்ள வார்த்தையாக எனக்கு வேதாகமம் இருக்க வேண்டும். என் வாழ்க்கைப் பாதைக்கு வழி காட்டும் கருவியாக, ஞானமுள்ள தீர்மானமெடுக்க எனக்கு ஆலோசனை தருவதாக, எதையும் மதிப்பிட நான் பயன்படுத்தும் அளவுகோலாக அது எனக்கு இருக்க வேண்டும். என் வாழ்க்கையில் முதல் தீர்மானமும் கடைசி தீர்மானமும் வேத வசனமாகவே எப்போதுமிருக்க வேண்டும்.

நம்புவதற்குத் தகுதியற்ற அதிகாரங்கள் மீது நாம் சார்ந்து கொள்ளுவதால்தான், நாம் அநேக காரியங்களில் தொல்லைக்குள்ளாகின்றோம்.

கலாச்சாரம் (எல்லாரும் அப்படிச் செய்கின்றார்கள்), பாரம்பரியம் (நாங்கள் எப்போதும், வழக்கமாக அப்படிச் செய்கின்றோம்), நியாயரீதி (அது நியாயமாகத் தெரிந்தது) அல்லது உணர்ச்சிப்பெருக்கு (அது சரியானதாகத் தோன்றிற்று) ஆகிய இந்த நான்குமே மனுக்குலத்தின் வீழ்ச்சியில் குறைவுபட்டுப் போயிற்று. நம்மை ஒருபோதும் தவறான வழிக்குக் கொண்டு போகாமல் சரியான பாதையில் நடத்தும் ஒரு பரிபூரண தரம் வாய்ந்த அதிகாரம்

நமக்குத் தேவை. தேவனுடைய வசனம் மட்டுமே அந்த தேவையை சந்திக்கும். *"தேவனுடைய வசனம் புடமிடப்பட்டது"*[10] என்று சாலொமோன் நமக்கு நினைவுபடுத்துகின்றார். *"வேத வாக்கியங்களெல்லாம் தேவனால் அருளப்பட்டவை; போதிப் பதற்கும், சீர்திருத்துவதற்கும், கண்டித்து உணர்த்துவதற்கும், எப்படி வாழவேண்டுமென்று காண்பிப்பதற்கும் அவைகள் பயனுள்ளவை"*[11] என்று பவுல் விளக்குகின்றார்.

தனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களில் பில்லிகிரஹாம், வேதத்தின் அதிகாரம் பற்றியும், சில சம்பவங்கள் சரிதானா என்பது பற்றியும் எழுந்து வந்த சந்தேகங்களுடன் போராடிக் கொண்டிருந்தார். ஒரு நாள் நிலவொளியில் கண்ணீரோடு முழங்காற்படியிட்டு, தனக்குப் புரியாத குழப்பமான பகுதிகள் வேதாகமத்திலிருந்தபோதிலும், "இன்றிலிருந்து நான் என் ஊழியத்தின் ஒரே அதிகாரியாகவும், என் நம்பிக்கைக்குரியதாகவும் வேதத்தை மட்டுமே வைத்துக் கொள்ளுவேன்" என்று தேவனிடம் கூறினார். அன்றிலிருந்து பில்லிகிரஹாமின் வாழ்க்கை, வழக்கத்திற்கு மாறான வல்லமையையும், பயனுள்ளதாக ஆசீர்வாதத்தையும் பெற்றது.



உங்கள் வாழ்க்கையின் இறுதியான அதிகாரி எது (யார்) என்பதை முடிவு செய்வதுதான், இன்று நீங்கள் எடுக்கக்கூடிய மிக முக்கிய தீர்மானம். கலாச்சாரம், பாரம்பரியம், நியாயவாதம், உணர்ச்சிப் பெருக்கு இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது, வேதத்தையே எனது இறுதி அதிகாரியாகக் கொள்ளுவேன் என்று தெரிந்தெடுங்கள். முதலில், வேதம் என்ன கூறுகின்றது? என்ற கேள்வியைத் தீர்மானங்கள் எடுக்கும் முன்பே கேளுங்கள். தேவன் உங்களை ஒரு காரியம் செய்யச் சொல்லும்போது, அது உங்களுக்கு அர்த்தமுள்ளதாகத் தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் உங்களுக்கு அதைச் செய்ய வேண்டுமென்ற ஆர்வம் இல்லாதிருந்தாலும் தேவனுடைய வார்த்தையை நம்பி, அதைச் செய்வேனென்று தீர்மானியுங்கள். பவுலின் கூற்றை உங்கள் சொந்த விசுவாச

அறிக்கையாக்கிக் கொள்ளுங்கள். *“நியாயப்பிரமாணத்திற்கும், தீர்க்கதரிசனத்திற்கும் இசையும் எல்லாவற்றையும் நான் நம்புகின்றேன்.”*[12] நான் அதன் சத்தியத்தை உட்கிரகிக்க வேண்டும்.

வேதத்தை விசுவாசித்தால் மட்டும் போதாது. பரிசுத்த ஆவியானவர், சத்தியத்தால் என்னை மறுரூபமாக்கும்படி, நான் என் மனதை வேத வசனத்தால் நிரப்ப வேண்டும். இதற்கு 5 வழிகளுண்டு; நீங்கள் பெற்றுக்கொண்டு, வாசித்து, ஆராய்ந்து, நினைவில் வைத்து அதை மீண்டும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

முதலாவது, நீங்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்டு, திறந்த, *ஏற்றுக்கொள்ளும்* மனநிலையுடன் அதை ஏற்றுக் கொள்ளும்போது, வசனத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றீர்கள். நாம் ஏற்றுக் கொள்ளும் விதம், நமது வாழ்வில் வசனம் வேர்கொண்டு கனி கொடுப்பதைத் தீர்மானிக்குமென்பதை விதைக்கின்றவன் உவமை விளக்குகின்றது. இயேசு, மூன்று விதமான ஏற்றுக்கொள்ளாத மனப்பான்மைகளைக் குறிப்பிட்டுள்ளார் – மூடப்பட்ட மனது (கடினமான பாறை நிலம்), மேலோட்டமான மனது (ஆழமற்ற நிலம்), கவனம் திசை திரும்பும் மனது (முட் செடிகள் நிறைந்த நிலம்); அதன்பின், *‘நீங்கள் கேட்கும் விதத்தைக் குறித்துக் கவனமாயிருங்கள்.’*[13] என்று அவர் கூறினார்.

ஒரு வேதாகம ஆசிரியர் அல்லது ஒரு பிரசங்கம் இவற்றிலிருந்து நீங்கள் எதையுமே கற்றுக் கொள்ளவில்லையென்று நீங்கள் உணர்ந்தால், உங்கள் மனநிலையை, குறிப்பாக, பெருமை இருக்கின்றதா என்பதை சோதித்துப் பார்க்க வேண்டும்; ஏனெனில், நீங்கள் தாழ்மையாகக் கேட்கும் உள்ளத்துடன் இருந்தால் எவ்வளவு சலிப்பூட்டும் பிரசங்கியார் மூலமும் தேவன் பேசக்கூடும். *“உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கின்ற வசனத்தை சாந்தத்தோடும், வணக்கத்தோடும் ஏற்றுக் கொள்ளுங்கள்”*[14] என்று யாக்கோபு கூறுகின்றார்.

வேதத்தை “அட்டைக்கு அட்டை” விசுவாசிப்பதாக உரிமை கொண்டாடும் விசுவாசிகளில் பலர், அதை ஒருநாளும் “அட்டைக்கு அட்டை” வாசித்து முடிக்கவில்லை.

இரண்டாவதாக, சபை வரலாற்றின் 2000 ஆண்டுகளில், அதிகமான ஆண்டுகள், மதகுருக்கள் மட்டுமே தனித்து வேதம் ***வாசித்தார்கள்;*** ஆனால், இப்போதோ, பல்லாயிரக் கணக்கானவர்களாகிய நாமும் வேதாகமத்தை வாசிக்க முடிகின்றது. அப்படியிருந்தும், அநேக விசுவாசிகள் அன்றாட செய்தித் தாள்களை வாசிக்கின்றார்களேயொழிய வேதத்தை வாசிப்பதில்லை. ஆகையால்தான், வளர்ச்சி இல்லாத நிலையை கண்டு ஆச்சரியப்படுவதில்லை! மூன்று மணி நேரம் தொலைக்காட்சி பெட்டிமுன் அமரும் நாம், மூன்று நிமிடங்கள் தினமும் வேதத்தை வாசித்துவிட்டு வளர்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

வேதத்தை, 'அட்டைக்கு அட்டை' விசுவாசிப்பதாக உரிமையுடன் கூறும் விசுவாசிகளில் பலர் அதை 'அட்டைக்கு அட்டை' ஒருநாளும் வாசித்ததே இல்லை. ஆனால், ஒரு நாளைக்கு 15 நிமிடங்கள் ஒழுங்காக வேதத்தை வாசித்தாலே அதை ஒரு வருடத்தில் முழுமையாக வாசித்து விடலாம். ஒரு தொலைக்காட்சியில் ஒரு அரைமணி நேர நிகழ்ச்சியை நீங்கள் பார்ப்பதை நிறுத்திவிட்டு, அதற்கு பதிலாக, உங்கள் வேதாகமத்தை வாசித்தால், முழு வேதாகமத்தையும் ஒரு ஆண்டில் இரு முறை வாசித்துவிட முடியும்.

அனுதின வேத வாசிப்பு, உங்களைத் தேவனுடைய குரல் கேட்கும் வட்டத்திற்குள் வைத்திருக்கும். இதனால்தான் தேவன், இஸ்ரவேல் ராஜாக்களை, எப்போதும் தனது வார்த்தைகளின் ஒரு பிரதியைத் தங்களுடன் வைத்துக் கொள்ளச் சொன்னார், ***"அவன் அதைத் தன்னுடன் எல்லா நேரமும் வைத்திருந்து, தன் வாழ்நாள் முழுவதும் ஒவ்வொரு நாளும் அதிலிருப்பவற்றை வாசிக்க வேண்டும்."***[15] அதை வெறுமனே உங்களருகில் வைத்திருந்தால் போதாது; ஒழுங்காக வாசியுங்கள்! இதற்கு உதவியாக இருக்கக்கூடிய ஒரு எளிய வழி: அனுதின வேத வாசிப்புத் திட்டம். அதைப் பின்பற்றினால், வேதத்தை அங்கும் இங்கும் புரட்டி, சில பகுதிகளை விட்டுவிட்டுப் போவதைத் தவிர்க்கலாம். என்னுடைய சொந்த வேத வாசிப்புத் திட்டத்தின் ஒரு பிரதி உங்களுக்கு வேண்டுமென்றால் இணைப்பு 2ஐ பாருங்கள்.

மூன்றாவது, ***ஆராய்தல்*** அல்லது வேதத்தைக் கற்றுக் கொள்ளுதல். இது, தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்கும்

நடைமுறைக்கேற்ற ஒரு வழி. வேதத்தை வாசிப்பதற்கும், கற்பதற்குமுள்ள வித்தியாசம் என்னவெனில், "ஆராய்தல்", கூடுதலாக இரண்டு செயல்களைக் கொண்டது: அப்பகுதியிலிருந்து கேள்விகளை கேட்டு, உங்கள் உள்ளான எண்ணங்களை எழுதிக் கொள்ளுதல். உங்கள் எண்ணங்களை ஒரு தாளில் எழுதாமல் நீங்கள் உண்மையில் வேதத்தைக் கற்கவே இல்லை.

வேதத்தைக் கற்கும் பல்வேறு முறைகளை விளக்க எனக்கு இங்கு இடம் போதவில்லை. வேதாகமத்தைக் கற்கும் முறைகள் பற்றிய அநேக பயனுள்ள புத்தகங்கள் வெளி வந்துள்ளன. 20 ஆண்டுகளுக்கு முன்பு நான் எழுதிய ஒரு புத்தகமும் அதில் அடங்கும்.[16] சரியான கேள்விகள் கேட்கத் தெரிவதுதான் நன்கு வேதாகமத்தைப் படிப்பதன் இரகசியம். வெவ்வேறு முறைகள், வெவ்வேறு கேள்விகளைப் பயன்படுத்துகின்றன. நீங்கள் சற்று நிறுத்தி, யார்? என்ன? எப்போது? ஏன்? எப்படி? என்பது போன்ற எளிய கேள்விகளைக் கேட்க ஆரம்பித்தாலே நீங்கள் அதிகமான காரியங்களைக் கண்டுகொள்ள முடியும். *"மக்களை விடுதலையாக்கும் தேவனுடைய பரிபூரண பிரமாணங்களைக் கவனமாகக் கற்று வரும் மக்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாயிருப்பார்கள். அவர்கள் கற்றதை மறவாமல், தேவனுடைய வார்த்தை கூறுவதற்கு அப்படியே கீழ்ப்படிவார்கள். இதைச் செய்பவர்கள் சந்தோஷமாக்கப்படுவார்கள்"*[17] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்கும் நான்காவது வழி. *அதை நினைவில் வைத்தல்*. ஞாபக சக்தி தேவன் தரும் ஒரு ஈவு; உங்கள் ஞாபக சக்தி மிகக் குறைவு என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கலாம்; ஆனால், உண்மையில் உங்களுக்கு ஆயிரக்கணக்கான கருத்துக்கள், சத்தியங்கள், உண்மைகள், எண்கள் மனதில் பதிக்கப்பட்டுள்ளன. உங்களுக்கு முக்கியமாகத் தோன்றுவதை நீங்கள் மறப்பதில்லை; தேவனுடைய வார்த்தை உங்களுக்கு *முக்கியமானதாக* இருந்தால், அதை நினைவுகூர நீங்கள் நேரமெடுப்பீர்கள்.

வேதாகம வசனங்களை மனப்பாடம் செய்வதில் அநேக நன்மைகள் உண்டு. சோதனைகளுக்கு எதிர்த்து நிற்க, ஞானமான தீர்மானங்கள் எடுக்க, அழுத்தத்தைக் குறைக்க, நம்பிக்கையைக் கட்டியெழுப்ப, நல்ல ஆலோசனை கொடுக்க, உங்கள் விசுவாசத்தைப் பிறருடன் பகிர்ந்து கொள்ள[18] அது உதவும்.

உங்கள் ஞாபக சக்தி ஒரு தசை போன்றது. எந்த அளவுக்குப் பயன்படுத்தப்படுகின்றதோ அந்த அளவுக்கு அது உறுதியாகும்; மனப்பாடம் செய்வது எளிதாகும். இப்புத்தகத்தில் உங்கள் மனதைத் தொட்ட வாக்கியங்களைத் தெரிந்து கொண்டு, அதை ஒரு அட்டையில் எழுதி வைத்துக் கொள்ளலாம். எங்கே போனாலும் அவற்றைக் கொண்டு போகலாம். பின்பு, நாள் முழுவதும் அவற்றைத் திரும்ப திரும்ப சத்தமாக வாசித்துக் கொள்ளுங்கள். எங்கேயிருந்தாலும் வசனத்தை மனப்பாடம் செய்யலாம். வேலை செய்யும்போதும், உடற்பயிற்சி செய்யும்போதும், கார் ஓட்டும்போதும், படுக்கை நேரத்திலும் பாராமல் படிக்கலாம். வேத வசனத்தை மனப்பாடம் செய்ய மூன்று முக்கிய திறவுகோல்கள்: மீண்டும் பாருங்கள், மீண்டும் பாருங்கள், மீண்டும் பாருங்கள்! ***"கிறிஸ்து கற்றுக் கொடுத்ததை நினைவுகூருங்கள்; அவருடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையை நிறைவாக்கி, ஞானவான்களாக்கட்டும்"***[19] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுடைய வார்த்தையில் நிலைத்திருக்க ஐந்தாம் வழி, அதை ***சிந்திப்பது,*** வேதம் இதை ***'தியானம்'*** என்று அழைக்கின்றது. அநேகருக்கு, தியானம் செய்வதென்றால், தங்கள் மனதை நடுநிலையில் வைத்து, அதை அலைபாய விடுவது. இது வேதாகம தியானத்திற்கு நேர் எதிரானது.

நாள் இருபத்துநான்கு: **சத்தியத்தின் மூலம் மறுரூபமாக்கப் படுதல்**

தியானமென்பது, ***ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை***. அதற்கு உண்மை முயற்சி தேவை. நீங்கள் ஒரு வசனத்தை எடுத்து, அதை மீண்டும் மீண்டும் உங்கள் மனதில் சிந்திக்க வேண்டும்.

11ஆம் அத்தியாயத்தில் நான் குறிப்பிட்டது போல, கவலைப்படுவது எப்படி என்று உங்களுக்குத் தெரியுமானால், தியானம் செய்யவும் நன்றாகத் தெரியும்! கவலை என்பது எதிர்மறையான ஒன்றின் மீது சிந்தனையை ஒருமுகப்படுத்துவது; தியானமும் அதே காரியம் – ஆனால், பிரச்சனை மீது மனதை ஒருமுகப்படுத்துவதற்குப் பதிலாக, தேவனுடைய வார்த்தைமீது மனதை ஒருமுகப் படுத்துகின்றோம்.

தினந்தோறும் வேதத்தைத் தியானிப்பதைப்போல வேறெதுவும் உங்கள் வாழ்க்கையை மறுரூபப்படுத்தி, இயேசுவைப்போலாக்க முடியாது. தேவனுடைய சத்தியத்தை சிந்திக்க நாம் நேரமெடுத்துக் கொள்ளும்போது, கிறிஸ்துவின் மாதிரியை உண்மையாக சிந்திக்கும்போது, நாம், ***"மகிமையின் மேல் மகிமையடைந்து அவருடைய சாயலுக்கு ஒப்பாக மறுரூபமாக்கப்படுவோம்."***[20]

வேதாகமத்தில் தியானத்தைக் குறித்து தேவன் பேசுகின்ற நேரங்களையெல்லாம் பார்த்தால், நாள் முழுவதும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கின்றவர்களுக்கு அவர் வாக்குப் பண்ணியிருக்கின்ற நன்மைகள் நம்மைப் பிரமிக்க வைக்கும். ***"தாவீதைத் தன் இருதயத்திற்கு ஏற்ற மனிதன்"***[21] என்று தேவன் கூறியதற்கு ஒரு காரணம், தாவீது தேவனுடைய வார்த்தையை சிந்திப்பதை நேசித்தார். ***"உம் போதனைகளை நான் எவ்வளவு நேசிக்கின்றேன்! நாள் முழுவதும் அது என் தியானம்"***[22] என்றான். தேவ சத்தியத்தைக் கருத்தோடு சிந்திப்பது, ஜெபத்திற்குப் பதில் கிடைப்பதற்குரிய திறவுகோல், வெற்றி வாழ்க்கைக்கு இரகசியம்.[23]

அதன் கொள்கைகளை நான் பிரயோகிக்க வேண்டும். பெற்றுக் கொள்ளுதல், வாசித்தல், ஆராய்தல், நினைவுகூருதல், வார்த்தையை சிந்தித்தல் இவையனைத்தையும் செய்துவிட்டு, நடைமுறைப்படுத்தத் தவறினால், பயனற்றதாகிவிடும். நாம் ***"திருவசனத்தின்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும்."***[24] இதுதான், எல்லாவற்றிலும் கடினமானது. ஏனெனில், சாத்தான் அதைப் பயங்கரமாக எதிர்ப்பான். நீங்கள் கற்றுக்கொள்ளுபவைகளைப் பிரயோகிக்காமல் இருக்கும் வரை உங்கள் வேத பாடங்களைக் குறித்து சாத்தான் கவலைப்படவே மாட்டான்.

ஒரு சத்தியத்தைப் படித்து அல்லது வாசித்து விட்டதால், நாம் அதை உள்ளே வாங்கி விட்டோமென்று நாம் நம்மையே ஏமாற்றிக் கொள்ளுகின்றோம். அடுத்த வேத வகுப்பு, போதனை கருத்தரங்கு, அல்லது வேத மாநாடு ஆகியவற்றிற்கு போக நீங்கள் அதிக சுறுசுறுப்புடன் ஈடுபடுவதால், அநேக வேளைகளில், நீங்கள் கற்றுக் கொண்டதை செயல்படுத்தக்கூட உங்களுக்கு நேரமில்லாமல் போகின்றது. அடுத்த வகுப்புக்குப் போகும்போது, முன்பு படித்ததை மறந்து விடுகின்றீர்கள். கேட்ட வசனங்களை பயன்படுத்தா விட்டால்,

சத்தியம் உங்களை விடுதலையாக்கும்; ஆனால், முதலில் அது உங்களை மிகவும் துக்கப்படுத்தலாம்!

நமது வேதபாட வகுப்புகள் பயனற்றவை. *"என் வார்த்தைகளைக் கேட்டு, அவற்றின்படி செய்கின்றவன், கற்பாறையின் மேல் தன் வீட்டைக் கட்டுகின்ற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கின்றான்"*[25] என்று இயேசு சொன்னார். சத்தியத்தை அறிவதால் மட்டுமல்ல, சத்தியத்திற்குக் கீழ்ப்படிவதால் மட்டுமே தேவனுடைய ஆசீர்வாதம் வருமென்று இயேசு சுட்டிக் காண்பிக்கின்றார். ***"இப்பொழுது நீங்கள் இவற்றை அறிந்திருக்கின்ற படியால், அதின்படி செய்தால் நீங்கள் பாக்கியவான்களா யிருப்பீர்கள்"***[26] என்று அவர் சொன்னார்.

அவற்றைப் பிரயோகிப்பது சில சமயம் கஷ்டமானதாக அல்லது வேதனை தருவதாகக்கூட இருப்பதால், நாம் தனிப்பட்ட விதத்தில் பயன்படுத்துவதை நிறுத்திவிடுகின்றோம். சத்தியம் உங்களை விடுதலையாக்கும்; ஆனால், முதலில் அது உங்களை மிகவும் துக்கமடைய வைக்கக்கூடும்! தேவனுடைய வார்த்தை நமது நோக்கங்களை வெளிப்படுத்திக் காட்டும், நமது குற்றங்களை சுட்டிக் காட்டும், பாவங்களைக் கடிந்து கொள்ளும், மாறும்படி எதிர்பார்க்கும். மாறுதலை எதிர்ப்பது மனித சுபாவம்; தேவனுடைய வார்த்தையைப் பயன்படுத்துவது ஒரு கடினமான வேலை. ஆகவேதான், வேத அப்பியாசக் கருத்துக்களை மற்றவர்களோடு பகிர்ந்துக்கொள்ளுவது அவசியம். கருத்து பரிமாற்றம் கொள்ளுவது மிகவும் நல்லது.

ஒரு சிறுகுழுவாக வேதபாடம் கற்கும் கூட்டத்தில் ஒரு பகுதியாக இருப்பதன் மதிப்பை நான் மிகைப்படுத்திக் கூறவில்லை; நாமாகக் கற்கக்கூடாத சத்தியங்களை நாம் பிறரிடமிருந்து எப்போதும் கற்றுக் கொள்ளுகின்றோம். நீங்கள் காணத் தவறும் ஆழ்ந்த சத்தியங்கள் சிலவற்றைப் பிறர் காணும்படி உதவி செய்து, தேவனுடைய சத்தியத்தை நடைமுறைக்கேற்ற விதத்தில் பிரயோகிக்க உதவியாக இருப்பார்கள்.

வார்த்தையின்படி நடப்பவர்களாக இருப்பதற்கு சிறந்த வழி, ஒரு செயல்வடிவ அடி எடுத்து வைக்க வேண்டும். தேவனுடைய

வார்த்தையை நீங்கள் வாசித்துக் கற்று தியானித்ததன் விளைவாக நீங்கள் செய்யப்போவதென்ன என்பதை எழுதி வைக்கும் பழக்கத்தை உருவாக்குங்கள். இந்த செயல் நடவடிக்கை, உங்களுக்கு *தனிப்பட்ட* சொந்தமாக (உங்களை ஈடுபடுத்துவதாக), *நடைமுறைப்படுத்தக் கூடியதாக* (நீங்கள் செய்யக்கூடிய காரியம்), *நிரூபிக்கக் கூடியதாக* (இத்தனை நாளுக்குள் முடியுமென்பதாக) இருக்க வேண்டும். ஒவ்வொரு செயல்திட்டமும் தேவனோடுள்ள உங்கள் உறவை, பிறரோடுள்ள உங்கள் உறவை அல்லது உங்கள் சொந்த, தனிப்பட்ட குணாதிசயத்தை சம்பந்தப்படுத்தியதாக இருக்க வேண்டும்.

அடுத்த அத்தியாயத்தை வாசிக்கு முன்பு, இந்த கேள்வியைப் பற்றி சிந்திக்கச் சற்று நேரம் செலவழியுங்கள். தேவன் உங்களைச் செய்யுமாறு ஏற்கனவே கூறிய எந்தக் காரியத்தை நீங்கள் இன்னும் செய்ய ஆரம்பிக்காமலிருக்கின்றீர்கள்? அதற்கேற்றபடி செயல்படக் கூடிய சில செயல்திட்டங்களை எழுதுங்கள். உங்களைக் குறித்துக் கணக்குக் கொடுக்கக்கூடிய ஒரு சிநேகிதரிடம் இதைக் கூறுங்கள். டி. எல். மூடி கூறியதுபோல, "வேதாகமம் நமது வேத அறிவைப் பெருக்குவதற்காக அல்ல, நமது வாழ்க்கையை மாற்றியமைக்கவே கொடுக்கப்பட்டது."

நாள் இருபத்து நான்கு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: சத்தியம் என்னை மறுரூபமாக்கும்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"நீங்கள் என் உபதேசத்தில் நிலைத்திருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்; சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்."*** யோவான் 8:31-32

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தேவன் தமது வார்த்தையில் ஏற்கனவே கூறிய எந்தக் காரியத்தை நான் இன்னும் செய்ய ஆரம்பிக்காமலிருக்கின்றேன்?

பிரச்சனைகளின் மூலம் மறுரூபமாக்கப்படுதல்

அதி சீக்கிரத்தில் நீங்கிப்போகும் இந்த லேசான உபத்திரவம் அவற்றையெல்லாம்விட அதிக மேன்மையான நித்திய மகிமையை நமக்கு உண்டாக்குகின்றது.
2 கொரிந்தியர் 4:17 (புதிய மொழியாக்கம்)

உபத்திரவமென்னும் நெருப்பு, தேவபக்தியென்னும் பொன்னைப் புடமிட்டுத் தரும்.
மேடன் குயான்

ஒவ்வொரு பிரச்சனைக்கும் பின்னால் தேவன் ஒரு நோக்கம் வைத்திருக்கின்றார்.

நமது குணத்தை உருவாக்க, தேவன் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துகின்றார். உண்மையில், நமது வேத வாசிப்பைவிட, நம்மை இயேசுவைப்போல மாற்றுவதுற்கு அவர் சூழ்நிலைகளையே சார்ந்திருக்கின்றார். காரணம், தெளிவாகத் தெரிகின்றது! நீங்கள் பல்வேறு சூழ்நிலைகளை, ஒரு நாளின் இருபத்து நான்கு மணி நேரமும் எதிர்கொள்ளுகின்றீர்கள்.

உலகத்தில் நமக்குப் பிரச்சனைகளுண்டு என்று இயேசு எச்சரித்திருக்கின்றார்.[1] ஒருவரும் வலியை உணராத நிலை அல்லது உபத்திரவம் தொடாத நிலையை அடைவதில்லை; ஒருவரும் பிரச்சனைகளே இல்லாதவர்களாக வாழ்க்கையினூடாக கடந்து செல்லுவதுமில்லை. வாழ்க்கை என்பது பிரச்சனைகளின் தொடர். ஒன்றைத் தீர்த்து முடிப்பதற்குள், அடுத்த பிரச்சனை அந்த இடத்தைப் பிடிக்க விரைந்து வரும். எல்லா பிரச்சனைகளும் பெரிய

பிரச்சனைகளல்ல; ஆனால், எல்லாம் தேவன் நமக்காக வைத்திருக்கும் வளர்ச்சித் திட்டத்தில் முக்கியமானவை. பேதுரு, பிரச்சனைகள் வருவது சகஜமென்று அறிந்து, *"உங்களுக்குள்ளே பற்றியெரியும் உபத்திரவங்களைக் குறித்து ஆச்சரியப்படவோ, கலங்கவோ வேண்டாம்; அது ஒன்றும் புதிதான காரியமல்ல"*[2] என்று எழுதியுள்ளார்.

தேவன் உங்களைத் தம்மிடம் கிட்டிசேர்ப்பதற்குப் பிரச்சனைகளைப் பயன்படுத்துகின்றார். *"நொறுங்குண்டவர்களுக்குக் கர்த்தர் சமீப மாயிருக்கின்றார்; நறுங்குண்டவர்களை விடுதலையாக்குகின்றார்"*[3] என்று வேதம் கூறுகின்றது. உங்களுடைய மிக ஆழமான நெருக்கமான ஆராதிக்கும் அனுபவங்கள், உங்களுடைய இருண்ட நாட்களில் இருந்திருக்கலாம். உங்கள் இருதயம் உடைந்து, நீங்கள் கைவிடப்பட்டதாக உணர்ந்து, தெரிந்துகொள்ள வேறு வழியே இல்லாதிருக்கும்போது, வலி மிக அதிகமாக இருக்கும்போது – அதாவது, தேவனிடம் மட்டுமே திரும்பக்கூடிய ஒரு நெருக்கமான நிலை. இப்படிப்பட்ட துன்பங்களில்தான் நாம் நமது உண்மையான, இருதயத்திலிருந்து எழும்பும், ஜெபங்களை உண்மையாக ஜெபிக்கக் கற்றுக்கொள்ளுகின்றோம். நாம் வேதனையிலிருக்கும்போது, நமக்கு தேவையற்ற ஜெபங்களுக்கு பலன் இருக்காது.

"வாழ்க்கை வண்ணமயமாக இருக்கும்போது, நாம் இயேசுவை மாதிரியாகக் கூறி, மேற்கோள்காட்டி, அவரைப்பற்றிப் பேசி, அவரைப் பற்றி அறிந்து, கடந்து கொண்டிருக்கலாம்; ஆனால், உபத்திரவத்தில் மட்டுமே நாம் அவரை அறிவோம்" என்று ஜோனி ஈயரக்சன் என்பவர் குறிப்பிடுகின்றார். துன்பத்தில்தான், வேறு எந்த வழியிலும் தேவனைப்பற்றி அறியாதவற்றையெல்லாம் நாம் அறிந்து கொள்ளுகின்றோம்.

தேவன், யோசேப்பை சிறைச்சாலைக்கு[4] விலக்கிக் காத்திருக்க முடியும்; தானியேலைச் சிங்கக் கெபிக்குள்[5] அனுப்பாமலிருந்திருக்க முடியும்; எரேமியாவை உளையான சேறு நிறைந்த குழிக்குள் போடப்படாதபடி[6] செய்திருக்க முடியும். பவுலை மூன்று தரம் கப்பற் சேதத்திற்குட்படாதபடி[7] காத்திருக்க முடியும்; மூன்று எபிரெய வாலிபரையும் எரியும் அக்கினிச் சூளைக்குள்[8] போடப்படாமல் தடுத்திருக்கக் கூடும் – ஆனால், அவர் அப்படிச் செய்யவுமில்லை

காப்பாற்றவுமில்லை! அந்தப் பிரச்சனைகளை அனுமதித்தார். விளைவு? அவர்கள் ஒவ்வொருவரும் தேவனுக்கு நெருக்கமாக இழுக்கப்பட்டார்கள்.

பிரச்சனைகள், நாம் நம் மீதே சார்ந்து கொள்ளாமல் தேவனை நோக்கிப் பார்த்து, அவர் மீது சார்ந்து கொள்ளப்பண்ணுகின்றன. *"நாங்கள் மரணத்துக்கு ஒப்புவிக்கப் பட்டு மரிப்பது நிச்சயமென எண்ணும்படி, எங்களுக்கு நாங்கள் எந்த விதத்திலும் உதவி செய்யக்கூடாத நிலையிலிருந்தோம். ஆனால், எல்லாவற்றையும், எங்களை இரட்சிக்க வல்ல ஒரே ஒருவராகிய தேவனுடைய கரத்திலேயே வைக்கும்படி இது செய்தபடியால், அது எங்களுக்கு நன்மையாகவே இருந்தது"*[9] என்று பவுல் இந்த நன்மையைக் குறித்து சாட்சி கொடுக்கின்றார். தேவனைத் தவிர வேறொருவரும், வேறொன்றும் உங்களுக்கு இல்லை என்பதை நீங்கள் உணரும்வரை, உங்களது தேவை, தேவன்தான் என்பதை நீங்கள் அறிந்து கொள்ளமாட்டீர்கள்.

உங்களுடைய மிக ஆழ்ந்த நெருக்கமான ஆராதனை அநேகமாக உங்களது மிக இருண்ட நாட்களில் இருந்திருக்கக் கூடும்.

என்ன காரணமாக இருந்தாலும் சரி, தேவனுடைய உத்தரவில்லாமல் உங்களுடைய பிரச்சனை ஒன்றுகூட நடந்திருக்க முடியாது; ஒரு தேவ பிள்ளைக்கு நடக்கும் எல்லாமே, ***'பிதாவினால் அனுமதிக்கப்பட்டது.'*** சாத்தானும், பிறரும் அதைத் தீமையாக்க நினைக்கும்போதும் அவர் அதை நன்மையாக்கி விடுவார்.

தேவன் ராஜரீகம் பண்ணி அனைத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றபடியால், எதிர்பாரா விபத்துக்களும், தேவனுடைய திட்டத்திலுள்ள நல்ல நிகழ்ச்சிகளாக உங்களுக்கு மாறும். ஏனெனில், நீங்கள் பிறப்பதற்கு முன்னரே உங்கள் ஜீவ காலத்தின் ஒவ்வொரு நாளும் அவருடைய புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது.[10] உங்களுக்கு நடைபெறும் ஒவ்வொரு காரியமும் ஆவிக்குரிய அர்த்தம் கொண்டது. எல்லாம் ஏனென்று

உங்களுக்கு நடைபெறும் எல்லாக் காரியமும் ஆவிக்குரிய முக்கியத்துவம் கொண்டது.

ரோமர் 8:28–29 விவரிக்கின்றது, *''அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப் பட்டவர்களாய், தேவனிடத்தில் அன்பு கூருகிறவர்களுக்கு, சகலமும் நன்மைக் கேதுவாக நடக்கின்றது. தேவன் தமது மக்களைத் தமது குமாரனுடைய சாயலாகும்படி முன் குறித்திருக்கின்றார்.''*[11]

ரோமர் 8:28-29ஐ புரிந்து கொள்ளுதல்

வேதாகமத்திலுள்ள பகுதிகளில், மிகவும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, தவறாக மேற்கோள் காட்டப்படும் பகுதிகளில் இதுவும் ஒன்று. ''எல்லாக் காரியமும் எப்படி நடைபெற வேண்டுமென்று நான் விரும்புகின்றேனோ அப்படியே நடைபெறும்படி தேவன் செய்வார்'' என்று அது கூறவில்லை. இது உண்மையல்ல என்பது தெளிவாகத் தெரிகின்றது. ''எல்லாவற்றிற்கும் பூமியில் மகிழ்ச்சியான முடிவு கிடைக்கும்படி தேவன் செய்வார்'' என்றும் அது கூறவில்லை. அதுவும், உண்மையல்ல; பூமியில் அநேக மகிழ்ச்சியற்ற முடிவுகளுண்டு.

நாம் வீழ்ந்துபோன உலகத்தில் வசிக்கின்றோம். தேவ தீர்மானத்தின்படி, அனைத்தும் பரிபூரணமாகச் செய்யப்படும் இடம் பரலோகம் ஒன்றுதான். அதனால்தான், ***''உம்முடைய சித்தம் பரலோகத்திலே செய்யப்படுவதுபோல பூமியிலேயும் செய்யப்படுவதாக''***[12] என்று ஜெபிக்கும்படி கற்றுக் கொடுக்கப்பட்டோம். இப்பகுதியை முழுமையாக புரிந்துகொள்ள, நாம் இதை சொற்றொடர்களாகப் பிரித்துப் பார்க்க வேண்டும்.

''**அவருடைய தீர்மானத்தின்படி**'': தேவனுடைய இந்நோக்கம் என்ன? ***''நாம் அவருடைய குமாரனைப்போல ஆக வேண்டும்''*** என்பதேயாகும். உங்கள் வாழ்க்கையில் நடைபெறும்படி தேவன் அனுமதிக்கும் சகல காரியமும் இந்த நோக்கத்திற்காகவே அனுமதிக்கப்பட்டுள்ளது!

''***தேவனிடத்தில் அன்புகூர்ந்து அவரால் அழைக்கப் பட்டவர்கள்***'': இந்த வாக்குத்தத்தம் தேவனுடைய பிள்ளைகளுக்கு மட்டுமே உரியது; இது, எல்லாருக்குமுரியது அல்ல; தேவனை எதிர்த்து வாழ்ந்து, தங்கள் விருப்பப்படியே காரியங்கள் நடக்க வேண்டுமென்று எண்ணுகின்றவர்களுக்கு சகலமும் ***தீமைக்கேதுவாகவே*** நடக்கும்.

"***சகலமும்***": உங்களை குறித்து தேவனுடைய திட்டம் என்று சொல்லும்போது, அதில் சகலமும் உள்ளடங்கும் – உங்கள் வாழ்வின் நிகழ்வுகள் ***அத்தனையும்*** – உங்களது தவறுகள், பாவங்கள், காயங்கள், இவை யாவும் நோய், கடன், அகால சம்பவங்கள், விவாகரத்து, நெருங்கியவர்களின் மரணம்... எல்லாம் உள்ளடங்கும். மோசமான தீமையிலிருந்து தேவனால் நன்மையானதைக் கொண்டுவர முடியும். கல்வாரியில் அவர் அதைச் செய்தார்.

"***ஒன்றாக இணைந்து***": தனித்தனியாக அல்லது துண்டு துண்டாக அல்ல; உங்கள் வாழ்க்கையின் சம்பவங்கள் எல்லாம் சேர்ந்து தேவனுடைய திட்டத்தில் செயல்படுகின்றன. அவை தனித்தனியே பிரிக்கப்பட்டவைகள் அல்ல. ஆனால், உங்களைக் கிறிஸ்துவைப்போலாக்க ***ஒன்றுடனொன்று தொடர்பு கொண்டவை.*** ஒரு கேக் செய்து எடுக்க, நீங்கள் மாவு, உப்பு, பச்சை முட்டைகள், எண்ணெய் இவற்றைப் பயன்படுத்த வேண்டும். தனித்தனியாக இவற்றைச் சுவைத்துப் பார்த்தால், ஒவ்வொன்றும் ருசியற்றவை. ஆனால், இவற்றை ஒன்று சேர்த்து அடுப்பில் வேக வைத்து எடுத்தால், அவை சுவையுள்ளவையாகின்றன. தேவனுக்கு உங்கள் சுவையற்ற, கசப்பான அனுபவங்களை நீங்கள் கொடுக்கும்போது, அவர் அவற்றை நன்மைக்கேதுவாக, ஒன்றாகக் கலந்து விடுவார்.

''**நன்மைக்காக**'': வாழ்க்கையில் எல்லாமே நன்மையாக இருக்குமென்று இங்கு கூறப்படவில்லை. உலகில் நடக்கும் பெரும்பகுதி காரியங்கள் மோசமானவை, தீமையானவை. ஆனால், அவற்றிலிருந்து நன்மை கொண்டுவருவதில் தேவன் தனித் திறமை பெற்றவர். இயேசு கிறிஸ்துவின் அதிகாரபூர்வமான வம்ச

அட்டவணையில்[13] நான்கு பெண்களின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளன. தாமார், ரூத், ராகாப், பத்சேபாள். தாமார், தான் கர்ப்பமாகும்படி தன் மாமனாரையே மயக்கியவள்; ராகாப், ஒரு வேசி; ரூத், ஒரு யூதப் பெண்ணே அல்ல, ஒரு யூதனை மணந்து பிரமாணத்தையே மீறப் பண்ணியவள்; பத்சேபாள், தாவீதுடன் விபசாரம் செய்தவள். அது, அவளுடைய கணவனின் கொலையில் முடிந்தது. இவர்கள் நல்ல தங்கமான உதாரணங்கள் அல்ல; ஆனால், இந்த மோசமான காரியங்களிலிருந்து தேவன் நன்மை பிறக்கச் செய்தார். இயேசு, அவர்கள் வம்ச வழியில் வந்தார். நமது பிரச்சனைகள், வேதனை, பாவங்களையும்விட, தேவனுடைய நோக்கம் பெரியது.

"***ஏதுவாக நடக்கின்றது***": எல்லாவற்றிற்கும் பின்னால் அவற்றை வடிவமைக்கும் ஒருவர் இருக்கின்றார். உங்கள் வாழ்க்கை, எதேச்சையாக நடைபெற்ற ஒரு நிகழ்வு அல்ல; அதேபோல, அதிர்ஷ்டம், தலைவிதி என்ற காரியங்களினாலும் அல்ல. எல்லாம் தேவனால் திட்டமிடப்பட்டது. சரித்திரம் என்பது ***தேவனின் சரிதை***. தேவன்தான், சகலத்தையும் ஆளுகின்றார். நாம் தவறுகளை செய்யக் கூடும்; ஆனால், தேவன் தவறு செய்வதில்லை. ஏனென்றால்... அவர் தேவன்!

"***நாம் அறிந்திருக்கின்றோம்***": கடினமான நேரங்களில் நமது நம்பிக்கை எல்லாம் நன்மையாக நடக்குமென்று, நம்பிக்கை மீது அல்லது ஏக்கமான எண்ணங்கள் மீது அல்லது இயற்கையாக எல்லாம் சரியாகும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக்கொண்டதாக அல்லாமல், தேவனுடைய கட்டுப்பாட்டில் எல்லாம் இருக்கின்றது; அவர் நம்மை நேசிக்கின்றவர் என்ற சத்தியத்தின் நிச்சயத்தில் இருக்கவேண்டும்.

கிறிஸ்துவைப்போன்ற குணாதிசயத்தைக் கட்டியெழுப்புதல்

நாம் ஆபரணங்களை போன்றவர்கள்; உபத்திரவம் எனும் சுத்தியல், மற்றும் உளியால் உடைக்கப்பட்டு, செதுக்கப்பட்டு வடிவம் பெற்றவர்கள். ஒரு பொற்கொல்லனின் சிறிய சுத்தியலால் நமது கரடுமுரடான முறைகளை உடைக்க முடியாவிட்டால், தேவன், ஒரு

பெரிய சுத்தியலைப் பயன்படுத்துவார்; அதிலும் நாம் பிடிவாதமாக இருந்தால், அவர் ஒரு பெரிய இயந்திரங்களுக்குரிய சுத்தியலைப் பயன்படுத்துவார். நமக்கு எது தேவையோ, அதையே பயன்படுத்துவார்.

வாழ்வின் ஒவ்வொரு பிரச்சனையும் குணத்தைக் கட்டியெழுப்பும் வழிமுறை; எந்த அளவுக்கு அது பெரியதாக இருக்கின்றதோ, அந்த அளவுக்கு ஆவிக்குரிய தசையையும் சன்மார்க்க நார்ப்பகுதியையும் நம்மில் வளர்க்கப்பட அது பெரிய சக்தி வாய்ந்ததாக இருக்கும். *"உபத்திரவம் பொறுமையை உண்டாக்குமென்று அறிவோம்; பொறுமை குணத்தை உருவாக்கும்"*[14] என்று பவுல் கூறினார். உங்கள் வாழ்க்கையின் வெளியே நடப்பவையெல்லாம் உட்பகுதியில் நடப்பவைகள்போல அவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. உங்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் நிலையற்றவை; ஆனால், உங்கள் குணம் என்றென்றும் நிற்கும்.

உலோகங்களைச் சுத்திகரிக்கப் பயன்படுத்தப்படும் உலைக் களத்துக்கே வேதம், எப்பொழுதுமே உபத்திரவங்களை ஒப்பிடுகின்றது. *"உங்கள் விசுவாசம் சுத்தமானது என்பதைக் காண்பிக்கவே இந்த உபத்திரவங்கள் வந்தன; இந்த சுத்தமான விசுவாசம் பொன்னைப் பார்க்கிலும் விலையேறப் பெற்றது"*[15] என்று பேதுரு சொன்னார். ஒரு வெள்ளித் தட்டானிடம், "இந்த வெள்ளி சுத்தமாயிற்றென்று உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டபோது, "என் உருவம் அதில் பிரதிபலிக்கும்போது" என்று கூறினானாம். நீங்கள் உபத்திரவங்களால் சுத்திகரிக்கப்படும்போது இயேசுவின் சாயலை மக்கள் உங்களிடம் காண முடியும். *"உங்கள் விசுவாச வாழ்க்கை அழுத்தம் பெற்று, அதன் உண்மையான ரூபம் வெளிப்படும்"*[16] என்று யாக்கோபு கூறினார்.

உங்கள் வாழ்க்கையின் வெளிப்புற சம்பவங்களாக, நடப்பவற்றைவிட உங்களுக்குள்ளே நடப்பது அதிக முக்கியத்துவம் வாய்ந்தது.

தேவன் உங்களை இயேசுவைப் போலாக்க விரும்புவதால், இயேசு கடந்து சென்ற அதே பாதை வழியாக அவர் உங்களை நடத்திச்

செல்லுவார். அதில் தனிமை, சோதனை, அழுத்தம், குறை கூறி விமர்சிக்கப்படுதல் போன்ற அநேக பிரச்சனைகள் அடங்கும். *''இயேசுவும் தாம் பட்ட பாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டார்''* என்று வேதம் கூறுகின்றது. *"உபத்திரவங்களினாலே பூரணப்படுத்தப்பட்டார்."*[17] தமது சொந்தக் குமாரனுக்கு ஏற்பட்ட அனுபவத்தை அனுமதித்த தேவன் நம்மை மட்டும் அதிலிருந்து விதிவிலக்காக்கி வைப்பாரா? *"கிறிஸ்து கடந்து சென்ற அதே பாதையில் நாம் போகின்றோம். அவரோடே கூடப் பாடனுபவித்தால், அவரோடேகூட ஆளுகை செய்வதும் நிச்சயமாமே!"*[18] என்று பவுல் கூறினார்.

பிரச்சனைகளுக்கு இயேசுவைப்போல மாறுத்தரம் அளித்தல்

தேவன் செய்ய நினைத்திருப்பதை பிரச்சனைகள் தானாக செய்து விடுவதில்லை. அநேக மக்கள் நன்றாக மாறுவதற்குப் பதிலாக, கசப்பாக மாறி, வளர்ச்சியடைவதே இல்லை. இயேசு எப்படி மறு உத்தரவு கொடுப்பாரோ, அப்படியே நாமும் மாறுத்தரம் கொடுக்க வேண்டும்.

தேவனுடைய திட்டம் நன்மையானதென்று நினைவுகூருங்கள். உங்களுக்கு எது சிறந்ததென்று தேவனுக்குத் தெரியும்; உங்கள் நன்மையைக் கருதுகின்றவர் அவர். *"நான் உங்கள் பேரில் நினைத்திருக்கின்ற நினைவுகள் தீமைக்கேதுவானவைகளல்ல, நன்மைக்கேதுவானவைகளே"*[19] என்று தேவன் எரேமியாவிடம் சொன்னார். தன்னை அடிமைத்தனத்திற்கு விற்றுப்போட்ட தன் சகோதரரைப் பார்த்து யோசேப்பு, *"நீங்கள் எனக்குத் தீமை செய்ய நினைத்தீர்கள்; தேவனோ, அதை நன்மையாக மாறப்பண்ணினார்"*[20] என்று கூறும்போது இந்த சத்தியத்தைப் புரிந்து கொண்டான். தன் ஜீவன் போவதுபோல நோயில் எசேக்கியா அவதிப்படும்போது, அவரும் இதே கருத்தைத்தான் எதிரொலிக்கின்றார்: *"நான் இப்படிக் கஷ்டப்பட்டது எனக்கு நல்லது."*[21] நீங்கள் விடுதலை கேட்கும்போது தேவன் 'இல்லை' என்று பதில் கூறினால், *"நமக்கு எது நல்லது என்று அவருக்குத் தெரியும், அதற்கு நாம் பயிற்சியடையும்படி நமக்கு நன்மையானதையே செய்கின்றார்"*[22] என்பதை நினைவில் வையுங்கள்.

நீங்கள் தேவனுடைய திட்டத்திலேயே நிலைத்திருக்க வேண்டுமே தவிர, உங்கள் வேதனை, பிரச்சனையிலல்ல என்பது மிக முக்கியம். இயேசு சிலுவையின் வேதனையை அப்படித்தான் தாங்கினார்; நாம் அவருடைய உதாரணத்தைப் பின்பற்ற அழைக்கப்படுகின்றோம், *"நமது ஆண்டவரும் போதகருமான இயேசுவையே, நோக்கிப் பாருங்கள்; தமக்குப் பின்வரும் சந்தோஷத்திற்காக, அவர் சிலுவையில் அவமானமாக மரணமடைவதற்கு தம்மை ஒப்புக் கொடுத்தார்."*[23] நாஸி (Nazi) மரண முகாமில் அவதிப்பட்ட க்ரிட்டீன் பூம் இப்படிக் கருத்தொருமித்த பார்வையின் வல்லமையைத இவ்வாறு விளக்கினார்: "நீங்கள் உலகை நோக்கினால் வேதனைப்படுவீர்கள் (distressed); உங்களுக்குள்ளே நோக்கினால் மனச்சோர்வடைவீர்கள் (depressed). ஆனால், கிறிஸ்துவை நோக்கிப் பார்த்தால் நீங்கள் இளைப்பாறுதலடைவீர்கள் (at rest)!" நீங்கள் எதன்மீது கருத்தைச் செலுத்துகின்றீர்களோ அதுவே, உங்கள் உணர்வுகளைத் தீர்மானிக்கும். சகிப்புத் தன்மையின் இரகசியம்: உங்கள் வேதனை தற்காலிகமானது. ஆனால், உங்கள் பலனோ நித்தியமாயிருக்கும். மோசே பிரச்சனை நிறைந்த ஒரு வாழ்க்கையை சகித்தார், *"ஏனெனில் அவன் தன் பலனை எதிர்நோக்கிக் கொண்டேயிருந்தான்."*[24] பவுலும், இதே விதமாகத்தான் கஷ்டங்களைச் சகித்தார் *"இப்போதுள்ள நமது பாடுகள் மிகச் சிறியவை, அது நீடிக்காது; ஆயினும், என்றும் நிலைத்திருக்கும் அளவிட முடியாத பெரிய மகிமையை நம்மில் உருவாக்கும்!"*[25] என்று அவர் கூறினார்.



குறுகிய கால அளவில் சிந்திக்காமல், முடிவிலுள்ள காரியத்தின் மீது கவனம் வையுங்கள். *"நாம் அவருடைய மகிமையில் பங்கெடுக்க வேண்டுமென்றால் அவருடைய பாடுகளிலும் பங்கேற்க வேண்டும். இக்காலத்துப் பாடுகள் இனிவரும் மகிமைக்கு ஒப்பானவைகள் அல்ல!"*[26]

களிகூர்ந்து நன்றி செலுத்துங்கள். *"எல்லாவற்றிலும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். கிறிஸ்து இயேசுவுக்குள் இதுவே,*

உங்களைப் பற்றிய தேவ சித்தமாயிருக்கின்றது''[27] என்று கூறுகின்றது. இது எப்படி சாத்தியமாகும்? 'எல்லா சூழ்நிலைகளுக்காகவும்' என்று தேவன் கூறாமல், 'எல்லா சூழ்நிலைகளிலும், என்று கூறுவதைக் கவனியுங்கள். தீமைக்காக, பாவத்திற்காக, உபத்திரவத்திற்காக அல்லது உலகில் அவற்றின் வேதனையான விளைவுகளுக்காக அவர் நம்மை நன்றி கூறச் சொல்லவில்லை. மாறாக, அவர் உங்கள் பிரச்சனைகளைப் பயன்படுத்தி தமது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக நாம் அவருக்கு நன்றி கூற வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார்.

"கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்"[28] என்றுதான் வேதம் கூறுகின்றது. உங்கள் வேதனைக்குள் களிகூருங்கள் என்று அது கூறவில்லை? நீங்கள் 'கர்த்தரில் களிகூருங்கள்' என்னதான் நடந்தாலும், நீங்கள் தேவனுடைய அன்பு, பராமரிப்பு, ஞானம், வல்லமை மற்றும் உண்மையில் நீங்கள் களிகூரலாம். ***"பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்குமென்று அறிந்து இப்போது சந்தோஷப்படுங்கள்"***[29] என்று இயேசு கூறினார்.

நாம் அனுபவிக்கும் வேதனையினூடே தேவனும் கடந்து செல்லுகின்றாரென்பதையறிந்து நாம் களிகூரலாம். நாம், தூரத்திலுள்ள, பிரிந்து நிற்கும் ஒரு தேவனை, ஓரமாக நின்று அவ்வப்போது உற்சாக வார்த்தைகளைக் கூறுகின்ற, ஒரு தேவனை சேவிக்கவில்லை. மாறாக, அவர் நமது துன்பங்களுக்குள் பிரவேசிக்கின்றார். இயேசு இதைத்தான் தமது மனித ரூபத்தில் செய்தார்; அவருடைய ஆவியானவர் நம்மில் இதை இப்போதும் செய்கின்றார். தேவன் நம்மை அப்படியே தனித்து விட்டுவிடமாட்டார்.

நாள் இருபத்தைந்து: பிரச்சனைகளின் மூலம் மறுரூபமாக்கப் படுதல்

ஒருபோதும் விட்டுவிட வேண்டாம். பொறுமையாகவும் விடாப்பிடியாகவும் இருங்கள். ***''உங்கள் சகிப்புத்தன்மை வளர்ச்சியடையுமட்டும், நீங்கள் முதிர்ந்த குணமுள்ள மனிதராகக் காணப்படும் வரைக்கும்... கறைதிரையற்றவர்களாக மாற்றும் வரை அது தொடர்ந்து நடக்கட்டும்"***[30] என்று வேதம் கூறுகின்றது.

குணாதிசய வளர்ச்சி என்பது மெதுவாக நடைபெறும் ஒரு முறைமை. வாழ்க்கையின் கஷ்டங்களுக்கு விலகித் தப்பித்துக்கொள்ள நீங்கள் முயற்சியெடுக்கும்போதெல்லாம், நாம் குறுக்கு வழியில் இறங்க முயற்சி செய்ததினிமித்தம், வளர்ச்சி தாமதமாகும். முன்பைவிட மோசமான வேதனையில் முடிவடையும். அத்துடன், மறுதலித்தல், விலகியோடுதல் ஆகிய காரியங்களில் சென்று முடிவடையும். நீங்கள் உங்கள் குணம் விருத்தியடைதலின் நித்திய பலனை புரிந்து கொள்ளும்போது, ***'எனக்கு ஆறுதல் தாரும்'*** என்ற வகையான ஜெபங்கள் குறையும் (நான் சந்தோஷமாக, நல்ல உணர்வுடனிருக்க உதவி செய்யும்); ***'என்னை உருவாக்கும்'*** வகையான ஜெபங்கள் கூடும். (என்னை உம்மைப் போலாக்க இதைப் பயன்படுத்தும்).

இங்கொன்றும் அங்கொன்றுமாக குழம்பியிருக்கும் குழப்பமான சூழ்நிலையிலும்; அதேபோல, வாழ்க்கை பிரயோஜனமற்ற சூழ்நிலைகளில் கடந்து செல்லும்போதும்; தேவனுடைய கரம் இருப்பதை நீங்கள் காண ஆரம்பிக்கும்பொழுதுதான் நீங்கள் முதிர்ச்சியடைகின்றீர்கள்.

இப்போதே நீங்கள் பிரச்சனையை சந்தித்துக் கொண்டிருந்தால், தேவனிடத்தில், 'ஏன் இது எனக்கு சம்பவித்தது?' என்று கேட்பதற்குப் பதில், 'இதிலிருந்து நான் என்ன கற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்புகின்றீர்?' என்று கேளுங்கள். அதன்பின், தேவன் மீது நம்பிக்கை வைத்து சரியானது எதுவோ அதைச் செய்துகொண்டே இருங்கள். ***"வாக்குப்பண்ணப்பட்ட முழுமையை அடையும்படி, தேவனுடைய திட்டத்தோடு, அதை சகித்துக் கொள்ளவேண்டும்."***[33] விட்டுவிடாதிருங்கள், வளர்ச்சியடையுங்கள்!

நாள் இருபத்தைந்து
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: ஒவ்வொரு பிரச்சனைக்கும் பின்பாக ஒரு நோக்கம் இருக்கின்றது**.**

மனனம் செய்ய ஒரு வசனம்: *"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கின்றோம்."* ரோமர் 8:28

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் வாழ்க்கையில் ஏற்பட்ட எந்தப் பிரச்சனை என்னில் மிகப் பெரிய வளர்ச்சியை ஏற்படுத்தியது**?**

26

சோதனைகளின் மூலம் வளர்ச்சியடைதல்

சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்;
அவன் உத்தமனென்று விளங்கின பின்பு, கர்த்தர் தம்மிடத்தில்
அன்புகூருகிறவர்களுக்கு வாக்குப்பண்ணின
ஜீவ கிரீடத்தைப் பெறுவான்.
யாக்கோபு 1:12

என் சோதனைகள்தான் என் குருத்துவப்
படிப்பில் முதுநிலைப் பட்டம் தந்தவை.
மார்ட்டின் லூத்தர்

ஒவ்வொரு சோதனை நேரமும் நன்மை செய்யும்படியான ஒரு வாய்ப்பு.

ஆவிக்குரிய முதிர்ச்சிப் பாதையில், தவறு செய்யும் தருணத்தைப் போல, நல்லது செய்யவும் தருணமுண்டு என்று நீங்கள் உணரும்போது, சோதனைகள்கூட இடறும் கல்லாவதற்குப் பதிலாக, வெற்றிக்கு ஏற உதவும் படிக் கற்களாக மாறிவிடும். சோதனை தெரிந்தெடுத்தலுக்கு வழி வகுக்கின்றது. சோதனை, சாத்தான் உங்களை அழிக்கப் பயன்படுத்தும் அடிப்படை ஆயுதமாக இருந்தபோதிலும், தேவன், அதை உங்களை வளர்ச்சியடைச் செய்ய பயன்படுத்துகின்றார். பாவஞ்செய்வதற்குப் பதிலாக நீங்கள் நன்மை செய்வதைத் தெரிந்துகொள்ளும் ஒவ்வொரு நேரமும், நீங்கள் கிறிஸ்துவின் குணாதிசயத்தில் வளருகின்றீர்கள்.

இதைப் புரிந்து கொள்ளுவதற்கு, முதலில் இயேசுவின் குணத்தின் தன்மைகளை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ள வேண்டும்.

அவருடைய குணத்தைச் சுருக்கமாகக் கூறும் ஒரு பகுதி ஆவியின் கனி: *"பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் போது இப்படிப்பட்ட கனிகளை நம் வாழ்க்கையில் உருவாக்குவார்: அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்."*[1]

இந்த ஒன்பது குணங்களும் பிரதான கற்பனையின் விரிவாக்கம்; அவை இயேசு கிறிஸ்துவை அப்படியே சித்தரிக்கின்றன. பூரண அன்பு, சந்தோஷம், சமாதானம், பொறுமை மற்றும் அனைத்துக் கனிகளும் ஒருங்கே அமைந்துள்ள தனி மனிதனாக இயசு இருந்தார். ஆவியின் கனியைக் கொண்டிருப்பது என்றால் கிறிஸ்துவைப் போலிருப்பது.

உங்கள் வாழ்க்கையில் எப்படி பரிசுத்த ஆவியானவர் இந்த ஒன்பது கனிகளையும் உண்டாக்குகின்றார்? அவற்றை உடனடியாக உருவாக்கிவிடுவாரா? திடீரென்று ஒரு நாள் விழிக்கும்போது இந்த அத்தனை குணங்களும் முழுமையாக வளர்ச்சியடைந்து நாம் எழும்புகின்றோமா? இல்லை, கனி எப்போதுமே முதிர்ச்சியடைந்து *மெதுவாகப்* பழுக்கின்றது.

அடுத்த வாக்கியம் நீங்கள் கற்றுக்கொள்ளப்போகும் ஆவிக்குரிய சத்தியங்களில் மிக முக்கியமானவைகளில் ஒன்று. தேவன், இக்கனிகளுக்கு *நேர் எதிரான சுபாவங்களை* நீங்கள் வெளிப்படுத்தும்படியான சோதனை வரும் சந்தர்ப்ப சூழ்நிலைகளை உங்கள் வாழ்க்கையில் அனுமதிப்பதின் மூலம், இக்கனிகளை உங்களில் உருவாக்குகின்றார். குணம் வளர்ச்சியடைவது ஒரு தெரிந்தெடுத்தலைக் (choice) கொண்டது.

ஆவியின் கனிகளுக்கு நேர் எதிரான தன்மைகளை நீங்கள் வெளிப்படுத்தும்படியான சோதனை தரும் சூழ்நிலைகளை உங்கள் வாழ்க்கையில் அனுமதிப்பதன் மூலம், தேவன் ஆவியின் கனிகளை உங்களில் உருவாக்குகின்றார்.

சோதனை அந்த வாய்ப்புகளை உண்டாக்குகின்றது. உதாரணமாக, *நேசிக்கக்கூடாத* சில மக்களை நம்மைச் சுற்றி வைப்பதன் மூலம்

தேவன் ***அன்பை*** நமக்குப் போதிக்கின்றார். மிக அன்பான, உங்களை நேசிக்கும் மக்களை நீங்கள் நேசிப்பதற்கு, எந்த நற்குணமும் தேவையில்லை; துக்கத்தின் நடுவில், நாம் அவரை நோக்கித் திரும்பும்போதுதான், தேவன் நமக்கு உண்மையான ***மகிழ்ச்சியைத்*** தருகின்றார். மகிழ்ச்சி வெளிப்படையான சூழ்நிலைகளை சார்ந்திருக்கின்றது; ஆனால், மகிழ்ச்சி தேவனோடுள்ள உங்கள் உறவை அடிப்படையாகக் கொண்டது.

குழப்பம், ஒழுங்கீனம் நிறைந்த நேரங்களை நம் வாழ்வில் அனுமதிப்பதன் மூலம், தேவன் நமக்குள் உண்மையான ***சமாதானம்*** தருகின்றாரேயொழிய, நாம் திட்டமிட்டபடி காரியங்களை நடத்தித் தருவதன் மூலமல்ல. ஒரு அழகான சூரிய அஸ்தமனம் அல்லது விடுமுறை நாட்களில், இளைப்பாறிக் கொண்டிருக்கும்போது யாருக்குமே அமைதி வரும். ஆனால், நாம் கவலைப்பட்டு அல்லது பயப்பட்டு நிற்க வேண்டிய சந்தர்ப்பங்களில், தேவன் மீது நம்பிக்கை வைப்பதைத் தெரிந்துகொள்ளும்போது மட்டுமே உண்மையான மன சமாதானம் கிடைக்கும். அதேபோல, ஏதாகிலும் ஒரு காரியத்திற்காக நாம் அதிக நேரம் காக்க வைக்கப்பட்டிருக்கும் போதுதான், கோபப்படாமல், எரிந்து விழாமல் ***பொறுமையை*** வளர்த்துக்கொள்ளுவதற்கு ஒரு தருணம் கிடைக்கின்றது.

ஒவ்வொரு ஆவியின் கனிக்கும் தேவன் எதிர்மறையான சந்தர்ப்பங்களை உண்டுபண்ணி, நாம் தெரிந்து கொள்ளும் வாய்ப்பை உண்டுபண்ணுகின்றார். மோசமாக நடக்க வேண்டுமென்ற சோதனையே வராவிட்டால், நீங்கள் நல்லவர்களாக நடந்தீர்களென்று கூற முடியாது. உண்மையற்றவர்களாக நடக்கும்படியான சோதனை வராமல், நீங்கள் உண்மையாக நடந்துவிட்டதாக உரிமை பாராட்ட முடியாது. உண்மையற்றவனாக நடக்க வேண்டுமென்ற சோதனையின் மத்தியில்தான், அதை எதிர்த்து நிற்பதன் மூலம் உண்மை கட்டியெழுப்பப்படுகின்றது. நாம் பெருமையுடன் நடக்க மறுத்து நிற்கும்போதுதான், தாழ்மை வளருகின்றது. விட்டுவிட வேண்டும் என்ற சோர்வை நீங்கள் வெறுத்துத் தள்ளும் ஒவ்வொரு முறையும் சகிப்புத் தன்மை வளர்ச்சியடைகின்றது. ஒரு சோதனையைத் தோற்கடிக்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் இயேசுவைப்போல இன்னும் சற்று கூடுதலாக மாறுகின்றீர்கள்!

சோதனை எவ்வாறு கிரியை செய்கின்றது

சாத்தான் என்ன செய்வானென்று நாம் அறிந்துகொள்ள சோதனை உதவுகின்றது. படைப்பின் நாளிலிருந்து அவன் அந்தப் பழைய தந்திரங்களையும், உபாயங்களையுமே பயன்படுத்தி வருகின்றான். எல்லா சோதனைகளும் ஒரே வடிவத்தில் தானிருக்கின்றன. அதனால்தான் பவுல், ***"அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாததல்லவே"***[2] என்று கூறினார். சோதனை நான்கு படிகளுள்ள முறையை கொண்டுள்ளன என வேதத்திலிருந்து நாம் அறிகின்றோம். ஆதாம், ஏவாள் மற்றும் இயேசுவிடம் பிரயோகித்த அதே முறையைத்தான் சாத்தான் பின்பற்றுவதை காண்கின்றோம்.



முதலாவதாக, சாத்தான் ***உங்களுக்குள் ஒரு ஆசையை*** அடையாளம் காண்கின்றான். அது ஒரு பாவமான ஆசை. பழிவாங்குதல் அல்லது பிறரைக் கட்டுப்படுத்துதல் போன்ற ஆசை அல்லது நேசிக்கப்பட வேண்டும், மதிக்கப்பட வேண்டும், இன்பம் அனுபவிக்க வேண்டும் என்பது போன்ற நியாயமான, இயற்கையான ஆசையாக இருக்கலாம். சாத்தான் (ஒரு எண்ணத்தின் மூலம்) ஒரு தீய ஆசையைத் தூண்டும்போது, சோதனை ஆரம்பமாகின்றது. நியாயமான ஒரு காரியத்தை தவறான வழியில், தவறான நேரத்தில் செய்யும்படி ஒரு எண்ணத்தைப் போடுவான். எப்போதுமே குறுக்கு வழிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவை பொதுவாக சோதனைகள்! "உனக்கு இது கிடைப்பது நியாயம்; இப்போது இது உனக்கு இருக்க வேண்டும்! பரவசம் பெறுவாய்... ஆறுதல் கிட்டும்... நன்றாக இருப்பதை உணருவாய்" என்று சாத்தான் உள்ளே கிசுகிசுக்கின்றான்.

சோதனை நம்மைச் சூழ இருக்கின்றதென்று நாம் எண்ணுகின்றோம். ஆனால், தேவனோ, அது உங்களுக்குள் ஆரம்பிக்கின்றது என்கின்றார். உள்ளான ஆசை உனக்கிராவிட்டால், அந்த சோதனை உன்னைக் கவர்ச்சிக்க முடியாது. சோதனை எப்போதும் மனதில்தான் ஆரம்பிக்கின்றது; சந்தர்ப்ப

சூழ்நிலைகளிலல்ல. *“மனுஷனுடைய இருதயத்தின் உள்ளே இருந்து, தீய சிந்தனைகளும், வேசித்தனங்களும், களவு, கொலை, விபசாரம், பேராசை, ஏமாற்றுகள், வஞ்சகங்கள், காமவிகாரங்களும், பொறாமை, புறங்கூறுதல், பெருமை, முட்டாள்தனங்களும் புறப்படும்; இந்தத் தீய காரியங்களெல்லாம் மனிதனுக்குள்ளேயிருந்து புறப்பட்டு வரும்”*[3] என்று இயேசு சொன்னார். *“உங்களுக்குள்ளே தீய ஆசைகளின் பட்டாளமே (சேனை) இருக்கின்றது”*[4] என்று யாக்கோபு கூறுகின்றார்.

இரண்டாவதாக, *சந்தேகம்*. பாவத்தைக் குறித்து தேவன் சொன்ன காரியத்தை சந்தேகிக்கச் செய்வான் சாத்தான். அது உண்மையாகவே தவறுதானா? இதை செய்யக்கூடாது என்று மெய்யாகவே தேவன் சொன்னாரா? இதை வேறு எவருக்கோதானே சொன்னார்? வேறு ஒரு காலத்திற்குதானே சொன்னார்? இப்பொழுது இதை செய்யலாமே? நான் சந்தோஷமாக இருப்பது தேவனுக்கு விருப்பமில்லையா? *“விழித்திருங்கள்! தீமையான சிந்தனைகளோ அல்லது சந்தேகங்களோ ஜீவனுள்ள தேவனிடமிருந்து உங்களைத் திருப்பிவிட இடமளிக்காதீர்கள்”*[5] என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது.

சோதனை நம்மைச் சூழ இருக்கின்றதென்று நாம் நினைக்கின்றோம். ஆனால், அது உங்களுக்குள்ளிருந்து தான் ஆரம்பிக்கின்றது என்று தேவன் கூறுகின்றார்.

மூன்றாவதாக, *வஞ்சகம்*. சாத்தானுக்கு உண்மை பேச திராணியில்லை – அவன் *‘‘பொய்க்குப் பிதா.’’*[6] அவன் உங்களுக்கு சொல்லும் யாவும், ஒன்று, உண்மையற்று இருக்கும் அல்லது பாதி உண்மை மட்டும் இருக்கும். தேவன் ஏற்கனவே தமது வார்த்தையில் கூறியிருப் பவற்றின் இடத்தில் அதை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு சாத்தான் தனது பொய்யை வழங்குகின்றான். “நீங்கள் மரிக்கமாட்டீர்கள், தேவனைப்போல ஞானமுள்ளவர்களாக இருப்பீர்கள். நீங்கள் அதை செய்தால் பரவாயில்லை, அது ஒரு பெரிய தவறல்ல. ஒருவருக்கும் தெரியாது. அது உங்கள் பிரச்சனையைத் தீர்க்கும். நீ மட்டும் அல்ல, மற்ற யாவரும் இதனை செய்கின்றார்கள். இது ஒரு சிறிய பாவம்தான்”

என்றெல்லாம் சாத்தான் சொல்லுவான். ஆனால், சிறு பாவம் என்று சொல்லுவது, கொஞ்சம்தான் கர்ப்பமாக இருக்கின்றாள் என்று சொல்லுவதுபோல இருக்கின்றது. காலப்போக்கில் யாவரும் தெரிந்துகொள்ளக்கூடிய நிலை உருவாகும்.

நான்காவதாக, ***கீழ்ப்படியாமை***. இவ்வளவு நேரம், மனதிற்குள் போராடிக்கொண்டிருந்த காரியம், இறுதியாக செயலில் வெளிப்படுகின்றது. ஒரு ''கரு'' கருத்தாக உங்களுக்குள் ஆரம்பித்தது; இப்பொழுது, நடத்தையாக "பெற்றெடுக்கப்பட்டு விட்டது." உங்கள் கவனத்தை கவர்ந்தவற்றிற்கு இடம் கொடுத்து விட்டீர்கள். நீங்கள் சாத்தானின் பொய்யை விசுவாசித்து யாக்கோபு எதைக் குறித்து எச்சரித்தாரோ அதே வலைக்குள் விழுகின்றீர்கள். ***''அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகின்றான். பின்பு, இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும். என் பிரியமான நண்பர்களே வஞ்சிக்கப்படாதிருங்கள்!''***[7]

சோதனையை மேற்கொள்ளுதல்

சோதனை எவ்வாறு கிரியை செய்கின்றது என்பதை புரிந்துகொள்ளுவதே பெரும் உதவியான காரியம். ஆயினும், அத்தோடு, அதை மேற்கொள்ள நீங்கள் எடுக்கவேண்டிய சில முக்கியமான படிகள் உள்ளன.

பயமுறுத்தல்களுக்கு இடங்கொடாதிருத்தல். அநேக கிறிஸ்தவர்கள், சோதனையை கொண்டுவருகின்ற சிந்தைக்கு பயந்து, நம்பிக்கை இழந்து கிடக்கின்றனர். தாங்கள் சோதனைக்கு ''அப்பாற்பட்டவர்கள்'' அல்ல என்ற குற்றவுணர்வுடன் ஜீவிக்கின்றனர். தாங்கள் சோதிக்கப்படுவதைக் குறித்து வெட்கப்படுகின்றனர். இது, முதிர்ச்சியைக் குறித்ததான தவறான கருத்து. நீங்கள் ***ஒருபோதும்*** சோதனை இல்லாத இடத்திற்கு கடந்து வருவதில்லை.

ஒருவிதத்தில் சோதனை நமக்களிக்கப்படும் பாராட்டு என்று எடுத்துக் கொள்ளலாம். ஏற்கனவே தனது தீய சித்தத்தின்படி செய்கின்றவர்களை சாத்தான் சோதிக்க அவசியமில்லை. சோதனை,

சாத்தான் உங்களைப் பகைப்பதைக் காண்பிக்கின்றது; ஒரு பலவீனம் அல்லது உலக இச்சை என்பதன் அறிகுறி அல்ல அது. இது விழுந்துபோன உலகில் இயற்கையாக நடப்பதுதான்; இதைக்குறித்து ஆச்சரியப்படவோ, அதிர்ச்சியடையவோ அல்லது அதைரியப்படவோ தேவை இல்லை. சோதனையை தவிர்க்க முடியாது என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளவேண்டும். உங்களால் அதை முற்றிலும் விலக்கிவிடவே முடியாது; ''நீங்கள் ***சோதிக்கப்படும்போது...''*** என்று வேதம் கூறுகின்றது. சோதிக்கப்பட்டால் என்று கூறவில்லை. ***''மற்றவர்களுக்கு உண்டாகின்ற சோதனைகளை தவிர வேறே சோதனைகள் உங்களுக்கு வரவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்***[8] என்று பவுல் புத்தி கூறுகின்றார்.

சோதிக்கப்படுவது பாவமல்ல, இயேசு சோதிக்கப்பட்டார், ஆனால், பாவம் செய்யவில்லை.[9] சோதனைக்கு நீங்கள் இடங்கொடுக்கும் போதுதான் அது பாவமாகின்றது. "பறவைகள் உங்கள் தலைக்கு மேல் பறப்பதை நீங்கள் தடை செய்ய முடியாது; ஆனால், அவை உங்கள் முடியில் கூடு கட்டாதபடி நிச்சயம் தடுக்க முடியும்" என்று மார்ட்டின் லூத்தர் கூறுகின்றார். எண்ணங்களைப் போடுவதை, போடவிடாமல், சாத்தானைத் தடுக்க முடியாது; ஆனால், அவற்றை சந்திக்க, அவற்றின்படி நடக்காமலிருப்பதை நீங்கள் தெரிந்து கொள்ளமுடியும்.

சோதனை, உங்கள் பலவீனம் அல்லது உலகத்துக்கடுத்த சிந்தனை இவற்றின் அறிகுறியல்ல; சாத்தான் உங்களைப் பகைக்கின்றான் என்பதன் அறிகுறி அது.

உதாரணமாக, அநேகருக்கு சரீரக் கவர்ச்சிக்கும் அல்லது பாலியல் உணர்வுகளின் எழுச்சிக்கும், இச்சைக்குமுள்ள வேறுபாடு தெரியாது; அவை எல்லாம் ஒன்றல்ல. நம் ஒவ்வொருவரையும் பாலியல் உணர்வுகளுடன்தான் தேவன் படைத்திருக்கின்றார்; அது நல்லது; கவர்ச்சிக்கப்படுதல் அல்லது உணர்வுகளின் எழுச்சியடைதல் சீர் அளவுக்கு ஆண்டவர் இயற்கையாகக் கொடுத்திருக்கும், தானாகப் பொங்கி வரும், தேவனால் அருளப்பட்ட உணர்வு; ***ஆனால், இச்சை என்பது மனதார, வேண்டுமென்றே செய்யும் காரியம்***. இச்சை என்பது,

உங்கள் சரீரத்தால் நீங்கள் என்ன செய்யக்கூடுமோ அதை உங்கள் மனதால் செய்வது. இச்சிக்கும் பாவத்திற்கு இடங்கொடாமலே நீங்கள் கவர்ச்சிக்கப்படலாம்; உணர்வுகளில் எழுச்சியைப் பெறலாம். அநேகர், விசேஷமாக கிறிஸ்தவ ஆண்கள், தங்களுக்கு கடவுளால் கொடுக்கப்பட்ட உயிரணுக்கள் வேலை செய்வதைக் குறித்துக் குற்ற உணர்வடைகின்றார்கள். ஒரு கவர்ச்சிகரமான பெண்ணைத் தற்செயலாக நோக்கும்போது அது இச்சை என்றெண்ணி, வெட்கப்பட்டு, குற்ற உணர்வடைகின்றார்கள். தங்களையே நொந்து கொள்ளுகின்றார்கள். ஆனால், நீங்கள் அதையே நினைத்து அதில் வாழ ஆரம்பிக்கும்வரை, கவர்ச்சி இச்சையாகாது!

உண்மையில், நீங்கள் எந்த அளவுக்கு தேவனோடு நெருங்குகின்றீர்களோ அந்த அளவுக்கு சாத்தான் உங்களை அதிகமாக சோதிக்க ஆரம்பிப்பான். நீங்கள் தேவனுடைய பிள்ளையாக மாறின மறுவினாடியே, சாத்தான் தாக்குதல் பெற்றுக்கொண்ட உணர்வோடு, வீரியங்கொண்டு, உங்களை வைத்து ஒரு “ஒப்பந்தம்” செய்து விடுகின்றான். அவன் உங்கள் சத்துரு; உங்கள் வீழ்ச்சிக்கு அவன் சதி செய்ய திட்டமிடுகின்றான்.

சில சமயங்களில், நீங்கள் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, உங்களை வெட்கப்படுத்த அல்லது திசை திருப்ப, சாத்தான் ஒரு தீய எண்ணத்தை போட்டு விடுவான். இதைக் குறித்து அதிர்ச்சியோ, அவமானமோ அடையக் கூடாது; சாத்தான் உங்கள் ஜெபத்திற்குப் பயப்படுகின்றான்; அதைத் தடுப்பதற்கு அவன் என்ன வேண்டுமானாலும் செய்ய முற்படுவான். “எப்படி இப்படியொரு எண்ணம் எனக்கு உண்டாகலாம்?” என்று உங்களையே தீர்ப்புக்குட்படுத்தாதேயுங்கள். அதை சாத்தானிடமிருந்து வந்த கவன ஈர்ப்பு என்று கருதி, உடனே, உங்கள் மனதை மீண்டும் தேவன் பேரில் பதித்து விடுங்கள்.

உங்களுக்கு வரும் சோதனையின் மாதிரியைக் கண்டுகொண்டு, அதற்கு ஆயத்தமாக இருங்கள். சில நேரங்களில், நீங்கள் சோதனையால் தாக்கப்படுவதற்கு அதிக வாய்ப்பளிக்கும் சில சந்தர்ப்ப சூழ்நிலைகள் உருவாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகள், நீங்கள் உடன்தானே விழுந்துவிட ஏதுவாகும் சோதனை சூழ்நிலைகள். சில சந்தர்ப்பங்கள் உங்களை அவ்வளவாகத்

தொடாது. ஆனால், இவைகளோ, உங்கள் பலவீனத்திற்குரிய தனிப்பட்ட சோதனைகள். இது உங்களுக்காகவே தனிப்பட்ட தாக்குதல் என்பதை அடையாளம் கண்டுகொள்ளுங்கள்; ஏனெனில், சாத்தானுக்கு அது தெரியும். எது உங்களைத் தடுக்கி விழச் செய்யுமென்பது சாத்தானுக்குத் தெரியும். உங்களை அந்தச் சூழ்நிலைகளுக்குள் தள்ளுவதையே அவன் தொடர்ந்து செய்து கொண்டிருப்பான். ***"விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியான பிசாசானவன் உங்கள் மீது பாய தயாராக இருக்கின்றான்; உங்களைத் தூங்குகின்றவர்களாகக் கண்டுபிடித்துக்கொள்ளுவதே அவனுக்கு அதிக விருப்பம்" - உங்கள் எதிராளியான பிசாசானவன் எவனை விழுங்கலாமென்று வகைதேடி சுற்றித் திரிகின்றான்***[10] என்று பேதுரு எச்சரிக்கின்றார்.



உங்களையே கேட்டுக் கொள்ளுங்கள்: "நான் ***எப்போது*** மிக அதிகமாக சோதிக்கப்படுகின்றேன்? வாரத்தின் ***எந்த நாளில்?*** நாளில் ***எந்த நேரம்?"*** கேளுங்கள், ***எங்கே*** நான் அதிகமாக சோதிக்கப்படுகின்றேன்? வேலை ஸ்தலத்திலா? வீட்டிலா? அண்டை வீட்டிலா? மது அங்காடியின் அருகே செல்லும்போதா? விமான நிலையத்திலா? அல்லது டவுனுக்கு வெளியேயுள்ள உணவு விடுதியிலா?"

கேளுங்கள், ''நான் அதிகமாக சோதிக்கப்படும்போது ***என்னோடிருப்பது யார்?*** நண்பர்களா? உடன் ஊழியரா? ஒரு கூட்டம் அந்நியரா? நான் தனிமையாக இருக்கும்போதா? அத்துடன் கேளுங்கள், 'நான் அதிகமாக சோதிக்கப்படும்போது ***நான் என்ன உணர்வடைகின்றேன்?***'' நீங்கள் களைத்து அல்லது தனிமையுணர்விலிருக்கும்போதா? சலிப்படைந்திருக்கும்போதா? அல்லது மனச்சோர்வு அல்லது அழுத்தம் பெற்றிருக்கும்போதா? உங்கள் மனம் புண்பட்டு, கோபத்தில் அல்லது கவலையிலிருக்கும் போதா? அல்லது சில நேரங்களில், ஒரு பெரிய வெற்றி அல்லது ஆவிக்குரிய உன்னதமான அனுபவத்திற்குப் பிறகா?

உங்கள் குறிப்பிட்ட சோதனை வடிவத்தை நீங்கள் அடையாளம் கண்டுகொண்டு, கூடுமானவரை அந்தச் சூழ்நிலைகளை விட்டு விலகப் பார்க்க வேண்டும். வேதம், மீண்டும் மீண்டும் சோதனையை எதிர்பார்த்து அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு கூறுகின்றது." *"பிசாசுக்கு இடங்கொடாமலுமிருங்கள்"*[12] என்று பவுல் கூறினார். ஞானமுள்ள திட்டமிடுதல் சோதனையைக் குறைக்கும். நீதிமொழிகளின் ஆலோசனையைப் பின்பற்றுங்கள், ***"நீங்கள் செய்வதை சரியாகத் திட்டமிடுங்கள்... தீமைக்கு விலகி, நேராக நடந்து செல்லுங்கள், நேர் பாதையை விட்டு ஒரு அடி கூட விலகாதிருங்கள்."***[13] ***"தேவனுடைய பிள்ளைகள் தீய வழிகளுக்கு விலகி, தங்கள் நடையைக் காத்துக் கொள்ளுகின்றார்கள்."***[14]

தேவனுடைய உதவியைக் கேளுங்கள். பரலோகத்தை 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளக்கூடிய அவசரத் தொடர்பு எப்பொழுதுமே இருக்கின்றது. சோதனையை மேற்கொள்ள நீங்கள் தம்முடைய உதவியை நாடவேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். ***"ஆபத்து நேரத்தில் என்னை நோக்கிக் கூப்பிடு; நான் உனக்கு உத்தரவு அருளுவேன்; நீ என்னை மகிமைப்படுத்துவாய்"***[15] என்று அவர் கூறுகின்றார்.

நாள் இருபத்தாறு:
சோதனைகளின் மூலம் வளர்ச்சியடைதல்

இது ஒரு 'மின் அலை' (மைக்ரோவேவ்) ஜெபம் என்று நான் கூறுவேன்; ஏனெனில், அது விரைவானது, குறிப்பாகக் கேட்கின்றது. "உதவி! காப்பாற்றுங்கள்!" சோதனை வந்து தாக்கும்போது தேவனோடு நீண்ட சம்பாஷணை செய்ய உங்களுக்கு கால அவகாசமிருக்காது. நீங்கள் அப்படியே கூப்பிடுவீர்கள்.

தாவீது, தானியேல், பேதுரு, பவுல் மற்றும் ஆயிரக்கணக்கானோர் இப்படிப்பட்ட ஆபத்தில் உடனடி உதவி கேட்கும் ஜெபத்தைச் செய்திருக்கின்றார்கள்.

இயேசு, நமது போராட்டத்தைக் குறித்து மனதுருக்கமடைவதால், அவருக்கு நமது அபயக் குரல் கேட்கும் என்று வேதம் உறுதி கூறுகின்றது. நாம் எதிர்கொள்ளும் அதே சோதனைகளையே இயேசுவும் எதிர்கொண்டார். அவர், ***"நம்மைப்போல***

சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராயிருக்கின்றபடியால், அவர் சோதிக்கப்படுகின்றவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக் கின்றார்."[16]

நாம் சோதனைகளைத் தோற்கடிக்க வேண்டுமென்று தேவன் காத்துக் கொண்டிருப்பதால், நாம் ஏன் அவரிடம் அதிக நேரம் திரும்பக் கூடாது? உண்மையில், சில வேளைகளில், நாம் உதவி பெறுவதை விரும்புவதில்லை! அது தவறு என்று தெரிந்தும் நாம் சோதனைக்கு இடங்கொடுக்க ஆசைப்படுகின்றோம். அப்படிப்பட்ட நேரங்களில் நமக்கு எது நல்லதென, தேவனைவிட நமக்கு அதிகமாகத் தெரியுமென்பதுபோல நாம் நடந்து கொள்ளுகின்றோம்.

வேறு சில நேரங்களில், அந்த ஒரே சோதனைக்கு நாம் மீண்டும் மீண்டும் இடங்கொடுக்கின்றபடியால், தேவனிடம் உதவி கேட்க நாம் வெட்கப்பட்டுத் திகைக்கின்றோம். ஆனால், தேவன் ஒருபோதும் எரிச்சலோ, சலிப்போ, பொறுமையற்ற நிலையோ அடைவதே இல்லை. ***"ஆகையால், ஏற்ற காலத்திலே கிருபையையும், இரக்கத்தையும் பெறுவதற்காக நாம் தைரியமாகக் கிருபாசனத்தண்டையிலே கிட்டிச் சேரக்கடவோம்"***[17] என்று வேதம் கூறுகின்றது.

தேவனுடைய அன்பு என்றும் நிலைக்கும்; அவருடைய பொறுமை என்றைக்குமுள்ளது. ஒரு குறிப்பிட்ட சோதனையை மேற்கொள்ள ஒரு நாளைக்கு இருநூறு தடவை தேவனுடைய உதவி கேட்டுக் கூப்பிட்டாலும், அவர் இரக்கமும் கிருபையும் காண்பிக்க இன்னும் ஆவலுள்ளவராகவே இருக்கின்றார். ஆகவே, தைரியமாகக் கிட்டிச் சேருங்கள். சரியான காரியம் செய்யத் தேவையான வல்லமையைக் கேட்டு, அதைத் தருவாரென்று எதிர்பாருங்கள்.

சோதனைகள் நம்மைத் தேவனைச் சார்ந்து கொள்ளச் செய்கின்றன. மரத்திற்கு எதிராகக் காற்றடிக்க அடிக்க அதன் வேர்கள் பலங்கொள்ளுவதுபோல, ஒவ்வொருமுறை நீங்கள் சோதனையை எதிர்த்து வெற்றி பெறும்போதும் நீங்கள் இயேசுவைப் போலாகின்றீர்கள். நீங்கள் தடுக்கி விழும்போது, விழத்தான் செய்வீர்கள். அது சாவுக்கேதுவானதல்ல. ஆனால், இடங்கொடுத்தல் அல்லது விட்டுவிடுதல் போன்ற காரியங்களுக்குப் பதிலாக, அவர்

உங்களுக்கு உதவி செய்வாரென்று எதிர்பாருங்கள்; உங்களுக்காகக் காத்திருக்கும் பலனை நினைவுகூருங்கள். *"சோதிக்கப்பட்டு, இடங்கொடாதிருக்கின்றவர்கள் மனுஷன் சந்தோஷப்படக்கடவர்கள்; அவர்கள் உத்தமரென்று விளங்கின பின்பு, தேவன் வாக்குத்தத்தம் பண்ணிய நித்திய ஜீவனை அவர்கள் பெறுவார்கள்."*[18]

நாள் இருபத்தாறு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: ஒவ்வொரு சோதனையும் நன்மை செய்வதற்கு ஒரு வாய்ப்பு.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"சோதனையைச் சகிக்கின்ற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கின பின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்."* யாக்கோபு 1:12

ஆய்வுக்கான ஒரு கேள்வி: நான் அடிக்கடி எதிர்கொள்ளும் அந்த சோதனையை மேற்கொள்ளுவதன் மூலம் கிறிஸ்துவைப்போன்ற குணங்களில் எந்த குணத்தை நான் வளர்த்துக் கொள்ள முடியும்?

சோதனையைத் தோற்கடித்தல்

தீமையான எண்ணங்களைத் தரும் எல்லாவற்றையும்விட்டு ஓடிவிடுங்கள்... நன்மையானதைச் செய்ய விரும்ப வைக்கும் எதற்கும் அருகாமையிலிருங்கள்.

2 தீமோத்தேயு 2:22 (புதிய மொழியாக்கம்)

மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பி கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

1 கொரிந்தியர் 10:13

எப்பொழுதுமே தப்பித்துக்கொள்ளும்படியான ஒரு வழியுண்டு.

சில சமயங்களில் ஒரு சோதனை மிகவும் பலமானதாகத் தோன்றும்; உங்களால் தாங்க முடியாதது போன்று தோன்றும். ஆனால், அது சாத்தான் கூறும் பொய். உங்களுக்குள்ளே அந்த சோதனையைக் கையாளக்கூடிய சக்திக்கு *மேலாக* யாரும் சோதிக்கப்பட அனுமதிக்க மாட்டேனென்று தேவன் கூறியிருக்கின்றார். நீங்கள் மேற்கொள்ள முடியாத சோதனை எதையும் அவர் அனுமதிக்கமாட்டார். ஆயினும், சோதனையைத் தோற்கடிக்கக் கூடிய வேதாகமத்திலுள்ள முக்கிய வழிமுறைகள் நான்கைப் பயிற்சி செய்து நீங்களும் உங்கள் பங்கைச் செய்ய வேண்டும்.

உங்களது ஒருமித்த கவனத்தை மீண்டும் வேறு எதன் மீதாவது திருப்புங்கள். 'சோதனைக்கு எதிர்த்து நில்லுங்கள்' என்று வேதாகமத்தில் ***ஒரு இடத்தில்கூட*** குறிப்பிடப்படவில்லையென்பது உங்களுக்கு ஆச்சரியமாயிருக்கலாம். ***'பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்!'***[1] என்று கூறப்பட்டுள்ளது; ஆனால், அது ***மிகவும் வித்தியாசம்*** (அதைப் பின்னர் விளக்குகின்றேன்). ஒரு எண்ணத்துக்கு எதிர்த்து நிற்பது சரியாக வராது; ஆகவே, நாம் நமது கவனத்தைத் திசை திருப்ப வேண்டுமென்று நமக்கு அறிவுரை தரப்படுகின்றது. ஒரு எண்ணத்துக்கு எதிர்த்து நின்றால், அதன் கவர்ச்சி அதிகமாகும்; தவறான காரியத்தின்மீது நமது கவனம் இன்னும் அதிகரிக்கும். நான் விளக்கிக் கூறுகின்றேன்.

பாவத்திற்கான யுத்தம் உங்கள் மனதிலேயே ஜெயிக்கும் அல்லது தோற்கடிக்கப்படும்; உங்கள் கவனத்தைக் கவருவது எதுவோ, அதுவே உங்களைப் பிடித்துக் கொள்ளும்.

உங்கள் மனதிலிருந்து ஒரு எண்ணத்தை தடுக்க நீங்கள் முயற்சிக்கும்போதெல்லாம், நீங்கள் உங்கள் நினைவில் அதை இன்னும் அதிகமாக அனுப்புகின்றீர்கள். எதிர்ப்பதன் மூலம் நீங்கள் அதை மீண்டும் வலியுறுத்துகின்றீர்கள். இது குறிப்பாக சோதனைகளுக்கும் பொருந்தும்; சோதனைக்கான உணர்வுகளுக்கு விரோதமாகப் போராடி நீங்கள் அதைத் தோற்கடிக்க முடியாது; நீங்கள் ஒரு உணர்வுக்கு விரோதமாகப் போராடப் போராட அது உங்களை அதிகமாக ஆட்கொண்டு, உங்களைக் கட்டுப்படுத்தும். அதை நினைக்கும் ஒவ்வொரு முறையும் நீங்கள் அதை வலுப்படுத்துகின்றீர்கள்.

சோதனை எப்பொழுதுமே ஒரு எண்ணத்தில் ஆரம்பிப்பதால், அதன் கவர்ச்சியை விரைவாகக் குறைக்கக்கூடிய ஒரே வழி, உங்கள் கவனத்தை வேறு எதன் மீதாவது திருப்பி விடுவதுதான். அந்த எண்ணத்தோடு யுத்தம் செய்ய வேண்டாம்; உங்கள் மனதின் வாய்க்காலை மட்டும் திருப்பி விடுங்கள்; இன்னொரு எண்ணத்தில் ஆர்வம் கொள்ளுங்கள்; இது, சோதனையைத் தோற்கடிப்பதில் முதற்படி.

பாவத்திற்கான யுத்தம் உங்கள் மனதிலேயே வெற்றி பெறும் அல்லது தோற்கடிக்கப்படும் உங்கள் கவனத்தைக் கவருவது எதுவோ, அதுவே உங்களை மேற்கொண்டு விடும். அதனால்தான் யோபு, *'ஒரு கன்னிகையை இச்சையோடு பார்க்காதபடி நான் என் கண்களோடே ஒரு உடன்படிக்கை பண்ணினேன்''*[2] என்று கூறினார். *''பிரயோஜனமில்லாதவைகளுக்குக் கவனம் செலுத்தாதபடி என்னைக் காத்துக் கொள்ளும்''*[3] என்று தாவீது ஜெபித்தார்.

தொலைக்காட்சியில் உணவுக்கான விளம்பரத்தைப் பார்த்ததும் திடீரென்று பசியெடுப்பதுபோல எப்போதாவது உணர்ந் திருக்கின்றீர்களா? யாராவது ஒருவர் இருமுவதைக் கேட்டுக் கொண்டிருந்து, உங்கள் தொண்டையையும் சரிசெய்ய வேண்டுமென்பதைப்போல உணர்ந்திருக்கின்றீர்களா? யாராவது ஒருவர் ஒரு பெரிய கொட்டாவி விட்டதைப் பார்த்து நீங்களும் கொட்டாவி விட வேண்டுமென்பதாக உணர்ந்திருக்கின்றீர்களா? (இதை வாசித்துக் கொண்டிருக்கும்போதே நீங்கள், இப்போதே, கொட்டாவி விட்டுக் கொண்டிருக்கலாம்!) அதுதான், ஒரு எண்ணத்தை எண்ணுவதன் சக்தி. நாம் எதன்மீது கவனத்தை வைக்கின்றோமோ அதற்கு நேராக இயற்கையாக இழுக்கப்படுகின்றோம். எதைக் குறித்து அதிகமாக எண்ணுகின்றோமோ அந்த அளவுக்கு வலுவாக அது உங்களைப் பற்றிப் பிடித்துக் கொள்ளும்.

''நான் அளவுக்கு மீறி சாப்பிடுவதை நிறுத்த வேண்டும்... புகைபிடிப்பதை நிறுத்த வேண்டும்... இச்சிப்பதை நிறுத்த வேண்டும்'' என்று முயலுவது தோல்வி தரும் யுக்தி. அது உங்களுக்கு வேண்டாத காரியத்தின்மீது கவனத்தை வைப்பதற்கு உங்களை வழி நடத்தும். அது தன்னையே தோற்கடித்து விடும் உபாயம். ''எங்க அம்மா செய்ததைபோல நான் இனி ஒருபோதும் செய்யமாட்டேன்'' என்று அறிவிப்பது போன்றது; அப்படி செய்யும்போது, அதை மீண்டும் செய்வதற்குத்தான் நீங்கள் உங்களைத் தயார் செய்கின்றீர்கள்.

அநேக உணவு பற்றிய தீர்மானங்கள் தோல்வியடைக் காரணம் எந்த நேரமும் உணவை பற்றியே சிந்திக்க வைப்பதுதான். அது

நீங்கள் பசியோடு இருப்பதை உறுதி செய்து கொண்டே இருக்கும். "பயப்படாதே" என்று தனக்குள்ளேயே கூறி, பயத்தை மேற்கொள்ள முயற்சிக்கும் பேச்சாளர், பயத்துக்குத் தன்னை இலக்காக்குகின்றார்! தனது பய உணர்வு தவிர வேறு எதிலாவது கவனம் செலுத்தினால், அவருடைய பேச்சின் முக்கியஸ்தரான தேவன் மீது அல்லது கூடி வருவோரின் தேவை மீது – தன் கவனத்தைப் பதிய வைத்தால் பயத்தை மேற்கொள்ள முடியும்.

சோதனைகள், உங்கள் கவனத்தைப் பற்றிப் பிடிக்க ஆரம்பிக்கின்றன. உங்கள் கவனத்தைக் கவருவது எதுவோ, அது உங்கள் உணர்வுகளைத் தூண்டிவிடும். பின்பு, உணர்வுகள் நடத்தையைத் தூண்டும்; நீங்கள் உணருவதன்படி செயல்பட ஆரம்பிப்பீர்கள். "இதைச் செய்ய எனக்கு விருப்பமேயில்லை" என்று நீங்கள் உங்கள் கவனத்தையெல்லாம் அதில் வைக்க, வைக்க, அது உங்களை இன்னும் பலமாகத் தன் வலைக்குள் இழுத்துக் கொள்ளும்.

ஒரு சோதனையை எதிர்த்துப் போராடுவதை விட, அதைப் பொருட் படுத்தாது விட்டுவிடுவது அதிக பலனைத் தரும். உங்கள் மனது வேறு எதன் மீதாவது இருக்கும்போது, சோதனை தன் வலிமையை இழக்கின்றது. ஆகவே, சோதனைகள் தொலைபேசியில் உங்களை அழைக்கும்போது, எதிர்த்து வாக்குவாதம் செய்யாமல், அப்படியே தொடர்பைத் துண்டித்து விடுங்கள்!



சில சமயங்களில், சோதனையை உண்டாக்கும் இடத்தைவிட்டு, சரீரப் பிரகாரமாக நான் விலகிப் போய்விட வேண்டும். சில வேளைகளில், எழுத்தின்படியே அந்த இடத்தை விட்டு ஓட வேண்டியிருக்கும். சில வேளைகளில், எழும்பி, அந்தத் தொலைக்காட்சி பெட்டியை மூட வேண்டியதிருக்கும். வம்பு பேசும் அந்தக் கும்பலை விட்டு வெளியேறிப் போய் விடுங்கள். படக்காட்சியின் நடுவிலேயே படக்காட்சி அரங்கத்தை விட்டு வெளியேறி

விடுங்கள். தேனீக்கள் கொட்டாதிருக்க, தேன் கூட்டை விட்டே விலகியிருங்கள். உங்கள் கவனத்தை வேறு எதன்மீதாவது திருப்ப உங்களாலானதைச் செய்யுங்கள்.

ஆவிக்குரிய ரீதியில், உங்கள் மனதுதான் எளிதில் தாக்கப்படக்கூடிய பகுதி. சோதனையைக் குறைக்க, தேவனுடைய வார்த்தையினாலும் உங்கள் மனதை, மற்ற நற்சிந்தைகளினால் நிரப்புங்கள். மோசமான எண்ணங்களை, அவற்றைவிட நலமானவைகளைக் கொண்டு இடமாற்றம் செய்து விடுங்கள். இதுதான், மாறுதலின் கோட்பாடு. தீமையை நன்மையினால் வெல்லுகின்றீர்கள்.[4] உங்கள் மனது வேறு ஒன்றின் மீது வைக்கப்படும்போது, சாத்தான் உங்கள் கவனத்தைக் கவர முடியாது. அதனால்தான், வேதம், நமது மனதை ஒருமுகப்படுத்துமாறு நமக்கு அடிக்கடி அறிவுரை கூறுகின்றது. *“உங்கள் மனதை இயேசுவின் மீது வையுங்கள்.”*[5] *“எப்போதும் இயேசு கிறிஸ்துவையே எண்ணிக் கொள்ளுங்கள்.”*[6] *“உண்மையுள்ளவைகள் எவைகளோ, ஒழுக்கமுள்ளவைகள் எவைகளோ, நீதியுள்ளவைகள் எவைகளோ, கற்புள்ளவைகள் எவைகளோ, அன்புள்ளவைகள் எவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகள் எவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ, அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.”*[7]

நீங்கள் சோதனையைத் தோற்கடிப்பதில் கருத்தாக இருந்தால், உங்கள் மனதைக் கவனித்து அதனுள் வருபவைகள் எவை என்பதில் கருத்தாக இருக்க வேண்டும். வாழ்ந்த மக்களிலேயே மிகுந்த ஞானி கூறியது, *“உங்கள் சிந்தனைகளைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; உங்கள் சிந்தைகளால் உங்கள் வாழ்க்கை வடிவமைக்கப்படும்.”*[8] குப்பைகளை மனதுக்குள் வரவிடாதிருங்கள். கவனமாக எதை சிந்திக்க வேண்டுமென்பதைத் தெரிந்தெடுங்கள். பவுலின் மாதிரியைப் பின்பற்றுங்கள்: *“எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படுத்தி சிறைப்படுத்துகின்றோம்.”*[9] இதற்கு வாழ்நாள் முழுவதும் பயிற்சி தேவை; ஆனால், பரிசுத்த ஆவியானவரின் உதவியால், நீங்கள் உங்கள் சிந்தைகளை ஒழுங்கு செய்ய முடியும்.

உங்கள் மனப்போராட்டத்தை தேவனுக்குப் பயந்த ஒரு நண்பர் அல்லது ஆதரவு தரும் ஒரு குழுவுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். முழு உலகத்திற்கும் எல்லாவற்றையும் கூற முடியாது; ஆனால்,

ஒரு நபரிடமாவது உங்கள் மனப்போராட்டத்தை உண்மையாகப் பகிர்ந்து கொள்ளுவது அவசியம். *"ஒண்டியாக இருப்பதிலும் ஒரு நண்பனோடு கூடியிருப்பது நலம்... நீ விழுந்தால், உன் நண்பன் உனக்கு உதவி செய்வான்; அருகில் நண்பனில்லாமல் நீ விழுந்தால், உண்மையில் உதவியற்றுக் கஷ்டப்பட வேண்டியதிருக்கும்"*[10] என்று வேதம் கூறுகின்றது.

நாள் இருபத்தேழு: சோதனையைத் தோற்கடித்தல்

நான் தெளிவாகக் கூறட்டும்: உங்களை விடாமல் பற்றிக் கொண்டிருக்கும் ஒரு குறிப்பிட்ட கெட்ட பழக்கம், போதைக்கு அடிமை அல்லது ஏதாகிலும் ஒரு சோதனை, எவ்வளவு முயற்சித்தும் தோல்விதான். அப்படிப்பட்ட குற்ற உணர்வுடன் போராடிக் கொண்டு, நீங்களாக அதனை மேற்கொள்ள முடியாது! உங்களுக்காக ஜெபிக்கும் ஒரு கூட்டாளி, உங்களை ஊக்குவித்து, உங்களுக்காக கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்ற உணர்வுள்ள ஒருவருடைய உதவி உங்களுக்குத் தேவை.

நீங்கள் விடுதலை பெற்று வளர்ச்சியடையும்படியான தேவ திட்டத்தில், மற்ற கிறிஸ்தவர்களுக்கு இடமுண்டு. உங்களை விட்டு விலக மறுக்கும் பாவத்தோடு நீங்கள் தனிமையில் போராடுவதற்கு மாற்று மருந்து, உண்மையான கிறிஸ்தவ ஐக்கியம். அது ஒன்றுதான், நீங்கள் விடுதலையடையும் வழி என்று தேவன் கூறுகின்றார். *"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு ஒருவர் குற்றத்தை ஒருவருக்கு அறிக்கையிடுங்கள்."*[11]

உங்களை விடாது பற்றிக் கொண்டு மீண்டும், மீண்டும் உங்களைத் தோற்கடித்துக் கொண்டிருக்கும் சோதனையிலிருந்து உண்மையிலேயே விடுதலை பெற விரும்புகின்றீர்களா? தேவனுடைய தீர்வு தெளிவாக இருக்கின்றது: "அதை அமுக்கிப் போட வேண்டாம்; அதை அறிக்கையிடுங்கள்! அதை மறைக்க வேண்டாம், வெளிப்படுத்துங்கள். உங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துதலே ஆரோக்கியத்தின் ஆரம்பம்".

உங்கள் மனக்காயத்தை மறைத்து வைப்பது காயத்தை இன்னும் அதிகரிக்கும். பிரச்சனைகள், இருளில் வளர்ச்சியடைந்து,

பெரிதாகிக் கொண்டேபோகும்; ஆனால், சத்தியமென்னும் ஒளிக்குக் கொண்டு வரப்பட்டால் அவை சுருங்கிப் போகும். உங்கள் இரகசியங்களை பொருத்ததுதான், உங்களது அவல நிலை. ஆகவே, உங்கள் முகமூடியைக் களைந்துவிட்டு, நீங்கள் பரிபூரணரென்பதாகப் பாசாங்கு செய்வதை நிறுத்தி விட்டு, விடுதலைக்குள் கடந்து செல்லுங்கள்.

உண்மை என்னவென்றால், எதைப் பற்றி உங்களால் பேச முடியாதிருக்கின்றதோ, அது ஏற்கனவே உங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பால் போய்விட்டது.

சேடில்பேக் சபையில், பார்வைக்கு இனி நம்பிக்கையில்லை என்று கூறுமளவுக்கு இருந்த அடிமைத் தனங்கள், விடாப்பிடி சோதனைகள் ஆகியவைகளோடு இருக்கும் மக்களுக்கு, "சுகத்தைக் கொண்டாடுங்கள்" என்ற திட்டத்தின் மூலம் வெளிவருவதற்கு உதவி செய்கின்றோம். இது வேத ஆதாரத்துடன் செயல்படும் எட்டுப் படிகள் கொண்ட சுகமாகும் திட்டம். இயேசுவின் பாக்கிய வசனங்களை அடிப்படையாகக் கொண்ட திட்டம். சிறு குழுக்களில் கட்டியெழுப்பப் படும் திட்டம். கடந்த 10 வருடங்கள், 5000க்கும் மேற்பட்ட வாழ்க்கைகள், பலவிதமான பழக்கவழக்கங்கள், மனக்காயங்கள், அடிமைத்தனங்களிலிருந்து விடுதலை பெற்றுள்ளன; இன்று அந்த திட்டத்தை ஆயிரக்கணக்கான சபைகளில் பயன்படுத்தி வருகின்றனர்; உங்கள் சபைக்கும் நான் இதைச் சிபாரிசு செய்கின்றேன்.

உங்கள் பாவமும், உங்களுக்கு வந்திருக்கும் சோதனையும் வேறு யாருக்குமே இதுவரை வந்திராத தனிப்பட்டதென்றும், ஆகவே, அதை வெளியே சொல்ல முடியாத இரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டுமென்றும் சாத்தான் உங்களை நினைக்க வைப்பான். உண்மையில் எல்லாருடைய சோதனையும் ஒன்றுதான்; எல்லாருக்கும் வரும் சோதனைதான் உங்களுக்கும் வந்திருக்கின்றது.[12] நாமனைவரும் *''பாவஞ் செய்திருக்கின்றோம்.''*[13] பல்லாயிரக்கணக்கான மக்கள் நீங்கள் உணருவதுபோலவே உணர்ந்து, இப்போது நீங்கள்

எதிர்கொண்டிருக்கும் அதே போராட்டத்தை சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

நமது குற்றங்களை மறைக்கப் பார்ப்பது நமது பெருமை. நாம் எல்லாவற்றையும் 'கட்டுப்பாட்டுக்குள்' வைத்திருப்பதுபோல பிறர் முன் காட்டிக்கொள்ள விரும்புகின்றோம். எதைப் பற்றி உங்களால் பேச முடியவில்லையோ, அது, ஏற்கனவே உங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பால் போய்விட்டதென்பதுதான் உண்மை. உங்கள் பொருளாதார, திருமண, குழந்தைகள், சிந்தைகள், பாலியல், இரகசியப் பழக்கவழக்கங்கள் அல்லது வேறு ஏதாவது சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் எதுவானாலும், நீங்களாகக் கையாளக் கூடியதாக இருந்தால், இதற்குள்ளேயே அது தீர்க்கப்பட்டுப் போயிருக்கும். ஆனால், உங்களால் முடியாதபடியால், உறுதியான தீர்மான தன்மையும், தனிப்பட்ட பலமும், பரிகாரமும் இதற்குப் போதாது.

சில பிரச்சனைகள் நீங்களாகத் தீர்த்துக்கொள்ள முடியாத அளவு பழகிப்போன, பெரிய பிரச்சனைகளாக இருக்கும். ஒரு சிறு குழு அல்லது உங்களுக்காகப் பொறுப்பெடுக்கக்கூடிய ஒரு பங்காளர் உங்களை ஊக்குவித்து, ஆதரவளித்து, உங்களுக்காக ஜெபித்து, நிபந்தனையின்றி உங்களை நேசிக்கக்கூடிய ஒருவருடைய உதவி உங்களுக்குத் தேவை. பின்னர், நீங்களும் அவர்களுக்காக அதைச் செய்யக்கூடும்.

“இது வரை நான் இதை யாரிடமும் சொன்னதே இல்லை” என்று யாராவது ஒருவர் என்னிடம் கூறினால், அந்த நபர் இதினிமித்தம் அனுபவிக்கும் விடுதலையுணர்வையும், பெரிய ஆறுதலையும் எண்ணி நான் பரவசப்படுவதுண்டு; அங்கேதான், அழுத்தத்தின் கதவுகள் திறக்கப்படுகின்றது. அவர்கள் வாழ்க்கையில் முதன் முறையாக ஒரு நம்பிக்கை ஒளியை அவர்கள் இனிக் காணப் போகின்றார்கள். நமது போராட்டங்களை ஒரு தேவபக்தியுள்ள நண்பரிடம் ஒத்துக்கொண்டு, தேவன் கூறியபடி செய்வது விடுதலையைத் தரும்.

நான் உங்களிடம் ஒரு கடினமான கேள்வியை கேட்கட்டும். உங்கள் வாழ்க்கையில் இது ஒரு பிரச்சனையேயல்ல என்று எதைக் குறித்துப் பாசாங்கு செய்து கொண்டிருக்கின்றீர்கள்? எதைக் குறித்துப்

பேசவே பயப்படுகின்றீர்கள்? நீங்களாக அதைத் தீர்த்துக் கொள்ளவே முடியாது. நமது பலவீனங்களைப் பிறரிடம் ஒத்துக் கொள்ளுவது, கூனிக் குறுக வைக்கும் காரியம்தான்; ஆனால், நீங்கள் நல்ல நிலையை அடையாமல் தடுப்பது இந்த தாழ்மைக் குறைவுதான். *"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கின்றார்; தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபையளிக்கின்றார்; ஆகவே, கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள்"*[14] என்று வேதம் கூறுகின்றது.

பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். நாம் நம்மைத் தாழ்த்தி, தேவனுக்குக் கீழ்ப்பட்ட பின்னர், பிசாசுக்கு நாம் எதிர்த்து நிற்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றோம். *"பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்; அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்."* என்று யாக்கோபு 4:7 கூறுகின்றது. நாம் அவனுடைய தாக்குதல்களை செயலற்று ஏற்றுக்கொள்ளாமல், நாம் எதிர்த்துப் போராட வேண்டும்.

புதிய ஏற்பாடு, கிறிஸ்தவ வாழ்க்கையை விவரிக்க தீய சக்திகளுக்கு எதிரான ஆவிக்குரிய போராட்டம், யுத்தம், சண்டை, ஜெயித்தல், போராடுதல், மேற்கொள்ளுதல் போன்ற பதங்களைப் பயன்படுத்துகின்றது. கிறிஸ்தவர்கள், பகைவனுடைய பிரதேசத்தில் பணிபுரியும் படைவீரருக்கு அடிக்கடி ஒப்பிடப்படுகின்றனர்.

நாம் பிசாசுக்கு எப்படி எதிர்த்து நிற்க முடியும்? *"இரட்சணிய மென்னும் தலைச்சீராவைத் தரித்துக் கொண்டு தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தைக் கையில் எடுத்துக் கொண்டு"*[15] போராடக் கூறுகின்றார் பவுல். நமது மனம் தேவனால் பாதுகாக்கப்படுகின்றது. இதை நினைவில் கொள்ளுங்கள்: நீங்கள் ஒரு விசுவாசியாக இருந்தால், சாத்தான் ஏதாவது செய்யும்படி உங்களைக் கட்டாயப்படுத்தவே முடியாது. அவன் அந்த எண்ணத்தை உங்கள் உள்ளத்தில் போடுவான், அவ்வளவுதான்.

இரண்டாவதாக, சாத்தானுக்கு விரோதமாக, நீங்கள் தேவனுடைய வசனத்தை ஒரு ஆயுதமாக எடுத்துக் கொள்ள வேண்டும். இயேசு வனாந்தரத்தில் சோதிக்கப்பட்டபொழுது, இதை முன் மாதிரியாகச் செய்து காண்பித்தார். சாத்தான் ஒரு சோதனையை முன் வைத்த ஒவ்வொரு நேரமும், இயேசு வேத வசனத்தை மேற்கோள் காட்டி

எதிர்த்தார். அவர் வாதாடவில்லை. ‘எனக்குப் பசியில்லை’ என்று கூறவில்லை. அவர் மனதிலிருந்த ஒரு வேத வசனத்தை மட்டும் பதிலாகக் கூறினார். நாமும் அப்படியே செய்ய வேண்டும். தேவனுடைய வார்த்தையில் வல்லமை உண்டு; சாத்தான் அதற்குப் பயப்படுகின்றான்.

பிசாசுடன் ஒருபோதும் தர்க்கம் செய்ய வேண்டாம். அவன் விவாதத்தில் உங்களை விடக் கெட்டிக்காரன். ஆயிரக்கணக்கான வருடங்கள் அதைப் பயிற்சி செய்தவன். உங்கள் கருத்து, நியாய ரீதியான வாக்குவாதம் இவற்றைக் கொண்டு நீங்கள் சாத்தானை ஏமாற்ற முடியாது; ஆனால், அவனை நடுங்க வைக்கும் ஆயுதமான, தேவ சத்தியத்தை, நீங்கள் பயன்படுத்த முடியும். அதனால்தான், வேத வசனங்களை மனப்பாடம் செய்தல், சாத்தானை ஜெயிக்கத் தேவையானது. சோதனை வரும்போது, நீங்கள் விரைந்து அதைப் பயன்படுத்த முடியும். இயேசுவைப்போல அதை உடனடியாகப் பிரயோகிக்கத் தயாராக, உங்கள் மனதில் அது சேர்த்து வைக்கப்பட வேண்டும்.

ஒரு வேத வசனமும் மனதில் தெரியாவிட்டால், உங்கள் மனது ஒரு தோட்டா இல்லாத துப்பாக்கியைப் போலிருக்கும்! உங்கள் வாழ்நாள் முழுவதும், வாரத்திற்கு ஒரு வசனம் கற்கும்படியாக உங்களை நான் கேட்கின்றேன். அப்படிச் செய்யும்போது, நீங்கள் எவ்வளவு பலமுள்ளவர்களாவீர்களென்று நினைத்துப் பாருங்கள்.

> ***சாத்தானோடு வாக்குவாதம் செய்ய ஒருபோதும் முயல வேண்டாம். அவன் தர்க்கம் புரிவதில், ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பயிற்சி பெற்றிருப்பதால், உங்களைவிட அவன் அதில் கெட்டிக்காரன்.***

நீங்கள் தாக்கப்படக் கூடியவர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள். ஒருபோதும் நாம் அளவுக்கு அதிகமாக நம்மீது நம்பிக்கை கொள்ளக்கூடாதென்று தேவன் நம்மை எச்சரிக்கின்றார். ***“எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக்கின்றது”***[16] என்று எரேமியா கூறினார். நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளுவதில்

நாம் சமர்த்தர்கள் என்பது இதன் பொருள். சரியான சந்தர்ப்ப சூழ்நிலை கிடைத்தால், நம்மில் யாருமே, எந்தப் பாவத்தையும் செய்யக் கூடியவர்கள். நாம் நமது பாதுகாப்பை ஒருபோதும் தளர்த்திவிட்டு நம்மை சோதனை ஒன்றும் செய்யாது என்று எண்ணவே கூடாது.

கவலையீனமாக, சோதனைக்குட்படப்பண்ணும் சூழ்நிலைகளில் உங்களை வைக்க வேண்டாம். அவற்றைவிட்டு விலகுங்கள்.[17] சோதனைக்குள் சிக்கி வெளியே வருவது, சோதனைக்குட்படாமல் விலகியிருப்பதைவிடக் கடினமென்பதை நினைவில் வையுங்கள். *"நீங்கள் கபடமாக இருக்க வேண்டாம்; உங்கள் மீதே அதிக நம்பிக்கை கொண்டு ஏமாந்து போகாதிருங்கள். மற்ற எல்லாரைப் போலவே நீங்களும் குப்புற விழுந்து விடக்கூடும். சுய நம்பிக்கையை மறந்து விடுங்கள். அது பயனற்றது. தேவ நம்பிக்கையை வளர்த்துக் கொள்ளுங்கள்"*[18] என்று வேதம் கூறுகின்றது.

நாள் இருபத்தேழு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: எப்பொழுதுமே தப்பித்துக் கொள்ளும்படியான ஒரு வழியுண்டு.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"தேவன் உண்மையுள்ளவரா யிருக்கின்றார். உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்குத் தப்பிக் கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்."* 1 கொரிந்தியர் 10:13

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தொடர்ந்து தொந்தரவு செய்யும் ஒரு சோதனையைத் தோற்கடிக்க, எனக்காக ஜெபிக்கும்படி, நான் எந்த நபரை எனது ஆவிக்குரிய பங்காளராக வைத்துக் கொள்ள வேண்டும்?

கிறிஸ்துவைப்போல மாறுவதற்குக் கால அவகாசம் தேவை

பூமியிலுள்ள ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமும், நேரமுமுண்டு.
பிரசங்கி 3:1 (புதிய மொழியாக்கம்)

உங்களில் நற்கிரியையைத் தொடங்கின தேவன் உங்களை சரியாக வழிநடத்தி, உங்களை அவரது கிருபையில் வளரச் செய்து, இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாள் மட்டும், உங்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற அவரது திட்டங்கள் யாவும், நிறைவேற்றி முடிக்கின்ற வரைக்கும் காப்பாரென்று நிச்சயித்திருக்கின்றேன்.
பிலிப்பியர் 1:5 (புதிய மொழியாக்கம்)

முதிர்ச்சிக்கு ஒரு குறுக்கு வழியே கிடையாது.

நாம் முதிர்ச்சியடைய நமக்குப் பல வருடங்களாகும். ஒரு கனி விளைந்து பழுப்பதற்கு ஒரு முழு காலம் கடக்க வேண்டும். இதுவே, ஆவியின் கனிக்கும் பொருந்தும். கிறிஸ்துவைப்போல குணம் வளர்ச்சியடைவதை விரைந்து செய்யமுடியாது. ஆவிக்குரிய வளர்ச்சியும், சரீர வளர்ச்சியைபோல காலம் எடுக்கும்.

ஒரு பழத்தை விரைந்து, காலத்திற்கு முன் பழுக்க வைக்க முயற்சித்தால், அதன் சுவை குன்றி விடும். அமெரிக்காவில், தக்காளி பழுக்கும் முன்பாகக் காய் பருவத்திலேயே, கடைகளுக்கு கப்பலில் அனுப்பப்படும்போது, கெட்டுப்போகாதபடி

பறிக்கப்படுகின்றன. அதன் பின்னர், அவை விற்கப்படும் முன்பு, இந்தப் பச்சைத் தக்காளிகளில் கரிமல வாயு (CO_2) தெளிக்கப்படுகின்றது; அவை உடனே சிவப்பாக மாறிவிடும். இப்படி வாயு (gas) தெளிக்கப்பட்ட தக்காளிப் பழங்களை நாம் தாராளமாக சாப்பிடலாம். ஆயினும், இயற்கையாக, மெதுவாக பழுக்கும் தக்காளியின் சுவைக்கு அவை ஈடாகவே முடியாது.

நாம் ***எவ்வளவு விரைவாக*** வளரலாமென நாம் பிரயாசப்படும்போது, தேவனோ, நாம் ***எவ்வளவு பலமுள்ளவர்களாக*** வளருகின்றோம் என்பதில் கரிசனையாக இருக்கின்றார். தேவன் நமது வாழ்க்கையை ***நித்தியத்திலிருந்து நித்தியத்திற்கு*** காண்பதால், அவர் அவசரப்படுவதே இல்லை.

இந்த ஆவிக்குரிய வளர்ச்சியை லேன் ஆதாம்ஸ் ஒரு முறை இரண்டாம் உலக யுத்தத்தில் நேசப் படையினர் பயன்படுத்திய யுக்திக்கு ஒப்பிடுகின்றார். தென் பசிபிக் தீவுகளை விடுதலை செய்ய அவர்கள் இந்த யுக்தியைப் பயன்படுத்தினார்கள். முதலில், அவர்கள் ஒரு தீவை மிருதுவாக்கி கரையிலுள்ள கப்பல்களிலிருந்து குண்டுகளைப் பொழிந்து எதிரியின் எதிர்தாக்குதலைப் பலவீனப்படுத்திவிடுவார்கள். அதன் பின், ஒரு குழு கடற்படை வீரர்கள் தீவைத் தாக்கி, கடற்கரை பகுதி ஒன்றை ஸ்தாபித்து விடுவார்கள் – அதாவது, தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட தீவின் மிகச் சிறிய பகுதி பீச் ஹெட் (beach head). அப்பகுதியைக் கைப்பற்றி உறுதி செய்ததும், தீவின் மீதப் பகுதியையும், ஒரு நேரத்தில் ஒரு சிறு பகுதி என்ற ரீதியில் விடுவித்து விடுவார்கள். நாளடைவில், முழுத் தீவும் அவர்கள் கட்டுப்பாட்டுக்குள் வரும்; ஆயினும், சில இழப்புகள் தரும் கடின யுத்தம் இல்லாமலிருக்காது.

நாம் எவ்வளவு விரைந்து வளருகிறோமென்பதைக் குறித்து நாம் கவலைப்படும்போது நாம் எவ்வளவு வலிமையாக வளருகிறோமென்பதைக் குறித்தே தேவன் கரிசனை கொள்ளுகின்றார்.

ஆதாம்ஸ் இதை இவ்வாறு ஒப்பிட்டார்: மனந்திரும்பும்போது, கிறிஸ்து

நமது வாழ்க்கைக்குள் படையெடுக்கும் முன்பு, நாம் சமாளிக்கக் கூடாத சில பிரச்சனைகளை அனுமதித்து நம்மை 'மிருதுவாக்குவார்.' ஒரு சிலர் கிறிஸ்து கதவைத் தட்டிய உடனே திறந்து விடுவார்கள். ஆனால், நம்மில் அநேகர் எதிர்த்து, தற்பாதுகாப்பு செய்து கொண்டே இருப்போம். மனந்திரும்புவதற்கு முந்தைய நமது அனுபவம், ***"இயேசு நம்மண்டை நின்று, இதோ, நான் வாசலண்டை நின்று தட்டுகின்றேன்"*** என்று சொல்லுவது போலிருக்கின்றது.

நீங்கள் கிறிஸ்துவுக்கு உங்களைத் திறந்து கொடுத்த அந்த வினாடியே, தேவனுக்கு ஒரு சிறு பகுதி (beach head) கிடைத்து விடுகின்றது. உங்கள் வாழ்க்கையை ***எல்லாம்*** ஒப்புக்கொடுத்து விட்டதாக நீங்கள் நினைத்துக் கொண்டாலும், உண்மையில் உங்களுக்கே தெரியாத அளவுக்கு, உங்கள் வாழ்க்கையில் இன்னும் பெரும் பகுதிகள் உள்ளன. நீங்கள் அந்த வினாடியில் உணரும் அளவை மட்டும் கொடுக்கின்றீர்கள். அது சரிதான். கிறிஸ்துவுக்கு இப்படி ஒரு கடற்கரைப் பகுதிபோல சிறிய பகுதி கிடைத்த உடனே அவர் இன்னும் அதிக இடத்தை எடுத்து எடுத்து, உங்கள் எல்லை யாவும் அவருடையதாகும் வரைக்கும் செயல்பட்டுக் கொண்டே இருப்பார். போராட்டங்களுண்டு, யுத்தங்களுண்டு; ஆனால், விளைவு ஒருபோதும் சந்தேகத்திற்கிடமில்லாமல், தேவன் வாக்குப் பண்ணியதுபோல, ***"உங்களில் நற்கிரியையைத் தொடங்கியவர், அதை முடிய நடத்தித் தீருவார்."***[1]

சீஷத்துவம் என்பது இயேசுவைப்போலாவது; ***"நம்மிலுள்ள கிறிஸ்துவின் நிறைவின் அளவுக்குத்தக்கதாக நாம் பரிபூரணம் அடைகின்றோம்"***[2] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் இறுதி இலக்கு, கிறிஸ்துவைப்போலாகுதல்; ஆனால், உங்கள் பயணமோ, வாழ்க்கை முழுவதும்.

இதுவரை, இந்தப் பயணம் விசுவாசித்தல் (ஆராதனை மூலமாக), சொந்தமாகுதல் (ஐக்கியத்தின் மூலமாக), மாறுதல் (சீஷத்துவம் மூலமாக) என்பவற்றை உள்ளடக்கியதென்பதைப் பார்த்தோம். ஒவ்வொரு நாளும், அதற்கு முந்தின நாளிலிருந்ததைவிட இன்னும் கொஞ்சம் நாம் அவரைப்போலாக வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்: ***"நீங்கள் புதிதாக்கப்பட்ட வாழ்க்கையில்,***

உங்களை உண்டாக்கினவரைப்போல மாறிக் கொண்டிருக்கும் புதிய வாழ்க்கையை ஆரம்பித்திருக்கின்றீர்கள்."[3]

வேகம், மனிதனை ஆட்டிப் படைக்கும் காலமாக இருக்கின்றது. ஆனால், தேவனோ, வேகத்தைவிட பலமாக நிலைத்திருப்பதிலேயே அதிக ஆர்வம் கொள்ளுகின்றார். நமக்கு உடனே ஒட்டும் பசை, குறுக்கு வழி, உடனுக்குடன் தீர்வு, ஆகிய இவற்றையே விரும்புகின்றோம். ஒரு பிரசங்கம், ஒரு கருத்தரங்கு, ஒரு அனுபவம் எல்லா பிரச்சனைகளையும் உடனே தீர்த்துவிடவேண்டும், எல்லா வலிகளிலுமிருந்து உடனே விடுதலை தர வேண்டுமென்று எண்ணுகின்றோம். நம்முடைய எல்லாப் பிரச்சனைகளையும் உடனடியாக தீர்க்கக்கூடிய, சகல சோதனைகளையும் அகற்றக்கூடிய, அதிகரிக்கும் அனைத்து வேதனைகளிலுமிருந்து நம்மை விடுவிக்கக்கூடிய, ஒரு பிரசங்கம், ஒரு கருத்தரங்கு அல்லது ஒரு அனுபவத்தையே நாம் விரும்புகின்றோம். ஆனால், மெய்யான முதிர்ச்சி ஒரு தனி அனுபவத்தின் பிரதிபலனல்ல. நீங்கள் எவ்வளவு வல்லமையுள்ளவர்கள் அல்லது எவ்வளவு வேகமாய் காரியங்களைச் செய்கின்றீர்கள் என்பது ஒரு பொருட்டல்ல. உள்ளான மனிதனின் வளர்ச்சி என்பது படிப்படியாகவே நடைபெறும் ஒரு காரியமாகும். ***"தேவன் நமது வாழ்க்கைக்குள் பிரவேசிக்கும்போது நாம் புதிதாக்கப்படுகின்றோம்; மேலும், நாம் அவரைப்போல மாறும்போது, நமது வாழ்க்கை படிப்படியாகப் பிரகாசமடைந்து, அழகாக மாறுகின்றது"***[4] என்று வேதம் கூறுகின்றது.

ஏன் இத்தனை நீண்ட காலம் பிடிக்கின்றது?

தேவனால் நம்மை ஒரு நொடியில் மாற்றக் *கூடுமென்றாலும்,* அவர் நம்மை மெதுவாகவே வளர்க்கத் தீர்மானித்திருக்கின்றார். இயேசு, தமது சீஷர்களை வளர்ப்பதில் குறிப்பாக இருந்தார். படிப்படியாக, இஸ்ரவேலரை வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தைக் ***'கொஞ்சம் கொஞ்சமாக***[5] தேவன் சுதந்தரிக்கப்பண்ணியதுபோல, நமது வாழ்க்கையிலும் கொஞ்சம் கொஞ்சமாக உயரும் படிகள் மூலம் கிரியை செய்வதையே அவர் விரும்புகின்றார்.

மாறுதலடைந்து வளர ஏன் இவ்வளவு காலம் எடுக்கப்படுகின்றது? இதற்குப் பல காரணங்களுண்டு.

நாம் மெதுவாகக் கற்பவர்களாக இருப்பதனால். ஒரு பாடத்தை நன்கு கற்க, அதை மீண்டும் மீண்டும் 40, 50 முறைகள் கற்க வேண்டியவர்கள் நாம். பிரச்சனைகள் மீண்டும் மீண்டும் வரும். நாம், "இனி வேண்டவே வேண்டாம், நான் இதை ஏற்கனவே கற்றுக் கொண்டேன்!" என்று நினைக்கின்றோம். ஆனால், தேவன் அதைவிட நன்றாக நம்மையறிவார். தேவன் நமக்குக் கற்றுத் தரும் பாடங்களை நாம் எவ்வளவு விரைவில் மறந்து விடுகின்றோமென்பதை இஸ்ரவேலர் சித்தரித்துக் காண்பிக்கின்றார்கள். எவ்வளவு சீக்கிரத்தில் நாம் பழைய வழிகளுக்குத் திரும்பி விடுகின்றோம்! நமக்கு மீண்டும் மீண்டும் சந்தர்ப்பங்கள் தேவை.



நாம் விட வேண்டிய காரியங்கள் அதிகம் இருப்பதனால்... வருடக் கணக்காகத் தங்களுக்குள் வளர்த்துக்கொண்ட தனிப்பட்ட பிரச்சனைகள் அல்லது உறவுத் தொடர்பான பிரச்சனைகளுடன் சிலர், ஏதாவது மன இயல் வல்லுநர்கள் அல்லது ஆலோசகரிடம் சென்று, "என்னைக் கொஞ்சம் சரி பண்ணி விடுங்கள்; ஒரு மணி நேரம் எனக்கு அவகாசம் இருக்கின்றது" என்று கூறுவதுண்டு! நீண்ட கால, ஆழ்ந்த வேர் கொண்ட ஒரு கஷ்டத்திற்கு அவர்கள் நொடிப் பொழுதில் நிவாரணம் தேடுகின்றார்கள். நமது பிரச்சனைகளில் பெரும்பாலானவையும் நமது கெட்ட பழக்கங்கள் அனைத்தும், ஒரே இரவில் வளர்ந்தவை அல்ல. ஆகவே, அவை உடனே தீர்ந்துபோக வேண்டுமென்று எதிர்பார்ப்பது சரியல்ல; வருடக் கணக்காக ஏற்படுத்தப்பட்ட அழிவை உடனடியாகத் தீர்த்து வைக்கக்கூடிய ஒரு மாத்திரையோ, ஜெபமோ, கொள்கையோ இல்லவே இல்லை. அகற்றப்பட்டு, நிரப்பப்பட வேண்டிய கடினமான வேலை அங்கு இருக்கின்றது. வேதம் இதை, ***'பழைய மனுஷனைக் களைந்து', 'புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளுதல்'***[6] என்று கூறுகின்றது. மனந்திரும்பியபோது உங்களுக்கு ஒரு புதிய சுபாவம் கொடுக்கப்பட்டாலும், இன்னும் அகற்றப்பட்டு, புதிய விதத்தில் நிரப்பப்பட வேண்டிய பழைய பழக்கவழக்கங்கள், வடிவங்கள், நடைமுறைப் பயிற்சிகள் இருக்கின்றன.

நம்மைக் குறித்த உண்மைகளை தாழ்மையோடு ஒத்துக்கொள்ள நாம் பயப்படுவதனால்... சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று நான் ஏற்கனவே உங்களுக்குக் கூறியிருக்கின்றேன். ஆனால், முதலில் அது நம்மை மிகவும் விசனத்திற்குள்ளாக்கும். நாம் உண்மையாக நமது குறைகளை நேருக்குநேர் பார்த்தால் என்னென்ன காரியங்களைப் பார்ப்போமென்ற பயம், அதுவே, நம்மை "மறுப்பு" என்ற சிறையில் அடைத்து வைக்கின்றது. நமது குற்றங்கள், தோல்விகள், உட்காயங்கள் இவற்றின் மீது, தேவன் தமது சத்திய ஒளியைப் பாய்ச்சுமாறு நாம் அனுமதி கொடுக்கும்போதுதான் நாம் அவற்றை மாற்றியமைக்க முடியும். இதனால்தான், தாழ்மையான கற்றுக் கொள்ளும் மனப்பான்மையின்றி நாம் வளரவே முடியாது.

வளர்ச்சி எப்பொழுதும் வேதனை நிறைந்ததாயும் பயப்படத்தக்கதாயும் இருக்கின்றபடியினால்... மாறுதலின்றி வளர்ச்சி இல்லை. பயம் அல்லது இழப்பு இல்லாமல், மாறுதல் இல்லை. வேதனை இல்லாமல் இழப்பு இல்லை. ஒவ்வொரு மாறுதலும் ஏதாவது ஒரு வகை இழப்பை உள்ளடக்கியிருக்கின்றது. புதிய வழிகளை அனுபவிக்க, நீங்கள் பழைய வழிகளை விட்டுக் கொடுக்க வேண்டும். நமது பழைய வழிகள் ஏமாற்றம் தருபவையாக இருந்தால்கூட, நைந்துபோன பழைய காலணிகளைப்போல, அவை வசதியுள்ளவைகளாக, பழகிப் போனவைகளாக இருக்கின்றபடியால், அவற்றை விட்டுவிட நமக்கு மனமில்லை.

> ***மாறுதலின்றி வளர்ச்சி இல்லை; பயம், இழப்பு இன்றி மாறுதல் இல்லை; வலியின்றி எந்தவொரு இழப்பும் இல்லை.***

மக்கள் பொதுவாகத் தங்கள் குறைகளை வைத்தே தங்களை அடையாளம் கண்டு கொள்ளுகின்றார்கள். "நான்... இப்படியிருப்பதுதான் வழக்கம்"; "இதுதான் எனக்குப் பழக்கம்" என்று குறைகளை வைத்தே பேசுகின்றோம். என்னுடைய இந்தப் பழக்கத்தை, என் உள் காயத்தை, நான் விட்டுவிட்டால், நான்

யாராக இருப்பேன்? இந்தப் பயம், நிச்சயமாக உங்கள் வளர்ச்சியை வேகமாக நடைபெறாதபடி குறைத்து விடும்.

பழக்கங்கள் வளர்ந்து நிலைக்க, காலம் எடுப்பதனால்... உங்கள் குணம், உங்கள் பழக்கவழக்கங்களின் ஒட்டு மொத்தம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நீங்கள் ***அன்பாக இருப்பது உங்கள் பழக்கமாக இல்லாவிட்டால்,*** நீங்கள் அன்பானவர்களென உரிமை பாராட்ட முடியாது. அது உங்கள் பழக்கமாக இருந்தால், அதைப்பற்றி நினைத்துக்கூடப் பார்க்காமலே நீங்கள் அன்பாக இருப்பீர்கள். எப்பொழுதும், உண்மையாக இருக்கும் ***பழக்கமில்லாவிட்டால்,*** நீங்கள் உத்தமரென்று உரிமை பாராட்ட முடியாது. தன் மனைவிக்குப் ***பெரும்பான்மையான*** நேரம் உண்மையாயிருக்கின்ற கணவன், உண்மையானவன் என்று கூற முடியாதே! உங்கள் பழக்க வழக்கங்கள் உங்கள் குணத்தை வரையறுக்கின்றன.

கிறிஸ்துவைப்போன்ற குணம் வளர்ச்சியடைய ஒரே ஒரு வழிதான் இருக்கின்றது. நீங்கள் அவற்றைப் பயிற்சி செய்ய வேண்டும் – அதற்குக் காலம் பிடிக்கும். உடனடிப் பழக்கவழக்கங்கள் என்று எதுவுமே கிடையாது. ***"இக்காரியங்களில் பழகு; உன் வளர்ச்சியை அனைவரும் காணும்படியாக உன் வாழ்க்கையை அவற்றுக்கு அர்ப்பணி"***[7] என்று பவுல் தீமோத்தேயுவிடம் கூறுகின்றார்.

நாள் இருபத்தெட்டு:
கிறிஸ்துவைப் போல மாறுவதற்குக் கால அவகாசம் தேவை

நீங்கள் எதையாவது காலப்போக்கில் பயிற்சி செய்தால், அதில் தேறி விடுவீர்கள். குணமும் திறமையும் வளர மீண்டும் மீண்டும் அதைச் செய்வது அவசியம். இப்படி குணத்தை வளர்க்கும் பழக்கவழக்கங்கள் 'ஆவிக்குரிய ஒழுக்கங்கள்' என்று அழைக்கப்படுகின்றன. இவற்றை எப்படிச் செய்ய வேண்டுமென்று கற்றுக் கொடுக்கும் அநேக புத்தகங்களிருக்கின்றன. ஆவிக்குரிய வளர்ச்சிக்காக சிபாரிசு செய்யப்படும் புத்தகங்களின் பட்டியலை காண இணைப்பு 2ஐ பாருங்கள்.

அவசரப்பட்டு எதையும் செய்ய வேண்டாம்

நீங்கள் ஆவிக்குரிய முதிர்ச்சி பெறும்போது, நீங்கள் அந்த வழிமுறையில் தேவனோடு ஒத்துழைக்க அநேக வழிகள் இருக்கின்றன.

நீங்கள் அதை உணராவிட்டாலும், தேவன் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்து கொண்டிருக்கின்றாரென்பதை விசுவாசியுங்கள். ஆவிக்குரிய வளர்ச்சி சில வேளைகளில் கடினமான வேலையாக இருக்கும்; ஒரு நேரம் ஒரு எட்டு; படிப்படியான வளர்ச்சியை எதிர்பாருங்கள். ***"ஒவ்வொன்றுக்கும் ஒரு காலமுண்டு. பூமியிலுள்ளவைகளுக்கெல்லாம் ஒரு காலமும் நேரமுமுண்டு"***[8] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையிலும் காலங்கள் உண்டு. சில சமயம் நீங்கள் குறுகிய கால, ஆழமான வளர்ச்சியடையலாம் (வசந்த காலம்); அதைத் தொடர்ந்து நிலைப்படுதல், சோதிக்கப்படுதல் வரலாம் (இலையுதிர்காலம், குளிர்காலம்).

உங்கள் வாழ்க்கையிலிருந்து அற்புதமாக நீக்கப்பட வேண்டுமென்று நீங்கள் விரும்பும் பிரச்சனைகள், பழக்கவழக்கங்கள், காயங்கள் இவற்றைப் பற்றி என்ன? ஒரு அற்புதத்திற்காக ஜெபிப்பது நல்லது; ஆனால், பதில் ஒரு படிப்படியான மாறுதல் மூலம் வந்தால் ஏமாற்றமடைய வேண்டாம். காலப்போக்கில், மெதுவாகத் தொடர்ந்து ஓடிக் கொண்டேயிருக்கும் ஒரு ஓடை, கடினமான பாறையைக் கூட அரித்து விடும்; பெரிய இராட்சதப் பாறைகளைக்கூட, கூழாங்கற்களாக உடைத்து விடும். ஒரு சிறு துளிராக வரும் 'ரெட்வுட்' மரம், காலப்போக்கில் ராட்சத மரமாக, 350 அடி உயரமுள்ளதாக வளரக்கூடும்.

நீங்கள் கற்றுக்கொண்டவற்றைக் குறித்து வைக்க ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக் கொள்ளுங்கள். இது நிகழ்ச்சிகளைக் குறிக்கும் நாட்குறிப்பு அல்ல; நீங்கள் கற்பவைகளைப் பதிவு செய்வது. தேவன் தம்மைப்பற்றிக் கற்றுக்கொடுக்கும் ஆழ்ந்த உண்மைகள், உங்களைப்பற்றி, வாழ்க்கை, உறவுகள்பற்றி, வேறு எதையும்பற்றி நீங்கள் கற்றுக்கொள்ளும் வேத அடிப்படைப்

பாடங்களை எழுதுங்கள். நீங்கள் அவற்றை மீண்டும் பார்க்கவும், நினைவுகூரவும், வருங்கால சந்ததிக்கு விட்டுப் போகவும்[9] இப்படிச் செய்யுங்கள். நாம் எதையுமே மறப்பதால், கற்றவற்றை மீண்டும் நினைவுபடுத்த வேண்டும். இப்படி உங்கள் ஆவிக்குரிய நோட்டுக் குறிப்பை ஒழுங்காக வாசிப்பது, எத்தனையோ வேண்டாத வேதனைகள், இதய வலிக்கு உங்களை விலக்கிக் காக்கும். *"நாம் வழுவிப் போகாதபடி நாம் கேட்டவற்றை உறுதியாகப் பற்றிக் கொள்ளுவது முக்கியம்"*[10] என்று வேதம் கூறுகின்றது.

தேவனோடும் உங்களோடும் பொறுமையாக இருங்கள். தேவனுடைய வேலை நேரத் திட்டமும், நமது திட்டமும் ஒரே மாதிரியாக இல்லாததுதான் வாழ்க்கையின் அநேக மனச் சோர்வுக்குக் காரணம். தேவன் நிதானமாக இருக்கும் சமயங்களில் நாம் அவசரப்படுகின்றோம். வாழ்க்கையில் மிக மெதுவான முன்னேற்றமாக உங்களுக்குக் காணப்படுபவைகள் உங்களைச் சோர்வடையச் செய்யலாம். தேவன் ஒருபோதும் அவசரப்படமாட்டார். ஆனால், அவர் எப்பொழுதும் சரியான நேரத்தில் செயல் படுவாரென்பதை நினைவில் வையுங்கள். நித்தியத்திலுள்ள உங்கள் பங்குக்காக, இங்கு உங்கள் வாழ்நாள் முழுவதுமே உங்களை ஆயத்தம் செய்கின்றார்.

மக்களில், குறிப்பாகத் தலைவர்களில், குணத்தை உருவாக்க, தேவன் நீண்ட காலத் திட்டத்தைப் பயன்படுத்தியதற்கான உதாரணங்களை வேதாகமெங்கும் காணக்கூடும். மோசேயை ஆயத்தம் செய்ய 80 ஆண்டுகள் எடுத்துக் கொண்டார். அதில் 40 ஆண்டுகள் வனாந்தர அனுபவம். 14,600 நாட்கள் மோசே காத்திருந்து, 'காலம் நிறைவேறி விட்டதா!' என்று கேட்டுக் கொண்டிருந்தார் – தேவனோ 'இன்னும் இல்லை' என்ற பதிலையே கொடுத்துக் கொண்டிருந்தார்.

தேவன் ஒருபோதும் அவசரப்படமாட்டார்; ஆனால், எப்பொழுதும் சரியான நேரத்தில் செயல்படுவார்.

புத்தகங்கள் பல, *முதிர்ச்சிக்கு எளிய வழிகள்; உடனடியாக பரிசுத்தவானாக இரகசியங்கள்* என்று இருந்தபோதிலும்,

அப்படிப்பட்ட எளிய வழிகள் எதுவுமே கிடையாது. ஒரு காளானை ஒரே இரவில் உருவாக்கும் ஆண்டவர், ஒரு இராட்சத ஓக் மரம் (Oak Tree) உண்டாக்க நூறு வருடங்கள் எடுக்கின்றார். மகா பெரியவர்களின் ஆத்துமாக்கள், போராட்டங்கள், புயல்கள், துன்ப காலங்கள் இவற்றினூடேதான் வளர்ச்சி பெறுகின்றன. ஆகவே, வளரும் முறை குறித்துப் பொறுமையாக இருங்கள். ***"காலத்திற்கு முன்பாக எதைவிட்டும் வெளியேற முயற்சி செய்யாதிருங்கள். நீங்கள் முதிர்ச்சியும், பூரண வளர்ச்சியுமடையும்படி அது தன் வேலையைச் செய்ய இடங்கொடுங்கள்"***[11] என்று யாக்கோபு புத்திமதி கூறுகின்றார்.

அதைரியமடையாதிருங்கள். தேவன் விரைந்து செயல்பட வில்லையேயென்று ஆபகூக் மனச்சோர்வடைந்தபோது, ***"நான் திட்டமிட்ட இக்காரியங்கள் உடனே நடைபெறாது. மெதுவாக, தவறாமல், ஒரே சீராக, தரிசனம் நிறைவேறும் காலம் வரும். அது பிந்தினாலும், நிறைவேறியே தீரும். சோர்ந்து போகாதே, இவை நிச்சயமாக நிறைவேறும். அவைகள் ஒரு நாள் கூடத் தாமதிக்காது"***[12] என்று தேவன் கூறினார். தாமதம் என்பது தேவனுடைய மறுப்பு அல்ல.

நீங்கள் எவ்வளவு தூரம் வந்துவிட்டீர்களென்று எண்ணிப் பாருங்கள் – இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டுமென்பதையல்ல. நீங்கள் விரும்பும் இடத்திற்கு இன்னும் வரவில்லை, ஆனால், நீங்கள் முன்பு இருந்த இடத்திலும் இப்போது நீங்கள் இல்லை! பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்கத்திய நாடுகளிலுள்ள மக்கள் PBPGINFWMY என்ற எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட ஒரு பட்டனை அணிந்து கொள்ளுவது வழக்கம். அது தயவுசெய்து பொறுமையாக இரு; தேவன் இன்னும் எனக்குச் செய்ய வேண்டியவற்றைச் செய்து முடித்து விடவில்லை என்பதற்கான ஆங்கில வாக்கியத்திலுள்ள வார்த்தையின் முதல் எழுத்துக்களைக் கொண்டது (Please Be Patient, God Is Not Finished With Me Yet). உங்களிடமும் நிறைவேற்ற வேண்டியவற்றை தேவன் இன்னும் நிறைவேற்றி முடிக்கவில்லை. முன்னேறிக் கொண்டே இருங்கள். நத்தைகூட, விடாமுயற்சியோடு, பேழைக்குள் போய் சேர்ந்தது!

நாள் இருபத்தெட்டு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: முதிர்ச்சியடைவதற்கு குறுக்கு வழிகள் இல்லை.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"உங்களில் நற்கிரியையைத் தொடங்கின தேவன், உங்களை சரியாக வழிநடத்தி, உங்களை அவரது கிருபையில் வளரச் செய்து, இயேசு கிறிஸ்துவின் வருகையின் நாள் மட்டும், உங்களுக்காக வைக்கப்பட்டிருக்கின்ற அவரது திட்டங்கள் யாவும், நிறைவேற்றி முடிக்கின்ற வரைக்கும் காப்பாரென்று நிச்சயித்திருக்கின்றேன்."*** பிலிப்பியர் 1:5 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: எனது ஆவிக்குரிய வளர்ச்சியின் எந்தப் பகுதியில் நான் இன்னும் அதிகப் பொறுமையும் விடா முயற்சியும் கொண்டிருக்க வேண்டும்?

நோக்கம் 4

நீங்கள் தேவனைச் சேவிப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டீர்கள்

நாங்கள் தேவனுடைய ஊழியக்காரர்தானே...
தேவன் அவரவருக்களித்த ஊழியத்தை நாங்கள் ஒவ்வொருவரும் செய்கின்றோம்.
நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான்,
தேவனே விளையச் செய்தார்.

1 கொரிந்தியர் 3:5-6 (புதிய மொழியாக்கம்)

உங்களுக்களிக்கப்பட்டப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்

கிறிஸ்து இயேசுவிலிருந்து நமக்குப் புது ஜீவனளித்து, நாம் இப்போது இருக்கிறபடி நம்மை உண்டாக்கியவர் தேவன் தாமே; நாம் இந்த வாழ்க்கையைப் பிறருக்கு உதவி செய்வதிலேயே செலவழிக்க வேண்டுமென்று அவர் வெகு காலத்திற்கு முன்னரே திட்டமிட்டு விட்டார்.

எபேசியர் 2:10 (புதிய மொழியாக்கம்)

பூமியிலே நீர் எனக்கு நியமித்த பணியை ஒரு குறைவுமில்லாமல், பரிபூரணமாக முடித்து உம்மை மகிமைப்படுத்தினேன்.

யோவான் 17:4 (புதிய மொழியாக்கம்)

பங்காற்றுவதற்கென்றே நீங்கள் இப்பூமியில் வைக்கப்பட்டுள்ளீர்கள்.

இயற்கை வளங்களை உட்கொண்டு, சுவாசித்து, இடத்தை நிரப்பி ஜீவிப்பதற்காக மாத்திரம் தேவன் உங்களை சிருஷ்டிக்கவில்லை. உங்கள் வாழ்க்கை மூலம், பூமியில் ஓர் மாற்றத்தை நீங்கள் ஏற்படுத்தும்படி தேவன் உங்களை வடிவமைத்திருக்கின்றார். வாழ்க்கையில் அதிகமானவற்றை எவ்வாறு ***''பெற்றுக் கொள்ளுவது''*** என்று கற்பிக்கின்ற புத்தகங்களே அதிகமாக விற்பனையாகும் புத்தகங்களாக இருப்பினும்... தேவன் உங்களை ஏற்படுத்தினதின் நோக்கம் அதுவல்ல! பூமியின் வாழ்விற்கு உறுதுணை ***சேர்ப்பதற்கே*** நீங்கள் சிருஷ்டிக்கப்பட்டீர்கள். நீங்கள் எதையாவது, உங்கள் பங்காக திரும்ப அளிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கின்றார்... பூமியில் உள்ளவைகளை நம்முடைய வாழ்வுக்கென்று எடுத்துக்கொண்டே இருப்பது மட்டுமல்ல. இதுதான்

உங்கள் வாழ்வுக்கான தேவனின் நான்காவது நோக்கம். இதனை "ஊழியம்" அல்லது சேவை என்று அழைக்கின்றோம். இதற்கான விவரங்களை வேதம் நமக்கு எடுத்துக் கூறுகிறது.

நீங்கள் தேவனுக்கு ஊழியஞ்செய்யவே சிருஷ்டிக்கப்பட்டீர்கள். *"நாம் செய்யும்படி நமக்காக ஏற்கனவே ஆயத்தஞ் செய்யப்பட்டிருக்கின்ற நற்கிரியைகளைச் செய்யும் வாழ்க்கைக்காக தேவன் நம்மை சிருஷ்டித்திருக்கின்றார்"*[1] என்று வேதம் சொல்லுகின்றது. இந்த "நற்கிரியைகளே" நமது சேவை. ஏதாவது ஒரு வழியில் நீங்கள் பிறருக்கு சேவை செய்யும்போது, நீங்கள் உண்மையில் தேவனுக்கு சேவை[2] செய்கின்றீர்கள்; உங்களது வாழ்க்கையின் நோக்கங்களில் ஒன்றை நிறைவேற்றுகின்றீர்கள். அடுத்த இரு அத்தியாயங்களில், இந்த நோக்கத்திற்காக, தேவன் எவ்வளவு கவனமாக உங்களை *வடிவமைத்திருக்கின்றார்* என்பதை காணலாம். தேவன் எரேமியாவுக்குச் சொன்னது உங்களுக்கும் பொருந்தும்: *"உன் தாயின் வயிற்றில் உன்னை உருவாக்கும் முன்னரே, நான் உன்னைத் தெரிந்து கொண்டேன். நீ பிறக்கும் முன்னதாகவே நான் உன்னை ஒரு விசேஷித்த பணிக்காக உன்னைப் பிரித்தெடுத்தேன்."*[3] ஒரு விசேஷித்த பொறுப்பை நிறைவேற்றவே தேவன் உங்களை இப்பூமியில் வைத்தார்.

நீங்கள் தேவனுக்கு ஊழியஞ் செய்யவே மீட்கப்பட்டீர்கள். *"தமது பரிசுத்த ஊழியத்திற்காக நம்மைத் தெரிந்தெடுத்து, இரட்சித்தவர் அவரே; நாம் அதற்குத் தகுதியுள்ளவர்களென்பதினாலல்ல; அது அவருடைய அநாதி திட்டமாக இருந்தபடியால் அப்படிச் செய்தார்"*[4] என்று வேதம் கூறுகின்றது. தமது "பரிசுத்த பணியைச்" செய்வதற்கே தேவன் உங்களை இரட்சித்தார். நீங்கள் *நற்கிரியைகளினால்* (சேவை) இட்சிக்கப்படவில்லை... ஆனால், *நற்கிரியைகளுக்காக* இரட்சிக்கப்பட்டீர்கள். தேவனுடைய இராஜ்ஜியத்தில், உங்களுக்கென்று ஒரு ஸ்தானம், ஒரு நோக்கம், ஒரு பங்கு, நீங்கள் நிறைவேற்ற வேண்டிய ஒரு வேலை உண்டு. இது உங்களது வாழ்க்கைக்கு மதிப்பையும் முக்கியத்துவத்தையும் அளிக்கின்றது. உங்களது இரட்சிப்பை உங்களுக்கு பெற்றுத்தர இயேசு கொடுத்த விலைக்கிரயம் அவருடைய சொந்த ஜீவன்.

"தேவன் உங்களுக்காக ஒரு பெரும் விலைக்கிரயம் கொடுத்திருக்கின்றார்; ஆகவே தேவனைக் கனப்படுத்த உங்கள் சரீரத்தைப் பயன்படுத்துங்கள்"[5] என்று வேதம் நமக்கு நினைவுப்படுத்துகின்றது. குற்றவுணர்வினாலோ, பயத்தினாலோ அல்லது கடமையுணர்வினாலோ கூட நாம் தேவனுக்கு சேவை செய்யவில்லை; மகிழ்ச்சியினாலும் ஆழ்ந்த நன்றியுணர்வினாலும் மட்டுமே நாம் அவருக்கு சேவை செய்கின்றோம். நமது வாழ்க்கையை அவருக்கென்று கொடுத்துவிட நாம் கடமைப்பட்டிருக்கின்றோம். இரட்சிப்பின் மூலம், நமது கடந்த காலம் மன்னிக்கப்பட்டுவிட்டது; நமது இன்றைய வாழ்விற்கு ஒரு அர்த்தம் கிடைத்துவிட்டது; நமது எதிர்காலமும் பாதுகாப்பாக இருக்கின்றது. இந்த நம்ப முடியாத நன்மைகளைக் குறித்து, *"இப்படிப்பட்ட தேவனின் மகா மேன்மையான இரக்கத்தினிமித்தம்...தேவனுக்கென்று உங்களையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுங்கள்; அவருடைய சேவைக்காக உங்களை அர்ப்பணியுங்கள்"*[6] என்று பவுல் கூறினார். நாம் பிறருக்கு செய்யும் அன்பான சேவைதான் நாம் உண்மையிலேயே இரட்சிக்கப்பட்டிருக்கின்றோமென்பதைக் காட்டுகிறதென்று அப்போஸ்தலனாகிய யோவான் கற்றுக் கொடுத்தார். *"நாம் ஒருவர் மீது ஒருவர் கொள்ளும் அன்பு நாம் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குப் பட்டிருக்கின்றோமென்று உறுதிப்படுத்துகின்றது"*[7] என்று பவுல் கூறுகின்றார். பிறர்மீது எனக்கு அன்பு இல்லாவிட்டால், பிறருக்கு சேவை செய்யும் வாஞ்சை எனக்கு இல்லாவிட்டால், என் தேவைகளைக் குறித்து மட்டுமே நான் கரிசனைக் கொண்டிருந்தால்... உண்மையிலேயே கிறிஸ்து என் வாழ்வில் இருக்கின்றாரா என்பதைக் குறித்து நான் சந்தேகப்பட வேண்டும். இரட்சிக்கப்பட்டதும், சேவை செய்ய விரும்புகிறதுமான இருதயம் நமக்குத் தேவை.

நாள் இருபத்தொன்பது:

உங்களுக் களிக்கப்பட்டப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல்

தேவனுக்கு சேவை செய்வதில் அதிக அளவு அநேகரால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டிருக்கும் இன்னொரு வார்த்தை, ***ஊழியம்.*** "ஊழியம்" என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அநேகர், போதகர்கள், மதகுருக்கள், சம்பளம் வாங்கி பணிபுரியும்

குருவானவர்கள் போன்றோரை மட்டுமே நினைக்கின்றோம். ஆனால், தனது குடும்பத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் ஒரு ஊழியரென்று தேவன் கூறுகிறார். எப்படி ***சேவையும் ஊழியமும்*** ஒரே அர்த்தத்தை உடையதாக உள்ளதோ, அதேபோல, வேதாகமத்தில் ***வேலைக்காரன்*** (servant), ***ஊழியக்காரன்*** (Minister) ஆகிய இவ்விரு வார்த்தைகளும் ஒரே பொருள் கொண்டவை. நீங்கள் ஒரு கிறிஸ்தவரானால், ஒரு ஊழியக்காரர். அதேபோல, நீங்கள் சேவை செய்யும்போது... நீங்கள் ஊழியஞ்செய்கிறீர்கள்.

பேதுருவின் மாமி, சுகவீனத்திலிருந்து இயேசுவால் சுகம் பெற்றபோது, அவள், ***"உடனே எழுந்து இயேசுவுக்குப் பணிவிடை செய்தாள்."***[8] பெலன், ஆரோக்கியம் என்ற தனது புது கிருபையை பயன்படுத்த ஆரம்பித்து விட்டாள். நாமும் அப்படித்தான் செய்ய வேண்டும். நாம் பிறருக்கு உதவி செய்யவே குணமாகின்றோம்; ஆசீர்வாதமாக இருக்கவே ஆசீர்வதிக்கப்படுகின்றோம். சேவை செய்யவே மீட்கப்பட்டோமேயொழிய... அப்படியே உட்கார்ந்து பரலோகத்திற்காக காத்திருப்பதற்கு அல்ல!

பிறர் மீது அன்பும், பிறருக்கு சேவை செய்ய வேண்டும் என்ற விருப்பமும் எனக்கு இல்லாவிட்டால், என் வாழ்க்கையில் கிறிஸ்து இருக்கின்றாரா என்பது ஒரு கேள்விக்குறியே.

அவருடைய கிருபையை நாம் ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட வுடன் ஏன் தேவன் நம்மை அப்படியே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளுவதில்லை என்று எப்போதாவது நினைத்துப் பார்த்திருக்கின்றீர்களா? ஏன் இந்த விழுந்துபோன உலகத்தில் நம்மை வைத்திருக்கின்றார்?... அவரது நோக்கங்களை நிறைவேற்ற! நீங்கள் இரட்சிக்கப்பட்டவுடன், அவரது நோக்கங்களுக்காக உங்களை பயன்படுத்த தேவன் எத்தனிக்கின்றார். தமது சபையில் ஒரு ***ஊழியத்தையும்*** (ministry), உலகத்தில் ஒரு ***பணியையும்*** (mission) தேவன் உங்களுக்காக வைத்திருக்கின்றார்.

நீங்கள் தேவனுக்கு ஊழியஞ் செய்யவே அழைக்கப்பட்டீர்கள். தேவனால் "அழைக்கப்படுவது" என்பது மிஷனரிகள், சபை மேய்ப்பர்கள், கன்னியாஸ்திரீகள் மற்றும் "முழுநேர" சபை ஊழியர்கள் என்று ஒருவேளை நினைத்து நீங்கள் வளர்ந்து வந்திருக்கக்கூடும். ஆனால், நாம் யாவரும் சேவிக்க அழைக்கப்பட்டிருக்கின்றோமென்று[9] வேதம் சொல்லுகின்றது. நீங்கள் இரட்சிக்கப்பட பெற்றுக் கொண்ட அழைப்பில் சேவை செய்வதற்கான அழைப்பும் உள்ளடங்கும். இரண்டும் ஒன்றுதான். உங்களது வேலை, தொழில் எதுவாக இருந்தாலும் நீங்கள் *முழுநேர* கிறிஸ்தவ சேவைக்காக அழைக்கப்பட்டவர்கள். "சேவை செய்யாத கிறிஸ்தவன்" என்பது ஒரு முரண்பாடான ஒரு சொற்றொடர். *"நாம் செய்த எந்தக் கிரியைகளுக்காகவும் அல்ல; தமது சொந்த சித்தத்திற்காகவே, அவர் நம்மை இரட்சித்து தமது சொந்த ஜனங்களாக அழைத்துக்கொண்டார்"*[10] என்று வேதம் சொல்லுகின்றது. பேதுரு மேலும் பின்வருமாறு கூறுகின்றார்: *"உங்களை அழைத்தவருடைய சிறப்பான தன்மைகளைப் பற்றிக் கூறவே நீங்கள் தெரிந்து கொள்ளப்பட்டீர்கள்."*[11] தேவன் அளித்த திறமைகளை நீங்கள் பயன்படுத்தும்போதெல்லாம்... நீங்கள் உங்கள் அழைப்பை நிறைவேற்றுகின்றீர்கள்.

"நாம் தேவனுடைய சேவையில் பயனுள்ளவர்களாயிருக்கும்படி... நீங்கள் அவருக்குச் சொந்தமானீர்கள்"[12] என்று வேதம் கூறுகின்றது. எவ்வளவு நேரம் தேவனுடைய சேவைக்காக நீங்கள் பிரயோஜனப்படுகின்றீர்கள்? சீனாவிலுள்ள சில சபைகளில், புதிய விசுவாசிகளை வரவேற்கும்போது, "இயேசுவுக்கு இப்போது பார்ப்பதற்கு ஒரு ஜோடி புதிய கண்களும், கேட்பதற்குப் புதிய காதுகளும், உதவி செய்வதற்குரிய புதிய கைகளும், பிறரை நேசிப்பதற்குரிய ஒரு புதிய இருதயமும் கிடைத்துவிட்டன" என்று சொல்லி வரவேற்பார்களாம்.

ஒரு சபை குடும்பத்தில் நீங்கள் இணைந்திருக்க வேண்டிய காரணங்களில் ஒன்று, பிற விசுவாசிகளுக்கு அன்றாட வாழ்க்கையில், நடைமுறை ரீதியிலான சேவைகளை நீங்கள் செய்து உங்களது அழைப்பை நிறைவேற்ற வேண்டும் என்பதுவே! *"நீங்களெல்லாரும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஒன்றாக இணைக்கப்பட்டவர்களும், தனித்தனியே ஒவ்வொரு*

வரும் தேவையான அவயவங்களுமாயிருக்கின்றீர்கள்"[13] என்று வேதம் கூறுகிறன்து கிறிஸ்துவின் சரீரத்தில் உங்களது சேவை அத்தியாவசியமாகத் தேவைப்படுகின்றது. எந்த ஒரு ஸ்தல சபையிலும் கேட்டுப்பாருங்கள், நாம் யாவருக்கும் ஒரு விசேஷமான பங்கு ஸ்தல சபையில் உண்டு. தேவனுக்கு சிறிய சேவை என்று ஒன்று கிடையாது; எல்லாமே முக்கியமானவை.

அதுபோன்று, சபையில் முக்கியத்துவமற்ற ஊழியம் என்று ஒன்றுமே கிடையாது. சில ஊழியம் வெளிப்படையாகத் தெரியும்; சில ஊழியம் மறைவாக செய்யப்படுபவை; ஆனால், அனைத்தும் சம மதிப்புள்ளவை. அநேக வேளைகளில் மறைந்திருக்கும் ஊழியங்கள் அல்லது சிறிய ஊழியங்கள்தான் பெரிய மாற்றங்களையும் தாக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. எங்கள் வீட்டில் எங்கள் உணவுக்கூடத்தில் போடப்பட்டுள்ள பெரிய அலங்காரக் கொத்துவிளக்குகளைவிட, இரவில் நாம் எழும்பும்போது என் விரல்களை இடித்துக் கொள்ளாமல் பாதுகாக்கும் சிறிய இரவு விளக்குத்தான் அதிக முக்கியமானது. வடிவத்திற்கும் முக்கியத்துவத்திற்கும் தொடர்பு கிடையாது. ஒவ்வொரு ஊழியமும் பயனுள்ளது, பொருளுள்ளது; ஏனெனில், நாம் செயல்பட ஒருவரையொருவர் சார்ந்தே நிற்கின்றோம்.



உங்கள் சரீரத்தின் ஒரு அவயவம் செயல்படாமல் போனால் என்ன நடக்கின்றது? மற்ற அவயவங்கள் அனைத்தும் பாதிக்கப்படுகின்றன.

உங்கள் ஈரல் தனக்காக மட்டுமே வாழ முடிவு செய்துவிட்டதாகக் கற்பனை செய்து கொள்ளுவோம்: "நான் களைத்துப் போனேன்; இனியும் இந்த சரீரத்திற்காக நான் உழைக்கப்போவதில்லை. ஒரு வருடம் சேவையிலிருந்து நான் ஓய்வு எடுத்துக் கொள்ளப்போகின்றேன், எனது நலனை நான் பார்த்துக் கொள்ள வேண்டுமே! எனது வேலையை வேறு ஏதாவது ஒரு உறுப்பு பார்த்துக் கொள்ளட்டுமே!" என்று அது முடிவு செய்தால்... என்ன நடக்கும்? உங்கள் சரீரமே மரித்துவிடும். இப்படி சேவை செய்ய மனமற்றிருக்கும் கிறிஸ்தவர்களால்தான் இன்று ஆயிரக்கணக்கான ஸ்தல சபைகள் மரித்த நிலையில், செயலற்று கிடக்கின்றன.

இவர்கள், தங்களை சேவையிலிருந்து ஒதுக்கிக்கொண்டு பார்வையாளர்களாக இருப்பதினால்... கிறிஸ்துவின் சரீரம் துன்புறுகின்றது.

நீங்கள் தேவனுக்கு ஊழியஞ்செய்யவே கட்டளைப் பெற்றிருக்கின்றீர்கள். இவ்விஷயத்தில் இயேசு தெளிவாக சொல்லும் காரியம் என்னவெனில், *"மேசியாவாகிய நான், ஊழியங் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், ஜீவனைக் கொடுக்கவும் வந்தேன். உங்களுக்கும் என்னைப் போன்ற அதே மனப்பான்மை இருக்க வேண்டும்"*[14] என்பதுவேயாகும். கிறிஸ்தவர்களுக்கு, சேவை என்பது ஏதோ விரும்பினால், நேரம் கிடைத்தால் செய்யலாம் என்ற ஒரு காரியம் அல்ல – இதுதான் கிறிஸ்தவ வாழ்க்கைக்கான இருதயம். இயேசு, "ஊழியஞ் செய்யவும்", "கொடுப்பதற்கும்" வந்தார் – இந்த இரண்டு வினைச் சொற்களும், பூமியில் உங்கள் வாழ்க்கையை வரையறுக்கின்றன. சேவை செய்வதும், கொடுப்பதும் உங்கள் வாழ்க்கைக்குரிய தேவனுடைய நான்காவது நோக்கத்தை "திரட்டி" தருகின்றன. அன்னை தெரசா ஒருமுறை கூறிய வார்த்தைகள்: "தேவனுடைய வேலையை ஒரு புன்சிரிப்புடன் செய்வதில்தான் பரிசுத்த வாழ்க்கை அடங்கியிருக்கின்றது."

ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது தன்னில்தானே முடிவுறுகின்ற ஒன்றல்ல என்று இயேசு போதித்தார். முதிர்ச்சி என்பது ஊழியத்திற்காகத்தான்! கொடுப்பதற்காகவே நாம் வளர்ச்சியடைகின்றோம். மேலும் மேலும் சத்தியங்களை கற்றுக் கொண்டே போவது போதாது. நாம் அறிந்திருப்பதை வைத்து செயல்பட வேண்டும். நாம் நம்புவதாக உரிமை பாராட்டுபவற்றை அப்பியாசப்படுத்த வேண்டும். கற்றுக் கொண்டவைகளை வெளிப்படுத்தாவிட்டால் மனச்சோர்வும் அழுத்தமுமே உண்டாகும் (**Impression** without **expression** causes **depression**). சேவையற்ற கற்றுக் கொள்ளுதல் ஒரு ஆவிக்குரிய தேக்கம். கலிலேயாக் கடலுக்கும் சவக்கடலுக்குமுள்ள பழைய கால

ஆவிக்குரிய முதிர்ச்சி என்பது தன்னில்தானே முடிவுறுகின்ற ஒன்றல்ல, கொடுப்பதற்கே வளருகின்றதாம்.

ஒப்பிடுதல் இன்றும் உண்மையாகவே இருக்கின்றது. கலிலேயாக் கடல், தண்ணீரை உள்ளே வாங்குவது மட்டுமல்லாமல், வெளியேயும் கொடுப்பதால்... அதில் ஜீவ ராசிகள் நிறைந்து காணப்படுகின்றன; இதற்கு நேர்மாறாக, சவக்கடலில் எந்த ஜீவராசிகளும் வாழ்வதில்லை – காரணம், தண்ணீர் வெளியேறாதபடியால், அந்த ஏரி தேக்க நிலை அடைந்திருக்கின்றது. இன்றைய விசுவாசிகள் அநேகருக்கு ***வேண்டாத தேவை*** – மற்றுமொரு வேதபாட வகுப்பு. இவர்கள் செயலில் காட்டுவதைவிட அதிகமான வேத அறிவு பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்கான அத்தியாவசிய தேவை என்னவெனில் – ***சேவை*** செய்யும் அனுபவம். அங்குதான் அவர்களுடைய ஆவிக்குரிய தசைநார்கள் பயிற்சி பெற்று வலுவடையக்கூடும்.

நாம் அநேக நேரங்களில் பிறருக்கு சேவை செய்வதைவிட (Service), 'எங்களுக்கு சேவை செய்' (Serve us) என்ற நிலையிலேயே இருக்கின்றோம். சேவை செய்தல் என்பது நமது இயற்கை சுபாவத்திற்கு நேர்மாறானதாகத்தான் உள்ளது. "என் தேவைகளையறிந்து, என்னை ஆசீர்வதிக்கும் ஒரு சபை வேண்டுமென்று" நாம் கூறுகின்றோமேயொழிய, "நான் சேவை செய்து ***ஆசீர்வாதமாக இருக்கக்கூடிய*** ஒரு சபை வேண்டும்" என்று தேடுவதில்லை. பொதுவாக, பிறர் நம்மைச் சேவிக்க வேண்டுமென்றே நாம் விரும்புகின்றோம் – நாம் சேவை செய்ய விரும்புவதில்லை! ஆனால், கிறிஸ்துவுக்குள் உண்மையான முதிர்ச்சி பெற்று வளரும்போது, நம்முடைய வாழ்வின் கவனம் சேவிக்கும் வாழ்க்கை முறையாக மாறிவிடும். ஒரு முதிர்ச்சி நிறைந்த கிறிஸ்தவன், "யார் ***என்*** தேவைகளை சந்திப்பது?" என்று கேட்காமல், "யாருடைய தேவைகளை நான் சந்திக்கலாம்?" என்று கேட்க வேண்டும். நீங்கள் ***எப்போதாவது*** இந்த கேள்வியைக் கேட்டதுண்டா?

நித்தியத்திற்கு ஆயத்தமாகுதல்

பூலோக வாழ்க்கையின் இறுதியில் நீங்கள் தேவனுக்கு முன்பாக நிற்க வேண்டும். அப்பொழுது, மற்றவர்களை உங்கள் வாழ்க்கையின் மூலம் நீங்கள் எந்த அளவுக்கு சேவித்தீர்களென்பதை அவர்

மதிப்பிடுவார். ***"நாம் ஒவ்வொருவரும் நம்மைக் குறித்துத் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்"***[15] என்று வேதம் கூறுகின்றது. அதனுடைய தாற்பரியங்களைக் குறித்து சற்று சிந்தித்துப் பாருங்கள். ஒரு நாளிலே தேவன், நம்முடைய வாழ்க்கைக்கு நாம் செலவிட்ட நேரத்தையும் பிரயாசத்தையும், மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதில் நாம் செலவிட்ட நேரத்தோடும் பிரயாசத்தோடும் ஒப்பிட்டுப் பார்ப்பார்.

அந்த நிலையில், நாம் சுயத்தையே மையமாகக் கொண்டு செயல்பட்டதற்கான எந்தக் காரணம் கூறினாலும் அது எடுபடாது. "நான் இதர வேலைகளினால் நேரமில்லாதிருந்தேன்"; "என் சொந்த இலக்குகள் இருந்தன"; "எனது வேலை, எனது பொழுதுபோக்கு, எனது எதிர்கால ஆயத்தத்தில் மூழ்கிப் போனேன்" என்ற எல்லா சாக்குப் போக்குகளுக்கும் தேவனது மாறுத்தரம் எப்படி இருக்கும் என்றால்: "வருந்துகின்றேன், தவறான விடை! நான் உன்னை சிருஷ்டித்தேன், இரட்சித்தேன், அழைத்தேன், சேவை செய்யும் வாழ்க்கை வாழ கட்டளைக் கொடுத்தேன். இதில் *எந்தப் பகுதி* உனக்குப் புரியாமல் இருந்தது?" என்று கேட்பார். ***"தங்களுக்காகவே ஜீவிக்கிறவர்கள் மீது என் கோபத்தையும் உக்கிரத்தையும் நான் ஊற்றி விடுவேன்"***[16]; என்று கூறி வேதம் அவிசுவாசிகளை எச்சரிக்கின்றது. ஆனால், கிறிஸ்தவர்களோ நித்திய பலன்களை இழந்து போவார்கள் என அந்த எச்சரிப்பு வலியுறுத்துகின்றனது.

நாம் பிறருக்கு உதவி செய்யும்போதுதான் முழுமையாக விழித்திருக்கின்றோம். ***"தன் ஜீவனைக் காக்க வேண்டுமென்று உறுதியாக முயற்சிக்கிறவன் அதை இழந்து போவான்; என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவும் தன் ஜீவனைப் பொருட்படுத்தாமல் இழக்கக் கொடுக்கிறவர்களே மெய்யான வாழ்க்கையின் பொருளைப் புரிந்து கொள்ளுவார்கள்"***[17] என்று இயேசு கூறினார். இந்த உண்மை, சுவிசேஷங்களில் 5 முறை கூறப்படும் அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது. நீங்கள் சேவை செய்யாவிட்டால், ஏதோ உயிர் வாழ்கின்றீர்கள் என்றுதான் அர்த்தம்... ஏனெனில், வாழ்க்கை ஊழியம் செய்யவே கொடுக்கப் பட்டிருக்கின்றது. நீங்கள் தன்னலமின்றி பிறரை நேசிக்கவும் சேவிக்கவும் வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்.

சேவையும் முக்கியத்துவமும்

நீங்கள் உங்கள் வாழ்க்கையை ஏதோ ஒரு காரியத்திற்காக கொடுக்கப் போகின்றீர்கள். அது எது? – வேலையா? தொழிலா? விளையாட்டா? பொழுதுபோக்கா? புகழா? பொக்கிஷமா? இவைகளில் யாதொன்றும் நிலையான முக்கியத்துவம் வாய்ந்தவை அல்ல. உண்மையான முக்கியத்துவத்திற்கான பாதை, சேவை. ஊழியம் செய்வதின் மூலம் தான் நாம் நமது வாழ்க்கையின் பொருளைக் கண்டுபிடிக்கின்றோம். *“அவருடைய அவயவங்களாக, நாம் ஒவ்வொருவரும் நமது வாழ்க்கையின் அர்த்தத்தையும் வேலையையும் கண்டுகொள்ளு கின்றோம்”*[18] என்று வேதம் கூறுகின்றது. தேவனுடைய குடும்பத்தில் நாம் ஒன்றாக பணியாற்றும்போது, நமது வாழ்க்கை நித்தியத்தின் முக்கியத்துவத்தை பெறுகின்றது. ***“நீங்கள் எதில் பங்குள்ளவர்களாயிருக்கின்றீர்கள் என்பதால்,... இவை அனைத்தும் உங்களைக் குறைவாக அல்ல, அதிக முக்கியத்துவமுள்ளவர்களாக்கும் என்பதை நீங்கள் நினைத்துப் பார்க்க விரும்புகின்றேன்”***[19] என பவுல் கூறினார்.

உண்மையான முக்கியத்துவத்திற்கான பாதை, சேவை.

இந்த உலகத்தில் நீங்கள் ஒரு வித்தியாசத்தை உண்டு பண்ண வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். உங்கள் வாழ்க்கை ***எத்தனை வருடங்களிருந்தது*** என்பது காரியமல்ல (duration), அதில் எவ்வளவு கொடுக்கப்பட்டிருந்தது (donation) என்பதே காரியம். ***எவ்வளவு காலம்*** வாழ்ந்தீர்கள் என்பதல்ல... ***எப்படி*** வாழ்ந்தீர்கள் என்பதே முக்கியம்.

இதுவரை எந்த ஒரு சேவையிலும் ஊழியத்திலும் ஈடுபடாதிருந்தால், என்ன சாக்குப்போக்கு சொல்லுவீர்கள்? ஆபிரகாம் முதிர் வயதுள்ளவன், யாக்கோபு பாதுகாப்பு உணர்வு இல்லாதவன், லேயாள் கவர்ச்சியற்றவள், யோசேப்பு தவறாக நடத்தப்பட்டவன், மோசே திக்குவாய் உள்ளவன், கிதியோன் ஏழை, சிம்சோன் பிறரைச் சார்ந்து நின்றான், ராகாப் சன்மார்க்க நெறியற்றவள், எல்லாக் குடும்பப் பிரச்சனைகளும் போதாதென்று தாவீது ஒரு தவறான தொடர்பில்

சிக்கியவன், எலியா தற்கொலை எண்ணங்கொண்டவன், எரேமியா சோர்வடைந்தவன், யோனா தயங்கி நின்றவன், நகோமி ஒரு விதவை, யோவான்ஸ்நானன் பைத்தியக்காரன் போலிருந்தான், பேதுரு துடுதுடுப்புள்ள ஒரு முற்கோபி, மார்த்தாள் கவலைப்பட்டு வருத்தமடைந்தவள், சமாரியப் பெண் முறிந்துபோன அநேக திருமண உறவுகளைக் கொண்டவள், சகேயு எவருக்கும் பிடிக்காதவன், தோமா சந்தேகப்பட்டவன், பவுல் தேக ஆரோக்கியமில்லாதவன், தீமோத்தேயு பயந்த சுபாவமுள்ளவன். இவர்களெல்லாரும் ஏதாவது ஒரு விதத்தில் பொருந்தாத குணம் கொண்டவர்கள்தான். ஆனால், இவர்கள் ஒவ்வொருவரையும் தேவன் தமது ஊழியத்தில் பயன்படுத்தினார். நீங்களும் சாக்குப்போக்கு சொல்லுவதை நிறுத்தினால், அவர் உங்களையும் பயன்படுத்துவார்.

நாள் இருபத்தொன்பது
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: சேவை என்பது நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் செய்ய வேண்டிய ஒன்று.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப் பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கின்றோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம் பண்ணியிருக்கின்றார்."*** எபேசியர் 2:10

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தம்மைச் சேவிக்கும்படி தேவன் தரும் அழைப்பை ஏற்றுக் கொள்ளாதபடி உங்களைப் பின்னே இழுப்பது எது?

30

தேவனைச் சேவிப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டீர்கள்

உமது கரங்கள் எனக்கு வடிவை கொடுத்து என்னை உண்டாக்கிற்று.
யோபு 10:8 (புதிய மொழியாக்கம்)

இந்த ஜனத்தை எனக்கென்று வடிவமைத்தேன். இவர்கள் எனது துதியை பிரஸ்தாபிப்பார்கள்.
ஏசாயா 43:21 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் தேவனை சேவிக்க வடிவமைக்கப்பட்டீர்கள்.

இந்தப் பூமியில் தேவன் ஒவ்வொரு ஜந்துவையும் ஒருவிதத்தில் சிறப்பாக இருக்கும்படி உருவாக்கினார். சில மிருகங்கள் ஓடுகின்றன, சில குதித்து குதித்து செல்லுகின்றன, சில நீந்துகின்றன, சில குழிகளுக்குள் பதுங்கிக் கொள்ளுகின்றன, சில பறக்கின்றன. ஒவ்வொன்றும் தேவனால் தங்களுக்குக் கிடைத்த வடிவத்தின் அடிப்படையில், ஏதாவது ஒரு காரியம் செய்கின்றன. இதே காரியம் மனிதனுக்கும் பொருந்தும். நாம் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட சில காரியங்கள் செய்யும்படி தனிச் சிறப்புடன் வடிவமைக்கப்பட்டு அல்லது **"*உருவாக்கப்பட்டு*"** உள்ளோம்.

ஒரு புதுக்கட்டடத்தை வடிவமைக்கும் முன், கட்டடக் கலைஞர்கள் கேட்கும் முதல் கேள்வி, "இதன் நோக்கம் என்ன? இது எதற்காகப் பயன்படுத்தப்படும்?" அது எதற்காகப் பயன்பட வேண்டுமோ அதுதான் அக்கட்டடத்தின் வடிவத்தைத் தீர்மானிக்கும். தேவன் உங்களைப் படைக்கும் முன்பு, நீங்கள் இப்பூமியில் என்ன பங்கு எடுக்கப் போகின்றீர்கள் என்பதை அவர் முடிவு செய்துவிட்டார்.

நீங்கள் எப்படி அவரை சேவிக்க வேண்டும் என்று அவர் சரியாகத் திட்டமிட்டு, அந்த பணிக்கேற்ப உங்களுக்கு வடிவமளித்தார். நீங்கள் ஒரு விசேஷித்த ஊழியத்திற்காக உண்டாக்கப்பட்டதால் தான் இப்போது நீங்கள் இருக்கிறபடி இருக்கின்றீர்கள்.

''நாம் நற்கிரியைகளைச் செய்யும்படிக்கு, கிறிஸ்துவில் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய கரங்களின் கிரியைகளாயிருக் கின்றோம்''[1] என்று வேதாகமம் கூறுகின்றது. "கரங்களின் கிரியை" என்பதற்கான கிரேக்க பதத்தின் ஆங்கில வார்த்தை, "கவிதை" (Poem). நீங்கள் தேவனுடைய கரத்தின் கலை வடிவம். நீங்கள் பட்டறையில் தயாரிக்கப்படும் ஒரு பொருளைப் போன்றோ அல்லது ஒரு இயந்திரத்தின் மூலம் திரளாக தயாரிக்கப்படும் ஒரு உபயோக பொருளைப் போன்றோ அல்ல! நீங்கள் சிந்தனையுடன் வடிவமைக்கப்பட்டு, வேறு இணையில்லாத, தனிச்சிறப்பு கொண்ட அசல், சிறப்பு சாதனை.

தேவன் எதையும் ஒருபோதும் வீணாக்குவதில்லை.

உங்கள் ஊழியம் தனிச்சிறப்புள்ளதாக அமையும்படி, தேவன் உங்களை வேண்டுமென்றே குறிப்பிட்ட ஒரு விசேஷ வடிவத்தில் உருவாக்கி ஏற்படுத்தியிருக்கின்றார். உங்களை படைக்க DNA மரபணுக்களைக் கவனமாகக் கலவை செய்திருக்கின்றார். இந்த வகையான நம்பக்கூடாத அளவு தனிக்கவனம் செலுத்தியமைக்காக தாவீது தேவனைத் துதிக்கின்றார்: ***"என்னுடைய எல்லா உள்ளந்திரியங்களையும் உருவாக்கி, என் தாயின் கர்ப்பத்தில் அவற்றை ஒன்று சேர்த்தீர்; என்னை பிரமிக்கத்தக்க அதிசயமாக உண்டாக்கியமைக்கு நன்றி. உமது கரத்தின் கிரியைகள் அற்புதமானவைகள்.''***[2] ஈதெல் வாட்டர்ஸ் சொன்னபடி, "தேவன் தேவையற்ற எந்த பொருட்களையும் உண்டாக்குவதில்லை." பிறப்பதற்கு முன்னரே வடிவம் கொடுத்தது மட்டுமல்ல, இந்த வடிவமைப்பின் செயல்முறைக்கு ஆதரவாக அவர் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் திட்டமிட்டார். தாவீது தொடர்ந்து பின்வருமாறு கூறுகின்றார்: ***"என் வாழ்வின் ஒவ்வொரு நாளும் உமது புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஒரு நாள் கூடக் கடப்பதற்கு முன்னரே, ஒவ்வொரு வினாடியும் அதில்***

எழுதப்பட்டிருந்தது.''[3] உங்கள் வாழ்க்கையில் நடக்கும் எந்தவொரு காரியமும் முக்கியமானதல்ல என்று கூறவே முடியாது. ஒவ்வொன்றையும் தேவன் பயன்படுத்துகின்றார் – உங்களை ஊழியத்தில் உருவாக்குவதற்காகவும், உங்களைக் கொண்டு பிறரை ஆசீர்வதிக்கவும் தேவன் யாவற்றையும் பயன்படுத்துகின்றார்.

தேவன், ஒருபொழுதும், எதையும் வீணாக்குபவரல்ல. திறமைகள், ஆர்வங்கள், தாலந்துகள், வரங்கள், தனித்தாள் சுபாவம், வாழ்க்கையனுபவங்கள்... ***ஆகிய எல்லாவற்றையும்*** தமது மகிமைக்காகப் பயன்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டிராவிட்டால், அவற்றை உங்களுக்குத் தந்திருக்கவே மாட்டார். இந்தக் காரியங்களை அடையாளங்கண்டு, புரிந்து கொள்ளுவதன் மூலம், நீங்கள் உங்கள் வாழ்க்கைக்குரிய தேவ சித்தத்தை அறிந்து கொள்ளலாம்.

நீங்கள் ***"பிரமிக்கத்தக்க அதிசயம்"*** என்று வேதாகமம் கூறுகின்றது. நீங்கள் வெவ்வேறு வகையான காரணங்களின் கூட்டுக் கலவை. இவைகளை நன்றாக உங்களது நினைவில் பதித்து வைத்துக் கொள்ள, அந்த ஐந்து காரணங்களின் ஐந்து ஆங்கில வார்த்தையின் முதல் எழுத்துக்களை வைத்து ஒரு வார்த்தையை (SHAPE) கொடுத்துள்ளேன். இந்த ஐந்து காரியங்களையும், இந்த அத்தியாயத்திலும் அடுத்த அத்தியாயத்திலும் விவரமாக பார்க்கப் போகின்றோம். அப்பொழுது உங்களது வடிவமைப்பை (SHAPE) புரிந்து கொள்ளுவீர்கள்.

உங்கள் ஊழியத்திற்காகத் தேவன் உங்களை எப்படி வடிவமைத்திருக்கின்றார்

தேவன் நமக்கு ஒரு பணியைத் தரும்போதெல்லாம், அதை நிறைவேற்ற தேவையானவைகளைக் கொடுத்து நம்மைத் தகுதிப்படுத்துகிறார். இத்திறமைகளின் கூட்டுக் கலவையே உங்களது வடிவம் (SHAPE):

Spiritual gifts	-	ஆவிக்குரிய வரங்கள்
Heart	-	இருதயம்
Abilities	-	திறமைகள்
Personality	-	தனித்தாள் சுபாவம்
Experience	-	அனுபவம்

SHAPE உங்களது ஆவிக்குரிய வரங்களை கண்டுகொள்ளுதல்/கட்டவிழ்த்தல்

ஊழியத்தில் பயன்படுத்துவதற்காக ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் ஆவிக்குரிய வரங்களைக் கொடுத்திருக்கின்றார்.[4] இவைகள் தேவ வல்லமை கொண்ட திறமைகள். விசுவாசிகளுக்கு மட்டும் கொடுக்கப்படுகின்ற இந்த விசேஷ கிருபை அவரை சேவிக்க அருளப்பட்டவைகள். ***"தேவனுடைய ஆவியில்லாதவன் எவனோ அவன் தேவனுடைய ஆவியானவரிடமிருந்து வரும் வரங்களைப் பெற்றுக்கொள்ள முடியாது"***[5] என்று வேதாகமம் கூறுகின்றது.

நீங்கள் ஆவிக்குரிய வரங்களை சம்பாதிக்க முடியாது; நீங்கள் அதற்குத் தகுதியானவர்கள் என்று சொல்லவும் முடியாது – அதனால்தான், அவைகள் வரங்கள் அல்லது ***ஈவுகள்*** என்று அழைக்கப்படுகின்றன! உங்களுக்கு தேவன் வெளிப்படுத்தும் அவருடைய கிருபை அது. ***''கிறிஸ்து தமது வரங்களை உங்களுக்குத் தாராளமாகப் பகிர்ந்தளித்திருக்கின்றார்''***[6] உங்களுக்கு எந்த வரம் வேண்டுமென்று நீங்கள் தெரிந்தெடுக்கவும் முடியாது. அதைத் தீர்மானிப்பது தேவனே. பவுல் அதனை இவ்வாறு விளக்குகின்றார்: ***"இந்த வெவ்வேறு வரங்களைக் கொடுக்கின்ற தேவ ஆவியானவர் ஒருவரே. அவரே அவனவனுக்குரிய வரங்களைப் பகிர்ந்தளிக்கின்றார்."***[7]

நாள் முப்பது:
தேவனைச் சேவிப்பதற்கென்று வடிவமைக்கப் பட்டீர்கள்

"தேவன் வித்தியாசங்களையும், வகைகளையும் விரும்புவதாலும், நம்மை தனிச்சிறப்புள்ளவர் களாக்க விரும்புவதாலும் – ஒரே வரம் எல்லாருக்கும் கொடுக்கப்படவில்லை.''[8] அதேபோல, எந்த ஒரு நபரும் ***எல்லா*** வரங்களையும் உடையவர்களாகவும் இல்லை. ஏனெனில், உங்களுக்கு எல்லா வரமும் அருளப்பட்டுவிட்டால், வேறு ஒருவருடைய உதவியும் உங்களுக்குத் தேவைப்படாது. அப்படியிருக்குமாயின், அது தேவனுடைய நோக்கங்களில் ஒன்றாகிய, ஒருவரையொருவர் நேசித்து, ஒருவர் மேலொருவர் சார்ந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தைத் தோற்கடித்துவிடும். உங்களுக்கு அருளப்பட்ட ஆவிக்குரிய வரங்கள்

உங்களுடைய சொந்த பிரயோஜனத்திற்காக அல்ல, *மற்றவர்களின்* பிரயோஜனத்திற்காகவே அருளப்பட்டுள்ளன. அப்படியே பிறருக்கு அருளப்பட்ட வரங்கள் உங்களது பிரயோஜனத்திற்காக அருளப்பட்டிருக்கின்றன. ***"முழு திருச்சபைக்கும் உபயோகமாக இருக்கும்வகையில் ஒவ்வொருவருக்கும் ஆவிக்குரிய வரம் கொடுக்கப்பட்டுள்ளது"***[9] என்று வேதாகமம் கூறுகின்றது. நாம் ஒருவருக்கொருவர் தேவை என்ற விதத்தில் தேவன் இவ்வாறு பகிர்ந்தளித்திருக்கின்றார். நாம் ஒன்றாக இணைந்து நமது வரங்களை செயல்படுத்தும்போது, நாமனைவரும் நன்மையடைகின்றோம். பிறர் உங்கள் வரத்தைப் பயன்படுத்தாவிட்டால், நீங்கள் ஏமாற்றமடைகின்றீர்கள். ஆகவேதான், நாம் நமது ஆவிக்குரிய வரங்களைக் கண்டு பிடித்து அவற்றை விருத்தி செய்ய வேண்டுமென்று கட்டளை பெற்றிருக்கின்றோம். உங்களுக்கு அருளப்பட்ட ஆவிக்குரிய வரங்களை கண்டு பிடிக்க நேரமெடுத்திருக்கின்றீர்களா? திறக்கப்படாத ஒரு வெகுமதி பயனற்றது.

திறக்கப்படாத ஒரு வெகுமதி பயனற்றது.

வரங்களைப் பற்றிய இந்த அடிப்படை சத்தியங்களை நாம் மறந்துவிடும்பொழுதெல்லாம், அது சபையில் குழப்பத்தை விளைவிக்கின்றது. இதில் பொதுவான பிரச்சனைகள் என்னவெனில் – ஒன்று ***"மற்றவர்களின் வரங்களைக் கண்டு பொறாமைப்படுதல்"***, இரண்டாவது, ***"தனது வரத்தை முக்கியப்படுத்திக் காட்டுதல்"*** (gift envy and gift projection) முதல் பிரச்சனை, நாம், நமக்குத் தேவனளித்த வரத்தைப் பிறருடைய வரங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, நமது வரத்தைக் குறித்து அதிருப்தியடைந்து, பிறரைத் தேவன் பயன்படுத்துவது குறித்து எரிச்சலும், பொறாமையும் அடைதல். இரண்டாவது பிரச்சனை, நமது வரமே பிரதானமானதென்பதுபோல பாவித்து, அதே வரத்தைப் பிறரும் பெறவேண்டுமென்று கூறி, நம்மைப்போலவே அவர்களும் செயல்பட்டு, அந்த வரத்தை நாம் நேசிப்பதுபோல நேசிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தல். ***"சபையில் வெவ்வேறு விதமான ஊழியங்கள் உண்டு; ஆனால் நாம் ஆராதிக்கும் தேவன் ஒருவரே"***[10] என்று வேதாகமம் கூறுகின்றது.

சில சமயங்களில், உங்களை ஊழியத்திற்குத் தகுதிப்படுத்தும்படி தேவன் பயன்படுத்தும் மற்றக் காரியங்களை ஒதுக்கிப் போடுமளவுக்கு ஆவிக்குரிய வரங்கள் மட்டும் தேவைக்கு மிஞ்சி வலியுறுத்தப்படுகின்றன. உங்கள் வரங்கள், உங்கள் ஊழியத்திற்கான தேவ சித்தத்தை ***அறிந்துகொள்ள உதவும் திறவுகோல்களில்*** ஒன்று. ஆனால், ஆவிக்குரிய வரங்களை வைத்து மாத்திரம் தேவனின் முழு திட்டத்தையும் அறிந்துகொள்ள இயலாது. தேவன் உங்களை வேறு நான்கு வழிகளிலும் வடிவமைத் திருக்கின்றார்.

SHAPE : *உங்களது இருதயத்திற்கு செவிகொடுத்தல்*

உங்களுக்கு இருக்கும் ஆசைகள், நம்பிக்கைகள், ஆர்வங்கள், இலக்குகள், கனவுகள் மற்றும் பாசப் பற்றுகள் – இவற்றை ஒட்டு மொத்தமாக சேர்த்துதான் வேதாகமம் இருதயம் என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றது. உங்கள் இருதயம் என்பது உங்களது எல்லா ஊக்கத்திற்கும் ஊற்றாக விளங்குகின்றது – நீங்கள் எதைச் செய்ய விரும்புகின்றீர்களோ, எதைக் குறித்து அதிக கரிசனை கொள்ளுகின்றீர்களோ அவையெல்லாம் இன்றும்கூட, "நான் உன்னை என் முழு இருதயத்தோடும் நேசிக்கின்றேன்" என்று கூறும்போது இந்தப் பொருளில்தான் கூறுகின்றோம். அதாவது, இருதயமென்பது உங்களைத் தூண்டும் எல்லா தூண்டுதல்களுக்கும் மூல ஆதாரம்.

"தண்ணீரில் பார்க்கும்போது முகம் பிரதிபலிப்பதுபோல, மனிதனுடைய இருதயம் அவனைப் பிரதிபலிக்கும்"[11] என்று வேதம் கூறுகின்றது. உங்களது இருதயம் உங்களது ***உண்மையான*** "உங்களை" – நீங்கள் உண்மையில் யாரென்று வெளிப் படுத்துகின்றது. நீங்கள் யாரென்று பிறர் ***நினைப்பதுவோ*** அல்லது சூழ்நிலைகள் உங்களை எப்படியிருக்குமாறு கட்டாயப் படுத்துகின்றனவோ அது உண்மையான "நீங்கள்" அல்ல. நீங்கள் பேசுவதை ஏன் அப்படிப் பேசுகின்றீர்கள், உணருவதை ஏன் அப்படி உணருகின்றீர்கள், நடந்து கொள்ளும் விதம் ஏன் அப்படியிருக்கின்றது என்பதையெல்லாம் தீர்மானிப்பது இருதயம்.[12]

சரீரப் பிரகாரமாக, நம் ஒவ்வொருவருக்கும் ஒரு தனிச்சிறப்புள்ள இதயத் துடிப்பு உண்டு. நம் ஒவ்வொருவருக்கும் தனிச்சிறப்புள்ள பெருவிரல் சின்னம், கண் சின்னம், குரல் சின்னம் என்றெல்லாம் இருப்பதுபோல, நமது இருதயங்களும் சற்றே வித்தியாசமான விதத்தில் துடிக்கின்றன. இதுவரை வாழ்ந்துள்ள பல கோடி மக்களில் உங்கள் இருதயத் துடிப்பைப்போல, இருதயத் துடிப்பு கொண்ட வேறொருவரும் கிடையாதென்பது பிரமிக்க வைக்கின்றது. அதுபோலவே, நம் ஒவ்வொருவருக்கும் தேவன் வெவ்வேறான ***உணர்வுபூர்வ*** "இருதயத் துடிப்பை" தந்திருக்கின்றார். நமக்குப் பிடித்தமான பொருட்கள், நடவடிக்கைகள், நமக்கு ஆர்வமூட்டும் சூழ்நிலைகள் இருந்தால்... அந்த உணர்வுபூர்வ இருதயம் பரவசம் அடைகின்றது. நமது உள்ளுணர்வின்படி சில காரியங்களுக்கு ஆர்வத்தையும் அக்கறையையும் காட்டுகின்றோம். வேறு சில காரியங்களுக்கு அதிக சிரமம் எடுக்க விரும்புவதில்லை. நாம் எங்கு ஊழியம் செய்யவேண்டும் என்பதைக் காட்டும் உதவிக் குறிப்புகள் இவைகள்.

இருதயத்திற்கு இன்னுமொரு வார்த்தை, ***"தீவிர பாசம்"*** அல்லது உள்ளுணர்வு. சில காரியங்களைக் குறித்து உங்களுக்கு தீவிர பாசம் அல்லது பற்று ஏற்படுகின்றது. சிலவற்றைக் குறித்து அவ்வளவாகக் கவலைப்படுவதில்லை. சில அனுபவங்கள் உங்கள் கவனத்தைத் திருப்பி, அப்படியே பற்றிக் கொள்ளுகின்றன; வேறு சில உங்களை சலிப்படையச் செய்து கண்ணீரை வரவழைக்கின்றன. இவை, உங்கள் இருதயத்தின் தன்மையை வெளிப்படுத்துகின்றன.



நீங்கள் வளர்ந்து வரும்போது, உங்கள் குடும்பத்தில் எவருமே பொருட்படுத்தாத சில விஷயங்களில் நீங்கள் தீவிர ஆர்வம் கொண்டிருப்பதைக் கண்டுபிடித்திருப்பீர்கள். அந்த ஆர்வம் எங்கிருந்து வந்தது? அவை தேவனிடத்திலிருந்து வந்தவை. இயற்கையாகவே இப்படியொரு ஆர்வத்தை உங்களுக்குத் தேவன் கொடுத்திருப்பதற்கு ஒரு நோக்கமுண்டு. நீங்கள் எந்த ஊழியத்திற்குரியவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள உதவும் இரண்டாவது திறவுகோல், உங்கள் உணர்வுகளின் இதயத் துடிப்பு. உங்கள் ஆர்வங்களை அலட்சியப்படுத்தாதிருங்கள். அவை எவ்வாறு

தேவ மகிமைக்காகப் பயன்படுத்தக் கூடுமென்பதை கருத்தில் கொள்ளுங்கள். இக்காரியங்களைச் செய்ய நீங்கள் ஆசைப்படுவதற்கு ஒரு காரணமுண்டு.

"உன் முழு இருதயத்தோடும், உன் தேவனாகிய கர்த்தரை சேவிப்பாயாக."[13] என வேதம் திரும்ப திரும்ப கூறுகின்றது. தம்மை நீங்கள் தீவிர அன்புடன் சேவிப்பதையே தேவன் விரும்புகின்றார்— வெறும் கடமைக்காக சேவிப்பதையல்ல. தாங்கள் விரும்பி, செய்வதில் ஆனந்தமடையும் காரியங்களைத் தவிர வேறு காரியங்களில் மக்கள் அவ்வளவாகப் பிரகாசிப்பதில்லை. தன்னையும், பிறரையும் சேவிப்பதில் உங்கள் இயற்கையான ஆர்வங்களை நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். உள்ளேயிருந்து வரும் தூண்டுதல்களுக்கு செவி சாய்த்தலும், தேவன் உங்களுக்கு வைத்திருக்கின்ற ஊழியத்தைக் கண்டுகொள்ள உதவியாயிருக்கும் ஒரு வழியாகும்.

இருதயப்பூர்வமாக நீங்கள் தேவனை சேவிக்கின்றீர்களா என்பதனை எப்படிக் கண்டுகொள்ள முடியும்? முதல் அடையாளம்: ***பரவச உணர்வு*** **(enthusiasm)** நீங்கள் எதையாவது நேசித்து செய்தால், யாரும் உங்களைத் தூண்டிவிடவோ, கட்டுப்படுத்தவோ அல்லது சவால் விடவோ தேவையில்லை. வெறும் இன்பமான உணர்வுக்காகவே நீங்கள் அதைச் செய்கின்றீர்கள். அதற்காக நீங்கள் பலன்களையோ, பாராட்டுகளையோ, சம்பளத்தையோ தேடுவதில்லை. ஏனெனில், இப்படிச் சேவிப்பதை நீங்கள் நேசிக்கின்றீர்கள். இதற்கு எதிர்மாறான காரியமும் உண்மையே. நீங்கள் செய்யுங்காரியத்தில் உங்களுக்கு இருதய ஆர்வமில்லாவிட்டால், நீங்கள் எளிதில் அதைரியமும் சோர்வுமடைவீர்கள்.

இரண்டாவதாக, நீங்கள் உங்கள் இருதயப்பூர்வமாகத் தேவனை சேவிக்கின்றீர்களென்று காண்பிக்கும் அடையாளம் ***பலனளிக்கும் சேவை*** **(effectiveness)**. தேவன் உங்களை எதற்காக ஏற்படுத்தினாரோ அதனை நீங்கள் செய்யும்போது... அதில் உங்களுக்கு ஒரு பரவச உணர்வு மட்டுமல்லாமல், பலனளிக்கும் தன்மையும் வெளிப்படும். தீவிரப் பற்று பரிபூரணத்தை பிறப்பிக்கும்.

நீங்கள் விரும்பி செய்யும் ஒரு காரியத்தைச் செய்வதற்கு யாருடையத் தூண்டுதலும் உங்களுக்குத் தேவையில்லை.

ஒரு வேலையைச் செய்ய உங்களுக்கு அக்கறை இல்லாவிட்டால்... நீங்கள் அதில் சிறப்பு அடைவது கடினம். மாறாக, எந்த ஒரு துறையிலும், தீவிரப்பற்றுடன் செய்யப்படும் எந்த ஒரு சேவையும் மிகப் பெரிய பலனைத் தரும் – ஏனென்றால், இது கடமைக்காகவோ அல்லது வெறும் லாபத்திற்காகவோ மட்டும் செய்யப்படவில்லை.

"நான் விரும்பாத, வெறுக்கின்ற இந்த வேலையைப் பணம் சம்பாதிப்பதற்காகச் செய்கின்றேன்; ஒரு நாளில் அதை உதறித் தள்ளிவிட்டு நான் விரும்பும் வேலையை செய்ய ஆரம்பிப்பேன்" என்று சிலர் கூறுவதைக் கேட்டிருக்கின்றோம். இது ஒரு பெரிய தவறு. உங்கள் இருதயத்தை வெளிப்படுத்தாத ஒரு வேலையில் உங்கள் நேரத்தை வீணடிக்க வேண்டாம். வாழ்க்கையின் மிகப்பெரிய காரியங்கள் *பொருட்களல்ல.* பணத்தைவிட அர்த்தமுள்ள வாழ்வு மிக மிக அவசியம். உலகத்திலேயே மிகப் பெரிய பணக்காரன் ஒரு முறை இவ்வாறு கூறினான்: ***"ஒரு வண்டி தலைவலி"யுடன் கூடிய ஐசுவரிய வாழ்வைவிட தேவனுக்கு பயந்த ஒரு எளிய வாழ்க்கை மிகவும் மேலானது."***[14]

"ஒரு நல்ல வாழ்க்கை" கிடைத்தால் போதுமென்று அமர்ந்து விட வேண்டாம். நல்ல வாழ்க்கை என்பது போதுமான அளவு நல்ல வாழ்க்கை அல்ல. இறுதியில் அது மன நிறைவை அளிக்காது. அப்படிப்பட்ட வாழ்க்கை அநேக செல்வங்களை கொண்டு வரலாம்... ஆனால், வாழ்வதற்கான நோக்கத்தை கொண்டு வராது. எனவே, ***"நல்ல வாழ்க்கை"*** என்ற ஒன்றை தேடுவதைவிட, உங்கள் இருதயத்தை வெளிப்படுத்தி தேவனை சேவிக்கின்ற ஒன்றை தெரிந்துகொண்டு, அதனையே தேவ நாமத்தின் மகிமைக்காக செய்திடுங்கள்.

நாள் முப்பது

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் தேவனைச் சேவிக்கும்படி வடிவமைக்கப்பட்டேன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"தேவன், நம் ஒவ்வொருவர் மூலமும் ஒவ்வொரு விதத்தில் கிரியை செய்து, அவரது நோக்கத்தை நம் யாவரின் மூலம் இவ்வாறு நிறைவேற்றிக் கொள்ளுகின்றார்."*** 1 கொரிந்தியர் 12:6 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: முழு உள்ளுணர்வோடும் மிகுந்த நேசத்தோடும் மற்றவர்களுக்கு எப்படியெல்லாம் நான் ஊழியம் செய்யலாம்?

31

உங்கள் வடிவமைப்பைப் புரிந்துகொள்ளுதல்

என்னை முதலில் உள்ளேயும்,
பின்பு வெளியேயும் வடிவமைத்தீர்.
நீர் என் தாயின் கர்ப்பத்தில்
என்னை உருவாக்கினீர்
சங்கீதம் 139:13. (புதிய மொழியாக்கம்)

நீங்கள் மட்டுமே நீங்களாக இருக்க முடியும்.

இந்த உலகத்தில் எந்த ஒரு சிருஷ்டிப்பும் இரட்டிப்பாக இருக்கக்கூடாது என்பதற்காக தேவன் நம் ஒவ்வொருவரையும் தனித்தன்மையின் சிறப்புடன் சிருஷ்டித்தார். உங்களைப் போன்ற அத்தகைய தனிச்சிறப்புகளை கொண்ட வேறு எவரும் இப்பூமியில் இல்லை. அப்படியானால், தேவன் உங்களுக்கென்று வைத்த திட்டத்தை நீங்கள் ஒருவர் மட்டும்தான் நிறைவேற்ற முடியும். கிறிஸ்துவின் சரீரத்திற்கான உங்களுக்குரிய தனிச்சிறப்பு வாய்ந்த பங்கை நீங்கள் ஆற்றாவிட்டால், அது நிறைவேற்றப்படவே முடியாது. ***"வெவ்வேறு விதமான ஆவிக்குரிய வரங்கள் உண்டு... வெவ்வேறு வழிகளான சேவை உண்டு... வெவ்வேறு விதங்களில் சேவை செய்யக்கூடிய திறமைகள்"***[1] என்று வேதம் கூறுகின்றது. கடந்த அத்தியாயத்தில் முதல் இரண்டு காரியங்களைப் பார்த்தோம்: உங்களது ஆவிக்குரிய வரங்கள் மற்றும் உங்களது இருதயம். இப்பொழுது மீதமுள்ள மூன்று காரியங்களை இங்கு நாம் பார்க்கலாம்.

SHAPE : உங்களது திறமையை செயல்படுத்துதல்

நீங்கள் எந்த இயற்கைத் தாலந்துகளுடன் பிறந்தீர்களோ அவைதான் உங்கள் திறமைகள். சிலருக்கு இயற்கையாக சொல்வளம் இருக்கும். இப்படிப்பட்டவர்களை, ''கருவிலிருந்தே பேசிக்கொண்டு வந்தவர்கள்!" என்று வேடிக்கையாக சொல்லுவதுண்டு! சிலருக்கு இயற்கையாகவே விளையாட்டுத் திறமை, சிலருக்கு சரீர அவயவங்களை இயக்குவதில் தனிச் சிறப்பு. இன்னும் சிலர் கணிதத்தில், இசையில் அல்லது இயந்திரங்களை இயக்குவதில் நிபுணர்களாக இருப்பார்கள்.

ஆசரிப்புக் கூடாரத்தையும் ஆராதனைக்குரிய பணிமுட்டுகளையும் தேவன் உண்டாக்க விரும்பியபோது, ஓவியர்கள், சிற்பக் கலைஞர்கள் போன்றவர்களுக்கு *"சித்திர வேலை செய்து, சகல விதமான வேலைகளைச் செய்வதற்கான ஞானத்தையும், புத்தியையும் அறிவையும்"*[2] அருளினார். இன்றும், மக்கள் தம்மைச் சேவிக்கும்படி, இப்படிப்பட்ட திறமைகளையும் ஆயிரக்கணக்கான மற்ற திறமைகளையும் தேவன் அருளுகின்றார்.

நமது எல்லாத் திறமைகளும் தேவனிடமிருந்தே வருகின்றன. பாவம் செய்வதற்கு உபயோகப்படுத்தப்படும் திறமைகளும் தேவன் தந்தவைகளே – அவைகள் தவறாக பயன்படுத்தப்படுகின்றன. *"சில காரியங்களை நன்றாகச் செய்யும் திறமையை தேவன் நம்மொவ்வொருவருக்கும் அருளியிருக்கின்றார்"*[3] என்று வேதம் கூறுகின்றது. உங்களது இயற்கையான திறமைகளும் தேவனிடத்திலிருந்து வருபவைகளாக இருப்பதால், ஆவிக்குரிய வரங்களைப்போல இவைகளும் ''ஆவிக்குரியவை'', முக்கியமானவை. ஒரேயொரு வித்தியாசம், அவை பிறக்கும்போதே கொடுக்கப்பட்டன.

''பிறருக்கு சேவை செய்யக்கூடிய அளவுக்கு என்னிடம் எந்தவிதமான திறமையும் இல்லை" என்பது, மக்கள் பொதுவாக சொல்லும் சாக்குப்போக்குகளில் ஒன்று. இது பரிகசிப்பதற்குரிய முட்டாள்தனம். டஜன் கணக்காக... ஒருவேளை நூற்றுக்கணக்காகப் பயன்படுத்தப்படாத, அடையாளம் கண்டுகொள்ளப்படாத, தூங்கும் நிலையில் உங்களுக்குள்ளிருக்கும் திறமைகள் உண்டு. ஒரு சராசரி

நபர் 500 முதல் 700 வரை வெவ்வேறு திறமைகள் கொண்டவரென்று அநேக ஆய்வுகள் தெரிவிக்கின்றன – இவை நீங்கள் நினைப்பதற்கும் அதிகமானவை!

உதாரணமாக, உங்கள் மூளை 100 டிரில்லியன் (1 டிரில்லியன் என்பது பத்து இலட்சத்தின் மூன்று மடங்கு) விவரங்களைச் சேர்த்து வைத்துக் கொள்ளும் திறமை கொண்டது. ஒரு வினாடியில் உங்கள் மனது 15,000 தீர்மானங்களை கையாள வல்லது. உங்கள் மூக்கு 10,000 விதமான வெவ்வேறு மணங்களை அடையாளங் காணக்கூடியது. உங்கள் ஸ்பரிசத்தால் அங்குலத்தில் 1/25000 பாகம் துடிப்பைக் கூடக் கண்டுபிடித்திடலாம். 20 இலட்சம் பங்கு தண்ணீரில் கரைக்கப்பட்ட ஒரு பங்கு குயினைன் மருந்தின் சுவையை உங்களது நாவு கண்டுகொள்ளும். நம்பக்கூடாத திறமைகளைக் குவியலாகக் கொண்ட, தேவனுடைய பிரமிக்கத்தக்கப் படைப்பு நீங்கள். இந்த உங்களுடைய திறமைகளைக் கண்டறிந்து, அவற்றை வெளிக்கொண்டு வருவது சபையின் பொறுப்புகளில் ஒன்றாகும்.

ஒவ்வொரு திறமையும் தேவனின் மகிமைக்காக உபயோகப் படுத்தப்பட வேண்டும். *"நீங்கள் எதைச் செய்தாலும், எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்காகச் செய்யுங்கள்"*[4] என்று பவுல் கூறுகின்றார். தேவன் தமது மகிமைக்காகப் பயன்படுத்தும் பல்வேறு வகையான திறமைகளைக் கொண்ட உதாரணங்கள் வேதாகமம் எங்கும் நிறைந்து நிற்கின்றன. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சில திறமைகள்; ஓவியந் தீட்டுதல், கட்டடக் கலைத்திறன், நிர்வாகத்திறன், அப்பஞ்சுடுதல், படகு செய்தல், இனிப்பு வகைகள் செய்தல், வாதாடுதல், வடிவமைத்தல், வாசனைத் திரவியமிடுதல், சித்திரப் பூ வேலைகள் செய்தல், சிற்பம் செதுக்குதல், பண்ணை வேலை செய்தல், மீன் பிடித்தல், தோட்ட வேலை செய்தல், தலைமை தாங்கி நடத்துதல், மேலாளர் பணி புரிதல், இசையமைத்தல், ஆயுதங்கள் செய்தல், தையல் வேலை செய்தல், வண்ணந்தீட்டுதல், செடி நடுதல், தத்துவம் பேசுதல், இயந்திரம் இயக்குதல், புதிய தொழில்நுட்பம் அறிவியல், தச்சு வேலை, கடல் கடந்து செல்லுதல், விற்பனைத்திறன், படைவீரனாயிருத்தல், போதித்தல், இலக்கியம், கவிதை எழுதுதல்

போன்றவை. *''வேலை செய்யப் பல்வேறு திறமைகளுண்டு; ஆனால், அந்த ஒரே தேவன் அவற்றைப் பயன்படுத்தக்கூடிய திறன்களைக் கொடுக்கின்றார்''*[5] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் தனித்திறமைகளைக் கொண்டு நீங்கள் திருச்சபையில் பிரகாசிக்கக் கூடும். ஒரு வித்தியாசத்தை உண்டு பண்ணக்கூடிய அந்த ஸ்தானத்தை/ஊழியத்தை கண்டுபிடிப்பது உங்களைப் பொருத்தது.

சில மக்களுக்கு செல்வத்தை உண்டாக்கும் திறமையைத் தேவனளித்திருக்கின்றார். மோசே, இஸ்ரவேலரைப் பார்த்து, *"உங்கள் தேவனாகிய கர்த்தரை நினையுங்கள். ஐசுவரியத்தை சம்பாதிக்க வேண்டிய திறனைக் கொடுப்பது அவரே''*[6] என்று கூறினார். இப்படிப்பட்ட திறன் படைத்த மக்கள், தொழில் செய்வது, விற்பனை செய்வது, வாங்குவது, லாபமெடுப்பது போன்றவற்றில் சிறந்து விளங்குவார்கள். இந்தத் திறமைகள் இருந்தால், அதைத் தேவ மகிமைக்காகப் பயன்படுத்த வேண்டும். எப்படி? முதலாவது, உங்கள் திறமை தேவனிடத்திலிருந்து வந்ததென்பதையுணர்ந்து, அவருக்கு புகழைச் செலுத்துங்கள். இரண்டாவதாக, பிறருடைய தேவைகளைச் சந்திக்க உங்கள் தொழிலைப் பயன்படுத்துங்கள்; மற்றும் அவிசுவாசிகளுடன் உங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்துக் கொள்ளுங்கள். மூன்றாவதாக, இலாபத்தில் தசமபாகத்தை (10 சதவீதம்) தேவனுக்கு ஆராதனையாகச் செலுத்துங்கள்.[7] இறுதியாக, *பணம் கூட்டுபவராக இருப்பதைவிட, தேவ இராஜ்ஜியத்தை கட்டுவதையே* உங்கள் இலக்காகக் கொள்ளுங்கள். இதை, நான் 34ஆம் அத்தியாயத்தில் விளக்குவேன்.

என்னால் எதைச் செய்யக்கூடுமோ, அதை நான் செய்யும்படி தேவன் விரும்புகின்றார். உங்கள் திறமைகளைப் பயன்படுத்தக்கூடிய நபர் நீங்கள் ஒருவரே. வேறு யாரும் உங்கள் பங்கைச் செய்ய முடியாது. ஏனெனில், தேவன் உங்களுக்கென்றே தனிச்சிறப்புள்ளதாகக் கொடுத்திருக்கும் வடிவமைப்பு வேறு யாருக்கும் கிடையாது. *''தமது சித்தத்தைச் செய்யத் தேவையான அனைத்தையும்''*[8]

கூடுமோ, அதை நான்
செய்யும்படி தேவன்

என்று வேதம் கூறுகின்றது, உங்களுக்குக் கொடுத்து தகுதிப்படுத்துகிறவர் தேவனே. உங்கள் வாழ்க்கைக்கான தேவ சித்தத்தை அறிவதற்கு, நீங்கள், எதில் உங்களுக்குத் திறமையிருக்கின்றது, எதில் திறமையில்லையென்பதைக் கருத்தாக ஆராய வேண்டும்.

உங்களுக்கு இசை ஞானத்தைத் தேவன் தரவில்லையென்றால், நீங்கள் ஒரு பாடகர் குழுவில் இருப்பதை அவர் எதிர்பார்க்க மாட்டார். உங்களுக்கு எந்தக் காரியத்தில் தாலந்து இல்லையோ, அந்தக் காரியத்திற்கு உங்கள் வாழ்க்கையை அர்ப்பணிக்குமாறு தேவன் எதிர்பார்க்கவே மாட்டார். நேர்மாறாக, உங்களிடத்திலிருக்கும் திறமைகள்தான், தேவன் உங்கள் வாழ்க்கையைக் குறித்துக் கொண்டிருக்கும் திட்டத்தைச் சுட்டிக் காண்பிக்கும் கருவி. உங்களைக் குறித்த தேவ சித்தத்தையறியும் உதவிக் குறிப்புகள் அவை. வடிவமைப்பதில், ஆள் சேர்ப்பதில், வரைவதில் அல்லது காரியங்களை ஒழுங்குசெய்வதில் உங்களுக்குத் தனித் திறமை இருக்குமானால், உங்கள் வாழ்க்கையில் இதை எப்படியாவது பயன்படுத்துவதுதான் தேவனுடைய திட்டம். திறமைகளைத் தேவன் வீணாக்கவே மாட்டார். நமது அழைப்பையும் திறன்களையும் அவர் பொருந்திப்போகச் செய்வார்.

நாள் முப்பத்தொன்று:

உங்கள் வடிவமைப்பைப் புரிந்து கொள்ளுதல்

உங்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் திறமைகள் உங்கள் ஜீவனத்திற்காக மாத்திரம் அருளப்படவில்லை; அதை தமது ஊழியத்திற்காகவும் தேவன் அருளினார். ***“உங்கள் ஒவ்வொருவருக்கும் தேவன் விசேஷ திறமைகளை அருளியிருக்கிறார்; அவைகளை - உங்கள் ஆசீர்வாதங்களை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிப்பதன் மூலமாக”***[9] என்று பேதுரு கூறினார்.

இதை நான் எழுதும்போது, ஏறத்தாழ 7,000 மக்கள், சேடில்பேக் திருச்சபையில், தங்களது திறமைகளை ஊழியத்தில் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றனர். நீங்கள் கற்பனை செய்து பார்க்கக்கூடிய அத்தனை வகை சேவைகளையும் செய்கின்றார்கள். ஏழைகளுக்கு

தானமாகக் கொடுக்கப்பட்ட கார்களைப் பழுது பார்த்தல், சபைக்குரியவைகளை வாங்குவதில் சிறப்பானவற்றைப் பார்த்து வாங்குதல்; சபை வெளிப்புறத்தை அலங்கரித்து வைத்தல்; கலை வேலைப்பாடுகள், நிகழ்ச்சி நிரல்கள், கட்டடங்கள் கட்டுதலில் உதவி; சுகாதார உதவி தருதல்; உணவு தயாரித்தல்; பாடல்கள் இயற்றுதல், இசைக் கற்றுக் கொடுத்தல், அணிகளுக்குப் பயிற்சியளித்தல்; நிதியுதவித் திட்டங்கள் எழுதுதல்; பிரசங்கங்களுக்குரிய ஆராய்ச்சி செய்தல் அல்லது மொழி பெயர்த்தல்; மற்றும் இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான சிறப்புப் பணிகள். புதிய உறுப்பினர்களுக்கு நாங்கள் சொல்லுவது, ‘‘நீங்கள் எதில் சிறப்புள்ளவர்களோ அதை உங்கள் திருச்சபைக்காக செய்திடுங்கள்!”

SHAPE : உங்களது ஆள்தத்துவத்தைப் பயன்படுத்துதல்

நாம் ஒவ்வொருவரும் எவ்வளவு தனிச்சிறப்பு பெற்றவர்களென்று நாம் உணருவதே இல்லை. DNA மரபணுக்கள் எண்ணிக்கைக்கு அடங்காத விதங்களில் இணையக்கூடும். அது பத்தின் 2,400,000,000ஆம் அடுக்கின் அளவு (10 to the power of 2,400,000,000) இந்தளவு சந்தர்ப்பங்களுள் ஒன்றாகத்தான் உங்களைப் போல் இன்னுமொரு சிருஷ்டியைக் காணும் சந்தர்ப்பம் இருக்கும். இந்த எண்ணில் வரும் பூஜ்ஜியங்களை ஒரு அங்குல அகலம் கொண்டதாக எழுதினால், அந்த எண்ணை எழுத 37,000 மைல் நீளமுள்ள துண்டுத்தாள் தேவை! சில விஞ்ஞானிகள் பிரபஞ்சத்திலுள்ள எல்லா அணுக்களும், 10ன் பின்னர் 76 பூஜ்ஜியங்களைச் சேர்த்த எண்ணைவிட சற்றுக் குறைவானவை என்று கண்டுபிடித்துள்ளார்கள்; இது உங்கள் DNA மரபணுபைவிட மிகக் குறைவு. உங்களது வாழ்க்கையின் தனித்தன்மை விஞ்ஞான பூர்வமாக நிரூபிக்கப்பட்டுவிட்டது. தேவன் உங்களைப் படைத்திருப்பதுபோல (அப்படியே உங்களைப்போல), இன்னொருவர் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. தேவன் உங்களை உருவாக்கின பின்னர், அந்த அச்சை (Mold) உடைத்துப்போட்டார்! தேவன் பல்வேறு ரகங்களை விரும்புகின்றவர் என்பது தெளிவாகத் தெரிகின்றது – உங்களைச்

சுற்றியிருப்பவற்றை ஒருமுறை பாருங்கள்! நம் ஒவ்வொருவரையும் தனிச் சிறப்புள்ள ஆள்தத்துவம் கொண்டவர்களாகப் படைத்தார். ஒவ்வொரு நபரின் சிறப்புக் குணங்களும் வேறுபட்டவை. கூச்ச சுபாவத்துடன் தனக்குள்ளே உணர்வுகளை வைக்கும் சுபாவத்தினர், சகஜமாக வெளியில் யாவரிடமும் பழகும் சுபாவத்தினர்; வழக்கமாக செய்யப்படும் விதத்திலேயே மாறுதலின்றி எல்லாவற்றையும் செய்ய விரும்புகிறவர்கள், பல மாறுதல்களை விரும்பும் சுபாவத்தினர்; இப்படி சிலரை ***''உணர்ச்சிகள்''*** உள்ளவர்களாகவும், சிலரை ***''சிந்தனையாளர்களாகவும்''*** தேவன் உருவாக்கினார். சிலருக்குத் தனியாக, அவர்களுக்கென்று ஒரு பணி கொடுக்கப்பட்டால் சிறப்பாகச் செய்வார்கள். வேறு சிலர் ஒரு அணியில் இணைந்தால் மட்டுமே சிறப்பாகச் செயல்படுவார்கள். ***''தேவன் வெவ்வேறு மக்கள் மூலம், வெவ்வேறு விதங்களில் கிரியை செய்கின்றார்; ஆனால், அந்த ஒரே தேவனே, அவர்களனைவர் மூலமும் தமது நோக்கத்தை நிறைவேற்றுகின்றார்''***[10] என்று வேதம் கூறுகின்றது.

தேவன் எல்லாவித தனித்தாள் சுபாவங்களையும் பயன்படுத்துகிறாரென்பதற்கு வேதாகமத்தில் அநேக சான்றுகள் உண்டு. பேதுரு, சுறுசுறுப்பும் துடிதுடிப்பும் கலகலப்பும் நிறைந்தவர். பவுல், காரியக் கண்ணனாகவும், குறிக்கோள் நிறைந்தவராகவும், சீற்றம் கொண்டவராகவும் உள்ளார். எரேமியாவோ சோகம் நிறைந்த சுபாவமுள்ளவர். பன்னிரெண்டு சீஷருடைய சுபாவங்களின் வேறுபாடுகளைப் பார்த்தால், ஏன் அவர்களுக்குள் அடிக்கடி வாக்குவாதம் எழும்பியதென்பதைப் புரிந்துகொள்ளலாம்.



ஊழியத்திற்கு இதுதான் "சரியான" அல்லது "தவறான" மனோபாவம் என்று கிடையாது. சபை, சமநிலையிலிருக்க எல்லாவிதமான தனித்தாள் சுபாவங்களும் தேவை. நாம் யாவரும் ஒரே சுபாவத்தோடு இருந்தால் உலகம் மிகவும் சலிப்பூட்டுவதாக இருக்கும். அதிர்ஷ்டவசமாக, பல வகையான ஆள்தத்துவங்களும் மனோபாவங்களும் உண்டு! உங்களது ஆவிக்குரிய வரங்களும் திறமைகளும் நீங்கள் ***எங்கு, எப்படி*** பயன்படுத்துவீர்களென்பது உங்களது ஆள்தத்துவத்தை சார்ந்த ஒன்று. உதாரணமாக,

இருவருக்கு சுவிசேஷப்பணியில் ஒரே விதமான வரம் இருக்கலாம். ஒருவர் கூச்ச சுபாவமுள்ளவராகவும், மற்றவர் கலகலப்பாக பழகுகிறவராகவும் இருந்தால், ஒரே வரம் வெவ்வேறு விதமாகச் செயல்படும். மரவேலை செய்யும் ஆசாரிகளுக்கு மரத்தின் எந்த முனையில் இருந்து இழைத்தால் (மரத்தின் அமைப்பைப் பொருத்தது இது), வேலை இலகுவாக இருக்கும் என்று தெரியும். அதேபோல, உங்கள் சுபாவத்திற்கு எதிரான முறையில் ஊழியஞ்செய்ய நீங்கள் கட்டாயப்படுத்தப்பட்டால், அங்கு மன இறுக்கமும், சஞ்சலமும் ஏற்படும். மட்டுமல்ல, அங்கு கூடுதலாக உங்கள் சக்தியும் முயற்சியும் தேவைப்படும் – விளைவும் சிறப்பானதாக இருக்காது. ஆகவேதான் மற்றவர்களின் ஊழியத்தைப் பார்த்து அப்படியே நாம் செய்ய முயற்சிப்பது தோல்வியில் முடிவடைகின்றது – ஆனால், உங்களுக்கு *அவருக்கு* இருக்கும் ஆள்தத்துவம் இல்லை. அத்தோடு, நீங்கள் நீங்களாகவே இருக்கும்படிதான் தேவன் உங்களை ஏற்படுத்தினார். பிறருடைய உதாரணங்களிலிருந்து நீங்கள் *கற்றுக் கொள்ளலாம்;* ஆனால், அதை உங்கள் தனிப்பட்ட *வடிவமைப்பிற்கு* ஏற்ப "வடிகட்டி"யைத் தெரிந்தெடுக்க வேண்டும். உங்கள் ஆள்தத்துவ நிலை, தனித்தாள் சுபாவம் பற்றி அறிந்துகொள்ள இன்று ஏராளமான புத்தகங்களும் உபகரணங்களுமிருக்கின்றன. அவைகளை அறிந்துகொண்டு அதற்கேற்ப தேவனுக்காக அவைகளை பயன்படுத்துங்கள்.

தேவன் உங்களை எதைச் செய்யுமாறு படைத்தாரோ, அதைச் செய்வது மனதுக்கு இதமாக இருக்கும்.

வண்ணம் பூசிய கண்ணாடியைப்போல நமது வெவ்வேறு தனித்தாள் சுபாவங்களும் தேவனுடைய ஒளியை வெவ்வேறு நிறங்களிலும், வடிவங்களிலும் பிரதிபலிக்கின்றன. அதினிமித்தம் தேவனுடைய குடும்பமானது பல விதங்களிலும் ஆசீர்வதிக்கப்படுகின்றது. தேவன் உங்களை எதைச் செய்யுமாறு படைத்தாரோ, அதைச் செய்வது மனதுக்கு இதமாக இருக்கும். தேவன் உங்களுக்கு கொடுத்துள்ள தனித்தாள் சுபாவத்திற்கு இசைந்து நீங்கள் ஊழியஞ் செய்தால், உங்களுக்கு நிறைவும், திருப்தியும், பலனும் கிடைக்கும்.

SHAPE : *உங்கள் அனுபவங்களைப் பயன்படுத்துதல்*

பெரும்பாலும், உங்கள் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட உங்கள் வாழ்க்கை அனுபவங்களைக் கொண்டே நீங்கள் வடிவமைக்கப்படுகின்றீர்கள். உங்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக, தேவனே அவைகளை அனுமதித்தார்.[11] தேவனை சேவிக்க உங்களுக்கேற்ற அமைப்பு எதுவென்று தீர்மானிக்க, உங்கள் கடந்த காலத்திலிருந்து குறைந்தது ஆறுவித அனுபவங்களை நீங்கள் பரிசோதிக்க வேண்டும்:

- *குடும்ப* அனுபவங்கள்: உங்கள் குடும்பத்தில் வளரும்போது எவைகளைக் கற்றுக்கொண்டீர்கள்?

- *கல்வி* அனுபவங்கள்: பள்ளியில் உங்களுக்கு விருப்பமான பாடம் எது?

- *வேலை* அனுபவங்கள்: எந்த வேலை அதிக பயனுள்ளதாக, நீங்கள் விரும்பிச் செய்ததாக இருந்தது?

- *ஆவிக்குரிய* அனுபவங்கள்: நீங்கள் தேவனோடு செலவழிக்க அர்த்தமுள்ள சிறந்த நேரம் எது?

- *ஊழிய* அனுபவங்கள்: கடந்த காலங்களில் எப்படித் தேவனைச் சேவித்தீர்கள்?

- *வேதனையான* அனுபவங்கள்: எந்தப் பிரச்சனைகள், காயங்கள், முட்கள், உபத்திரவங்களிலிருந்து நீங்கள் கற்றுக் கொண்டீர்கள்?

கடைசியாக, குறிப்பிட்டிருக்கும் ***வேதனையான*** அனுபவங்கள் மூலமே தேவன் உங்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கு அதிகமாக பயன்படுத்துகிறார். ***ஒரு "காயத்தையும்" தேவன் வீணாக்குவதேயில்லை!*** உங்களது ***மிகப்பெரிய*** காயத்திலிருந்து தான் உங்களது மிகப்பெரிய ஊழியம் பிறக்கும். மனநிலை பாதிக்கப்பட்ட ஒரு குழந்தையின் பெற்றோருக்கு, அதே

அனுபவத்தைக் கடந்திருந்த வேறொரு பெற்றோரைத் தவிர வேறு யார் திறம்பட ஊழியஞ் செய்யக்கூடும்? மதுபானத்திற்கு அடிமையாகித் தவிக்கும் ஒருவருக்கு, அதுபோலவே சிக்கி, அந்தப் பிசாசுடன் போராடி, விடுதலையடைந்த ஒருவரைத் தவிர வேறு யார் சிறப்பாக ஊழியஞ் செய்யக்கூடும்? கணவன் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பு கொண்டு தன்னைக் கைவிட்டுவிட்ட நிலையில் தவிக்கும் ஒரு பெண்ணுக்கு அதே வேதனையின் பாதையில் கடந்து சென்ற ஒருவரைத் தவிர வேறு யார் அதிக பயனுள்ள விதத்தில் ஊழியஞ் செய்யக்கூடும்?

தேவன், அப்படிப்பட்ட பாதையில் செல்லுவோருக்கு ஊழியஞ் செய்ய உங்களைத் தகுதிப்படுத்துவதற்காகவே, வேண்டுமென்றே உங்களுக்கு அந்த வேதனையின் பாதையை அனுமதிக்கின்றார். ***“தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கின்றவர்”***[12] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் வேதனையான அனுபவங்களை தேவன் பயன்படுத்த வேண்டுமானால், நீங்கள் அவற்றைப் பகிர்ந்துக் கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.

உண்மையாகவே தேவனால் பயன்படுத்தப்பட நீங்கள் வாஞ்சித்தால், ஒரு வலிமை வாய்ந்த சத்தியத்தை நீங்கள் புரிந்தே ஆகவேண்டும் – உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மனம் வருந்திய அனுபவங்கள் மற்றும் மறைத்து வைக்க முற்படும் அனுபவங்கள் ஆகியவற்றை மனந்திறந்து பேசவேண்டும். உங்களது தவறுகள், தோல்விகள் மற்றும் பயங்கள் ஆகியவற்றை மனந்திறந்து பேசவேண்டும். பொதுவாக மக்கள், தாங்கள் காயப்பட்ட, வேதனைப்பட்ட அனுபவங்களை மூடி மறைக்கத் தான் முயலுவார்கள். ஆனால், அவைகளை பகிர்ந்து கொள்ளும்போதுதான் வல்லமையான ஊழியம் வெளிப்படுகின்றது! நமது பெலனைக்குறித்து நாம் புகழ்ந்து பேசுவதைவிட, நமது பலவீனத்தில் தேவனுடைய கிருபை நம்மை எப்படித்

தாங்கியதென்பதைப் பகிர்ந்து கொள்ளும்போது, மக்கள் உற்சாகமும் தைரியமுமடைவார்கள்.

இந்த சத்தியத்தை பவுல் அறிந்திருந்தபடியால்தான், தனக்கு ஏற்படும் எல்லா மனச்சோர்வு மற்றும் தாக்குதலைக் குறித்து உண்மையாக ஒத்துக்கொண்டார். *"ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியா திருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று. நாங்கள் எங்கள்மேல் நம்பிக்கையாயிராமல், மரித்தோரை எழுப்புகிற தேவன்மேல் நம்பிக்கையாயிருக்கத்தக்கதாக, மரணம் வருமென்று நாங்கள் எங்களுக்குள்ளே நிச்சயத்திருந்தோம். அப்படிப்பட்ட மரணத்தினின்றும் அவர் எங்களைத் தப்புவித்தார், இப்பொழுதும் தப்புவிக்கின்றார், இன்னும் தப்புவிப்பார் என்று அவரை நம்பியிருக்கின்றோம்"*[13]

தனது சந்தேகங்களையும் மனச்சோர்வுள்ள அனுபவங்களையும் பவுல் இரகசியமாக வைத்திருந்தால், மக்கள் அதனால் பயனடைந்திருக்கவே முடியாது. பகிர்ந்தளிக்கப்பட்ட அனுபவங்கள்தான் பிறருக்கு உதவி செய்கின்றது. "அனுபவம் என்பது உங்களுக்கு நடப்பது அல்ல. உங்களுக்கு நடந்ததை வைத்து நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதுதான் அனுபவம்" என்று ஆல்டஸ் ஹக்ஸ்லி கூறினார். நீங்கள் கடந்து சென்ற அனுபவங்களைக் கொண்டு என்ன செய்யப் போகின்றீர்கள்? உங்கள் வேதனையை வீணாக்காதீர்கள்; அவைகளை பயன்படுத்தி பிறருக்கு உதவி செய்யுங்கள்.

சேவைக்கு உங்களை வடிவமைக்க, தேவன் பயன்படுத்தும் ஐந்து வழிகளையும் நாம் பார்த்ததன் மூலம் தேவனுடைய இராஜரீகத் தன்மையை இன்னும் அதிக அளவில் நீங்கள் கண்டுகொள்ள வழிவகுத்திருக்கும்; அவரை நீங்கள் சேவிக்க, எப்படி அவர் உங்களை ஆயத்தஞ் செய்திருக்கின்றாரென்பதையும் உங்களுக்கு இன்னும் தெளிவாகக் காண்பித்திருக்குமென்று நான் நம்புகின்றேன். உங்களது வடிவமைப்பை நீங்கள் பயன்படுத்துவதன் மூலம் ஊழியத்தில் பலனையும் நிறைவையும் காண முடியும்.[14] உங்கள்

இருதயம் விரும்புகின்ற காரியங்களில் உங்களது ***ஆவிக்குரிய வரங்களையும், திறமைகளையும்*** நீங்கள் உபயோகிக்கும்போது சிறந்த பலனைக் காண்பீர்கள். அதோடு அவைகள் உங்களது ***ஆள்தத்துவம்*** மற்றும் ***அனுபவங்களின்*** அடிப்படையில் வெளிப்படும். எந்த அளவுக்கு காரியங்கள் பொருந்துகின்றதோ அந்த அளவிற்கு ஊழியம் வெற்றியுள்ளதாக இருக்கும்.

நாள் முப்பத்தொன்று
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: வேறொருவர் நானாக இருக்க முடியாது.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"தேவன் நம் ஒவ்வொருவருக்கும் விசேஷ திறமைகளை அருளியுள்ளார்; அவைகளை ஒருவருக்கொருவர் உதவிச் செய்ய கவனமாயிருக்க வேண்டும். இப்படி தேவன் அருளின பல வகையான ஆசீர்வாதங்களை நாம் பகிர்ந்தளிக்க வேண்டும்''* 1 பேதுரு 4:10. (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தேவனால் எனக்களிக்கப்பட்ட எந்தவொரு திறமை அல்லது தனிப்பட்ட அனுபவத்தை நான் எனது சபைக்கு அளிப்பது எப்படி?

தேவன் உங்களுக்கு அருளியவற்றைப் பயன்படுத்துதல்

மிக நேர்த்தியாகவும், சிறப்பாகவும், பிரமிக்கத்தக்க விதமாகவும் நாம் உருவாக்கப்பட்டு கிறிஸ்துவின் சரீரத்தில் செயல்படும் அங்கமாக இருப்பதனால்... தொடர்ந்து முன்னேறி, தேவன் நம்மை யாராக இருக்க தெரிந்துகொண்டாரோ அந்த நபராக இருந்து விடுவோமாக.

ரோமர் 12:5 (புதிய மொழியாக்கம்)

நீ யாராக இருக்கின்றாய் என்பது தேவன் உனக்களித்த ஈவு; உன் வாழ்வை வைத்து என்ன செய்கின்றாய் என்பது நீ தேவனுக்கு அளிக்கும் ஈவு.

டேனிஷ் பழமொழி

நமக்கான சிறந்ததை பெற்றுக்கொள்ள தேவன் பாத்திரர்.

தேவன் உங்களை ஒரு நோக்கத்தோடு வடிவமைத்தார். உங்களுக்கு அருளப்பட்டவைகளை எவ்வளவு சிறப்பாகப் பயன்படுத்தக்கூடுமோ அவ்வளவு சிறப்பாக பயன்படுத்த வேண்டுமென்று அவர் எதிர்பார்க்கின்றார். உங்களுக்கில்லாத திறமைகளை இச்சித்து, அவைகளைக் குறித்து நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டிருக்க தேவன் விரும்பவில்லை. அவர் உங்களுக்குக் கொடுத்திருக்கும் தாலந்துகள் மீது நீங்கள் கருத்தூன்ற வேண்டுமென்றுதான் தேவன் விரும்புகின்றார்.

நீங்கள் வடிவமைக்கப்படாத வழிகளில் தேவனைச் சேவிக்க நீங்கள் முயற்சி செய்யும்போது, ஒரு வட்டமான துவாரத்திற்குள் ஒரு சதுரமான முளையைத் (peg) திணிக்க முயலுவதுபோலிருக்கும்.

அப்படி முயற்சிக்கும்போது... நம்பிக்கை இழக்கச்செய்யும் சோர்வும், குறைந்த அளவு பலனுமே கிட்டும். அது உங்கள் நேரத்தையும் தாலந்துகளையும், சத்துவத்தையும் வீணடிக்கும். உங்கள் வடிவமைப்பிற்கேற்ப தேவனை சேவிப்பதுதான், உங்கள் வாழ்க்கையை மிகச் சிறந்த பயனுள்ளதாக்க ஒரே வழி. இதனைச் செய்ய, நமது வடிவமைப்பை முதலாவது அறிந்துகொள்ள வேண்டும்; பின்னர் அதை ஏற்றுக்கொண்டு, அதில் மகிழ்ந்து, அதன் முழு சத்துவத்திற்கு வளர வேண்டும்.

உங்கள் வடிவமைப்பை அறிந்துகொள்ளுங்கள்

"நீங்கள் சிந்தனையற்றவர்களாக நடந்து கொள்ளாமல், கர்த்தர் உங்களைக் கொண்டு செய்ய விரும்புவதென்ன என்பதைக் கண்டுகொள்ள முயற்சியுங்கள்"[1] என்று வேதம் கூறுகின்றது. இன்னுமொரு நாளை கடந்துபோக விட வேண்டாம். நீங்கள் யாராக இருக்கவும், எதனை செய்யவும் தேவனின் நோக்கம் என்பதனை – இப்பொழுதே கண்டு கொண்டு, தெளிவு படுத்திக்கொள்ள ஆரம்பியுங்கள்.

உங்களது வரங்களையும் திறமைகளையும் மதிப்பிடுவதிலிருந்து ஆரம்பியுங்கள். நீங்கள் எதில் சிறப்புப் பெற்றவர்கள் என்றும், எவைகளில் திறமையற்றவர்கள் என்றும் ஒரு உண்மையான, நீண்ட பார்வை கொள்ளுங்கள். *"உங்கள் திறமைகளைக் குறித்து ஒரு தெளிவான புத்தியோடு மதிப்பீடு செய்ய முயலுங்கள்"*[2] என்று பவுல் ஆலோசனை கூறுகின்றார். ஒரு பட்டியலிடுங்கள். உங்களைக் குறித்த ஒரு உண்மையான அபிப்பிராயத்தை மற்ற மக்களிடம் கேளுங்கள். அப்படிக் கேட்கும்போது, அவர்களின் பாராட்டைத் தேடியல்ல, உண்மையைத் தேடி கண்டுபிடிக்க விரும்புகின்றீர்கள் என்பதனை அவர்களிடம் கூறுங்கள். ஆவிக்குரிய வரங்களும், இயற்கைத் திறமைகளும் எப்போதுமே பிறரால் உறுதிப்படுத்தப்படும். நீங்கள் ஒரு போதகராக அல்லது ஒரு பாடகராக இருக்க கிருபை பெற்றிருக்கின்றீர்கள் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் – ஆனால், வேறொருவரும் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. அப்படியானால் என்ன அர்த்தம்? உங்களுக்குத் தலைமைத்துவ வரமிருக்கின்றதா

என்று கண்டுபிடிக்க, சற்று உங்களுக்குப் பின்னால் திரும்பிப் பாருங்கள்! ஒருவரும் உங்களை பின்பற்றாவிட்டால், நீங்கள் தலைவரல்ல. இப்படிப்பட்ட கேள்விகளைக் கேளுங்கள்: ***மற்றவர்களும் ஏற்று உறுதிப்படுத்தின*** கனிகளை நான் என் வாழ்க்கையில் எங்கு பார்த்திருக்கின்றேன்? நான் எங்கு ஏற்கனவே வெற்றியடைந்திருக்கின்றேன்? ஆவிக்குரிய வரங்களை கண்டுகொள்ள உதவும் பரிசோதனைகள், திறமைகளை கண்டுகொள்ள பயன்படுத்தப்படும் ஆய்வுகள் ஆகிய காரியங்களினால் ஓரளவு நன்மை கிட்டினாலும், அது ஒரு முழுமையான பிரயோஜனத்தைக் கொண்டு வராது. காரணம், முதலாவதாக, அப்படிப்பட்ட உபகரணங்கள் யாவருக்கும் பொருந்தும் வண்ணம் தரப்படுத்தப்பட்டுள்ளபடியால், நமது தனித்தன்மையை கணக்கில் கொண்டு வர இயலவில்லை. இரண்டாவதாக, வரங்களுக்கு வேதாகமத்தில் எந்த ஒரு விளக்கமும் கொடுக்கப்படவில்லை. ஆகவே, பொதுவாக நமக்கு கிடைக்கின்ற எந்த ஒரு விளக்கமும், அந்த விளக்கத்தைக் கொடுக்கின்ற சபை பிரிவைச் சார்ந்த ஒருதலைபட்சமான கருத்தாகவே உள்ளன. மற்றொரு பிரச்சனை என்னவெனில், முதிர்ச்சி அடைய அடைய சிலர் பல வரங்களின் குணாதிசயங்களை வெளிப்படுத்துவர். இவைகள் வரங்களினால் அல்ல, குணாதிசய வளர்ச்சியினால் வந்த ஒரு காரியம். உதாரணமாக, சேவை செய்தல், போதித்தல், தாராளமாகக் கொடுத்தல் – ஆகிய காரியங்கள் யாவும் உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் வரத்தினால் அல்லாமல் அனுபவ முயற்சியினாலும் நடைபெறக்கூடும்.



உங்கள் வரங்களையும் திறமைகளையும் கண்டு கொள்ளுவதற்கான ஒரு சிறந்த வழி – பல்வேறு வகையான வரங்கள் மற்றும் திறமைகளின் காரியத்தில் நம்மை ***பரீட்சித்துப் பார்ப்பதன் மூலமாக*** இளைஞனாக நான் இருக்கையில், எனது வரங்களையும் திறமைகளையும் கண்டுகொள்ள நூற்றுக்கணக்கான பரிசோதனைகளையும், ஆய்வுகளையும் நான் செய்திருக்கலாம். ஆனால், போதிக்கும் வரம் எனக்கிருப்பதை நான் கண்டு கொண்டிருக்கவே முடியாது; ஏனெனில், நான் போதித்ததே இல்லை! பேசுவதற்குக் கிடைத்த வாய்ப்புகளை நான் பயன்படுத்த ஆரம்பித்த

பின்னர்தான், விளைவுகளைக் கண்டேன். பிறரிடமிருந்து உறுதி செய்யும் கருத்துக்களைப் பெற்றேன். அதன் பின்னரே, "இதைச் செய்யும் வரத்தை தேவன் எனக்கு அருளியிருக்கின்றார்!" என்று உணர்ந்து கொண்டேன்.

> ***நீங்கள் முயற்சிக்கும்வரை, எதில் சிறந்தவர்களென்பதைக் கண்டுகொள்ள முடியாது.***

அநேக புத்தகங்கள், வரங்களைக் கண்டுகொள்ளும் முறையை பின்னோக்கின அணுகு முறையோடு செய்கின்றன: "உங்களது ஆவிக்குரிய வரத்தைக் கண்டுகொள்ளுங்கள்; அதன்பின்னர் உங்களுக்குரிய ஊழியம் இன்னதென்று கண்டுகொள்ளலாம்." உண்மையில், அதற்கு நேர்மறையான அணுகுமுறை பயனளிக்கின்றது. சேவை செய்ய ஆரம்பியுங்கள், பலவித ஊழிய சூழலில் உங்களை நிறுத்தி பரீட்சித்துப் பாருங்கள், அதன்பின் உங்கள் வரத்தைக் கண்டுகொள்ளலாம். சேவை செய்வதில் நீங்கள் இறங்கி செயல்படும்வரை, நீங்கள் எதில் சிறந்தவர்களென்பதை உங்களால் கண்டுகொள்ள முடியாது.

உங்களுக்குள் எத்தனையோ திறமைகளும், வரங்களும் மறைந்துக் கிடக்கின்றன. நீங்கள் இதுவரை பரீட்சித்துப் பார்க்காதபடியால், அவை இருப்பதே உங்களுக்குத் தெரியாமல் இருக்கின்றது. ஆகையால், நீங்கள் இதுவரை செய்திராத சில காரியங்களைச் செய்து பாருங்களென்று உங்களை ஊக்குவிக்கின்றேன். எவ்வளவு வயதாகியிருந்தாலும், பரீட்சித்துப் பார்ப்பதை நிறுத்தவே வேண்டாம். தங்கள் 70 அல்லது 80 வயதுகளில், தங்களிடம் மறைந்திருந்த திறமைகளைக் கண்டுபிடித்தவர்கள் உண்டு. தனது 90வது வயதில் பத்து கிலோ மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஓடி ஜெயித்த ஒரு பெண்மணி எனக்குத் தெரியும். அவர்கள், ஓட்டத்தில் தனக்கிருந்த ஆர்வத்தைத் தனது 78வது வயதில்தான் கண்டுகொண்டார்கள்! ஏதோவொரு இடத்தில் சேவை செய்ய நீங்கள் முன்வரும்வரை, உங்கள் வரங்களைக் கண்டு கொள்ள முயற்சிக்க வேண்டாம். சேவை செய்ய ஆரம்பியுங்கள். ஊழியத்தில் ஈடுபடும்போது உங்கள் வரங்களைக் கண்டு கொள்ளுவீர்கள். போதிப்பதையோ, தலைமை தாங்குவதையோ,

கூட்டம் ஒழுங்கு செய்வதையோ, இசைக் கருவிகளை இசைப்பதையோ, இளம் வாலிபர்கள் (Teens) ஊழியத்தில் ஈடுபடுவதையோ – எதையாவது முயற்சி செய்து பாருங்கள். அப்பொழுதுதான் உங்கள் வரங்களைக் கண்டுகொள்ள முடியும். முயற்சி செய்யும்வரை நீங்கள் எதில் சிறந்தவர்களென்பதைக் கண்டுகொள்ளவே முடியாது. அது சரிவராவிட்டால், அதைத் தோல்வி என்றழைக்காமல் "பரீட்சித்தல்" என்று அழையுங்கள். நாளடைவில் நீங்கள் எதில் சிறந்தவர்களென்பதைக் கண்டுகொள்ளுவீர்கள்.

உங்களது இருதயத்தையும் ஆள்தத்துவ நிலையையும் கணக்கில் கொள்ளுங்கள். ***"நீங்கள் யாரென்பதைக் குறித்தும், உங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வேலையென்ன என்பதையும் கவனமாக ஆராய்ந்தறிந்து அதன் பின்பு அவ்வேலையில் மூழ்கி விடுங்கள்"***[3] என்று பவுல் ஆலோசனை கூறுகின்றார். உங்களை நன்றாகத் தெரிந்தவர்களிடமிருந்து கருத்தைப் பெற்றுக் கொள்ளுவது நிச்சயம் உதவியாக இருக்கும். உங்களுக்கு நீங்களே சில கேள்விகளை கேளுங்கள்: எது செய்வது எனக்கு மிகுந்த சந்தோஷமளிக்கின்றது? எப்போது முழு ஜீவனோடிருப்பதுபோல் உணர்வடைகின்றேன்? எனக்கு வழக்கமாக செய்கின்ற வேலையை செய்வது பிடித்தமா அல்லது புதுமையான வேலைகளில் ஈடுபடுவது பிடித்தமா? தனித்து செயல்படுவதா அல்லது குழுவோடு சேர்ந்து செயல்படுவதா – எது பிடிக்கும்? நான் கூச்ச சுபாவம் உள்ளவனா அல்லது கலகலப்பாக யாவரிடமும் பழக விரும்புகின்றவனா? நான் சிந்தனையாளனா அல்லது உணர்ச்சி பெருக்கு உடையவனா? எதை நான் அதிகம் விரும்புவேன் – ஒத்துப் போகும் நிலையா அல்லது போட்டியுணர்வா? – எது எனக்கு இன்பமானது?

உங்களது அனுபவங்களை ஆராய்ந்து, அவைகளின் மூலம் நீங்கள் கற்றுக்கொண்ட பாடங்களைத் தெரிந்தெடுங்கள். உங்கள் வாழ்க்கையை மறுபரிசீலனை செய்து, அது உங்களை எப்படி உருவாக்கியிருக்கின்றதென்பதை யோசித்துப் பாருங்கள். மோசே, இஸ்ரவேலரிடம், ***"கர்த்தரோடுள்ள உங்கள் அனுபவங்கள் மூலம், நீங்கள் இன்று கற்றுக் கொண்டதை நினைவுகூருங்கள்"***[4] என்றார். மறக்கப்பட்ட அனுபவங்களால் பயனேதுமில்லை;

அதற்காகத்தான் ஆவிக்குரிய பதிவேடு ஒன்றை வைத்துக் கொள்ளுவது நலம். கலாத்திய நாட்டு விசுவாசிகள், தாங்களடைந்த துன்பங்களின் அனுபவங்களை வீணாக்கிப் போடுவார்களோ என்று பவுல் கவலைப்பட்டார். *"உங்கள் அனுபவங்களெல்லாம் (பிரயாசங்களெல்லாம்) வீணாகிப் போய்விட்டதோ? அப்படியில்லாமல் இருக்க விரும்புகின்றேன்!"*[5] என்று பவுல் கூறினார். வேதனை, தோல்வி மற்றும் வெட்கமடையும் நேரங்கள்—ஆகிய காரியங்களின் மூலம் தேவனுடைய நோக்கங்களை நாம் பார்ப்பது அரிதாகவே உள்ளது. இயேசு, பேதுருவின் கால்களைக் கழுவும்போது, *"நான் செய்கின்றதை இப்பொழுது அறியமாட்டீர்கள்; பின்னால் புரிந்து கொள்ளுவீர்கள்"*[6] என்று கூறினார். ஒரு பிரச்சனையை தேவன் எப்படி நன்மையாக மாற்றினாரென்று நாம் பின்னர்தான் அறிந்துகொள்ளுகின்றோம்.

உங்களது அனுபவங்களிலிருந்து பாடங்களைப் பிரித்தெடுத்துக் கற்றுக் கொள்ளுவதற்கு கால அவகாசம் தேவை. ***வாழ்க்கையை பின்னிட்டு ஆய்வு செய்யும் ஒரு நேரத்தை*** ஒரு வாரயிறுதி முழுவதுமாக எடுத்துக்கொண்டு, தேவன் எப்படியெல்லாம் உங்கள் வாழ்க்கையின் வெவ்வேறு நேரங்களில் கிரியை செய்துள்ளார் என்றும், நீங்கள் அப்போது கற்றுக்கொண்ட பாடங்களைப் பிறருக்கு உதவியாக நீங்கள் எப்படிப் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரென்பதையும் நேரமெடுத்து சிந்தித்துப் பாருங்கள். அது மிகுந்த பயனளிக்கும். இதைச் செய்ய உங்களுக்கு உதவக்கூடிய வழிமுறைகள் இருக்கின்றன.[7]

உங்களது வடிவமைப்பை ஏற்றுக்கொண்டு, அதில் மகிழ்ச்சிகொள்ளுங்கள்

உங்களுக்கு எது சிறந்ததென்று தேவனுக்குத் தெரியும்; ஆகவே, உங்களை வடிவமைத்து வைத்திருக்கும் நிலையை நீங்கள் நன்றியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். "ஒரு மனிதனாகிய உனக்கு, தேவனைக் குறுக்கு விசாரணை செய்ய என்ன அதிகாரமிருக்கின்றது? மண்பாண்டம், தன்னை உருவாக்கியவனை நோக்கி: *"ஏன் என்னை இப்படி உருவாக்கினாயென்று கேட்கலாமா?' குயவன், களிமண்ணை தான் விரும்புகின்றபடி வனைவான்!"*[8] என்று வேதம் கூறுகின்றது. தேவன், தம்முடைய

நோக்கத்திற்காக, உங்கள் வடிவமைப்பை தமது அனந்த ஞானத்தின்படி தீர்மானித்திருக்கின்றார். ஆகவே, நீங்கள் அதைக்குறித்து எரிச்சலடையவோ, புறக்கணிக்கவோ கூடாது. வேறு யாரோ ஒருவர்போல உங்களை உருமாற்ற முயலுவதைவிட, தேவன் உங்களுக்கென்றே கொடுத்துள்ள வடிவமைப்பை நீங்கள் கொண்டாட வேண்டும். ***"கிறிஸ்து நம் ஒவ்வொருவருக்கும் சிறப்பான திறமைகளைக் கொடுத்திருக்கின்றார் - தமது ஐசுவரியமுள்ள ஈவுகளின் பண்டக சாலையிலிருந்து எதைத் தர விரும்புகின்றாரோ அதைத் தருகின்றார்"***[9] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் வடிவமைப்பை ஏற்றுக் கொள்ளுவதன் ஒரு பகுதி, உங்கள் வரையறைகளை அறிந்துகொள்ளுதல். எல்லாரும் எல்லாக் காரியத்திலும் சிறந்து விளங்க இயலாது. எல்லோரும் எல்லாமுமாக இருக்கும்படி அழைக்கப்படவுமில்லை. நம் ஒவ்வொருவருக்கும் வரையறுக்கப்பட்ட பங்குகள் உண்டு. தனது அழைப்பு எல்லாரையும் திருப்திப்படுத்துவதோ, எல்லாவற்றையும் செய்து முடிப்பதோ அல்ல.. ஆனால், தேவன் எந்த ஊழியத்திற்கென்று தன்னை வடிவமைத்தாரோ அந்தக் குறிப்பிட்ட ஊழியத்தின் மீது மட்டுமே கவனம் செலுத்துவதென்று பவுல் புரிந்து கொண்டார்.[10] ***"தேவன் நமக்கென்று வைத்திருக்கின்ற திட்டத்தின் வரையறைக்குள்ளேயே இருப்பதுதான் நமது இலக்கு."***[11] என்று அவர் கூறினார்.

வரையறை என்ற வார்த்தை, தேவன் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு பணித்தளம் அல்லது இடம், சேவைக்கென்று திட்டம் பண்ணிக் குறித்திருக்கின்றாரென்று உணர்த்துகின்றது. உங்கள் வடிவமைப்பு உங்களது விசேஷித்த தன்மையை வெளிப்படுத்துகின்றது. தேவன் நம்மை அழைத்த அழைப்பிற்கு மிஞ்சி நமது ஊழியத்தை விரிவுப்படுத்த முற்படும்போது நமக்கு மன அழுத்தம் ஏற்படுகின்றது. ஒவ்வொரு ஓட்டப் பந்தயக்காரருக்கும் தனித்தனி ஓட்டப்பாதை கொடுக்கப்பட்டிருக்கின்றதுபோல, நாம் ஒவ்வொருவரும் தனித்தனியாக, ***"தேவன் நமக்கு நியமித்த ஓட்டத்திலே பொறுமையோடு ஓடக்கடவோம்."***[12] உங்களுக்கு அடுத்த பாதையில் ஓடுபவரைப் பார்த்து பொறாமைப்படக் கூடாது. ***உங்கள்*** ஓட்டத்தை முடிப்பதிலேயே கவனத்தைச் செலுத்துங்கள்.

தேவன் உங்களுக்குக் கொடுத்த வடிவமைப்பை நீங்கள் விரும்பி அனுபவிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். *"நீ செய்ய வேண்டியதை நிச்சயத்தோடு செய்; அப்படிச் செய்யும்போது, உன் வேலையை நன்றாகச் செய்த திருப்தியை நீ அனுபவிப்பாய், நீ உன்னை வேறு யாருடனும் ஒப்பிட வேண்டிய தேவை இருக்காது"*[13] என்று வேதம் கூறுகின்றது. சாத்தான் ஊழியத்தின் மகிழ்ச்சியை இருவிதங்களில் திருடப் பார்ப்பான்: ஒன்று, ***ஒப்பிட்டுப்பார்த்தல்*** – உங்கள் ஊழியத்தை இன்னொருவரின் ஊழியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க சோதிப்பான். இரண்டு, ***ஒத்துப்போகுதல்*** – மற்றவர்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப உங்கள் ஊழியத்தை ஒத்துப்போக செய்யும் நிலை. இவை இரண்டுமே, தேவன் விரும்பியபடி ஊழியம் செய்யாதபடி உங்களைச் சிக்க வைக்கும் அபாயகரமான பொறிகள். உங்கள் ஊழியத்தின் மகிழ்ச்சியை நீங்கள் இழக்கும் போதெல்லாம், இந்த இரண்டு சோதனைகளில் எதிலாவது சிக்கியிருக்கின்றீர்களா என்று சோதித்துப் பாருங்கள். ***"உங்கள் வேலையை நன்றாகச் செய்யுங்கள்; அப்பொழுது நீங்கள் பெருமை பாராட்ட ஏதுவாகும்; ஆனால், ஒப்பிட்டுப் பார்க்காதேயுங்கள்"***[14] என்று நம்மை நாம் ஒருபோதும் பிறருடன் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடாதென்று வேதம் கூறுகின்றது. உங்கள் வடிவமைப்பு, ஊழியம், ஊழியத்தின் விளைவுகள் ஆகியவற்றை மற்றவர்களுடன் ஏன் ஒப்பிடக்கூடாதென்பதற்கு இரு காரணங்கள் உண்டு. ஒன்று, உங்களைவிட சிறப்பாக வேலை செய்யும் ஒருவர் எப்போதுமே இருப்பார். அதைப் பார்த்து நீங்கள் அதைரியமடைவீர்கள். மற்றொன்று, உங்களைப்போல் பயனுள்ள விதத்தில் ஊழியம் செய்யாத ஒருவரை நீங்கள் காண நேரிடும். அது உங்களைப் பெருமையினால் நிரப்பிவிடும். இந்த இரண்டு மனப்பான்மையும் உங்களை ஊழியத்தினின்று பிரித்து, உங்களது மகிழ்ச்சியைத் திருடிவிடும். நம்மைப் பிறருடன் ஒப்பிடுவது முட்டாள்தனம் என்று பவுல் கூறுகின்றார்.

தேவன் உங்களுக்கு அளித்த வடிவமைப்பை நீங்கள் மகிழ்ந்து அனுபவிப்பதையே அவர் விரும்புகின்றார்.

நாள் முப்பத்திரண்டு:
தேவன் உங்களுக்கு அருளியவற்றைப் பயன் படுத்துதல்

“தங்களையே பாராட்டிக் கொள்ளும் சிலருடன் நாங்கள் எங்களை ஒப்பிடவோ, தகுதிப்படுத்தவோ தைரியங்கொள்ளுவதில்லை. அவர்கள் தங்களைத் தங்களுடனேயே ஒப்பிட்டு, தங்கள் அறிவின்படியே தங்களை அளப்பது ஞானமற்ற செயல்.”[15] *“ஒப்பிட்டுப் பார்த்தல், தரப்படுத்துதல், போட்டியுணர்வு கொள்ளுதல் - ஆகிய இக்காரியங்களை செய்கின்றவர்கள் ஒட்டுமொத்தத்தில் நோக்கத்தையும் கருத்தையும் தவற விட்டுவிட்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்”*[16] என்று வேறொரு ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகின்றது.

ஊழியத்திற்கான உங்கள் வடிவமைப்பைப் புரிந்து கொள்ளாத மக்கள் உங்களைக் குறைகூறி, நீங்கள் என்ன செய்ய வேண்டுமெனத் *தாங்கள்* நினைக்கிறார்களோ அதைச் செய்ய வைக்குமாறு முயற்சிப்பார்கள். அவர்களைப் பொருட்படுத்த வேண்டாம். தனது ஊழியத்தைக் குறை கூறி, அதைக் கொச்சைப்படுத்த முயன்ற விமர்சிக்கின்றவர்களுடன் பவுல் அடிக்கடி இடைபட வேண்டியதாயிருந்தது. அவருடைய பதில் எப்போதுமே ஒன்றுதான்: “ஒப்பிடுதலைத் தவிர்த்து விடுங்கள்; மிகைப் படுத்துதலுக்கு எதிர்த்து நில்லுங்கள்; தேவனால் வரும் புகழ்ச்சியை மட்டுமே தேடுங்கள்.”[17]

குறை கூறுபவர்களால் பவுல் திசைத் திருப்பப்படவில்லை. தனது ஊழியத்தை பிற ஊழியங்களுடன் ஒப்பிடவில்லை அல்லது தனது ஊழியத்தைக் குறித்த பயனற்ற விவாதங்கள் எதிலும் ஈடுபடவில்லை. அதனால்தான் பவுல், தேவனால் மிக அதிகமாகப் பயன்படுத்தப்பட்டார். “என் வாழ்வு பயனற்றதாக இருக்கும்போது, யாரென்னைப் புகழுகின்றார்களென்பது காரியமல்ல; அதேபோல, என் வாழ்வு பயனுள்ளதாக இருக்கும்போது, யாரென்னைக் குறை கூறுகின்றார்களென்பதும் காரியமல்ல” என ஜான் பன்யன் கூறினார்.

உங்களது வடிவமைப்பை விருத்தி செய்து கொண்டேயிருங்கள்

தேவன் நமக்குத் தந்தவற்றை நாம் மிகச்சிறப்பாகப் பயன்படுத்துவதை அவர் எதிர்பார்க்கின்றாரென்பதையே இயேசு கூறிய தாலந்துகளின் உவமை விளக்குகின்றது. நமது வரங்கள், திறமைகள் ஆகியவற்றை நன்கு பயன்படுத்தி, நமது இருதயங்களை எரியச்செய்து, நமது தனித்தாள் சுபாவத்தையும் குணத்தையும் வளர்த்து, நமது அனுபவத்தை விசாலமாக்கிக் கொண்டே இருக்க வேண்டும். அப்படி செய்யும்போது, நமது சேவையில் அதிக பலனைக் காண்போம். பவுல் பிலிப்பியரிடம், *''உங்கள் அறிவிலும், புரிந்து கொள்ளுதலிலும் வளர்ந்து கொண்டேயிருங்கள்''*[18] என்று கூறினார். தீமோத்தேயுவுக்கு, *"உன்னிடத்திலிருக்கின்ற தேவ வரத்தை அனல் மூட்டி எழுப்பு"*[19] என்று நினைப்பூட்டினார்.

உங்கள் தசைகளுக்குப் பயிற்சியளிக்காவிட்டால், அவை பலவீனப்பட்டுப்போகும். அதுபோலவே, தேவன் உங்களுக்களித்திருக்கும் திறன்களையும், வரங்களையும் பயன்படுத்தாவிட்டால் நீங்கள் அவற்றை இழந்து போவீர்கள். தாலந்துகளின் உவமை மூலம் இயேசு இந்த உண்மையை வலியுறுத்தினார். தனது ஒரு தாலந்தை பயன்படுத்தத் தவறிய ஊழியக்காரனைக் குறித்து, *"அவனிடமிருந்து அந்த ஒரு தாலந்தை எடுத்து, பத்து தாலந்துள்ளவனுக்கு அதைக் கொடுங்கள்"*[20] என்று எஜமான் கூறினார். உங்களுக்கிருப்பதைப் பயன்படுத்தத் தவறினால் உள்ளதையும் இழந்து போவீர்கள். இருக்கின்ற திறமையைப் பயன்படுத்துங்கள். தேவன் அதை அதிகரிப்பார். பவுல் தீமோத்தேயுவிடம், *"தேவன் உனக்களித்த திறமைகளைப் பயன்படுத்த மறவாதே... இந்தத் திறமைகளைச் செயல்படவிடு"*[21] என்றார்.

பயிற்சி செய்வதன் மூலம் உனக்கிருக்கும் எந்தவொரு திறமையையும் விரிவுப்படுத்தி, விருத்தி செய்யலாம். உதாரணமாக, போதிக்கும் வரத்தை எவருமே முழுமையாக விருத்தி செய்துவிட முடியாது. ஆனால், படித்து, பிறர் கருத்தைக் கேட்டறிந்து, பயிற்சி செய்து, ஒரு "நல்ல" போதகர், ஒரு "சிறந்த" போதகர் என்ற நிலையை அடைந்து... பின்னர், காலம் செல்லச் செல்ல, *சிறந்த* போதகராகவும், *''முழுநிலைப்''* போதகராகவும் மாற முடியும். அரைகுறையாக விருத்தி செய்யப்பட்ட வரங்களில் திருப்தியடைந்து

விடாதீர்கள். உங்களால் கூடிய மட்டும் வளர்ந்து, முடிந்த எல்லாவற்றையும் கற்றுக் கொள்ளுங்கள். ***"தேவனுக்காக மிகச் சிறப்பானதைச் செய்வதில் சிந்தையை ஒருமுகப்படுத்து; வெட்கத்துக்குள்ளாக்காத பணியைச் செய்வாய்."***[22] ஒவ்வொரு பயிற்சி வாய்ப்பையும் அனுகூலமாக்கி, உங்கள் சேவைத் திறன்களைக் கூராக்கி, உங்கள் வடிவமைப்பை வளர்ச்சியடையச் செய்யுங்கள்.



பரலோகத்தில், தேவனை என்றென்றும் சேவிக்கப் போகின்றோம். இங்கு, இப்போது, இந்த பூமியில் பயிற்சி செய்வதன் மூலம், நாம் அந்த நித்திய சேவைக்கு ஆயத்தமாகக்கூடும். ஒலிம்பிக் பந்தயத்திற்குத் தயாராகும் வீரர்களைப்போல, அந்தப் பெரிய நாளுக்காக நாம் பயிற்சி எடுத்துக் கொண்டேயிருக்கின்றோம். ***''அவர்கள் அழிந்துபோகும் பொன்னினாலான வெற்றிச் சின்னத்திற்காக அதைச் செய்கின்றார்கள்; நாமோ, என்றும் பொன்னாக இருக்கும் ஒன்றை நாடிச் செல்லுகின்றோம்."***[23]

நாம் நித்தியமான பொறுப்புகளுக்காகவும் பலனுக்காகவும் ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றோம்.

நாள் முப்பத்திரண்டு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நமக்கான சிறந்ததை பெற்றுக்கொள்ள தேவன் பாத்திரர்.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு"* 2 தீமோத்தேயு 2:15.

ஆய்வுக்கான ஒரு கேள்வி: தேவன் எனக்கு அருளியவற்றை எப்படி நான் மிகச் சிறந்த அளவு பயன்படுத்தக்கூடும்?

33

உண்மையான சேவகர்கள் எப்படிச் செயல்படுகின்றனர்?

…உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.
மாற்கு 10:43

அவர்கள் யாரென்பதை அவர்கள் கிரியைகளினால் கூறமுடியும்.
மத்தேயு 7:16 (புதிய மொழியாக்கம்)

பிறருக்கு சேவை செய்வதன் மூலம் நாம் தேவனுக்கு ஊழியம் செய்கின்றோம்.

அதிகாரம், அந்தஸ்து, கௌரவம், உடைமைகள் – ஆகிய இவற்றைக் கொண்டுதான், உலகம், யார் பெரியவன் என்று தீர்மானிக்கின்றது. பிறரிடமிருந்து நீங்கள் சேவையை உரிமையுடன் பெற்றுக் கொள்ளக்கூடுமானால், நீங்கள் சாதித்து விட்டீர்கள் அல்லது அடைந்துவிட்டீர்கள். ***நான் முதலில்*** என்ற நமது சுயசேவை கலாச்சாரத்தில் சேவை செய்தல் என்ற ஒரு கோட்பாடு விரும்பப்படுகின்ற ஒன்றல்ல.

ஆனாலும், இயேசுவோ சேவையின் அடிப்படையிலேயே… உயர்வை நிர்ணயித்தார் – அந்தஸ்தின் அடிப்படையில் அல்ல. உங்களுக்கு எத்தனை பேர் ஊழியஞ் செய்கிறார்களென்பதைக் கொண்டு அல்ல, நீங்கள் எத்தனை பேருக்கு ஊழியஞ் செய்கிறீர்களென்பதைக் கொண்டுதான் தேவன் உங்கள் உயர்வைத் தீர்மானிக்கின்றார்.

இத்தகைய காரியம் உலகக் கருத்திற்கு முரண்பாடாக இருக்கின்றபடியால், இதனைப் புரிந்துகொள்ளுவதற்கு மிகக் கடினமாக இருக்கின்றது – இதனை அப்பியாசிப்பது என்பது அதைவிட கடினமான ஒன்றாக காணப்படுகின்றது. சீஷர்கள், யாருக்கு பிரதான இடம் கிடைக்குமென்பதைக் குறித்துத் தர்க்கம் பண்ணினார்கள் – இன்று 2000 ஆண்டுகள் கடந்துவிட்டது. ஆனால், இன்னமும் கிறிஸ்தவ தலைவர்கள் திருச்சபையிலும், ஸ்தாபனங்களிலும், இயக்கங்களிலும் தலைவர் பதவிக்காக போட்டி போடுகின்றனர்.

தலைமைத்துவத்தைப் பற்றி ஆயிரக்கணக்கான புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஆனால், சேவை செய்வதைப் பற்றி குறைவான புத்தகங்களே எழுதப்பட்டுள்ளன. சேவிக்க ஒருவரும் விரும்புவதில்லை... வழி நடத்தவோ யாவரும் விரும்புகின்றனர். பட்டாளத்தில் ஒரு சேவகனாக இருக்க ஒருவரும் விரும்புவதில்லை... ஆனால், ஒரு படைத்தளபதியாக இருக்க யாவரும் விரும்புவர். இயேசு தம்மை ஒரு சேவகனாகத்தான் அறிமுகப்படுத்துகின்றார் – ஒரு தலைவனாக அல்ல.

தேவனை சேவிப்பதற்கு உங்களது வடிவமைப்பைப் புரிந்து கொள்ளுவது எவ்வளவு முக்கியமோ, சேவக உள்ளம் கொண்டிருத்தலும் அவ்வளவு முக்கியம். உங்களது சுயநல மனப்பான்மையைப் பூர்த்தி செய்வதற்கு அல்ல, ***சேவை செய்யவே*** தேவன் உங்களை வடிவமைத்தார். ஒரு சேவிக்கின்ற இருதயம் இல்லாவிட்டால், உங்கள் வடிவமைப்பை உங்கள் சொந்த இலாபத்திற்குத் தவறாக நீங்கள் பயன்படுத்துமாறு சோதிக்கப்படுவீர்கள். இந்நிலையில், மற்றவர்களின் தேவைகளைச் சந்திக்காமல், சாக்குபோக்கு சொல்லும் சோதனைக்குள்ளும் சிக்குவீர்கள்.

நம்முடைய இருதயத்தை சோதிக்கும் வகையில், நாம் ***வடிவமைக்கப்படாத*** சில காரியங்களில் சேவை செய்ய, தேவன் அவ்வப்பொழுது நம்மைக் கேட்டுக் கொள்ளுவார். ஒரு மனிதன் ஒரு குழிக்குள் விழுந்தால் அவன் வெளியே வர அவனுக்கு நீங்கள் உதவ வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். “எனக்கு இரக்கம், சேவை என்ற வரம் இல்லை” என்று கூறுவதை அவர்

விரும்புவதில்லை. ஒரு குறிப்பிட்ட வேலையைச் செய்யும் வரம் உங்களுக்கு இல்லாதிருந்தும் நீங்கள் அந்த வேலையைச் செய்ய மனம் உள்ளவராக இருக்க வேண்டும் – குறிப்பாக அந்த வரம் பெற்ற ஒருவரும் அருகில் இல்லாதிருந்தால்! உங்களது ***பிரத்தியேக ஊழியம்*** உங்கள் வடிவமைப்பின் பகுதியில் இருக்க வேண்டும்; உங்களது ***மற்ற ஊழியங்கள்*** எந்த நேரத்தில் உங்களது சேவை தேவைப்படுகின்றதோ அங்கு செய்யப்பட வேண்டும்.

உங்கள் வடிவமைப்பு உங்களது ஊழியத்தை வெளிப்படுத்தும்; ஆனால், உங்களின் சேவிக்கின்ற இருதயமோ உங்கள் முதிர்ச்சியைக் காட்டும்.

உங்கள் வடிவமைப்பு உங்களது ஊழியத்தை வெளிப்படுத்தும்; ஆனால், உங்களின் சேவிக்கின்ற இருதயமோ உங்கள் முதிர்ச்சியைக் காட்டும். ஒரு பொதுக்கூட்டம் நடந்து முடிந்தவுடன், சற்றுப் பின்தங்கி, குப்பைகளை அகற்றவும், நாற்காலிகளை ஒதுக்கவும், எந்தவிதமான சிறப்பான தாலந்தோ, வரமோ தேவையில்லை. யார் வேண்டுமானாலும் ஒரு சேவிக்கின்ற நிலைக்கு கடந்து வர முடியும். அதற்கு தேவையானதெல்லாம் குணம் மட்டுமே.

வாழ்நாள் முழுவதும் சபையின் ஊழியத்தில் ஈடுபட்டிருந்தும், ஒருவன் ஒரு சேவகனாக இல்லாமல் இருக்கக்கூடும். சேவகனாக இருப்பதற்கு ஒரு சேவகனின் உள்ளம் வேண்டும். உங்களுக்கு சேவகனின் உள்ளம் இருக்கின்றதா என்று எப்படி கண்டுபிடிக்க முடியும்? ***"அவர்களின் கிரியையிலிருந்து அவர்கள் யார் என்று நீங்கள் அறிந்து கொள்ளுவீர்கள்"***[1] என்று இயேசு சொன்னார்.

உண்மையான சேவகர்கள் சேவை செய்ய எப்போதும் தயார் நிலையில் இருப்பார்கள். உண்மையான சேவகர்கள் தங்கள் சேவையை மட்டுப்படுத்தும் எந்த அலுவல்களிலும் தங்களை சிக்க வைத்துக் கொள்ள மாட்டார்கள். அழைப்பு வந்தவுடன் செயலில் இறங்க அவர்கள் தயார் நிலையிலிருப்பார்கள். ஒரு போர்ச் சேவகனைப்போல, ஒரு பணியாளனும் எப்போதும் கடமைக்குத் தயாராக நிற்கவேண்டும்: ***"சுறுசுறுப்பான சேவையில் ஈடுபட்டுள்ள***

எந்தப் போர் வீரனும் தன்னைச் சேவகமெழுதிக் கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக் கொள்ள மாட்டான்."[2] உங்களுக்கு வசதி இருக்கும்போது மட்டும் நீங்கள் சேவை செய்தால், நீங்கள் உண்மையான சேவகனல்ல. உண்மையான சேவகர்கள், தங்களுக்கு சௌகரியப்படாவிட்டாலும் கூட தேவையான வேலையை எப்படியும் செய்து முடிப்பார்கள்.

நீங்கள் எல்லா நேரத்திலும் தேவனுக்காக தயார் நிலையில் இருக்கின்றீர்களா? உங்கள் தனிப்பட்ட திட்டங்களுக்கு இடையே தேவனின் சித்தமும் சேவையும் வெளிப்படும்போது எரிச்சலும் கோபமும் இல்லாமல் இணக்கம் காட்ட முடியுமா? ஒரு சேவகனுக்கு எங்கே, எப்போது சேவை செய்ய வேண்டும் என்ற தெரிந்தெடுக்கும் உரிமை இல்லை. உங்கள் வேலைத்திட்டத்தின் மீது உங்களுக்கிருக்கும் கட்டுப்பாட்டுரிமையை, உண்மை சேவகனாக, நீங்கள் விட்டுக் கொடுக்கத் தயாராக இருக்க வேண்டும். விரும்பிய போதெல்லாம் அதில் குறுக்கிட தேவனுக்கு இடங்கொடுக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும், நீங்கள் தேவனுடைய வேலைக்காரன் அல்லது சேவகன் என்பதனை நினைவுபடுத்திக் கொண்டால், குறுக்கீடுகள் உங்களை அதிகமாகச் சோர்வடையச் செய்யாது. ஏனெனில், தேவன் உங்கள் வாழ்க்கைக்குள் கொண்டுவர விரும்பும் காரியங்கள் மட்டுமே உங்கள் நிகழ்ச்சி நிரலாகும். உண்மையான சேவகர்கள் குறுக்கீடுகளை ஊழியத்திற்கான தெய்வீக நியமனங்களாகவே காண்கிறார்கள். அப்படிப்பட்ட சேவை வாய்ப்பு கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகின்றார்கள்.

உண்மையான சேவகர்கள் தேவைகளுக்கு கவனம் செலுத்துவார்கள். சேவகர்கள் எப்பொழுதுமே பிறருக்கு உதவக்கூடிய வழிகளை கவனித்துக்கொண்டே இருப்பார்கள். ஒரு தேவையெழும்போது, உடனே அத்தருணத்தை அவர்கள் பற்றிப் பிடித்துக் கொள்ளுகின்றனர். அப்படித்தான் வேதமும் நமக்கு கட்டளையிடுகிறது: *''சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், எல்லாருக்கும்... விசேஷமாக, விசுவாசக் குடும்பத்தாருக்கும் நன்மை*

செய்யக்கடவோம்."[3] தேவையோடு இருக்கின்ற ஒருவரை, தேவன் உங்கள் முன் கொண்டு வந்தால், நீங்கள் வளர்ச்சியடையும் ஒரு வாய்ப்பை அவர் உங்களுக்குத் தருகிறாரென்றுதான் அர்த்தம். உங்கள் சபைக் குடும்பத்தின் தேவைகளுக்கு நீங்கள் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்றும், அவற்றை "செய்யப்படவேண்டிய காரியங்களின் பட்டியலில்" கடைசி இடத்தில் வைக்கக் கூடாதென்றும் தேவன் விரும்புகின்றார்.

சேவை செய்யும் பல சந்தர்ப்பங்களை நாம் இழக்கின்றோம். ஏனெனில், நமக்கு உள்ளேயிருந்து பொங்கியெழும் உணர்வு ஏற்படவில்லை. சேவை செய்யக்கூடிய பெரிய வாய்ப்புகள் நீடித்து நிற்பதில்லை. அவை விரைவாகக் கடந்து சென்றுவிடும். சில சமயங்களில் அவை மீண்டும் கிடைப்பதே இல்லை. அந்த நபருக்கு நீங்கள் சேவை செய்யும் வாய்ப்பு ஒரேயொரு முறை மட்டுமே உங்களுக்குக் கொடுக்கப்படலாம். ஆகவே, கிடைத்த சந்தர்ப்பத்தை உடனே பயன்படுத்துங்கள். ***"இன்றைக்கு உதவி செய்யத் திராணியிருக்கும்போது, நீ போய் நாளைக்கு வா என்று உங்கள் அயலானிடம் ஒருபோதும் சொல்லாதிருங்கள்."***[4] ஜான் வெஸ்லி ஒரு விசேஷமான தேவனுடைய மனிதர். அவரது சட்ட வாக்கியம் அல்லது இலட்சியம் என்னவெனில்: "எவ்வளவு காலம் முடியுமோ அவ்வளவு காலம், யாருக்கெல்லாம் கூடுமோ அவர்களுக்கெல்லாம், எந்த நேரமெல்லாம் கூடுமோ அந்த நேரமெல்லாம், எங்கெல்லாம் செய்யக்கூடுமோ அங்கெல்லாம், என்னென்ன வழிகளில் கூடுமோ அந்தந்த வழிகளிலெல்லாம், என்னென்ன முறைகளில் செய்யக்கூடுமோ அந்த முறைகளிலெல்லாம், நீ செய்யக்கூடிய எல்லா நன்மைகளையும் செய்." ***அதுதான்*** ஒரு உயர்வான நிலை. வேறு ஒருவரும் செய்ய விரும்பாத சிறிய வேலைகளைச் செய்யும் சந்தர்ப்பங்களைக் கொண்டு நீங்கள் ஆரம்பிக்கலாம். இந்தச் சிறிய காரியங்களைப் பெரிய காரியங்களாகப் பாவித்துச் செய்யுங்கள். ஏனெனில், தேவன் கவனித்துக் கொண்டிருக்கின்றார்.



உண்மையான சேவகர்கள் தங்களுக்கு இருப்பதைக் கொண்டு சிறப்பாகச் செயல்படுவார்கள். சாக்குபோக்கு சொல்லுவது, ஒத்தி வைப்பது, இதைவிட நல்ல சூழ்நிலைக்காகக் காத்திருப்பது போன்றவற்றை உண்மை ஊழியர் செய்யவே மாட்டார்கள். ஒரு நாளும் அவர்கள், "ஏதாவது ஒரு நாள்", "சரியான நேரம் வரும்போது" என்ற பதங்களைப் பயன்படுத்த மாட்டார்கள். எது தேவைப்படுகிறதோ அதை அப்படியே செய்து விடுவார்கள். ***"எல்லாம் சரியாக வேண்டுமென்று காத்திருந்தால், ஒரு நாளும் ஒன்றையும் நீ செய்து முடிக்க முடியாது"***[5] என்று வேதம் கூறுகின்றது. நீ செய்யக்கூடியதை, உனக்கு இருப்பதைக் கொண்டு, நீ எங்கிருந்தாலும் செய்து முடிக்க வேண்டுமென்று தேவன் உன்னிடம் எதிர்பார்க்கிறார். பரிபூரணத்திற்குக் குறைவான சேவை என்பது, செயலற்ற மிகச்சிறந்த நோக்கத்தைவிட மேலானது.

அநேக மக்கள் சேவை செய்ய முன் வராததற்கு காரணம் ***போதிய அளவு தகுதி தங்களுக்கில்லை*** என்ற பயம். தேவனைச் சேவிப்பது அதிக திறமை வாய்ந்தவர்களுக்கு மாத்திரமே உரியது என்ற பொய்யை அவர்கள் நம்பி விட்டார்கள். சில சபைகளில் இந்தக் கட்டுக்கதை கையாளப்படுகிறது. "மிகச் சிறப்பானது" என்பதனை ஒரு விக்கிரகமாக்கி, சராசரி தாலந்து உள்ளவர்களை சேவையில் ஈடுபடத் தயக்கம் கொள்ளச் செய்கின்றார்கள்.

"மிகச் சிறப்பாகச் செய்யத் தெரியாவிட்டால், அதைச் செய்யவே வேண்டாம்" என்று கூறப்படுவதைக் கேட்டிருப்பீர்கள். இயேசு அப்படி ஒருபோதும் சொல்லவில்லை! உண்மையென்னவெனில், நாம் எதையாவது முதலில் செய்யும்போது, அதை அவ்வளவு திறமையாகச் செய்ய மாட்டோம் – அப்படித்தான் நாம் கற்றுக் கொள்ளுகின்றோம். சேடில்பேக் சபையில் நாங்கள் ***"ஓரளவுக்கு நல்லது"*** என்ற கொள்கையைக் கடைப்பிடிக்கின்றோம். தேவன் அதைப் பயன்படுத்தி ஆசீர்வதிப்பதற்கு அது குறையற்றதாக இருக்க வேண்டிய அவசியமில்லை. ஒரு சில தெரிந்தெடுக்கப்பட்டவர்களைக் கொண்டு, குறையே இல்லாத சபையை நடத்துவதைவிட, ஆயிரக்கணக்கான, ஒழுங்கான சாதாரண மக்களை ஈடுபடுத்துவதையே நாங்கள் தெரிந்துகொள்ளுகின்றோம்.

உண்மையான சேவகர்கள் எல்லா வேலையையும் ஒரே விதமான அர்ப்பணிப்போடு செய்கின்றார்கள். உண்மையான சேவகர்கள், எதைச் செய்தாலும், ***"தங்கள் முழு இருதயத்தோடும்"***[6] செய்கின்றனர். எவ்வளவு பெரிய வேலை என்பது முக்கியமே அல்ல. முக்கியமானது எது என்றால் – "வேலை செய்யப்பட வேண்டுமா?" அவ்வளவுதான்!

"இது தாழ்ந்த வேலை", "இதை நான் செய்ய முடியாது" என்ற ஓர் நிலை அல்லது அந்தஸ்து ஒருக்காலும் கிடையாது. இப்படிப்பட்ட வேலையிலிருந்து தேவன் ஒருவருக்கும் விடுப்பு கொடுப்பதில்லை. உங்கள் குணத்துக்கான பாடத்தில் இது ஒரு முக்கியமான பகுதி. ***"தேவையிலிருக்கும் ஒருவருக்கு உதவக்கூடாத அளவு நீ உன்னை முக்கியமானவனென்று கருதிக் கொண்டால், நீ உன்னை முட்டாளாக்கிக் கொண்டிருக்கிறாய்; உண்மையில் நீ ஒன்றுமில்லை"***[7] என்று வேதம் கூறுகின்றது. இப்படிப்பட்ட சிறிய சேவைகளில்தான் நாம் கிறிஸ்துவைப்போல் வளர்ச்சி அடைகின்றோம்.

மற்ற மக்கள் செய்யாமல் ஒதுங்கிவிடப் பார்க்கும் தாழ்ந்த வேலைகளில் இயேசு சிறப்பாகச் செயல்பட்டார். கால்களைக் கழுவுதல், குழந்தைகளுக்கு உதவுதல், காலையுணவு தயாரித்தல், குஷ்டரோகிகளுக்கு சேவை செய்தல் போன்றவை. இப்படிப்பட்ட வேலைகள் ***எதுவும் அவருக்கு இழிவானதல்ல***; தகுதிக்குக் கீழானதல்ல – ஏனெனில், அவர் சேவை செய்ய வந்தார். "அவ்வளவு பெரியவராயிருந்தும்" என்ற நிலையிலிருந்து இவைகளைச் செய்யாமல், தனது பெரிய தன்மையினால் அதை இயற்கையாக செய்து, நாமும் அவருடைய மாதிரியைப் பின்பற்றும்படி எதிர்பார்க்கிறார்.[8]

சிறிய பணிகள் எப்போதுமே பெரிய உள்ளத்தைக் காண்பிக்கின்றன. மற்றவர்கள் செய்ய வேண்டுமென்று நினைக்காத பெரிய காரியங்களைச் செய்வதில்தான் உங்களுக்கு இருக்கும் சேவகனின் இருதயம் வெளிப்படுகின்றது. கப்பற்சேதத்திற்கு பின் தீவில் குளிர் காய்கின்ற வேளையில் யாவருக்காகவும் விறகுகளை எடுத்து பவுல் போட்டதுபோல.[9] பவுலும் மற்றெல்லாரையும்போல் களைப்படைந்து தானிருந்தார். ஆனால், எல்லாருக்கும் தேவையானதை அவர்

செய்தார். சேவிக்கும் இருதயம் உடையவர்களுக்கு எந்த வேலையும் தங்கள் தகுதிக்கு கீழ்ப்பட்டதல்ல.

பெரிய வாய்ப்புகள் பொதுவாகத் தங்களைச் சிறிய வேலைகளில் மறைத்துக் கொள்ளுகின்றன. வாழ்க்கையிலுள்ள சிறிய காரியங்கள் பெரிய காரியங்களைத் தீர்மானிக்கின்றன. தேவனுக்காகப் பெரிய காரியங்கள்தான் செய்ய வேண்டுமென்று தேடிக்கொண்டிருக்க வேண்டாம். வருகின்ற சேவை வாய்ப்புகளை தெரிந்துகொண்டு முழு மனதுடன் சேவியுங்கள். அப்பொழுது நீங்கள் செய்யவேண்டிய காரியங்களை தேவன் தந்தருளுவார். அசாதாரண வேலைகளைச் செய்ய முயற்சிக்கும் முன் சாதாரண வேலைகளைச் செய்ய முயற்சியுங்கள்.[10] எப்பொழுதுமே, சிறிய காரியங்களை செய்ய காத்திருப்பவர்களைவிட கர்த்தருக்காக "பெரிய" காரியங்களைச் செய்ய காத்திருப்போர் அதிகம். தலைவனாக வேண்டுமென்பதற்கான ஓட்டம் அநேகர் நெருக்கமாக ஓடும் ஓட்டம்; ஆனால், சேவகர்களாக இருக்க விரும்புகிறவர்களுக்குரிய தளம், பரந்து திறந்திருக்கின்றது. சில வேளைகளில், ***"மேல்நோக்கி"***, அதிகாரத்தில் உள்ள மக்களுக்கு சேவை செய்கின்றோம்; இன்னும் சில வேளைகளில், ***"கீழ்நோக்கி"***, தேவைகளோடு உள்ள மக்களுக்கு சேவை செய்கின்றோம். எப்படியானாலும், தேவை உள்ள சூழ்நிலையில் சேவை செய்யும்போது சேவிக்கும் இருதயம் வளர்க்கப்படுகின்றது.

பெரிய வாய்ப்புகள் அடிக்கடி சிறிய வேலைகள் என்ற மாறுவேடத்தில் மறைந்து வருகின்றன.

உண்மையான சேவகர்கள் தங்கள் <u>ஊழியத்தில்</u> உண்மையுள்ளவர்களாக இருப்பார்கள். உண்மையான சேவகர்கள் தங்கள் வேலைகளைச் செய்து முடிக்கின்றார்கள். பொறுப்புகளை நிறைவேற்றுகின்றார்கள், தங்கள் வாக்குறுதிகளைக் காத்துக் கொள்ளுகின்றார்கள், தங்கள் அர்ப்பணிப்பை செய்து முடிக்கிறார்கள். எந்தவொரு வேலையையும் அரைகுறையாக அவர்கள் விடுவதில்லை. அதைரியமடைந்து பாதியில் விட்டுவிடுவதுமில்லை. அவர்கள் நம்பத்தகுந்தவர்கள்.

உண்மை என்ற குணாதிசயம் எப்பொழுதும் எளிதில் கண்டுபிடிக்க முடியாத ஒரு தன்மை.[11] அநேகருக்கு அர்ப்பணிப்பு என்றால் அதற்கு என்ன அர்த்தம் என்று தெரியாது. அவர்கள் ஒன்றைச் செய்வதாக அர்ப்பணித்து, எந்தவித தயக்கமோ, மன வருத்தமோ, சஞ்சலமோ இன்றி, மிகச்சிறிய காரணத்திற்காகக் கூடத் தங்கள் அர்ப்பணிப்பை முறித்துக் கொள்ளுவார்கள். ஒவ்வொரு வாரமும், திருச்சபைகளும் மற்ற ஸ்தாபனங்களும் – தொண்டர்கள் ஆயத்தஞ் செய்யாததால், வராததால், வரமுடியவில்லை என்று சொல்லக்கூடத் தவறியதால் அவதிப்படுகின்றன!

உங்களை மற்றவர்கள் நம்பமுடியுமா? நீங்கள் காத்துக் கொள்ள வேண்டிய வாக்குறுதிகள், நிறைவேற்ற வேண்டிய பொருத்தனைகள், நீங்கள் கனப்படுத்த வேண்டிய அர்ப்பணிப்புகள் இருக்கின்றனவா? இது ஒரு பரீட்சை. தேவன் உங்கள் உண்மையைப் பரிசோதிக்கின்றார். அந்தத் தேர்வில் நீங்கள் ஜெயித்துவிட்டால், நீங்கள் நல்ல கூட்டத்தில் இருக்கின்றீர்கள். ஆபிரகாம், மோசே, சாமுவேல், தாவீது, தானியேல், தீமோத்தேயு மற்றும் பவுல் ஆகிய அனைவரும் தேவனுடைய உண்மை ஊழியர்கள். தேவன் உங்கள் உண்மையை நித்தியத்தில் பாராட்டிப் பலனளிப்பாரென்பது அதைவிடச் சிறப்பானது. தேவன் உங்களிடம் ஒருநாள் "***நல்லது, உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய்; அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக்குவேன். நாம் ஒன்று சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடுவோம்***"[12] என்று தேவன் உங்களிடம் கூறும்போது எப்படியிருக்குமென்று எண்ணிப் பாருங்கள். உண்மை ஊழியர்கள், ஒருபோதும் ஓய்வு பெறுவதே இல்லை. அவர்கள் உயிருடனிருக்கும்வரை, உண்மையுடன் உழைக்கிறார்கள். உங்கள் வாழ்க்கைக்குரிய வேலையிலிருந்து நீங்கள் ஓய்வு பெறலாம்; ஆனால், தேவனைச் சேவிப்பதிலிருந்து உங்களுக்கு ஓய்வே கிடையாது.



உண்மையான சேவகர்கள் தங்கள் முகரூபத்தைப் பெரிதுபடுத்திக் காட்ட மாட்டார்கள். உண்மையான சேவகர்கள் தங்களையே பார்க்குமாறு பிறருடைய கவனத்தைக் கவர முயற்சிக்க மாட்டார்கள். மற்றவர்கள் கவனத்தைக் கவர நடித்து, வெற்றி

பெற்றதான சுபாவத்தை அணிந்து கொள்ளுவதைவிட ***"ஒருவருக்கொருவர் ஊழியம் செய்வதற்கு ஏதுவாக அவர்கள் மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுகின்றார்கள்."***[13] அவர்களின் சேவையை பாராட்டினால், அதைத் தாழ்மையோடு ஏற்றுக் கொள்ளுவார்கள். ஆயினும், அந்த நற்கீர்த்தி தங்கள் வேலையிலிருந்து தங்கள் கவனத்தைத் திருப்பிவிட இடமளிக்கமாட்டார்கள்.

ஆவிக்குரிய, சேவையைப்போன்று தோற்றமளித்து, மற்றவர்களின் கவனத்தைக் கவர செய்யும் ஒருவித சேவையை பவுல் வெளிப்படுத்தினார். இதை பவுல், ***"பார்வைக்கு ஊழியம் செய்தல்"***[14] என்று கூறினார். இது, தாங்கள் எவ்வளவு ஆவிக்குரியவர்கள் என்பதை மற்றவர்கள் பார்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சி. இதுதான் பரிசேயரின் பாவம். பிறருக்கு உதவி செய்தல், மற்றும் கொடுத்தல் மட்டுமல்ல... ஜெபிப்பதைக்கூட பிறரை கவரும் நிகழ்ச்சியாக மாற்றினார்கள். இயேசு இந்த மனப்பான்மையை வெறுத்து எச்சரித்தார். ***"நீங்கள் நன்மை செய்யும்போது, பிறர் காணும்படி எதையும் செய்ய வேண்டாம். அப்படி செய்தால் பரலோகத்தில் உள்ள உங்கள் பிதாவிடமிருந்து உங்களுக்கு எந்தப் பலனும் கிட்டாது"***[15] என்றார்.

சுய பிரகடனமும், சேவிக்கும் தன்மையும் ஒன்றோடொன்று கலப்பதில்லை. உண்மையான சேவகர்கள் பிறருடைய பாராட்டு அல்லது ஒப்புதலுக்காக எதையும் செய்ய மாட்டார்கள். அவர்கள் ஒரேயொருவருக்காக வாழ்கிறார்கள். பவுல் கூறியது போல், ***"நான் இன்னும் மனிதரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் சேவகனாக இருக்க மாட்டேன்."***[16]

அநேக உண்மையான ஊழியர்கள், பிரசித்தி பெற்ற இடத்தை நாடுவதில்லை. கூடுமானால், அப்படிப்பட்ட வாய்ப்புகள் வரும்போது அதனை தவிர்க்கவே முயற்சிக்கிறார்கள். மறைவான நிழற்பகுதிகளில் அமைதியாக ஊழியம் செய்வதில் அவர்கள் திருப்தி அடைந்துவிடுவார்கள். இதற்கு மாபெரும் உதாரணம், யோசேப்பு. அவன் பிறரது கவனத்தை கவர முயற்சிக்காமல், அமைதியாக முதலில் போத்திபாரையும், பின்னர் சிறை அதிகாரியையும், அதன்பின்னர் பார்வோனின் பான பாத்திரக்காரனையும்,

சுயம்பாகியையும் சேவித்தான். தேவன் அந்த மனநிலையை ஆசீர்வதித்தார். பார்வோன் அவனை பிரசித்திப்பெற்ற ஸ்தானத்திற்கு உயர்த்தியபோதும்கூட யோசேப்பு, சேவிக்கும் இருதயத்தையே கொண்டவனாக, தனக்கு துரோகம் செய்த தன் சகோதரருக்கும் சேவை செய்தான்.

துரதிர்ஷ்டவசமாக, இன்றைய தலைவர்களில் அநேகர் ஒரு சேவகராக ஆரம்பித்து, பெரிய நட்சத்திரங்களாக மாறிவிடுகிறார்கள். தங்களை நோக்கி மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும் காரியத்திற்கு அடிமையாகி விடுகின்றனர். எப்போதும் பிரகாசமான ஒளியில் இருப்பது கண்களை குருடாக்கும் என்பதை அவர்கள் உணருவதில்லை.

ஒருவேளை நீங்கள் ஒரு பிரஸ்தாபமில்லாத ஒரு சிறிய இடத்தில் நீங்கள் சேவை செய்து கொண்டிருக்கலாம். யாராலும் அறியப்படாதவர்களாகவும், யாரிடமும் பாராட்டுப் பெறாதவர்களாகவும் இருக்கலாம். கவனியுங்கள்: தேவன் ஒரு நோக்கத்தோடு நீங்கள் இருக்கிற இடத்தில் உங்களை வைத்திருக்கின்றார். உங்கள் தலையிலுள்ள மயிரின் எண்ணிக்கை அவருக்குத் தெரியும். அவராக உங்களை அவ்விடத்திலிருந்து அசைப்பதை தெரிந்துகொள்ளும் வரைக்கும் நீங்கள் அங்கேயே தங்கியிருப்பது நலம். நீங்கள் வேறு இடத்திற்கு போக வேண்டுமென்று அவர் விரும்பினால் உங்களுக்கு அதைத் தெரியப்படுத்துவார். உங்கள் ஊழியம் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கு ஏற்ற ஊழியம். “*நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே மகிமையிலே வெளிப்படுவீர்கள். அதுவரையும் இப்பொழுதுள்ள காலத்தில் மறைவான பிரபல்யமற்ற சேவையோடு திருப்தியாயிருங்கள்.*”[17]

அமெரிக்காவில், “புகழ் ஏணியில் ஏறியோர்” பட்டியல் 750க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் உண்டு. அதேபோல, “யார்? யார்?” என்ற வெளியீடுகள் 450க்கும் அதிகமாக உள்ளன. ஆனால், அந்த பட்டியலிலோ, பிரசுரங்களிலோ அநேக உண்மையான ஊழியர்களின் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு இருக்காது. ஏனெனில், இப்படிப்பட்டவர்கள் பிரபல்யத்திற்கும் முக்கியத்துவத்திற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை அறிந்திருக்கின்றார்கள். உங்கள்

சரீரத்திலுள்ள வெளிப்படையாகத் தெரியும் அநேக அவயவங்கள் இல்லாமலே சரீரம் செயல்படக்கூடும். ஆனால், சரீரத்திற்குள் மறைந்திருக்கும் உறுப்புகளோ உயிர் வாழ இன்றியமையாதவை. இதுவே, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையிலும் உண்மை. அநேக நேரங்களில், வெளிப்படையாக தெரியாத ஊழியமே முக்கியத்துவம் நிறைந்த ஊழியமாக உள்ளது.[18]

நாள் முப்பத்து மூன்று: **உண்மையான சேவகர்கள் எப்படிச் செயல் படுகின்றனர்?**

அதிக பிரபல்யமில்லாமலும், மற்றவர்களால் அதிகம் அறியப்படாமலும், மறைவான நிலையில் சேவை செய்யும் தம்முடைய அநேக ஊழியர்களுக்கு பரலோகத்தில் தேவன் பகிரங்கமாகப் பலனளிக்கப் போகிறார் – பூமியிலே நாம் ஒருபோதும் கேள்விப்பட்டிராத ஊழியர்கள், உணர்வுரீதியாக பாதிக்கப்பட்ட சிறு பிள்ளைகளுக்கு ஆசிரியர்களாக பணியாற்றியவர்கள், முதியோருக்கு உதவி செய்தவர்கள், AIDS நோயாளிகளை பராமரித்தவர்கள், இன்னும் இதுபோன்ற அறியப்படாத ஆயிரக்கணக்கானவருக்கு சேவை செய்தவர்களாகிய இப்படிப்பட்டவர்களுக்கு தேவன் வெளியரங்கமாக பலனளிப்பார்.

இதை அறிந்திருக்கின்றபடியால் உங்கள் ஊழியம் கவனிக்கப்படாமலோ, லேசானதாகவோ எடுத்துக் கொள்ளப்படாமல் தைரியத்தை இழக்காதீர்கள். தொடர்ந்து தேவனுக்கு ஊழியம் செய்யுங்கள். *“எஜமானுடைய வேலைக்கு உங்களை முற்றிலும் கொடுத்து விடுங்கள். அவருக்காக நீங்கள் எடுக்கும் எந்த முயற்சியோ செலவழிக்கும் நேரமோ வீணாகப் போகாது என்ற நம்பிக்கையோடு ஊழியம் செய்யுங்கள்.’’*[19] மிகச் சிறிய சேவையும்கூட தேவனால் கவனிக்கப்பட்டு, பலனளிக்கப்படும். *“என்னுடைய பிரதிநிதிகளாகிய இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுப்பீர்களாகில், நிச்சயமாக நீங்கள் அதற்கான பலனையடைவீர்கள்”*[20] என்று கூறிய இயேசுவின் வார்த்தைகளை நினைவில் நிறுத்துங்கள்.

நாள் முப்பத்து மூன்று
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கு ஒரு கருத்து: பிறருக்கு சேவை செய்வதன் மூலம் நான் தேவனுக்கு ஊழியம் செய்கின்றேன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"என்னுடைய பிரதிநிதிகளாகிய இந்தச் சிறியரில் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் மாத்திரம் குடிக்கக் கொடுப்பீர்களாகில், நிச்சயமாக நீங்கள் அதற்கான பலனையடைவீர்கள்."*** மத்தேயு 10:42

ஆய்வுக்கான ஒரு கேள்வி: உண்மை சேவகர்களுக்குரிய ஆறு குண நலன்களில் எது எனக்கு மிகப் பெரிய சவாலாக இருக்கின்றது?

34

சேவகர்களைப்போலச் சிந்தித்தல்

என் ஊழியக்காரனாகிய காலேப் வித்தியாசமாக சிந்தித்து, என்னை முழுமையாகப் பின்பற்றுகின்றான்.
எண்ணாகமம் 14:24 (புதிய மொழியாக்கம்)

கிறிஸ்து இயேசு தம்மைக்குறித்து எண்ணிய விதத்திலேயே நீங்களும் உங்களைக் குறித்து சிந்தியுங்கள்.
பிலிப்பியர் 2:5 (புதிய மொழியாக்கம்)

உங்கள் மனதில்தானே சேவை ஆரம்பிக்கின்றது. ஒரு சேவகனாக இருப்பதற்கு சிந்தையில் ஒரு மாற்றமும் மனப்பான்மையில் ஒரு மறுரூபமும் அவசியமாயிருக்கின்றது. நாம் என்ன செய்கின்றோம் என்பதைவிட ஏன் செய்கின்றோம் என்பதில் தேவன் அதிக ஆர்வம் கொள்ளுகின்றார். சாதனைகளைவிட மனப்பான்மைகள் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை. அமத்சியா ராஜா, தேவ தயவை இழந்தான்; ஏனெனில், ***''அவன் கர்த்தரின் பார்வைக்குச் செம்மையானதைச் செய்தான். ஆனாலும், மெய்யான உள்ளத்தோடு அப்படிச் செய்யவில்லை.''***[1] உண்மையான சேவகர்கள் தேவனை ஐந்து மனப்பான்மை கொண்ட மனபக்குவத்துடன் சேவிப்பார்கள்.

சேவகர்கள் தங்களைப் பற்றி நினைப்பதைவிட, பிறரைக்குறித்து அதிகமாக நினைப்பார்கள். சேவகர்கள் தங்களைக் குறித்தல்ல, மற்றவர்களைக் குறித்தே சிந்திக்கின்றார்கள். இதுதான் உண்மையான தாழ்மை: நம்மைப் பற்றி குறைவாக நினைப்பதல்ல, நம்மைக் குறைவான நேரங்களில்

நினைப்பது. அவர்கள் தங்களையே மறந்துவிடுகின்றார்கள். *''உதவிக்கரம் நீட்டுமளவிற்கு உங்களையே நீண்ட நேரம் மறந்துவிடுங்கள்''*[2] என்று பவுல் கூறினார். பிறருக்கு சேவை செய்வதில் உங்களையே மறந்து விடுவதுதான் "உங்கள் ஜீவனை இழப்பது" என்பதின் பொருளாகும். நமது தேவைகள் மீதே கருத்தூன்றுவதை நாம் நிறுத்தும்போது, நம்மைச் சுற்றியுள்ளோரின் தேவையை குறித்த விழிப்புணர்வு நமக்கு கிடைக்கும்.

இயேசு, *''அடிமையின் ரூபமெடுத்துத் தம்மைத் தாமே வெறுமையாக்கினார்.''*[3] இன்னொருவர் நன்மைக்காகக் கடைசியாக நீங்கள் எப்போது உங்களை வெறுமையாக்கினீர்கள்? உங்களைக் குறித்த சிந்தனையாலேயே நீங்கள் நிரம்பியிருந்தால், நீங்கள் ஒரு சேவகனாக இருக்க முடியாது. நாம் நம்மை மறக்கும்போதுதான், ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டிய காரியங்களை நினைத்து செயல்படுகின்றோம்.

துரதிர்ஷ்டவசமாக, நமது சேவையில் பெரும் பகுதி சுயநல சேவைகளாகவே இருக்கின்றன. பிறர் நம்மை விரும்ப வேண்டுமென்றும், பாராட்ட வேண்டுமென்றும், நமது சொந்த இலக்குகளை அடைய வேண்டுமென்றும் நாம் சேவை செய்கின்றோம். இது நம்முடைய கையாளுதலேயல்லாமல் ஒரு ஊழியமல்ல. முழுநேரமும் நாம் நம்மையே நினைத்துக் கொண்டிருக்கின்றோம். நாம் எவ்வளவு கண்ணியமாக, அற்புதமாக நடந்து கொள்ளுகின்றோமென்று நினைத்துக் கொண்டேயிருக்கின்றோம். சில மக்கள் ஊழியத்தை தேவனுடன் பேரம் பேசும் கருவியாகப் பயன்படுத்த முயலுகின்றனர்: "நீர் எனக்கு இதைச் செய்தால், ஆண்டவரே நான் உமக்காக எதையாவது செய்வேன்" என்று கூறுகின்றனர். உண்மையான சேவகர்கள் தங்கள் நோக்கங்களுக்காக தேவனைப் பயன்படுத்த முயற்சி செய்ய மாட்டார்கள். தேவன் தமது சித்தத்தின்படி தங்களைப் பயன்படுத்த அவருக்கு விட்டுக்கொடுப்பார்கள்.

உண்மைத் தத்துவத்தைப்போலவே, சுயத்தை மறுக்கும் தன்மையும் எளிதாக கிடைக்கும் பண்புகள் அல்ல. தான் அறிந்திருந்த எத்தனையோ பேர்களில், தீமோத்தேயுவை மாத்திரமே பவுலால் உதாரணமாகக் காட்ட முடிந்தது.[4] ஒரு சேவகனைப்போலச்

சிந்திப்பது கடினமாக உள்ளது... ஏனெனில், எனது அடிப்படை பிரச்சனைக்கு அது சவாலாக இருப்பதால்! நான் என் இயற்கை சுபாவத்தின்படி தன்னலம் கொண்டவன். நான் அதிகமாக நினைப்பது என்னையே. எனது நலனைக் குறித்தே அதிகமாக எண்ணிக் கொண்டிருப்பதே. அன்றாட போராட்டமாக இருக்கின்றது. அந்த பாடத்தை நான் மீண்டும் மீண்டும் கற்க வேண்டியதாயிருக்கின்றது. ஒரு சேவகனாக இருப்பதற்கான சந்தர்ப்பம்/வாய்ப்புகள் ஒரு நாளில் டஜன் கணக்கான நேரங்களில் என்னை சந்திக்கின்றது – அப்படிப்பட்ட நேரங்களில், என் தேவைகளைச் சந்திப்பதா அல்லது பிறர் தேவைகளைச் சந்திப்பதா என்று தீர்மானிக்க வேண்டியவன் நானே. சேவகத்திற்கு மையமே சுயத்தை வெறுப்பதுதான்.

> ***தேவனைத் தங்கள் நோக்கத்திற்காக பயன் படுத்தாமல், தேவன் தமது சித்தத்தின்படி தங்களைப் பயன்படுத்த***

மற்றவர்கள் நம்மை வேலைக்காரரைப்போல நடத்த முற்படும்போது, நாம் எப்படிப்பட்ட மாறுத்தரம் கொடுக்கின்றோம் என்பதை கொண்டு, நமது சேவக இருதயத்தை அளவிட முடியும். உங்களை இழிவாக, குறைவாக, ஏனோதானோ என்று எண்ணி, உங்கள் மேல் எஜமானத்துவத்தை காட்டும்போது நீங்கள் கொடுக்கும் மாறுத்தரம் என்ன? *"யாதொருவர் உங்களை தங்களுக்கு லாபமுண்டாக அநியாயமாய் பயன்படுத்தினால் உங்கள் சேவக வாழ்க்கையை பயிற்சி செய்வதற்குரிய சந்தர்ப்பமாக அதை எடுத்துக் கொள்ளுங்கள், பயன்படுத்துங்கள்"*[5] என்று வேதம் சொல்லுகின்றது.

சேவகர்கள், தங்களை எஜமான்கள் போலல்ல, உக்கிராணக் காரர் என்ற சிந்தையோடு செயல்படுவார்கள். சேவகர்கள், தேவனே சகலத்திற்கும் சொந்தக்காரர் என்பதை தங்களுக்குத் தாங்களே நினைவுபடுத்திக் கொள்ளுகின்றனர். வேதாகமத்தில், உக்கிராணக்காரன் என்பவன், ஒரு ஆஸ்தியை நிர்வகிக்க நம்பிக்கைக்குரியவனாக நியமிக்கப்படும் வேலைக்காரன். எகிப்தில் சிறைப்பட்ட யோசேப்பு, இந்த வகையான வேலைக்காரனாக இருந்தான். போத்திபார் அவனைத் தன் வீட்டு

விசாரணைக்காரனாக வைத்திருந்தான். அதன் பின்னர், சிறைச்சாலைத் தலைவன், தன் சிறையை யோசேப்பின் வசம் ஒப்புவித்தான். நாளடைவில், பார்வோன் முழு தேசத்தையே அவன் கையில் ஒப்புக்கொடுத்தான். சேவிக்கிற இதயமும், உக்கிராணத்துவமும் இணைந்து செல்லுகின்றன.[6] இரண்டிலும் நாம் நம்பிக்கைக்குரியவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கின்றார். *"இப்படிப்பட்ட வேலைக்காரரிடமிருந்து எதிர்பார்க்கப்படும் ஒரே ஒரு காரியம், அவர்கள் தங்கள் எஜமானுக்கு உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும்"*[7] என்று வேதம் கூறுகின்றது. தேவன் உங்களை நம்பிக் கொடுத்த மூலதனங்களை நீங்கள் எவ்வாறு கையாண்டு கொண்டிருக்கின்றீர்கள்?

உண்மையான சேவகனாயிருப்பதற்கு உங்கள் வாழ்க்கையிலிருக்கும் பணம் சம்பந்தப்பட்ட பிரச்சனைகளை நீங்கள் ஒழுங்குப்படுத்த வேண்டும். *"இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்ய ஒருவனாலும் கூடாது,... நீங்கள் தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் (பணம்) ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது"*[8] என்று இயேசு சொன்னார். நீங்கள் கட்டாயம் *செய்யக்கூடாது* என்று அவர் சொல்லவில்லை... மாறாக, "உங்களால் இதைச் *செய்ய முடியாது*" என்றே அவர் கூறினார். அது ஒருபோதும் செய்ய முடியாதது. பணத்திற்காக வாழ்வதும், ஊழியத்திற்காக வாழ்வதும் ஒன்றுக்கொன்று வேறுப்பட்ட இலக்குகள். இதில் எதை நீங்கள் தெரிந்து கொள்ளுவீர்கள்? நீங்கள் தேவனுடைய ஊழியக்காரரானால், நீங்கள் உங்கள் இஷ்டம் போல் திரிய முடியாது. உங்கள் *நேரமெல்லாம்* தேவனுக்குரியது. அவர் அரைகுறையான உண்மைத்துவத்தையல்ல, தனித்துவமான பற்றுறுதியை வலியுறுத்துகின்றார்.

தேவனை உங்கள் வாழ்க்கையிலிருந்து தள்ளிவிட்டு, அந்த இடத்தில் தான் அமர்ந்து கொள்ளும் சக்தி பணத்துக்கு உண்டு. அநேகரைப் பாதை தவற வைப்பது, மற்றெல்லாக் காரியங்களையும்விட, பொருளாசையே. இப்படிப்பட்டவர்கள் பொதுவாக சொல்லும் விஷயம்: "நான் என் பண விஷயத்தில் கொண்டிருக்கும் இலக்குகளை அடைந்த பின்னர், தேவனை சேவிப்பேன்." இது, நித்திய காலமாக அவர்கள் வருந்தப்போகின்ற

முட்டாள்தனமான தீர்மானம். இயேசு உங்கள் எஜமானனாக இருந்தால், பணம் உங்களுக்கு சேவை செய்யும்; ஆனால், பணம் உங்களுக்கு எஜமானனாகி விட்டால், நீங்கள் அதற்கு அடிமையாக இருப்பீர்கள். ஐசுவரியம் பாவமல்ல – அதை தேவனுடைய மகிமைக்காக செலவழிக்கத் தவறுவதுதான் பாவம். தேவனுடைய ஊழியர்களாக இருப்போர், எப்போதும் பணத்தைவிட ஊழியத்தைக் குறித்து அதிக கரிசனையுடையவர்களாக இருப்பார்கள். வேதம் இதில் தெளிவாக இருக்கின்றது: உங்களது சேவக தன்மையை பரிசோதிக்க, தேவன் பணத்தை பயன்படுத்துவார். ஆகவேதான், பரலோகத்தையும் நரகத்தையும் பற்றி பேசியதைவிட அதிகமாகப் பணத்தைக் குறித்துப் பேசினார். ***"உலகப் பொருளில் நீங்கள் உண்மையாக இராவிட்டால், உண்மையான ஐசுவரியத்தை, உங்களை நம்பித் தருவது யார்?"***[9] என்று கூறினார். நீங்கள் பணத்தை எவ்வாறு கையாளுகின்றீர்களென்பதைப் பொறுத்தே தேவன் உங்கள் வாழ்க்கையை ஆசீர்வதிக்கும் அளவும் இருக்கும்.

31ஆம் அத்தியாயத்தில், நான் இரண்டுவித நபர்களைக் குறிப்பிட்டேன். தேவ ராஜ்ஜியத்தைக் கட்டுபவர்கள் மற்றும் ஆஸ்தியைக் கட்டுகின்றவர்கள் ஆகிய இருவருமே ஒரு தொழில் வளர்ச்சியில் வரம் பெற்றவர்கள். வியாபார ஒப்பந்தம், விற்பனை, லாபமெடுத்தல் – ஆகிய இவற்றில் தலைசிறந்தவர்கள். ஆஸ்தியைக் கட்டியெழுப்புகிறவர்கள், எவ்வளவு பணம் சேர்த்த பின்னரும் தங்களுக்காகப் பணத்தைக் குவித்துக் கொண்டேயிருப்பார்கள். ஆனால், இராஜ்ஜியத்தைக் கட்டுபவர்கள் விளையாட்டு விதியையே மாற்றிவிடுவார்கள். அவர்கள் இன்னும் தங்களால் கூடியவரை பணம் சம்பாதிப்பார்கள்... ஆனால், அதைக் கொடுத்து விடுவார்கள். தங்கள் ஆஸ்தியைத் தேவனுடைய சபை மற்றும் உலகத்தில் அதன் பணி ஆகியவற்றிற்காக பயன்படுத்துவார்கள்.

சேடில்பேக் சபையில், ஒரு கூட்ட தலைமை நிர்வாக அதிகாரிகளும் (CEOs) தொழிலதிபர்களும் இருக்கின்றார்கள். அவர்களும், தங்களால் இயன்றவரை பணத்தை சேர்க்கின்றார்கள். ஆனால், அதைத் தேவனுடைய இராஜ்ஜிய விருத்திக்காகக் கொடுத்து வருகின்றார்கள். உங்கள் சபை மேய்ப்பரிடம் பேசி, ஒரு "இராஜ்ஜியம் கட்டுவோர்" (Kingdom Builders) குழுவை உங்கள் திருச்சபையில்

ஆரம்பியுங்கள். இதற்கான உதவிக்கு இணைப்பு 2ஐ பார்க்கவும்.

சேவகர்கள், பிறர் என்ன செய்து கொண்டிருக்கின்றார்கள் என்பதையல்ல, தங்கள் வேலையைக் குறித்தே சிந்திப்பார்கள். பிற ஊழியர்களுடன் அல்லது ஊழியங்களுடன் தங்களை ஒப்பிடுவது, குறைகூறி விமர்சிப்பது, அல்லது போட்டி மனப்பான்மையோடு செயல்படுவது போன்றவற்றை உண்மையான சேவகர்கள் செய்ய மாட்டார்கள். தங்களுக்குத் தேவனருளிய வேலையைச் செய்வதிலேயே அவர்கள் நேரம் கழிந்துவிடும். தேவனுடைய ஊழியர்களிடையே (சேவகர்களிடையே) போட்டி மனப்பான்மை காணப்படுவது, பல காரணங்களினிமித்தம் பொருத்தமில்லாத ஒன்றாக உள்ளது: நாம் யாவரும் ஒரே அணியில் இருக்கின்றோம்; நம்மையல்ல, தேவனை நல்லவராகக் காண்பிப்பதுதான் நமது இலக்கு. நமக்கு வெவ்வேறு நியமிக்கப்பட்ட பணிகளுண்டு; நாம் யாவரும் தனிச்சிறப்புடன் வடிவமைக்கப்பட்டுள்ளோம். ***"நாங்கள் எங்களில் ஒருவர் உயர்ந்தவர் மற்றவர் தாழ்ந்தவர் என்பதுபோல எங்களுக்குள்ளே ஒப்பிட்டுப் பார்க்க மாட்டோம். அதைவிட மேலான காரியங்கள் வாழ்க்கையில் செய்யப்பட இருக்கின்றது. நாம் ஒவ்வொருவரும் விசேஷ தனித்தன்மை வாய்ந்த சிருஷ்டிகளாக இருக்கின்றோம்"***[10] என்று பவுல் கூறினார்.

நாள்
முப்பத்து நான்கு:
சேவகர்களைப் போலச் சிந்தித்தல்.

ஊழியர்களிடையே அற்பமும் முக்கியமுமற்ற பொறாமைகளுக்கு இடமில்லை. நீங்கள் உண்மையாக ஊழியம் செய்வதில் சுறுசுறுப்பாக இருந்தால், குறைகூறி விமர்சிக்க உங்களுக்கு நேரமே இருக்காது. இப்படிப் பிறரைக் குறைகூற செலவழிக்கும் நேரத்தை, ஊழியஞ் செய்வதில் செலவிடலாம். மரியாள் தனக்கு உதவி செய்யவில்லை என்று மார்த்தாள் இயேசுவிடம் புகார் கூறியபோது அவள் சேவிக்கும் இருதயத்தை இழந்துவிட்டாள். அநியாயத்தைக் குறித்து உண்மை ஊழியர்கள் குறைகூறி அலைவதில்லை; பரிதாபப்படும் ஒரு கூட்டத்தை தனக்காக கூட்டுவதுமில்லை; சேவிக்காத மற்றவர்களை கண்டு எரிச்சலடைவதுமில்லை. அவர்கள் அப்படியே தேவனை நம்பி, சேவை செய்து கொண்டேயிருப்பார்கள்.

நமது எஜமானனின் மற்ற ஊழியர்களை மதிப்பீடு செய்தல் நமது வேலையல்ல. ***"இன்னொருவனுடைய வேலைக்காரனைக் குறை கூறுவதற்கு நீ யார்? தமது ஊழியக்காரன் வெற்றி பெற்றிருக்கின்றானா என்பதைக் கர்த்தர் தீர்மானிப்பார்."***[11] என்று வேதம் கூறுகின்றது. நமக்கு விரோதமாகக் குறை கூறப்படும்போது அதைத் தடுத்து விளக்கம் கூற முற்படுவதும் நமது வேலையல்ல. அதை உங்கள் எஜமானர் பார்த்துக்கொள்ளும்படி விட்டு விடுங்கள். மோசேயின் மாதிரியைப் பின்பற்றுங்கள். அவன், எதிர்ப்பிற்கு முன் உண்மையான தாழ்மையைக் காண்பித்தான். அதுபோல, நெகேமியா தனது விமர்சகர்களுக்கும் கூறிய பதில், ***"இப்போது வந்து உங்களைச் சந்திக்க வராதபடி... என் வேலை, நிறுத்தப்படக் கூடாத அளவு முக்கியத்துவம் வாய்ந்தது."***[12]

நீங்கள் இயேசுவைப்போல ஊழியஞ் செய்தால், குறை கூறப்படுவதை நிச்சயம் எதிர்பார்க்கலாம். இந்த உலகம் மட்டுமல்ல, சபையிலும் பெரும் பகுதியினர் தேவன் எதை மதிக்கின்றாரென்பதைப் புரிந்து கொள்ளுவதில்லை. ஒருமுறை மரியாள் மிகவும் அழகிய அன்பின் கிரியைகளில் ஒன்றை இயேசுவுக்குச் செய்தபொழுது சீஷர்கள் அதை குறை கூறி கண்டித்தார்கள். மரியாள், தன்னிடமிருந்த மிக விலையுயர்ந்த மதிப்பு கொண்ட தைலத்தை இயேசுவின்மீது ஊற்றினாள். அவளுடைய உதாரத்துவமான ஊழியம் (சேவை), சீஷர்களால் ***"வீண் விரயம்"*** என்று கூறப்பட்டது. ஆனால், இயேசுவோ அதை ***"முக்கியமானது"***[13] என்று கூறினார். அதுதான் காரியம் – பிறர் என்ன கூறினாலும், கிறிஸ்துவுக்கு நீங்கள் செய்யும் ஊழியம் ஒருபோதும், வீணாகாது.

சேவகர்கள், தங்கள் அடையாளத்தை கிறிஸ்துவில் பதிக்கின்றனர். தாங்கள் கிருபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நேசிக்கப்படுவதால், வேலைக்காரர் தங்கள் தகுதியை, மதிப்பை நிரூபிக்க போராடுவதில்லை. பாதுகாப்பற்ற உணர்வுள்ள மக்கள், தங்கள் மதிப்புக்குக் ''கீழ்ப்பட்டது'' என்று எண்ணும் வேலையைக்கூட, இவர்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்ளுவார்கள். தன்னைப் பற்றிய அசைக்க முடியாத, பாதுகாப்பான எண்ணத்துடன் செய்யப்பட்ட ஆழமான ஊழியத்திற்கு ஒரு உதாரணம் – தனது சீஷர்களின் கால்களை இயேசு கழுவுதல். இது, காலணிகளுக்குப் மெருகூட்டும் சிறுவன் செய்யும் வேலைக்கு

சமம் – அந்தஸ்தே இல்லாத வேலை – ஆனால், இயேசுவுக்குத் தான் யாரென்று தெரியும். ஆகவே, அவருடைய சுய மதிப்பை இந்த வேலை எந்த விதத்திலும் இழிவுபடுத்தவில்லை. *"பிதா தமது கரத்தில் எல்லாவற்றையும் ஒப்புவித்து விட்டதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும் இயேசு அறிந்திருந்தபடியால்,... அவர் போஜனத்தை விட்டெழுந்து, தமது மேலங்கியைக் கழற்றி வைத்து விட்டு, ஒரு துணியைத் தமது இடுப்பில் கட்டிக் கொண்டு"*[14] சீஷர்களின் கால்களைக் கழுவத் தொடங்கினார் என்று வேதம் கூறுகின்றது.



நீங்கள் ஒரு ஊழியக்காரராக வேண்டுமானால், உங்கள் அடையாளம் கிறிஸ்துவில் பதிக்கப்பட்டிருக்க வேண்டும். பாதுகாப்புணர்வு உள்ளவர்கள்தான் ஊழியஞ்செய்ய முடியும். இந்த உணர்வற்றவர்கள், மற்றவர்கள் பார்வைக்கு எப்படியிருக்கின்றோமோ என்று கவலைப்பட்டுக் கொண்டே இருப்பார்கள். தங்கள் பெலவீனங்கள் வெளிப்பட்டு விடுமோ என்ற பயத்தில், பெருமை, பாசாங்கு போன்ற மடிப்புகளுக்குப்பின் மறைந்து கொள்ளப் பார்க்கின்றார்கள். எந்த அளவுக்கு உங்களுக்குப் பாதுகாப்பற்ற உணர்வு இருக்கின்றதோ அந்த அளவுக்கு மக்கள் உங்களை சேவிக்க விரும்புவீர்கள்; அவர்களுடைய ஒப்புதல், பாராட்டுக்காகவும் ஏங்குவீர்கள்.

''பிறருக்கு சேவை செய்யக்கூடியவர்களாக நாம் மாற வேண்டுமானால், நாம் அவர்களுக்கு மரித்துவிட வேண்டும்; அதாவது, நமது வேலையின் பொருள், மதிப்பு, இவற்றை அடுத்தவரின் அளவு கோலைக் கொண்டு நாம் அளக்கக் கூடாது... அப்படியிருந்தால், நாம் மனதுருக்கம் கொள்ளும்படி, விடுதலை உணர்வுடனிருப்போம்" என்று ஹென்றி நுவென் கூறினார். உங்கள் தகுதி, அடையாளம் ஆகியவற்றைக் கிறிஸ்துவுடனுள்ள உங்கள் உறவை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிட்டால், பிறருடைய எதிர்பார்ப்பு என்னும் வலையில் சிக்காமல் விடுதலையாவீர்கள். அதினிமித்தம், பிறருக்கு நீங்கள் சிறந்த ஊழியஞ் செய்யக்கூடும்.

உண்மையான சேவகர்கள், தங்கள் வேலையின் மதிப்பைக் காண்பிக்கத்தக்கதாக, தங்கள் விருதுகளையும், பாராட்டு

பரிசுகளையும் பரப்பி வைத்துக் காட்டத் தேவையில்லை. இவர்கள், பட்டங்களை வைத்து தாங்கள் அழைக்கப்படுவதையும் வலியுறுத்துவதுமில்லை, மேன்மை என்னும் அங்கியால் தங்களை போர்த்திக் கொள்ளுவதுமில்லை. மேலும், தங்கள் அந்தஸ்தைக் காண்பிக்கும் சின்னங்கள் தேவையில்லை என்றே கருதுவார்கள்; தங்கள் சாதனைகளினால் அவர்கள் தங்கள் மதிப்பை எடை போடவுமாட்டார்கள். ***''நீங்கள் உங்களையே மெச்சிக் கொள்ளலாம்; ஆனால், கர்த்தரின் ஒப்புதல் ஒன்றுதான் நிலை நிற்கக்கூடியது.''***[15]

இயேசுவுடன் தனக்கிருந்த உறவைக் குறித்து வாழ்நாள் முழுவதும் பெருமையாக பேசிக் கொள்ளக்கூடிய ஒருவர் உண்டானால்... அவர்தான் இயேசுவின் சகோதரனாகிய, யாக்கோபு (half brother) இயேசுவோடு கூட வளர்ந்தவரென்ற பெருமை அவருக்கு உண்டு. ஆயினும், தனது நிருபத்தை ஆரம்பிக்கும்போது, தன்னைக் குறித்து, ***"தேவனுக்கும், இயேசு கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரன்"***[16] என்று குறிப்பிடுகின்றார். இயேசுவை நீங்கள் நெருங்க, நெருங்க, உங்களை முன்னிறுத்துவதைக் குறைத்துக் கொண்டே போவீர்கள்.

சேவகர்கள், ஊழியத்தை ஒரு கடமையென்று எண்ணாமல் ஒரு அரிய சந்தர்ப்பமென்று எண்ணுகின்றார்கள். மக்களுக்கு உதவி செய்வது, தேவைகளைச் சந்திப்பது, ஊழியஞ் செய்வது – ஆகிய இவற்றையெல்லாம் உண்மையான சேவகர்கள் மகிழ்ச்சியுடன், அனுபவித்துச் செய்வார்கள். அவர்கள் ***''மகிழ்ச்சியோடு கர்த்தரைச் சேவிக்கின்றார்கள்.''***[17] ஏன் இப்படி மகிழ்ச்சியுடன் சேவிக்கின்றார்கள்? ஏனெனில், அவர்கள் கர்த்தரை நேசிப்பதால்; அவருடைய கிருபைக்காக நன்றியுள்ளவர்களாக இருப்பதால்; வாழ்க்கையின் மிகப்பெரிய பயன், சேவை என்று அறிந்திருப்பதால்; தேவன் தங்களுக்கு பலன் தருவதாக வாக்குப்பண்ணியிருக்கின்றாரென்பதை அறிந்திருப்பதால், அவர்கள்

> ***எந்த அளவுக்கு இயேசுவை நெருங்குகின்றீர்களோ, அந்த அளவுக்கு உங்களை முன்னிறுத்துவதைக் குறைத்துக் கொள்ளுவீர்கள்.***

மகிழ்ச்சியுடன் ஊழியம் செய்கின்றார்கள். *"எனக்கு ஊழியஞ் செய்கின்றவனை என் பிதா கனப்படுத்தி, பலனளிப்பார்"*[18] என்று இயேசு வாக்களித்தார். *"மற்ற சகோதரருக்காக நீங்கள் கரிசனை கொண்டு, நீங்கள் எவ்வளவு கடினமாக உழைத்தீர்களென் பதையும், அவர் மீதுள்ள உங்கள் அன்பை எப்படிக் காண்பித்தீர்கள் என்பதையும் அவர் மறந்து விடவே மாட்டார்"*[19] என்று பவுல் கூறுகின்றார்.

உலகத்திலுள்ள எல்லா கிறிஸ்தவர்களில் 10% மக்கள் மட்டும் உண்மையான சேவகர் என்ற தங்கள் பங்கைச் செய்ய முன் வந்தால், என்ன நடக்கும் என்பதைக் கற்பனைச் செய்து பாருங்கள். செய்யப்படக்கூடிய நன்மைகளையெல்லாம் எண்ணிப்பாருங்கள். அவர்களில் ஒருவராக இருக்க உங்களுக்கு விருப்பமா? உங்கள் வயது எதுவாக இருந்தாலும் பரவாயில்லை. நீங்கள் ஒரு சேவகனாக (ஊழியனாக) உங்களைப் பாவித்து, செயல்பட ஆரம்பித்தால், தேவன் உங்களைப் பயன்படுத்துவார். "ஊழியம் செய்வது (சேவை) எப்படி என்று கற்றுக்கொண்ட மக்கள் மட்டுமே உண்மையான சந்தோஷத்தையுடைய மக்கள்" என்று ஆல்பர்ட் ஸ்விட்சர் என்பவர் கூறினார்.

நாள் முப்பத்து நான்கு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: ஒரு சேவகனாக (ஊழியனாக) இருப்பதற்கு ஒரு சேவகனைப்போல நான் சிந்திக்க வேண்டும்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."*** பிலிப்பியர் 2:5

ஆய்வுக்கான ஒரு கேள்வி: நான் வழக்கமாக எதைக் குறித்து அதிக அக்கறை கொள்ளுகின்றேன்? எனக்கு ஊழியஞ் செய்யப்படுவதையா? அல்லது பிறருக்கு ஊழியஞ் செய்யும் வழிகளை நான் கண்டு கொள்ளுவதையா?

உங்கள் பலவீனத்தில் தேவனின் வல்லமை

நாங்கள் பலவீனர்களாயிருக்கின்றோம்...
ஆயினும், உங்களுக்கு ஊழியம் செய்யவே தேவனுடைய வல்லமையினால் அவருடனேகூடப் பிழைத்திருப்போம்.
2 கொரிந்தியர் 13:4 (புதிய மொழியாக்கம்)

நான் உன்னுடனேகூட இருக்கின்றேன்; அதுதான் உனக்கு தேவை. என் வல்லமை பலவீனமான மக்களிடம் சிறப்பாக வெளிப்படும்.
2 கொரிந்தியர் 12:9 (புதிய மொழியாக்கம்)

பலவீனமான மக்களை பயன்படுத்துவதில் தேவன் பிரியம் கொள்ளுகின்றார்.

பலவீனம் என்பது, பொதுவாக யாவருக்கும் இருக்கக்கூடிய ஒன்று. உண்மையாகவே, குறைகளும், நிறைவற்ற தன்மைகளும் ஏராளமாக நம்மிடம் உள்ளன. சரீரப்பிரகாரமாக, உணர்வுபூர்வமாக, அறிவு சம்பந்தமாக மற்றும் ஆவிக்குரிய பிரகாரமாக. அதோடுகூட உங்கள் கட்டுக்கடங்காத சூழ்நிலைகளும் உங்களை பலவீனப் படுத்தக்கூடும் – உதாரணமாக, பொருளாதாரம் மற்றும் உறவு ரீதியிலான குறைபாடுகள். மிக முக்கியமான காரியம் என்னவெனில், இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நீங்கள் என்ன செய்கின்றீர்கள் என்பதே. பொதுவாக, நாம் நமது பலவீனங்களை ஒத்துக் கொள்ளுவதில்லை. அவை சரிதான் என்று தற்காத்துக் கொள்ளுகின்றோம். அவைகளை சாக்குப்போக்கு சொல்லுவதற்கு பயன்படுத்துகின்றோம். சில வேளைகளில் மறைக்கின்றோம் அல்லது எரிச்சலடைகின்றோம். இப்படிச் செய்வதனால், தேவன் நம்மை

பயன்படுத்த விரும்புகின்ற விதத்தில் பயன்படுத்த இயலாமல் போகின்றது.

உங்கள் பலவீனங்களை தேவன் வித்தியாசமான கண்ணோட்டத்தில் காண்கின்றார். ***"உங்கள் வழிகளைப் பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது"***[1] என்று அவர் கூறுகின்றார். ஆகவேதான், அநேக நேரங்களில் நாம் எதிர்பார்ப்பதற்கு நேர்மாறான விதத்தில் அவர் செயல்படுகிறதை பார்க்கின்றோம். தேவன் நமது பலத்தை மட்டுமே பயன்படுத்த விரும்புகிறாரென்று நாம் நினைக்கின்றோம். ஆனால், அவரோ நமது பலவீனங்களையும் அவருடைய மகிமைக்காகப் பயன்படுத்த விரும்புகின்றார்.

"பலமுள்ளவைகளை வெட்கப்படுத்தும்படி, தேவன், உலகத்தில் பலவீனமானவைகள் என்று கருதப்படுபவைகளை வேண்டுமென்றே தெரிந்து கொண்டார்"[2] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் பலவீனங்கள் தற்செயலாக நேரிட்டவைகளல்ல. தமது வல்லமையை உங்கள் மூலம் விளங்கப் பண்ணும்படி, தேவன் வேண்டுமென்றே அவற்றை உங்கள் வாழ்வில் அனுமதித்தார்.

தன்னிறைவு, பலம் ஆகியவற்றால் தேவன் ஈர்க்கப்படுகிறவரே அல்ல. மாறாக, பலவீனமான ஒரு நபர் தனது பலவீனத்தை ஒத்துக்கொள்ளும்போது, அவர் பக்கமாக ஈர்க்கப்படுகின்றார். தன் பலவீனத்தை உணர்ந்து, தெரிந்துகொள்ளுவதையே ***"ஆவியில் எளிமை"*** என்று இயேசு கூறுகின்றார். இப்படிப்பட்ட மனப்பான்மையை உள்ளவர்களையே அவர் ஆசீர்வதிக்கின்றார்.[3]

பலவீனங்களை பொருட்படுத்தாமல், குறைவுள்ள சாதாரண மக்களை, அசாதாரண காரியங்களைச் செய்வதற்கு தேவன் எவ்வாறு பயன்படுத்தினார் என்ற காரியத்தை வேதம் முழுவதும் நாம் காண முடியும். குறைவற்ற, பரிபூரண மக்களை மட்டுமே தேவன் பயன்படுத்துவாரென்றால் ஒருக்காலும் ஒன்றும் நடைபெறாது. காரணம், குறைவற்றவர்கள் எவருமில்லை. நிச்சயமாகவே, குறைவுள்ள, முழுமையற்ற மக்களை தேவன் பயன்படுத்துகின்றார் என்ற செய்தி நம் யாவருக்கும் உற்சாகமூட்டும் ஒரு செய்தி!

பவுல், "*முள்*"[4] என்று அழைத்தது போன்ற ஒரு பலவீனம் – ஒரு பாவமோ, தீய பழக்கமோ அல்லது குணத்தில் உள்ள ஒரு குறைபாடோ அல்ல! குணத்தின் குறைபாட்டை நாம் மாற்றிக் கொள்ளக்கூடும். பெருந்தீனி, பொறுமையின்மை போன்றவற்றை நாம் மாற்றக்கூடும். பலவீனம் என்பது நம்மால் மாற்றமுடியாத ஒன்று அல்லது பரம்பரையாக கடந்து வரும் ஒரு குறைபாடு. ஒருவேளை, அது ஒரு *சரீர* குறைபாடாக இருக்கக்கூடும் – அங்கவீனம், நாள்பட்ட வியாதி, இயற்கையாகவே சத்துவ குறைவு, ஒரு இயலாமை அல்லது, அது ஒரு *உணர்வு ரீதியிலான* குறைபாடாகவும் இருக்கலாம் – அதிர்ச்சி தரும் காயம், வேதனை தரும் ஒரு நினைவு, ஆள்தத்துவத்தில் ஒரு குறைபாடு, பரம்பரையாக வரும் ஒரு குறைபாடு. அல்லது அது ஒரு *தாலந்து* அல்லது *அறிவு சம்பந்தமான* குறைபாடாக இருக்கலாம். நாம் யாவரும் மிஞ்சிய புத்திமான்களோ அல்லது தாலந்துகளின் பெருக்கம் உள்ளவர்களோ அல்ல. நீங்கள் உங்கள் வாழ்விலுள்ள குறைபாடுகளைப் பார்க்கும்போது, "தேவன் என்னை ஒருக்காலும் பயன்படுத்தவே முடியாது" என்ற முடிவு செய்யும் சோதனை வரும். ஆனால், நமது குறைபாடுகளைக்கொண்டு தேவன் நம்மை வரையறுக்கவில்லை என்ற உண்மையை மறந்து போகக்கூடாது. உண்மை என்னவெனில், சாதாரண பாத்திரங்களுக்குள் தமது பெரிய வல்லமையை வைப்பதில் அவர் பெருமகிழ்ச்சியடைகின்றார். ***"இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்"***[5] என்று வேதம் சொல்லுகின்றது. சாதாரண மண்பாண்டங்கள்போல, நாம் பலவீனர், குறையுள்ளவர்கள், எளிதில் உடையக்கூடியவர்கள். நமது பலவீனத்தின் ஊடாகக் கிரியை செய்யும்படி தேவனுக்கு இடங்கொடுத்தால் அவர் நம்மை உபயோகிப்பார். அது நடைபெற, நாம் பவுலின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

குறைவற்ற, பரிபூரண மக்களை மட்டுமே தேவன் பயன்படுத்துவாரென்றால் ஒருக்காலும் ஒன்றும் நடைபெறாது.

உங்கள் பலவீனங்களை ஒத்துக்கொள்ளுங்கள். உங்களது குறைபாடுகளை ஒத்துக்கொள்ளுங்கள். எல்லாவற்றிலும் நிறைவுள்ளவர்கள்போல பாசாங்கு செய்வதை விட்டுவிட்டு, உண்மையாக இருங்கள். மறுத்து பேசுதல் அல்லது சாக்குப்போக்கு சொல்லுதல் ஆகிய காரியங்களுக்கு பதிலாக, உங்கள் சொந்த பலவீனங்களை அடையாளம் காண நேரமெடுங்கள். அவற்றை ஒரு பட்டியலாகவும் தயாரிக்கலாம்.

ஆரோக்கியமான நல்வாழ்வுக்குத் தேவையான இரண்டு பெரிய அறிக்கைகளை புதிய ஏற்பாட்டில் காண்கின்றோம். முதல் அறிக்கை, பேதுருவுடையது. ***"நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து"***[6] என்று இயேசுவிடம் அறிக்கையிடுகிறார். இரண்டாவது அறிக்கை, பவுலினுடையது. தன்னை வணங்க வந்த மக்கள் கூட்டத்தாரிடம் ***"நாங்களும் உங்களைப்போல மனுஷர்கள் தானே"***[7] என்று அவர் கூறினார். தேவன் உங்களைப் பயன்படுத்த விரும்பினால், தேவன் யாரென்றும் நீங்கள் யாரென்றும் அறிய வேண்டியது அவசியம். அநேக கிறிஸ்தவர்கள், குறிப்பாக தலைவர்கள், இரண்டாவது அறிக்கையை மறந்து விடுகின்றார்கள்: நாம் வெறும் மனிதர்களே! ஒரு நெருக்கமோ அல்லது பிரச்சனையோ உங்கள் வாழ்க்கையில் குறுக்கிடும்போதுதான் இந்த உண்மையை நீங்கள் புரிந்துகொள்ளக்கூடும் எனில்... அதனை அனுமதிக்க தேவன் தயங்க மாட்டார்.

உங்கள் பலவீனத்தோடு திருப்தியாயிருங்கள். ***"கிறிஸ்துவின் வல்லமை என் மூலம் வெளிப்படும் பொருட்டாக, என் பலவீனங்களைக் குறித்து நான் மேன்மை பாராட்டுகிறேன். இவையெல்லாவற்றிலும் கிறிஸ்து மேன்மைப்படுவதால், நான் என் பலவீனங்களுடன் திருப்தியாக இருக்கிறேன்"***[8] என்று பவுல் கூறுகிறார். முதலில் பார்க்கும்போது, இது அர்த்தமற்ற பேச்சாக தெரிகின்றது. பொதுவாக, நாம் நமது பலவீனங்களிலிருந்து வெளிவரத்தான் விரும்புவோமே தவிர, திருப்தியடைய விரும்புவதில்லை! ஆனல், இங்கு "திருப்தி" என்பது, தேவனுடைய நன்மையின் மீது நாம் காட்டும் விசுவாசத்தை வெளிப்படுத்துகின்றது. "தேவனே, நீர் என்னை நேசிக்கிறீரென்றும் எனக்கு எது சிறப்பான தென்று அறிந்திருக்கிறீரென்றும் நான் விசுவாசிக்கின்றேன்" என்ற மனப்பான்மையை இது வெளிப்படுத்துகின்றது.

நமது இயற்கையான பலவீனங்களைக்குறித்து நாம் திருப்தியாக இருக்க, பவுல் நமக்கு அநேக காரணங்களைக் கூறுகிறார். முதலாவதாக, அவை நம்மை தேவன் மீது சார்ந்து கொள்ளச் செய்கின்றன. தேவன் எடுக்க மறுத்த, தனது சொந்த பலவீனத்தைக் குறித்து பவுல் கூறும்போது, *"இந்த 'முள்ளைக்' குறித்து நான் சந்தோஷிக்கிறேன்,... ஏனெனில், நான் எப்பொழுது பலவீனமாக இருக்கிறேனோ அப்பொழுது பலப்பட்டு இருக்கின்றேன் - நான் குறைவுபடும்போது, அவரை அதிகமாக சார்ந்து கொள்ளுகின்றேன்"*[9] என்கிறார். நீங்கள் பலவீனமான உணர்வு கொள்ளும்போதெல்லாம், தன் மீது சார்ந்து கொள்ள தேவன் நினைப்பூட்டுகின்றார்.

நமது பலவீனங்கள், நாம் அகம்பாவம் கொள்ளாதபடி இருக்கவும் உதவுகின்றன. அவை நமக்கு தாழ்மையைக் கற்றுக் கொடுக்கின்றன. இதைக் குறித்து பவுல், *"நான் என்னை உயர்த்தாதபடிக்கு, இடைவிடாமல் என் குறைபாடுகளுடன் தொடர்பு கொள்ளும்படி, ஒரு குறைபாடு (முள்) எனக்கு ஈவாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றது"*[10] என்று கூறுகிறார். ஒரு பெரிய பலத்துடன் தேவன் எப்போதுமே ஒரு பெரிய பலவீனத்தை இணைத்து விடுகின்றார். நமது அகங்காரத்தை (ego) கட்டுக்குள் வைத்திருப்பதற்காக அப்படிச் செய்கின்றார். சில வேளைகளில், இப்படிப்பட்ட குறைபாடுகள், நாம் தேவனுக்கு முன்பாக வேகமாக ஓடாதபடிக்கு தடுத்து நிறுத்துகின்ற வழிகாட்டிகளாக செயல்படுகின்றன. கிதியோன் 32,000 பேரை மீதியானருக்கு எதிரான படை வீரர்களாக சேர்த்தபோது, தேவன் அதை 300 ஆகக் குறைத்து விட்டார். 450 எதிரிகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் அவர் கணக்கிட்டுக் குறைத்து விட்டார். எதிரி படைகளில் இருந்தவர்கள் 1,35,000 பேர். அது அழிவுக்கான ஆயத்தம்போல தெரிந்தது. ஆனால், அது இஸ்ரவேலரின் சொந்த ஆள் பலத்தினாலல்ல, தேவனுடைய வல்லமைதான் அவர்களை ஜெயிக்க வைத்தது என்று இஸ்ரவேலர் அறியும்படி தேவன் அப்படிச் செய்தார்.

நமது பலவீனங்கள், விசுவாசிகளுக்குள் ஐக்கியத்தை ஊக்குவிக்கின்றன. பலத்தினால் எவ்வாறு சுயாதீனத்தின் ஆவி ("எனக்கு வேறு யாரும் தேவையில்லை") பிறப்பிக்கப்படுகின்றதோ,

அதேபோல, பலவீனத்தினால் (நமது வரையறைகளினால்) நாம் ஒருவருக்கொருவர் தேவை என்ற உணர்வு வலுப்படுகின்றது. நம்முடைய வாழ்க்கையின் பலவீன இழைகளை ஒன்றாக பின்னும்போது மகத்தான வல்லமையுள்ள கயிறு ஒன்று திரிக்கப்படுகின்றது. வான்ஸ் ஹெவ்னர் என்பவர், "கிறிஸ்தவர்கள், பனிச் சிதறல்களைப்போல (Snow flakes) பலவீனமாக இருந்தாலும் ஒன்றாக இணைந்து கொண்டால் போக்குவரத்தையே நிறுத்திவிட முடியும்" என்றார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, நமது பலவீனங்கள், ஒருவருக்கொருவர் பரிதாப உணர்வு கொள்ளவும், ஊழியஞ் செய்யவும் நமது திறமைகளை அதிகரிக்கின்றன. நமக்கும் பலவீன பகுதிகள் இருப்பதனால், பிறருடைய பலவீனங்களைக் குறித்த மனதுருக்கம் நமக்கு ஏற்படு கின்றது. கிறிஸ்து செய்ததைப் போன்றதொரு ஊழியம் நாம் செய்யுமாறு தேவன் எதிர்பார்க் கின்றார். அப்படியானால், உங்களது காயங்களினால் மற்றவர்கள் சுகம் பெறப்போகின்றார்கள். உங்களுடைய ஆழமான காயங்களிலிருந்துதான் உங்கள் வாழ்க்கையின் மிகப் பெரிய செய்தியும், மிகப் பயனுள்ள ஊழியமும் பிறக்கும். எந்த காரியங்களைக் குறித்து நீங்கள் அதிகம் வெட்கமடைகின்றீர்களோ, எந்த காரியங்களை வெளியில் கூற விருப்பமில்லாமல் இருக்கின்றீர்களோ அப்படிப்பட்ட காரியங்கள்தான் மற்றவர்களின் காயங்களை ஆற்ற தேவன் பயன்படுத்தும் வல்லமையான உபகரணம். "தேவனுடைய இராட்சதர்கள் அனைவருமே பெலவீன மக்களே" என்று மிகப்பெரிய மிஷனரியான ஹட்சன் டெய்லர் கூறினார். மோசேயின் கோப குணம் அவனுக்கு ஒரு பலவீனம். ஒரு எகிப்தியனைக் கொலை செய்யும்படி அக்கோபம் தூண்டியது, பேச வேண்டிய கன்மலையை அடிக்க வைத்தது, பத்துக் கற்பனை எழுதப்பட்ட பலகைகளை உடைக்க வைத்தது. ஆயினும், மோசேயை ***"பூமியிலுள்ளவர்கள் எல்லாரைக் காட்டிலும் அதிக சாந்த குணமுள்ளவனாக"***[11] தேவன் மாற்றினார்.

உங்கள் ஆழமான காயங்களிலிருந்துதான் உங்களுடைய மிகப் பயனுள்ள ஊழியம் வெளிப்படும்

கிதியோனின் பலவீனம் – இவன் தன்னைப் பற்றிய ஒரு தாழ்வான எண்ணமும், ஆழ்ந்த பாதுகாப்பற்ற உணர்வும் கொண்டவனாக இருந்தான். தேவன் அவனை *"பராக்கிரமசாலியாக"*[12] மாற்றினார். ஆபிரகாமின் பலவீனம் பயம். ஒருமுறை அல்ல, இருமுறை தன் மனைவியைத் தன் சகோதரி என்று சொல்லி தன்னை பாதுகாக்க முயன்றவன். ஆனால், தேவன் அவனை, ***"விசுவாசிகளின் தகப்பனாக"***[13] மாற்றினார். துடிதுடிப்பான ஆனால் பலவீன உள்ளம் கொண்ட பேதுரு ஒரு ***"பாறையாக"***[14] மாற்றப்பட்டார். விபசாரம் செய்த தாவீது, ***"என் இருதயத்திற்கு ஏற்றவன்"***[15] என்று தேவன் அழைக்கும் அளவுக்கு மாற்றப்பட்டான். யோவான், பெருமையான இரு "இடி முழக்கத்தின் மக்களில்" ஒருவர் – அவர், "அன்பின் அப்போஸ்தலனாக" மாறினார். இப்படிப் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம். ***"பலவீனமுடையோர் பலசாலிகளாக மாற்றப்பட்ட சான்றுகளை அடுக்கிக்கொண்டே போகலாம் ...பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாமுவேல் மற்றும் அநேக தீர்க்கதரிசிகள் ... இவர்களுடைய பலவீனங்கள் யாவும் பலங்களாக மாறியது."***[16] பலவீனத்தை பலமாக மாற்றுவதில் தேவன் நிபுணர். அவர் உங்களுடைய பெரிய பலவீனத்தை எடுத்து, அதை மறுரூபமாக்க விரும்புகின்றார்.

உங்கள் பலவீனங்களை நேர்மையாகப் பகிர்ந்து கொள்ளுங்கள். திறந்த மனப்பான்மையிலிருந்துதான் ஊழியம் ஆரம்பமாகின்றது. எந்த அளவுக்கு உங்கள் பாதுகாப்பை அகற்றி, முகமூடியைக் களைந்து, பலவீனங்களைப் பகிர்ந்து கொள்ளுகின்றீர்களோ அந்த அளவுக்குத்தான் தேவன் உங்களை பயன்படுத்த முடியும். பவுல், ஒரு முன்மாதிரியாக, தனது நிருபங்களிலெல்லாம் தன்னைப் பற்றி வெளிப்படையாக பகிர்ந்துகொள்ளுகிறார்:

- அவரது தோல்விகள்: ***"நன்மை செய்ய வேண்டுமென்று விரும்புகின்றேன், நன்மை செய்வதோ என்னிடத்தில் இல்லை. தவறு செய்யாதிருக்க விரும்பினாலும் எப்படியும் தவறை செய்துவிடுகின்றேன்."***[17]

- அவரது உணர்வுகள்: ***"என் உணர்வுகள் அனைத்தையும் உங்களிடம் கூறிவிட்டேன்."***[18]

- அவரது ஏமாற்றங்கள் : *“நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும், பிழைப்போமென்ற நம்பிக்கை அற்றுப் போனவர்களாக முற்றிலும் மேற்கொள்ளப் பட்டோம்”*[19]

- அவரது பயங்கள்: *“நான் உங்களிடத்தில் வந்தபோது மிகுந்த பயத்தோடும், நடுக்கத்தோடும், பலவீனத்தோடும் இருந்தேன்.”*[20]

ஆம், இப்படித் திறந்த நிலையில் இருப்பது ஆபத்தானதுதான்— உங்கள் தற்காப்புத் திரைகளை அகற்றிவிட்டு, உங்கள் வாழ்க்கையைப் பிறர் காணத் திறந்து கொடுப்பது பயப்படக்கூடிய காரியம்தான். உங்கள் தோல்விகள், உணர்ச்சிகள், ஏமாற்றங்கள் மற்றும் பயங்கள் ஆகியவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளும்போது, பிறர் உங்களைப் புறக்கணிக்கக் கூடிய அபாயம் ஏற்படுகின்றது – ஆனால், அதில் கிடைக்கும் பலனுக்காக நீங்கள் அதைத் துணிந்து செய்யலாம். இப்படிப்பட்ட ஒரு திறந்த நிலையில் நீங்கள் இருப்பதனால், உணர்வு ரீதியிலான ஒரு விடுதலையை உங்களுக்கு அது கொண்டு வருவதோடு... மன அழுத்தம் குறையவும், பயங்கள் விலகவும், சுதந்தரத்திற்கான ஆரம்ப படியிலும் கொண்டு போய் நிறுத்துகின்றது. தேவன், *“தாழ்மையுள்ளவர்களுக்குக் கிருபையளிக்கின்றார்”* என்று ஏற்கனவே பார்த்தோம். தாழ்மை என்பது உங்களை நீங்களே குறைத்துக் கொள்ளுவதோ அல்லது உங்கள் பலத்தை மறுப்பதோ அல்ல! மாறாக, தாழ்மை என்பது நமது பலவீனத்தை ஒத்துக்கொள்ளுவதாகும். எந்த அளவுக்கு நாம் உண்மையாக நமது நிலைமையை ஒத்துக் கொள்ளுகிறோமோ அந்த அளவுக்கு தேவ கிருபையை பெற்றுக்கொள்ளுவோம். பிறரிடமிருந்தும் தயவை பெற்றுக் கொள்ளுவோம். இயற்கையாகவே, பாசாங்கு செய்தல் நம்மை பிறரிடமிருந்து பிரித்து வைப்பதைப்போல தாழ்மையும் உண்மையும் நம்மை அவர்களிடம் ஈர்த்துக்கொள்ளுகின்றது.



இதனால்தான், தேவன் உங்கள் பலவீனங்களையும் பயன்படுத்த விரும்புகின்றார் – பலத்தை மட்டுமல்ல. மக்கள் உங்களுடைய

பலத்தை மட்டும் கண்டால், "அவளுக்கென்ன, அவள் நல்ல பலசாலி... என்னால் அதையெல்லாம் செய்ய முடியாது" என்று சொல்லி சோர்ந்து போவார்கள். ஆனால், உங்களது பலவீனத்தின் மத்தியிலும் தேவன் உங்களை பயன்படுத்துவதை அவர்கள் பார்த்தால், "என்னையும் தேவன் பயன்படுத்தக்கூடும்" என்ற ஒரு நம்பிக்கையும் உற்சாகமும் உண்டாகும். ஆம், நமது பலம் போட்டியுணர்வை உண்டாக்கும், நமது பலவீனமோ சமுதாயத்தை உருவாக்கும்.

உங்கள் வாழ்க்கையின் ஏதாவது ஒரு கட்டத்தில் நீங்கள்... உங்கள் வாழ்க்கையைப் பெருமைப்படுத்தி மற்றவர்களுக்கு காட்டப் போகின்றீர்களா அல்லது உங்கள் வாழ்க்கை மூலம் செல்வாக்கை மற்றவர்கள் மீது செலுத்தப்போகின்றீர்களா என்று தீர்மானிக்க வேண்டும் (Influence people or Influence). மக்களுக்கு உங்களைக் குறித்த ஒரு நல்ல அபிப்பிராயத்தை மட்டும் கொடுக்க வேண்டுமானால், தூரத்தில் இருந்துகொண்டே அதை செய்யலாம்; அவர்களில் செல்வாக்கை உண்டுபண்ண வேண்டுமானால் நீங்கள் அவர்களோடு நெருங்கிப் பழக வேண்டும். அப்போது, உங்கள் குறைகளை அவர்கள் காண்பார்கள். நல்லதுதான். தலைமைத்துவத்தின் மிக அத்தியாவசியப் பண்பு சம்பூரணமல்ல – நம்பகத்தன்மையே! மக்கள் உங்களை நம்பினால்தான் உங்களைப் பின்பற்றுவார்கள். இப்படிப்பட்ட நம்பகத் தன்மையை வளர்ப்பது எப்படி? குறையற்றவர்கள்போல நடிப்பதன் மூலமல்ல, உண்மையாயிருப்பதன் மூலமே.

நாள் முப்பத்தைந்து:

உங்கள் பலவீனத்தில் தேவனின் வல்லமை

உங்கள் பலவீனத்தில் மேன்மைக் பாராட்டுங்கள். "என் பலவீனத்தைத் தம்முடைய மகிமைக்காக தேவன் பயன் படுத்துவதால், நான் என் பலவீனங் களைக் குறித்து மேன்மை பாராட்டுகிறேன்"[21] என்று பவுல் கூறினார். திட நம்பிக்கையுள்ள, அசைக்க முடியாதவர்களாக உங்களைக் காண்பிப்பதற்குப் பதிலாக, உங்களையே கிருபையின் சின்னமாகப் பாருங்கள். உங்கள் குறைகளை சாத்தான் சுட்டிக்காட்டும்போது, நீ கூறுவது சரிதானென்று அவனிடம்

ஒத்துக்கொண்டு, உங்கள் இருதயத்தை, இயேசுவைத் துதிக்கும் துதியால் நிரப்புங்கள் – ஏனெனில், உங்கள் ***"பலவீனத்தை நன்கு அறிந்தவர் அவர்."***[22] அதேபோல, பரிசுத்த ஆவியானவரையும் துதியுங்கள் – ஏனெனில், அவர்தான் ***"நமது பலவீனத்தில் நமக்கு உதவி செய்கின்றவர்."***[23]

சில சமயங்களில், தேவன், நமது பலத்தையும் பலவீனப் படுத்துகின்றார் – ஏன்? நம்மை இன்னும் அதிகமாக பயன்படுத்தும்படி ! தனது வாழ்க்கையில் பல திட்டங்களைத் தீட்டி, காரியங்களைத் திசை திருப்பிவிட்டு, விளைவுகளுக்குத் தப்பி ஓடியவன் யாக்கோபு. ஒரு நாள் இரவு அவன் தேவனோடு போராடினான். "நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைவிட மாட்டேன்" என்றான். தேவன், "சரி" என்று சொல்லிவிட்டு, யாக்கோபின் தொடையைத் தொட்டார். அவன் தொடைச் சந்தை விலகப்பண்ணினார். இதன் முக்கியத்துவம் என்ன? தேவன், யாக்கோபின் பலத்தைத் தொட்டார் (தொடைத் தசைதான் சரீரத்திலேயே அதிக பலமுள்ளது). பலத்தை பலவீனமாக்கிவிட்டார். அந்த நாளிலிருந்து யாக்கோபு நெளிவோடுதான் நடந்தான். அவனால் முன்புபோல ஓட முடியாமல் போனது. அவன் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் தன்மீது சார்ந்து கொள்ளும்படி தேவன் செய்துவிட்டார். தேவன் உங்களை ஆசீர்வதித்து, பெரிய அளவில் பயன்படுத்த வேண்டுமென்று நீங்கள் விரும்பினால், ... உங்கள் வாழ்க்கை முழுவதும் நெளிவுடன் நடக்க ஆயத்தமாக இருங்கள். ஏனெனில், தேவன் பலவீனமான மக்களைப் பயன்படுத்துகின்றார்.

நாள் முப்பத்தைந்து
எனது நோக்கத்தைக் குறித்துச் சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் என் பலவீனங்களை ஒத்துக் கொண்டால், தேவன் சிறப்பாகக் கிரியை செய்வார்.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும்."* 2 கொரிந்தியர் 12:9

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் பலவீனங்களை மறைக்க முயலுவதால், தேவனுடைய வல்லமையை என் வாழ்க்கையில் மட்டுப்படுத்துகின்றேனா? மற்றவர்களுக்கு உதவி செய்யும் பொருட்டு நான் எதில் உண்மையாக இருக்க வேண்டும்?

நோக்கம் 5



நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக ஏற்படுத்தப்பட்டீர்கள்

நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம்;
ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக் கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன்.
நீதிமொழிகள் 11:30

கிறிஸ்துவுக்கு நற்கந்தங்களாக அவரை அறிகிற அறிவின் வாசனையை எங்கும் வீசச் செய்ய தேவன் நம்மைப் பயன்படுத்துகின்றார்.
2 கொரிந்தியர் 2:14

36

நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக உண்டாக்கப்பட்டீர்கள்

"நீர் எனக்கு இந்த உலகத்தில் செய்வதற்கு ஒரு பணியைக் கொடுத்ததுபோல அவர்களுக்கும் உலகத்தில் நான் ஒரு பணியைக் கொடுக்கின்றேன்."
யோவான் 17:18 (புதிய மொழியாக்கம்)

"கர்த்தராகிய இயேசு எனக்குத் தந்த வேலையை நான் செய்து முடிப்பதே மிகவும் முக்கியமான காரியம்."
அப்போஸ்தலர் 20:24 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக உண்டாக்கப்பட்டீர்கள்.

தேவன் இந்த உலகத்தில் கிரியை செய்துகொண்டிருக்கின்றார்; நீங்களும் அதில் இணைந்துகொள்ள வேண்டுமென்று அவர் விரும்புகின்றார். இப்படி உங்களுக்கு நியமிக்கப்பட்ட வேலைதான், ***உங்கள் பணி*** (மிஷன் அல்லது அருட்பணி). நீங்கள் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் ஊழியம் செய்ய வேண்டுமென்றும் (Ministry), உலகத்தில் பணி செய்ய வேண்டுமென்றும் (Mission) தேவன் விரும்புகின்றார். ஊழியமென்பது ***விசுவாசிகளுக்கு*** நீங்கள் செய்யும் சேவை, 'மிஷன்' என்பது ***அவிசுவாசிகளிடம்*** நீங்கள் செய்யும் சேவை. இந்தப் பணியை நீங்கள் உலகத்தில் நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் உங்களைக் குறித்த தேவனுடைய ஐந்தாவது நோக்கம்.

உங்கள் வாழ்க்கையின் பணி, ***பகிர்ந்து கொள்ளுதலும், குறிப்பிட்டதொரு திட்டவட்டமான*** பணியுமாகும். உங்கள் சக கிறிஸ்தவர்களுடன் நீங்கள் பகிர்ந்து கொள்ளும் பொறுப்பு ஒரு பகுதி, அடுத்த பகுதி உங்களுக்கென்றே ஒதுக்கப்பட்ட தனிச்சிறப்பு வாய்ந்த பணி. பின்வரும் அத்தியாயங்களில் இந்த இரண்டு பகுதிகளையும் நாம் பார்ப்போம்.

'மிஷன்' (mission) என்ற ஆங்கில பதம் "அனுப்பப்படுதல்" என்பதற்கான லத்தீன் பதத்திலிருந்து பிறந்தது. கிறிஸ்தவன் என்றாலே, இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதிகளாக ***அனுப்பப் பட்டவர்கள்*** என்ற பொதுவான ஒரு அர்த்தம் உண்டு என்று இயேசு கூறினார். ***"என் பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகின்றேன்."***[2]

இயேசு, தமது உலகப் பணியைத் தெளிவாக அறிந்து வைத்திருந்தார். பன்னிரண்டு வயதில், ***"நான் என் பிதாவுக்கடுத்தவைகளில் இருக்க வேண்டும்"***[3] என்று கூறினார். 21 வருடங்கள் கழித்து, சிலுவையில் மரிக்கும்போது, ***"முடிந்தது"***[4] என்று அவர் கூறினார். ஒரு புத்தகத்தின் ஆரம்பமும், முடிவும் போல (இரு அட்டைகள்போல), இந்த இரண்டு வாக்கியங்களும் நன்றாக வாழ்ந்த, நோக்கம் கொண்ட வாழ்க்கையைக் காட்டுகின்றன. பிதா தனக்குக் கொடுத்த பணியை இயேசு நிறைவேற்றி முடித்தார்.

இயேசு உலகிலிருந்தபோது கொண்டிருந்த அவருடைய பணி இப்போது நமது பணியாக இருக்கின்றது. ஏனெனில், நாம் அவருடைய சரீரம். ஆவிக்குரிய அவருடைய சரீரமாகிய சபையாக, நாம், அன்று அவர் தமது மாம்ச சரீரத்தில் உலகத்தில் செய்த பணியை, இன்று நாம் தொடருகின்றோம். அந்தப் பணி என்ன? தேவனுக்கு மக்களை அறிமுகம் செய்து வைப்பது! ***"முன்னே பகைவராயிருந்த நம்மைக் கிறிஸ்து, தேவனுடன் ஒப்புரவாக்கி, அந்த ஒப்புரவாக்குதலின் பணியை - பிறரையும் அவருடைய நண்பர்களாக்கும் பணியை நமக்குக் கொடுத்தார்"***[5] என்று வேதம் கூறுகின்றது.

மனிதர்களை, சாத்தானிடமிருந்து மீட்டு, அவர்களைத் தம்முடன் ஒப்புரவாக்கிக்கொள்ள தேவன் விரும்புகின்றார். அதன் மூலம் அவர்

நம்மை உண்டாக்கின ஐந்து நோக்கங்களையும் நிறைவேற்றுகின்றார் – அவரை நேசிக்க, அவருடைய குடும்பத்தில் ஒருவராக இருக்க, அவரைப்போலாக, அவரைச் சேவிக்க, பிறருக்கு அவரைப் பற்றிக் கூற நாம் எப்பொழுது அவருடையவர்களாகின்றோமோ, அப்பொழுதே நாம் பிறரைத் தொடுமாறு, தேவன் நம்மைப் பயன்படுத்துகின்றார். *''நாம் கிறிஸ்துவுக்காகப் பேச அனுப்பப்பட்டவர்கள்''*[6] என்று வேதம் கூறுகின்றது. நாம் தேவனுடைய அன்பு, நோக்கங்களை உலகிற்கு எடுத்துச் செல்லும் தூதுவர்கள்.

உங்கள் பணியின் முக்கியத்துவம்

உலகில் உங்கள் பணியை நிறைவேற்றுவது தேவனுடைய மகிமைக்காக வாழுவதில் ஒரு முக்கிய பகுதி. உங்கள் பணி ஏன் அவ்வளவு முக்கியமானதென்பதற்கு வேதம் அநேக காரணங்களை கூறுகின்றது.

உங்கள் பணி, இயேசுவின் பூலோகப் பணியின் தொடர்ச்சி. அவருடைய தொண்டர்களாக, இயேசு ஆரம்பித்ததை நாம் தொடர வேண்டியவர்கள். இயேசு நம்மைத் தம்மிடம் *வரும்படி* அழைப்பது மட்டுமல்ல; அவருக்காகப் *போகவும்* கூறினார். உங்கள் பணி மிகவும் முக்கியமானதால், இயேசு அதை ஐந்து வெவ்வேறு வழிகளில், வேதத்தின் ஐந்து வெவ்வேறு புத்தகங்களில், ஐந்து முறைகள் கூறியுள்ளார்.[7] அவர், "நீங்கள், இதை *சரியாக, தெளிவாக* புரிந்துகொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்" என்று சொல்லுவது போலிருக்கின்றது. இயேசுவின் இந்த ஐந்து கட்டளைகளையும் கற்றுக்கொண்டால், பூமியில் உங்கள் பணியின் விவரங்களை நீங்கள் அறிந்துகொள்ளுவீர்கள் – எங்கே, எப்போது, எப்படி, ஏன் என்பதையெல்லாம் புரிந்துகொள்ளுவீர்கள். பிரதான கட்டளையில், *"நீங்கள் புறப்பட்டுப்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அவர்களை சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, நான்*

நாள் முப்பத்தாறு:
நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக உண்டாக்கப் பட்டீர்கள்

உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்''[8] என்று இயேசு கூறினார். இந்தக் கட்டளை, இயேசு கிறிஸ்துவின் தொண்டர்கள் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட்டது. போதகர் களுக்கும் மிஷனெரிகளுக்கும் மட்டுமல்ல. இது, இயேசுவிடமிருந்து உங்களுக்குக் கொடுக்கப்பட்ட உங்கள் பணி. நீங்கள் விரும்பினால் மட்டும் செய்யப்பட வேண்டிய ஒன்றல்ல இது. இவை பிரதான ஆலோசனையல்ல, கட்டளை! நீங்கள் தேவனுடைய குடும்பத்தின் ஒரு அங்கமானால் இது உங்கள் மேல் விழுந்த கடமை; அதை அலட்சியப்படுத்துவது கீழ்ப்படியாமையாகும்.

தம்மிடத்தில் வரும்படி மட்டுமல்ல, தமக்காகப் போகும்படியும் இயேசு நம்மை அழைக்கின்றார்.

உங்களைச் சுற்றியுள்ள அவிசுவாசிகளுக்கு நீங்கள்தான் கணக்குக் கொடுக்க வேண்டிய பொறுப்புள்ளவர்களென்பதை நீங்கள் ஒருவேளை உணராமலிருக்கலாம். *"அவர்கள் ஜீவனடையும்படி நீங்கள் அவர்களை எச்சரிக்க வேண்டும். துன்மார்க்கன் எச்சரிப்படையும்படி நீங்கள் பேசாவிட்டால், அவன் தன் பாவத்திலே சாவான்; அவனுடைய இரத்தப் பழியையோ நான் உங்களிடத்தில் கேட்பேன்''*[9] என்று வேதம் கூறுகின்றது. அநேகருக்குத் தெரிந்த ஒரே கிறிஸ்தவன் நீங்களாக மட்டும் இருக்கலாம்; அவர்களுடன் இயேசுவைப் பகிர்ந்து கொள்ளுவது உங்கள் பணி.

உங்கள் பணி ஒரு அற்புதமான சிலாக்கியம். இது ஒரு பெரிய பொறுப்பாக இருந்தாலும் தேவனால் பயன்படுத்தப்படுவது ஒரு நம்ப முடியாத கனத்திற்குரியது. *"ஒவ்வொருவரும் தமது தயவுக்குள் வந்து, அவரோடு ஒப்புரவாகும்படி அவர்களை அழைக்கும் பொறுப்பை தேவன் நமக்கு அளித்திருக்கின்றார்''*[10] என்று பவுல் கூறினார். உங்கள் பணியில் இரு பெரிய உரிமைகள் அடங்கியுள்ளன. தேவனோடு உழைப்பது; தேவனுக்குப் பிரதிநிதியாக இருப்பது. தேவனுடைய இராஜ்ஜியத்தைக் கட்டுவதில் நாம் அவருக்கு உடன் பங்காளிகளாக இருக்கின்றோம். பவுல் நம்மை,

"உடன் வேலையாட்கள்" என்றும், *"நாம் தேவனோடு கூட உடன் வேலையாட்கள்"*[11] என்றும் கூறுகின்றார்.

இயேசு நமது இரட்சிப்பை சம்பாதித்து, நம்மை அவருடைய குடும்பத்தில் வைத்து, தமது ஆவியை நமக்கருளி, அவருடைய பிரதிநிதிகளாக நம்மை இந்த உலகில் வைத்திருக்கின்றார். எத்தனை பெரிய சிலாக்கியம்! *"நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகள். ஆண்களையும், பெண்களையும் தங்கள் வேறுபாடுகளை மறந்து விட்டு, காரியங்களைத் தங்களுக்குள் சரி செய்யும் தேவ பணியை செய்யுமாறு அழைக்க தேவன் நம்மைப் பயன்படுத்துகின்றார்; நாம் இப்போது கிறிஸ்துவுக்காகப் பேசுகின்றோம்: தேவனுக்கு சிநேகிதராகுங்கள்"*[12] என்று வேதம் கூறுகின்றது.

நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளுவதெப்படி என்று பிறருக்குக் கூறுவதுதான் நாம் அவர்களுக்குச் செய்யக்கூடிய மிகப்பெரிய காரியம். உங்கள் அயல் வீட்டாருக்குப் புற்று நோய் அல்லது எய்ட்ஸ் நோய் பீடித்து, உங்களுக்கு அதற்குரிய நிவாரண மருந்து தெரியுமானால், அந்த உயிர் காக்கும் தகவலை நீங்கள் அவர்களுக்குக் கூறாமலிருந்தால் அது கொலைக் குற்றத்திற்கு சமமாகும். மன்னிப்பிற்கும், சமாதானத்திற்கும், நோக்கமுள்ள வாழ்க்கைக்கும், நித்திய ஜீவனுக்கும் போகும் வழியை நாம் இரகசியமாக வைத்துக் கொண்டால் அதைவிட மோசமான செயல் வேறொன்றுமில்லை. நம்மிடமிருப்பது உலகத்திலேயே மிகப் பெரிய செய்தி; அதைப் பகிர்ந்து கொள்ளுவதுதான் நீங்கள் ஒருவருக்குக் காட்டக்கூடிய மிகப் பெரிய தயவு.

நீண்ட நாட்களாகக் கிறிஸ்தவர்களாக இருப்பவர்களுக்கு ஒரு பிரச்சனை – கிறிஸ்து இல்லாத வாழ்க்கை எவ்வளவு நம்பிக்கையற்றது என்பதை அவர்கள் மறந்து விடுகின்றார்கள். எவ்வளவோ வெற்றியும், நிறைவுமான வாழ்க்கை வாழ்வதாக மக்கள் காணப்பட்டாலும், கிறிஸ்து இல்லாவிட்டால் அவர்கள் நம்பிக்கையற்றவர்கள்; தேவனிடமிருந்து நித்தியமாகப் பிரிக்கப்பட வேண்டியவர்கள். *"மனிதரை இரட்சிக்கக்கூடியவர் இயேசு கிறிஸ்து ஒருவரே"*[13] என்று வேதம் கூறுகின்றது. இயேசு அனைவருக்கும் தேவை.

உங்கள் பணி நித்திய முக்கியத்துவம் கொண்டது. இது மக்களின் நித்திய நிலையைப் பாதிக்கக்கூடியது; ஆகவே, இது எந்தவொரு வேலை, சாதனை அல்லது உங்கள் வாழ்க்கையில் அடையக்கூடிய இலக்கு என்பதையெல்லாம் விட மிக முக்கியமானது; உங்கள் வேலையின் பயன்கள், விளைவுகள் என்றென்றும் நிற்காது. ஆனால், உங்கள் பணியின் (மிஷன்) விளைவு என்றும் நிற்கும். மக்களுக்கு தேவனோடு நித்திய உறவை ஏற்படுத்த உதவும் ஒன்றைப்போல, நீங்கள் செய்யும் வேறெந்தக் காரியமும் அவ்வளவு பிரயோஜனமுள்ளதாக இருக்காது.

அதனால்தான், நாம் நமது பணியைப் பற்றித் தீவிரமாக இருக்க வேண்டும். *"ஒருவனும் கிரியை செய்யக்கூடாத இராக்காலம் வருகின்றது; என்னை அனுப்பினவரின் கிரியைகளை நாம் விரைந்து, நமக்கு நியமித்த பணியின்படி தீவிரித்து செயல்பட வேண்டும்"*[14] என்று இயேசு கூறினார். உங்கள் வாழ்க்கைப் பணியின் நேரம் குறைந்து கொண்டே வருகின்றது. இன்னொரு நாள் தாமதிக்க வேண்டாம். பிறரைத் தொடும் ஊழியத்தை இப்போதே ஆரம்பியுங்கள்! நாம் இயேசுவண்டை கொண்டு வந்தவர்களுடன் கொண்டாட நித்திய நித்திய காலமாக நேரம் இருக்கின்றது. ஆனால், அவர்களைச் சந்திக்க, நமது வாழ்நாள் மட்டுமே நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பிரதான கட்டளை இயேசுவின் ஒவ்வொரு சீஷனுக்கும் (தொண்டனுக்கும்) உரியது.

இதற்காக, நாம் நமது வேலையை விட்டுவிட்டு, முழுநேர சுவிசேஷகராக மாற வேண்டுமென்பதில்லை; நீங்களிருக்கின்ற இடத்தில் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். ஒரு மாணவனாக, தாயாக, பள்ளி ஆசிரியராக, விற்பனையாளராக அல்லது எதைச் செய்பவராக நீங்களிருந்தாலும், உங்கள் பாதையில் தேவன் வைக்கும் ஒவ்வொருவரையும் நீங்கள் கவனித்துப் பார்த்து சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளவேண்டும்.

உங்கள் பணி உங்கள் வாழ்க்கைக்கு அர்த்தம் தருகின்றது. "உங்கள் வாழ்க்கைக்குப் பின்னரும் நிலைக்கக்கூடிய ஏதாவது ஒன்றிற்காக வாழ்க்கையை நீங்கள் செலவழிப்பதுதான், வாழ்க்கையை மிகச்சிறந்த முறையில் பயன்படுத்துவதாகும்" என்று வில்லியம் ஜேம்ஸ் கூறினார். உண்மையில், தேவனுடைய ராஜ்ஜியம் ***ஒன்று மட்டுமே*** நிலைக்கும். ***மீதியனைத்தும்*** நாளடைவில் அழிந்து போகும். அதனால்தான், நாம் நோக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ வேண்டும். ஆகவேதான், ஆராதனை, ஐக்கியம், ஆவிக்குரிய வளர்ச்சி, ஊழியம், பூமியில் நமது பணியை நிறைவேற்றுதல் ஆகியவற்றிற்கு அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டும். இந்தக் காரியங்களின் பலன்கள், என்றென்றும் நிலைத்திருக்கும்!

தேவன் கொடுத்த பூலோகப் பணியை நீங்கள் நிறைவேற்றத் தவறினால், தேவன் உங்களுக்குக் கொடுத்த வாழ்க்கையை வீணாக்கியிருக்கின்றீர்கள். ***"கர்த்தராகிய இயேசு, எனக்கு நியமித்த பணியைச் செய்தாலொழிய என் வாழ்க்கை பயனற்றது - தேவனுடைய தயவு, அவருடைய அன்பின் நற்செய்தியைப் பிறருக்கு அறிவிக்கும் பணி"***[15] என்று பவுல் கூறினார். நீங்கள் மட்டுமே சந்திக்கக் கூடிய மக்கள் இந்தப் பூமியில் உண்டு; அதற்காகவே தேவன் உங்களை அங்கு வசிக்கவும், நீங்கள் இப்போது இருக்கின்றபடி இருக்கவும் வைத்திருக்கின்றார். உங்கள் மூலம் ஒரே ஒரு நபர் பரலோகத்தில் இருக்கக்கூடுமானால், உங்கள் வாழ்க்கை நித்தியத்திற்காக ஒரு மாறுதலை உண்டாக்கிவிட்டது. உங்கள் தனிப்பட்ட பணித்தளத்தைச் சுற்றிப் பார்த்து ஜெபியுங்கள்: "இயேசுவைப் பற்றிக்கூற, தேவனே, யாரை என் வாழ்க்கையில் அனுமதித்திருக்கின்றீர்."

வரலாற்றின் முடிவுக்கான தேவனுடைய கால அட்டவணை நமது பணியின் முடிவுடன் தொடர்பு கொண்டது. இன்றைய நாட்களில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை, உலகத்தின் முடிவு, ஆகிய இவற்றில் மக்களிடையே ஆர்வம் பெருகியுள்ளது. அது எப்பொழுது நடக்கும்? இயேசு பரத்திற்கு ஏறும் சற்று முன்னர், சீஷர்கள் அவரிடம் இதே கேள்வியைக் கேட்டார்கள். அவர் கூறிய பதில், அநேக காரியங்களை வெளிப்படுத்துவதாக இருந்தது. ***"பிதாவானவர் தம்முடைய ஆதீனத்தில் வைத்திருக்கின்ற***

காலங்களையும், வேளைகளையும் அறிகின்றது உங்களுக்கு அடுத்ததல்ல; பரிசுத்த ஆவி உங்கள் மீது வரும்போது நீங்கள் பெலனடைவீர்கள். எருசலேமிலும், யூதேயாவிலும், சமாரியா எங்கும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்."[16]

தீர்க்கதரிசனத்தைக் குறித்து சீஷர்கள் பேச ஆசைப்பட்டபோது, இயேசு சட்டென்று சம்பாஷணையை சுவிசேஷ பணிக்கு திருப்பி விட்டார். அவர்கள் உலகில் தங்களுக்களிக்கப்பட்ட பணியில் கவனம் செலுத்த வேண்டுமென்று அவர் விரும்பினார். மொத்தத்தில் அவர் கூறியது, *"நான் திரும்பி வருவதைக் குறித்த விவரங்கள் அறிவது உங்கள் காரியமல்ல; நான் உங்களுக்குக் கொடுத்த பணிதான் உங்கள் காரியம். அதன்மீது கவனம் வையுங்கள்."*[17]

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் சரியான நேரத்தைக் கணக்கிட முயற்சிப்பது பலனற்றது. ஏனெனில், "பிதா தவிர வேறொருவரும் அவர் வரும் நாளையும், நாழிகையையும் அறிய மாட்டார், பரலோகத்திலுள்ள தூதர்களும், குமாரனும்கூட அதை அறியார்" என்று இயேசு கூறினார். இயேசு கூடத் தமக்குத் தெரியாதெனக் கூறும் நாளையும், நாழிகையும் நீங்கள் ஏன் கணக்கிட முயலவேண்டும்?

நீங்கள் உங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுவதைத் தவிர வேறெதையும் செய்யும்படி சாத்தான் உங்களை விட்டு விடுவானாகையால், நீங்கள் கவனம் சிதறி, திசை திரும்பிப் போவது எளிது.

நமக்கு நிச்சயமாகத் தெரிந்தது ஒன்றே ஒன்றுதான். தேவன் விரும்புகின்ற அனைவரும் நற்செய்தியைக் கேட்கும் வரை, இயேசு திரும்பி வரமாட்டார். *"தேவனுடைய ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் சர்வ சிருஷ்டிக்கும் உலகமெங்கும் பிரசங்கிக்கப்படும். அப்பொழுது முடிவு வரும்"*[18] என்று இயேசு கூறினார். இயேசு சீக்கிரம் வரவேண்டுமென்று நீங்கள் விரும்பினால், தீர்க்கதரிசனத்தைக் கணக்குப் பண்ணிக் காலத்தைக் கழிக்காமல், உங்கள் பணியை நிறைவேற்றுவதில் கருத்தை செலுத்துங்கள்.

உங்கள் பாதையை விட்டுக் கவனம் சிதறி நீங்கள் திசைமாறிப் போவது எளிதாக நடக்கக்கூடியது; ஏனெனில், உங்கள் விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்ளுவதைத் தவிர, வேறெதையும் செய்ய சாத்தான் உங்களுக்கு இடமளிப்பான். நீங்கள் பரலோகத்திற்கு உங்களுடன் ஒரு ஆத்துமாவைக் கூடக் கொண்டுபோக முயற்சிக்காமல், எத்தனை விதமான நன்மையான காரியங்களையும் செய்ய சாத்தான் தாராளமாக விட்டு விடுவான். உங்கள் பணியைக் குறித்து நீங்கள் தீவிரப்பட்டவுடன்தானே, எல்லாவித திசை திருப்புதல்களையும் பிசாசு உங்கள் மீது எறிவதை எதிர்பாருங்கள். அது நடக்கும்போது, இயேசு கூறிய வார்த்தைகளை நினைவுகூருங்கள். *"கலப்பையின் மேல் கையை வைத்துவிட்டுப் பின்னிட்டுத் திரும்பிப் பார்க்கின்றவன் எவனும் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குத் தகுதியானவன் அல்ல."*[19]

உங்கள் பணியை நிறைவேற்ற என்ன கிரயம் தேவைப்படும்?

உங்கள் வாழ்க்கைத் திட்டத்தைக் கைவிட்டுவிட்டு, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய திட்டத்தை நீங்கள் நிறைவேற்றினால்தான் உங்கள் பணியை நீங்கள் நிறைவு செய்ய முடியும். வாழ்க்கையில் நீங்கள் செய்ய விரும்பும் மற்றக் காரியங்களுடன் கூட இதுவும் ஒன்று என்று வெறுமையாகவும், வேண்டா வெறுப்பாகவும் அதைச் சேர்க்கக் கூடாது. இயேசுவைப் போல நீங்களும், ***"பிதாவே... என் சித்தமல்ல, உம் சித்தம் ஆகக்கடவது"***[20] என்று கூற வேண்டும். உங்கள் உரிமைகள், எதிர்பார்ப்புகள், கனவுகள், திட்டங்கள், ஆவல்கள் அனைத்தையும் அவருக்கு விட்டுக் கொடுத்து விட வேண்டும். தன்னலமான, "நான் செய்ய விரும்புவதை நீர் ஆசீர்வதியும்" என்ற ஜெபத்தை ஏறெடுப்பதை நிறுத்தி விட்டு, "நீர் எதை ஆசீர்வதிக்கின்றீரோ அதைச் செய்ய, தேவனே, எனக்கு உதவி செய்யும்!" என்று ஜெபியுங்கள். தேவனிடம், உங்கள் பெயர் மட்டும் கையொப்பமிடப்பட்ட வெறும் காசோலையைக் கொடுத்து, அவரையே எல்லாவற்றையும் நிரப்பிக் கொள்ளச் சொல்லுங்கள். ***"உங்களை முற்றிலும் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள் - ஒவ்வொரு பகுதியையும்... தேவனுடைய திட்டங்களுக்குப் பயன்படும்படி,***

அவருடைய கரத்தின் கருவிகளாக ஒப்புக் கொடுங்கள்”[21] என்று வேதம் கூறுகின்றது.

என்ன நடந்தாலும் பரவாயில்லையென்று, வாழ்க்கையில் உங்கள் பணியை நிறைவேற்ற நீங்கள் உங்களை அர்ப்பணித்தால், அநேக மக்கள் அனுபவித்திராத ஆசீர்வாதங்களை நீங்கள் அனுபவிக்க முடியும். தேவனுடைய ராஜ்ஜியத்தில் சேவை செய்யும் ஆண் அல்லது பெண்ணுக்குத் தேவன் செய்யக்கூடாதது என்று ஒன்றுமே இல்லை. *“தேவனுடைய ராஜ்ஜியத்தை உங்கள் முதல் கரிசனையாகக் கொண்டு, அவருக்காக வாழ்ந்தால், (தேவன்) உங்கள் அன்றாடத் தேவையைச் சந்திப்பார்”*[22] என்று இயேசு வாக்களித்தார்.

இயேசுவுக்காக இன்னுமொருவர்

என் தந்தை 50 ஆண்டுகளுக்கு மேலாக, பெரும்பாலும் சிறிய, கிராம சபைகளில் குருவானவராகப் பணிபுரிந்து வந்தார். அவர் ஒரு எளிய பிரசங்கியார்; ஆனால், அவர் ஒரு பணியைக் கொண்ட மனிதர். தன்னார்வத் தொண்டர் குழு ஒன்றைக் கூட்டிக் கொண்டு, கடல் கடந்து சென்று சிறிய சபைகளுக்கு சபைக் கட்டிடத்தைக் கட்டிக் கொடுப்பது அவர் வழக்கம். அவருடைய வாழ்நாளில், என் தகப்பனார் 150 சபை கட்டிடங்களுக்கு மேலாகக் கட்டியிருக்கின்றார்.

1999ல் என் தகப்பனார் புற்றுநோயால் காலமானார். அவருடைய வாழ்க்கையின் இறுதி நாட்களில், ஒரு நாளைக்கு இருபத்து நான்கு மணி நேரமும் அந்த வியாதி அவரைத் தூங்கவிடவில்லை. அரை மயக்க நிலையிலேயே அவர் இருந்தார். அவருடைய படுக்கையருகில், அவர் கனவுகளையெல்லாம் அவர் கூறிக் கொண்டேயிருந்ததைக் கேட்டு, என் தகப்பனாரைப் பற்றி நான் ஏராளமான காரியங்களை அறிந்து கொண்டேன். அவர் செய்த கட்டிடத் திட்டங்களையெல்லாம் ஒவ்வொன்றொன்றாக அவர் கூறிக் கொண்டேயிருந்தார்.

ஒரு நாள், முடிவு நெருங்கும்போது, என் மனைவியும், என் உறவின பெண், நான் மூவரும் அவருடைய படுக்கையருகில் அமர்ந்திருக்கும்போது, எனது தகப்பனார் திடீரென்று மிகவும்

சுறுசுறுப்பாகி, படுக்கையை விட்டு எழும்ப முற்பட்டார். அவர் மிகவும் பலவீனமாக இருந்தார்; என் மனைவி அவரைப் படுத்துக் கொள்ளுமாறு வற்புறுத்தினாள். ஆனால், அவர் மீண்டும் முயற்சி செய்து கொண்டேயிருந்தார்; இறுதியில் என் மனைவி ''ஜிம்மி, என்ன செய்ய முயற்சிக்கின்றீர்கள்?'' என்று கேட்டாள். "இயேசுவுக்காக இன்னொருவரை இரட்சிக்க வேண்டும்! இன்னும் ஒருவர் இயேசுவுக்காக! இன்னும் ஒருவர் இயேசுவுக்காக! இன்னொரு நபர் இயேசுவுக்காக!" என்று அவர் பதில் கூறினார். இதை இவர் விடாமல் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டேயிருந்தார்.



அடுத்த ஒரு மணி நேரத்தில், கிட்டத்தட்ட ஒரு நூறு முறை இதைக் கூறினார். ''இயேசுவுக்காக இன்னொருவரைக் கொண்டு வரவேண்டும்!'' கண்ணீர் கண்களில் வழிந்தோட, அவர் படுக்கையருகில் நான் உட்கார்ந்திருந்தபோது என் தகப்பனாரின் விசுவாசத்திற்காக நான் தலைவணங்கி தேவனைத் துதித்தேன். அந்த வினாடியில் அப்பா கைகளை நீட்டி தனது மெலிந்த கரங்களை என் தலைமீது வைத்து, என்னை ஒரு பணிக்கு அர்ப்பணிப்பதுபோல, 'இன்னுமொரு நபர் இயேசுவுக்காக! இன்னுமொரு நபர் இயேசுவுக்காக!" என்று கூறினார்.

இதுவே, என் வாழ்க்கையின் கருப்பொருளாக இருக்க வேண்டுமென்று நான் தீர்மானித்து விட்டேன். இதையே உங்கள் வாழ்க்கையின் கருத்தொருமித்த நோக்கமாகக் கொள்ளுமாறு உங்களையும் அழைக்கின்றேன்; ஏனென்றால், வேறொன்றும் நித்தியத்திற்கான மாறுதலை உண்டுபண்ணாது. நீங்கள் தேவனால் பயன்படுத்தப்பட விரும்பினால், தேவன் எதைக் குறித்துக் கரிசனை கொள்ளுகின்றாரோ அதைக் குறித்தே நீங்களும் கரிசனை கொள்ள வேண்டும். அவர் உண்டாக்கின மனிதரின் மீட்பைக் குறித்தே அவர் முக்கியமாகக் கரிசனை கொள்ளுகின்றார். காணாமற்போன தமது பிள்ளைகள் கண்டுபிடிக்கப்படுவதையே அவர் விரும்புகின்றார்! வேறு எதுவும் தேவனுக்கு ஒரு பொருட்டல்ல; சிலுவை அதை நிரூபிக்கின்றது. நீங்களும் எப்போதும் 'இயேசுவுக்காக இன்னொருவர்!' என்ற கண்ணோட்டத்திலேயே

தேடும்படி உங்களைக் கேட்கின்றேன்; அதற்காக ஜெபிக்கின்றேன். ஒரு நாளில் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது நீங்கள் அப்போதுதான், 'பணி நிறைவேற்றி முடிந்தது!' எனக் கூற முடியும்.

நாள் முப்பத்தாறு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: நான் ஒரு பணிக்காக உருவாக்கப்பட்டேன்.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள். இதோ, உலகத்தின் முடிவுபரியந்தமும், சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கின்றேன்."* மத்தேயு 28:19, 20 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: நான் நிறைவேற்றும்படி தேவன் எனக்களித்த பணியை நிறைவேற்றாமல் என்னைத் தடுத்த பயங்கள் எவை? பிறருக்கு நற்செய்தி கூறாமல் என்னைத் தடுப்பது எது?

37

உங்கள் வாழ்க்கையின் செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்

தேவனுடைய குமாரனை விசுவாசிக்கின்றவர்கள் அந்த சாட்சியைத் தங்களுக்குள்ளே கொண்டிருக்கின்றார்கள்.
1 யோவான் 5:10 (புதிய மொழியாக்கம்)

எஜமானுடைய வார்த்தை உங்கள் வாழ்க்கையில் தொனித்துக் கொண்டிருக்கின்றது... நீங்கள் தேவனிடத்தில் வைத்திருக்கும் விசுவாசம் பிரசித்தி பெற்றுவிட்டது. நாங்கள் போய் எதுவும் இனி சொல்ல வேண்டியதே இல்லை - நீங்களே தேவ செய்தி!
1 தெசலோனிக்கேயர் 1:8 (புதிய மொழியாக்கம்)

நீங்கள் பகிர்ந்து கொள்ளக்கூடியதொரு வாழ்க்கை செய்தியை தேவன் உங்களுக்கு அருளியிருக்கின்றார்.

நீங்கள் விசுவாசிகளானபோது, நீங்கள் தேவனுடைய செய்தியை கொண்டு செல்லும் தூதுவர்களானீர்கள். தேவன் உங்கள் மூலம் உலகத்தாருடன் பேச விரும்புகின்றார். *"நாங்கள் தேவனுடைய தூதுவர்களாக, அவருக்கு முன்பாக சத்தியத்தைப் பேசுகின்றோம்"*[1] என்று பவுல் கூறுகின்றார்.

பகிர்ந்துகொள்ள என்னிடம் என்ன இருக்கின்றதென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால், உங்களைப் பேசவிடாமல் தடுக்க முயலும் சாத்தானின் முயற்சி அது. உங்கள் அனுபவங்கள் உங்களுக்குள்ளேயே, பண்டகசாலையில் வைக்கப்பட்டுள்ள பொருட்களைப்போல பத்திரப்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பகிர்ந்து கொள்ளுங்கள். *"தேவனுடைய குமாரனை*

விசுவாசிக்கின்றவர்களில் தேவனுடைய சாட்சி இருக்கின்றது"[2] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் வாழ்க்கை செய்தியில் நான்கு பகுதிகள் இருக்கின்றன.

- உங்கள் *சாட்சி*: இயேசுவுடன் நீங்கள் எப்படி உங்கள் உறவை ஆரம்பித்தீர்களென்ற சம்பவம்
- உங்கள் *வாழ்க்கைப் பாடங்கள்*: தேவன் உங்களுக்குக் கற்றுக் கொடுத்திருக்கும் முக்கிய பாடங்கள்
- *தேவனுக்கேற்ற உங்கள் ஆசைகள்*: நீங்கள் அக்கறை கொள்ளும்படி, உங்களுக்குள் தேவன் செய்த கிரியைகள்.
- *நற்செய்தி*: இரட்சிப்பின் செய்தி

உங்கள் வாழ்க்கை செய்தியில், உங்கள் சாட்சி அடங்கியிருக்கின்றது. கிறிஸ்து உங்கள் வாழ்க்கையில் எப்படியொரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளாரென்பதைக் கூறுவதுதான் உங்கள் சாட்சி. *"அவர் பகல் - இரவுபோல உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றத்தைப் பிறருக்குக் கூறுவது, அவருடைய பணியைச் செய்து, அவருக்காகப் பேசுவது"*[3] — இதற்காகவே, தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டோமென்று பேருது கூறுகின்றார். சாட்சி கூறுவதன் சாராம்சம் இதுதான் — கர்த்தரைப் பற்றிய உங்கள் அனுபவத்தை அப்படியே பகிர்ந்து கொள்ளுவது. நீதிமன்றத்தில், சாட்சி, அந்த வழக்குக்காக வாதாடும்படி கேட்டுக் கொள்ளப்படுவதில்லை; வழக்கின் உண்மையை நிலைநிறுத்தத் தேவையில்லை; ஒரு தீர்ப்புக்காக அழுத்தம் கொடுக்க வேண்டியதுமில்லை. அதெல்லாம் வழக்கறிஞர்களின் வேலை. தாங்கள் பார்த்து அல்லது தங்களுக்கு நடந்த காரியத்தை அப்படியே பகிர்ந்து கொள்ளுவது தான் சாட்சியின் வேலை. *''நீங்கள் எனக்கு சாட்சிகளா யிருப்பீர்கள்''*[4] என்று இயேசு கூறினாரே தவிர, ''நீங்கள் எனக்கு வக்கீல்களாயிருப்பீர்கள்''

பகிர்ந்து கொள்ளப்படும் சம்பவங்கள், இயேசு உங்கள் இருதயத்திலிருந்து கேட்பவர் உள்ளத்திற்குள் கடந்து செல்ல தொடர்பு ஏற்படுத்தும் பாலங்கள் போன்றவை.

என்று கூறவில்லை. உங்கள் கதையை நீங்கள் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகின்றார். உங்கள் சாட்சியைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுவது உங்கள் பூலோகப் பணியின் முக்கிய பகுதி. ஏனெனில், அது தனிச்சிறப்பு வாய்ந்தது; உங்கள் கதையைப் போலவே வேறொரு கதை இருக்காது; ஆகவே, நீங்கள் மட்டுமே அதைப் பகிர்ந்து கொள்ளக்கூடும். நீங்கள் செய்யத் தவறினால்; அது அப்படியே மறைந்து போகும். நீங்கள் வேத பண்டிதராயில்லாமலிருக்கலாம்; ஆனால், உங்கள் வாழ்க்கைக்கு அதிகாரி; மட்டுமல்ல, உங்கள் சொந்த அனுபவத்திற்கு எதிராகத் தர்க்கம் புரிவது கடினம். ஒரு பிரசங்கத்தைவிட, உண்மையில் வலிமையானது உங்கள் சொந்த அனுபவம்தான்; ஏனெனில், அவிசுவாசிகள், ஒரு சபை மேய்ப்பரை, ஒரு விற்பனையாளராகத் தான் காண்பார்கள். உங்களையோ, ‘‘திருப்தியடைந்த வாடிக்கையாளராகக்’’ காண்பார்கள். ஆகவே, உங்களுக்குக் கூடுதலான நம்பிக்கையளிப்பார்கள்.

கொள்கைகளைவிட, தனிப்பட்ட சொந்தக் கதைகளைக் கூறுவதுதான் எளிது. மக்களும் அதைக் கேட்க ஆர்வமாயிருப்பார்கள். அவை நமது கவனத்தைக் கவருகின்றன; அவற்றை நீண்ட நேரம் நினைவில் வைப்போம். அவிசுவாசிகள், நீங்கள் மேற்கோள்காட்டிப் பிரசங்கித்தால் ஆர்வமிழந்து விடுவார்கள்; ஆனால், அவர்களுக்குக் கிடைக்காத அனுபவங்களைக் குறித்துக் கேட்க, இயற்கையான ஒரு உணர்வு அவர்களைத் தூண்டும். பகிர்ந்துகொள்ளப்பட்ட அனுபவங்கள், உங்கள் இருதயத்திலிருந்து கேட்பவர் இருதயத்திற்குள் இயேசு கடந்து செல்ல உதவும் பாலமாகும்.

உங்கள் சாட்சியின் இன்னொரு மதிப்பு – அது அறிவுபூர்வமானத் தடைகளை அலட்சியப்படுத்திக் கடந்து செல்ல உதவும். வேதாகமத்தின் அதிகாரபூர்வ காரியங்களை ஒத்துக்கொள்ள மறுக்கும் அநேகர், தாழ்மையான, தனிப்பட்ட நபரின் சொந்தக் கதைக்கு செவி சாய்ப்பர்; அதனால்தான், பவுல், ஆறு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேத வசன மேற்கோள் கூறிப் பேசுவதைத் தவிர்த்து, தனது சொந்த சாட்சியை பயன்படுத்தினார்.[5]

நாள் முப்பத்தேழு: உங்கள் வாழ்க்கையின் செய்தியைப் பகிர்ந்து கொள்ளுதல்

"உங்களிடத்திலிருக்கும் நம்பிக்கையைக் குறித்துக் கேட்பவர்களுக்கு உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்; ஆனால், அதை சாந்தத்தோடும், வணக்கத்தோடும் செய்யுங்கள்"[6] என்று வேதம் கூறுகின்றது. ஆயத்தமாயிருக்க வேண்டிய சிறந்த வழி, உங்கள் சாட்சியை எழுதி அதை மனப்பாடமாக்கிக் கொள்ளுங்கள். அதை நான்கு பகுதிகளாகப் பிரியுங்கள்.

1. நான் இயேசுவை சந்திக்குமுன் என் வாழ்க்கை எப்படி இருந்தது
2. இயேசு தேவை என்பதை நான் எப்படி உணர்ந்தேன்
3. எப்படி என் வாழ்க்கையை இயேசுவுக்கு ஒப்புக் கொடுத்தேன்
4. இயேசு என் வாழ்க்கையில் ஏற்படுத்தியிருக்கும் மாற்றம்

உங்கள் இரட்சிப்பின் அனுபவம் தவிர வேறு பல சாட்சிகளும் உங்களுக்கு இருக்கும். தேவன் உங்களுக்கு உதவிய **ஒவ்வொரு** அனுபவமும் ஒரு சாட்சிதான். பிரச்சனைகள், ஆபத்தான சூழ்நிலைகள் அவற்றிலிருந்து தேவன் உங்களை வெளியே கொண்டு வந்த அனுபவங்கள் ஆகியவற்றை நீங்கள் ஒரு பட்டியலாக வைத்துக் கொள்ளவேண்டும். உங்கள் அவிசுவாச சிநேகிதன் உள்ளத்தைத் தொடக்கூடிய அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள். வெவ்வேறு சந்தர்ப்பங்களுக்கு வெவ்வேறு சாட்சிகள் தேவைப்படும்.

உங்கள் வாழ்க்கை செய்தியில், உங்கள் வாழ்க்கைப் பாடங்கள் உள்ளடங்கியிருக்கும். உங்கள் வாழ்க்கை செய்தியின் இரண்டாவது பாகம், தேவனோடுள்ள உங்கள் அனுபவம் மற்றும் அவர் உங்களுக்குக் கற்றுக் கொடுத்த சத்தியங்கள். இவை தேவனைப் பற்றி நீங்கள் கற்றுக்கொண்ட ஆழ்ந்த சத்தியங்கள் மற்றும் பாடங்கள், உறவுகள், பிரச்சனைகள், சோதனைகள் மற்றும் வாழ்க்கையின் மற்ற அம்சங்கள் அடங்கியவை. ***"தேவனே, நான்***

வாழவேண்டியதற்கேற்றவற்றை எனக்குப் போதியும்"[7] என்று தாவீது ஜெபித்தார். நமக்கு நேரிடும் அநேக காரியங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவற்றைக் கற்றுக் கொள்ளாமலிருப்பது துக்கமான காரியம். ***"தேவன் மீண்டும் மீண்டும் அவர்களைக் காப்பாற்றினார், ஆனால், இறுதியாகத் தங்கள் பாவங்களிலே அழியும்வரை, அவர்கள் ஒன்றையும் கற்றுக் கொள்ளவில்லை"***[8] என்று இஸ்ரவேலரைப் பற்றி வேதம் கூறுகின்றது. இப்படிப்பட்ட மக்களை நீங்கள் ஒருவேளை சந்தித்திருப்பீர்கள்.

அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளுவது ஞானமான காரியமாக இருந்தாலும், பிறருடைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளுவது அதைவிட ஞானமானது. கற்றுக்கொள்ள வேண்டிய அனைத்தையும் சரியா, தவறா என்று செய்து பார்த்துக் கற்றுக் கொள்ளுவதற்குக் காலம் போதாது. ஆகவே, ஒருவருடைய வாழ்க்கைப் பாடங்களை மற்றொருவர் என்ற ரீதியில் கற்றுக் கொள்ளவேண்டும். ***"கேட்கிறதற்குக் காதுள்ளவனுக்கு அனுபவப்பட்ட ஒருவர் கொடுக்கும் எச்சரிப்பின் சத்தம், சுத்தப் பொன்னாலான ஆபரணத்துக்கு சமம்"***[9] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கற்றுக் கொண்ட மிகப் பெரிய பாடங்கள் என்ன என்பதை எழுதி அவற்றைப் பிறருடன் பகிர்ந்து கொள்ளுமாறு வைத்துக் கொள்ளுங்கள். சாலொமோன் இதைச் செய்ததற்காக நாம் நன்றியுடன் இருக்க வேண்டும். அவைதான் நீதிமொழிகள், பிரசங்கி என்ற புத்தகங்களாக இருக்கின்றன. அவற்றில் நடைமுறைக்கேற்ற பாடங்கள் நிரம்பியுள்ளன. ஒவ்வொருவரும், பிறருடைய வாழ்க்கையிலிருந்து அவர்கள் கற்ற பாடங்களை கற்றுக் கொண்டால், எவ்வளவு மனநொறுக்குதல்களைத் தவிர்த்திருக்க முடியுமென்று

அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளுவது ஞானமான காரியமாக இருந்தபோதிலும், பிறருடைய அனுபவங்களிலிருந்து கற்றுக் கொள்ளுவது அதைவிட ஞானமானது.

கற்பனை செய்து பாருங்கள். முதிர்ச்சியடைந்த மக்கள், அன்றாட அனுபவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக்கொள்ளும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ளுகின்றார்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் கற்றுக் கொண்ட பாடங்களை ஒரு பட்டியலிடுமாறு உங்களை அன்பாகக் கேட்கின்றேன். அவற்றை எழுதிப் பார்த்தாலொழிய நீங்கள் அவற்றை அதிகமாக எண்ணிப் பார்த்திருக்கமாட்டீர்கள். கீழே சில கேள்விகள், உங்கள் ஞாபகத்தைத் தூண்டியெழுப்பி ஆரம்பிக்கும்படி தரப்பட்டுள்ளன:[10]

- தோல்வியிலிருந்து தேவன் எனக்கு என்ன கற்றுக் கொடுத்திருக்கின்றார்?
- பணப் பற்றாக்குறையிலிருந்து தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்த பாடமென்ன?
- வேதனை, துயரம் அல்லது மனச் சோர்விலிருந்து தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்தது என்ன?
- காத்திருப்பதைக் கொண்டு தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்தது என்ன?
- வியாதி மூலம் தேவன் எனக்குக் என்ன கற்றுக் கொடுத்திருக்கின்றார்?
- ஏமாற்றத்தின் மூலம் தேவன் எனக்குக் கற்றுக் கொடுத்ததென்ன?
- என் குடும்பம், சபை, உறவுகள், சிறு குழு, என்னில் குற்றம் கண்டுபிடிக்கின்றவர்கள் இவைகளிலிருந்து நான் கற்றுக் கொண்டதென்ன?

உங்கள் வாழ்க்கை செய்தியில், தேவனுக்கேற்ற உங்கள் தீவிர தாகத்தைப் பகிர்ந்து கொள்ளுவது உள்ளடங்கும். தேவன் தீவிரப் பற்றுள்ளவர்; அவர் சில காரியங்களைத் தீவிர *அன்புடன்* நேசிக்கின்றார்; சில காரியங்களைத் தீவிர *வெறுப்புடன்* வெறுக்கின்றார். நீங்கள் அவரிடத்தில் நெருங்கிச் சேரும்போது, அவர் ஆழமாக நேசிக்கும் காரியங்களைப் பற்றி நீங்களும் தீவிர ஆர்வம் கொள்ளச்செய்வார்; அவருக்காகப் பேசும் நபராக நீங்கள் உலகில் மாறி விடுவீர்கள். அது ஒரு பிரச்சனை, ஒரு நோக்கம்,

ஒரு கொள்கை அல்லது ஒரு மக்கள் கூட்டத்தை பற்றிய ஒரு உள்ளுணர்வாக இருக்கலாம். அது எதுவாக இருந்தாலும், அதைப் பற்றிப் பேச நீங்கள் கட்டாயப்படுத்தப்படுவீர்கள்; ஒரு வேறுபாடு கொண்டு வர உங்களாலானதைச் செய்வீர்கள்.

நீங்கள் எதைக் குறித்து மிக அதிகமாக நேசிக்கின்றீர்களோ அதைக் குறித்துப் பேசாமலிருக்க உங்களால் கூடாது. ***"மனுஷனுடைய இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்"***[11] என்று இயேசு கூறினார். இதற்கு இரு உதாரணங்கள்: தாவீதும், எரேமியாவும். ***"தேவனையும், அவருடைய வேலையையும் பற்றிய ஆர்வம் எனக்குள் பற்றி எரிகின்றது"***[12] என்று தாவீது கூறினார். ***"உமது செய்திகள் என் இருதயத்திலும், எலும்புகளிலும் பற்றியெரிகின்றது. நான் அமர்ந்திருக்கக் முடியவில்லை"***[13] என்று எரேமியா கூறினார்.

சில மக்களுக்கு சில காரியத்தை எடுத்து நடத்தும்படி தேவனுக்கேற்ற ஒரு தீவிர ஆர்வத்தைத் தேவன் கொடுக்கின்றார். இது அநேகமாக அவர்கள் தனிப்பட்ட விதத்தில் அனுபவிக்கும் ஒரு தவறான பழக்கம், கெட்ட காரியத்திற்கு அடிமைத்தனம், மனச் சோர்வு, ஒரு நோய், கனியற்ற தன்மை அல்லது வேறு ஏதாவதொரு கஷ்டமாக இருக்கலாம். சில சமயங்களில், தங்களுக்காகப் பேச முடியாத ஒரு குழுவினருக்காகப் பேசும் ஒரு தீவிர ஆர்வத்தைத் தேவனருளுகின்றார். துன்புறுத்தப்படுவோர், தரித்திரர், சிறைப்பட்டோர், தவறாக நடத்தப்படுபவர்கள், பெரிய அனுகூலமற்றவர்கள், நியாயம் மறுக்கப்பட்டவர்கள் போன்றவர்களுக்காகப் பேச வைப்பார். தங்களைக் காத்துக் கொள்ளக் கூடாதவர்களைக் காக்கும்படியான கட்டளைகளால் வேதம் நிரம்பி நிற்கின்றது.

தீவிரப் பற்றுள்ள மக்களைக் கொண்டு தேவன் தமது இராஜ்ஜியத்தை விருத்தி செய்கின்றார். புதிய சபைகள் ஆரம்பிக்க, குடும்பங்களை உறுதிப்படுத்த, வேதாகம மொழிபெயர்ப்புகளுக்கு நிதியுதவி செய்ய அல்லது கிறிஸ்தவத் தலைவர்களைப் பயிற்சி செய்ய இப்படிபட்ட ஏதாவது ஒன்றைக் குறித்த ஒரு தீவிரப் பற்றை உங்களுக்கு அவர் தரலாம். ஒரு குறிப்பிட்ட குழுவினருக்கு சுவிசேஷம் கூறி அவர்களுடன் இடைபட தேவன் ஆர்வம் தரலாம்.

தொழிலதிபர், வாலிபப் பருவத்தினர், அயல் நாட்டு மாணவர், இளம் தாய்மார் அல்லது குறிப்பிட்ட ஒரு பொழுதுபோக்கு அல்லது விளையாட்டுக்கு அடிமைப்பட்டவர்கள் இப்படி எந்தவொரு குழுவினருடனாவது இடைபட அவர் உங்களுக்கு ஆர்வமளிக்கலாம். நீங்கள் தேவனிடம் கேட்டால், ஒரு திட்டவட்டமான குறிப்பிட்ட தேசத்தை அல்லது பலமான கிறிஸ்தவ சாட்சி தேவைப்பட்ட நிலையில் சந்திக்கப்படாத மக்கள் கூட்டத்தை அவர் உங்களுக்குக் காண்பிப்பார்.

> ***இவ்வுலகத்தில் நடைபெறுமாறு தாம் விரும்புகின்ற யாவும் நடைபெறுகிறதற்கு தேவன் நமக்கு வெவ்வேறு உள்ளுணர்வுகளைத் தருகின்றார்.***

தேவன், தாம் விரும்பும் எல்லாக் காரியங்களும் உலகில் நடந்தேறும்படிக்கு, நமக்கு வெவ்வேறு ஆர்வத்தைத் தருகின்றார். உங்களுக்கிருக்கும் அதே ஆர்வம் எல்லாருக்குமிருக்குமென்று எண்ணுவதும், எதிர்பார்ப்பதும் சரியல்ல; மாறாக, நாம் ஒருவருக்கொருவர் நமது வாழ்க்கை செய்திகளைக் கவனித்துக் கேட்டு, அதை மதிக்க வேண்டும். ஒருவரும் எல்லாவற்றையும் சொல்ல முடியாது. இன்னொருவருடைய தெய்வீகப் பற்றை ஒரு நாளும் தரக்குறைவாக நினைக்கக்கூடாது. *''நல்ல காரியங்களுக்காக வைராக்கியம் கொள்ளுவது நல்லது''*[14] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் வாழ்க்கை செய்தி, நற்செய்தியையும் உள்ளடக்கி இருக்கின்றது. நற்செய்தி என்றால் என்ன? *''தேவன் மக்களைத் தம்முடன் எப்படி ஒப்புரவாக்குகின்றாரென்று காண்பிப்பது நற்செய்தி. அது விசுவாசத்தில் ஆரம்பித்து முற்றுப் பெறுகின்றது.''*[15] *''கிறிஸ்துவில் தேவன், மக்கள் தமக்கு விரோதமாகச் செய்த பாவங்களை எண்ணாமல், உலகத்தைத் தம்முடன் ஒப்புரவாக்கினார். பிறருக்குக் கூறும்படி தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் அற்புத செய்தி அது.''*[16] இயேசு செய்ததினிமித்தம், தேவனுடைய கிருபை நம்மை இரட்சிக்குமென்று நாம் நம்பும்போது, நம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன; நாம் வாழுவதற்கு ஒரு நோக்கம் உண்டாகின்றது; நமக்குப் பரலோகத்தில் ஒரு வீடு வாக்களிக்கப்படுகின்றது; இதுவே நற்செய்தி.

இந்த நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளுவதெப்படி என்று கூறும் நூற்றுக்கணக்கான நல்ல புத்தகங்களிருக்கின்றன. எனக்குப் பயனுள்ளவையாயிருந்த புத்தகங்களின் பட்டியலை நான் கொடுக்கக் கூடும் (இணைப்பு 2ஐ காண்க). ஆனால், முந்திய அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள எட்டுக் காரியங்களையும் நீங்கள் உட்புகுத்திக் கொண்டாலொழிய, உலகத்திலுள்ள எல்லாவிதமான பயிற்சிகளும் சாட்சி கூறுமாறு உங்களைத் தூண்டியெழுப்பவே முடியாது. எல்லாவற்றிற்கும் மேலாக, அந்த மக்கள் மீது தேவன் கொண்டிருக்கும் அதே அன்புடன் அவர்களை நேசிக்க நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.



தாம் நேசிக்காத எந்தவொரு நபரையும் தேவன் படைக்கவே இல்லை. ஒவ்வொருவரும் அவருக்கு முக்கியம். இயேசு சிலுவையில், தம் கரங்களை விரித்தபோது, அவர், "நான் உன்னை இவ்வளவாக நேசிக்கின்றேன்" என்று கூறிக் கொண்டிருந்தார். ***"எல்லாருக்காகவும் ஒருவர் மரித்தாரென்று நாங்கள் நம்புகின்றபடியால், கிறிஸ்துவின் அன்பு எங்களை நெருக்கி ஏவுகின்றது"***[17] என்று வேதம் கூறுகின்றது. இந்த உலகில் உங்கள் பணியைக் குறித்து அக்கறையற்ற சோர்வுணர்வு உங்களைத் தாக்கும்போதெல்லாம், இயேசு உங்களுக்காக சிலுவையில் செய்ததை எண்ணிப் பாருங்கள்.

தேவன், அவிசுவாசிகளுக்காகக் கரிசனை கொள்ளுகின்றபடியால் நாமும் கரிசனை கொள்ள வேண்டும். அன்பு இதைச் செய்யலாமா வேண்டாமா என்று தெரிந்துகொள்ள விடாது. ***"அன்பிலே பயமில்லை, பூரண அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்"***[18] என்று வேதம் கூறுகின்றது. எரிந்து கொண்டிருக்கும் கட்டடத்திற்குள் சிக்கியிருக்கும் தங்கள் குழந்தையைக் காப்பாற்ற, பெற்றோர் அக்கட்டடத்துக்குள் ஓடிச் செல்லுவார்கள்; ஏனென்றால், அக்குழந்தை மீது அவர்கள் கொண்டிருக்கும் அன்பு, நெருப்பைப் பற்றிய பயத்தைப் புறம்பே தள்ளிவிடும். உங்களைச் சுற்றி இருப்பவர்களுடன் கிறிஸ்துவின் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள நீங்கள் பயந்து கொண்டிருந்தால், உங்கள் இருதயத்தை அவருடைய அன்பினால் நிரப்பும்படி தேவனிடம் கேளுங்கள்.

“(தேவன்) ஒருவரும் கெட்டுப்போக வேண்டுமென்று விரும்பாமல், எல்லா மனுஷரும் இரட்சிக்கப்பட வேண்டுமென்றும் தங்கள் இருதயத்தையும், வாழ்க்கையையும் மாற்றியமைக்க வேண்டுமென்றும் விரும்புகின்றார்”[19] என்று வேதம் கூறுகின்றது. கிறிஸ்துவை அறியாத ஒரு ஆத்துமாவை நீங்கள் பார்த்தால்கூட, நீங்கள் அவர்களுக்காக ஜெபித்துக் கொண்டேயிருக்க ***வேண்டும்***. அன்பினால் அவர்களுக்கு சேவை செய்ய ***வேண்டும்***. அவர்களுடன் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ள ***வேண்டும்***. உங்கள் சமுதாயத்தில், தேவனுடைய குடும்பத்தில் இல்லாத ஒரு குடும்பம் இருந்தாலும் உங்கள் சபை, அவர்களைச் சந்தித்துக் கொண்டே இருக்க வேண்டும். வளர்ச்சியடைய விரும்பாத சபை, உலகத்தைப் பார்த்து, ‘நீங்கள் நரகத்திற்குப் போகலாம்’ என்று கூறிக் கொண்டிருக்கின்றது.

நீங்கள் அறிந்திருக்கின்ற மக்கள், பரலோகம் போய்ச் சேரும்படி, ***நீங்கள்*** என்ன செய்து கொண்டிருக்கின்றீர்கள்? சபைக்கு அழைத்தீர்களா? உங்கள் கதையைப் பகிர்ந்து கொண்டீர்களா? இந்தப் புத்தகத்தை அவர்களுக்குக் கொடுத்தீர்களா? ஒரு வேளை உணவாவது கொடுத்தீர்களா? அவர்கள் இரட்சிப்படையும்படி தினந்தோறும் அவர்களுக்காக ஜெபிக்கின்றீர்களா? உங்கள் பணித்தளம் உங்களைச் சுற்றி இருக்கின்றது. தேவன் உங்களுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் வாய்ப்புகளை இழந்து போகாதிருங்கள். ***“சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் நற்செய்தியைப் பிறருக்கு கூற, எல்லா சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துங்கள். உங்கள் காரியங்களிலெல்லாம் ஞானமாக நடந்து கொள்ளுங்கள்”***[20] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் நிமித்தம் யாராவது ஒருவர் பரலோகத்திற்குப் போக முடியுமா? பரலோகத்திலிருக்கின்ற யாராவது ஒருவர் உங்களைப் பார்த்து, “நான் உங்களுக்கு நன்றி சொல்ல விரும்புகின்றேன். நீங்கள் நற்செய்தியை என்னுடன் பகிர்ந்து கொண்டதனால்தான் நான் இன்று பரலோகத்திலிருக்கின்றேன்” என்று கூற முடியுமா? பரத்திற்குபோக நீங்கள் உதவி செய்த மக்களை அங்கு சந்திக்கும் மகிழ்ச்சியைக் கற்பனை செய்து பாருங்கள். ஒரே ஒரு ஆத்துமாவின் நித்திய இரட்சிப்பு, வாழ்க்கையில் நீங்கள் சாதிக்கக்கூடிய மற்றெதையும்விட அதிக முக்கியமானது. மக்கள்தான் என்றென்றும் இருக்கப் போகின்றவர்கள்.

இப்புத்தகத்தில், பூமியில் உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய ஐந்து நோக்கங்களைக் கற்றோம். அவர், உங்களைத் தமது குடும்பத்தில் *அங்கத்தினராக்கியிருக்கின்றார்;* தமது குணத்தின் ஒரு *முன்மாதிரியாக* வைத்திருக்கின்றார்; அவருடைய *மகிமையைப் பிரதிபலிப்பவர்களாக* வைத்திருக்கின்றார்; அவருடைய *கிருபையின் ஊழியக்காரனாக* வைத்திருக்கின்றார்; தமது *நற்செய்தியின் தூதுவனாகப்* பிறரிடம் செல்ல வைத்திருக்கின்றார். இந்த ஐந்து நோக்கங்களில், ஐந்தாவது நோக்கம், இந்த உலகத்தில் *மட்டுமே* செய்யப்படக் கூடும். மற்ற நான்கும் நித்தியத்திலும் ஏதோ ஒரு வழியில் தொடரும். அதனால்தான், நற்செய்தியைப் பரப்புவது மிக முக்கியமானது; உங்கள் வாழ்க்கை செய்தியைப் பகிர்ந்து கொண்டு, உங்கள் பணியை நிறைவேற்ற உங்களுக்கு உலகில் ஒரு குறுகிய காலம்தானுண்டு.

நாள் முப்பத்தேழு
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: என் மூலமாகத் தேவன் இந்த உலகிற்கு ஏதோ ஒன்றைக் கூற விரும்புகின்றார்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"உங்களிலிருக்கின்ற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும், சாந்தத்தோடும், வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்."*** 1 பேதுரு 3:15

ஆய்வுக்கான ஒரு கேள்வி: என் சொந்தக் கதையை நான் சிந்திக்கும்போது, அதை யாருடன் நான் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார்?

38

உலகத் தரம் வாய்ந்ததொரு கிறிஸ்தவனாகுதல்

இயேசு தமது சீஷர்களிடம், "நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள் என்றார்."
மாற்கு 16:15 (புதிய மொழியாக்கம்)

உம்முடைய இரட்சிக்கும் வல்லமையோடும் முழு மனுக்குலத்திற்குமான உமது நித்திய திட்டத்தோடும் எங்களை உலகெங்கும் அனுப்பும்.
சங்கீதம் 67:2 (புதிய மொழியாக்கம்)

பிரதான கட்டளை, உங்களுக்கான கட்டளையாக இருக்கின்றது.

நீங்கள் எடுக்கவேண்டிய ஒரு தீர்மானம் – ***உலகத்தரம் வாய்ந்த*** கிறிஸ்தவனாக இருக்கப்போகின்றீர்களா அல்லது ஒரு ***உலகத்திற்கேற்ற*** கிறிஸ்தவனாக இருக்கப்போகின்றீர்களா?[1]

உலகத்திற்கேற்ற கிறிஸ்தவர்கள், தங்கள் சொந்தத் தேவை நிறைவுகளுக்காக மட்டும் தேவனை நோக்கிப் பார்க்கின்றவர்கள். இவர்கள் இரட்சிக்கப்பட்டவர்கள். ஆனால், சுயத்தை மையமாகக் கொண்டவர்கள் இவர்கள். பாடல் அரங்கேற்றங்கள், உயரிய போதனை தரும் கருத்தரங்குகள் ஆகியவற்றிற்கு விரும்பிச் செல்வார்கள். ஆனால், அருட்பணி மாநாடுகளில் இவர்களைக் காணவே முடியாது. ஏனெனில், அதில் அவர்களுக்கு ஆர்வமில்லை. தங்கள் சொந்தத் தேவைகள், ஆசீர்வாதங்கள், மகிழ்ச்சி ஆகியவற்றின் மீதே அவர்களுக்கு அதிக நாட்டமிருக்கும். இது, 'நான் – முதலில்' என்ற விசுவாசம்: ***என்*** வாழ்க்கையை தேவன்

வசதியுள்ளதாக எப்படி மாற்றக்கூடும்? இவர்கள், தேவனுடைய நோக்கத்திற்காக தாங்கள் பயன்படுத்தப்படுவதைவிட, தேவனைத் தங்கள் நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுவதையே விரும்புவார்கள்.

இதற்கு நேர்மாறானவர்கள், உலகத் தரம் கொண்ட கிறிஸ்தவர்கள். தாங்கள் சேவை செய்வதற்காகவே இரட்சிக்கப்பட்டவர்கள் என்றும் மிஷன் பணிக்காகவே உண்டாக்கப்பட்டவர்களென்றும் அறிந்திருப்பார்கள். தங்களுக்கென்று நியமிக்கப்பட்ட பணியை செய்ய ஆவலாக இருப்பார்கள். தேவனால் பயன்படுத்தப்படுவது ஒரு சிலாக்கியமென்று பரவசமடைவார்கள். இவர்கள்தான், பூமியில் பரிபூரண ஜீவன் பெற்றவர்கள். தாங்கள் இருக்குமிடத்தில் அவர்கள் ஒரு வித்தியாசத்தை உண்டாக்குகின்றவர்கள்; தாக்கத்தை ஏற்படுத்துகின்றவர்கள். ஆகவே, அவர்களுடைய மகிழ்ச்சி, நம்பிக்கை, பரவசம் எல்லாம் பிறரை எளிதில் தொற்றிக்கொள்ளும். இப்படிப்பட்டவர்கள் ஒவ்வொரு நாளும் தேவன் தங்களைப் புதிய விதத்தில் பயன்படுத்துவார் என்றும், தங்கள் மூலம் கிரியை செய்வாரென்றும் எதிர்பார்ப்புடன் காலையில் கண் விழிப்பார்கள். நீங்கள் எந்த வகைக் கிறிஸ்தவராக இருக்க விரும்புகின்றீர்கள்?



வரலாற்றிலேயே மிகப் பெரியதும், பரந்ததும், அநேக விதங்களில் இருப்பதும், மிக முக்கியமானதுமான – தனது இராஜ்ஜியத்திற்கடுத்த காரியங்களில் பங்கெடுக்கும்படி தேவன் உங்களை அழைக்கின்றார். சரித்திரம் என்பது (His Story) ***அவருடைய சரிதை***. அவர் தனது குடும்பத்தை நித்தியத்திற்கென்று கட்டிக் கொண்டிருக்கின்றார். வேறொன்றும் முக்கியமல்ல; வேறொன்றும் அவ்வளவு காலம் நீடிக்காது. வெளிப்படுத்தின விசேஷத்திலிருந்து, தேவனுடைய அகில உலகப் பணி நிறைவேற்றப்படும் என்றும், ஒரு நாளில் பிரதான கட்டளை, பிரதான நிறைவேறுதலாக முடியும் என்றும், பரலோகத்தில், ***“எல்லா ஜாதி, குடிகள், தேசம், மொழிகளிலுமிருந்து”***[2] ஒரு பெருங்கூட்ட மக்கள், இயேசு கிறிஸ்துவின் முன் நின்று அவரை ஆராதிப்பார்கள் என்றும் நாம் அறிந்துகொள்ளுகின்றோம். உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்தவனாக இடைபடுவது, பரலோகத்தில் எப்படியிருக்கும்

என்பதை முன்னதாகவே அனுபவிக்கும் வாய்ப்பை உங்களுக்கு அருளுகின்றது.

“நீங்கள் உலகமெங்கும் புறப்பட்டுப் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை அறிவியுங்கள்” என்று இயேசு கூறியபோது, அந்தச் சிறுகூட்ட ஏழை, மத்தியக் கிழக்கு சீஷர்கள் திணறிப்போனார்கள். அவர்கள் நடந்து செல்ல வேண்டுமா? அல்லது மெதுவாகச் செல்லும் மிருகங்கள் மீது ஏறிச் செல்ல வேண்டுமா? அப்பொழுது, அவர்களுக்கிருந்த வாகன வசதி அது ஒன்றுதான். கடல் கடக்கும் கப்பல்கள் கிடையாது; உலகமெங்கும்போக, இப்படிப்பட்ட சரீரப்பிரகாரமான, இயற்கை ரீதியான தடைகள் இருந்தன.

இன்று நமக்கு ஆகாய விமானங்கள், கப்பல்கள், இரயில் வண்டிகள், பேருந்துகள், தானியங்கி வாகனங்கள் என்று எவ்வளவோ இருக்கின்றன. இன்று உலகம் சிறியதாகிவிட்டது. நாளுக்கு நாள் இன்னும் சிறியதாகும்படியான சாதனங்கள் பெருகி, உலகம் சுருங்கிக் கொண்டே வருகின்றது. கடலை ***மணிக்கணக்கில்*** பறந்து கடந்து விடலாம்; அடுத்த நாளே விரும்பினால் மீண்டும் வீடு வந்து சேரலாம். சாதாரண, அன்றாடக் கிறிஸ்தவர்கள், குறுகிய கால சர்வதேச அருட்பணி பயணங்களில் பணியாற்றக்கூடிய வாய்ப்பு உண்மையிலேயே எல்லையில்லாமலிருக்கின்றது. உலகின் எந்தவொரு மூலைக்கும் நாம் எளிதாக சென்று வரக்கூடும். அதற்கென்று உதவி செய்வதற்காக விமான நிறுவனங்களும், பிரயாண ஒழுங்கை ஏற்படுத்திக் கொடுக்கும் ஏஜெண்டுகளும் ஏராளம் உண்டு. ஆகவே, இன்று நற்செய்தி பரப்பாமலிருக்க நாம் சாக்குப்போக்கு கூறவே முடியாது.

இப்போது இணைய தளங்கள் (Internet) தொடர்பு மூலம் உலகம் இன்னும் சிறியதாகிவிட்டது. தொலைபேசிகள், தொலைநகல் (Fax) மற்றும் மின் அஞ்சல் (e-mail) வசதி கொண்ட எந்தவொரு விசுவாசியும், உலகத்திலுள்ள எப்பகுதி மக்களுடனும் நேரில் பேச முடியும்! முழு உலகமும் உங்கள் விரல் நுனியில் இன்று இருக்கின்றது!

தூர இடத்திலுள்ள குக்கிராமங்களுக்கும் மின் அஞ்சல் வசதி (e-mail) இருப்பதால், நீங்கள் மக்களுடன் மின் அஞ்சல் சுவிசேஷ

சம்பாஷணைகளை (e-vangelistic), உங்கள் வீட்டை விட்டு வெளியேறாமலே நீங்கள் செய்யக்கூடும்! 'உலகமெங்கும் போங்கள்' என்ற பிரதான கட்டளையை வரலாற்றிலேயே இவ்வளவு எளிதாக நிறைவேற்றக் கூடிய காலம் இதைப்போல வேறில்லை! இப்போது தூரம், பணச் செலவு அல்லது வாகன வசதிகள் தடையாகவே இல்லை. நமது சிந்திக்கும் முறை ஒன்றுதான் தடையாக இருக்கின்றது. உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்தவனாக மாற, நீங்கள் சிந்தையில் சில மாற்றங்களை கொள்ள வேண்டும். உங்கள் கண்ணோட்டமும், மனப்பாங்கும் அவசியம் மாறவேண்டும்.

உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்தவனைப்போல சிந்திப்பது எப்படி?

சுயத்தை மையமாக கொண்ட சிந்தனையிலிருந்து, பிறரை மையமாகக் கொண்ட சிந்தனைக்குத் திரும்புங்கள். *"குழந்தைகளைப்போல சிந்திப்பதை விட்டு விடுங்கள்; புருஷரைப்போல சிந்தியுங்கள்"*[3] என்று வேதம் கூறுகின்றது. உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்தவனாக மாறுவதற்கு இதுதான் முதல் படி. குழந்தைகள் எப்பொழுதும் தங்களையே நினைப்பார்கள். பெரியவர்கள் பிறரைப் பற்றி நினைப்பார்கள். *"அவனவன் தனக்கானவைகளையல்ல, பிறருக்கானவைகளையும் நோக்குவானாக"*[4] என்று வேதம் கட்டளையிடுகின்றது.

உலகமெங்கும்போய் சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டுமென்ற பிரதான கட்டளையை நிறைவேற்ற, இப்போது இருப்பதுபோல இவ்வளவு மின் சாதன வசதிகள் வேறு எப்போதும் இருந்ததில்லை.

இயற்கையாக நாம் நம்மீதே நாட்டம் கொண்டவர்கள்; கிட்டத்தட்ட எல்லா விளம்பரங்களும் நம்மைப் பற்றியே சிந்திக்க வைக்கின்றன. வினாடிக்கு வினாடி தேவன்மீது சார்ந்து கொள்ளுவது ஒன்றுதான் இந்த மனப்பான்மையை மாற்றும் வழி. தேவன் நம்மைத் தனியே போராட விடுவதில்லை. ஆகவே, நாம் அதிர்ஷ்டசாலிகள்! *"தேவன் நமக்குத் தமது ஆவியைக் கொடுத்திருக்கின்றார்;*

அதனால்தான், நாம் உலகத்தார் சிந்திக்கிறதுபோல சிந்திக்க மாட்டோம்."[5]

அவிசுவாசிகளிடம் பேசும்போதெல்லாம், அவர்களுடைய ஆவிக்குரிய தேவையை நினைக்க உங்களுக்கு உதவி செய்யுமாறு பரிசுத்த ஆவியானவரிடம் முதலில் கேட்க ஆரம்பியுங்கள். பயிற்சி செய்தால், நாளடைவில், ஜெபம் தேவைப்படுகின்ற யாவருக்காகவும் "சுவாச ஜெபங்கள்" (breath prayers) ஏறெடுக்கும் பழக்கத்தை நீங்கள் ஏற்படுத்திக் கொள்ள முடியும். மனதிற்குள்ளேயே, 'பிதாவே, உம்மையறியாதபடி இந்த நபரைத் தடுப்பதென்ன என்பதை நான் உணர்ந்துகொள்ள எனக்கு உதவி செய்யும்" என்று கேளுங்கள்.

தங்கள் ஆவிக்குரிய பயணத்தில் அடுத்த நபர் எங்கேயிருக்கின்றார் என்பதையறிந்து கொள்ளுவது உங்கள் இலக்கு; அதன்பின், கிறிஸ்துவை அறியுமாறு அவர்களை ஒரு படி நெருக்கமாக இயேசுவண்டைக் கொண்டு வரக்கூடிய காரியம் எதுவோ, அதைச் செய்யுங்கள். இதற்குப் பவுலுக்கு இருந்த மனப்பக்குவம் உங்களுக்கும் தேவை; *''நான் எனக்கு நலமானவைகளை யோசியாமல், அநேகர் இரட்சிக்கப்பட ஏதுவாக அவர்களுக்கு நன்மையானவைகளையே சிந்திக்கின்றேன்''*[6] என்று அவர் கூறினார்.

உள்ளூர் சிந்தனையை உலகளாவிய சிந்தனையாக மாற்றியமையுங்கள். தேவன் உலகமனைத்திற்கும் தேவன். அவர் எப்போதுமே, முழு உலகத்திற்காகவும் கரிசனை கொண்டிருக்கின்றார். ***"தேவன் இவ்வளவாய் உலகில் அன்பு கூர்ந்தார்..."***[7] ஆதியிலிருந்தே அவர் தாம் படைத்த எல்லாத் தேசங்களிலுமிருந்து குடும்ப அங்கத்தினர்களை விரும்பினார். ***"ஒரே மனிதனாலே, தேவன் பூமியிலுள்ள அனைவரையும் உண்டாக்கி, அவரவர் குடியிருக்கும் இடத்தையும், எல்லையையும் குறித்துவிட்டார். தடவியாகிலும் அவர்கள் தம்மைக் கண்டுகொள்ளத்தக்கதாக தேவன் அப்படிச் செய்தார்''***[8] என்று வேதம் கூறுகின்றது.

உலகின் பெரும்பகுதியினர் இன்று, உலகளாவிய சிந்தையையே கொண்டுள்ளனர். மிகப் பெரிய மக்கள் தொடர்பு சாதனம் மற்றும் தொழில் இணைப்புகள் அனைத்தும் சர்வ தேச நிறுவன

அமைப்புகளாக இருக்கின்றன. நாம் நாகரீகம், இசை, விளையாட்டு, களியாட்டம் மற்றும் விரைவு உணவு வகைகளிலும்கூட... கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும்போது, அதிக அளவில் பிற நாடுகளுடன் பின்னிப் பிணைந்து கொள்ளுகின்றோம். அநேகமாக, இன்று நீங்கள் உடுத்தியிருக்கும் உடை, நேற்று நீங்கள் சாப்பிட்ட உணவு எல்லாமே இன்னொரு தேசத்தில் உற்பத்தி செய்யப்பட்டவையாக இருக்கலாம். நாம் "நினைத்துப் பார்ப்பதற்கும் மேலான அளவு தொடர்பு கொண்டிருக்கின்றோம்."

நாள் முப்பத்தெட்டு: உலகத் தரம் வாய்ந்ததொரு கிறிஸ்தவனாகுதல்

இப்போதுள்ள நாட்கள் பரவசமானவை. இதுவரை இருந்திராத அளவு இன்று உலகில் கிறிஸ்தவர்கள் அதிகம் பேர் இருக்கின்றார்கள். *"உங்களுக்கு கொண்டு வரப்படும் இதே நற்செய்தி உலகமெங்கும் போய்க் கொண்டிருக்கின்றது. உங்கள் வாழ்க்கையை மாற்றியது போலவே, அது அநேகருடைய வாழ்க்கையையும் மாற்றிக் கொண்டிருக்கின்றது"*[9] என்று பவுல் கூறியது சரியே!

குறிப்பிட்ட தேசங்களுக்காக ஜெபிக்க ஆரம்பிப்பதுதான், உலகளாவிய சிந்தனையின் முதல் ஆரம்பம். உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்தவர்கள் உலகத்திற்காக ஜெபிப்பார்கள். ஒரு பூமியுருண்டை அல்லது உலகப்படம் ஒன்றை வாங்கி, தேசங்களுக்காகப் பெயர் சொல்லி ஜெபிக்க ஆரம்பியுங்கள். ***"என்னைக் கேளுங்கள்; அப்பொழுது, பூமியின் இராஜ்ஜியங்களை உங்களுக்குத் தருவேன்; பூமியிலுள்ள வம்சத்தாரெல்லாரும் உங்களுடையவர் களாவார்கள்"***[10] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் உலகளாவிய மிஷன் பணிக்குரிய முக்கியமான கருவி, ஜெபம். மக்கள் நம் அன்பை மறுக்கலாம்; நம் செய்தியை நிராகரிக்கலாம். ஆனால், அவர்களால் நமது ஜெபத்திற்கு எதிர்த்து நிற்க முடியாது; கண்டங்களுக்கிடையே பறக்கும் ஆயுதங்களைப் போல, 10 மைல் அல்லது 10,000 மைல்களுக்கு அப்பாலிருந்தாலும், உங்களால் ஒரு நபரின் உள்ளத்திற்கு நேரே ஜெபக் கணைகளை அனுப்பக்கூடும்.

நீங்கள் எவைகளுக்காக ஜெபிக்க வேண்டும்? சாட்சி சொல்லும் வாய்ப்புகளுக்காக,[11] பேசத் தைரியமருளப்பட,[12] கேட்டு விசுவாசிக்கின்றவர்களுக்காக,[13] நற்செய்தி விரைந்து பரப்பப்படுவதற்காக,[14] இன்னும் வேலையாட்கள் பெருகுவதற்காக[15] நாம் ஜெபிக்க வேண்டுமென்று வேதம் கூறுகின்றது.

உலகெங்கும் சுவிசேஷப்பணி செய்பவர்களுக்காகவும், உலக அறுவடைப்பணி செய்பவர்களுக்காகவும் நீங்கள் ஜெபிக்க வேண்டும். ***"நீங்கள் எங்களுக்காக ஜெபிக்கும்போது, நீங்களும் எங்களுடன் இணைந்து உதவி செய்கின்றீர்கள்."***[16] உலகத்திற்காகவும், கிறிஸ்தவ ஊழியர்களுக்காகவும் ஞானத்தோடு ஜெபிக்க, ஆலோசனை வேண்டுமானால் இணைப்பு 2ஐ காண்க.

நமது அன்பையும், நாம் கூறும் செய்தியையும் மக்கள் நிராகரிக்கலாம்; ஆனால், நமது ஜெபத்திற்கு எதிரிட்டு அவர்களால் நிற்க முடியாது.

அகில உலக சிந்தனையை வளர்க்க இன்னொரு வழி – செய்தியை, ***"பிரதான கட்டளைக் கண்களை"*** கொண்டு வாசிப்பதும், கவனிப்பதும். மாறுதல் அல்லது போராட்டம் இருக்குமிடத்தில், மக்களைத் தம்மிடம் கொண்டுவர தேவன் அதைப் பயன்படுத்துவாரென்று நாம் நிச்சயிக்கலாம். மக்கள் மன இறுக்கம் அல்லது மாறுதலில் இருக்கும்போது, தேவனுக்கு உள்ளத்தைத் திறந்து கொடுப்பார்கள். நமது உலகில் மாறுதலின் வீதம் கூடிக் கொண்டே இருப்பதால், முன்பைவிட இப்பொழுது அதிக மக்கள் நற்செய்தியைக் கேட்க தங்கள் உள்ளத்தைத் திறந்து தருகின்றார்கள்.

உலகளாவிய சிந்தை கொள்ளுவதற்கு இன்னுமொரு வழி, "குறுகிய கால அருட்பணி" பயணம் செல்லுதல். இன்னொரு கலாச்சாரத்தை உண்மையான வாழ்க்கை அனுபவமாக நேரில் போய்ப் பார்ப்பதைப்போல அருமையான காரியம் வேறொன்றுமில்லை. படிப்பதை நிறுத்திவிட்டு, பணியை விவாதிப்பதையும் விட்டுவிட்டு, நேரில் சென்று பாருங்கள். ஆழமான பகுதிக்குள் குதியுங்கள்! அப்போஸ்தலர் 1:8ல் இயேசு, நாம் எப்படி இடைபட வேண்டுமென்பதற்கு ஒரு மாதிரியைத் தருகின்றார்: ***"நீங்கள்***

எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், உலகமெங்கும் போய் என்னைக் குறித்துக் கூறுங்கள்”[17] அவருடைய தொண்டர்கள் தங்களது சமுதாயத்தையும் (எருசலேம்), தேசத்தையும் (யூதேயா), மற்றக் கலாச்சாரத்தையும் (சமாரியா), பிற நாடுகளையும் (உலகமெங்கும்) போய்த் தொட வேண்டும். இங்கே கவனிக்க வேண்டிய மிக முக்கியமான ஒன்று: ஒவ்வொரு இடத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக சந்தியுங்கள் என்று தேவன் சொல்லவில்லை. யாவையும் ஒரே நேரத்தில் என்ற பொருள்படத்தான் தேவன் சொன்னார். எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் மிஷனரி அழைப்பு இல்லாவிட்டாலும், ***ஒவ்வொரு*** கிறிஸ்தவனும், நான்கு குழுவினருக்கும் பணி செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கின்றான். நீங்கள் ஒரு அப்போஸ்தலர் 1:8 கிறிஸ்தவரா?

இந்த நான்கு எல்லைகளிலும் உள்ள ஒரு மிஷன் பணித்திட்டத்தில் பங்கு கொள்ள, ஒரு இலக்கை ஏற்படுத்திக் கொள்ளுங்கள். ***கூடிய சீக்கிரத்தில்*** குறுகிய கால அருட்பணி பயணம் ஒன்றில் இணைந்து கொள்ளுங்கள். இதற்கான பிரயாண வசதிகளை செய்துக் கொடுக்கக் கூடிய ஏராளமான “டிராவல் ஏஜெண்டுகள்” உண்டு. இப்படிப்பட்ட பயணம், உங்கள் இருதயத்தை விரிவுபடுத்தி, பார்வையைப் பரந்ததாக்கி, விசுவாசத்தை நீட்டிக்கச் செய்து, மனதுருக்கத்தை ஆழப்படுத்தி, நீங்கள் இதுவரை அனுபவித்திராத ஒரு மகிழ்ச்சியில் உங்களை நிரப்பும். இது, உங்கள் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக இருக்கும்.

‘இங்கே... இப்பொழுது’ என்ற சிந்தையிலிருந்து நித்திய சிந்தைக்கு மாறுங்கள். பூமியில் உங்கள் காலத்தை மிகப் பயனுள்ளதாக்க, நீங்கள் ஒரு நித்திய கண்ணோட்டத்துடனிருக்க வேண்டும். முக்கியமில்லாத பிரச்சனைகளைப் பெரிதுபடுத்தாமலிருக்க இது உங்களுக்கு உதவி செய்யும். எது அவசரமானது, எது இறுதியானது என்று வேறுபடுத்திக் காண அவர் உங்களுக்கு உதவி செய்வார். ***“காணப்படுகின்றவைகள் மீதல்ல, காணப்படாதவைகள் மீது நாம் கண்களை வைக்கின்றோம்; காண்கின்றவைகள் அநித்தியமானவைகள்; காணப்படாதவைகள் நித்தியமானவைகள்”***[18] என்று பவுல் கூறினார்.

பொதுவாக, நாம் நமது பெலனை செலவழிக்கும் அநேக காரியங்களின் விளைவோ தாக்கமோ ஒரு வருடத்திற்கு மேலாக நிலைத்திருப்ப தில்லை. நித்தியத்திற்கும் நமது அன்றாட செயல்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கக் கூடும். இந்தத் தற்காலிகக் காரியத்திற்காக உங்கள் வாழ்க்கையை விரயமாக்கிவிட வேண்டாம். ***"கலப்பையின் மேல் கையை வைத்த பின்பு பின்னிட்டுத் திரும்புகின்றவன் தேவனுடைய ராஜ்ஜியத்திற்குத் தகுதியுடையவன் அல்ல"***[19] என்று இயேசு கூறினார். ***"உலகம் உங்கள் மீது திணிக்கும் காரியங்களுடன் எவ்வளவு குறைவாக இடைபட முடியுமோ அவ்வளவு குறைவாக இடைபடுங்கள். நீங்கள் காண்கின்ற உலகம் சீக்கிரம் ஒழிந்துபோகும்"***[20] என்று பவுல் எச்சரிக்கின்றார்.

உங்கள் பணிக்கு இடையில் நிற்க நீங்கள் எதை அனுமதித்திருக்கின்றீர்கள்? உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்த வனாகாதபடி உங்களைத் தடுப்பது எது? அது, எதுவாயிருந்தாலும் அதைப் போக விடுங்கள். ***"நம்மைப் பின்னே பிடித்திழுக்கும் அல்லது வேகத்தைக் குறைக்கும் காரியம் எதுவானாலும் அதைக் களைந்து போடுவோமாக."***[21]

> ***நீங்கள் அதை உங்களுடன் கொண்டுபோக முடியாது - ஆனால், வேதம் கூறுகின்றது: "பரலோகத்திற்குப்போகும் மனிதர் மீது முதலீடு செய்வதன் மூலம் நீங்கள் அதை உங்களுக்கு முன்னதாகவே அனுப்பிவிடக் கூடும்."***

"பரலோகத்தில் உங்கள் பொக்கிஷத்தைச் சேர்த்துவையுங்கள்"[22] என்று இயேசு கூறினார். இதை நாம் எப்படிச் செய்ய முடியும்? இயேசு கூறிய காரியங்களில் அதிகமாகத் தவறாக அர்த்தம் கொள்ளப்படும் ஒரு காரியம்: ***"நான் உங்களுக்கு சொல்லுகின்றேன், நீங்கள் மாளும்போது உங்களை நித்திய வீடுகளில் ஏற்றுக் கொள்ளுவார் உண்டாகும்படி, இந்த உலகப் பொருளினால் உங்களுக்கு சிநேகிதரைச் சம்பாதியுங்கள்."***[23] இயேசு செல்வந்தர்களான சிநேகிதரை 'விலைக்கு வாங்க' சொல்லவில்லை. தேவன் உங்களுக்குக் கொடுத்த பணத்தைக் கொண்டு மக்களைக் கிறிஸ்துவண்டை கொண்டு வாருங்களென்பதுதான் இதன் அர்த்தம். அப்பொழுது, அவர்கள்

நீங்கள் பரலோகத்திற்குப் போகும்போது உங்களை வரவேற்பார்கள்! அதுதான் நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த முதலீடு.

"இதை நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்ல முடியாது" என்ற இந்தக் கூற்றை நீங்கள் அநேகமாகக் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால், *''நீங்கள் அதை உங்களுக்கு முன்னதாகவே அனுப்பிவிடக் கூடும்; அங்கு போகும் மக்கள் மீது நீங்கள் முதலீடு செய்வதன் மூலம் நீங்கள் அதை உங்களுக்கு முன்னரே பரலோகத்திற்கு அனுப்ப முடியும்!''* என்று வேதம் கூறுகின்றது. *"இப்படிச் செய்வதன் மூலம் நீங்கள் பரலோகத்திலே உங்களுக்கு உண்மையிலேயே பொக்கிஷம் சேர்க்கின்றீர்கள்; அதுவே, நித்தியத்திற்கான பத்திரமான முதலீடு! அவர்கள் இங்கேயும் கனியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை நடத்துவார்கள்''*[24] என்று வேதம் கூறுகின்றது.

சாக்குப்போக்கு சொல்லுவதை விட்டு, உங்கள் பணியை நிறைவேற்றக்கூடிய ஆக்கபூர்வ வழிகளை சிந்திக்க ஆரம்பியுங்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு! உங்களுக்கு உதவி செய்ய அருட்பணி சங்கங்களும் அமைப்புகளும் இருக்கின்றன; சாதாரணமாகச் சொல்லப்படும் சில சாக்குப் போக்குகளை இங்கு காணலாம்:

- *"நான் ஆங்கிலம் மட்டுமே பேசுவேன்."* அநேக ஆயிரக்கணக் கான மக்கள் ஆங்கிலம் கற்கவும் அதைப் பயிற்சி செய்யவும் விரும்புவதால் உண்மையில் அநேக தேசங்களில் இது ஒரு அனுகூலம்.

- *"கொடுப்பதற்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை."* உங்களிடம் இருக்கின்றது; உங்களை உருவாக்கிய ஒவ்வொரு திறமையும் அனுபவமும் எங்கேயாவது பயன்பட முடியும்.

- *''எனக்கு அதிக வயதாகிவிட்டது (அல்லது நான் ஒரு இளைஞனாயிருக்கின்றேன்).''* அநேக அருட்பணி சங்கங்கள் மற்றும் அமைப்புகள், வயதிற்குப் பொருத்தமான குறுகிய கால செயல்திட்டங்களை வைத்திருக்கின்றன.

தான் அதிக வயது சென்றதாக உணர்ந்த சாராளாக இருந்தாலும் அல்லது தான் சிறுபிள்ளையென்று உணர்ந்த எரேமியாவானாலும் சரி, தேவன் அவர்களுடைய சாக்குப்போக்குகளை நிராகரித்தார். *"நான் சிறுபிள்ளையென்று சொல்லாதே"* என்று கர்த்தர் கூறினார், ***"நான் உன்னை அனுப்பும் எவ்விடத்திற்கும் நீ போய், நான் சொல்லும்படி சொல்லுவதைக்கூறு; ஜனங்களைக் குறித்துப் பயப்பட வேண்டாம்; நான் உன்னுடனே இருந்து உன்னைக் காத்துக்கொள்ளுவேன்."***[25]

ஆண்டவரிடமிருந்து ஒரு 'சிறப்பான தனிப்பட்ட' அழைப்பு தேவை என்று நம்பி, இயற்கைக்கு மேற்பட்ட ஒரு உணர்வு அல்லது அனுபவம் பெற நீங்கள் காத்திருக்கலாம். ஆனால், தேவனோ மீண்டும், மீண்டும் தமது அழைப்பை ஏற்கனவே கூறிவிட்டார். நாமனைவருமே நமது வாழ்க்கையின் ஐந்து நோக்கங்களை நிறைவேற்ற அழைக்கப்பட்டவர்கள். ஆராதிக்க, ஐக்கியம் கொள்ள, கிறிஸ்துவைப்போலாக, சேவை செய்ய மற்றும் இந்தப் பூமியில் தேவனுடன் இணைந்து பணி செய்ய. தமது மக்களில் சிலரை மட்டும் தேவன் பயன்படுத்த விரும்பவில்லை. தமது ***மக்களனைவரையும்*** பயன்படுத்த தேவன் விரும்புகின்றார். நாம் தேவனுக்காகப் பணியில் இருக்க அழைக்கப்பட்டவர்கள். தமது முழு சபை, முழு சுவிசேஷத்தையும், முழு உலகிற்கும் எடுத்துச் செல்ல வேண்டுமென அவர் விரும்புகின்றார்.[26]

தேவனிடம் சென்று, "ஆண்டவரே, என்னை ஒரு மிஷனரியாக ஏதாவது ஒரு மக்கள் மத்தியில் அனுப்ப உமக்கு விருப்பமா?" என்று தேவனிடம் ***கேட்காததினால்,*** எத்தனையோ கிறிஸ்தவர்கள் தேவனுடைய திட்டத்தை இழந்திருக்கின்றார்கள். பயத்தினாலோ அல்லது அறியாமையினாலோ, தாங்களாகவே தங்கள் மனதை மிஷனரிப் பணி செய்யக்கூடிய வாய்ப்புகளுக்கு விலக்கி, மனம் மூடப்பட்ட நிலையில் இருந்துவிடுகின்றனர். 'வேண்டாம்' என்று சொல்லும்படியான சோதனை வந்தால், இன்று உங்களுக்குக் கிடைக்கக்கூடிய பல்வேறு வாய்ப்புகளையும் வழிகளையும் அலசிப் பாருங்கள் (இது உங்களுக்கு ஆச்சரியமளிக்கும்). அடுத்தப்படியாக, வருகின்ற வருடங்களில், ஆண்டவர் உங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கின்றாரென்பதைக் குறித்துக் கருத்தோடு ஜெபித்துப் பாருங்கள். இன்று வரலாற்றில், தங்கிப் பணிபுரியக்கூடிய

மிஷனரிகள் அநேகர் தேவைப்படுகின்றனர். முன்பு எப்போதுமில்லாத விதத்தில் இப்போது கதவுகள் சுவிசேஷத்திற்குத் திறக்கப்பட்டுள்ளன.

நீங்கள் இயேசுவைப்போலிருக்க விரும்பினால், முழு உலகத்தையும் குறித்த கரிசனை கொண்ட உள்ளம் உங்களுக்கு இருக்க வேண்டும். உங்கள் குடும்பத்தார், நண்பர் மட்டும் கிறிஸ்துவண்டை வந்ததில் நாம் திருப்தியடைந்து விடக்கூடாது. எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் உலகில் இருக்கின்றனர்; காணாமற் போன தமது பிள்ளைகளனைவரையும் கண்டுபிடித்துக் கூட்டிச் சேர்க்க இயேசு ஆவலாயிருக்கின்றார். ***"என்னிமித்தமும் சுவிசேஷத்தினிமித்தமும் தன் ஜீவனை இழக்கின்றவன் என்றென்றைக்கும் ஜீவித்திருப்பான்!"***[27] என்று இயேசு கூறினார். பிரதான கட்டளை உங்களுக்கான கட்டளை; முக்கியத்துவம் கொண்ட ஒரு வாழ்க்கை வாழ்வதற்கான ஒரு இரகசியம், நீங்கள் உங்கள் பங்கைச் செய்வதுதான்!

நாள் முப்பத்தெட்டு

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: பிரதான கட்டளை என்னுடைய கட்டளை.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***"தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள் மேல் பிரகாசிக்கப் பண்ணும்."*** சங்கீதம் 67:2

ஆய்வுக்கான ஒரு கேள்வி: அடுத்த வருடம், ஒரு குறுகிய கால அருட்பணி ஊழிய பயணத்தை மேற்கொள்ள நான் ஆயத்தம் செய்ய வேண்டிய காரியங்கள் யாவை?

39

உங்கள் வாழ்க்கையை சமநிலைப்படுத்துதல்

வாழ்க்கையின் பொருளை அறியாதவர்கள் போலல்ல,
அதையறிந்தவர்களாகத் தேவையான
பொறுப்புணர்வுடன் ஜீவியுங்கள்.
எபேசியர் 5:15 (புதிய மொழியாக்கம்)

தீய மனிதரின் தவறுகள் உங்களை
நிலைகுலையப்பண்ணித் தவறான பாதையில்
நடத்திவிட இடங்கொடாதேயுங்கள்.
2 பேதுரு 3:17 (புதிய மொழியாக்கம்)

சமநிலையிலுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் எல்லாரையும் மிஞ்சி நீடித்திருப்பார்கள்.

ஐந்து விளையாட்டுகள் கொண்ட நிகழ்ச்சி (pentathlon), வேனிற்கால ஒலிம்பிக் விளையாட்டுக்களின் நிகழ்ச்சிகளில் ஒன்று. அதில், துப்பாக்கி சுடுதல், வாள் வீச்சு, குதிரை சவாரி, ஓட்டம் மற்றும் நீச்சல் ஆகிய ஐந்தும் அடங்கியிருக்கும். ஏதோ ஒன்று, இரண்டிலல்ல, ஐந்து பகுதிகளிலும் வெற்றி பெறுவதுதான், விளையாட்டு வீரனின் இலக்கு.

உங்கள் வாழ்க்கையும் 5 நோக்கங்கள் கொண்ட ஒரு 'பென்டாத்லான்' – இவற்றை நீங்கள் சமநிலையில் வைத்திருக்க வேண்டும். அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் இவை ஆதிக் கிறிஸ்தவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டன. எபேசியர் 4ல் பவுல் இதற்கு விளக்கமளிக்கின்றார்; யோவான் 17ஆம் அதிகாரத்தில் இயேசுவால் மாதிரியாகக் கொடுக்கப்பட்டது. ஆனால், அவை யாவும்

இயேசுவின் பிரதான கற்பனை மற்றும் பிரதானக் கட்டளை ஆகியவற்றிலிருந்து திரட்டித் தரப்பட்டுள்ளன. இந்த இரண்டு வாக்கியங்களிலிருந்துதான் இந்த புத்தகத்தில் நமக்கு தேவனுடைய ஐந்து நோக்கங்கள் விளக்கப்பட்டுள்ளன.

1. "***உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும் அன்புகூரு***": நீங்கள் தேவனுடைய மகிழ்ச்சிக்காகத் திட்டமிடப்பட்டவர்கள். ஆகவே, தேவனை உங்கள் ***ஆராதனை*** மூலம் நேசிப்பது உங்களைப் பற்றிய ஒரு நோக்கம்.

2. "***உன்னைப்போல உன் பிறனை நேசி***": நீங்கள் சேவிப்பதற்காக உருவாக்கப்பட்டீர்கள்; ***ஊழியம்*** செய்து பிறருக்கு உங்கள் அன்பைக் காண்பிப்பது உங்களைப் பற்றிய ஒரு நோக்கம்.

3. "***போய் சீஷராக்குங்கள்***": நீங்கள் ஒரு பணிக்கென்று உருவாக்கப்பட்டவர்கள். ***சுவிசேஷப்பணியின்*** மூலம் தேவனுடைய செய்தியைப் பகிர்ந்து கொள்ளுவது உங்களைப் பற்றிய ஒரு நோக்கம்.

4. "***ஞானஸ்நானம் கொடுத்து***": நீங்கள் தேவனுடைய குடும்பத்திற்கென்று உண்டாக்கப்பட்டவர்கள். ஆகவே, ***ஐக்கியத்தின்*** மூலம் தேவனுடைய குடும்பத்துடன் ஒன்றாக இணைவது உங்களைப் பற்றிய ஒரு நோக்கம்.

5. "***எல்லாவற்றையும் கைக்கொள்ள உபதேசியுங்கள்***": நீங்கள் கிறிஸ்துவைப்போலாக மாறும்படி படைக்கப்பட்டீர்கள், ***சீஷத்துவத்தின்*** மூலம் வளர்ச்சியடைவது உங்களைப் பற்றிய ஒரு நோக்கம்.

பிரதான கற்பனைக்கும் பிரதான கட்டளைக்கும் உங்களைப் பெரிய அளவில் அர்ப்பணித்துக்கொண்டால், அது, உங்களைப் பெரிய கிறிஸ்தவர்களாக்கும்.

இந்த ஐந்து நோக்கங்களையும் சமநிலையில் வைப்பது எளிதல்ல. எந்தவொரு நோக்கம் நமக்கு அதிக ஆர்வத்தைத் தூண்டுகின்றதோ

அதற்கு அளவுக்கு அதிக முக்கியத்துவமளித்து, மற்ற நோக்கங்களை அலட்சியப்படுத்துவது நாம் அநேகமாகச் செய்ய முற்படும் ஒரு தவறு. சபைகளும் இதையே செய்கின்றன. ஆனால், உங்கள் வாழ்க்கையைச் சமநிலையில், சரியான பாதையில் நீங்களமைக்க முடியும். ஒரு சிறிய, பொறுப்பெடுத்துக்கொள்ளும் குழுவைச் சேர்த்து கொண்டு, உங்கள் ஆவிக்குரிய ஆரோக்கியத்தை ஒழுங்காக மதிப்பீடு செய்து, ஒரு சொந்த தனிப்பட்ட குறிப்பேட்டில் உங்கள் முன்னேற்றத்தைப் பதிவுசெய்து கொண்டு வந்து, நீங்கள் கற்றுக் கொண்டதைப் பிறர் கற்றுக் கொள்ளும்படி நடத்திக் கொடுப்பதன் மூலம் இதை நீங்கள் செய்ய முடியும். இவை, நோக்கம் கொண்ட வாழ்க்கைக்கான நான்கு முக்கியமான செயல்பாடுகள். சரியான பாதையில் செல்ல வேண்டுமென்ற உள்ளான உணர்வு உண்மையிலேயே உங்களுக்கு இருக்குமானால், இந்தப் பழக்கங்களை நீங்கள் விருத்தி செய்து கொள்ளவேண்டும்.

மாபெரும் கற்பனைக்கும் மாபெரும் கட்டளைக்கும் தன்னை மாபெரும் அளவில் அர்ப்பணிப்பவன், மாபெரும் கிறிஸ்தவனாவான்.

இதைக் குறித்து ஒரு ஆவிக்குரிய பங்காளர் அல்லது சிறு குழுவினரிடம் பேச வேண்டும். இப்புத்தகத்திலுள்ள கொள்கைகளை உள்ளாக மனதில் பதிக்க வேண்டுவதற்கு சிறந்த வழி, இதைக் குறித்து ஒரு சிறு குழுவினருடன் கலந்துரையாட வேண்டும். ***"இரும்பை இரும்பு கருக்கிடுவதுபோல, மனிதரும் ஒருவரையொருவர் கூராக்கி, சீராக்க முடியும்"***[1] என்று வேதம் கூறுகின்றது. நாம் சமுதாய சூழ்நிலையில்தான் சிறப்பாகக் கற்றுக் கொள்ளுகின்றோம். சம்பாஷணை மூலமாக நமது மனது தீட்டப்பட்டு, நமது நம்பிக்கைகள் ஆழமாக்கப்படுகின்றன.

ஒரு சிறு குழு நண்பர்களைக் கூட்டிச் சேர்த்து, "நோக்கத்தினால் வழிநடத்தப்படும் வாழ்க்கை" புத்தகத்தை வாசிக்கும் குழு ஒன்றை உருவாக்கி, வாராந்தர அடிப்படையில் இந்த அத்தியாயங்களை மீண்டும் மறுபார்வை செய்யும்படி உங்களைப் பட்சமாக

வற்புறுத்துகின்றேன். ஒவ்வொரு அத்தியாயத்தின் கருத்துக்களையும் வாழ்க்கையில் எப்படி அப்பியாசிப்பது என்பதை குறித்து விவாதியுங்கள். “ஆகவே, என்ன செய்வது?”, “ஆகவே, அதனால் என்ன?” என்றும், “இது என் குடும்பத்துக்கு என்ன கூறுகின்றது; எனக்கு என்ன கூறுகின்றது; நம் சபைக்குக் கூறப்படுவதென்ன?” போன்ற கேள்விகளை கேளுங்கள். நான் இதைக் குறித்து இனி என்ன செய்யப் போகின்றேன்? என்று சிந்தியுங்கள். ***“நீங்கள் கற்றுக்கொண்டவைகளை நடைமுறையில் பிரயோகியுங்கள்”***[2] என்று பவுல் கூறினார். இணைப்பு 1ல், உங்கள் சிறு குழுவில் அல்லது ஓய்வு நாள் வகுப்பில் நீங்கள் பயன்படுத்தக்கூடிய விவாதத்துக்கேற்ற கேள்விகளின் பட்டியலொன்றை நான் இணைத்திருக்கின்றேன்.

ஒரு புத்தகம் தனியே தரக்கூடாத அநேக பயன்களை ஒரு சிறிய வாசிக்கும் குழுவினர் தரக்கூடும். நீங்கள் கற்றுக் கொண்டிருப்பவைகளைக் குறித்து கருத்துப் பரிமாற்றங்களை நீங்கள் செய்து கொள்ள முடியும். உண்மையான வாழ்க்கை சம்பவங்களை நீங்கள் பகிர்ந்து கொள்ள முடியும். ஒருவரையொருவர் ஊக்குவித்து, ஒருவருக்காக ஒருவர் ஜெபித்து, ஒருவரையொருவர் நீங்கள் தாங்கி, இந்த நோக்கங்களை வாழ்க்கையில் நிறைவேற்றி வாழ ஆரம்பிக்கலாம். நாம் ஒன்றாக இணைந்து வளரும்படி அழைக்கப்பட்டவர்கள், தனித்தனியே நிற்க அல்ல என்பதை நினைவில் கொள்ளுங்கள். ***‘‘ஒருவரையொருவர் தாங்கி, ஒருவருக்கொருவர் சத்துவமளியுங்கள்’’***[3] என்று வேதம் கூறுகின்றது.

ஒரு குழுவாக இணைந்து நீங்கள் இந்தப் புத்தகத்தை வாசித்தபின்பு வகுப்புகளுக்கும், மற்றக் குழுக்களுக்கும் தயாரிக்கப்பட்டுள்ள மற்ற நோக்கம் கொண்ட வாழ்க்கைக் கல்வி தயாரிப்புகளைத் தொடர்ந்து நீங்கள் கற்கலாம் (இணைப்பு 2ஐ காண்க).

தனிப்பட்ட வேதாகமக் கல்வி கற்க வேண்டுமென்றும் உங்களை ஊக்குவிக்க விரும்புகின்றேன். இந்தப் புத்தத்தில் பயன்படுத்தியுள்ள ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேத வசனங்களை, அவை

பயன்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்துடன் சேர்த்து நீங்கள் படிக்க வேண்டுமென்பதற்காக, அவற்றைப் பின் குறித்திருக்கின்றேன். தயவு செய்து இணைப்பு 3ஐ வாசியுங்கள் – ஏன் இப்புத்தகம் இத்தனை மொழி பெயர்ப்புகளையும், சுருக்கக் கருத்துக்களையும் பயன்படுத்தியிருக்கின்றதென்பதை அது விளக்குகின்றது. இந்த 40 அத்தியாயங்களையும் அன்றாட வாசிப்புக்கேற்ற அளவில் வைப்பதற்காக, பயன்படுத்தப்பட்டுள்ள அநேக வேத வசனங்களின் பின்னணியை விளக்கிக் கூற எனக்கு இடமில்லாமல் போயிற்று. ஆனால், வேதாகமத்தை ஒவ்வொரு பகுதியாகவும், அதிகாரங்களாகவும், தனி புத்தகங்களாகவும் நாம் எடுத்து, ஆராய்ந்து, படிக்க பழக வேண்டும்.

உங்களுக்கு நீங்களே ஒழுங்கான ஆவிக்குரிய பரிசோதனை செய்து கொள்ளுங்கள். காலாகாலங்களில் உங்களையே மதிப்பீடு செய்து கொள்ளுதல், உங்கள் வாழ்க்கைக்கான ஐந்து நோக்கங்களையும் சமநிலைப்படுத்தும் ஓர் சிறந்த வழி. சுயமதிப்பீடு செய்யும் பழக்கத்தை தேவன் வெகுவாக மதிக்கின்றார். குறைந்தபட்சம் ஐந்து முறைகள், வேதாகமத்தில் நாம் நம்மையே பரிசோதித்து நமது ஆவிக்குரிய ஆரோக்கியத்தை ஆராய்ந்து பார்க்கும்படி அறிவுறுத்தப்படுகின்றோம்.[4] *“விசுவாசத்தில் திடமாயிருப்பதை, உங்களை நீங்களே சோதித்தறிந்து உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் உங்களுக்குரியதாக எடுத்துக் கொண்டு, அதன்படி நடவாமல், உங்களையே ஆராய்ந்து, பரீட்சித்துப் பாருங்கள். நீங்கள் பரீட்சையில் தோல்வியுற்றால், செய்ய வேண்டியதைச் செய்யுங்கள்”*[5] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் சரீர சுகத்தைப் பேணிக்கொள்ள, உங்கள் முக்கிய அறிகுறிகளான இரத்த அழுத்தம், உடல் உஷ்ண நிலை, எடை போன்றவற்றை மதிப்பீடு செய்யக்கூடிய ஒரு மருத்துவரிடம் தவறாமல் பரிசோதனைக்கு செல்லுவதுபோல, உங்கள் ஆவிக்குரிய ஆரோக்கியத்திற்கும், முக்கியமான ஐந்து அறிகுறிகளான ஆராதனை, ஐக்கியம், குணத்தில் வளர்ச்சியடைதல், ஊழியம் மற்றும் சுவிசேஷப் பணி ஆகியவற்றை அவ்வப்பொழுது, ஒழுங்காகப் பரிசோதிக்க வேண்டும். *“நாம் வாழும் விதத்தைக் குறித்து நன்கு ஆராய்ந்து பார்த்து நமது ஜீவியத்தைத் தேவனுக்குக் கீழ்ப்படுத்தி மறு ஒழுங்கு செய்வோம்”*[6] என்று எரேமியா புத்திமதி கூறினார்.

சேடில்பேக் சபையில், நாங்கள் ஒரு எளிமையான சுயமதிப்பீடு உபகரணம் ஒன்றை உருவாக்கியுள்ளோம்; அது ஆயிரக் கணக்கானோருக்குத் தேவனுடைய நோக்கத்தில் நிலைத்திருக்க உதவி செய்துள்ளது. இந்த நோக்கம் கொண்ட வாழ்க்கையின் ஆவிக்குரிய ஆரோக்கியத்தை ஆராய்ந்து மதிப்பீடு செய்ய, உபகரணம் உங்களுக்குத் தேவைப்பட்டால் மின் அஞ்சல் மூலம் என்னுடன் தொடர்பு கொள்ளுங்கள். (இணைப்பு 2ஐ காண்க). ஆரோக்கியத்திற்கும், வளர்ச்சிக்கும், இந்த சிறிய கருவி, உங்கள் வாழ்க்கையை நீங்கள் சமநிலைப்படுத்த எவ்வளவு உதவியாக இருக்கின்றதென்பதைக் குறித்து நீங்கள் பிரமித்துப் போவீர்கள். ***"நீங்கள் ஆரம்பத்தில் கொண்டிருந்த ஆர்வமான கருத்துக்கள், இப்போதுள்ள உண்மையான செயல்களில் சமமாக வெளிப்படட்டும்"***[7] என்று பவுல் வற்புறுத்துகின்றார்.

நாள் முப்பத்தொன்பது: உங்கள் வாழ்க்கையை சமநிலைப் படுத்துதல்

உங்கள் தேர்ச்சியை ஒரு குறிப்பேட்டில் எழுதிக் கொண்டு வாருங்கள். ஒரு ஆவிக்குரிய குறிப்பேடு வைத்துக் கொள்ளுவது தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றுவதிலுள்ள உங்கள் முன்னேற்றத்தை மீண்டும் உறுதிப்படுத்துதல் ஆகும். இது சாதாரண நாட்குறிப்புபோல அல்ல; நீங்கள் மறக்க முடியாத வாழ்க்கைக் குறிப்புகளை எழுதி வைப்பது; ***"நாம் கேட்டுக் கொண்டதை விட்டு வழுவாதபடி அவற்றை உறுதியாகப் பற்றிக் கொண்டிருப்பது முக்கிய காரியம்"***[8] என்று வேதம் கூறுகின்றது. நாம் பதிவு செய்து வைப்பது நல்லது. ஏனெனில், பதிவு செய்ததை நன்கு நினைவு கூருவோம்.

உங்கள் வாழ்க்கைக்கு தேவன் செய்வதைத் தெளிவுபடுத்த, அதை எழுதி வைப்பது உதவியாக இருக்கும். டாசன் டிரோட்மேன் இப்படிக் கூறுவது வழக்கம்: "உங்கள் விரல் நுனிகள் வழியாகக் கடந்து செல்லும்பொழுது, எண்ணங்கள், பின்னிக் கிடப்பதிலிருந்து சிக்கறுபட்டுத் தெளிவடைகின்றன." தேவன் மக்களிடம் ஒரு ஆவிக்குரிய குறிப்பேடு வைக்குமாறு கூறிய அநேக

உதாரணங்களை வேதாகமத்தில் காணக்கூடும். *"கர்த்தர் காண்பித்தபடியே, மோசே அவர்கள் முன்னேற்றத்தை எழுதி வைத்துக் கொண்டிருந்தான்"*[9] என்று வேதம் கூறுகின்றது. இஸ்ரவேலரின் ஆவிக்குரிய பயணத்தைக் குறித்து, கர்த்தரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து பதிவு செய்து வந்ததைக் குறித்து நீங்கள் மகிழ்ச்சியடைகின்றீர்கள் அல்லவா? அவன் சோம்பேறித் தனத்தினால் அதைச் செய்யாதிருந்தால், யாத்திராகமத்தின் வல்லமை நிறைந்த வாழ்க்கையனுபவப் பாடங்கள் நமக்குக் கிடைத்திருக்காது.

மோசே எழுதி வைத்த பயணக் குறிப்பு வாசிக்கப்படுமளவுக்கு உங்கள் பயண வரலாற்றுக் குறிப்புகள் வாசிக்கப்படாவிட்டாலுங்கூட, உங்கள் பதிவுக் குறிப்புகள் முக்கியமானவை. "மோசே தனது பயணத்தின் வெவ்வேறு கட்டங்களையும் பதிவு செய்து வைத்தான்" என்று ஒரு ஆங்கில மொழி பெயர்ப்பு கூறுகின்றது. உங்கள் வாழ்க்கை ஒரு பயணம்; பயணத்திற்குக் குறிப்பேடு வைப்பது தகுதியானது. நோக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ்வதில் உங்கள் ஆவிக்குரிய நிலைகளைக் குறிக்கும் ஒரு பதிவேடு வைத்துக் கொள்ளுவீர்களென்று நான் நம்புகின்றேன்.

மகிழ்ச்சியான காரியங்களை மட்டும் எழுத வேண்டாம். தாவீது செய்ததுபோல, உங்கள் சந்தேகங்கள், பயங்கள், தேவனோடுள்ள உங்கள் போராட்டங்கள் அனைத்தையும் பதிவு செய்யுங்கள். வேதனையில்தான் நமது மிகப் பெரிய பாடங்களை நாம் பெற்றுக் கொள்ளுகின்றோம்; தேவன் நமது கண்ணீரைத் தமது கணக்கில் வைத்திருக்கின்றாரென்று[10] வேதம் கூறுகின்றது. பிரச்சனைகள் வரும்போது... இந்த ஐந்து நோக்கங்களையும் உங்கள் வாழ்க்கையில் நிறைவேற்ற தேவன் அவற்றைப் பயன்படுத்துவாரென்பதை நினைவு கூருங்கள். பிரச்சனைகள், உங்களை தேவன் மீது கருத்தூன்றச் செய்து, பிறருடன் நெருங்கிய ஐக்கியத்தை வளரச் செய்து, கிறிஸ்துவைப்போல குணநலன்களைக் கட்டியெழுப்பி, உங்களுக்கு ஒரு ஊழியத்தையளித்து, ஒரு சாட்சியையும் உங்களுக்குத் தரும். ஒவ்வொரு பிரச்சனையும் ஒரு நோக்கம் கொண்டதுதான்.

"கர்த்தர் செய்ததை, இனி பிறக்கப்போகும் மக்களும் அவரைத் துதிக்கும்படி, வரப்போகும் சந்ததிக்கு அவற்றை எழுதி

வையுங்கள்"[11] என்று வேதனையான அனுபவமொன்றின் மத்தியில், சங்கீதக்காரன் எழுதினார். பூமியில் உங்களைப் பற்றிய தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற தேவன் உங்களுக்கு எப்படி உதவி செய்தாரென்ற சாட்சியைப் பாதுகாத்து வைப்பது, வருங்கால சந்ததிக்காக நீங்கள் செய்ய வேண்டிய கடமை. நீங்கள் பரலோகத்தில் இருக்கும்போது இங்கு தொடர்ந்து பேசிக் கொண்டிருக்கும் சாட்சியாக அது அமையும்.

உங்களுக்குத் தெரிந்ததைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் வளர்ச்சியடைந்து கொண்டிருக்க விரும்பினால், நீங்கள் ஏற்கனவே கற்றதைப் பிறரிடம் பகிர்ந்துக் கொடுப்பதுதான் கற்பதற்கு சிறந்த வழி. *"பிறரை ஆசீர்வதிக்கின்றவன் பரிபூரண ஆசீர்வாதங்களைப் பெறுவான். பிறருக்கு உதவி செய்பவர்கள், உதவி பெற்றுக் கொள்ளுவார்கள்"*[12] என்று நீதிமொழிகள் நமக்குக் கூறுகின்றன. உள்ளான பாடங்களைப் பிறரிடம் பகிர்ந்துக் கொடுப்பவர்கள், தேவனிடமிருந்து இன்னும் அதிகம் பெற்றுக் கொள்ளுவார்கள்.

இப்போது வாழ்க்கையின் நோக்கத்தைப் புரிந்து கொண்ட நீங்கள், இந்தச் செய்தியைப் பிறருக்குக் கொண்டு செல்லுவது உங்கள் பொறுப்பு. தேவன் உங்களைத் தமது செய்தியை சுமப்பவர்களாக இருக்கும்படி அழைக்கின்றார். *"நான் உங்களுக்குக் கூறிய அதே காரியங்களை, பிறருக்கு எடுத்துக் கூறுவார்களென்று நம்பக்கூடிய சீஷரிடம் கூறுங்கள்"*[13] என்று பவுல் கூறினார். இப்புத்தகத்தில், வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றி மற்றவர்கள் எனக்கு கற்றுத் தந்ததை, நான் உங்களுக்கு பகிர்ந்தளித்திருக் கின்றேன். இனி, இதைப் பிறரிடம் பகிர்ந்துக் கொடுப்பது உங்கள் மீது விழுந்த கடமை.

தமது நோக்கத்தை பூமியில் நீங்கள் நிறைவேற்ற தேவன் உங்களுக்கு எப்படி உதவி செய்தாரென்ற சாட்சியை பத்திரப்படுத்திக் கொடுப்பது வருங்கால சந்ததிக்கு நீங்கள் செய்ய வேண்டிய கடமை.

வாழ்க்கையின் நோக்கத்தை அறியாத நூற்றுக்கணக்கான

மக்களை நீங்கள் ஒருவேளை அறிந்திருக்கலாம். இந்த சத்தியங் களை உங்கள் பிள்ளைகளுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்; உங்கள் சிநேகிதருடன், அண்டை அயலகத்தாருடன் மற்றும் உங்களுடன் பணிபுரிபவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். இந்தப் புத்தகத்தை ஒரு நண்பருக்குக் கொடுத்தால், அர்ப்பணிப்பு பகுதியில், உங்கள் சொந்தக் குறிப்பையும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் எந்த அளவுக்கு அதிகமாக அறிந்து கொள்ளுகின்றீர்களோ, அந்த அளவுக்குப் பிறருக்கு உதவுமாறு அதைப் பயன்படுத்த வேண்டுமென்று தேவன் உங்களிடம் எதிர்பார்க்கின்றார். ***"நன்மை செய்ய அறிந்திருந்தும், அதைச் செய்யாதிருக்கின்றவன் பாவஞ் செய்கின்றான்"***[14] என்று யாக்கோபு கூறினார். அறிவு, பொறுப்பைப் பெருகச் செய்கின்றது. வாழ்க்கையின் நோக்கத்தைப் பிறருக்கு பகிர்ந்துக் கொடுப்பது கடமைக்கும் மேற்பட்டது. அது வாழ்க்கையின் மிகப்பெரிய சிலாக்கியங்களில் ஒன்று. ஒவ்வொருவரும் தங்கள் நோக்கத்தை அறிந்து கொண்டால், இந்த உலகம் எவ்வளவு வித்தியாசமானதாக இருக்குமென்று கற்பனை செய்து பாருங்கள். ***"இவைகளை நீ பிற சீஷருக்குப் போதித்தால், நீ கிறிஸ்து இயேசுவுக்கு நல்ல சேவகனாயிருப்பாய்"***[15] என்ற பவுல் கூறினார்.

எல்லாம் தேவனுடைய மகிமைக்காகவே



நாம் கற்றதைப் பகிர்ந்துக்கொடுக்கும் காரணம் தேவனுடைய மகிமைக்காகவே. சிலுவையில் அறையப்பட்ட நாளுக்கு முந்திய இரவு இயேசு தன் பிதாவிடம், ***"நீர் எனக்குச் சொன்ன யாவையும் நான் செய்து முடித்து உம்மை மகிமைப்படுத்தினேன்"***[16] என்று கூறினார். இயேசு இந்த வார்த்தைகளைக் கூறியபோது, அவர் இன்னும் நமது பாவங்களுக்காக மரிக்கவில்லை. ஆகவே, அவர் என்ன 'கிரியை' செய்து முடித்தார்? பாவ நிவாரணம் தவிர, வேறு ஏதோ ஒன்றை அவர் இந்தத் தருணத்தில் குறிப்பிடுகின்றார். இதற்குரிய பதில், அவர் தமது ஜெபத்தில் கூறிய அடுத்த இருபது வசனங்களில் தருகின்றார்.[17]

கடந்த மூன்று வருடங்களாக அவர் செய்து கொண்டிருந்ததை இயேசு, தமது பிதாவிடம் கூறினார். தமது சீஷரை தேவனுடைய நோக்கத்தின்படி செய்ய ஆயத்தப்படுத்தினார். தேவனை அறிந்து நேசிக்கவும் (ஆராதித்தல்), ஒருவரையொருவர் நேசிக்கவும் (ஐக்கியம்), அவர்கள் முதிர்ச்சியடையுமாறு வார்த்தையைப் பெற்றுக் கொள்ளவும் (சீஷத்துவம்), சேவை செய்வதெப்படி என்று கற்றுக் கொள்ளவும் (ஊழியம்), பிறர் வாழும் இடத்திற்கு அவர்களை தேடிச் சென்று நற்செய்தி கூறவும் (சுவிசேஷப் பணி) அவர்களுக்குக் கற்றுக்கொடுத்தார். ஒரு நோக்கம் நிறைந்த வாழ்க்கை வாழுவது எவ்வாறு என்பதை தமது சொந்த வாழ்க்கை மூலமாகவே வாழ்ந்து பிறருக்கு அதைக் கற்றுக்கொடுத்தார் இயேசு! அந்த கிரியைதான் தேவனுக்கு மகிமையைக் கொண்டுவந்தது.

இன்றும் அதே வேலைக்கு நம் ஒவ்வொருவரையும் தேவன் அழைக்கின்றார். அவருடைய நோக்கத்தின்படி நாம் வாழ்வது மட்டுமல்ல, பிறரும் அப்படிச் செய்ய நாம் உதவுமாறு விரும்புகின்றார். நாம் மக்களைக் கிறிஸ்துவுக்கு அறிமுகப்படுத்த வேண்டுமென்றும், தம்முடைய ஐக்கியத்திற்குள் அவர்களைக் கொண்டு வரவேண்டுமென்றும், முதிர்ச்சி பெற்று, தங்கள் சேவை எது என்று கண்டுபிடித்து, பிறரையும் போய்த் தொடவேண்டுமென்றும் அவர் விரும்புகின்றார்.

இதுதான் நோக்கம் கொண்டதும், நோக்கத்தினால் உந்தப்படும் வாழ்க்கை பற்றியதுமான காரியங்கள். உங்கள் வயதையெல்லாம் பொருட்படுத்தாமல், மீதமுள்ள உங்கள் வாழ்க்கை சிறந்த வாழ்க்கையாக இருக்க முடியும்; இன்றே நீங்கள் நோக்கம் கொண்ட வாழ்க்கை வாழ ஆரம்பிக்க முடியும்.

நாள் முப்பத்தொன்பது
எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: சமநிலையிலுள்ளவர்கள் பாக்கியவான்கள்.

மனனம் செய்ய ஒரு வசனம்: *"வாழ்க்கையின் பொருளை அறியாதவர்கள் போலல்ல, அதையறிந்தவர்களாகத் தேவையான பொறுப்புணர்வுடன் ஜீவியுங்கள்."* எபேசியர் 5:15 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: நான் சரியான பாதையில் தொடர, என் வாழ்க்கையைப் பற்றிய 5 நோக்கங்களையும் சமநிலைப்படுத்த, எந்த நான்கு நடவடிக்கைகளை நான் இன்றே துவங்க வேண்டும்?

நோக்கத்தோடு ஜீவித்தல்

மனுஷனுடைய இருதயத்தின் எண்ணங்கள் அநேகம்; ஆனாலும், கர்த்தருடைய யோசனையே நிலைநிற்கும்.
நீதிமொழிகள் 19:21

தாவீது, தன் தலைமுறையில்தானே தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினான்.
அப்போஸ்தலர் 13:36 (புதிய மொழியாக்கம்)

வாழ்வை உண்மையாக வாழ்வதற்கு ஒரே வழி, நோக்கத்தோடு ஜீவித்தல். மற்றபடி உள்ள வாழ்வு, “ஏனோதானோ” என்ற நிலைமைதான்.

வாழ்க்கையில் மூன்று அடிப்படைப் பிரச்சனைகளுடன் அநேக மக்கள் இன்று போராடுகின்றார்கள். முதல் அடிப்படைப் பிரச்சனை: ***அடையாளம்*** காணுதல் “நான் யார்?” இரண்டாவது, ***முக்கியத்துவம்*** “நான் ஒரு பொருட்டாக எண்ணப்படுகின்றேனா?” மூன்றாவது, ***தாக்கம்:*** “வாழ்க்கையில் என் நிலை என்ன?” இந்த மூன்று கேள்விகளுக்கான பதில், வாழ்வின் ஐந்து நோக்கங்களில் அடங்கியிருக்கின்றது.

மேல் வீட்டறையில், இயேசு தமது கடைசி நாள் ஊழியத்தைத் தம் சீஷர்களுடன் நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது, ஒரு உதாரணமாகத் தமது சீடர்களின் கால்களைக் கழுவி, ***“இப்போது இக்காரியங்களை அறிந்து கொண்ட நீங்கள் இவற்றின்படி***

செய்தால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்"[1] என்றார். தேவன் உங்களை எதைச் செய்யும்படி விரும்புகின்றாரென்பதை எப்போது அறிந்து கொள்ளுகின்றீர்களோ, அப்போது அதைச் செய்ய ஆரம்பித்தால், ஆசீர்வாதம் வரும். நமது நாற்பது நாட்கள் பயணத்தின் இறுதிக்கு வந்திருக்கும் இந்த வேளையில், உங்கள் வாழ்க்கையைப் பற்றிய தேவனுடைய நோக்கத்தை அறிந்து கொண்ட நீங்கள், அதன்படி செய்தால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்!

ஒருவேளை இதற்காக நீங்கள் வேறு ஒரு காரியத்தைச் செய்வது நிறுத்தப்பட வேண்டியதிருக்கலாம். உங்கள் வாழ்க்கையில் அநேக, 'நல்ல காரியங்கள்' செய்யப்படக்கூடும். ஆனால், தேவனுடைய நோக்கங்களான இந்த ஐந்து முக்கிய காரியங்களை நீங்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டும்.

ஆனால், எளிதில் நாம் வேறு காரியங்களால் கவரப்பட்டு, முக்கியமானது எது என்பதை மறந்து விடுவது துரதிர்ஷ்டம். எது முக்கியமோ அதைவிட்டு நழுவி, வழிவிலகுவது எளிதாக இருக்கின்றது. இதைத் தடுக்க, உங்கள் வாழ்க்கை நோக்கத்திற்கான ஒரு அறிக்கையைத் தயார் செய்து கொண்டு, அதை ஒழுங்காக அவ்வப்பொழுது பார்த்து, ஆய்வு செய்துக் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை நோக்க அறிக்கை என்றால் என்ன?

உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கத்தைச் சுருக்கமாகக் கூறுவது அது. உங்கள் வாழ்க்கையை பற்றிய தேவனுடைய ஐந்து நோக்கங்களுக்கும் உங்களை நீங்கள் அர்ப்பணிப்பதை உங்கள் சொந்த வார்த்தைகளில் உறுதிப்படுத்துவது. அது இலக்குகளின் பட்டியல் அல்ல; இலக்குகள் தற்காலிகமானவை; நோக்கங்கள் நித்தியமானவை. *"அவர் திட்டங்கள் என்றும் நிற்கும்; அவருடைய தீர்மானங்கள் அநாதியாய் என்றும் நிற்கும்"*[2] என்று வேதம் கூறுகின்றது.

அது உங்கள் வாழ்க்கை போகும் திசையைச் சுட்டிக் காண்பிக்கும் அறிக்கை. உங்கள் நோக்கங்களைத் தாளில் எழுதுவது,

திட்டவட்டமாக உங்கள் வாழ்க்கைப் பாதையை குறித்து நினைக்க உங்களைக் கட்டாயப்படுத்தும். *"நீங்கள் போக வேண்டிய இடத்தை அறிந்து கொள்ளுங்கள். அது உங்களைத் திடமான இடத்தில் நிற்கப்பண்ணும்"*[3] என்று வேதம் கூறுகின்றது. இந்த அறிக்கை நீங்கள் செய்ய நினைத்திருப்பதைக் கூறுவது மட்டுமல்ல – அதாவது, உங்கள் நேரம், வாழ்க்கை, பணம் இவற்றைக் கொண்டு என்ன செய்யப் போகின்றீர்களென்பதை மட்டுமல்ல, எதைச் செய்யாதிருப்பீர்களென்பதையும் கூறுகின்றது. *"ஞானமுள்ளவன், ஞானமுள்ள செயல் செய்ய நாடுகின்றான். ஆனால், மூடனோ பல வழிகளில் செயல்பட முற்படுகின்றான்"*[4] என்று நீதிமொழிகள் கூறுகின்றது.

அது உங்களுக்கு 'வெற்றி' வரையறுக்கும் அறிக்கை. நீங்கள் நம்புவது முக்கியமானது; உலகம் முக்கியமெனக் கூறுவது முக்கியமல்ல என்று இந்த அறிக்கை கூறுகின்றது. உங்கள் மதிப்பீடுகளைத் தெளிவுபடுத்துகின்றது. *"எது உண்மையில் முக்கியமென்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்று நான் விரும்புகின்றேன்"*[5] என்று பவுல் கூறினார்.

அது உங்கள் பங்கைத் தெளிவுபடுத்தும் அறிக்கை. வாழ்க்கையில் பல்வேறு கட்டங்களில், பல்வேறு விதமான நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடுவீர்கள்; ஆனால், உங்கள் நோக்கம் ஒருபோதும் மாறாது; எந்தக் காரியத்தை நீங்கள் செய்தாலும், இந்த நோக்கங்கள் அவற்றைவிடப் பெரியவை.

அது உங்கள் வடிவமைப்பை வெளியிடும் அறிக்கை. தன்னை சேவிக்கும்படி, தேவன் உங்களை உருவாக்கி, வடிவமைத்திருக்கும் சிறப்பான வழிகளை அது பிரதிபலிக்கின்றது.

உங்கள் வாழ்க்கைக்கான நோக்க அறிக்கையை எழுத நேரம் எடுத்துக்கொள்ளுங்கள்; அதை ஒரே நேரமாக முடித்துவிட எண்ண வேண்டாம்; முதல் பிரதியிலேயே அது பிழையின்றி, பூரணமாக இருக்குமென்றும் எதிர்பார்க்க வேண்டாம். உங்கள் எண்ணங்களை அவைகள் வரும் வேகத்தில் அப்படியே எழுதிக்கொண்டு வாருங்கள்.

பின்னர் அதனை சரிசெய்துக் கொள்ளலாம். உங்கள் அறிக்கையை ஆயத்தப்படுத்தும்போது நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டிய 5 கேள்விகள் உண்டு.

வாழ்க்கையின் மிகப் பெரிய 5 கேள்விகள்:

என் வாழ்க்கையின் மையம் எதுவாக இருக்கும்? இது *ஆராதனை* பற்றிய கேள்வி. நீங்கள் யாருக்காக வாழப் போகின்றீர்கள்? எதைச் சுற்றி உங்கள் வாழ்க்கையை அமைக்கப் போகின்றீர்கள்? உங்கள் தொழில், குடும்பம், ஒரு பொழுதுபோக்கு அல்லது விளையாட்டு, பணம், இன்பமாகப் பொழுதுபோக்குதல் இப்படிப்பட்ட எத்தனையோ காரியங்களைச் சுற்றி வாழ்க்கையை அமைக்கலாம். இவை எல்லாம் நல்ல காரியங்களே; ஆனால், இவை உங்கள் வாழ்க்கையின் நடுவில் இருக்க முடியாது. வாழ்க்கை உடைந்து சிதறும்போது உங்களைப் பிடித்து ஒன்று சேர்த்துத் தாங்கும் திறன் இவற்றில் ஒன்றுக்குக்கூட கிடையாது. அசைக்க முடியாத மையம் உங்களுக்குத் தேவை.

"உங்கள் வாழ்க்கையை தேவனில் மையப்படுத்துங்கள்"[6] என்று ஆசா மன்னன், யூதா மக்களிடம் கூறினான். எது உங்கள் வாழ்க்கையின் மையத்திலிருக்கின்றதோ, அதுவே, உங்கள் ஆராதனைக்குரிய தேவன் ஆகும். உங்கள் வாழ்க்கையை நீங்கள் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தபோது, அவர் உங்கள் வாழ்க்கையின் மையத்தில் வந்தார். ஆனால், ஆராதிப்பதன் மூலம் நீங்கள் அவரை மையத்திலேயே வைத்துக் கொள்ள வேண்டும். ***"கிறிஸ்து உங்கள் உள்ளத்தில் அதிகமதிகமாக உருவாக வேண்டுமென்று நான் ஜெபிக்கின்றேன்"***[7] என்று பவுல் கூறுகின்றார். தேவன் உங்கள் வாழ்க்கையின் மையத்திலிருக்கின்றாரா என்று எப்படி அறிந்து கொள்ளுவீர்கள்? தேவன் மையத்திலிருந்தால், ஆராதித்துக் கொண்டிருப்பீர்கள். அவர் அங்கு இல்லையென்றால், கவலைப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள். தேவனை உங்களை விட்டு விலக்கிவைத்து

தேவன் உங்கள் வாழ்க்கையின் மையத்திலிருந்தால், நீங்கள் ஆராதிப்பீர்கள்; அவர் மையத்தில் இல்லாவிட்டால் நீங்கள் கவலைப்பட்டுக் கொண்டே இருப்பீர்கள்.

விட்டீர்களென்பதைக் காண்பிக்க எரியும் எச்சரிக்கை விளக்கு – கவலை. அவரை மீண்டும் மையத்திற்கு நீங்கள் கொண்டு வந்த வினாடியே உள்ளத்தில் சமாதானம் நிரம்பும். *"தேவனுடைய நிறைவு... உங்களை நிரப்பி அமைதிப்படுத்தும். உங்கள் உள்ளத்தின் மையத்தில் உள்ள கவலையைக் கிறிஸ்து இடப்பெயர்ச்சி செய்து விடும்போது நடப்பது அற்புதம்"*[8] என்று வேதம் கூறுகின்றது.

என் வாழ்க்கையின் குணம் எப்படியிருக்கும்? இது ***சீஷத்துவத்திற்கான*** கேள்வி. நீங்கள் எப்படிப்பட்ட நபராக இருப்பீர்கள்? நீங்கள் ***என்ன செய்கின்றீர்களென்பதைவிட, எப்படிப்பட்டவர்களாக இருக்கின்றீர்கள்*** என்பதில்தான் தேவன் அதிக ஆர்வம் கொண்டுள்ளார். உங்கள் வேலையையல்ல, குணத்தையே நித்தியத்திற்குள் எடுத்துச் செல்லுவீர்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் வளர்க்க விரும்பும் குணநலன்களையெல்லாம் பட்டியலிடுங்கள். ஆவியின் கனிகள்[9] அல்லது பாக்கிய வசனங்களில்[10] நீங்கள் ஆரம்பிக்கலாம்.

"உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றதைக் கட்டியெழுப்புவதில் ஒரு வினாடியும் தாமதிக்காமல், உங்கள் அடிப்படை விசுவாசத்தோடே நற்குணத்தையும், ஆவிக்குரிய புரிந்து கொள்ளுதலையும், விழிப்புள்ள ஒழுக்கத்தையும், நீடிய பொறுமையையும், பரிசுத்தமான ஆச்சரியத்தையும், நல்ல நட்புணர்வையும், தாராளமான அன்பையும் கூட்டி வழங்குங்கள்"[11] என்று பேதுரு கூறினார். நீங்கள் தடுமாறும்போது தைரியமிழந்து விட்டு விடாதிருங்கள். கிறிஸ்துவைப்போல குணநலன் பெற ஒரு வாழ்நாள் முழுவதும் பிடிக்கும். பவுல் தீமோத்தேயுவிடம், *"உன் நற்குணத்தையும், போதனையையும் இறுகப் பற்றிக்கொள்"*[12] என்று கூறினார்.

நாள் நாற்பது:
நோக்கத்தோடு ஜீவித்தல்

என் வாழ்க்கை எதைக் கொடுக்கும்? இது சேவைக்குரிய கேள்வி. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் உங்கள் ஊழியம் எதுவாக இருக்கும்? உங்கள் ஆவிக்குரிய வரங்களின் கலவை, இருதயம், திறமைகள், தனித்தாள் சுபாவம் மற்றும் அனுபவங்கள் (Shape) ஆகியவற்றிற்கேற்ப, தேவனுடைய

குடும்பத்தில் எந்த ஊழியம் உங்களுக்குப் பொருத்தமானதாக இருக்கும்? நீங்கள் எப்படி ஒரு மாறுதலைக் கொண்டு வர முடியும்? நீங்கள் சேர்ந்து சேவை செய்யக்கூடிய ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பு கொண்ட குழு ஒன்று இருக்கின்றதா? உங்கள் ஊழியத்தை நீங்கள் நிறைவேற்றும்போது, இரு அற்புதமான பயன்களைப் பவுல் குறிப்பிடுகின்றார். ***"நீங்கள் செய்யும் உபகாரம் தேவனுடைய பிள்ளைகளின் தேவையை சந்திப்பதோடு மட்டுமல்ல, தேவனுக்கு ஏறெடுக்கப்படும் நன்றியறிதலையும் பிறப்பிக்கின்றது."***[13]

நீங்கள் பிறருக்கு சேவை செய்யும்படி வடிவமைக்கப்பட்டிருந்தாலும், இயேசுவுங்கூட, பூமியிலிருக்கும்போது எல்லாருடைய தேவையையும் சந்திக்க முடியவில்லை; யாருக்கு சிறப்பான சேவை செய்யலாமென்பது நீங்கள் தெரிந்து கொள்ளவேண்டும்; அது உங்கள் வடிவமைக்கு ஏற்றதாக இருக்க வேண்டும். நீங்கள், "நான் யாருக்கு அதிகமாக உதவி செய்ய எனக்குள் ஆசை இருக்கின்றது?" என்று கேட்டுப் பார்க்க வேண்டும். ***"நீங்கள் போய்க் கனி கொடுக்கும்படிக்கும், அந்தக் கனி நிலைத்திருக்கும் படிக்கும் உங்களை ஏற்படுத்தினேன்"***[14] என்று இயேசு கூறினார். நாம் ஒவ்வொருவரும் வெவ்வேறு கனிகளைக் கொடுக்கின்றோம்.

என் வாழ்க்கை பிறருக்குக் கூறுவது என்ன? இது அவிசுவாசி களுக்கான உங்கள் ***பணி*** பற்றிய கேள்வி. உங்கள் சுவிசேஷப் பணியறிக்கையும் உங்கள் வாழ்க்கை நோக்க அறிக்கையின் ஒரு பகுதிதான். அதில் நற்செய்தியையும் உங்கள் சாட்சியையும் பிறருக்கு எடுத்துச் சொல்லுவதில் உங்கள் அர்ப்பணிப்பும் அடங்கியிருக்கும். உலகத்தாருடன் பகிர்ந்து கொள்ளுமாறு தேவன் உங்களுக்களித்திருக்கும் வாழ்க்கையனுபவ பாடங்கள், தேவனுக்கேற்ற தீவிர ஆர்வம் ஆகியவற்றை நீங்கள் பட்டியலிட வேண்டும். கிறிஸ்துவில் நீங்கள் வளர்ச்சியடையும்போது, நீங்கள் தொடர்பு கொள்ளக்கூடிய விசேஷித்த மக்கள் கூட்டத்தை தேவன் உங்களுக்குக் காண்பிப்பார். இதை உங்கள் அறிக்கையில் சேர்க்க மறக்க வேண்டாம்.

நீங்கள், பெற்றோராக இருந்தால், உங்கள் பிள்ளைகளை கிறிஸ்துவை அறியும்படி வளர்ப்பது உங்கள் பணியின் ஒரு பகுதி. அவர்களும், தேவனுடைய நோக்கத்தை அறிந்துகொள்ள நீங்கள்

உதவ வேண்டும்; அவர்களும் உலகத்தில் தங்கள் சுவிசேஷப் பணியைச் செய்ய அனுப்பப்பட வேண்டும். யோசுவாவின் அறிக்கையை நீங்கள் உங்கள் அறிக்கையில் சேர்த்துக் கொள்ளலாம். ***"நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்."***[15]

நாம் கூறும் செய்தியை, நமது வாழ்க்கை நிரூபிக்கக் கூடிய விதத்தில், தாங்கிக்கொள்ள வேண்டும். வேதாகமம் நம்பத் தகுந்தது என்று அவிசுவாசிகள் ஏற்றுக்கொள்ளும் முன்னதாக, நாம் நம்பக்கூடியவர்களென்று அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகின்றார்கள். அதனால்தான், ***"கிறிஸ்துவின் நற்செய்திக்குக் களங்கம் ஏற்படாதவாறு நடந்து கொள்ள எச்சரிக்கையாயிருங்கள்"***[16] என்று வேதம் கூறுகின்றது.

என் வாழ்க்கையின் சமுதாயம் எப்படியிருக்கும்? இது ***ஐக்கியத்திற்கான*** கேள்வி. மற்ற விசுவாசிகளுக்குள்ள உங்கள் அர்ப்பணிப்பையும், தேவனுடைய குடும்பத்துடனுள்ள உங்கள் தொடர்பையும் நீங்கள் எவ்வாறு செயலில் காண்பிப்பீர்கள்? ஒருவருக்கொருவர் என்ற கட்டளைகளை மற்றக் கிறிஸ்தவர்களுடன் நீங்கள் எங்கே பயிற்சி செய்வீர்கள்? செயல்படும் உறுப்பினராக எந்த சபைக் குடும்பத்துடன் நீங்கள் இணைந்திருப்பீர்கள்? நீங்கள் முதிர்ச்சியடையும் அளவுக்குத் தக்கதாக, நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தை நேசித்து, அதற்காகத் தியாகம் பண்ண முன் வருவீர்களா? ***"கிறிஸ்து சபையை நேசித்து அதற்காகத் தமது ஜீவனைக் கொடுத்தார்"***[17] என்று வேதம் கூறுகின்றது. உங்கள் அறிக்கையில் தேவனுடைய சபைக்கான அன்பை நீங்கள் எப்படி வெளிப்படுத்துவீர்களென்பதையும் சேர்க்க வேண்டும்.

இந்தக் கேள்விக்கான உங்கள் பதில்களை நீங்கள் நினைக்கும்போது, இந்த ஒவ்வொரு நோக்கத்தையும் பற்றி உங்களுடன் பேசும் எந்தவொரு வேத வசனத்தையும் அதில் சேர்த்துக் கொள்ளுங்கள். இப்புத்தகத்தில் ஏராளமானவை கொடுக்கப்பட்டுள்ளன. நீங்கள் விரும்புகின்றபடி உங்கள் வாழ்க்கை நோக்க அறிக்கையை உருவாக்க பல வாரங்கள் அல்லது மாதங்கள்கூட ஆகலாம். ஜெபியுங்கள், அதைக் குறித்துப் பேசுங்கள்;

வேத வசனத்தை நினைத்துப் பாருங்கள். இறுதி வடிவம் கொடுக்கப்படும் வரை நீங்கள் அதிகமான முறை மீண்டும், மீண்டும் எழுதிப் பார்க்க வேண்டியதிருக்கலாம். அதற்குப் பின்னரும் நீங்கள் அநேகமாக சிறு மாறுதல்களை, காலப்போக்கில், தேவன் உங்களுக்கு அளிக்கும் நுண்ணறிவுக்குத்தக்கதாக செய்ய வேண்டியதிருக்கலாம். மற்ற மக்களிடமிருந்து நீங்கள் சில உதாரணங்களை காண விரும்பினால், எனக்கு மின் அஞ்சல் அனுப்புங்கள் (இணைப்பு 2ஐ காண்க).

அநேக அவிசுவாசிகள், வேதத்தை நம்பக் கூடியதாக ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்னதாக, நாம் நம்பக்கூடியவர்களா என்று அறிய விரும்புகின்றார்கள்.

திட்டவட்டமான வாழ்க்கை நோக்க அறிக்கையை தயாரித்த பின்னர், ஒரு குறுகிய சுருக்க வடிவ அறிக்கை அல்லது உங்கள் வாழ்க்கைக்குரிய ஐந்து நோக்கங்களையும் ஒன்று திரட்டி, எளிதில் நினைவில் வைக்க உதவி செய்யும் ஒரு சுலோகன் (குறுகிய வடிவம்) உங்களைத் தூண்டியெழுப்பக்கூடிய விதத்தில் அமைத்துக் கொள்ளுங்கள். இதை நீங்கள் தினமும் ஞாபகப்படுத்திக் கொள்ளக் கூடும். ***"இந்தக் காரியங்களை மீண்டும் கூறக் கூடிய அளவில் மனதில் வைத்துக் கொள்ளுவது நல்லது"***[18] என்று சாலொமோன் புத்திமதி கூறினார். ஒரு சில உதாரணங்கள், இதோ...

- "என் வாழ்க்கையின் நோக்கம் – என்னிருதயம் நிறைய கிறிஸ்துவை ஆராதிக்க வேண்டும். என் வடிவமைப்பைக் கொண்டு அவரைச் சேவிக்க வேண்டும்; அவருடைய குடும்பத்துடன் ஐக்கியம் கொள்ள வேண்டும்; குணத்தில் அவரைப்போல வளர வேண்டும்; அவரது மகிமையை பெற்றுக்கொள்ளும்படியாக, அவருடைய பணியை இந்த உலகில் நிறைவேற்ற வேண்டும்."

- "என் வாழ்க்கை நோக்க அறிக்கை: கிறிஸ்துவை நேசிக்க வேண்டும்; கிறிஸ்துவில் வளர வேண்டும்; கிறிஸ்துவைப் பகிர்ந்து கொள்ள வேண்டும்; அவர் சபை மூலமாகக் கிறிஸ்துவை சேவிக்க வேண்டும்; என் குடும்பத்தினரையும், மற்றவர்களையும்

அப்படியே செய்யுமாறு வழி நடத்தவேண்டும்."

- "என் வாழ்க்கை நோக்க அறிக்கை : கிறிஸ்துவின் குடும்பத்தில் ஒரு அங்கத்தினராக வேண்டும். அவருடைய குணத்தின் முன்மாதிரியாக இருக்க வேண்டும். அவருடைய கிருபையின் ஊழியக்காரனாக இருக்க வேண்டும். அவருடைய வார்த்தையைக் கொண்டு செல்லும் தூதுவனாக இருக்க வேண்டும். அவருடைய மகிமையைப் பெரிதாக்கிக் காண்பிப்பவனாக இருக்க வேண்டும்."

- என் வாழ்க்கையின் நோக்கம், பிரதான கற்பனைக்கும், பிரதான கட்டளைக்கும் உள்ள ஒரு மாபெரும் அர்ப்பணம்.

- என் இலக்கு, கிறிஸ்துவைப் போலாகுதல்; சபைதான் என் குடும்பம்; என் ஊழியம், ______________________; என் அருட்பணி, ________________; என் நோக்கம் தேவ மகிமை.

நீங்கள் "என்னுடைய வேலை அல்லது திருமணம் அல்லது நான் எங்கே வசிக்க வேண்டும், எங்கே பள்ளிக்கூடம் போக வேண்டுமென்பதைக் குறித்த தேவனுடைய சித்தமென்ன?' என்று வியந்து கொண்டிருக்கலாம். உண்மையில் இவை இரண்டாந்தரக் காரியங்களே. இவற்றுக்கெல்லாம் தேவனுடைய சித்தத்தின்படியான அநேக சாத்தியக் கூறுகளிருக்கலாம். நீங்கள் எங்கே வசித்தாலும், வேலை செய்தாலும், யாரைத் திருமணம் செய்தாலும் காரியமில்லை, நீங்கள் தேவனுடைய நித்திய நோக்கங்களை நிறைவேற்ற வேண்டுமென்பதுதான் காரியம். அந்தத் தீர்மானங்கள் உங்கள் நோக்கங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். ***"தேவனுடைய இருதயத்தின் சித்தமே நிலை நிற்கும்"***[19] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் திட்டங்களல்ல, உங்கள் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்கள் மாத்திரமே என்றும் நிலைநிற்குமாதலால் அவற்றின் மீதே கருத்தைச் செலுத்துங்கள்.

உங்கள் அடக்க ஆராதனையின்போது, பிறர் உங்களைக் குறித்து என்ன கூற விரும்புகின்றீர்களோ அதை அடிப்படையாகக் கொண்டு உங்கள் வாழ்க்கை நோக்கத்தை உருவாக்குங்கள் என்றதொரு

ஆலோசனையை நான் ஒரு முறை கேட்டேன். உங்களைப் பற்றிய பூரணமான புகழாரத்தைக் கற்பனை செய்யுங்கள்; அதன்மீது உங்கள் அறிக்கையைக் கட்டியெழுப்புங்கள். உண்மையை வெளிப்படையாகக் கூறினால் இது ஒரு மோசமான திட்டம்.

பிறர் உங்களைப் பற்றி என்ன கூறுகின்றார்களென்பது (வாழ்க்கை முடிந்த பிறகு) முக்கியமானதாக இருக்கப்போவதில்லை. முக்கியமான காரியம் ஒன்றே ஒன்று – தேவன் உங்களைப் பற்றி என்ன சொல்லுவார் என்பதுதான். ***"நாம் மனுஷரையல்ல, தேவனையே பிரியப்படுத்த நாடுகின்றோம்"***[20] என்று வேதம் கூறுகின்றது.

இந்த வாழ்க்கைக்கான கேள்விகளுக்குரிய உங்கள் பதில்களை, ஒரு நாளில் தேவன் மறுபரிசீலனை செய்வார். இயேசுவை உங்கள் வாழ்க்கையின் மையத்தில் வைத்தீர்களா? அவர் குணத்தை வளர்த்துக் கொண்டீர்களா? பிறருக்கு சேவை செய்ய உங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்தீர்களா? அவருடைய செய்தியைப் பிறருக்குக் கூறி, அவருடைய பணியை நிறைவேற்றினீர்களா? அவருடைய குடும்பத்தை நேசித்து அதில் பங்கெடுத்தீர்களா? இந்தக் காரியங்கள் மட்டுமே முக்கியமானவை. பவுல் கூறியதுபோல, ***"தேவன் நம்மைப் பற்றி வைத்திருக்கும் திட்டத்தின் அளவுக்கு வருவதே நமது இலக்கு."***[21]

தேவன் உங்களைப் பயன்படுத்த விரும்புகின்றார்

ஏறத்தாழ 30 ஆண்டுகளுக்கு முன்னர், அப்போஸ்தலர் 13:36ல் நான் ஒரு சொற்றொடரைக் கவனித்தேன், அது என் வாழ்க்கைத் திசையையே நிரந்தரமாக மாற்றிவிட்டது. அதில் இருந்த வார்த்தைகள் ஏழே ஏழு. சூடுபோடும் இரும்பு முத்திரைபோல, என் வாழ்க்கையில் ஒரு நிரந்தர முத்திரையை அது பதித்துவிட்டது, தனது தலைமுறையில்தானே, ***"தாவீது தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினான்."***[22] தாவீதை, தேவன், ***"என் இருதயத்திற்கு ஏற்றவன்"***[23] என்று ஏன் கூறினாரென்பதை நான் அப்போது புரிந்து கொண்டேன். தேவனுடைய சித்தத்தைப் பூமியில் நிறைவேற்ற தாவீது தன் வாழ்க்கையை அர்ப்பணித்தவன்.

இந்த வாக்கியத்தைவிட சிறப்பானதொன்றை நமது கல்லறையில் பதிக்க முடியாது. பின்வரும் வாசகம் உங்கள் கல்லறையில் செதுக்கப்

பட்டிருப்பதாகக் கற்பனை செய்து பாருங்கள்: ''உங்கள் தலைமுறையில் நீங்கள் தேவனுடைய நோக்கத்திற்காக உழைத்தீர்கள்'' நான் மரிக்கும்போது மக்கள் என்னைக் குறித்து இப்படிச் சொல்ல வேண்டுமென்பது என் ஜெபம். உங்களைக் குறித்தும் மக்கள் அப்படிச் சொல்லக் கூடியதாக இருக்கட்டும். அதற்காகத்தான் இந்தப் புத்தகத்தை நான் உங்களுக்காக எழுதினேன்.

நன்றாக வாழ்ந்த வாழ்க்கைக்கான இறுதி வரையறை இது. காலத்திற்குட்படாத நித்தியத்தை (தேவனுடைய நோக்கம்) நீங்கள் காலத்திற்குட்பட்ட உங்கள் வாழ்வில் (உங்கள் தலைமுறை) செய்கின்றீர்கள். இதுதான் நோக்கம் கொண்ட வாழ்க்கை. கடந்த அல்லது இனிவரும் தலைமுறையினர், தேவனுடைய நோக்கத்தை இந்த தலைமுறையில் நிறைவேற்ற முடியாது. நாம்தான், அதைச் செய்ய முடியும். ''*இந்தக் காலத்திற்காக*''[24] எஸ்தரைபோல, தேவன் உங்களைப் படைத்திருக்கலாம்.



இன்றும், தான் பயன்படுத்தக்கூடிய மக்களை தேவன் தேடிக் கொண்டிருக்கின்றார். ***"தம்மைப் பற்றி உத்தம இருதயத்தோடிருக் கின்றவர்களைக் காணுமாறு, கர்த்தருடைய கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கின்றது"***[25] என்று வேதம் கூறுகின்றது. தேவன் தமது நோக்கத்திற்காகப் பயன்படுத்தும் அந்த நபர் நீங்களாக இருக்கலாமா? உங்கள் தலைமுறையில் நீங்கள் தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற வேலை செய்வீர்களா?

பவுல் நோக்கம் கொண்ட ஒரு வாழ்க்கை வாழ்ந்தார். அவர், ***"ஒவ்வொரு எட்டிலும் ஒரு நோக்கத்துடன் நான் இலக்கை நோக்கி நேராக ஓடுகின்றேன்"***[26] என்றார். அவர் ஜீவித்த ஒரே நோக்கம்: தேவன் தன்னைப் பற்றிக் கொண்டிருந்த நோக்கத்தை நிறைவேற்றுதல். ***"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்"***[27] என்று அவர் கூறினார். வாழவோ, மரிக்கவோ பவுல் பயப்படவே இல்லை. எப்படியிருந்தாலும் அவர் தேவ சித்தத்தை நிறைவேற்றுவார். அவரால் தோல்வியடைய முடியாது!

ஒரு நாளில் வரலாறு ஒரு முடிவுக்கு வரும். ஆனால், நித்தியமோ என்றும் நிற்கும். *“தேவனுடைய வாக்குத்தத்தம்போல, எதிர்காலம் பிரகாசமாக இருக்கின்றது”* என்று வில்லியம் கேரி கூறினார். உங்கள் நோக்கம் நிறைவேறக் கடினமானதாக கண்டால், அதைரியத்திற்கு இடங்கொடாதிருங்கள். உங்கள் பலன் பரலோகில் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள். *“அதி சீக்கிரத்தில் நீங்கிவிடும் இந்த லேசான உபத்திரவம், இவற்றையெல்லாம் மேற்கொள்ளும் நித்திய மகிமையை நமக்காக சம்பாதித்து வைக்கின்றது”*[28] என்று வேதம் கூறுகின்றது.

உங்கள் நோக்கம் நிறைவேறும்படி நீங்கள் இன்றே வாழ ஆரம்பிக்கலாம்.

ஒரு நாளில் நாமனைவரும், தேவனுடைய சிம்மாசனத்திற்கு முன்பாக நின்று – நமது வாழ்க்கைக்குரிய ஆழ்ந்த நன்றியுடனும், கிறிஸ்துவுக்குத் துதியுடனும் நிற்பது, எப்படியிருக்கும் என்று சற்றுக் கற்பனை செய்து பாருங்கள். நாம் ஒன்றாக சேர்ந்து, *“தேவரீர் மகிமையும், கனமும், வல்லமையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரர், நீர் எல்லாவற்றையும் படைத்தீர்; நீர் விரும்பியபடியால் அவைகள் படைக்கப்பட்டன!”*[29] என்று கூறுவோம். நாம் அவருடைய திட்டத்திற்காக அவரைத் துதித்து, அவர் நோக்கத்திற்காக என்றும் வாழுவோம்!

நாள் நாற்பது

எனது நோக்கத்தைக் குறித்து சிந்தித்தல்

சிந்தனைக்கான ஒரு கருத்து: வாழ்வை உண்மையாக வாழ்வதற்கு ஒரே வழி, நோக்கத்தோடு ஜீவிப்பதுதான்.

மனனம் செய்ய ஒரு வசனம்: ***“தாவீது, தன் தலைமுறையில் தானே தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றினான்.”*** அப்போஸ்தலர் 13:36 (புதிய மொழியாக்கம்)

ஆய்வுக்கான ஒரு கேள்வி: வாழ்க்கையின் ஐந்து பெரிய கேள்விகளுக்கு விடைகளை எழுத நான் எப்பொழுது நேரமெடுத்துக் கொள்ளப்போகின்றேன்? எப்போது என் நோக்கத்தை எழுத்து வடிவில் கொண்டு வரப்போகின்றேன்?

இணைப்பு 1

கலந்துரையாடலுக்கான கேள்விகள்

ஒவ்வொரு அத்தியாயத்தின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுடன், கூடுதலாக, பின்வரும் கேள்விகளையும் உங்கள் சிறுகுழு அமைப்பிலோ அல்லது ஞாயிறு பள்ளி வகுப்பு அமைப்பிலோ பயன்படுத்தலாம்.

நான் இப்பூமியில் இருப்பதற்கான நோக்கம்தான் என்ன?

- இந்நூலின் முதல் வாக்கியமான ''இது உங்களைக் குறித்ததல்ல?" என்பதன் செயலாக்கத்தைக் குறித்து நீங்கள் எண்ணுவதென்ன?
- அநேக மக்களுடைய வாழ்க்கையை உந்தித் தள்ளிக் கொண்டிருப்பது என்னவென்று நீங்கள் உணருகின்றீர்கள்? உங்கள் வாழ்வில், உந்தித் தள்ளும் சக்தி எதுவாக உள்ளது?
- இதுவரை நீங்கள் கற்றுக் கொண்டவற்றில் உங்கள் வாழ்வை விளக்கிக் கூறிய உருவகங்களில் சிறந்ததாக நீங்கள் காண்பது எது? ஒரு ஓட்டப் பந்தயம், ஒரு "சர்க்கஸ்" அல்லது வேறு ஏதாவது?
- இவ்வுலக வாழ்வு உண்மையிலேயே நித்திய வாழ்வுக்கான ஓர் ஆயத்தம்தான் எனும் சத்தியத்தை அனைவரும் புரிந்து கொண்டிருப்பார்களானால், நாம் எவ்வாறு வித்தியாசமாக செயற்படுவோம்?
- தேவனுடைய நோக்கங்களுக்காக வாழ்வதிலிருந்து மக்களை விலக்கி வைக்கின்ற இவ்வுலகக் கவர்ச்சிகள் யாவை?

- தேவனுடைய நோக்கங்களுக்காக வாழ்வதிலிருந்து உங்களை விலக்கி வைக்கின்ற அல்லது உங்களைக் கவர்ந்திழுக்கிற காரியங்கள் யாவை?

நீங்கள் தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப் பட்டீர்கள்

- ***"தேவனுடைய மகிழ்ச்சிக்காக வாழுகிற உங்கள் முழு வாழ்க்கையும்"*** அநேகர் "ஆராதனை" என்பதன் அர்த்தத்தைத் தவறாகப் புரிந்து கொண்டிருப்பதிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கின்றது?

- பிறரிடத்தில் நாம் கொள்ளுகின்ற நட்பிலிருந்து தேவனோடு நாம் கொள்ளுகின்ற நட்பானது எவ்விதத்தில் ஒத்திருக்கின்றது மற்றும் எவ்விதத்தில் வேறுபட்டிருக்கின்றது?

- தேவன் உங்களை விட்டுத் தூரமாக இருப்பதைப் போன்று உணர்ந்த வேளைகளில் நீங்கள் கற்றுக் கொண்டதை விவரியுங்கள்.

- மற்றவரோடு சேர்ந்து ஆராதிப்பதோ அல்லது தனிப்பட்ட விதத்தில் ஆராதிப்பதோ – எது உங்களுக்கு எளிதாகக் காணப்படுகின்றது? இவ்விரண்டில் எது உங்களை தேவனோடு அதிகமாகக் கிட்டிச் சேர்ப்பதாக நீங்கள் உணருகின்றீர்கள்?

- தேவனிடத்தில் உங்கள் கோபத்தை வெளிப்படுத்தச் சரியான சந்தர்ப்பம் எது?

- உங்கள் முழுவாழ்வையும் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்று நீங்கள் எண்ணும்போது எப்படிப்பட்ட பயங்கள் உங்கள் மனதில் உண்டாகின்றன?

நீங்கள் தேவனின் குடும்பத்திற்கென்று உருவமைக்கப் பட்டீர்கள்

- ***இயேசு கிறிஸ்துவுக்கு நாம் நம்மை ஒப்புக் கொடுத்திருப்பதைப்போல ஒருவருக்கொருவர் ஒப்புக்***

கொடுத்திருப்பது என்பது அநேக மக்கள் “ஐக்கியம்” என்பதை புரிந்துகொள்ளும் விதத்திலிருந்து எவ்வாறு வித்தியாசப்பட்டிருக்கின்றது?

- மற்ற விசுவாசிகளை நேசிப்பதிலும், பராமரிப்பதிலும் நம்மை விலக்கி வைக்கின்றத் தடைகள் யாவை?

- உங்கள் தேவைகளையும், காயங்களையும், பயங்களையும் மற்றும் நம்பிக்கைகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்ளுவதை எளிதாக்குவது எது?

- ஏதாகிலும் ஒரு திருச்சபையோடு தங்களை இணைத்துக் கொள்ளாததற்கு மக்கள் கூறும் பொதுவான சாக்குப்போக்குகள் யாவை? அவர்களுக்கு நீங்கள் கூறும் பதில் என்ன?

- நமது திருச்சபையிலுள்ள ஒற்றுமையை பாதுகாக்கவும் மேம்பாடடையச் செய்யவும் நமது குழுவினர் எதையாகிலும் செய்யக்கூடுமா? குறிப்பிடுக.

- நீங்கள் யாருடனாவது முறிந்துபோன உங்கள் உறவைப் புதுப்பித்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றீர்களா? உங்களுக்காக நாங்கள் ஜெபித்து உதவி செய்யலாமா?

நீங்கள் கிறிஸ்துவைப்போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப் பட்டீர்கள்

- ‘‘சீஷத்துவம்’’ எனும் பதத்தை அநேகர் புரிந்து கொண்டிருக்கும் விதத்திலிருந்து, “இயேசு கிறிஸ்துவைப் போலாகுதல்” என்பது எவ்விதத்தில் வேறுபட்டிருக்கின்றது?

- நீங்கள் ஒரு விசுவாசியானதிலிருந்து உங்களுடைய வாழ்வில் நீங்கள் கண்டிருக்கின்ற மாற்றங்களில் சிலவற்றைக் குறிப்பிடுக. பிறர் உங்களிடத்தில் கண்டிருக்கின்ற மாற்றங்கள் யாவை?

- இன்றிலிருந்து ஒரு வருடத்திற்குப் பின்பு நீங்கள்

எவ்வளவுக்கதிகமாக கிறிஸ்துவைப்போல மாறியிருக்க விரும்புவீர்கள்? அந்த இலக்கை நோக்கிச் செல்லுவதற்கு இன்றைக்கு நீங்கள் செய்யக்கூடியது என்ன?

- உங்கள் ஆவிக்குரிய வளர்ச்சியில் எந்தவிதமான முன்னேற்றமும் காணப்படாதிருக்குமானால், நீங்கள் பொறுமையாக இருக்க வேண்டிய இடம் எது?
- நீங்கள் வளர்ச்சியடைவதற்கு உதவும்படியாக வேதனை அல்லது தொல்லைகளை தேவன் எவ்வாறு பயன்படுத்தியிருக்கின்றார்?
- சோதனைக்கு நீங்கள் எப்போது அதிக அளவில் இணங்கிப் போயிருக்கின்றீர்கள்? சோதனையை மேற்கொள்ள எவ்வகையான நடவடிக்கைகள் உங்களுக்கு அதிக உதவியாயிருந்திருக்கின்றன?

நீங்கள் தேவனை சேவிப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டீர்கள்

- அநேக மக்கள் "ஊழியம்" எனும் பதத்தைப் புரிந்து கொண்டிருப்பதிலிருந்து 'உங்கள் வடிவத்தைப் பிறருக்குச் சேவை செய்ய பயன்படுத்துவது' எவ்விதத்தில் வேறுபட்டிருக்கின்றது?
- நீங்கள் எதைச் செய்ய வேண்டுமென்று அதிகமாக விரும்புவீர்களோ அதைத் தேவனுடைய வீடாகிய திருச்சபையிலுள்ள பிற விசுவாசிகளுக்குச் செய்வீர்களா?
- நீங்கள் கடந்து சென்றிருக்கிற மிகவும் வேதனை தரும் ஓர் அனுபவத்தை எண்ணிப் பாருங்கள். அதே விதமான வேதனை நிறைந்த சூழ்நிலையில் கடந்து செல்லுகின்ற வேறொருவருக்கு உங்கள் அனுபவத்தைக் கொண்டு ஊழியம் செய்ய தேவனுக்கு இடமளிப்பீர்களா?
- பிறரோடு நம்மை ஒப்பிட்டுப் பார்த்தல், நமக்கென்று பிரத்தியேகமாகப் பெற்றிருக்கிற தனித்துவம் வாய்ந்த வடிவமைப்பில் வளர்ச்சியடைய விடாதபடி நம்மை எவ்வாறு தடை செய்கின்றது?

- நீங்கள் பலவீனமாயிருப்பதாக உணர்ந்த வேளைகளில் தேவனுடைய வல்லமை உங்கள் மூலமாக வெளிப்பட்டதை கண்டிருக்கின்றீர்களா? விளக்குக.

- நமது சிறுகுழு அல்லது வேதாகம வகுப்பிலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் ஊழியம் செய்ய ஒரு வாய்ப்பைப் பெறும்படிக்கு நாம் எவ்வாறு அவர்களுக்கு உதவக்கூடும்? நமது திருச்சபையாகிய குடும்பத்திற்கு சேவை செய்ய நமது சிறுகுழு செய்யக்கூடியது என்ன?

நீங்கள் ஒரு விசேஷ பணிக்காக ஏற்படுத்தப்பட்டீர்கள்

- “சுவிசேஷ ஊழியம்” என்ற வார்த்தையைக் கேட்ட உடனே மக்களுடைய மனதில் தோன்றுகின்ற சில பயங்கள் மற்றும் ஒரே விதமான எண்ணங்கள் யாவை? நற்செய்தியைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளுவதிலிருந்து உங்களைத் தடைசெய்வது யாது?

- இவ்வுலக மக்களிடத்தில் பகிர்ந்து கொள்ளும்படியாக தேவன் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கும் ஜீவனுள்ள செய்தியின் ஒரு பகுதியாக இருப்பது என்னவென்று நீங்கள் உணருகின்றீர்கள்?

- உங்கள் குழுவிலுள்ள அனைவரும் ஜெபிப்பதற்காக அவிசுவாசியாயிருக்கின்ற உங்கள் நண்பர் ஒருவரின் பெயரை அறிவியுங்கள்.

- நமது ஆண்டவரின் மாபெரும் இறுதிக் கட்டளையை நிறைவேற்ற நமது குழுவினர் செய்யத்தக்கது யாது?

- இந்நூலை வாசித்ததன் மூலமாக உங்கள் வாழ்வின் நோக்கம் ஒருமுகப்படுத்தப்பட்டிருக்கின்றதா அல்லது திசை திருப்பப் பட்டிருக்கின்றதா? விளக்குக. இதன் மூலமாக, நீங்கள் அடைந்த மிகப் பயனுள்ள அகவுணர்வுகள் சிலவற்றைக் கூறுக.

- இந்நூலின் வாயிலாக நீங்கள் கற்றுக்கொண்ட வாழ்வை மாற்றும் செய்தியை யாருடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று தேவன் உங்களுக்கு நினைப்பூட்டுகின்றார்?

- அடுத்தபடியாக நாம் படிக்கப்போவது என்ன? (இணைப்பு 2ஐ காண்க)

உங்கள் சிறுகுழுவில் நடப்பனவற்றை எமக்கு மின் அஞ்சல் மூலம் தெரிவியுங்கள்: stories@purposedrivenlife.com

இணைப்பு 2
உபகரணங்கள்

இலவச உபகரணங்கள் (ஆங்கிலத்தில் மட்டுமே கிடைக்கும்)

Your First Steps for Spiritual Growth booklet

A personal daily Bible reading plan

A list of recommended books on each purpose

How to pray for missionaries

The *Purpose-Driven Life*® Health Assessment

Information on Celebrate Recovery

Information on Kingdom Builders

Information on *40 Days of Purpose,* a spiritual growth emphasis for your church

தொடர்பு மின் அஞ்சல்: devotional@purposedrivenlife.com

இணைப்பு 3
வசன மொழியாக்கம் மற்றும் உபயோக விளக்கம்

இந்த புத்தகத்தில் ஏறத்தாழ ஆயிரம் வேத வசனங்கள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன. வேதத்தை எழுதுவதற்கு பயன்படுத்தப்பட்ட மூல பாஷைகளில் (எபிரேயம், கிரேக்கம் மற்றும் அராமிக்) உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை மொத்தம் 11,280. பொதுவான ஒரு ஆங்கில மொழியாக்கத்தில், சுமார் 6,000 வார்த்தைகள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவேதான், ஆங்கில மொழியில் புத்தகத்தை எழுதும்போது, மூல பாஷையில் சொல்லப்பட்ட கருத்துக்களை தத்ரூபமாக வெளிக்கொண்டு வருவதற்காக 15 வெவ்வேறு ஆங்கில வேதாகம மொழியாக்கங்களை இந்த புத்தக ஆசிரியர் பயன்படுத்தியுள்ளார்.

தமிழ் மொழியாக்கம்

இப்படிப்பட்ட ஒரு ஆங்கில புத்தகத்திலிருந்து தமிழில் மொழியாக்கம் செய்யும்போது ஆங்கிலத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ள வசனங்களின் கருத்துக்களை, பரவலாக உபயோகப்படுத்தப்படும் ஒரேயொரு தமிழ் மொழிபெயர்ப்பைக் கொண்டு விளக்க இயலவில்லை.

எனவேதான், இந்த தமிழ் பதிப்பில், கூடுமானவரை தமிழ் வேதாகமத்தில் உள்ள வசனங்களை அப்படியே பயன்படுத்தியிருந்தாலும், பல இடங்களில்... ஆங்கில மொழியாக்க வேத வசனத்தை அப்படியே தமிழில் எடுத்து எழுதியுள்ளோம். ஆசிரியர் சொல்லும் கருத்தை முழுமையாக வெளிக்கொண்டுவர வேண்டும் என்பதற்காகவே இப்படி செய்துள்ளோம்.

அத்தோடு... சில வேத வசனங்கள் முழுமையாக குறிக்கப்படாமல், கருத்தை வெளிக்கொண்டு வருகிற ஒரு வசனப்பகுதி மட்டும் குறிக்கப்பட்டிருக்கும்.

– தமிழ் மொழியாக்கக் குழு

குறிப்புகள்

நோக்கத்துடன் ஒரு பிரயாணம்

1. ரோமர் 12:2
2. 2 தீமோத்தேயு 2:7

நாள் 1: சகலமும் தேவனிடத்திலிருந்தே ஆரம்பமாகின்றது!

1. யோபு 12:10
2. ரோமர் 8:6
3. மத்தேயு 16:25
4. ஹியூ மூர்ஹெட் தொகுத்த, "நமது நூற்றாண்டின் சிறந்த எழுத்தாளர்கள் மற்றும் சிந்தனையாளர்களின் வாழ்வின் அர்த்தம்" என்ற புத்தகம்.
5. 1 கொரிந்தியர் 2:7
6. எபேசியர் 1:11
7. டேவிட் பிரண்ட் தொகுத்த, "வாழ்வின் அர்த்தம்" என்ற ஆங்கில புத்தகம் (பக்கம் 194).

நாள் 2: தற்செயலாகப் பிறந்தவர்கள் அல்ல... நீங்கள்!

1. சங்கீதம் 138:8
2. சங்கீதம் 139:15
3. சங்கீதம் 139:16
4. அப்போஸ்தலர் 17:26
5. எபேசியர் 1:4
6. யாக்கோபு 1:18
7. மைக்கேல் டென்டன் எழுதிய, "இயற்கையின் முடிவு: உயிரியல் விதிகள் எவ்வாறு நோக்கங்களை வெளிப்படுத்துகின்றது" என்ற புத்தகம்.
8. ஏசாயா 45:18
9. 1 யோவான் 4:8
10. ஏசாயா 46:3–4
11. ரசல் கெல்பெர் சொன்ன வார்த்தைகள். அனுமதியுடன் பயன்படுத்தப்பட்டுள்ளது.

நாள் 3: உங்களது வாழ்க்கையை உந்தித் தள்ளுவது எது?

1. ஆதியாகமம் 4:12
2. சங்கீதம் 32:1
3. யோபு 5:2
4. 1 யோவான் 4:18
5. மத்தேயு 6:24
6. ஏசாயா 49:4
7. யோபு 7:6
8. யோபு 7:16
9. எரேமியா 29:11
10. எபேசியர் 3:20
11. நீதிமொழிகள் 13:7
12. ஏசாயா 26:3
13. எபேசியர் 5:17
14. பிலிப்பியர் 3:13
15. பிலிப்பியர் 3:15
16. ரோமர் 14:10,12
17. யோவான் 14:6

நாள் 4: என்றென்றும் ஜீவிக்கவே ஏற்படுத்தப்பட்டவர்கள்

1. பிரசங்கி 3:11
2. 2 கொரிந்தியர் 5:1
3. பிலிப்பியர் 3:7
4. 1 கொரிந்தியர் 2:9
5. மத்தேயு 25:34
6. C. S. லூவிஸ் எழுதிய, "கடைசி யுத்தம்" என்ற ஆங்கில புத்தகம் (பக்கம் 184).
7. சங்கீதம் 33:11
8. பிரசங்கி 7:2
9. எபிரெயர் 13:14
10. 2 கொரிந்தியர் 5:6

நாள் 5: வாழ்க்கையை தேவனுடைய கண்ணோட்டத்தின்படி காணுதல்

1. ரோமர் 12:2
2. 2 நாளாகமம் 32:31
3. 1 கொரிந்தியர் 10:13
4. யாக்கோபு 1:12
5. சங்கீதம் 24:1
6. ஆதியாகமம் 1:28
7. 1 கொரிந்தியர் 4:2
8. 1 கொரிந்தியர் 4:7
9. மத்தேயு 25:14–29
10. மத்தேயு 25:21
11. லூக்கா 16:11
12. லூக்கா 12:48

நாள் 6: வாழ்க்கை என்பது நமக்கு கொடுக்கப் பட்ட ஒரு தற்காலிகப்பணி

1. யோபு 8:9
2. சங்கீதம் 39:4
3. சங்கீதம் 119:19
4. 1 பேதுரு 1:17;
5. பிலிப்பியர் 3:19–20
6. யாக்கோபு 4:4
7. 2 கொரிந்தியர் 5:20
8. 1 பேதுரு 2:11
9. 1 கொரிந்தியர் 7:31
10. 2 கொரிந்தியர் 4:18
11. யோவான் 16:33; 16:20; 15:18–19
12. 2 கொரிந்தியர் 4:18
13. 1 பேதுரு 2:11
14. எபிரெயர் 11:13,16

நாள் 7: ஒவ்வொன்றிற்கும் ஒரு முகாந்தரம் உண்டு

1. சங்கீதம் 19:1
2. ஆதியாகமம் 3:8;
   யாத்திராகமம் 33:18–23;
   யாத்திராகமம் 40:33–38
   1 இராஜாக்கள் 7:51; 8:10–13;
   யோவான் 1:14;
   எபேசியர் 2:21–22
   2 கொரிந்தியர் 4:6–7
3. யாத்திராகமம் 24:17;
   யாத்திராகமம் 40:34;
   சங்கீதம் 29:1;
   ஏசாயா 6:3–4; 60:1;
   லூக்கா 2:9
4. வெளிப்படுத்தல் 21:23
5. எபிரெயர் 1:3;
   2 கொரிந்தியர் 4:6;
6. யோவான் 1:14
7. 1 நாளாகமம் 16:24;
   சங்கீதம் 29:1; 66:2; 96:7;
   2 கொரிந்தியர் 3:18
8. வெளிப்படுத்தல் 4:11
9. ரோமர் 3:23
10. ஏசாயா 43:7
11. யோவான் 17:4
12. ரோமர் 6:13
13. 1 யோவான் 3:14
14. ரோமர் 15:7
15. யோவான் 13:34–35
16. 2 கொரிந்தியர் 3:18
17. பிலிப்பியர் 1:11;
    யோவான் 15:8
18. 1 பேதுரு 4:10–11;
    2 கொரிந்தியர் 8:19;
19. 2 கொரிந்தியர் 4:15
20. யோவான் 12:27–28
21. யோவான் 12:25
22. 2 பேதுரு 1:3
23. யோவான் 1:12
24. யோவான் 3:36

நாள் 8: தேவனுடைய மகிழ்ச்சிக்கென்று திட்டமிடப்பட்டீர்கள்

1. எபேசியர் 1:5
2. ஆதியாகமம் 6:6;
   யாத்திராகமம் 20:5;
   உபாகமம் 32:36;
   நியாயாதிபதிகள் 2:19;
   1 இராஜாக்கள் 10:9;
   1 நாளாகமம் 16:27;
   சங்கீதம் 2:4; 5:5; 18:19;
   35:27; 37:23; 103:13; 104:31;

எசேக்கியேல் 5:13;
1 யோவான் 4:16;

3. சங்கீதம் 147:11
4. யோவான் 4:23
5. ஏசாயா 29:13
6. சங்கீதம் 105:4
7. சங்கீதம் 113:3
8. சங்கீதம் 119:147;
   5:3; 63:6; 119;62
9. சங்கீதம் 34:1
10. 1 கொரிந்தியர் 10:31
11. கொலோசெயர் 3:23
12. ரோமர் 12:1

நாள் 9: தேவனை புன்னகைப் புரிய வைப்பது எது?

1. எபேசியர் 5:10
2. ஆதியாகமம் 6:8
3. ஆதியாகமம் 6:9
4. ஓசியா 6:6
5. மத்தேயு 22:37–38
6. எபிரெயர் 11:7
7. ஆதியாகமம் 2:5–6
8. சங்கீதம் 147:11
9. எபிரெயர் 11:6
10. ஆதியாகமம் 6:22;
    எபிரெயர் 11:7
11. சங்கீதம் 100:2; 119:33
13. யாக்கோபு 2:24
14. யோவான் 14:15
15. ஆதியாகமம் 8:20
16. எபிரெயர் 13:15
17. சங்கீதம் 116:17
18. சங்கீதம் 69:30–31
19. சங்கீதம் 68:3
20. ஆதியாகமம் 9:1,3
21. சங்கீதம் 37:23
22. சங்கீதம் 33:15
23. ஏசாயா 45:9
24. 1 தீமோத்தேயு 6:17
25. சங்கீதம் 103:14
26. 2 கொரிந்தியர் 5:9
27. சங்கீதம் 14:2

நாள் 10: ஆராதனையின் மையப் பகுதி

1. 1 யோவான் 4:9–10,19
2. ரோமர் 12:1
3. சங்கீதம் 145:9
4. சங்கீதம் 139:3
5. மத்தேயு 10:30
6. 1 தீமோத்தேயு 6:17
7. எரேமியா 29:11
8. சங்கீதம் 86:5
9. சங்கீதம் 145:8
10. ரோமர் 5:8
11. ஆதியாகமம் 3:5
12. லூக்கா 5:5
13. சங்கீதம் 37:7
14. மத்தேயு 6:24
15. மத்தேயு 6:21
16. மாற்கு 14:36
17. யோபு 22:21
18. ரோமர் 6:17
19. யோசுவா 5:13–15
20. லூக்கா 1:38
21. யாக்கோபு 4:7
22. ரோமர் 12:1
23. ரோமர் 12:1
24. 2 கொரிந்தியர் 5:9
25. பிலிப்பியர் 4:13
26. 1 கொரிந்தியர் 15:31
27. லூக்கா 9:23

நாள் 11: தேவனுக்கு நெருங்கிய நண்பனாகுதல்

1. சங்கீதம் 95:6; 136:3;
   யோவான் 13:13;
   யூதா 1:4;
   1 யோவான் 3:1;
   ஏசாயா 33:22, 47:4;
   சங்கீதம் 89:26
2. யாத்திராகமம் 33:11,17;
   2 நாளாகமம் 20:7;
   ஏசாயா 41:8;
   யாக்கோபு 2:23;
   அப்போஸ்தலர் 13:22;
   ஆதியாகமம் 6:8; 5:22;

யோபு 29:4
3. ரோமர் 5:11
4. 2 கொரிந்தியர் 5:18
5. 1 யோவான் 1:3
6. 1 கொரிந்தியர் 1:9
7. 2 கொரிந்தியர் 14:14
8. யோவான் 15:15
9. யோவான் 3:29
10. யாத்திராகமம் 34:14
11. அப்போஸ்தலர் 17:26–27
12. எரேமியா 9:24
13. ரிக் வாரன் எழுதிய, "தனிப்பட்ட வேத ஆராய்ச்சி முறைமை" என்ற ஆங்கில புத்தகத்தில், "அர்த்தமுள்ள அமைதியின் நேரம்" என்ற பகுதியை பார்க்கவும்.
14. 1 தெசலோனிக்கேயர் 5:17
15. எபேசியர் 4:6
16. சகோதரர் லாரன்ஸ் எழுதிய, "தேவனுடைய பிரசன்னத்தில் பழக்கப்படுதல்" என்ற ஆங்கில புத்தகம்.
17. 1 தெசலோனிக்கேயர் 5:17
18. சங்கீதம் 23:4; 143:5; 145:5
யோசுவா 1:8;
சங்கீதம் 1:2
19. 1 சாமுவேல் 3:21
20. யோபு 23:12
21. சங்கீதம் 119:97
22. சங்கீதம் 77:12
23. ஆதியாகமம் 18:17;
தானியேல் 2:19;
1 கொரிந்தியர் 2:7–10
24. சங்கீதம் 25:14

நாள் 12: தேவனோடுள்ள உங்கள் நட்பை வளர்த்துக் கொள்ளுதல்

1. மத்தேயு 11:19
2. யோபு 42:7
3. யாத்திராகமம் 33:1–17
4. யாத்திராகமம் 33:12–17
5. யோபு 7:17–21;
சங்கீதம் 93:13;
எரேமியா 20:7;
ரூத் 1:20;
6. சங்கீதம் 142:2–3
7. யோவான் 15:14
8. யோவான் 15:9–11
9. 1 சாமுவேல் 15:22
10. மத்தேயு 3:17
11. 2 கொரிந்தியர் 11:2
12. சங்கீதம் 69:9
13. சங்கீதம் 27:4
14. சங்கீதம் 63:3
15. ஆதியாகமம் 32:26
16. பிலிப்பியர் 3:10
17. எரேமியா 29:13
18. 1 தீமோத்தேயு 6:21

நாள் 13: தேவனைப் பிரியப்படுத்தும் ஆராதனை

1. எபிரெயர் 12:28
2. யோவான் 4:23
3. 1 சாமுவேல் 16:7
4. எபிரெயர் 13:15;
சங்கீதம் 7:17;
எஸ்றா 3:11;
சங்கீதம் 149:3; 150:3;
நெகேமியா 8:6;
5. கேரி தாமஸ் எழுதிய "பரிசுத்த பாதைகள்" என்ற ஆங்கில புத்தகம்.
6. யோவான் 4:23
7. மத்தேயு 6:7
8. சேடில்பேக் சபையின், "உங்களது உள்ளான தேவைகளை தேவன் எப்படி சந்திக்கின்றார்" என்ற ஆங்கில ஒலிநாடா தொடரை வாங்கிக் கேளுங்கள்.
9. 1 கொரிந்தியர் 14:40
10. 1 கொரிந்தியர் 14:16–17
11. ரோமர் 12:1
12. சங்கீதம் 50:14;
எபிரெயர் 13:15;
சங்கீதம் 51:17; 54:6;
பிலிப்பியர் 4:18;
சங்கீதம் 141:2;
எபிரெயர் 13:16;
மாற்கு 12:33;

ரோமர் 12:1
13. 2 சாமுவேல் 24:24
14. மேட் ரெட்மேனின் பாடல் பேழை “ஆராதனையின் இருதயம்”

நாள் 14: தேவன் தூரத்தில் இருப்பது போலத் தோன்றும்போது...

1. பிலிப் யான்சி எழுதிய “காணக்கூடாத தேவனை கண்டடைதல்” என்ற ஆங்கில புத்தகம்.
2. 1 சாமுவேல் 13:14
   அப்போஸ்தலர் 13:22
3. சங்கீதம் 10:1
4. சங்கீதம் 22:1
5. சங்கீதம் 43:2; 44:23, 74:11, 88:14, 89:49
6. உபாகமம் 31:8
   சங்கீதம் 37:28
   யோவான் 14:16–18
   எபிரெயர் 13:5
7. ஏசாயா 45:15
8. பிளாயட் மெக்ளங் எழுதிய “தேவனிடம் நட்பை வளர்த்துக்கொள்ளுதல்” என்ற ஆங்கில புத்தகம்.
9. யோபு 23:8–10
10. சங்கீதம் 51;
    எபேசியர் 4:29–30;
    1 தெசலோனிக்கேயர் 5:19;
    எரேமியா 2:32;
    1 கொரிந்தியர் 8:12;
    யாக்கோபு 4:4;
11. யோபு 1:20–21
12. யோபு 7:11
13. யோபு 29:4
14. சங்கீதம் 116:10
15. யோபு 10:12
16. யோபு 42:2; 37:5,23
17. யோபு 23:10; 31:4
18. யோபு 34:13
19. யோபு 23:14
20. யோபு 19:25
21. யோபு 23:12
22. யோபு 13:15
23. 2 கொரிந்தியர் 5:21

நாள் 15: தேவனுடைய குடும்பத்திற்கென்று உருவமைக்கப்பட்டவர்கள்

1. எபேசியர் 1:5
2. யாக்கோபு 1:18
3. 1 பேதுரு 1:3;
   ரோமர் 8:15–16
4. மாற்கு 8:34
   அப்போஸ்தலர் 2:21;
   ரோமர் 10:13;
   2 பேதுரு 3:9
5. கலாத்தியர் 3:26
6. எபேசியர் 3:14–15
7. 1 யோவான் 3:1;
   ரோமர் 8:29;
   கலாத்தியர் 4:6–7;
   ரோமர் 5:2;
   1 கொரிந்தியர் 3:23;
   எபேசியர் 3:12;
   1 பேதுரு 1:3–5;
   ரோமர் 8:17;
8. கலாத்தியர் 4:7
9. பிலிப்பியர் 4:19
10. எபேசியர் 1:7;
    ரோமர் 2:4; 9:23; 11:33;
    எபேசியர் 3:16, 2:4
11. எபேசியர் 1:18
12. 1 தெசலோனிக்கேயர் 5:10; 4:17
13. 1 யோவான் 3:2;
    2 கொரிந்தியர் 3:18
14. வெளிப்படுத்தல் 21:4
15. மாற்கு 9:41; 10:30;
    1 கொரிந்தியர் 3:8;
    எபிரெயர் 10:35;
    மத்தேயு 25:21,23;
16. ரோமர் 8:17
    கொலோசெயர் 3:4;
    2 தெசலோனிக்கேயர் 2:14;
    2 தீமோத்தேயு 2:12;
    1 பேதுரு 5:1;
17. 1 பேதுரு 1:4
18. கொலோசெயர் 3:23–24

19. மத்தேயு 28:19
20. 1 கொரிந்தியர் 12:13
21. அப்போஸ்தலர் 2:41;
    8:12–13; 35–38
22. எபிரெயர் 2:11
23. மத்தேயு 12:49–50

நாள் 16: மிகவும் முக்கியமானது எது?

1. கலாத்தியர் 5:14
2. 1 பேதுரு 2:17
3. கலாத்தியர் 6:10
4. யோவான் 13:35
5. 1 கொரிந்தியர் 14:1
6. 1 கொரிந்தியர் 13:3
7. மத்தேயு 22:37–40
8. 1 கொரிந்தியர் 13:13
9. மத்தேயு 25:34–46
10. மத்தேயு 25:40
11. கலாத்தியர் 5:6
12. 1 யோவான் 3:18
13. எபேசியர் 5:2
14. யோவான் 3:16
15. கலாத்தியர் 6:10
16. எபேசியர் 5:16
17. நீதிமொழிகள் 3:27

நாள் 17: அங்கம் வகிப்பதற்கு ஒரு இடம்

1. ஆதியாகமம் 2:18
2. 1 கொரிந்தியர் 12:12
    எபேசியர் 2:21,22; 3:6; 4:16
    கொலோசெயர் 2:19;
    1 தெசலோனிக்கேயர் 4:17
3. ரோமர் 12:5
4. ரோமர் 12:4–5
    1 கொரிந்தியர் 6:15; 12:12–27
5. ரோமர் 12:4–5
6. எபேசியர் 4:16
7. மத்தேயு 16:18
8. எபேசியர் 5:25
9. 2 கொரிந்தியர் 11:2;
    எபேசியர் 5:27;
    வெளிப்படுத்தல் 19:7
10. 1 பேதுரு 2:17
11. 1 கொரிந்தியர் 5:1–13;
    கலாத்தியர் 6:1–5
12. எபேசியர் 2:19
13. யோவான் 13:35
14. கலாத்தியர் 3:28;
    யோவான் 17:21
15. 1 கொரிந்தியர் 12:27
16. 1 கொரிந்தியர் 12:26
17. எபேசியர் 4:16; ரோமர் 12:4–5;
    கொலோசெயர் 2:19;
    1 கொரிந்தியர் 12:25
18. 1 யோவான் 3:16
19. எபேசியர் 4:16
20. 1 கொரிந்தியர் 12:7
21. எபேசியர் 2:10
22. 1 கொரிந்தியர் 10:12;
    எரேமியா 17:9;
    1 தீமோத்தேயு 1:19
23. எபிரெயர் 3:13
24. யாக்கோபு 5:19
25. அப்போஸ்தலர் 20:28,29;
    1 பேதுரு 5: 1–4;
    எபிரெயர் 13:7,17;
26. எபிரெயர் 13:17
27. அப்போஸ்தலர் 2:42
28. 2 கொரிந்தியர் 8:5

நாள் 18: வாழ்க்கையை ஒன்றாக இணைந்து அனுபவித்தல்

1. மத்தேயு 18:20
2. 1 யோவான் 1:7–8
3. யாக்கோபு 5:16
4. 1 கொரிந்தியர் 12:25
5. ரோமர் 1:12
6. ரோமர் 12:10
7. ரோமர் 14:19
8. கொலோசெயர் 3:12
9. பிலிப்பியர் 3:10;
    எபிரெயர் 10:33–34
10. கலாத்தியர் 6:2
11. யோபு 6:14
12. 2 கொரிந்தியர் 2:7
13. கொலோசெயர் 3:13
14. கொலோசெயர் 3:13

நாள் 19: சமுதாய ஐக்கியத்தை உருவாக்குதல்

1. எபேசியர் 4:3
2. 1 தீமோத்தேயு 3:14–15
3. எபேசியர் 4:15
4. நீதிமொழிகள் 24:26
5. கலாத்தியர் 6:1–2
6. எபேசியர் 4:25
7. நீதிமொழிகள் 28:23
8. பிரசங்கி 8:6
9. 1 தீமோத்தேயு 5:1–2
10. 1 கொரிந்தியர் 5:3–12
11. 1 பேதுரு 5:5
12. 1 பேதுரு 5:5
13. ரோமர் 12:16
14. பிலிப்பியர் 2:3–4
15. ரோமர் 15:2
16. தீத்து 3:2
17. ரோமர் 12:10
18. நீதிமொழிகள் 16:28
19. தீத்து 3:10
20. எபிரெயர் 10:25
21. அப்போஸ்தலர் 2:46

நாள் 20: முறிந்துபோன ஐக்கியத்தைப் புதுப்பித்தல்

1. 2 கொரிந்தியர் 5:18
2. பிலிப்பியர் 2:1–2
3. ரோமர் 15:5
4. யோவான் 13:35
5. 1 கொரிந்தியர் 6:5
6. 1 கொரிந்தியர் 1:10
7. மத்தேயு 5:9
8. 2 கொரிந்தியர் 5:18
9. யாக்கோபு 4:1–2
10. மத்தேயு 5:23–24
11. 1 பேதுரு 3:7;
    நீதிமொழிகள் 28:9
12. யோபு 5:2; 18:4
13. பிலிப்பியர் 2:4
14. சங்கீதம் 73:21–22
15. நீதிமொழிகள் 19:11
16. ரோமர் 15:2
17. ரோமர் 15:3
18. மத்தேயு 7:5
19. 1 யோவான் 1:8
20. நீதிமொழிகள் 15:1
21. நீதிமொழிகள் 16:21
22. எபேசியர் 4:29
23. ரோமர் 12:18
24. ரோமர் 12:10;
    பிலிப்பியர் 2:3
25. மத்தேயு 5:9
26. 1 பேதுரு 3:11
27. மத்தேயு 5:9

நாள் 21: உங்கள் சபையைப் பாதுகாத்தல்

1. யோவான் 17:20–23
2. எபேசியர் 4:3
3. ரோமர் 14:19
4. ரோமர் 10:12; 12:4–5
   1 கொரிந்தியர் 1:10; 8:6; 12:13;
   எபேசியர் 4:4; 5:5;
   பிலிப்பியர் 2:2;
5. ரோமர் 14:1
   2 தீமோத்தேயு 2:23
6. 1 கொரிந்தியர் 1:10
7. எபேசியர் 4: 2
8. டையட்ரிக் பொன்ஹோபர் எழுதிய, "இணைந்த ஜீவியம்" என்ற ஆங்கில புத்தகம்.
9. ரோமர் 14:13;
   யாக்கோபு 4:11;
   எபேசியர் 4:29;
   மத்தேயு 5:9;
   யாக்கோபு 5:9;
10. ரோமர் 14:4
11. ரோமர் 14:10
12. வெளிப்படுத்தல் 12:10
13. ரோமர் 14:19
14. நீதிமொழிகள் 17:4
    16:28, 26:20, 25:9, 20:19

15 நீதிமொழிகள் 17:4

16. யூதா 1:19
17. கலாத்தியர் 5:15
18. நீதிமொழிகள் 20:19
19. நீதிமொழிகள் 26:20

20. மத்தேயு 18:15–17
21. மத்தேயு 18:17;
 1 கொரிந்தியர் 5:5
22. எபிரெயர் 13:17
23. எபிரெயர் 13:17
24. 2 தீமோத்தேயு 2:14,
 23–26;
 பிலிப்பியர் 4:2;
 தீத்து 2:15, 3:2, 10–11
25. 1 தெசலோனிக்கேயர் 5:12–13
26. 1 கொரிந்தியர் 10:24

நாள் 22: கிறிஸ்துவைப்போல மாறுவதற்காக சிருஷ்டிக்கப்பட்டீர்கள்

1. ஆதியாகமம் 1:26
2. ஆதியாகமம் 6:9;
 சங்கீதம் 139:13–16;
 யாக்கோபு 3:9
3. 2கொரிந்தியர் 4:4;
 கொலோசெயர் 1:15;
 எபிரெயர் 1:3;
4. எபேசியர் 4:24
5. ஆதியாகமம் 3:5
6. எபேசியர் 4:22
7. மத்தேயு 5:1–12
8. கலாத்தியர் 5:22–23
9. 1 கொரிந்தியர் 13
10. 2 பேதுரு 1:5–8
11. யோவான் 10:10
12. 2 கொரிந்தியர் 3:18
13. பிலிப்பியர் 2:13
14. 1 இராஜாக்கள் 19:12
15. கொலோசெயர் 1:27
16. யோசுவா 3:13–17
17. லூக்கா 13:24; ரோமர் 14:19;
 எபேசியர் 4:3;
 2 தீமோத்தேயு 2:15;
 எபிரெயர் 4:11; 12:14;
 2 பேதுரு 1:5; 2 பேதுரு 3:14
18. எபேசியர் 4:22
19. எபேசியர் 4:23
20. ரோமர் 12:2
21. எபேசியர் 4:24
22. எபேசியர் 4:13
23. 1 யோவான் 3:2
24. 1 கொரிந்தியர் 10:31; 16:14;
 கொலோசெயர் 3:17,23
25. ரோமர் 12:2

நாள் 23: நாம் எவ்வாறு வளருகின்றோம்?

1. மத்தேயு 9:9
2. 2 பேதுரு 3:11
3. பிலிப்பியர் 2:12–13
4. நீதிமொழிகள் 4:23
5. ரோமர் 12:2
6. எபேசியர் 4:23
7. பிலிப்பியர் 2:5
8. 1 கொரிந்தியர் 14:20
9. ரோமர் 8:5
10. 1 கொரிந்தியர் 13:11
11. ரோமர் 15:2–3
12. 1 கொரிந்தியர் 2:12

நாள் 24: சத்தியத்தின் மூலம் மறுரூபமாக்கப்படுதல்

1. யோவான் 17:17
2. 2 தீமோத்தேயு 3:17
3. எபிரெயர் 4:12
 அப்போஸ்தலர் 7:38
 1 பேதுரு 1:23
4. யோவான் 6:63
5. யாக்கோபு 1:18
6. யோபு 23:12
7. 1 பேதுரு 2:2
 மத்தேயு 4:4
 1 கொரிந்தியர் 3:2
 சங்கீதம் 119:103
8. 1 பேதுரு 2:2
9. யோவான் 8:31
10. நீதிமொழிகள் 30:5
11. 2 தீமோத்தேயு 3:16
12. அப்போஸ்தலர் 24:14
13. லூக்கா 8:18
14. யாக்கோபு 1:21

15. உபாகமம் 17:19
16. ரிக் வாரன் எழுதிய "12 தனிப்பட்ட வேத ஆராய்ச்சி முறைமை" என்ற ஆங்கில புத்தகம். www.pastors.com என்ற இணையதளத்தில் கிடைக்கும்.
17. யாக்கோபு 1:25
18. சங்கீதம் 119:11; 119:105; 119:49–50;
    எரேமியா 15:16;
    நீதிமொழிகள் 22:18;
    1 பேதுரு 3:15
19. கொலொசேயர் 3:16
20. 2 கொரிந்தியர் 3:18
21. அப்போஸ்தலர் 13:22
22. சங்கீதம் 119:97
23. யோவான் 15:7;
    யோசுவா 1:8;
    சங்கீதம் 1:2–3
24. யாக்கோபு 1:22
25. மத்தேயு 7:24
26. யோவான் 13:17

நாள் 25: பிரச்சனைகளின் மூலம் மறுரூபமாக்கப்படுதல்

1. யோவான் 16:33
2. 1 பேதுரு 4:12
3. சங்கீதம் 34:18
4. ஆதியாகமம் 39:20–22
5. தானியேல் 6:16–23
6. எரேமியா 38:6
7. 2 கொரிந்தியர் 11:25
8. தானியேல் 3:1–26
9. 2 கொரிந்தியர் 1:9
10. சங்கீதம் 139:16
11. ரோமர் 8:28–29
12. மத்தேயு 6:10
13. மத்தேயு 1:1–16
14. ரோமர் 5:3–4
15. 1 பேதுரு 1:7
16. யாக்கோபு 1:3
17. எபிரெயர் 5:8–9
18. ரோமர் 8:17
19. எரேமியா 29:11
20. ஆதியாகமம் 50:20
21. ஏசாயா 38:17
22. எபிரெயர் 12:10
23. எபிரெயர் 12:2
24. எபிரெயர் 11:26
25. 2 கொரிந்தியர் 4:17
26. ரோமர் 8:17–18
27. 1 தெசலோனிக்கேயர் 5:18
28. பிலிப்பியர் 4:4
29. லூக்கா 6:23
30. யாக்கோபு 1:3–4
31. எபிரெயர் 10:36

நாள் 26: சோதனைகளின் மூலம் வளர்ச்சியடைதல்

1. கலாத்தியர் 5:22–23
2. 2கொரிந்தியர் 2:11
3. மாற்கு 7:21–23
4. யாக்கோபு 4:1
5. எபிரெயர் 3:12
6. யோவான் 8:44
7. யாக்கோபு 1:14–16
8. 1 கொரிந்தியர் 10:13
9. எபிரெயர் 4:15
10. 1 பேதுரு 5:8
11. மத்தேயு 26:41;
    எபேசியர் 6:10–18;
    1 தெசலோனிக்கேயர் 5:6,8;
    1 பேதுரு 1:13; 4:7; 5:8
12. எபேசியர் 4:27
13. நீதிமொழிகள் 4:26–27
14. நீதிமொழிகள் 16:17
15. சங்கீதம் 50:15
16. எபிரெயர் 4:15
17. எபிரெயர் 4:16
18. யாக்கோபு 1:12

நாள் 27: சோதனையைத் தோற்கடித்தல்

1. யாக்கோபு 4:7
2. யோபு 31:1
3. சங்கீதம் 119:37
4. ரோமர் 12:21
5. எபிரெயர் 3:1

6. 2 தீமோத்தேயு 2:8
7. பிலிப்பியர் 4:8
8. நீதிமொழிகள் 4:23
9. 2 கொரிந்தியர் 10:5
10. பிரசங்கி 4:9–10
11. யாக்கோபு 5:16
12. 1 கொரிந்தியர் 10:13
13. ரோமர் 3:23
14. யாக்கோபு 4:6–7
15. எபேசியர் 6:17
16. எரேமியா 17:9
17. நீதிமொழிகள் 14:16
18. 1 கொரிந்தியர் 10:12

நாள் 28: கிறிஸ்துவைப்போல மாறுவதற்கு கால அவகாசம் தேவை

1. பிலிப்பியர் 1:6
2. எபேசியர் 4:13
3. கொலேசேயர் 3:10
4. 2 கொரிந்தியர் 3:18
5. உபாகமம் 7:22
6. ரோமர் 13:12
   எபேசியர் 4:22–25
   கொலோசெயர் 3:7–10,14
7. 1 தீமோத்தேயு 4:15
8. பிரசங்கி 3:1
9. சங்கீதம் 102:18
   2 தீமோத்தேயு 3:14
10. எபிரெயர் 2:1
11. யாக்கோபு 1:4
12. ஆபகூக் 2:3

நாள் 29: உங்களுக்களிக்கப்பட்ட பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல்

1. எபேசியர் 2:10
2. கொலோசேயர் 3:23–24
   மத்தேயு 25:34–45
   எபேசியர் 6:7
3. எரேமியா 1:5
4. 2 தீமோத்தேயு 1:9
5. 1 கொரிந்தியர் 6:20
6. ரோமர் 12:1
7. 1 யோவான் 3:14
8. மத்தேயு 8:15
9. எபேசியர் 4:4–14
   ரோமர் 1:6–7, 8:28–30
   1 கொரிந்தியர் 1:2,9,26; 7:17
   பிலிப்பியர் 3:14;
   1 பேதுரு 2:9;
   2 பேதுரு 1:3
10. 2 தீமோத்தேயு 1:9
11. 1 பேதுரு 2:9
12 ரோமர் 7:4
13. 1 கொரிந்தியர் 12:27
14. மத்தேயு 20:28
15. ரோமர் 14:12
16. ரோமர் 2:8
17. மாற்கு 8:35;
   மத்தேயு 10:39; 16:25;
   லூக்கா 9:24; 17:33
18. ரோமர் 12:5
19. 1 கொரிந்தியர் 12:14,19

நாள் 30: தேவனைச் சேவிப்பதற்கென்று வடிவமைக்கப்பட்டீர்கள்

1. எபேசியர் 2:10
2. சங்கீதம் 139:13–14
3. சங்கீதம் 139:16
4. ரோமர் 12:4–8;
   1 கொரிந்தியர் 12
   எபேசியர் 4:8–15;
   1 கொரிந்தியர் 7:7;
5. 1 கொரிந்தியர் 2:14
6. எபேசியர் 4:7
7. 1 கொரிந்தியர் 12:11
8. 1 கொரிந்தியர் 12:29–30
9. 1 கொரிந்தியர் 12:7
10. 1 கொரிந்தியர் 12:5
11. நீதிமொழிகள் 27:19
12. மத்தேயு 12:34; சங்கீதம் 34:7;
   நீதிமொழிகள் 4:23
13. உபாகமம் 11:13;
   1 சாமுவேல் 12:20;
   ரோமர் 1:9;
   எபேசியர் 6:6
14. நீதிமொழிகள் 15:16

நாள் 31: உங்கள் வடிவமைப்பை புரிந்துக்கொள்ளுதல்

1. 1 கொரிந்தியர் 12:4–6

2. யாத்திராகமம் 31:3–5
3. ரோமர் 12:6
4. 1 கொரிந்தியர் 10:31
5. 1 கொரிந்தியர் 12:6
6. உபாகமம் 8:18
7. உபாகமம் 14:23; மல்கியா 3:8–11
8. எபிரெயர் 13:21
9. 1 பேதுரு 4:10
10. 1 கொரிந்தியர் 12:6
11. ரோமர் 8:28–29
12. 2 கொரிந்தியர் 1:4
13. 2 கொரிந்தியர் 1:8–10
14. மேலும் தகவல்கள் பெற்றுக்கொள்ள, வகுப்பு 301 (உங்கள் வடிவமைப்பை கண்டுக்கொள்ளுங்கள்) ஒலிநாடாக்களை ஆர்டரின் பேரில் நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். அத்தோடு, சில உபகரணங்களும் கிடைக்கும்

நாள் 32: தேவன் உங்களுக்கு அருளிய வற்றைப் பயன்படுத்துதல்

1. எபேசியர் 5:17
2. ரோமர் 12:3
3. கலாத்தியர் 6:4
4. உபாகமம் 11:2
5. கலாத்தியர் 3:4
6. யோவான் 13:7
7. www.purposedrivenlife.com - ஐ தொடர்பு கொள்ளுங்கள்
8. ரோமர் 9:20–21
9. எபேசியர் 4:7
10. கலாத்தியர் 2:7–8
11. 2 கொரிந்தியர் 10:13
12. எபிரெயர் 12:1
13. கலாத்தியர் 6:4
14. கலாத்தியர் 6:4
15. 2 கொரிந்தியர் 10:12
16. 2 கொரிந்தியர் 10:12
17. 1 கொரிந்தியர் 10:12–18
18. பிலிப்பியர் 1:9
19. 2 தீமோத்தேயு 1:6
20. மத்தேயு 25:28
21. 1 தீமோத்தேயு 4:14–15
22. 2 தீமோத்தேயு 2:15
23. 1 கொரிந்தியர் 9:25

நாள் 33: உண்மையான சேவகர்கள் எப்படி செயல்படுகின்றனர்?

1. மத்தேயு 7:16
2. 2 தீமோத்தேயு 2:4
3. கலாத்தியர் 6:10
4. நீதிமொழிகள் 3:28
5. பிரசங்கி 11:4
6. கொலோசெயர் 3:23
7. கலாத்தியர் 6:3
8. யோவான் 13:15
9. அப்போஸ்தலர் 28:3
10. லூக்கா 16:10–12
11. சங்கீதம் 12:1; நீதிமொழிகள் 20:6; பிலிப்பியர் 2:19–22;
12. மத்தேயு 25:23
13. 1 பேதுரு 5:5
14. எபேசியர் 6:6; கொலோசெயர் 3:22
15. மத்தேயு 6:1
16. கலாத்தியர் 1:10
17. கொலோசெயர் 3:4
18. 1 கொரிந்தியர் 12:22–24
19. 1 கொரிந்தியர் 15:58
20. மத்தேயு 10:42

நாள் 34: சேவகர்களைப்போல சிந்தித்தல்

1. 2 நாளாகமம் 25:2
2. பிலிப்பியர் 2:4
3. பிலிப்பியர் 2:7
4. பிலிப்பியர் 2:20–21
5. மத்தேயு 5:41
6. 1 கொரிந்தியர் 4:1
7. 1 கொரிந்தியர் 4:2
8. லூக்கா 16:13
9. லூக்கா 16:11

10. கலாத்தியர் 5:26
11. ரோமர் 14:4
12. நெகேமியா 6:3
13. மத்தேயு 26:10
14. யோவான் 13:3–4
15. 2 கொரிந்தியர் 10:18
16. யாக்கோபு 1:1
17. சங்கீதம் 100:2
18. யோவான் 12:26
19. எபிரெயர் 6:10

நாள் 35: உங்கள் பலவீனத்தில் தேவனின் வல்லமை

1. ஏசாயா 55:9
2. 1 கொரிந்தியர் 1:27
3. மத்தேயு 5:3
4. 2 கொரிந்தியர் 12:7
5. 2 கொரிந்தியர் 4:7
6. மத்தேயு 16:16
7. அப்போஸ்தலர் 14:15
8. 2 கொரிந்தியர் 12:9–10
9. 2 கொரிந்தியர் 12:10
10. 2 கொரிந்தியர் 12:7
11. எண்ணாகமம் 12:3
12. நியாயதிபதிகள் 6:12
13. ரோமர் 4:11
14. மத்தேயு 16:18
15. அப்போஸ்தலர் 13:22
16. எபிரேயர் 11:32–34
17. ரோமர் 7:19
18. 2 கொரிந்தியர் 6:11
19. 2 கொரிந்தியர் 1:8
20. 1 கொரிந்தியர் 2:3
21. 2 கொரிந்தியர் 12:5
22. எபிரெயர் 4:1
23. ரோமர் 8:26

நாள் 36: நீங்கள் ஒரு விசேஷித்த பணிக்காக உண்டாக்கப்பட்டீர்கள்

1. கொலோசெயர் 1:25;
   1 கொரிந்தியர் 12:5
2. யோவான் 20:21
3. லூக்கா 2:49
4. யோவான் 19:30
5. 2 கொரிந்தியர் 5:18
6. 2 கொரிந்தியர் 5:20
7. மத்தேயு 28:19–20;
   மாற்கு 16:15;
   லூக்கா 24:47;
   யோவான் 20:21;
   அப்போஸ்தலர் 1:8
8. மத்தேயு 28:19–20
9. எசேக்கியேல் 3:18
10. 2 கொரிந்தியர் 5:18
11. 2 கொரிந்தியர் 6:1
12. 2 கொரிந்தியர் 5:20
13. அப்போஸ்தலர் 4:12
14. யோவான் 9:4
15. அப்போஸ்தலர் 20:24
16. அப்போஸ்தலர் 1:7–8
17. மத்தேயு 24:36
18. மத்தேயு 24:14
19. லூக்கா 9:62
20. லூக்கா 22:42
21. ரோமர் 6:13
22. மத்தேயு 6:33

நாள் 37: உங்கள் வாழ்க்கையின் செய்தியைப் பகிர்ந்துகொள்ளுதல்

1. 2 கொரிந்தியர் 2:17
2. 1 யோவான் 5:10
3. 1 பேதுரு 2:9
4. அப்போஸ்தலர் 1:8
5. அப்போஸ்தலர் 22 – 26
6. 1 பேதுரு 3:15–16
7. சங்கீதம் 119:33
8. சங்கீதம் 106:43
9. நீதிமொழிகள் 25:12
10. சங்கீதம் 51;
    பிலிப்பியர் 4:11–13;
    2 கொரிந்தியர் 1:4–10;
    சங்கீதம் 40
    சங்கீதம் 119:71;
    ஆதியாகமம் 50:20
11. மத்தேயு 12:34
12. சங்கீதம் 69:9
13. எரேமியா 20:9
14. கலாத்தியர் 4:18
15. ரோமர் 1:17

16. 2 கொரிந்தியர் 5:19
17. 2 கொரிந்தியர் 5:14
18. 1 யோவான் 4:18
19. 2 பேதுரு 3:9
20. கொலொசெயர் 4:5

நாள் 38: உலகத் தரம் வாய்ந்ததொரு கிறிஸ்தவனாகுதல்

1. பால் போர்த்விக் எழுதிய *அருட்பணிக்கான ஓர் மனது* மற்றும் *உலகத் தரம் வாய்ந்த கிறிஸ்தவனாக இருப்பது எப்படி* என்ற இரு நுல்களும் ஒவ்வொரு கிறிஸ்தவனாலும் வாசிக்கப்பட வேண்டும்.
2. வெளிப்படுத்தல் 7:9
3. 1 கொரிந்தியர் 14:20
4. பிலிப்பியர் 2:4
5. 1 கொரிந்தியர் 2:12
6. 1 கொரிந்தியர் 10:33
7. யோவான் 3:16
8. அப்போஸ்தலர் 17:26–27
9. கொலோசெயர் 1:6
10. சங்கீதம் 2:8
11. கொலோசெயர் 4:3; ரோமர் 1:10;
12. எபேசியர் 6:19
13. யோவான் 17:20
14. 2 தெசலோனிக்கேயர் 3:1:
15. மத்தேயு 9:38
16. 2 கொரிந்தியர் 1:11
17. அப்போஸ்தலர் 1:8
18. 2 கொரிந்தியர் 4:18
19. லூக்கா 9:62
20. 1 கொரிந்தியர் 7:31
21. எபிரெயர் 12:1
22. மத்தேயு 6:20–21
23. லூக்கா 16:9
24. 1 தீமோத்தேயு 6:19
25. எரேமியா 1:7–8
26. “லாசேன் உடன்படிக்கை”(1974) யிலிருந்து
27. மாற்கு 8:35

நாள் 39: உங்கள் வாழ்க்கையை சமநிலைப் படுத்துதல்

1. நீதிமொழிகள் 27:17
2. பிலிப்பியர் 4:9
3. 1 தெசலோனிக்கேயர் 5:11
4. புலம்பல் 3:40
   1 கொரிந்தியர் 11:28,31; 13:5; கலாத்தியர் 6:4
5. 2 கொரிந்தியர் 13:5
6. புலம்பல் 3:40
7. 2 கொரிந்தியர் 8:11
8. எபிரெயர் 2:1
9. எண்ணாகமம் 33:2
10. சங்கீதம் 56:8
11. சங்கீதம் 102:18
12. நீதிமொழிகள் 11:25
13. 2 தீமோத்தேயு 2:2
14. யாக்கோபு 4:17
15. 1 தீமோத்தேயு 4:6
16. யோவான் 17:4
17. யோவான் 17:6–26

நாள் 40: நோக்கத்தோடு ஜீவித்தல்

1. யோவான் 13:17
2. சங்கீதம் 33:11
3. நீதிமொழிகள் 4:26
4. நீதிமொழிகள் 17:24
5. பிலிப்பியர் 1:10
6. 2 நாளாகமம் 14:4
7. எபேசியர் 3:17
8. பிலிப்பியர் 4:7
9. கலாத்தியர் 5:22–23
10. மத்தேயு 5:3–12
11. 2 பேதுரு 1:5
12. 1 தீமோத்தேயு 4:16
13. 2 கொரிந்தியர் 9:12
14. யோவான் 15:16
15. யோசுவா 24:15
16. பிலிப்பியர் 1:27
17. எபேசியர் 5:25
18. நீதிமொழிகள் 22:18
19. நீதிமொழிகள் 19:21
20. 1 தெசலோனிக்கேயர் 2:4
21. 2 கொரிந்தியர் 10:13
22. அப்போஸ்தலர் 13:36
23. அப்போஸ்தலர் 13:22
24. எஸ்தர் 4:14
25. 2 நாளாகமம் 16:9
26. 1 கொரிந்தியர் 9:26
27. பிலிப்பியர் 1:21
28. 2 கொரிந்தியர் 4:17
29. வெளிப்படுத்தல் 4:11